Dictionary
of
Tamil Proverbs.

Librarian
Uttarpara Joykrishna Public Library
Govt. of West Bengal

PUBLIC LIBRARY

# DICTIONARY
OF
# TAMIL PROVERBS.

## அ.

1 அஃகம் சுருக்கேல்.
One of Avvayar's sayings : against raising prices.

2 அஃகமும் காசும் சிக்கெனத் தேடு.
Recommonds thrift.

3 அகங்கையிற் போட்டுப் புறங்கையை நக்கலாமா?
Folly of seeking somothing in the wrong place.

4 அகடவிகடமாய்ப் பேசுகிறான்.
Phrase denoting artful speech.

5 அகதிக்கு ஆகாயம் துணை.
Here *sky* means God; cf. 'Heaven.'

6 அகதிக்குத் தெய்வமே துணை.
God cares for the destitute.

7 அகதி சொல் அம்பலம் ஏறாது.
The destitute have no influence.

8 அகதி தலையிற் பொழுது விடிந்தது.
Sunrise brings fresh cares to the destitute.

9 அகதி பெறுவது பெண்பிள்ளை, அதுவும் வெள்ளி பூராடம்.
Refers to the successive misfortunes of the destitute.

10 அகதியைப் பகுதி கேட்கிறதா ?
Why tax the destitute ?

11 அகத்தில் அழகு முகத்தில் தெரியும்.
The face is the mirror of the heart.

12. அகத்தி ஆயிரம் காய்த்தாலும் புறத்தி புறத்தியே.
Said of the generosity of one who is not osteemed.

13 அகப்பட்டுக்கொள்வேன் என்றோ கள்ளன் களவெடுக்கிறது?
Recommends caution even in evil-doing.

---

14 அகப்பட்டவனுக்கு அஷ்டமத்துச்சனி,
ஓடிப்போனவனுக்கு ஒன்பதாம் இடத்து ராஜா.
Hints to the accommodating character of astrologers.

---

15 அகப்பை பிடித்தவன் தன்னவனானால், அடிப்பந்தியில்
இருந்தாலென்ன, கடைப்பந்தியில் இருந்தாலென்ன?
No matter where you are, if the server is your friend.

---

16 அகம் ஏறச் சுகம் ஏறும்.

---

17 அகம் மலிந்தால் அஞ்சும் மலியும்,
அகம் குறைந்தால் அஞ்சும் குறையும்.

---

18 அகம் மலிந்தால் எல்லாம் மலியும்.
அகம்குறைந்தால் எல்லாம் குறையும்.
Proverbs relating to the importance of grain.

---

19 அகல இருந்தால் நிகள உறவு,
கிட்ட இருந்தால் முட்டப் பகை.
Familiarity breeds contempt.

---

20 அகல இருந்தால் பகையும் உறவாம்.
Recommends reserve.

---

21 அகல இருந்து செடியைக் காக்கிறது.
Doing things by halves.

---

22 அகாரியத்தில் பகிரதப் பிரயத்தனம் பண்ணுகிறது.
Valour in evil-doing.

---

23 அக்கணை தீர்ந்தால் அக்காள் மகடு குக்கா.
The end gained, the means despised. *Kukka* is Telugu for a dog.

---

24 அகல இருந்தால் புகல உறவு.
Another form of 19 which see.

---

25 அகல்வட்டம் பகல் மழை.
" A large halo—a rainy day."

---

26 அகவிலை அறியாதவன் துக்கம் அறியான்.
"Ignorance is bliss."

---

27 அகழிலே விழுந்த முதலைக்கு அதுவே வைகுண்டம்.
Take things as they come.

---

28 அகா நாக்காய்ப் பேசுகிறான்.
Glib speech.

29 அகிர்த்தியம் செய்கிறவன் முகத்தில் விழிக்கிறதா?
National abhorrence of evil-doing.

30 அகோர தபசி விபரீத சோரன்.
Religious hypocrisy.

31 அகோர தபசி, விபரீத நிபுணன்.
Said of one prone to extremes.

32 அக்கரை மாட்டுக்கு இக்கரை பச்சை.
" Tis distance lends enchantment to the view."

33 அக்காடு வெட்டிப் பருத்தி விதைக்கிறேன் என்றால்,
அப்பா எனக்கொரு துப்பட்டி என்கிறான் பிள்ளை.

34 அக்காடு வெட்டிப் பருத்தி விதைத்தால்,
அப்பா முழச்சிற்றாடை என்கிறதாம் பெண்.
Both: Counting the chickens before the eggs are hatched.

35 அகல உழுகிறதைவிட ஆழ உழுகிறது சிலாக்கியம்.
Intension *versus* extension.

36 அக்கரைப்பாகலுக்கு இக்கரைகொழுக்கொம்பு.
Unsuitability of means to end.

37 அக்கணா அரியணா, நோக்குவிந்த விதியென்ன?
So says one who has no mind to learn.

38 அக்கியானம் தொலைந்தால் அவிழ்தம் பலிக்கும்.
Even a remedy has its conditions.

39 அக்கச்சி உடைமை அரிசி, தங்கச்சி உடைமை தவிடா?
One's own better than one's neighbour's.

40 அக்காள் இருக்கிறவரையில் மச்சான் உறவு.
Effect lasts only as long as its cause.

41 அக்காள் உண்டானால், மச்சான் உண்டு.
Every thing implies its correlative.

42 அக்காள் உறவும் மச்சான் பகையுமா?
Hints to inconsistent conduct.

43 அக்காளைக் கொண்டால், தங்கையை முறை கேட்பானேன்?
Self-evident things admit of no doubt.

44 அக்காளைப்பழித்துத் தங்கை அபசாரியானாள்.
Commit the very crime we condemn in another.

45 அக்காள்தான் கூடப்பிறந்தாள், மச்சானும் கூடப்பிறந்தானா?
There is a limit to relationship.

46 அக்கிராரத்தில் பிறந்தாலும், நாய் வேதம் அறியுமா?
The base never engage in noble pursuits.

47 அக்கிராரத்துக்கு ஒரு ஆடு செத்தால் ஆளுக்கு ஒரு மயிர்.
Village communism.

48 அக்கிராரத்து நாய் பிரதிஷ்டைக்கு அழுததுபோல.
Hankering after what is beyond one's reach.

49 அக்கிராரத்து நாய்க்கு அகவிலை தெரியுமா?
Each has his respective pursuits.

50 அக்கினியைத்தின்று கக்குகிறபிள்ளை,
அல்லித்தண்டை தின்கிறது அதிசயமா?
*A fortiori* argument.

51 அக்கினி மலையில் கர்ப்பூரபாணம் பிரயோகித்ததுபோல.
Doing things useless.

52 அக்கினிதேவனுக்கு அபிஷேகம்செய்ததுபோல் இருக்கிறான்.
So black.

53 அக்கினிப்பந்தலிலே வெண்ணெய்ப்பதுமை ஆடுமா?
Opposites cannot co-exist.

54 அக்கினியாற் சுட்ட புண் விஷமிக்காது.
Refers to the good properties of fire.

55 அக்குத் தொக்கு இல்லாதவனுக்குத் துக்கம் என்ன?
No sorrow to the solitary.

56 அங்கத்திலே குறைச்சலில்லை ஆட்டடா பூசாரி.
Don't make fuss, go on.

57 அங்கத்தை ஆற்றில் அலைசொனதா?
A hint to those who don't bathe.

58 அங்கத்தைக் கொண்டுபோய் ஆற்றில் அலைசினாலும்,
தோஷம் இல்லை.
Refers to bathing.

59 அங்கத்தைக் கொன்று ஆற்றில் சேர்க்கவொண்ணாது.
Against impure acts.

60 அங்காங்கு வைபோகமாயிருக்கிறான்,
இங்கேபார்த்தால் அரைக்காசுமுதலும் இல்லை.
Life abroad *versus* life at home.

61 அங்கங்கு குறுணி அளந்துகொட்டி இருக்கிறது.
Everything goes according to fate.

62 அங்காளம்மைத்தெய்வம் அகப்பைக்கூறு வழியாய்வரும்.
Connection between food and worship.

63 அங்காடி விலையை அதிர அடிக்காதே.
Don't act against established usage.

64 அங்காடிக்காரியைச் சங்கீதம் பாடச்சொன்னால்,
வெங்காயம் கருவேப்பிலை என்பாள்.
"Out of the abundance of the heart the mouth speaketh."

65 அங்கிடுதொடுப்பிக்கு அங்கிரண்டு குட்டு,
இங்கிரண்டு சொட்டு.
Results of tale-bearing.

66 அங்கும் தப்பி இங்கும் தப்பி அகப்பட்டுக்கொண்டான்
தும்மட்டிப்பட்டன்.
Caught at last.

67 அங்கும் இருப்பான் இங்கும் இருப்பான்,
ஆக்கினசோற்றுக்குப் பங்கும் இருப்பான்.
Said of an untrustworihy companion.

68 அங்கேண்டி மகளே கஞ்சிக்கு அழுகிறாய்?
இங்கேவாடி காற்றாய்ப் பறக்கலாம்.
Offering a worse exchange.

69 அசல் வாழ்ந்தால், ஐந்து நாள் பட்டினி கிடப்பாள்.

70 அசல் வீடு வாழ்ந்தால் பரதேசம் போகிறதா?
Both refer to envying one's neighbour.

71 அசலார் உடைமைக்குப் பேயாய்ப்பறக்கிறது.
Great covetousness.

72 அசல் வீட்டுக்குப்போகிற பாம்பைக் கையாலே பிடிக்கான்.
Implacable hatred.

73 அசல்வீட்டுக்காரனுக்குப் பரிந்துகொண்டு ஆம்படையானை அடித்தாளாம்.
Said of an undutiful wife.

74 அசைப்புக்கு ஆயிரம்பொன் வாங்குகிறது.
Insatiable avarice.

75 அசலும் பிசலும் அறியாமல் அடுத்தாரைக் கெடுக்கப் பார்க்கிறான்.
Regardless of circumstances.

76 அசவாப் பயிரும்: கண்டதே உறவும்.
Both useless.

77 அசுணமாச் செவிப் பறை அடித்ததுபோலும்.
So dull of hearing.

78 அசைந்து தின்கிறது மாடு, அசையாமல் தின்கிறது வீடு.
Things are not what they appear. Said of a lazy man.

79 அச்சம் அற்றவன் அம்பலம் ஏறுவான்.
Against timidity.

80 அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது.
Even trivials may be essentials.

81 அச்சிக்குப் போனாலும், அகப்பை அரைக்காசு.
Essentials never lose their value.

82 அச்சு ஒன்று வேறு ?
Cast in one mould. Refers to family likeness.

83 அச்சாணி அன்னதோர் சொல்.
Said of sound counsel. From Nithi Neri Vilakkam.

84 அச்சியிலும் பிச்சைக்காரன் உண்டு.
Spoken of the prevalence of beggary.

85 அஞ்சனக்காரன் முதுகில் வஞ்சனைக்காரன் ஏறினான்.
"Set a thief to catch a thief."

86 அஞ்சலிவந்தனம் ஆருக்கும் நன்மை.
Extols humility.

87 அச்சம் ஆண்மை குலைக்கும்.
The effect of timidity.

88 அஞ்சிலே பிஞ்சிலே கொஞ்சாமல்,
அறுபதிற்குமேல் கொஞ்சிற்றும்.
Said of acts performed too late.

89 அஞ்சுகதவும் சாத்தியிருக்க,
ஆம்படையான் வாயிலே பேணவளார்?
A vulgar way of expressing a wife's infidelity.

90 அஞ்சா நெஞ்சு படைத்தால் ஆருக்கு ஆவான்?
The fearless a foe to all.

91 அஞ்சாவது பெண் கெஞ்சினாலும் கிடையாது.
So rare. Said to be particularly fortunate.

92 அஞ்சிலே வளையாதது ஐம்பதிலே வளையுமா?
Bend the twig and you bend the tree.

93 அஞ்சினவனைக் குஞ்சும் வெருட்டும்.
The fate of the coward.

94 அஞ்சில் அறியாதவன் ஐம்பதில் அறிவானா?
The child is father to the man.

95 அஞ்சினவனைப் பேய் அடிக்கும்.
The fate of the timid.

96 அஞ்சி ஆண்மை செய்.
Let courage be tempered with fear.

97 அஞ்சினானைக் கெஞ்சுவிக்கும், அடித்தானை வாழ்விக்கும்.
The brave *versus* the timid.

98 அஞ்சினவன் கண்ணுக்கு ஆகாயமெல்லாம் பேய்.
Fancy lends wings to fear.

99 அஞ்சு காசுக்குக் குதிரையும் வேண்டும்,
அதுவும் ஆற்றைக்கடக்கப் பாயவும் வேண்டும்.
Great niggardliness.

100 அஞ்சுமிருக்கிறது நெஞ்சுக்குள்ளே,
அதுவுமிருக்கிறது புத்திக்குள்ளே.
Reason supreme.

101 அஞ்சரு ஆணியில்லாததேர் அசைவதரிது.
Great movements need great forces.

102 அஞ்சுக்கறுகு கிள்ளப்போனவன்,
திரட்டிக்குக் கொண்டுவந்தானும்.
Intending one thing and doing another.

103 அஞ்சு குஞ்சும் கறியாமோ?
அறியாப் பெண்ணும் பெண்டாமோ?
Uselessness of things immature.

104 அஞ்சுக்கு இரண்டு பழுதில்லை.
The whole is not rotten.

105 அஞ்சு பணம் கொடுத்தாலும், அந்தவேகம் ஆத்திரம் ஆகாது.
Haste makes waste.

106 அஞ்சும் மூன்றும் உண்டானால்,
அறியாப் பெண்ணும் கறி சமைக்கும்.
The importance of ingredients.

107 அஞ்சருவுத்தாலி நெஞ்சருவக் கட்டிக்கொண்டு,
வந்தாற்போல் வலக்காரமாய்ப் பேசுகிருய்.
Said of a concubine.

108 அஞ்சு வயது பிள்ளைக்கு ஐம்பது வயதுப் பெண் கால் மு
டக்கவேண்டும்.
Indicates female degradation.

109 அஞ்சுவோனைக் கெஞ்சடிக்கப் பார்க்கிறுன்.
Taking advantage of the timid.

110 அஞ்சுபொன்னும் வாங்கார் அரைப்பணமே போதுமென்
பார்.
No gain to the non-enterprising.

111 அடக்கம் ஆயிரம் பொன்தரும்.
Value of modesty.

112 அஞ்சூர்ச்சண்டை சிம்மாளம், ஐங்கல் அரிசி ஒரு கவளம்.
Said of one who delights in scandal.

113 அஞ்செழுத்தும் பாவனையும் அவனைப்போல் இருக்கிறது.
A chip of the old block—a striking resemblance.

114 அடக்கத்துப் பெண்ணுக்கு அழகேன்?
Indian idea of the purpose of beauty.

115. அடக்கமுடையார் அறிஞர், அடங்காதார் கல்லார்.
The learned and the ignorant contrasted.

116. அடக்கமே பெண்ணுக்கு அழகு.
Commends modesty in women.

117. அடக்குவார் அற்றகழுக்காணி.
An unmanageable fellow.

118. அடக்குவாரற்ற கழுக்காணியும் கொட்டுவாரற்ற மேளமு மாய்த் திரிகிறான்.
Said of an incorrigible vagabond.

119. அடங்காத பாம்பிற்கு ராஜா மூங்கில்தடி.
Extols the use of the cane.

120. அடங்காப் பெண்சாதியால் அத்தைக்கும் நமக்கும் பொல் லாப்பு.
One's aunt is also one's mother-in-law.

121. அடங்காத மனைவியும் ஆங்கார புருஷனும்.
Spoken of a couple who cannot agree.

122. அடங்கினபிடி பிடிக்கவேண்டுமேயல்லாமல், அடங்காப்பிடி பிடிக்கலாகாது.
Attempt things within your reach.

123. அடங்கப்பிடாரியைப் பெண்டுவைத்துக் கொண்டதுபோல்.
Said of the evil of having a disobedient subordinate.

124. அடிக்காயிரம் பொன் கொடுக்கவேண்டும்.
Value of caning.

125. அடிக்கும் பிடிக்கும் சரி.
Tit for tat.

126. அடம்பங்கொடியும் திரண்டால் மிடுக்கு.
Even feeble things gain power by growth.

127. அடா என்பான், வெளியே புறப்படான்.
Tall talk but no action.

128. அடாது செய்தவர் படாது படுவார்.
Evil to him who evil does.

129. அடி அதிரசம் குத்துக் கொழுக்கட்டை.
So callous—beyond all discipline.

130. அடி உதவுகிறதுபோல அண்ணன் தம்பி உதவான்.
The excellence of the 'rod.'

131. அடிக்க அடிக்கப் பந்து அதிக விசைகொள்ளும்.
Effect in proportion to cause.

132. அடிக்கிற காற்றுக்கும் பெய்கிற மழைக்கும் பயப்படு.
Beware of what is beyond your control.

133. அடிக்கிற காற்று வெயிலுக்குப் பயப்படுமா?
Unsuitability of means to end.

134. அடிக்கும் காற்றிலே எடுத்துத் தூற்றவேண்டும்.
Winnow when the wind blows.

135. அடிக்கும் ஒரு கை, அணைக்கும் ஒரு கை.
Said of Divine dealings with man.

136. அடிச்சட்டிகளுள்ளே காணம் போடலாமா?
Folly of attempting grand things with small means.

137. அடி செய்கிறது அண்ணன் தம்பி செய்யான்.
Usefulness of corporal punishment.

138. அடித்தது ஆட்டம் பிடித்ததுபெண்டு.
Begin one way and end another

139. அடித்த ஏருக்கும் குடித்த கூழுக்கும் சரி.
Food in proportion to toil.

140. அடித்துப் பழுத்ததும் பழமா?
Said of something forced and unnatural.

141. அடித்துப் பால் புகட்டுகிறதா?
Against forcing even for a good purpose.

142. அடித்து வளர்க்காத பிள்ளையும் முறுக்கி வளர்க்காத மீசையும் செவ்வையாகா.
Necessity of early discipline.

143. அடித்துவிட்டவன்பின்னே போனாலும், பிடித்து விட்டவன் பின்னே போகலாகாது.
Never trust one who has betrayed you.

144. அடிநாக்கிலே நஞ்சும் நுனிநாக்கிலே அமிர்தமுமா?
Condemns vile hypocrisy.

145. அடி கொச்சி நுனி ஆமணக்கா ?
Parts of the same tree are alike: said of family traits.

146. அடிப்பானேன் பிடிப்பானேன் அடக்குகிற வழியில் அடக்குவோம்.
Discreet treatment rather than brute force commended.

147. அடிமேல் அடி அடித்தால், அம்மியும் நகரும்.
A famous proverb.—Try, try, try again.

148. அடிவயிற்றில் இடி விழுந்தால்போல.
Said of a sudden shock to the mind.

149. அடி ஒட்டிலே கரணம் போடப்பார்க்கிறான்.
Said of foolish enterprises.

150. அடியைத்தொடோ பாரதப்பட்டா.
A sarcastic expression.

151. அடியொட்டி அல்லோ மேற்கரணம் போடவேணும்.
"Stoop to conquer." Be well prepared for what you intend doing.

152. அடிமை படைத்தால் ஆள்வது கடன்.
It is natural to take advantage of opportunities.

153. அடியற்ற பனைபோல் விழுந்தான்.
To fall suddenly.

154. அடியற்ற மரம்போலே அலறிவிழுகிறது.
Similar to above.

155. அடியற்றால் நுனி விழாமலிருக்குமா ?
The cause given the effect *must* follow.

156. அடியாத மாடு படியாது.
Necessity of early discipline. See 142.

157. அடியிலுள்ளது நடுவுக்கும் முடிவுக்கும் உண்டு.
Parts of a whole are alike.

158. அடியும் பட்டுப் புளித்த மாங்காயா தின்னவேண்டும் ?
Why make bad worse? Seek *good* things though unlawfully.

159. அடியென்று அழைக்கப் பெண்டாட்டி இல்லை, பிள்ளை எத்தனை பெண் எத்தனை என்கிறான்.
Said of the conceit of one who has nothing to boast of.

160. அடிவானம் கறுத்தால், ஆண்டை வீடு வறுக்கும்.
Importance of rain in India—joy in hope.

161. அடிவண்டிக் கிடாப்போலே.
So furious.

162. அடி என்கப் பெண்சாதியில்லை, அஷ்டபுத்திர வெகுபாக்கிய நமஸ்து.
Said of a destitute fellow building castles in the air.

163. அடுக்களைக் கிணற்றிலே அமுதம் எழுந்தாற்போல.
A most agreeable surprise.

164. அடுக்களைக்குற்றம் திருபாகல்குழைந்தது; ஆம்படையான் குற்றம் பெண்ணாகப்பிறந்தது.
Shirking one's blame on another.

165. அடுக்குகிற வருத்தம் உடைக்கிறனுக்குத் தெரியாது.
It is easy to criticize.

166. அடுத்ததன் தன்மை ஆன்மா ஆகும்.
Effect of constant intercourse.

167. அடுக்களைக்கு ஒரு பெண்ணும் அம்பலத்துக்கு ஒரு ஆணும் இருக்கிறதென்கிறான்.
So says one who has but two children. Two better than one.

168. அடுக்கிற அருமை உடைக்கிற நாய்க்கு தெரியுமா?
It is easy to criticize.

169. அடுத்த கூரை வேவுங்கால் தன் கூரைக்கு மோசம்.
Nearness of danger.

170. அடுத்தவனைக் கெடுக்கலாமா?
Against betraying those who have taken refuge.

171. அடுத்தவன் வாழ்வைப் பகலே குடி கெடுப்பான்.
So abominably wicked.

172. அடுத்தாரைக் கெடுத்து அன்னம் இட்டாரைக் கன்னம்இடுகிறான்.
So treacherous and ungrateful.

173. அடுத்து அடுத்துச் சொன்னால் தொடுத்த காரியம் முடியும்.
Good effect of importunity.

174. அடுத்துக் கெடுப்பான் கபடன், தொடுத்துக் கெடுப்பாள் மடந்தை.
Tamil opinion of women.

175. அடுத்து வந்தவர்க்கு ஆதரவு சொல்வோன் குரு.
A beautiful definition of a Guru.

176. அடுப்பனலில் வெண்ணெயை வைத்த கதை.
Wilfully ensuring loss. A foolish deed that brings loss.

177. அடுக்களைப்பூனைபோல் இடுக்கிலே ஒளிக்கிறது.
Seeking hiding places.

178. அடுக்களைப் பெண்களுக்கு அழகுவேண்டுமா?
Cooking mars beauty.

179. அடுத்தவனை அகல விடலாகாது.
Against forsaking those who have taken refuge.

180. அடைபட்டுக் கிடக்கிறான்செட்டி; அவனை அழைத்துவா பணம்பாக்கி என்கிறான் பட்டி.
Each has his own anxiety.

181. அடுத்த வீட்டுக்காரனுக் கதிகாரம் வந்தால் அண்டைவீட்டுக் காரனுக்கு இளைச்சல் (வாயம்.)
Envy of neighbours.

182. அடுப்புக் கட்டிக்கு அழகு வேண்டுமா ?
The needful sufficient in common things.

183. அடுப்பு நெருப்பும் போய் வாய்த்தவிடும் போச்சுது.
Lose what is possessed to gain what is not.

184. அடுப்பு எரிந்தால் பொரி பொரியும்.
Every thing depends on proper means.

185. அடைந்தோரை ஆதரி.
Aid the destitute.

186. அடைப்பைப் பிடுங்கினால் பாம்புகடிக்கும்.
Vicious people need but a pretext.

187. அடைமழைக்குள்ளே ஓர் ஆட்டுக்குட்டி செத்ததுபோல.
Said of an inevitable or trifling loss.

188. அடைமழை விட்டும் செடிமழை விடவில்லை.
Effect lasts longer than its cause.

189. அட்டமத்துச் சனி கிட்டவந்ததுபோல.
Said of some person or thing ominous of evil.

---

190. அட்டமத்துச் சனி நட்டம் வரச்செய்யும்.
Evil influence of Saturn in the eighth sign.

---

191. அட்டமத்துச் சனி பிடித்தது, பிட்டத்துத் துணியும் உரிந்து கொண்டது.
Effects of the influence of Saturn.

---

192. அட்டமத்துச் சனியை வட்டிக்கு வாங்கிறாற்போல.
Like invoking evil on one's self.

---

193. அடுத்தவீட்டுக்காரனுக்கு அதியோகம்வந்தால் அண்டைவீடு குதிரைலாயம்.
A prosperous man oppresses his poor neighbour.

---

194. அடுத்துமுயன்றாலும் ஆகுநாள் வரவேண்டும்.
Belief in fate.

---

195. அடே அத்தான், அத்தான், அம்மான் பண்ணிறாற்போலிருக்கவில்லை அடா.
Brother-in-law compared with uncle.

---

196. அடையலரை அடுத்து வெல்லு.
Make friends of foes and conquer them.

---

197. அஷ்ட தரித்திரம்; அதிலும் தரித்திரம் மாமியார்வீடு.
Opinion of one's mother-in-law.

---

198. அட்டாதுட்டி கொள்ளித்தேள்.
So poisonous.

---

199. அட்டாலும் பால் சுவையில் குன்றாது.
Some things improve by apparent injury.

---

200. அட்டைக்கும் திருத்தியில்லை, அக்கினிக்கும் திருத்தியில்லை.
Said of persons who are never satisfied.

---

201. அட்டையைப் பிடித்து மெத்தையில் வைத்ததுபோல.
Doing indecent things.

---

202. அட்டையை எடுத்து மெத்தையில் வைத்தாலும் செத்தையையே நாடும்.
Like seeks like; natural qualities are seldom got rid of.

---

203. அணில் உண்ணும் ஆமை நடையும்.
Said of a frequent eater and slow walker.

204. அணில் கொப்பிலும் ஆமை கிணற்றிலும்.
Said of persons or things totally different from each other.

205. அணில் கொட்டினதும் தென்னமரம் வீழ்ந்ததும்.
Inadequate causes.

206. அணில் ஏறவிட்ட நாய் (பார்ப்பது) போல.
Said of a defeated look.

207. அணிற்பிள்ளைக்கு நுங்கு அரிதோ ? ஆண்டிச்சி பிள்ளைக்குச் சோறு அரிதோ ?
Natural gifts. Who offers bread to a baker's child ?

208. அணு மகாமேரு ஆமா ?
Said of evident impossibilities.

209. அணுவும் மலையாச்சு, மலையும் அணுவாச்சு.
Changeableness of condition.

210. அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது.
Said of things irrecoverably lost.

211. அணிபூண்ட நாய்போல.
Unsuitable dress or behaviour.

212. அணியத்திலே கிழிஞ்சாலும் கிழிஞ்சது அமரத்திலேகிழிஞ்சாலும் கிழிஞ்சது.
Said of things doubtful.

213. அண்டங்காக்காய் குளறுகிறுபோலே.
So uncouth.

214. அண்டத்துக்கொத்தது பிண்டத்துக்கு.
What affects the whole affects also the part

215. அண்டை அயல் பார்த்துப் பேசுகிறது.
Not courageous and straightforward.

216. அணை கடந்த வெள்ளத்தை மறிப்பவர் ஆர் ?
Said when it is too late to avoid a misfortune.

217. அண்டத்திற்கு உள்ளது பிண்டத்திற்கும் உண்டு.
Vide above 214.

---

218. அண்டமும் பிண்டமும் அந்தரங்கமும் வெளியரங்கமும்.
Refers to Divine omnipresence.

---

219. அண்டர் எப்படியோ தொண்டரும் அப்படியே.
As the god, so worshipper. Cf. Yatha deva tatha bhaktah.

---

220. அண்டத்தில் இல்லாததும் பிண்டத்தில் உண்டா ?
Negative of 217.

---

221. அண்டத்தைச் சுமக்கிறவனுக்குச் சுண்டைக்காய் பாரமா ?
Said of one whose resources are unlimited.

---

222. அண்டாத பிடாரி ஆருக்கு அடங்குவாள் ?
To whom will the unapproachable demon submit.

---

223. அண்டை வீடடுச் சண்டை கண்ணுக்குக் குளிர்ச்சி.
Envious persons take delight in their neighbours' quarrels.

---

224. அண்டை வீட்டுப் பார்ப்பான் சண்டை மூட்டித் தீர்ப்பான்.
Said of one who creates evil and gains by it.

---

225. அண்டையிற் சமர்த்தன் இல்லாத ராஜாவுக்கு அபகீர்த்தி வரும்.
Necessity of a warrior at court.

---

226. அண்ட நிழலில்லாமற்போனாலும் பேர் ஆலவிருட்சம்.
Great in name but not in fact.

---

227. அண்ணனுக்குத் தம்பி அல்லவென்று போகுதா ?
Relationship will assert itself.

---

228. அண்ணன் சம்பாதிக்கிறது தம்பி அரைஞாண் கயிற்றுக்குச் சரி.
Industrious person and spendthrift brother.

---

229. அண்ணனார் சேனையிலே அள்ளி உண்ணப் போகிறாள் !
A sister is seldom well off in her brother's house.

---

230. அண்ணனிடத்தில் ஆறு மாதம் வாழ்ந்தாலும், அண்ணியிடத்தில் அரை நாழிகை வாழலாமா ?
As they are always quarrelling about their rights.

---

231. அண்ணனுக்குப்பெண் பிறந்தால், அத்தை அசல் நாட்டாள்.
Because she expects to give her daughter to his son.

---

232. அண்ணன் தம்பிதான் சென்மப் பகையாளி.
Owing to their rival claims.

233. அண்ணனைக் கொன்ற பழி, சந்தையிலே தீர்த்துக்கொள்ளுகிறது போல.
Even revenge must be sought in the right place.

234. அண்ணன்பெரியவன், சிற்றப்பா, சுருட்டுக்கு நெருப்புக் கொண்டுவா.
Said when an inferior expects respect from his superior.

235. அண்ணன் பெரியவன். அப்பா, காலைப்பிடி.
Similar to above,

236. அண்ணன் கொம்பு பம்பழ பளாச்சு.
Refers to a story about foxes and hares.

237. அண்ணன் உண்ணாதது எல்லாம் மைத் துனிக்கு லாபம்.
She eats up the remainder.

238. அண்ணன் தம்பி வேண்டும் இன்னம் தம்பிரானே.
Wishing for more brothers. (Sarcastic)

239. அண்ணாண்டி வாரும் சண்டையை ஒப்புக்கொள்ளும்.
Calling others to decide a quarrel.

240. அண்ணாவுக்கு மனது வரவேணும்; மதனிபிள்ளை பெறவேணும்.
Both impossible.

241. அண்ணாவி விழுந்ததும் ஒரடவுதான்.
Even falls are feats in the great.

242. அண்ணாவி பிள்ளைக்குப் பணம் பஞ்சமா, அம்பட்டன் பிள்ளைக்கு மயிர் பஞ்சமா ?
Each has his own abundance.

243. அண்ணாக்கும் தொண்டையும் அதிர அடைத்தது.
Something very choking.

244. அண்ணாமலையார் அருளுண்டானால் மன்னார்சாமி மயிரைப் பிடுங்குமா ?
With the favor of superiors one need not fear inferiors.

245. அண்ணாமலையாருக்கு அறுபத்துநாலு பூசை, ஆண்டிகளுக்கு எழுபத்திநாலு பூசை.
Greater fear of religious mendicants.

246. அதிக ஆசை அதிக நஷ்டம்.
Great desire—great loss.

247. அதிக ஆசை மிக தரித்திரம்.
Avarice produces poverty.

248. அதிக்கிரமமான ஊரிலே கொதிக்கிற மீனும் சிரிக்குமாம்.
Said of a very wicked place.

249. அதிகசரிசனமானாலும் ஆம்படையானை அப்பா என்கலாமா?
There is a limit to familiarity.

250. அதிகாரமில்லாவிட்டால் பரியாரம் வேணும்.
Attendants needed when authority is wanting.

251. அதிகாரியுடனே எதிர்பண்ணலாமா?
Useless to resist one in authority.

252. அதிகாரியும் தலையாரியும் கூடி, விடியுமட்டும் திருடலாம்.
Officials can combine for any crime.

253. அதிகாரி வீட்டில் திருடித் தலையாரி வீட்டில் வைத்தது போல.
Running headlong into danger.

254. அதிகாரி வீட்டுக் கோழிமுட்டை குடியானவன் வீட்டு அம்மிக்கல்லை உடைத்ததாம்.
Any thing may be laid at the door of an inferior.

255. அதிஷ்டமும் ஐஸ்வரியமும் ஒருவர் பங்கல்ல.
Fortune favours all.

256. அதிஷ்டம் கெட்ட கழுக்காணி.
Forsaken by fortune.

257. அதிஷ்டம் ஆறாய்ப் பெருகுகிறது.
Said of a very lucky person.

258. அதிஷ்டம் இருந்தால் அரசு பண்ணலாம்.
The importance of luck.

259. அதிஷ்டம் இல்லாதவனுக்குக் கலப்பால் வந்தாலும், அதையும் பூனை குடிக்கும்.
The unfortunate never succeeds.

260. அதிஷ்டவான் மண்ணைத் தொட்டாலும் பொன்னாகும்.
The power of a lucky person.

261. அதிஷ்டம் கெட்டதுக்கு அறுபது நாழியும் வியாச்சியம்.
The unfortunate always in litigation.

262. அதியாக்குறியால் கருமாரிப்பாய்ச்சல்.
An athletic saying.

263. அதிரந்தடித்தாருக்கு ஐயனாருமில்லை பிடாரியாருமில்லை.
To the bold, there is no fear of foes.

264. அதிர அடித்தால், உதிர விளையும்.
Gain in proportion to labour.

265. அதின்கையை எடுத்து அதின்கண்ணிலே குத்துகிறது.
Wilfully injuring oneself.

266. அதிலேயும் இது புதுமை, அவன் செத்தது மெத்த அருமை.
Things strange and singular.

267. அதிலே குறைச்சல் இல்லை ஆட்டடா பூசாரி.
Words of encouragement.

268. அது அதற்கு ஒரு கவலை, ஐயாவுக்கு எட்டுக் கவலை.
Too many irons in the fire.

269. அதுக்கு இட்ட காசு மினக்கெட்டு அரிவாள் மணைக்குச் சுறுக்கிட்டதா ?
Something diverted from its object.

270. அதுவும் போதாதென்று அழலாமா இனி ?
Discontent disapproved.

271. அதெல்லாம் உண்டிட்டு, வாவென்பாள்.
Invites after finishing her meal.

272. அதைரியமுள்ளவனை அஞ்சாத வீரன் என்றாற்போல.
Describing things by their opposites.

273. அதை விட்டாலும் கதியில்லை, அப்புறம்போனாலும் விதியில்லை.
Quite miserable.

274. அத்தம் பிருதி அல்லவோ அம்பட்டன் பெண்கேட்க வந்தது?
How wealth affects the low-born.

275. அத்தனையும் சேர்ந்தாள், உப்பிட மறந்தாள்.
Something all but complete.

276. அத்தான் செத்தால் மயிராச்சு, கம்பளி மெத்தை நமக்காச்சு.
A single eye to one's gain.

277. அத்திக்காயைப் பிட்டுப்பார்த்தால், அங்கும் இங்கும் பொள்ளல்.
Inquiry reveals many defects.

278. அத்தி பூத்தாற்போல் (இருக்கிறது.)
Something that never happens.

279. அத்திப் பழத்தைப் பிட்டுப்பார்த்தால், அத்தனையும் புழு.
See above 277.

280. அத்திப்பூவை ஆர் அறிவார்கள் ?
Said of a nonentity.

281. அத்திப்பூவைக் கண்டவர்கள் உண்டா? ஆந்தைக் குஞ்சைப் பார்த்தவர்கள் உண்டா ?
Same as above.

282. அத்திமரத்திலே தொத்திய கனிபோல.
Connection so slight.

283. அத்து மீறிப்போனான், பித்துக்கொள்ளி ஆனான்.
The secret of madness.

284. அத்தைக்கு மீசைமுளைத்தாற் சிற்றப்பா என்கலாம்.
Improbable contingencies.

285. அத்தைக் கொழியப் பித்தைக்கில்லை ஔவையாரிட்ட சாபத்தீடு.
The aunt is usually disliked.

286. அத்தைத்தான் சொல்லுவானேன், வாயைத்தான் வலிப்பானேன் ?
Government of the tongue.

287. அத்தைமகள் அம்மான்மகள் சொந்தம்போல்.
Claiming cousinship.

288. அத்தோடே நின்னுது அலைச்சல், கொட்டோடே நின்னுது குலைச்சல்.
Summary disposal of small evils.

289. அந்தக்கண்ணிக்கு அழுதாலும் வரானும் ஆம்புடையான்.
Said of an unfortunate maid.

290. அந்தம் சிந்தி அழகு ஒழுகுகிறது.
Irony as to ugliness.

291. அந்தணர்க்குத் துணை வேதம்.
Connection between Brahmins and Vedas.

292. அந்தணர் மனையிற் சந்தனம் மணக்கும்.
Brahmin partiality for sandal.

293. அந்தரத்தில் கோல் எறிந்த அந்தகனைப்போல.
Said of one who has lost his only prop.

294. அந்தி ஈசல் பூத்தால், அடைமழை அதிகரிக்கும்.
Sign of rain.

295. அந்தி மழை அழுதாலும் விடாது.
Nature of evening rain.

296. அந்தூது நெல்லானேன்.
Become quite sapless.

297. அந்தலைகெட்டுச் சிந்தலைமாறிக் கிடக்குது.
Confusion of mind.

298. அந்தவெட்கத்தை ஆரோடேசொல்லுகிறது.
"Name it not in Gath."

299. அந்திப்பீ சந்திப்பீ பேலாதான் வாழ்க்கை சாமப்பீதட்டியெழுப்பும்.
Evils of irregular habits. – *N. B.*—Coarse.

300. அப்பச்சி குதம்பையைச் சூப்பப் பிள்ளைமுற்றின தேங்காய்க்கு அழுகிறதுபோல.
Nature of children.

301. அப்பச்சிக் கோவணத்தைப் பருந்துகொண்டோடுகிறது,பிள்ளை வீரவாளிப் பட்டுக்கு அழுகிறது.
Comp. above proverb.

302. அப்பத்தை எப்படிச் சுட்டாரோ தித்திப்பை எப்படி நுழைத்தாரோ ?
Said of something mysterious.

303. அப்பனோடே போறவளுக்கு அண்ணன் ஏது தம்பி ஏது.
Evils of incest.

304. அப்பிடாவுமில்லை வெட்டுக்கத்தியுமில்லை.
Quite helpless.

305. அப்பம் சுட்டது சட்டியில், அவல் இடித்தது திட்டையில்.
Each in its proper place.

306. அப்பம் என்றால் பிட்டுக்காட்டவேண்டுமோ ?
Good things are known at sight.

307. அப்பன்செத்தும் தம்பிக்கழுகிறதா ?
Why mourn over the smaller loss?

308. அப்பன் அருமை அப்பன் மாண்டால் தெரியும், உப்பின் அருமை உப்பு இல்லாவிட்டால் தெரியும்.
The value of something is felt after its loss.

309. அப்பன் சோற்றுக்கு அழுகிறான், பிள்ளை கும்பகோணத்தில் கோதானம்செய்கிறான்.
Charity begins at home.

310. அப்பன் பெரியவன், சிற்றப்பா சுருட்டுக்கு நெருப்புக்கொண்டுவா என்றதுபோல.
One act of disrespect for another.

311. அப்பா என்றால் உச்சி குளிருமா ?
Emptiness of mere words.

312. அப்பியாசம் குலவிருது.
Vide next proverb.

313. அப்பியாசம் கூசாவித்தை.
Practice makes perfect.

314. அப்பியாச வித்தைக்கு அழிவு இல்லை.
Practice preserves art.

315. அமரபட்சம் பூர்வபட்சம், கிஷ்ணபட்சம் சுக்கிலபட்சம்.
Refers to the vicissitudes of life.

316. அமரிக்கை ஆயிரம் பெறும்.
Silence is golden.

317. அமர்த்தனுக்கும் காணி வேண்டாம், சமர்த்தனுக்கும் காணி வேண்டாம்.
An oppressor and a clever man are in one way equal.

318. அமஞ்சி உண்டோ குப்புநாய்க்கரே என்பானேன்?
Wilfully involving oneself.

---

319. அமாவாசைக் கருக்கலிலே பெருச்சாளி போனதெல்லாம் வழி.
Darkness helps evil-doers.

---

320. அமாவாசைப் பருக்கை என்றைக்கும் அகப்படுமா?
Good things are not to be had every day.

---

321. அமிஞ்சிக்கு உழுதால் நன்றாய் விளையாது.
Compelled service.

---

322. அமுதம் உண்கிற வாயால் விஷம் உண்பார்களா?
Good things are not to be abused.

---

323. அமுதுபடி பூச்சியம் ஆடம்பரம் அதிகம்.
Poverty and pomp.

---

324. அமைச்சனில்லாத அரசும் ஆம்படையானில்லாத ஆரிழையும்.
Lacking something essential.

---

325. அம்பட்டனை மந்திரித்தனத்துக்கு வைத்துக்கொண்டது போல.
Employing unsuitable persons.

---

326. அம்பட்டன் கைக்கண்ணாடி போலே.
Always ready at hand.

---

327. அம்பட்டன் பல்லக்கேறினதுபோல.
Something seldom witnessed.

---

328. அம்பட்டக்கிருதும் வண்ணார ஒயிலும்.
The base taking airs.

---

329. அம்பட்டன் குப்பையைக் கிளறினால் மயிர் மயிராய்ப் புறப்படும்.
The base on inquiry will only reveal what is vile.

---

330. அம்பட்டன் பிள்ளைக்கு மயிர் அருமையா?
He has plenty of it.

---

331. அம்பலக் கழுதை அம்பலத்திற் கிடந்தால் என்ன, அடுத்த திருமாளிகையிற் கிடந்தால் என்ன ?
An ass's qualities are the same wherever it may be.

332. அம்பலத்தில் ஏறும் பேச்சை அமசடக்கம் பண்ணப் பார்க்கிறான்.
Hushing what ought to be published.

333. அம்பலத்தில் கட்டுச்சோறு அவிழ்த்தாற்போல்.
Folly of revealing one's secrets.

334. அம்பலத்தில் பொதி அவிழ்க்கல் ஆகாது.
Same as above.

335. அம்பாத்தூர் வேளாண்மை, யானைகட்டத் தாள் வானமுட்டும் போர்; ஆறுகொண்டது பாதி தூறுகொண்டது பாதி.
Said of something promising at first but disappointing in the end.

336. அம்பாணி தைத்ததுபோலப் பேசுகிறான்.
Speaks too sharply.

337. அம்பிகொண்டு ஆறு கடப்போர், நம்பிக்கொண்டு நரிவால் கொள்ளுவார்களா ?
Why neglect proper means ?

338. அம்மணமும் இன்னலும் ஆயுசுபரியந்தமா ?
Poverty is not to be life-long.

339. அம்மா குதிர்போலே, ஐயா கதிர்போல.
Said of an ill-matched couple.

340. அம்மாளுக்குத் தமிழ்தெரியாது; ஐயாவுக்கு வடுகு தெரியாது.
Folly of marriages between Tamils and Telugus.

341. அம்மா கெட்ட கேட்டுக்கு முக்காடு ஒன்று ?
Sarcastic—refers to a fallen woman.

342. அம்மாள் தெருளுவதற்கு முன்னே ஐயா உருளுவார்.
Long delay.

343. அம்மானும் மருமகனும் ஒரு வீட்டுக்கு ஆள் அடிமை.
Slaves in the same house.

344. அம்மான் மகளுக்கு முறையா ?
A young man marries his maternal uncle's daughter.

345. அம்மான் வீட்டு வெள்ளாட்டியை அடிக்க அதிகாரியைக் கேட்க வேண்டுமா ?
One should excerise one's natural rights.

346. அம்மி மிடுக்கோ அரைப்பவள் மிடுக்கோ ?
The grinder woman of course.

347. அம்மி மிதித்து அருந்ததி பார்த்ததுபோல பேசுகிறாள்.
As if she were a married person (?)

348. அம்மியிருந்து அரணை அழிப்பான்.
So quiet and yet so wicked.—Said of a dissembler.

349. அம்மியும் குழவியும் ஆகாயத்தில் பறக்கச்சே, எச்சிற் கல்லை எனக்கு என்ன புத்தி என்றாற்போல.
When superiors suffer there is no question as to inferiors.

350. அம்முக்கள்ளி ஆடையைத் தின்றால் வெண்ணெய் உண்டா?
No cream, no butter.

351. அம்மைக்கமர்க்களம் ஆக்கிப்படை; எனக்கமர்க்களம் பொங்கிப்படை.
I can't wait so long as the goddess.

352. அம்மை வீட்டுத் தெய்வம் நம்மைவிட்டுப் போமா ?
Trust in the tutolary goddess.

353. அம்மைக்கு அமர்க்களம் பொங்கிப் படையுங்கள்.
Make an offering of rice to the goddess.

354. அம்மையார் எப்பொழுது சாவாள் ? கம்பளி எப்பொழுது நமக்கு மிச்சமாகும் ?
Waiting for a superior's death.

355. அம்மையார் நூற்கிற நூலுக்கும், பேரன் அரைஞாண் கயிற்றுக்கும் சரி.
Turns out very little work.

356. அம்மையார் பெறுவது அரைக்காசு, அவளுக்குத் தலை சிரைக்க முக்காற்காசு.
Expense greater than worth.

357. அம்மையார்க்கு என்ன துக்கம், கந்தைத் துக்கம்.
The sorrow of an old woman.

358. அம்மையாரே வாரும், கிழவனைக் கைக்கொள்ளும்.
A joke at an old lady.

359. அய்யா, அய்யா, அம்மா குறைக்கேழ்வாரும் அணைக்க வர
சொன்னாள்.
A woman taking advantage of a man's kindness.

360. அயலார் உடைமைக்குப் பேயாய்ப் பறக்கிறான்.
Great covetousness.

361. அயலார் உடைமையில் அந்தகன்போல் இரு.
An excellent paraphrase of the 10th Commandment.

362. அயல்வீட்டான் பிள்ளை ஆபத்துக்குதவுவானோ ?
Don't trust another's child.

363. அயன் இட்ட கணக்கு ஆருக்கும் தப்பாது.
Brahma fixes everybody's age.

364. அயன் இட்ட எழுத்தில் அணுவளவும் தப்பாது.
Comp. above.

365. அயோக்கியர் அழகு அபரஞ்சிச் சிமிழில் நஞ்சு.
Beauty in the wicked is poison in a casket of gold.

366. அய்யன் அளந்தபடி.
Trust in Providence.

367. அய்யாவையர் கூழுக்கு அப்பையங்கார் தாதாவா ?
A stranger distributing another's charities.

368. அய்யா தாசி கவனம்பண்ண ஐந்தாளின் சுமையாச்சுது.
Kindness in appearance—but a burden in fact.

369. அய்யா பாட்டுக்கு அஞ்சடியும் ஆறடியும் தாண்டும்.
Bad singing.

370. அய்யாசாமிக்குக் கலியாணம் அவரவர்வீட்டிலே சாப்பாடு.
A wedding without a feast.

371. அயினையும் சற்றே அருக்குமாம் பிட்டுக்குள் போட்டுப் பிச
றுமல்.
Even insignificant things need looking after.

372. அரஅர என்பது பெரிதோ, ஆண்டிக்கு இடுவது பெரிதோ?
Action is better than words.

373. அரகரா என்கிறவருக்குத்தெரியுமா? அமுது படைக்கிறவனுக்குத் தெரியுமா?
The anxiety of providing food.

374. அரக்கன் ஆண்டால் என்ன, மனிதன் ஆண்டால் என்ன?
Natives don't care who rules the country.

375. அரங்கின்றி வட்டாடலும், அறிவின்றிப் பேசலும் ஒன்று.
Knowledge necessary to talk.

376. அரசனில்லாப்படை வெட்டுமா?
A leader indispensable.

377. அரசனைக்கண்ட கண்ணுக்குப் புருஷனைக்கண்டால் கொசுப் போல இருக்கிறது.
Even good things suffer by invidious comparison.

378. அரசன் குடியையும் பிடிக்கலாமென்று அம்பட்டன் வேலையை விரும்புவதுபோல.
Resorting to mean methods with the hope of gain.

379. அரசன் அளவிற்கு ஏறிற்று.
It has reached the "king's" ear.

380. அரசன் இல்லாத நாடு, புருஷன் இல்லாத வீடு.
Neither country nor house can exist without a lord.

381. அரசன் உடைமைக்கு ஆகாயம் சாக்ஷி.
Even the sky is a witness for a great man.

382. அரசன் அன்று கொல்லும், தெய்வம் நின்றுகொல்லும்.
A king contrasted with God.

383. அரசன் கல்லின்மேல் கத்திரிகாய்க்கும் என்றால், கொத்து ஆயிரம் குலை ஆயிரம் என்பார்கள்.
The king's plants are always thriving.

384. அரசன் எப்படியோ அப்படியே குடிகள்.
As king, so subjects.

385. அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி.
As king, so subjects.

386. அரசன் வழிபட்டது அவனி.
The world dvoted to the king.

387. அரசன் வழிப்படாதவன் இல்லை.
Everybody follows the king.

388. அரசன் அருளில்லாது அணுவும் அசையாது.
Importance of the king's favour.

389. அரசன் அருள் அற்றால், அனைவரும் அற்றார்.
Comp above. 388.

390. அரசில்லாப்படை வெல்லுவதரிது.
A commander is indispensable to an army.

391. அரசில்லாநாடு அலக்கழிந்தாற்போல.
Evils of anarchy.

392. அரசனுக்கு ஒரு சொல் அடிமைக்குத் தலைச்சுமை.
The king's word a burden to the slave.

393. அரசனுக்கு வலியார் அஞ்சுவது எளியார்க்கு அனுகூலமாகிறது.
Oppressing the rich helps the poor.

394. அரசனுக்குத் துணை வயவாள்.
A good sword an aid to the king.

395. அரசனும் அரவும் சரி.
A king compared to a snake.

396. அரசனும் அழலும் சரி.
A king compared to fire.

397. அரமும் அரமும் கூடினால் கின்னரம்.
Two files make music.

398. அரசனும் நெருப்பும் பாம்பும் சரி.
395 and 396 in one.

399. அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்டதுபோல.
Losing what is possessed to obtain what is not.

400. அரசுக்கு இல்லை சிறுமையும் பெருமையும்.
No partiality to Government.

401. அரசுடையானை ஆகாயம் காக்கும்.
Safety of good government.

402. அரண்மனை வாசல்காத்தவனும் பரிமடை காத்தவனும் பழு
துபோவதில்லை.
Menials are never forgotten.

403. அரண்மனை காத்தவனும் அடுப்பங்கரை காத்தவனும் வீண்
போகிறதில்லை.
Comp. above.

404. அரண்மனைக்கு ஆயிரஞ்செல்லும், குடியானவன் என்ன செ
ய்வான்.
Against taxing the poor for the King's luxuries.

405. அரண்டவன் கண்ணுக்கு இருண்டது எல்லாம் பேய்.
Fear peoples the air with demons.

406. அரணை அலகு திறக்காது.
The nature of the அரணை.

407. அரணை கடித்தால் மரணம்.
The bite of the அரணை.

408. அரத்தை அரம் கொண்டும் வயிரத்தை வயிரம் கொண்டும்
அறுக்க வேண்டும்.
Use appropriate means.

409. அரபிக் குதிரையிலும் ஐயம்பேட்டைத் தட்டுவாணி நல்
லது.
Praising one's country's produce.

410. அரவத்தைக் கண்டால் கீரி விடுமா ?
Enemies are implacable.

411. அரவுக்கு இல்லைச் சிறுமையும் பெருமையும்.
Comp. 400 applied to a snake.

412. அரி அரி என்றால் ராமா ராமா என்கிறான்.
Mistaking one thing for another.

413. அரிசி என்று அள்ளிப்பார்ப்பாரும் இல்லை, உமி என்று ஊத
திப்பார்ப்பாரும் இல்லை.
Some things are known at sight.

414. அரி, ஹர பிரமாதிகளாலும் ஆகாது.
Something quite impossible.

*N. B.*—From this it is clear that the Supreme Being is according to Tamil opinion, quite distinct from the Hindu Triad.

415. அரி என்கிற அக்ஷரம் தெரிந்தால் அதிகாரம் பண்ணலாம்.
Utility of learning.

416. அரி என்கிற அக்ஷரம் தெரிந்தால் அதிக்கிரமம் பண்ண லாமா?
Abuse of learning.

417. அரி என்றால் ஆண்டிக்குக் கோபம், அர என்றால் தாதனுக் குக் கோபம்.
Conflict between Sivavites and Vishnuvites.

418. அரிசி அள்ளின காக்காய்போல.
Guilty conscience.

419. அரிசி ஆழாக்கானாலும், அடுப்புக்கட்டி மூன்று வேண்டும்.
Appliances must be complete.

420. அரிசி உண்டானால் வரிசையும் உண்டு, அக்காள் உண்டா னால் மச்சானும் உண்டு.
No effect without due cause.

421. அரிசி உழக்கானாலும் அடுப்பு மூன்று.
Comp. 419.

422. அரிசி கொண்டு (உண்ண) அக்காள் வீட்டுக்குப் போவா னேன்?
Doing what is quite unnecessary.

423. அரிசியும் களியும் உண்டானால் அக்காள் வீடுவேண்டுமா?
An elder sister is usually sought for food.

424. அரிசிக்குத் தக்க உலையும் ஆமுடையானுக்குத் தக்க வீறாப்பும்.
Every claim must be well supported.

425. அரிசிப் பகையும் ஆமுடையான் பகையும் உண்டா?
Essentials never despised.

426. அரிசிப் பொதியுடன் திருவாரூர்.
Said of a double benefit.

427. அரிசி மறந்த கூழுக்கு உப்பு ஒன்று குறையா?
Dont mention the smaller loss.

428. அரிச்சந்திரன் வீட்டுக்கு அடுத்த வீடு.
Said of a notorious liar.

*N. B.*—Harischandra was famous for his veracity.

---

429. அரிது அரிது அஞ்செழுத்து உணர்தல்.
The five mystic letters, ந, ம, சி, வ, ய.

---

430. அரித்து வரிக்கிற சப்பிக்கு ஆயம் தீர்வை உண்டா ?
No tax on trifles.

---

431. அரிய சரீரம் அந்தரத்தெறிந்த கல்.
Uncertainty of this life.

---

432. அரியது செய்து எளியதுக்கு ஏமாந்து திரிகிறான்.
Accomplishing great things and blundering in small ones.

---

433. அரியும் சிவனும் ஒன்று, அல்ல என்கிறவன் வாயில் மண்ணு.
Vishnu and Siva are one.

---

434. அரியதாரம் கொண்டுபோகிற நாய்க்கு அங்கு இரண்டடி இங்கு இரண்டடி.
Fate of a thief in possession of stolen property.

---

435. அருக்கித்தேடிப் பெருக்கி அழி.
Spending soon what has been saved slowly.

---

436. அரிவாளும் அசையவேண்டும், ஆண்டை குடியும் கெடவேண்டும்.
Wishing evil to one's master.

---

437. அரிவாள் சூட்டைப்போலக் காய்ச்சல் மாற்றவோ ?
Rough treatment discouraged.

---

438. அரிவாள் சுறுக்கே அரிவாள்முனை கருக்கே.
Success depends on means employed.

---

439. அரிவை மொழி கேட்டால் அபத்தன் ஆவான்.
Against listening to female counsel.

---

440. அருகாகப் பழுத்தாலும், விளாமரத்தில் வெளவால் சேராது.
Said of uninviting persons.

---

441. அருக்காணி நாச்சியார் குரங்குப்பிள்ளைப் பெற்றாளாம்.
A haughty woman well served.

442. அருக்காணாமுத்துக் கரிக்கோலமானாள்.
Pride goeth before a fall.

---

443. அருக்காமணி முருக்கம் பூ.
Something rare.

---

444. அருங்கோடை துரும்பு அற்றுப்போகுது.
Effect of drought.

---

445. அருட்செல்வம் ஆருக்கும் உண்டு, பொருட்செல்வம் ஆருக்கும் இல்லை.
Grace for all; wealth for a few.

---

446. அருணாம்பரமே கருணாம்பரம்.
Spoken of the dyed garments of mendicants.

---

447. அரைக்காசுக்குக் குதிரை வாங்கவும் வேண்டும், ஆற்றைக்கடக்கப் பாயவும் வேண்டும்.
To make a little go a great way.

---

448. அருத்தியைப்பிடுங்கித் துருத்தியிலேபோட்டுத் துருத்தியைப் பிடுங்கி அருத்தியிலே போடுகிறது.
Confusing one's mind.

---

449. அரும்பு கோணினால் அதின் மணம் குற்றமா ?
Character, not form essential.

---

450. அருமை அறியாதவன் ஆண்டு என்ன, மாண்டு என்ன ?
Discrimination essential in a ruler.

---

451. அருமை மருமகன் தலைபோனாலும் போகட்டும், ஆதிகாலத்து உரல் போகல் ஆகாது.
Fondness for a favourite article.

---

452. அருமையற்ற வீட்டில் எருமையும் குடியிராது.
An unkind family.

---

453. அரும் சுனை நீர் உண்டால், அப்பொழுதே ரோகம்.
Hill streams not healthy.

---

454. அருள் வேணும், பொருள் வேணும், அடக்கம் வேணும்.
Three essentials to man.

---

455. அரைக்காசுக்கு அழிந்த கற்பு ஆயிரம்பொன் கொடுத்தாலும் கிடையாது.
Virtue easily lost but seldom recovered.

---

456. அரைக்காசுக்குப் போன மானம் ஆயிரம் கொடுத்தாலும் வாராது.
Same as 455, but said of reputation.

457. அரைக்கினும் சந்தனம் அதன் மணம் அறாது.
Persecution cannot destroy virtue.

458. அரைக்குடம் ததும்பும், நிறைகுடம் ததும்பாது.
Cf. Empty vessels make much noise.

459. அரைச்சல்லியை வைத்து எருக்கு இலையைக் கடந்ததுபோல.
Refers to a Tamil custom.

460. அருவருப்புச்சோறும் அசங்கிதக்கறியும்.
Serving meals without affection.

461. அரைக்கமாயம், கரைக்கமாயம்.
Disappearing easily.

462. அரைக்காசுக்கு வந்தவெட்கம் ஆயிரம்பொன் கொடுத்தாலும் போகாது.
See above 455.

463. அரைக்காசை ஆயிரம் பொன்னாக்குகிறவளும் பெண்சாதி, ஆயிரம் பொன்னை அரைக்காசாக்குகிறவளும் பெண்சாதி.
Wives are of different qualities.

464. அரைஞாண்கயிறும் தாய்ச்சீலையுமாய் விடுகிறவளும் பெண் [சாதி.
See above 463.

465. அரைப்பணத்துக்கு மருத்துவம் பார்க்கப்போய் ஐந்துபணத்து நெளி உள்ளே போய்விட்டது.
Cheap things are dear in the long run.

466. அரைச்சீலை கட்டக் கைக்கு உபசாரமா ?
No thanks for attending to one's own affairs.

467. அரைச்சோற் கொண்டு அம்பலம் ஏறலாமோ ?
Against unpreparedness.

468. அரைச்சோற் கொண்டு அம்பலம் ஏறினால், அரைச்சொல் முழுச் சொல்லாமா ?
Same as above.

469. அரைத்த பயறு முளைத்தாற்போல.
Impossible things.

470. அரைத்து மீந்தது அம்மி, சிரைத்து மீந்தது குடுமி.
The *Kudumi* is an essential.

---

471. அரைப்பணம் கொடுத்து அழச்சொல்லி, ஒருபணம் கொடுத்து ஓயச்சொல்லுவானேன்?
Seeking loss wilfully.

---

472. அரைப்பணச் சேவகம் ஆனாலும் அரண்மனைச் சேவகம்போல் ஆகுமா?
Pay is not the chief thing in an employment.

---

473. அரைப்பணம் கொடுக்கப் பால்மாறி, ஐம்பது பொன் கொடுத்துச் சேர்வை செய்த கதை.
Evil of slight negligence.

---

474. அரையிலே புண்ணும் அண்டையிலே கடனும் ஆகாது.
Both very irksome.

---

475. அலைகடலுக்கு அணைபோடலாமா?
Somethings are impossible.

---

476. அலை ஓய்ந்து கடலாடலாமா?
Folly of waiting for things which will never cease.

---

477. அரைவித்தை கொண்டு அம்பலம் ஏறினால் அரைவித்தை முழுவித்தை ஆகுமா?
Imperfect education. Comp. 468.

---

478. அலுத்து வியர்த்து அக்காள் வீட்டுக்குப் போனால் அக்காள் இழுத்து மச்சானண்டையிற் போட்டாளாம்.
Receiving the reverse of what has been expected.

---

479. அலை எப்பொழுது ஒழியும், தலை எப்பொழுது முழுகுகிறது?
Comp. 476.

---

480. அலை மோதும்போதே தலை முழுகுகிறது.
Attempting something under adverse circumstances.

---

481. அலைவாய்த் துரும்புபோல் அலைகிறது.
Creature of circumstances.

---

482. அல்லக்காட்டு நரி பல்லைக் காட்டுகிறதுபோல.
Something ludicrous.

---

483. அல்லவை தேய அறம் பெருகும்.
Condition for the growth of virtue.

---

484. அல்லற்பட்டு அழுத கண்ணீர் செல்வத்தைக் குறைக்கும்.
Effect of oppression.

---

485. அல்லல் அற்ற படுக்கை அழகிலும் அழகு.
Freedom from anxious cares.

---

486. அல்லல் அருளாள்வார்க்கில்லை.
Who are free from sorrow.

---

487. அல்லல் ஒருகாலம் செல்வம் ஒருகாலம்.
Fickle fortune.

---

488. அவசரத்தில் செத்த பிணத்துக்குப் பீச்சுத்தோடே மாரடிக்கிறாள்.
Evils of haste.

---

489. அவசரக்காரனுக்குக் காக்கிலேபெட்டு, நேக்குச்சேத்திலே பெட்டு.
Mixture of Tamil and Telugu—great hurry.

---

490. அவசரத்தில் அருக்கன் சட்டியிலும் கைநுழையாது.
Hurry makes even easy things hard.

---

491. அல்லாதவன் வாயில் கள்ளை வார்.
Give liquor to your foe.

---

492. அல்லாத வழியால் பொருள் ஈட்டல், காமம், துய்த்தல், இ
[வை ஆகா.
Things to be eschewed.

---

493. அல்லும் பகலும் கசடறக் கல்.
On learning.

---

494. அவகடம் உள்ளவன் அருமை அறியான்.
On suspicion.

---

495. அவகுணக்காரன் அவகாசமாவான்.
The vicious will perish.

---

496. அவசரக்காரனுக்குப் புத்தி மட்டு.
Great haste and little sense.

---

497. அவசரக்கோலம், அள்ளித் தெளித்தது.
Haste makes half work.

---

498. அவசரத்தில். உபசாரமா ?
Necessity has no law.

---

499. அவசரத்துக்குப்பாவம் இல்லை.
Comp. above.

---

500. அவசாரிபோகவும் ஆசையிருக்கிறது, அடிப்பான் என்று பயமுமாய் இருக்கிறது.
Desire *versus* fear.

---

501. அவசரப்பட்டமாமியார் மருமகளைப்புணர அழைத்தாளாம்.
A bad mother-in-law.

---

502. அவசாரி ஆம்புடையான் ஆபத்துக் குதவுவானோ ?
An unwedded husband is of no use in danger.

---

503. அவாந்தரத்தில் அக்கினி பற்றுமா ?
No effect withut cause.

---

504. அவசாரிக்கு வாய் பெரிது, அஞ்சு ஆறு அரிசுக்குக் கொதி பெரிது.
The base make a great boast.

---

505. அவசாரிக்கு ஆணை இல்லை, திருடிக்குத் தெய்வம் இல்லை.
Prostitutes and thieves never keep their oaths.

---

506. அவசாரி ஆடினாலும் அதிஷ்டம் வேண்டும், திருடப் போனாலும் திசைவேண்டும்.
Fortune necessary even in evil pursuits.

---

507. அவசாரியென்று ஆணைமேல் ஏறலாம், திருடியென்று தெருவில் வரலாமா ?
Some sins dare not come into light.

---

508. அவதந்திரம் தனக்கு அந்தரம்
Chicanery ruins one.

---

509. அவதிக்குடிக்குத் தெய்வமே துணை.
God helps the destitute.

---

510. அவத்தனுக்கும் சமர்த்தனுக்கும் காணிக்கை இல்லை.
The wicked and the clever man can get on anyhow.

---

511. அவப்பொழுதிலும் தவப்பொழுது வாசி.
Time spent in prayer is never lost.

---

512. அவமானம்பண்ணி வெகுமானம் பேசுகிறான்.
First kills and then cures.

513. அவரா சுறுக்கே அரிவாண்மணை கருக்கே.
Ironically of one's vain pretensions.

514. அவருடைய சிறகு முறிந்துபோயிற்று.
His wings are clipped.

515. அவரவர் அக்கறைக்கு அவரவர் பாடுபடுவார்.
Each man looks to himself.

516. அவனுக்குச் சாணேறினால் முழஞ்சறுக்குது.
Loss greater than gain.

517. அவலை முக்கித்தின்னு, எள்ளை நக்கித்தின்னு.
Different methods for different things.

518. அவர் அவர் மனசே அவர் அவர்க்குச் சாட்சி.
Conscience the best witness.

519. அவர் அவர் எண்ணத்தை ஆண்டவர் அறிவார்.
Divine omniscience.

520. அவலட்சணம் உள்ள குதிரைக்குச் சுழி சுத்தம் பார்க்கவேணுமா?
Ugliness is in itself a disqualification.

521. அவலமாய் வாழ்பவன் சவலமாய்ச் சாவான்.
Careless life and miserable death.

522. அவலை நினைத்துக்கொண்டு உரலை இடிக்கிறான்.
Fancies one thing and performs another.

523. அவள் பாடுகிறது குயில் கூவுகிறதுபோல் இருக்கிறது.
Ironical—bad singing.

524. அவள் சமர்த்துப் பானை சந்தியில் கவிழ்ந்தது.
Loss of one's best support.

525. அவனுக்கு இவள் எழுந்திருந்து உண்பாள்.
Said of a smart person.

526. அவனுக்குக் கப்படாவும் இல்லை வெட்டுக்கத்தியும் இல்லை.
Utterly destitute.

527. அவனுக்குள்ளே அகப்பட்டிருக்கிறதாம் என் பிழைப்பெல்லாம்.
As if I were wholly dependent on another.

528. அவனுக்குச் சுக்கிரதிசை அடிக்கிறது.
Good luck.

529. அவள் சம்பத்து அறியாமல் கவிழ்ந்தது.
End of boasting.

530. அவளுக்கிவள் ஈடு, அவளுக்கவளேசோடு.
She is peerless—ironical.

531. அவள் வலத்தை மண்கொண்டொளிச்சுது.
Hiding one's shame.—Vulgar.

532. அவளவள் என்பதைவிட அரி, அரி என்பது நலம்.
Better devotion to God than to woman.

533. அவசாரியிலேவந்து பெருவாரியிலே போகுது.
Ill-gotten wealth soon spent.

534. அவனை உரித்துவைத்தாற்போல் இருக்கிறான்.
An exact resemblance.

535. அவனுக்கும் இவனுக்கும் எருமைச்சங்காத்தம்.
Friendship not lasting.

536. அவனுடைய பேச்சு காற்சொல்லும் அரைச் சொல்லும்.
Not decisive.

537. அவனுடைய வாழ்வு நண்டுக்குடுவை உடைந்ததுபோல் இருக்கிறது.
So sudden and complete.

538. அவனே இவனே என்பதைவிடச் சிவனே சிவனே என்கிறது நல்லது.
Better invoke some particular god. Comp. 532.

539. அவனே வெட்டவும் விடவும் கர்த்தன்.
All power is in God.

540. அவனைப் பேச்சிட்டுப் பேச்சு வாங்கி, ஆமை மல்லாத்துகிறாப்போல் மல்லாத்திப்போட்டான்.
Cheated him outright.

541. அவனோடு இவனை எணிவைத்துப் பார்த்தாலும் காணாது.
Out of all comparison.

542. அவன் நா அசைய நாடு அசையும்.
His tongue is so powerful.

543. அவன் அருள் அற்றால் அனைவரும் அற்றார், அவன் அருள் உற்றால் அனைவரும் உற்றார்.
Said of God and His favour.

544. அவன் ஒரு குளிர்ந்த கொள்ளி.
A cool fire-brand—said of a consummate rogue.

545. அவன் இராசசமுகத்துக் கெலுமிச்சம்பழம்.
A 'Please-master' servant.

546 அவன் பசியாமல் கஞ்சி குடிக்கிறான்.
Though poor he never starves.

547. அவன் மிதித்த இடத்தில் புல்லும் சாகாது.
So virtuous.

548. அவன் மிதித்த இடம் பற்றியெரிகின்றது.
So wicked.

549. அவன் மெத்த அத்துமிஞ்சின பேச்சுக்காரன்.
Impertinent in speech.

550. அவன் காலால் இட்ட வேலையைக் கையால் செய்வான்.
So humble.

551. அவன் சாதி எந்தப் புத்தி குலம் எந்த ஆசாரமோ அதுதான் வரும்.
Character according to caste.

552. அவன் காலால் முடிந்ததைக் கையால் அவிழ்க்க முடியாது.
So clever and dexterous.

553. அவன் அசையாது அணுவும் அசையாது.
So powerful: said of God.

554. அவன் அவன் எண்ணத்தை ஆண்டவன் ஆக்கினாலும் ஆக்குவான், அழித்தாலும் அழிப்பான்.
" Man proposes, but God disposes."

555. அவன் கழுத்துக்குக் கத்திதீட்டுகிறான்.
Said of an intriguer.

556. அவன் உள்ளெல்லாம் புண் உடம்பெல்லாம் கொப்புளம்.
Sores within and without. So wretched.

557. அவன் கெட்டான் குடியன் எனக்கு இரண்டு டிராம் வாரு.
Giving the lie to one's own word.

558. அவன் ஆகாசத்தை வடுப்படாமல் கடிப்பேனென்கிறான்.
Great boaster.

559. அவன் எனக்கு அட்டமத்துச்சனி.
Said of an implacable foe.

560. அவன் தொத்தி உறவாடித் தோளுக்கு மன்றாடுகிறான்.
Mercenary friendship.

561. அவன் தன்னாலே தான் கெட்டால் அண்ணாவி என்ன செய்வான் ?
One ruining one-self.

562. அவன் காலால் கீறினதை நான் நாவால் அழிக்கிறேன்.
Said by one who is humiliated.

563. அவன் உனக்குச் இள்ளாக்கிரையோ ?
Is he so insignificant?

564. அவன் கையைக்கொண்டே அவன் கண்ணில் குத்துகிறான்.
Make one punish one-self?

565. அவன் சிறகில்லாப் பறவை.
His wings have been clipped.

566. அவன் (என்) தலைக்கு உலை வைக்கிறான்.
He contemplates my ruin.

567. அவன் அவன் செய்த வினை அவன் அவனுக்கே.
Each must bear the consequences of his deeds.

568. அவன் என்னை ஊதிப் பறக்கடிக்கப் பார்க்கிறான்.
He is trying to ruin me.

569. அவன் எரி பொரியென்று விழுகிறான்.
Said of one in a rage.

570. அவன் பேச்சைத் தண்ணீர்மேல் எழுதிவைக்கவேண்டும்.
Quite unreliable.

571. அவன் ஓடிப்பாடி நாடியில் அடங்கினான்.
His romping is all over.

---

572. அவன் வல்லாள கண்டனை வாரிப்போரிட்டவன்.
Said of a successful combatant.

---

573. அழகிருந்தென்ன? அதிஷ்ட மிருக்கவேணும்.
Fortune more needful than beauty.

---

574. அழகு ஒழுகுது மடியிலே காட்டா கலயத்தை.
Ironical—of ugliness.

---

575. அவன் கொஞ்சப் புள்ளியா?
Is he an ordinary person?

---

576. அவிவேகி உறவிலும், விவேகிப் பகையே நன்று.
Fools *versus* the wise.

---

577. அவிழ் என்ன செய்யும் அஞ்சு குணம் செய்யும்; பொருள் என்ன செய்யும் பூவை வசம் செய்யும்.
Efficacy of food and wealth.

---

578. அவையிலும் ஒருவன் சவையிலும் ஒருவன்.
Said of one who belongs to many societies.

---

579. அவ்வளவு இருந்தால் அடுக்கிவைத்து வாழேனோ.
Complaint of the poor.

---

580. அழகிலே பிறந்த பவளக்கொடி, ஆற்றிலே பிறந்த சாணிக் கூடை.
Different lots of women.

---

581. அழகிற்கு மூக்கை அறுப்பார் உண்டா?
Against injuring oneself even with a good motive.

---

582. அழகு இருந்து அழும், அதிஷ்டம் இருந்து உண்ணும்.
Beauty *versus* luck.

---

583. அழகுப்பெண்ணே காற்றடி உன்னை அழைக்கிறாண்டி கூத்தாடி.
Said to an immodest female.

---

584. அழித்துக்கழித்துப்போட்டு வழித்து நக்கி யென்று பெயரிட்டானும்.
Said of an unfaithful lover.

---

585. அழகுக்கு இட்டால் ஆபத்துக்கு உதவும்.
Tamil idea as to the utility of jewels.

586. அழச்சொல்லுவார் தமர், சிரிக்கச் சொல்லுவார் பிறர்.
Who are true friends ?

587. அழச்சொல்லுகிறவன் பிழைக்கச்சொல்லுவான், சிரிக்கச் சொல்லுகிறவன் கெடச்சொல்லுவான்.
Comp. above.

588. அழிக்கப்படுவோனைக் கடவுள் அறிவீனன் ஆக்குவார்.
A dangerous doctrine.

589. அழிந்தவள் ஆரோடு போனால் என்ன ?
Said of one who has lost her virginity.

590. அழிந்த கொல்லையில் குதிரை மேய்ந்தால் என்ன, கழுதை மேய்ந்தால் என்ன ?
A useless thing may be put to any use.

591. அழிவழக்குச் சொன்னவன் பழிபொறுக்கும் மன்னவன்.
A good peace-maker.

592. அழுகள்ளர் தொழுகள்ளர் ஆசாரக்கள்ளர்.
Different sorts of rogues.

593. அழுகிற ஆணையும் சிரிக்கிற பெண்ணையும் நம்பக்கூடாது.
Said of weeping males and laughing females.

594. அழுகை ஆங்காரத்தின்மேலும் சிரிப்பு கெலிப்பின்மேலும் தான்.
Cause of joy and sorrow.

595. அழுதபிள்ளையும் வாய்மூடும் அதிகாரம்.
Authority so great.

596. அழுகிற வீட்டில் இருந்தாலும் ஒழுகிறவீட்டில் இருக்கலாகாது.
A leaky house condemned.

597. அழுகிற பிள்ளைக்கு வாழைப்பழம் காட்டுகிறதுபோல.
A premium on naughtiness.

598. அழுகிற வேளை பார்த்து அக்குள் பாய்ச்சுகிறான்.
A foolish intruder.

599. அழுகிறதற்கு அரைப்பணம் கொடுத்து ஓய்கிறதற்கு ஒரு பணம் கொடு.
More difficult to stop than begin a foolish business.

600. அழுகையும் ஆங்காரமும் சிரிப்புக் கேலிப்போடா?
Comp. 596.

601. அழுக்குச் சீலைக்குள்ளே மாணிக்கம்.
A good thing in a bad place.

602. அழுக்கை அழுக்குக் கொல்லும் இழுக்கை இழுக்குக் கொல்லும்.
Like kills like.

603. அழுக்கைத் துடைத்து மடியில் வைத்தால் புழுக்கைக் குணம் போகாது.
Temporary remedies cannot eradicate innate defects.

604. அழுத கண்ணும் சிந்திய மூக்கும்.
Signs of sorrow.

605. அழுதவனுக்கு அகங்காரமில்லை.
No conceit in a sad person.

606. அழுதபிள்ளை பால்குடிக்கும்.
"Ask and it shall be given."

607. அழுவார் அழுவார் தம் துக்கம் அசலார்க்கல்ல.
Our sorrow is nothing to others.

608. அழுபிள்ளைத்தாய்சிக்குப் பணயம் கொடுத்தால் அநுபவிக்க ஒட்டுமோ குழந்தை.
A woman with a child can't play the prostitute.

609. அழுத பிள்ளை உரம் பெறும்.
A crying child grows strong. Comp. 606.

610. அழுதாலும் பிள்ளை அவளே பெறவேண்டும்.
Though painful each must bear his own burden.

611. அழுத்த நெஞ்சன் ஆருக்கும் உதவான், இளகின நெஞ்சன் எவர்க்கும் உதவுவான்.
The kind and the hard-hearted.

612. அழுவார் அற்ற பிணமும் ஆற்றுவார் அற்ற சுடலையும்.
Said of one who dies a destitute.

613. அழுவார் அழுவார் தம் தம் துக்கமே திருவன்பெண்டிருக்கு அழுவாரில்லை.
Said of feigned sympathy.

614. அழையா வீட்டிற்கு நுழையாச் சம்பந்தி.
Invitation necessary.

615. அளகாபுரியிலும் விறகுதலையன் உண்டு.
The poor everywhere.

616. அளகாபுரி கொள்ளையானாலும், அதிஷ்ட ஈனனுக்கு ஒன்றும் இல்லை.
Good luck essential.

617. அளகேசன் ஆனாலும் அளவு அறிந்து செலவு செய்யவேண்டும்
Frugality essential even to a millionaire.

618. அளக்கிற நாழி அகவிலை அறியுமா ?
Inferior persons are invariably ignorant.

619. அளந்த நாழிகொண்டு அளப்பான்.
People act from habit.

620. அளந்தால் ஒரு சாணில்லை அரிந்தால் ஒரு சட்டி காணாது.
So small and insufficient.

621. அளந்த அளந்த நாழி ஒழிந்து ஒழிந்து வரும்.
Constant use wears out a thing.

622. அளவளா வில்லாதவன் வாழ்க்கை குளவளாக் கோடின்றி நீர் நிறைந்தற்று.
From the Kural.

623. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு.
Excess makes even a good thing bad.

624. அள்ளாது குறையாது சொல்லாது பிறவாது.
No effect without due cause.

625. அள்ளிக்கொடுத்தால் சும்மா, அளந்துக் கொடுத்தால் கடன்.
A fine distinction.

626. அள்ளிப் பால் வார்க்கையிலே சொல்லிப் பால் வார்த்திருக்குது.
An eye to quantity.

627. அள்ளுகிறவன் இடத்தில் இருக்கல் ஆகாது கிள்ளுகிறவன் இடத்தில் இருந்தாலும்.
A pickpocket to be shunned.

628. அறங்கையும் புறங்கையும் நக்குதே.
So badly off.

629. அள்ளுவது எல்லாம் நாய் தனக்கென்று எண்ணுமாம்.
Indulging in foolish hopes.

630. அறக்காத்தான் பெண்டிழந்தான் அறுகாதவழி சுமந்து அழுதான்.
Evil of over-suspicion.

631. அறக்குழைத்தாலும் குழைப்பாள் அரிசியாய் இறக்கினாலும் இறக்குவாள்.
Prone to extremes.

632. அறக்கல்வி முழுமொட்டை.
Sharp and yet blunt.

633. அறக்கூர்மை முழுமொட்டை.
Learned and yet stupid.

634. அறச்செட்டு முழுநஷ்டம்
Miserliness is real waste.

635. அறத்தால் வருவதே இன்பம்.
Virtue its own reward.

636. அறநனைந்தவருக்குக் கூதல் என்ன ?
Small evils are slight to those who are enduring great evils.

637. அறப்பேசி உறவாடவேண்டும்.
Frankness necessary to friendship.

638. அறப்படித்தவர் அங்காடிபோனால் விற்கவுமாட்டார் கொள்ளவு மாட்டார்.
*Savants* not at home in a bazaar.

639. அறப்படித்த பூனை காடிப்பானையில் தலைபோடும்.
Comp. above.

640. அறப்படித்தவர் கூழ்ப்பானையில் விழுந்தார்.
Same as above.

641. அறப்பத்தினி ஆமுடையானை அப்பா என்று அழைத்த கதை.
Folly of going to extremes even in good things.

642. அறப்படித்த மூஞ்சூறு கழுநீர்ப்பானையில் விழுந்ததுபோல்.
Comp. above.

643. அறமுறுக்கினால் கொடிமுறுக்குப்படும்.
Folly of overdoing.

644. அறமுறுக்கினால் அற்றுப்போகும்.
Same as above.

645. அறமுறுக்குக் கொடும்புரி கொண்டு அற்றுவிடும்.
Same as above.

646. அறம் பொருள் இன்பம் எல்லாருக்கும் இல்லை.
Blessings not common to all.

647. அறவடிக்குமுன் சோறு காடிப்பானையில் விழுந்தாற்போல.
Failure when about to succeed.

648. அறவும் கொடுங்கோலரசன்கீழ்க் குடியிருப்பிற் குறவன்கீழ்க் குடியிருப்பு.
Tyranny condemned.

649. அறிஞர்க்கழகு அகத்துணர்ந்து அறிதல்.
Nature of perfect education.

650. அறிந்த ஆண்டையென்று கும்பிடப் போனால், உங்கள் அப்பன் பத்துப் பணம் கொடுக்கவேண்டும் கொடு என்றான்.
Taking advantage of an inferior's homage.

651. அறிந்தறிந்து செய்கிற பாவத்தை அழுதழுது துலைக்கவேணும்.
Bitter penance for wilful sinning.

652. அறியாப்பிள்ளையானாலும் ஆடுவோர் மூப்பு.
Juniors playing the part of seniors.

653. அறிந்த பார்ப்பான் சிநேகிதன் ஆறு காசுக்கு மூன்று தோசையா.
Taking advantage of previous acquaintance.

654. அறிந்தும் கெட்டேன் அறியாமலும் கெட்டேன் சொறிந்து புண் ஆயிற்று.
Ruined in every way.

655. அறிந்தவனென்று கும்பிட அடிமை வழக்கிட்ட கதை.
Taking advantage of my respectfulness.

656. அறிய அறியக் கெடுவார் உண்டா ?
Knowledge never ruinous.

657. அறியாத நாள் எல்லாம் பிறவாத நாள்.
Ignorance condemned.

658. அறியாமல் தாடியை வளர்த்து அம்பட்டன் கையிற் கொடுக்கவா ?
Said of the loss of a cherished object.

659. அறியாப் பிள்ளைப் புத்தியைப்போல.
Childish ways.

660. அறிவீனனிடத்தில் புத்தி கேளாதே.
Don't consult a fool.

661. அறிவீனர் தமக்கு ஆயிரம் உரைக்கினும் அவம்.
Useless instructing fools.

662. அறிவு ஆர் அறிவார் ? ஆய்ந்தவர் அறிவார்.
Research commended.

663. அறிவில்லார் சிநேகம் அதிக உத்தமம்.
Friendship of the ignorant sincere.

664. அறிவுகெட்டவனுக்கு ஆர்சொல்லியும் என்ன ?
Comp above. 70.

665. அறிவுபுறம்போய் அவுண்டதுபோல்.
Abuse of common sense.

666. அறிவு இல்லாதவன் பெண்களிடத்திலும் தாழ்வுபடுவான்.
A fool despised even by women.

667. அறிவு இல்லாச் சயனம் அம்பரத்திலும் இல்லை.
There is feeling even in sleep.

668. அறிவு பெருத்தோன் நோய் பெருத்தோன்.
The more learning—the more pain.

669. அறிவு இல்லார்தமக்கு ஆண்மையும் இல்லை.
No manliness in the ignorant.

670. அறிவுடன் ஞானம் அன்புடன் ஒழுக்கம்.
Essential qualities.

671. அறிவு மனதை அரிக்கும்.
The stingings of conscience.

672. அறிவு தரும் வாயும் அன்பு உரைக்கும் நாவும்.
Wisdom combined with love.

673. அறிவுடையானை அரசனும் விரும்பும்.
Wise men honored.

674. அறிவுடையானை அடுத்தாற் போதும்.
Obtain the favor of the wise.

675. அறிவேன் அறிவேன் ஆலிலை புளிபோல் இருக்கும்.
Proof of ignorance.

676. அறுக்கமாட்டாதவன் இடுப்பிலே ஐம்பத்தெட்டு அரிவாள்.
Contempt for a stupid workman.

677. அறுகம் கட்டைபோல் அடிவேர் துளுக்கிறது.
Prospering.

678. அறுக்கம் கட்டையும் ஆபத்துக்குதவும்.
Even trifles may be useful.

679. அரைக்கீரை புழுதின்னுதவனும் அவசாரிக்கையில் சோறுண்ணுதவனுமில்லை.
No man is pure.

680. அறுக்க ஊறும் பூம்பாலை அணுக ஊறும் சிற்றின்பம்.
Nature of sexual pleasure.

681. அறுதலி மகனுக்கு வாழ்க்கைப்பட்டு விருதாவிலே தாலி அறுத்தேன்.
A widow's complaint.

682. அறுந்த விரலுக்குச் சுண்ணாம்பு கிடையாது.
Misfortune upon misfortune.

683. அறுதலி மகனுக்கு அங்கம் எல்லாம் சேட்டை.
Irreclaimably vicious.

684. அறுத்த கோழி துடிக்குமாப்போல.
Fluttering in great pain.

685. அறுத்தவள் ஆண்பிள்ளை பெற்ற கதை.
So improbable.

[ட்டம்.
686. அறுத்துக் கொண்டதாம் கழுதை எடுத்துக்கொண்டதாம் ஓ
Smart and quick.

687. அறுபது நாளைக்கு எழுபது கந்தை.
Condemns extravagance.

688. அறுபத்துநாலு அடிக்கம்பத்திலேறி ஆடினாலும், அடியிறங் கித்தான் தியாகம் வாங்கவேண்டும்.
One must stoop to receive favours.

689. அறுபத்தெட்டுக் கோரம்பலம்.
A great many tricks and shifts.

690. அறுப்புக் காலத்தில் எலிக்கு ஐந்து பெண்சாதி.
Prosperity and vice go together.

691. அறுவாய்க்கு வாய் பெரிது, அரிசிக்குக் கொதி பெரிது.
Little things making great noise.

692. அறையில் ஆடி அல்லவோ அம்பலத்தில் ஆடவேண்டும் ?
Training essential.

693. அறையில் இருந்தபேர்களை அம்பலம் ஏற்றுகிற பிரட்டன்.
A designing rogue.

694. அறைவீட்டுச்செய்தி அம்பலத்தில் வரும்.
There is nothing hidden.

695. அற்ப ஆசை கோடி தவத்தைக் கெடுக்கும்.
A little defect has a great effect.

696. அற்பக்கோபத்தினால் அறுத்தமூக்கு ஆயிரம் சந்தோஷம் வந் தாலும் ஒட்டுமோ ?
Danger of hasty actions.

[நன்று.
697. அற்பன் கை ஆயிரம் பொன்னிலும் சற்புத்திரன் கைத்தவிடு
Poverty of the virtuous preferable to the wealth of the vicious.

698. அற்பத்திற்கு அழகு குலைகிறதா ?
The base have no beauty.

699. அற்பத் துடைப்பமானாலும் அகத்தூசியை அடக்கும்.
Utensils never lose their utility.

700. அற்பர் சிநேகிதம் பிராண கண்டிதம்.
Condemns intimacy with the base.

701. அற்பர் சிநேகம் பிராண சங்கடம்.
Compare above.

702. அற்பனுக்குப் பவிஷு வந்தால் அர்த்தராத்திரியில் குடை பிடிப்பான்.
Wealth not suited to the low-born.

703. அற்பன் பணம் படைத்தால் வைக்க வகை அறியான்.
Compare above.

704. அற்றத்துக்கு உற்ற தாய்.
Opportune like a mother.

705. அனல் குளிர் வெதுவெதுப்பு இம்மூன்று காலமும் ஆறு காலத்திற்குள் அடங்கும்.
Seasons and temperature.

706. அனற்றை இல்லா ஊரிலே வண்ணாரிருந்து கெட்டார்கள்.
Want of something essential.

707. அனுபோகம் தொலைந்தால் அவிழ்தம் பலிக்கும்.
Medicine and luxury incompatible.

708. அனந்தத்துக்கு ஒன்றாய் உரையிட்டாலும் அளவிடப்போ[காது.
Infinitude inconceivable.

709. அன்பற்ற மாமியாருக்குக் கால் பட்டாலும் குற்றம், கை பட்டாலும் குற்றம்.
An unkind mother-in-law.

710. அன்பற்ற மாமியாருக்குக் கும்பிடுகிறதும் குற்றந்தான் ?
Where love is wanting everything is mis-conceived.

711. அன்பற்றார் வாசலிலே பின்பற்றிப் போகாதே.
Avoid the unkind.

712. அன்பான சிநேகிதனை ஆபத்தில் அறி.
"A friend in need is a friend in deed."

713. அன்பில்லார் தமக்கு ஆதிக்கம் இல்லை.
Love is power.

714. அன்புள்ள குணம் அலையில்லா நதி.
Love is a river without a ripple.

715. அன்பு இருந்தால் ஆகாததும் ஆகும்.
Love is omnipotent.

716. அன்புடையானைக் கொடுத்து அலையச்சே அசல் வீட்டுக்காரன் வந்து அழைத்த கதை.
Taking mean advantage of an opportunity.

717. அன்பே பிரதானம் அதுவே வெகுமானம்.
Love its own reward.

718. அன்றற ஆயிரம் பொன்னிலும், நின்றற ஒரு காசு பெரிது.
Extols the habit of saving.

719. அன்றிறுக்கலாம் நின்றிறுக்கலாகாது.
Pay your debts the very day.

720. அன்றுமில்லை காற்று, இன்றுமில்லை குளிர்.
No cause—no effect.

721. அன்று கண்ட மேனிக்கு அழிவு இல்லை.
Always the same.

722. அன்றும் இல்லை தையல், இன்றும் இல்லைப் பொத்தல்.
Compare above.

723. அன்றுகொள், நின்றுகொள், என்றும் கொள்ளாதே.
Excellent advice to purchasers.

724. அன்று தின்ற சோறு ஆறு மாதத்திற்கு ஆமா ?
Nothing can exceed its capability.

725. அன்று தின்ற ஊண் ஆறுமாசத்துப் பசியை அறுக்கும்.
Said of substantial food.

726. அன்று எழுதினவன் அழித்து எழுதுவானோ ?
Said of Brahma's writing!

727. அன்றுகண்டனர்; இன்று வந்தனர்.
Visits few and far between.

728. அன்றுகழி அன்றுகழி.
Clear your debts daily.

729. அன்றுகுடிக்கத்தண்ணியில்லை ஆனைமேல் அம்பாரி வேணுமாம்.
Poverty and boasting.

730. அன்றைக்காடை இன்றைக்குக் கொடை என்றைக்கு விடியும் இடையன் தரித்திரம்?
A shepherd's poverty.

731. அன்றைக் கெழுதினதை அழித்தெழுதப்போறானா?
"What I have written I have written." Comp above 726.

732. அன்றைக்குக் கிடைக்கிற ஆயிரம் பொன்னிலும் இன்றைக்குக் கிடைத்த அரைக்காசு பெரிது.
Real *versus* imaginary things.

733. அன்றைக்குத் தின்கிற பலாக்காயைவிட இன்றைக்குத் தின்கிற களாக்காய் பெரிது?
A little *now* far better than *much* that is hoped for.

734. அன்னப் பிடி வெல்லப் பிடி ஆச்சுது?
Things have become so dear.

735. அன்ன மயம் பிராண மயம்.
Food and life.

736. அன்னம் இறங்குவது அபான வாயுவால்.
Explains the process of diglutition.

737. அன்னிய சம்பந்தமே யல்லாமல் அத்தைச் சம்பந்தமில்லை என்கிறான்.
No relationship whatever.

738. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
Parents the first revealers of God.

739. அன்ன மயம் இன்றிப் பின்னை மயம் இல்லை.
Importance of food.

740. அன்னம் மிகக் கொள்வானும் ஆடை அழுக்கு ஆவானும் பதர்.
The glutton and the sordid fellow.

741. அன்னம் இட்டாரைக் கன்னம் இடலாமா ?
Against ingratitude.

742. அன்னம் ஒடுங்கினால் அஞ்சும் ஒடுங்கும்.
Food essential.

743. அன்ன நடை நடக்கப்போய்த் தன் நடையும் கெட்டாற் போல்.
Folly of imitation.

744. அன்னநடை நடக்கப்போய் காகம் தன்நடையும் இழந்தாற் போல.
Same as above.

745. அன்னம் முட்டானால் எல்லாம் முட்டு.
Comp. 742.

746. அன்னப்பாலுக்குச் சிங்கியடித்தவள் ஆவின் பாலுக்குச் சர்க்கரை தேடுகிறாள்.
Change in one's circumstances.

747. அன்னதானத்திற்குச் சரி என்ன தானம் இருக்கிறது ?
Giving food the best act of charity.

748. அன்னிய மாதர் அவதிக்கு உதவுவாரா ?
Strange women will not help in time of need.

749. அன்னைக்கு உதவாதான் ஆருக்கு மாகான் ?
Aid to one's mother the first act of charity.

750. அஸ்த செம்மானம் அடைமழைக்கு லக்ஷணம்.
Sign of heavy rain.

751. அஸ்திமசகாந்திரம் என்றதுபோல் இருக்கிறது.
A glaring contrast.

## ஆ.

752. ஆ ஆ என்பவருக்கென்ன அன்றும் படைப்பவருக் கல்லவா தெரியும்.
It is the food-giver who bears the burden.

753. ஆகடிக்காரன் போகடியாய்ப் போவான்.
The fate of the scoffer.

754. ஆகாசத்தில் எறிந்தால் அங்கேயே நிற்குமா ?
Nothing can stand unsupported.

755. ஆகாத நாளையில் பிள்ளை பிறந்தால், அண்டை வீட்டுக்கார ளை என்ன செய்யும் ?
One's misfortune is nothing to one's neighbour.

756. ஆகாத பஞ்சாங்கத்துக்கு அறுபது நாழிகையும் தியாச்சியம்.
An imperfect thing is quite useless.

757. ஆகாதவன் குடியை அடுத்துக் கெடுக்கவேண்டும்.
A bad advice—but a good device.

758. ஆகாதவற்றை ஏற்றால் ஆராய்ந்து ஏற்றுக்கொள்.
Inquiry necessary to a difficult undertaking.

759. ஆகாத்தியக்காரனுக்குப் பிரமகத்திக்காரன் சாட்சியா ?
Criminal and witness alike.

760. ஆகாயத்துக்கு மையம் காட்டுகிறதுபோல.
An impossibility.

761. ஆகாயத்தைப் பருந்து எடுத்துக்கொண்டு போகுமா ?
Comp. above.

762. ஆகாயத்தில் பறக்க உபதேசிப்பேன், என்னைத் தூக்கி ஆற் றுக்கு அப்பால் விடு என்கிறான் குரு.
Contrast between precept and practice.

763. ஆகாய வல்லிடி அதிர இடிக்கும்.
Effect of thunder.

764. ஆகாயமட்டும் அளக்கும் இருப்புத்தூணைச் செல்லரிக்குமா ?
An impossibility. Said by Sita to Ravana.

765. ஆகாயம் பார்க்கப்போயும் இடுமுடுக்கா ?
Complaining without reason.

766. ஆகாயம் விழுந்துவிட்டதுபோல.
Makes a great deal of fuss!

767. ஆகாயத்தை வடுப்படக் கடிக்கிறது.
Attempting an impossibility.

768. ஆகாயம் பெற்றது, பூமி தாங்கினது.
A beautiful saying.

769. ஆகாயத்தில் கூட அரைக்குழிக்கு ஆவாசமில்லை.
Said of one utterly destitute.

---

770. ஆகாதும் போகாதும் ஆண்டிகளுக்கு, அதிலும் கெட்டது குருக்களுக்கு.
What is given to rulers and gurus.

---

771. ஆக்கவேண்டாம் அரைக்கவேண்டாம் பெண்ணே என்னருகிலிருந்தாலும் போதுமடி கண்ணே.
Company of one's beloved is enough.

---

772. ஆகிறவன் அரைக்காசிலுமாவான், ஆகாதவனுக் காயிரங்கொடுத்தாலும் விடியாது.
The frugal *versus* the extravagant,

---

773. ஆகிறகாலத்தில் அவிழ்தம் பலிக்கும்.
Belief in fate.

---

774. ஆகுங்குடிக்கு அடியாள் பெண்பெறுவாள்.
An ironical prediction.

---

775. ஆகுங்காலத்தில் அடியாளும் பெண் பெறுவாள்.
Probably a corruption of above.

---

776. ஆகுங்காய் பிஞ்சிலே தெரியும்.
"The child is father to the man."

---

777. ஆகுங்காலம் ஆகும், போகுங்காலம் போகும்.
Comp. 774.

---

778. ஆக்கப் பொறுத்தவன் ஆறப் பொறானோ ?
"Let patience have her perfect work."

---

779. ஆக்கிற் குழைப்பேன், அரிசியாய் இறக்குவேன்.
I am prone to extremes.

---

780. ஆக்கமாட்டேனென்றால் அரிசியைப்போடு.
Do one of two alternatives.

---

781. ஆக்கி அரைத்துப் போட்டவர்கள் கெட்டவர்கள், வழி கூட்டி அனுப்பினவர்கள் நல்லவர்கள்.
Sweet speech more powerful than good deeds.

---

782. ஆக்கினையும் செங்கோலும் அற்றது அரை நாழிகையிலே.
Brief authority.

---

783. ஆக்குகிறவள் சலித்தால் அடுப்புப் பாழ், குத்துகிறவள் சலித்தால் குந்தாணி பாழ்.
Result of overworking a person.

784. ஆங்காலமாகும் போங்காலம் போகும்.
A mere euphonic form of 778.

785. ஆங்காரிகளுக்கு அதிகாரி.
The chief of the haughty.

786. ஆங்காலம் எல்லாம் அவசாரி ஆடிச் சாங்காலம் சங்கரா சங்கரா என்கிறாள்.
A vicious career and a virtuous end.

787. ஆங்காரத்தாலே அழிந்தது அனந்தம் பேர்.
Pride kills many.

788. ஆசரித்த தெய்வம் எல்லாம் அடிபோடே மாண்டது.
Fate of gods.

789. ஆசாரப்பார்ப்பான் காசிக்குப் போனாலும் பறையன்கோசம் தலையிலடிப்பட்டதாம்.
Sad end of a sacred journey.

790. ஆசானுக்கும் அடவு தப்பும்.
Even the great may fall.

791. ஆசாரம் இல்லா அசடருடன் கூடிப் பாசாங்கு பேசிப் பதி இழந்துபோனேன்.
Wail of one who has lost her husband.

792. ஆசீர்வாதமும் சாபமும் அறவோர்க்கு இல்லை.
The virtuous above blessing and cursing.

793. ஆசை அவள் மேலே ஆதரவு பாய் மேலே.
Mind and body contrasted.

794. ஆசை அறுபது நாள், மோகம் முப்பது நாள், தொண்ணூறு நாளும் போனால் துடைப்பக்கட்டை.
Desire and lust transitory.

795. ஆசை அண்டாதால், அழுகையும் அண்டாது.
No desire—no distress.

796. ஆசைப்பட்டேன் ஊசிப்போச்சு.
Desire has made we swell.

797. ஆசைப்படுவது அவ்வளவும் துன்பம்.
Comp. above 795.

798. ஆசைப்படு மோசம்போகாதே.
Desire—but be not deceived.

799. ஆசை உண்டானால் பூசை உண்டு.
Desire leads to devotion.

800. ஆசை உள்ளளவும் அலைச்சலும் உண்டு
Desire and anxiety.

801. ஆசைகொண்டபேருக்கு ரோசம் இல்லை.
Desire destroys shame.

802. ஆசைக்கு ரோசம் இல்லை.
Same as above.

803. ஆசைக்கு அளவில்லை.
Desire has no limit.

804. ஆசை சொல்லிக் காட்டி மோசம் செய்கிறதா ?
Betraying with enticing speech.

805. ஆசை நோவுக்கு அவிழ்தம் ஏது ?
No cure for love.

806. ஆசை பெருக அலைச்சலும் பெருகும்.
Comp. above 64.

807. ஆசை பெரிதோ, மலை பெரிதோ ?
Desire compared to a mountain.

808. ஆசைப்பட்டது ஊசிப்போயிற்று.
Comp. above 796.

809. ஆசையெல்லாம் தீர அடித்தாள் முறத்தாலே.
Beat desire out of her.

810. ஆசை வெட்கம் அறியாது.
Comp. above 802.

811. ஆசை வைத்தால் நாசம்.
Desire leads to ruin.

---

812. ஆச்சி ஆச்சி மெத்தப் படித்துப் பேசாதே.
A rebuke to a pedant.

---

813. ஆச்சாபுரக் காட்டிலே ஐம்பதுபுலி குத்தினவன் பறைச்சேரி நாயோடே பங்கமழிகிறான்.
Vain boast exposed.

---

814. ஆடப்போன கங்கை அண்டையிலே வந்தாற்போல.
One's wishes anticipated.

---

815. ஆடலோகத்துப் பூதத்தை ஈக்கள் மொய்த்துக்கொண்டாற் போல்.
A weak attack.

---

816. ஆடாதுமாடி ஐயனூர்க்குக் காப்பும் அறுத்தாச்சு.
Completed ceremony.

---

817. ஆடப் பாடத் தெரியாது இரண்டு பங்கு உண்டு.
Foolish boast.

---

818. ஆடமாட்டாத தேவடியாள் கூடம் போதாது என்றாளாம்.
"A bad workman quarels with his tools."

---

819. ஆடவிட்டு நாடகம் பார்க்கிறதா ?
One should not lead one to ruin.

---

820. ஆடாஜாதி கூடாஜாதியா ?
One defect does not imply many.

---

821. ஆடாது எல்லாம் ஆடி அவரைக்காயும் அறுத்தாச்சுது.
Decayed circumstances.

---

822. ஆடி அறவெட்டை அகவிலை நெல்விலை.
On failure of rain.

---

823. ஆடி அமர்ந்தது கூத்து ஒரு நாழிகையில்.
Said of a short-lived greatness.

---

824. ஆடி ஓய்ந்த பம்பரம்.
Similar to above.

---

825. ஆடிக் கரு அழிந்தால் மழை குறைந்துபோம்.
Rain in July very necessary.

---

826. ஆடிக்கறக்கிற மாட்டை ஆடிக் கறக்கவேண்டும், பாடிக் கறக்கிற மாட்டைப் பாடிக் கறக்கவேண்டும்.
Treat persons according to their nature.

827. ஆடிக்காற்றில் உதிரும் சருகுபோல.
Refers to violent winds in July.

828. ஆடவன் செத்தபின்பு அறுதலிக்குப் புத்திவந்தது.
Widowhood makes many a woman wiser.

829. ஆடிக்காற்றிலே அம்மிபறக்கச்செ இலவம்பஞ்சுக்கு எங்கே கதி.
Strong compared with the weak.

830. ஆடிக்காற்றிலே பூளைப்பூ பறந்தாற்போலே.
See above 827.

831. ஆடி ஓடி நாடியி லடங்கிற்று.
Comp. 824 and 825.

832. ஆடிக்காற்றில் எச்சிற் கல்லைக்கு வழியா ?
Comp. 829.

833. ஆடிக்காற்றிலே இலவம்பஞ்சு பறந்ததுபோல.
Comp. above 830.

834. ஆடிக்கு அழைக்காத மாமியாரைத் தேடி மயிலைப் பிடித்து செருப்பால் அடி.
April unsuitable for confinements.

835. ஆடிமாசத்தில் குத்தின குத்து ஆவணிமாசத்தில் உளைப்பு எடுத்ததாம்.
Connection between cause and effect very slight.

836. ஆடிய காலும் பாடிய நாவும் சும்மாவிராது.
Dancers and songsters cannot remain quiet.

837. ஆடி விதை தேடிப்போடு.
Refers to sowing in July.

838. ஆடு இருக்க இடையனை விழுங்குமா ?
Said of an improbable event.

839. ஆடு எடுத்த கள்ளனைப்போலே விழிக்கிறான்.
Self-condemning looks.

840. ஆடு கடிக்குமென்று இடையன் உறியேறிப் பதுங்குவானும்.
So stupid.

841. ஆடு காற்பணம் புடுக்குவால் முக்காற்பணம்.
Part greater than the whole.

842. ஆடுவரும் பின்னே (தலை) யாடிவரும் முன்னே.
Premonitory signs.

843. ஆடை உடையவன் சபைக்கஞ்சான்.
Importance of clothing.

844. ஆடு கிடந்த இடத்திலே மயிர்தானும் கிடையாமற் போயிற்று.
Refers to the habits of goats.

845. ஆடு கிடந்த இடமும் அகம்படியான் இருந்த இடமும் உருப் படாது.
Same as above.

846. ஆடுகிடந்த இடத்தில் பழுப்புத்தானும் கிடையாது.
Same as above 844.

847. ஆடு கொழுக்கிறது எல்லாம் இடையனுக்கு லாபம்.
Said of a child's thriving.

848. ஆடு கெட்டவன் ஆடித்திரிவான், கோழிகெட்டவன் கூவித் திரிவான்.
Different methods of seeking missing things.

849. ஆடு கொடாத இடையன் ஆவைக் கொடுப்பானா?
Miserly in small things—miserly in great.

850. ஆடு கோனின்றித் தானாய்ப் போகுமா?
A leader always needed.

851. ஆடுங்காலம் தலைகீழாய் விழுந்தாலும் கூடும் புசிப்புத்தான் கூடும்
One cannot earn more than one is able.

852. ஆடுங்காலத்துத் தலைகீழாக விழுந்தால ஓடும் கப்பரையும் உடையவன் ஆவான்.
Bad behaviour will result in poverty.

853. ஆடுதேவுமா? குருக்களே! கொம்பும் குளம்பும் தவிரச் சகல
மும் ஆம்.
Demanding the whole virtually.

---

854. ஆடுவது மாடி அவரைக்காயும் பறித்தாச்சு.
A foolish career ending in ruin.

---

855. ஆட்டாளுக் கொரு சிட்டாள் அடப்பக்காரனுக்கொரு து
டைப்பக்கட்டை.
Menials needing servants.

---

856. ஆடுபிடிக்க கரடி அகப்பட்டதுபோல்.
Unsuitable help.

---

857. ஆடு தழை தின்பதுபோலே.
Unsteady; here, there and everywhere.

---

858. ஆடு நனைகிறதென்று கோனாய் அழுகிறதாம்.
Feigned sorrow.

---

859. ஆடு நினைத்த இடத்தில் பட்டி போடுகிறதா ?
Owner should seek his own convenience.

---

860. ஆடு பிழைத்தால் மயிர்தானும் கொடான்.
Said of an ungrateful person.

---

861. ஆடு வீட்டிலே ஆட்டுக்குட்டி காட்டிலே.
Things not in their places.

---

862. ஆடை இல்லாதவன் அரை மனிதன்.
Rebuke to unclad people.

---

863. ஆடையைத் தின்றால் வெண்ணெய் உண்டா ?
No material—no manufacture.

---

864. ஆட்டமும் கூத்தும் அடங்கிற்று அத்தோடே.
Foolish boast suddenly checked.

---

865. ஆட்காட்டி சொந்தக்காரனையும் திருடனையும் காட்டிக்கொ
டுக்கும்.
The nature of the lapwing.

---

866. ஆட்காட்டி தெரியாமல் திருடப்போகிறவன் கெட்டிக்கார
னோ, அவன் அறியாமல் அவன் காலடிபிடித்துப் போகி
றவன் கெட்டிக்காரனோ ?
Which is the cleverer rogue?

867. ஆட்டாளுக்கு ஒரு மோட்டாள்.
Like master—like servant.

868. ஆட்டம் நாலுபந்தி, புறத்தாலே குதிரை.
A rule for circuses.

869. ஆட்டின் கழுத்தறுப்புப்போலே.
So quiet and gentle. Cf. "Like a lamb for the slaughter.

870. ஆட்டுக்கொத்தது குட்டிக்கு.
Like goat– like kid.

871. ஆட்டில் ஆயிரம், மாட்டில் ஆயிரம், வீட்டிலே கரண்டி பால்
இல்லை.
Business great but gain none.

872 ஆட்டுக்கு வால் அளவறுத்து வைத்திருக்கிறது.
There is a limit to his pride.

873. ஆட்டுக்கும் மாட்டுக்கும் இரண்டு கொம்பு, இந்தமதிகெட்ட
மாட்டுக்கு மூன்று கொம்பு.
Said by the vulgar of an Iyengar Brahmin.

874. ஆட்டுக்குத் தோற்குமா கிழப்புலி ?
Though old—not easily overcome.

875. ஆட்டுக்கும் மாட்டுக்குமுறையா, காட்டுக்கும் பாட்டுக்கும்
வரையா ?
Certain things—like beasts—have no law.

876. ஆட்டுக்கிடையிலே கோனாய் புகுந்ததுபோல.
Destruction certain.

877. ஆட்டுக்குத் தீர்ந்தபடி குட்டிக்குப் ஆகிறது.
Comp. above 870.

878. ஆட்டுத்தலைக்கு ஒச்சன் பறக்கிறதுபோல.
So eager for his share.

879. ஆட்டு வெண்ணெய் ஆட்டு மூளைக்கும் காணாது.
Said of the scantiness of goat's-milk-butter.

---

880. ஆட்டுவித்துப் பம்பை கொட்டுகிறான்.
Is up to mischief-making.

---

881. ஆட்டுக் குட்டிமேல் ஆயிரம் பொன்னா?
Setting too high a price on a trifle.

---

882. ஆணுக்குப்பெண் அத்துமிச்சுப்போச்சுதா?
Refers to female forwardness.

---

883. ஆணைப்பிறந்தால் அருமை பெண்ணைப்பிறந்தால் எருமையா?
Tamil opinion of female children.

---

884. ஆட்டுக்குட்டிக்கு ஆனையைக் காவுகொடு.
Spending too much on trifles.

---

885. ஆட்டுக்குட்டியைத் தோளிலே வைத்துக் காடெங்கும் தேடின கதை.
Gross forgetfulness.

---

886. ஆட்டைக் காட்டி வேங்கை பிடிக்கப் பார்க்கிறான்.
Makes use of a bait.

---

887. ஆட்டைத் தேடி அயலாள் கையிற் கொடுப்பதைப்பார்க்க, வீட்டைக் கட்டி நெருப்பு வைப்பது நல்லது.
Folly of giving up what has been recovered with difficulty.

---

888. ஆட்டைக்கொருமுறை காணச் சோட்டை இல்லையோ?
Said of a superior's rare visit.

---

889. ஆணமும் கறியும் அடுக்கோடே வேண்டும்.
Wants a complete meal.

---

890. ஆணவத்தால் அழியர்தே.
"Pride goeth before a fall."

---

891. ஆணிக்கு இணங்கின பொன்னும் மாமிக்கு இணங்கின பெண்ணும் அருமை.
Both very rare.

---

892. ஆணுக்கு அவகேடு செய்தாலும் பெண்ணுக்குப் பிழைகேடு செய்யலாகாது.
Ruin of a woman repugnant to the Tamil mind.

893. ஆணை அடித்து வளர், பெண்ணைப் போற்றி வளர்.
Different treatment for boys and girls.

894. ஆண்டாருக்கும் பறப்பு, கோவிலுக்கும் சிறப்பு.
The temple a pretext for the priest.

895. ஆண்சிங்கத்தை யானை அடக்குமா ?
The elephant no match for a lion.

896. ஆண்டாரன்னத்தை அதிரப்பிடிக்கவும் போகாது, செட்டியார் வட்டிக் கன்னத்தில் அடிக்கவும் போகாது.
Rivalry between priests and merchants.

897. ஆணையும் வேண்டாம் சத்தியமும் வேண்டாம் துணியைப் போட்டுத் தாண்டு.
Commanding the very thing one forbids.

898. ஆண்டபொருளை அறியாதார் செய்தவம் மாண்ட மரத்துக்கு அணைத்த மண்.
A familiar couplet from the Kural.

899. ஆண்டாருக்குக் கொடுக்கிறையோ ? சுரைக்குடுக்கைக்குக் கொடுக்கிறையோ ?
Is it the man or his garb?

900. ஆயிரம் ரூபாய்க் குதிரைக்கு அரை அணுசவுக்கு.
Intrinsic inferiority of animals.

901. ஆடிய கூத்தும் பாடிய ராகமும்.
Practice necssary.

902. ஆடார்தான் மத்தளத்தைப் பழித்தானும்.
A stupid workman quarrelling with his tools.

903. ஆய்பார்த்த கலியாணம் போய்ப்பார்த்தால் தெரியும்.
Personal inspection better than hear-say.

904. ஆண்டார் இருக்குமட்டும் ஆட்டும் கூத்தும்.
Every comfort till the bread-winner dies.

905. ஆண்டாரைப் பூதமஞ்சம் மாண்டாலொழியப்போகாது.
Importance of the bread winner.

906. ஆண்டிகள் மடம் கட்டுகிறதுபோல.
So shabby.

907. ஆண்டி இடப்பான் மடத்திலே, அவன் சோளிகிடக்கும் தெருவிலே.
Accidents of mendicant life.

908. ஆண்டிக்கு இடச்சொன்னால் தாதனுக்கு இடச்சொல்லுகிறான்.
Hears one thing and does another.

909. ஆண்டிக்குப் பிச்சையா, அவன் குடுவைக்குப் பிச்சையா ?
Alms to the beggar—not to his pot

910. ஆண்டிக்கு வாய்ப்பேச்சு பாப்பானுக்கு அதுவும் இல்லை.
Mendicant and Brahmin contrasted.

911. ஆண்டிச்சி பெற்றது அஞ்சும் அவலம்.
Refers to the weaklings borne by beggars.

912. ஆண்டி மகன் ஆண்டியானால் நேரம் அறிந்து சங்கு ஊதுவான்.
The law of heredity.

913. ஆண்டியை அடித்தாலும் அவன் குடுவையை உடைத்தாலும.
Said of bullying a beggar.

914. ஆண்டி எப்போ சாவான், மடம் எப்போ ஒழியும் ?
The mendicant and his *mutt* go together.

915. ஆண்கேடு அரசகேடு உண்டோ ?
Men and governments are never 'ruined.'

916. ஆண்டியே அன்னத்துக்கு அலையச்சே லிங்கம் பால்சோற்றுக் கழுகிறதாம்.
Folly of seeking things beyond one's reach.

*917. ஆண்டியும் தாதனும் தோண்டியும் கயிறும்.
United or separate.

918. ஆண்டியைக் கண்டால் லிங்கன் என்கிறான், தாதனைக் கண்டால் ரங்கன் என்கிறான்.
Acts according to circumstances.

919 ஆண்டியும் ஆண்டியும் கட்டிக்கொண்டால் சாம்பலும் சாம்பலும் ஒட்டிக்கொள்ளும்.
Effect of intunacy

920. ஆண்டி வேஷம்போட்டும் அலைச்சல் தீரவில்லை.
Object ungained, tho' proper means have been employed

921. ஆண்டிக்குண்டியைத் தட்டினால் பறப்பது சாம்பல்.
Cf 'The cobbler smells of leather.

922 ஆண்டொன்றின் காரும் அன்று அறுத்த சம்பாவும் ஊன் கண்ணுக்கு அரிது
Certain rare things

923 ஆண்டு மறுத்தால் தோட்டியும் கும்பிடான்
Effect of scarcity

924 ஆண்டைமேற் கோபம் கடாவின்மேல் ஆறினான்.
A usual way of spending one's wrath

925 ஆண்டை கூலியைக் குறைத்தால், சாம்பான் வேலையைக் குறைப்பான்
Wages and work go together

926 ஆண்பிள்ளைகள் ஆயிரம் ஒத்திருப்பார்கள், அக்காள் தங்கை சரி ஒத்திரார்கள்.
Women never agree, even if they are sisters.

927 ஆண்பிள்ளைச் சிங்கத்திற்கு ஆர் நிகர் !
Man is peerless

928. ஆண் முந்தியோ பெண் முந்தியோ ?
Which is the greater, man or woman ?

929. ஆண்மையற்ற வீரன் ஆயுதத்தின்மேற் குறைசொல்லுவான்.
Comp above 902.

[யாது.
930 ஆதாரவற்ற வார்த்தையும் ஆணியிடாத மரமும் பலன்செய
More words are of no avail

931. ஆதாயமில்லாத செட்டி ஆற்றோடே போகிறானும் ?
Refers to a merchant's eye to profits

932. ஆதாயமில்லாத செட்டி ஆற்றைக் கட்டி இறைப்பானோ ?.
Similar to preceding

933. ஆதாயமே செலவு அறையிருப்பே சிறுமை.
Said of a frugal person

934. ஆதியந்தமில்லா அருமைப்பொருளே கர்த்தன்.
God defined.

935. ஆதீனக்காரனுக்குச் சாதனம் வேண்டுமோ ?
"Possession is nine points of the law"

936. ஆத்தாள் அம்மணம் கும்பகோணத்தில் கோதானம்.
Poverty at home and splendour abroad

937. ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு.
Over-haste and folly.

938. ஆத்திரக்காரன் சோத்திரம் அறிவானா ?
Another form of 929.

939. ஆத்திரப்பட்டவனுக்கு அப்போது இன்பம்.
The hasty looks to immediate gratification.

940. ஆத்திரமுடையோனை சோத்திரமறியான்.
An over hasty person and his ignorance.

941. ஆத்தை படுகிற பாட்டுக்குள்ளே மகன் மோருக்கு அழுகிறான்.
A child never knows its mother's distress

942. ஆஸ்தியில்லாதவன மனிதனல்ல.
The poor man is not a man

943. ஆஸ்தியுள்ளவன் ஆஸ்திக்கு அடிமை
The rich man a slave to his riches.

944. ஆஸ்தியுள்ளவனுக்கு நாசம் இல்லை.
No ruin to the rich

945. ஆதித்தன் தெற்குவடக்கானாலும் சனித்தொழில் ஒருவரையும் விடாது.
Influence of Saturn inevitable.

946. ஆத்தாளுமகளும் காத்தானுக்கு கடைக்கலம், அவன் காத்தாலும் காத்தான் கைவிட்டாலும் விட்டான்.
Unreliable nature of a mere protecto.

947. ஆத்தாளை அக்காளைப் பேசுகிறதில் கோபமில்லை ஆம்படையாளைப் பேசுகிறதற்குத்தான் கோபம் பொங்கிப் பொங்கி வருகிறது.
The true cause of anger—said of a mother-in-law.

948. ஆத்தாளோடே போகிறவனுக்கு அக்காளென்ன தங்கச்சியேது?
Said of an incestuous fellow

949. ஆத்தாள் குத்து அம்மணம், அவளுடைகம் கோதானம்.
Compare above 936

950. ஆத்திரம் பெரிதானாலும் மூத்திரம் பெரிது.
Calls of nature imperious

951. ஆத்திரத்தை அடக்கினாலும் மூத்திரத்தை அடக்கப்படாது.
Same as above 949

952. ஆத்திரம் பெரிதானாலும் புத்தியைப் பெரிது.
Sense greater than haste

953. ஆந்தை விழிக்கிறதுபோல விழிக்கிறான்.
A staring look

954. ஆந்தை சிறிது கீச்சுப் பெரிது.
Small things making great noise

955. ஆபத்திற்காத்தவன் ஆட்சிபடைவான்.
He who helps in need will rule

956. ஆபத்தும் சம்பத்தும் ஆருக்கும் உண்டு.
Joys and trials common to all.

957. ஆபத்துக்குப் பாவம் இல்லை
"Necessity has no law"

958. ஆபத்துக்கு உதவினவனே பந்து
The true relative

959. ஆப்பைப் பிடுங்கின குரங்கு நாசம் அடைந்ததுபோல.
Refers to self-destructive actions.

960. ஆமணக்கு விதைத்தால் ஆச்சா முளைக்குமா ?
You must reap what you sow.

961. ஆமணக்கு முத்து ஆணிமுத்தாமா ?
One cannot change one's nature

962. ஆமணக்கும் பருத்தியும் அடரா விதைப்பானா?
Different kinds of sowing.

---

963. ஆமை கிணற்றிலும் அணில் கொம்பிலும்.
Said of things or persons never found together.

---

964. ஆமை பிடிப்பார் மல்லாத்துவார் நாமது சொன்னாற் பாவம்.
To speak of a crime worse than comitting it.

---

965. ஆமை எடுக்கிறது மல்லாத்தி, நாமதைச் சொன்னால் பொல்லாப்பு.
A better form of 964.

---

966. ஆமை பூந்தவீடும் அமீனா நுழைந்தவீடும் உருப்படாது.
A tortoise and a revenue official equally ruinous.

---

967. ஆமை திடரில் எறினாற்போல.
Said of an improbable incident.

---

968. ஆமையுடனே முயல் முட்டையிடப்போய்க் கண்பிதுங்கிச் செத்ததாம்.
Things which are quite different.

---

969. ஆமென்ற தோஷம் கனத்தது வயிற்றிலே.
Danger of saying "yes."

---

970. ஆம்புடையானுக்கில்லாத வெட்கம் அடுத்தவீட்டுக்காரனுக் கென்ன ?
Refers to a husband's sense of honour.

---

971. ஆம்புடையானுக்குத் தகக இறுமாப்பு.
A wife's position corresponds to that of her husband.

---

972. ஆம்புடையானை நம்பி அவசாரி ஆடலாமா ?
Playing the prostiute relying on the husband.

---

973. ஆம்புடையானைக் கொன்ற அறநீலி.
Said of a wicked wife.

---

974. ஆம்புடையான் செத்தபின்பு அறுதலிக்குப் புத்தி வந்தது.
A bad wife turning a good widow.

---

975. ஆம்புடையானுக்கு அழுதகுறை அந்தகன் வந்துவாய்த்தான்.
Wept for a husband and married a blind man.

---

976. ஆம்புடையான் அடித்தது பெரிதல்ல சக்களத்தி சிரிப்பா ளென்று அழுகிறேன்.
Weeps not from pain but shame.

977. ஆம்புடையான் செத்து ஆவிபறக்கச்சே அண்டைவீட்டுக்கா ரன் அக்குள் பாய்ச்சுகிறான்.
Said of a vicious neighbour.

978. ஆம்புடையான் கோபமில்லாக் கூத்தும், குருவில்லா ஞான மும்போல் இருக்கிறான்.
Said of a stupid husband.

979. ஆம்புடையான் வட்டமாய் ஓடினாலும் வாசலால் வரவேண் டும்.
Even the husband must enter the house by the door.

980. ஆம்புடையானுக்குப் பொய் சொன்னாலும் அடுப்புக்குப் பொய் சொல்லலாமா?
Deal not falsely with the oven.

981. ஆம்புடையானை வைத்துக்கொண்டல்லோ அவசாரியாடவே ண்டும்?
Just the reverse of above 971.

982. ஆம்புடையானை அடித்ததற்குக் கொழுநனைக் கோபித்துக் கொண்டாளாம்.
The same thing by different names.

983. ஆம்புடையான் செத்தபோதே அல்லலுற்ற கஞ்சி.
Poverty following the husband's death

984. ஆம்புடையான் வைத்ததைப் பற்றி அசல்வீட்டுத் தச்சனைக் கோணல் நிமிர்த்தச்சொன்னாளாம்.
Seeking danger to one's property.

985. ஆம்புடையான் செத்தவளுக்கு மருத்துவிச்சி தயவேன்?
Why a midwife for a widow?

986. ஆம்புடையான் பலம் உண்டானால் குப்பை ஏறிச் சண்டை போடலாம்.
Said of a husband's support.

987. ஆய உபாயம் அறிந்தவன் அரிதல்ல வெல்வது.
Said of an expert in playing dice.

988. ஆயக்காரனுக்குப் பிரமகத்திக்காரன் சாட்சி.
Criminals need their like for witnesses.

---

989. ஆயக்காரன் அஞ்சு பணம் கேட்பான் அதாவெட்டுக்காரன் ஐம்பது பணம் கேட்பான்.
Extortioners worse than officials.

---

990. ஆயத்திலும் நியாயமாய்ப் போகவேண்டும்.
Justice even in revenue matters.

---

991. ஆயத்துக்குக் குதிரை கீயத்துக்குக் குட்டி.
Hire for the horse, nothing for its colt.

---

992. ஆயத்துக்குப் பயந்து ஆற்றில் நீந்தினதுபோல.
Avoiding Scylla and striking against Charybdis

---

993. ஆயத்துறையில் அநியாயம் செய்யாதே.
Comp. above 992

---

994. ஆயவஞ்சனை பிறர்வஞ்சனை ஒருவருக்குமாகாது.
Cheating, specially in taxes, is disagreeable to all.

---

995. ஆயன் அழைப்பை ஆராலும் தள்ளக்கூடாது.
A revenue officer's demands irresistible.

---

996. ஆயிரம்பட்டும் அவமாச்சு, கோவிலைக்கட்டியும் குறையாச்சு.
Work not equal to the outlay.

---

997. ஆயிரங்குணம் ஒரு லோபகுணத்தால் கெடும்.
Many good virtues marred by a single vice.

---

998. ஆயிரங் குதிரையை அறவெட்டின சிப்பாய்(இப்போ) பறைச்சேரி நாயோடே பங்கமழிகிறான்.
Reputation great—action small.

---

999. ஆயிரக்கலம் நெல்லுக்கு ஓர் அந்தப்பூச்சி போதும்.
Small insects destroy great things.

---

1000. ஆயிரம் காக்கைக்குள் ஒரு அன்னம் அகப்பட்டதும்போல.
Said of something very rare.

---

1001 ஆயிரம் காக்கைக்கு ஒரு கல்.
Said of a host of timid persons

1002. ஆயிரம் கட்டு அண்டத்தைத் தாங்கும்.
A good binding is a great support

1003. ஆயிரம் கட்டு ஆனைப்பலம்.
Similar to above

1004. ஆயிரம் சொன்னாலும் அவசாரி சமுசாரியாகாள்
A prostitute cannot change for the better

1005. ஆயிரத்திலே பிறந்து ஐந்நூற்றிலே கால் நீட்டினதுபோல.
Compare "Born with a silver spoon in the mouth"

1006. ஆயிரத்தில் ஒருவனே அலங்காரபுருஷன்.
Good husbands very rare.

1007. ஆயிரம் நட்சத்திரம் கூடினாலும் ஒரு சந்திரன் ஆகாது.
Many small persons cannot equal one great man

1008. ஆயிரம் மாகாணி அறுபத்திரண்டரை.
Many a mickle makes a muckle

1009. ஆயிரம் உடையார் அமர்ந்திருப்பார், துணிபொறுக்கி தொந்தோம் தொந்தோம் என்று கூத்தாடுவான்.
Dignity is characteristic of the wealthy

1010 ஆயிரம் கோவிந்தம் போட்டாலும் அமுது படைக்கிறவனுக் கல்லோ தெரியும் வருத்தம்.
He who feeds bears the burden

1011. ஆயிரம் வந்தாலும் ஆயத்தொழில் ஆகாது
Tamil opinion of revenue work

1012. ஆயிரம் வருஷம் சென்று செத்தாலும் அநீதச்சாவு ஆகாது.
An unnatural death always disagreeable.

1013 ஆயிரம் வித்தைகளை கற்றாலும் உலகத்தில் ஆடம்பரங்கள் வேண்டும்
Show necessary to success

1014. ஆயிரம் பேரைக் கொன்றவன் அரைவைத்தியன்.
The slayer of a thousand lives is half a doctor

1015. ஆயிரம் வந்தாலும் அவசரம் ஆகாது.
Hurry is bad even if it brings in a thousand

1016. ஆயிரம் பெயர் கூடினாலும் ஒரு அந்துப்பூச்சியைக் கொல்லக் கூடாது.
The indestructible insect.

1017. ஆயிரம் பொன் போட்டு யானை வாங்கி அரைப்பணத்து அங்குசத்துக்குப் பால்மாறுகிறதா?
Penny-wise and pound-foolish.

1018. ஆயிரம் அரைக்காற்பணம்.
Many trifles.

1019. ஆயிரம் சொல்லுக்கு அரை எழுத்து.
Big things really small.

1020. ஆயிரம் பசுக்களில் ஒருபசு உதைத்துக்கொண்டால் நஷ்டமா?
Loss of one out of many is no loss.

1021. ஆயிரம் பாம்பிலகப்பட்ட தேரைபோல் தவிக்கிறேன்.
Quite in the power of one's enemies.

1022. ஆயிரம் பணையுள்ள அப்பனுக்குப் பிறந்தும் பல்லுக் குத்த ஒரு ஈர்க்கும் இல்லை.
Born rich and yet very poor.

1023. ஆயிரம் பாம்பினுள் ஒரு தேரை அகப்பட்டாற்போல.
Compare above.

1024. ஆயிரம் பொன் பெற்ற குதிரைக்கு அரைப்பணத்துச் சவுக்கு.
Big things controlled with small.

1025. ஆயிரம் நற்குணம் ஒரு லோபகுணத்தால் கெடும்.
A single vice mars a host of virtues.

1026. ஆயிரம் பொன்பெற்ற குதிரைக்கும் சவுக்கடி வேண்டும்.
Discipline indispensable.

1027. ஆயிரம் பொய் சொல்லிக் கோயிலைக் கட்டு.
Why temples are built.

1028. ஆயிரம் பொன்பெற்ற யானை பல் விளக்கிறதா?
Intrinsic value independent of externals.

1029. ஆயிரம்பேரிடத்தில் சிநேகம்பண்ணினாலும் ஆண்பிள்ளைகளுக் கென்ன?
Against the mingling of sexes.

1030. ஆயுதபரீக்ஷை அறிந்தவன் நூற்றில் ஒருவன்.
Experts rare.

---

1031. ஆயுதம் இல்லானை அடிக்கிறதா?
Do not attack the helpless.

---

1032. ஆயுதமில்லாரிடத்தில் ஆடல் செய்யலாமா?
Same as above.

---

1033. ஆயோதன முகத்தில் ஆயுதம் தேடுகிறதுபோல.
Seeking a thing in the wrong place.

---

1034. ஆய்ச்சலாய்ச்சலாய் மழை பெய்கிறது.
Incessant rain.

---

1035. ஆய்ந்து பாராதான் காரியம் தான் சாந்துயரம் தரும்.
Urges great caution.

---

1036. ஆய்ந்தோய்ந்து பாராதான் தான் சாகக்கடவன்.
Compare above.

---

1037. ஆரக்கழுத்தி அரண்மனைக்கு ஆகாது.
Jewelled females unwelcome in a palace.

---

1038. ஆரணியமான அழகாபுரிக்கு ஒரு கோரணியான குரங்குவந்து தோன்றிற்று.
An unsuitable occupant or visitor.

---

1039. ஆரம்பத்தில் சூரத்துவம்.
A new broom sweeps well.

---

1040. ஆரடா விட்டது மானியம்? நானே விட்டேன் மானியம்.
Self-assumed rights.

---

1041. ஆரற்றுப் போனாலும், நாளாற்றும்.
Time the great physician.

---

1042. ஆராத்தாள் செத்தாலும் பொழுது விடிந்தால் தெரியும்.
The morning will reveal.

---

1043. ஆராகிலும் படியளந்து விட்டதா?
I am my own master.

---

1044 ஆராருக்கு நானாவேன் ஆகாத உடம்பையும் புண்ணாக்கிக் [கொண்டு.
How many am I to serve?

---

1045. ஆராற் கெட்டேன் நோராற் கெட்டேன்.
My mouth has ruined me.

---

1046. ஆரியக் கூத்தாடினாலும் காரியத்திற் கண்ணாயிரு.
Never forget the chief matter.

---

1047. ஆருக்கும் புண்ணிய ப்யிரில் அல்லவா புண்ணியம் தெரியும்.
Judge an effort by its results.

---

1048. ஆருக்கும் அஞ்சான் ஆர்படைக்கும் தோலான்.
Fearless and unconquerable.

---

1049. ஆருக்கு ஆர் சதம்?
None reliable.

---

1050. ஆருக்குப் பிறந்து மோருக்கு அழுகிறாய்?
Why so destitute ?

---

1051. ஆருக்காகிலும் துரோகம் செய்தால் ஐந்தாறு நாட்பொறுக்கும், ஆத்துமக் துரோகம் செய்தால் அப்போதே கேட்கும்.
Condomus treachery against oneself.

---

1052, ஆருக்கார் துணை?
None truly helpful.

---

1053. ஆருக்கு வந்ததோ, எவருக்கு வந்ததோ?
Indifferonce as to other's affairs.

---

1054. ஆருமற்றதே தாரம், ஊரில் ஒருவனே தோழன்.
Tamil idea of a good wife and a good friend.

---

1055. ஆருமில்லாப் பெண்ணுக்கு அண்டைவீட்டுக்காரனும் மாப்பிள்ளை.
A neighbour's wickedness.

---

1056. ஆரும் ஆரும் உறவு? தாயும் பிள்ளையும் உறவு.
Mother and child—true relatives.

---

1057. ஆரும் இல்லாத ஊரிலே அசுவமேதயாகம் செய்தானும்.
Doing a good thing when there is nobody to appreciate it.

---

1058. ஆரேகாரே என்கிறவனுக்குத் தெரியுமா? அக்கினியார்க்கிறவனுக்குத் தெரியும்.
It is not everybody who knows.

---

1059. ஆரை இறுக்கி முகம் பெறுகிறது பிள்ளையை இறுக்கி முகம் பெருகிறது.
Taking advantage of one's child.

1060. ஆனை நம்பித் தோழா காருக்கு எற்றம் போட்டாய்?
Count the cost before undertaking anything.

1061. ஆரோ செத்தான் எவனோ அழுதான்.
No real connection between the two.

1062. ஆர்கடன் வைத்தாலும் மாரிகடன் வைக்கக் கூடாது.
The people's fear of the goddess *Mári*.

1063. ஆர்குடி கெடுக்க ஆண்டி வேஷம் போட்டாய்?
Mendicancy fatal to family life.

1064. ஆர்குடி கெட்டாலும் சந்தைக்குக் காற்பணம்.
Taxes must be always paid.

1065. ஆர்குத்தினாலும் அரிசியானால் சரி.
Means quite secondary.

1066. ஆர்வாழ்வு ஆருக்கு நின்றது?
Prosperity never lasting.

1067. ஆலகால விஷம் போன்றவன் அந்தரமாவான்.
The wicked will perish.

1068. ஆலசியம் அமிர்தம் விஷம்.
"Delay is dangerous."

1069. ஆலமரம் பழுத்ததென்று பறவைக்கு ஆர் சீட்டனுப்பினார்?
Things must be perceived by instinct.

1070. ஆலயமிடித்து அன்னதானம் பண்ணப் போகிறான்.
Doing evil that good may come.

1071. ஆலயம் தொழுவது சாலவும் நன்று.
Recommends 'church-going.'

1072. ஆலின்மேற் புல்லுருவி.
Said of lazy parasites.

1073. ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி, நாலும் இரண்டும் சொல்லு[க்கு உறுதி.
Said of certain trees and books.

1074. ஆலே பூலே என்று அலப்பிக்கொண்டிருக்கிறது.
Senseless chit-chat.

1075. ஆலைக்குள் அகப்பட்ட சோலைக் கரும்புபோல.
Well in one's power.

1076. ஆலைக் கரும்பும் வேலைத் துரும்புமானேன்.
Creature of circumstances.

1077. ஆலயம் அறியாது ஓதிய வேதம்.
Exterior not essential.

1078. ஆலையில்லா ஊரிலே இலுப்பைப்பூ சர்க்கரை.
Take the next best.

1079. ஆல விழுது தாங்குகிறாப்போலே.
Children supporting their parents.

1080. ஆல் பழுத்தால் அங்கே அரசு பழுத்தால் இங்கே.
Selfish and unreliable.

1081. ஆல்போல் விழுதுவிட்டு, அறுகுபோல் வேரோடி மூங்கில் போற் சுற்றம் முசியாமல் வாழ்ந்திருப்பீர்.
A Tamil blessing.

1082. ஆவணிமாதம் அழுகைத் தூற்றல்.
Refers to the South-West monsoon.

1083. ஆவத்தை அடரான் பாவத்தை தொடரான்.
A sinless career—a griefless life.

1084. ஆவல் மாத்திரம் இருந்தால் என்ன, அன்னம் இறங்கினால் அல்லவோ பிழைப்பான்?
Appetite an essential condition of recovery.

1085. ஆவடையாரையும் லிங்கத்தையும் ஆறுகொண்டு போகச்சே சுற்றுக் கோவில் சுவாமியெல்லாம் சர்க்கரைப் பொங்கலுக் கழுகிறதாம்.
Longing for luxuries in the midst of poverty.

1086. ஆவத்துக்குதவாப் பெண்டுகளை அழகுக்கா வைத்திருக்கிறது?
Women should help in need.

1087. ஆவாரை இலையும் ஆபத்துக் குதவும்.
Even insignificant things may be useful.

1088. ஆவர்க்குமில்லை தேவர்க்குமில்லை.
Something impossible.

1089. ஆவும் தேவும் ஐந்து பலனீயும். (வருஷத்தில்)
Certain trees bear fruit five times a year.

1090. ஆவென்று போனபின் அள்ளி இடுவது ஆர்?
Mourns the death of a benefactor.

1091. ஆ வேறு நிறமானாலும், பால்வேறு நிறமாமோ?
Essentials unaffected by accidentals.

1092, ஆழமறியாமல் காலிட்டுக்கொண்டேன் அண்ணாமலையப்ப காலைவிடு.
Confessing a mistake done unconsciously.

1093. ஆழமறியும் ஒட்கில், மௌனம் அறியும் அரவம்.
Refers to the natural aptitude of individuals.

1094. ஆழம் தெரியாமல் காலையிட்டுக் கொண்டதுபோல்.
Doing things inadvertently,

1095. ஆழாக்கு அரிசி மூழாக்குப்பானை முதலியார் வருகிற வீறுப்பைப் பாரும்.
Show in contrast with poverty.

1096. ஆழியெல்லாம் வயலானால் என்ன? அவனியெல்லாம் அன்னமயமானால் என்ன?
Miracles cannot affect every day life.

1097. ஆழும்பாழும் அரைக்கீரைப் பாத்தியும்.
In a state of confusion.

1098. ஆளமாட்டாதவனுக்குப் பெண்டேன்?
Despises an impotent man.

1099. ஆளனில்லாத் துக்கம் அழுதாலுந் தீராது.
A widow's sorrow inconsolable.

1100. ஆளனில்லாத பெண்ணுக்கு வாழ்வில்லை.
Tamil idea of female bliss.

1101. ஆளன் இல்லாதவள் ஆற்று மணலுக்குச் சரி.
Compare above.

1102. ஆளான ஆள் புகுந்தால் ஆமணக்கும் விளக்கெண்ணெயாம்.
The right man in the right place.

1103. ஆளான ஆட்களுக்கு அவிழ் அகப்படாக் காலத்திலே காகா பிசாசு கஞ்சிக்கு அழுகிறது.
Time of scarcity.

1104. ஆளில்லாத மங்கைக்கு அழகுபாழ்.
Tamil idea of female beauty.

1105. ஆளில்லாமல் அடிக்கடி ஓடுமா ?
A servant necessary.

1106. ஆளுக்குத் துக்குணி ஆள்பாரம்.
So strong.

1107. ஆளுக்கு ஒரு குட்டுக் குட்டினாலும் அவனுக்குப் புத்திவராது.
So stupid.

1108. ஆளுக்கு ஒரு குட்டுக் குட்டினால் அடியேன் தலை மொட்டை.
Utterly ruined by many persecutors.

1109. ஆளுக்குள்ளே ஆளாயிருப்பான்.
Escapes recognition.

1110. ஆளை அறிந்துதான் அறுக்கிறான்.
Act with knowledge.

1111. ஆளை ஆள் அறியவேண்டும், மீனைப் புளியங்காய் அறிய வேண்டும்.
Diamond cuts diamond.

1112. ஆளை ஆள் குத்தும், ஆள்மிடுக்கு பத்துபேரைக்குத்தும்.
Actual strength contrasted with show.

1113. ஆளைச் சுற்றிப் பாராமல் அளக்கிறதா ?
Recommends caution.

1114. ஆளைச்சுற்றிப் பார்க்காமல் அழுகிறான் ஒருக்காலே.
Compare above.

1115. ஆளைச் சேர்த்தாயோ அடிமையைச் சேர்த்தாயோ ?
Is it a servant or a slave?

1116. ஆளைப் பார் முகத்தைப் பார்.
Study the person and his face.

1117. ஆளைப் பார்த்தான் வாயால் ஏய்த்தான்.
Took advantage of one's personal appearance.

1118. ஆள் இல்லா ஊருக்கு அழகுபாழ்.
Compare above.

1119. ஆள் இளந்தலைக் கண்டு தோணி மிதக்கும்.
Refers to the buoyancy of boats.

1120. ஆள் ஆளை இடிக்கும், ஆள் முடுக்கு பத்துபேரை இடிக்கும்.
Compare above 1112.

1121. ஆள் இல்லாமல் ஆயுதம் வெட்டுமோ?
There must be somebody to wield a weapon.

1122. ஆள் இருக்கக் கொலை சாயுமா?
Said of an incredible story.

1123. ஆள் இல்லாப் படை அம்பலம்.
Compare above 1121.

1124. ஆள் இளந்தலைக் கண்டால் தோணி மிதக்கப் பாயும்.
Another form of 1119.

1125. ஆள் ஏற நீர் ஏறும்.
Refers to leakage in a boat.

1126. ஆள் கொஞ்சமானாலும் ஆயுதம் மிடுக்கு.
A small person with a big weapon.

1127. ஆள் மெத்தக் கூடினால் மீன் மெத்தப் பிடிக்கலாம்.
The more fishers—the more fish.

1128. ஆறல்ல நூறல்ல ஆகிறது ஆகட்டும்.
Come what may, let it be done.

1129. ஆறும் பேறு பெண்ணாய்ப் பிறந்தால் ஆறான குடித்தனம் நீறாய் விடும்
The sixth child must not be a girl.

1130. ஆறிலும் சாவு நூறிலும் சாவு.
Uncertainty of life.

1131. ஆறின கஞ்சி பழங்கஞ்சி.
Delay makes a thing deteriorate.

1132. ஆறினா புண்ணிலும் அசடு நிற்கும்.
Effect lasts very long.

---

1133. ஆறினால் அச்சிலே வார், ஆறவிட்டால் பிடாவிலே வார்.
Act according to circumstances.

---

1134. ஆறு கடக்குமளவும் அண்ணன் தம்பி, ஆறு கடந்தால் நீயார் நானார்.
Downright ingratitude.

---

1135. ஆறு கடந்தால் நீயார் நானார்?
Said of ungrateful folk. Comp. above.

---

1136. ஆறு கலியாணம் மூன்று பெண்கள் மாரோடு மார் தள்ளுண்கிறது.
Not equal to the demand.

---

1137. ஆறு காதம் என்கிறபோதே கோவணத்தை அவிழ்த்துக் குடுமியிலே கட்டிக் கொண்டானாம்.
Foolish haste.

---

1138. ஆறு கெட நாணல் இடு, ஊர்கெட நூலை இடு, காடு கெட ஆடு விடு, மூன்றுங் கெட முதலையை விடு.
Certain ruinous things.

---

1139. ஆறு கொண்டது பாதி தூறு கொண்டது பாதி.
Said by farmers about rivers and jungles.

---

1140. ஆறு நிறையச் சலம் போனாலும் பாய்கிறது கொஞ்சம் சாய்கிறது கொஞ்சம்.
We esxpect much but realize little.

---

1141. ஆறு நேரான ஊரும், அரசனோடெதிர்த்த குடியும், புருடனோடேறுமாறான பெண்டிரும் நீறு நீறாகி விடும்.
Certain causes of ruin.

---

1142. ஆறு பார்ப்பானுக்கு இரண்டு கண்ணு.
A pun on the word *Parppán*.

---

1143. ஆறு நிறையப் போனாலும் நாய்க்கு நக்குத் தண்ணீர்.
No one can act beyond his capacity.

---

1144. ஆறு நீந்தின எனக்குக் குளம் நீந்துவது அரிதோ?
Said by a man of acknowledged ability.

---

1145. ஆறு நீந்தினவனுக்கு வாய்க்கால் எவ்வளவு?
Compare above 1144.

1146. ஆறு போவதே போக்கு அரசன் சொல்வதே தீர்ப்பு.
What it is impossible to alter.

1147. ஆறு நேராய்ப் போகாது.
Said of the career of unsteady persons.

1148. ஆறு நேரான ஊர் நிலை நில்லாது.
Similar to above 1141.

1149. ஆறு பார்க்கப் போக ஆய்ச்சிக்குப் பிடித்தது சலுப்பு.
Said of a delicate woman.

1150. ஆறு போவதே கிழக்கு அரசன் சொல்வதே வழக்கு
The ways of kings and rivers. Comp. above 1146.

1151. ஆறு மாசப் பயணம் அஞ்சி நடந்தால் முடியுமா?
Effort equal to enterprise.

1152. ஆறு மாதம் காட்டிலே, ஆறு மாதம் வீட்டிலே.
Said of an unsettled life.

1153. ஆறு மாதத்துக்குச் சனியன் பிடித்தாற்போல.
Under an evil influence.

1154. ஆறும் கடன் நூறும் கடன் பெருக்கச் சட்டா பணிகாரத்தை.
Transition from small debts to great.

1155. ஆறு வடிவிலேயும் கருப்பு தெளிவிலேயும் வருத்தம்.
When severity is most felt.

1156. ஆற்றருகிலிருந்த வாழ்வும் அரசறிந்த வாழ்வும் நிலையல்ல.
Certain localities to be avoided.

1157. ஆறெல்லாம் கண்ணீர் அடி எல்லாம் செங்குருதி.
Refers to one's deep sorrow.

1158. ஆற்றுக் குலைப் பொல்லாப்பு அடித்துக் கொள்ளுகிறான்.
Seeking trouble for oneself.

1159. ஆற்றிற் கரைத்த புளிபோல்.
So insignificant in influence.

1160. ஆற்றிலே ஆயிரம் குழி தானம் பண்ணினாற்போல.
Said of a useless gift.

1161. ஆற்றித் தூற்றி அம்பலத்தில் வைக்கப் பார்க்கிறாள்.
Tries to expose me thoroughly.

1162. ஆற்றிலே போகிற தண்ணீரை அப்பா குடி, ஆத்தா குடி.
Giving gifts which cost the giver nothing.

1163. ஆற்றிலே ஒரு காலும் சேற்றிலே ஒரு காலுமாயிருக்கிறான்.
An unsteady fellow.

1164. ஆற்றிலே போட்டாலும் அளந்துபோடு.
Recommends care and frugality even in trifles.

1165. ஆற்றிலே கணுக்கால் தண்ணீரிலும் அஞ்சி நடப்பது உண்டு.
Recommends caution in dangerous things.

1166. ஆற்றிலே ஊறுகிறது மணலிலே சுவறுகிறது.
One cannot be in one's element everywhere.

1167. ஆற்றிலே விட்ட தெப்பைபோல் தவிக்கிறேன்.
A victim of circumstances.

1168. ஆற்றிற் கரைத்த புளியும் அங்காடிக்கிட்ட பதருமாயிற்று.
Said of things useless and unavailing.

1169. ஆற்றிற் பெருவெள்ளம் நாய்க்கென்ன சளப்புத் தண்ணீர்.
To the able, even great difficulties are trifles.

1170. ஆற்றாதே என்னைத் தேற்றாதே அம்பலத்தில் என்னை ஏற்றாதே என்றான்.
A sarcastic saying.

1171. ஆற்றுக்கு நெட்டையும் சோற்றுக்குக் குட்டையும் வாசி.
A tall man for a river and a short man for rice.

1172. ஆற்று நிறையத் தண்ணீர் போனாலும் அள்ளிக் குடிக்கப் போகுதா நாய்?
Each has his own way of doing things.

1173. ஆற்றுமணலையும் ஆகாசத்து நட்சத்திரத்தையும் அளவிடப் போமோ?
Sand and stars cannot be counted.

1174. ஆற்றுக்குப் பார்ப்பான் துணையா? சோற்றுக்குப்பயற்றங் காய் கறியா?
Unsuitable things useless.

---

1175. ஆற்றுக்கும் பயம் காற்றுக்கும் பயம்.
Fear the river and the wind.

---

1176. ஆற்றுக்குப் போனதும் இல்லை செருப்புக் கழற்றினதும் இல்லை.
Never met with an obstacle.

---

1177. ஆற்றுப் பெருக்கும் அரசும் அரை நாழி.
Floods and kingdoms transient.

---

1178. ஆற்று மணலை அளவிடக் கூடாது.
Compare above 1172.

---

1179. ஆற்று நீரை நாய் நக்கிக் குடிக்குமோ எடுத்துக் குடிக்குமோ?
One cannot alter one's nature.

---

1180. ஆற்றுவாருமில்லை தேற்றுவாருமில்லை.
A friendless soul.

---

1181. ஆற்று மணலிலே தினம் புரண்டாலும் ஒட்டுகிறதுதான் ஒட்டும்.
Nothing can yield what it cannot.

---

1182. ஆற்றைக் கடந்தல்லோ அக்கரை ஏறவேண்டும்?
Obstacles must be first overcome.

---

1183. ஆற்றைக் கடந்தால் ஓடக்காரனுக்கு ஒரு சொட்டு.
Compare above 1135.

---

1184. ஆற்றைக் கடத்திவிடு ஆகாசத்திற் பறக்கக் குளிகை தருகி றேன் என்கிறான்.
Raising vain hopes with a selfish object.

---

1185. ஆற்றோடே போனாலும் போகிறதே யல்லாமல் தெப்பக்கார னுக்கு ஒரு காசு கொடுக்கிறதில்லை.
How people treat the ferry-man.

---

1186. ஆனதல்லாமல் ஆவதறிவாரோ?
The future is unknown.

---

1187. ஆனவன் ஆகாதவன் எல்லாத்திலும் உண்டு.
Friendly and unfriendly people are everywhere.

---

1188. ஆனகுலத்திற் பிறந்து ஆட்டை மாட்டை மேய்க்காமல் தூலை வாரியாய்ப் போனாயே.
Life different from birth.

---

1189. ஆன தெய்வத்தை ஆறு கொண்டுபோகிறது அனுமந்தராயனுக்குத் தெப்பத்திருவிழாவா ?
Losing what is essential and attending to trifles.

---

1190. ஆனமட்டும் ஆதாளியடித்துப்போட்டு, ஆந்தைபோல் விழிக்கிறான்.
Has become wise too late.

---

1191. ஆனமுதலை அழித்தவன் மானம் இழப்பது அரிதல்ல.
Waste followed by disgrace.

---

1192. ஆனால் ஆதித்தவாரம் ஆகாவிட்டால் சோமவாரம்.
Suiting the day to the event.

---

1193. ஆனால் அச்சிலே வார் ஆகாவிட்டால் மிடாவிலே வார்.
Act according to circumstances. Comp. 1133.

---

1194. ஆனி அடியிடாதே கூனி குடிபோகாதே.
June and March unfavourable to building and removing.

---

1195. ஆனி அரை ஆறு, ஆவணி முழு ஆறு.
In June half a river, in August a full river.

---

1196. ஆனி ஆனை வாலொத்த கரும்பு.
June favourable to the sugarcane.

---

1197. ஆனி அறனைவால்பட்ட கரும்பு ஆனைவாலொத்தது.
Compare above.

---

1198. ஆனைக்கேடு அரசுக்கேடுண்டோ.
Elephants and kings never suffer loss.

---

1199. ஆனை அசைந்து தின்னும் வீடு அசையாமல் தின்னும்.
Consumption of food in a family imperceptible.

---

1200. ஆனை ஆசாரவாசலைக் காக்கும், பூனை புழுத்த மீனைக் காக்கும்.
Elephants *versus* cats.

---

1201. ஆனை கட்டச்சங்கிலி தானெடுத்துக் கொடுத்தாற்போல.
Seeking one's own troubles.

---

1202. ஆனை கறுத்தால் ஆயிரம்பொன்.
The value of a full grown elephant.

1203. ஆனை ஆயிரம் பெற்றால் அடியும் ஆயிரம் பெறுமா?
Essentials distinct from accidentals.

1204. ஆனை இருந்து அரசாண்ட இடத்திலே பூனை இருந்து புலம்பி அழுகிறது.
Said of a ruined state.

1205. ஆனை இலைக்கறி பூனை பொரிக்கறி.
What is usual to superiors is luxury to inferiors.

1206. ஆனை உண்ட விளாங்கனி போல.
Bereft of its best properties.

1207. ஆனை ஏறியும் சந்துவழி நுழைவானேன்?
Act consistently with your position

1208. ஆனை ஏறித் திட்டி வாயில் நுழைவாரா?
Similar to above.

1209. ஆனை ஒரு குட்டிபோட்டும் பலன், பன்றி பல் குட்டிபோட்டும் பயன் இல்லை.
One of a superior kind equal to many of an inferior.

1210. ஆனை கட்டத் தார் வான் முட்டப் போர்.
Poverty in abundance.

1211. ஆனைகண்ட பிறவிக்குருடர் அடித்துக்கொள்ளுகிறதுபோல.
Disputing through misconception. Refers to a story.

1212 ஆனை கறுத்திருந்தும் ஆயிரம் பொன் பெறும்.
Compare above 1202.

1213. ஆனை கறுத்தா லாயிரம் பொன், ஒட்டைக் கறுத்தா லுதவி யென்ன?
Camels and elephants contrasted.

1214. ஆனை குத்தும் தோட்டிக்குப் பிணக்கா?
Tools incapable of sentiment.

1215. ஆனைக்கிட்டுக் கெட்டவன் குடத்தில் கையிட்டாற்போல.
As if ruined by undertaking a paying concern.

1216. ஆனை காணாமற்போனால் குண்டுச்சட்டியில் தேடினால் அகப்படுமா?
Missing things not recovered in unlikely places.

---

1217. ஆனை குண்டுச் சட்டியிலும் குழிசியிலும் உண்டோ?
Compare above.

---

1218. ஆனை கேட்ட வாயால், ஆட்டுக் குட்டி கேட்கிறதா?
Those who seek great things will not care for small ones.

---

1219. ஆனை கொடுத்தும் அங்குசத்திற்குப் பிணக்கா?
Compare above.

---

1220. ஆனை கொடிற்றில் அடக்குகிறதுபோல எந்தமட்டும் அடக்குகிறது?
One cannot suppress something too long.

---

1221. ஆனைக் கவடும் பூனைத் திருடும்.
Similar to each other.

---

1222. ஆனைக்கு அறுபது முழம், அறக்குள்ளனுக்கு எழுபது முழம்.
Fear a dwarf more than an elephant.

---

1223. ஆனைக்கும் பானைக்கும் சரி.
Refers to a well-known story.

---

1224. ஆனைக்கும் புலிக்கும் நெருப்பைக் கண்டால் பயம்.
Elephants and tigers are afraid of fire.

---

1225. ஆனைக்கும் அடி சறுக்கும்.
Even the great may slip.

---

1226. ஆனைக்குத் தீனியிடும் வீட்டில், ஆட்டுக்குட்டிக்குப் பஞ்சமா?
A little extra expense is nothing.

---

1227. ஆனைக் கூட்டத்திற் சிங்கம் புகுந்ததுபோல.
As if a lion entered a flock of elephants.

---

1228. ஆனைக்கில்லை கானலும் மழையும்.
The great fear no obstacles.

---

1229. ஆனைக்குச் சிட்டுக்குருவி மத்தியஸ்தம் போனாற்போல.
Said of a mean fellow undertaking to reconcile great foes.

---

1230. ஆனைக்குத் தேரை இட்டதுபோல்.
So scanty.

---

1231. ஆனைக்குத் தேரை ஊறு?
Another form of above.

---

1232. ஆனைக்குத் தீறமும் அன்னத்துக்கு மிளகாயும் வேண்டும்.
Things essential.

---

1233 ஆனைக்கு ஒரு காலம் பூனைக்கு ஒரு காலம்.
A time for every thing.

---

1234. ஆனைக்குமுண்டு அதக்கெடு.
Even the great must perish.

---

1235. ஆனைக்கு வேகிற வீட்டில் பூனைக்குச் சோறில்லையாம்.
Comp. above 1226.

---

1236. ஆனை செத்தாலும் ஆயிரம் பொன்.
Comp. above 1202.

---

1237. ஆனைதன் பலமறியாமல் மத்தகத்தால் மண்ணைவாரிப் போட்டுக்கொண்டதுபோல.
Seeking one's own ruin unwittingly.

---

1238. ஆனை தழுவிய கையால் ஆட்டுக்குட்டி தழுவுகிறதா?
The great must not stoop to mean acts.

---

1239. ஆனை தன் தலையில் தானே மண்ணைப் போட்டுக்கொள்ளும்.
Comp. above 1238 and 1201.

---

1240. ஆனை தன்னைக் கட்டச் சங்கிலியைத் தானே கொடுத்தது போல்.
Similar to above.

---

1241. ஆனை துரத்திவந்தாலும் ஆலயத்தில் நுழையலாகாது.
Against committing sacrilege.

---

1242. ஆனை நிழல் பார்க்கத் தவளை அழைத்தாற்போலே.
Doing things quite unsuitable.

---

1243. ஆனை படுத்தால் ஆள்மட்டம்.
The stature of the elephant.

---

1244. ஆனை லத்தி ஆனை ஆகுமா?
Distinguish between a person and his belongings. Comp.1203.

---

1245. ஆனை லத்தி ஆனையாகுமா ?
Great gulfs not easily bridged.

---

1246. ஆனை படுத்தால் ஆட்டுக்குட்டிக்குத் தாழுமா ?
Comp. above.

---

1247. ஆனைபோன வீதியிலே ஆட்டுக்குட்டி போகிறது வருத்தமா?
The greater includes the loss.

---

1248. ஆனை போன வீதி கேட்கவேண்டுமோ ?
Great persons are well known.

---

1249. ஆனை போகிற வழியிலே எறும்பு தாரை விட்டாற்போல.
So insignificant a support.

---

1250. ஆனைப்பசிக்குச் சோளப்பொரி தாங்குமா ?
Means not suited to end.

---

1251. ஆனை மதத்தாம் வாழைத்தண்டு, ஆண்பிள்ளை மதத்தால் இளைத்தண்டு.
Man and elephant compared.

---

1252. ஆனை மிதிக்கப் பிழைப்பார்களா ?
Certain means—certain death.

---

1253. ஆனை முட்டத் தாள் வான்முட்டப் போர்.
Sign of a rich harvest.

---

1254. ஆனைமேல் போகிறவனைச் சுண்ணாம்புகேட்டால் அகப்படுமோ?
Enrated persons inaccessible.

---

1255. ஆனைமே லேறுவேன் வீரமணி கட்டுவேன்.
Exulting heroism.

---

1256. ஆனை மேயும் காட்டில் ஆடு மேய இடம் இல்லையா ?
The greater includes the less.

---

1257. ஆனைமேல் இடும் பாரத்தை பூனைமேல் இடலாமா ?
Burden in proportion to strength.

---

1258. ஆனைமேற் போகிறவனையும் பானையோடே தின்றுவென்கிறது.
To speak ill of a great man.

---

1259. ஆனையிருந்து அரசாண்ட விடத்திலே பூனையிருந்து புலம்பி அழுகிறது.
Said of a colebrated place in ruins.

---

1260. ஆனையும் நாகமும் புல்லினால் தடைபட்டது.
Even strifles may become great obstacles.

---

1261. ஆனையும் அறுகம்புல்லினால் தடைபடும்.
See above.

---

1262. ஆனையும் ஆனையும் முட்டும்போது இடையில் அகப்பட்ட கொசுகுபோல.
Caught between too great foes.

---

1263. ஆனையை வித்துவானுக்கும் பூனையைக் குறவனுக்கும் கொடு.
Suit your gift to the recipient.

---

1264. ஆனையைக் கொன்றவன் பூனையை வெல்லமாட்டானா?
Comp. above.

---

1265 ஆனையைப் பார்க்க வெள்ளெழுத்தா?
Great objects easily seen.

---

1266. ஆனையைக் கொடுத்துத் துறட்டுக்கு மன்றாடினாற்போல.
Punchlious in trifles.

---

1267. ஆனையை ஆயிரம் பொன்னுக்கு வாங்கி இருப்பு அங்குசத்திற்கு ஏமாந்து நிற்பானேன்?
Similar to above.

---

1268. ஆனையைக் குத்திச் சளகாலே மூடுவாள்.
Said of a boastful woman.

---

1269. ஆனையைக் கட்டிச் சுளகாலே மறைப்பாள்.
Another form of above.

---

1270. ஆனையைத்தேடக் குடத்துக்குள் கை வைத்ததுபோல.
Seeking things in the wrong place.

---

1271. ஆனையை விற்றுத் துறட்டிக்கு மன்றாடுகிறான்.
Compare above 1266.

---

1272. ஆனையைத் தண்ணீரில் இழுக்கிற முதலை, பூனையைத் தரையில் இழுக்குமா?
One is weak when out of one's element.

---

1273. ஆனையைப் பிடிப்பதும் கரகத்திலடைப்பதும் அதுவே செல்லப் பிள்ளைக்கடையாளம்.
A childish enterprise.

---

1274. ஆனையை விற்று பூனைக்குப் பரிகாரம் பார்க்கிறது.
Losing big things to save small.

---

1275. ஆனை உயரம் பூனை ஆகுமா?
Things above one's reach.

---

1276. ஆனை வரும் பின்னே மணி ஆடி வரும் முன்னே.
Coming events casting their shadows before.

---

1277. ஆனை வால் பிடித்துக் கரையேறலாம் ஆட்டின் வால்பிடித்துக் கரையேறலாமா?
Right means *versus* wrong ones.

---

1278. ஆனை விழுந்தாற் கொம்பு, புலிவிழுந்தால் தோல்.
An elephant contrasted with a tiger.

---

1279. ஆனை விழுங்கிய அம்மையாருக்குப் பூனை சுண்டாங்கி.
Comp. above 1268.

---

1280. ஆனை விழுந்தாலும் குதிரை மட்டம்
The great are superior even in their fall.

---

1281. ஆனை வேகம் அடங்கும் அங்குசத்தினால்.
The power of apparent trifles.

---

1282. ஆடாதான் மத்தளத்தைப் பழித்தான்.
Comp. above 880.

---

## இ.

1283. இகழ்ச்சியுடையோன் புகழ்ச்சியடையான்.
The contemptible will not be praised.

---

1284. இக்கரை மாட்டிக்கு அக்கரை பச்சை.
'Tis distance lends enchantment to the view.

---

1285. இக்கரையில் பாகலைப் போட்டு அக்கரையில் கொழுகொம்பு வைக்கிறான்.
Acts inconsistently.

---

1286. இங்கி[illegible] தெரியாதவனுக்குச் சங்கீதம் தெரிந்து பலன் என[illegible]
Instinct essential to art.

---

1287. இருக்கும் புதையலிருக்குமா ரங்கா? அதுக்குச் சந்தேகமா வெங்கா?
Trying a chance

---

1288. இங்கு இருந்த பாண்டம்போல.
So full of odour.

---

1289. இங்கேவா நாயென்றால் மூஞ்செல்லாம் நக்குகிறது
Taking advantage of a little kindness

---

1290. இச்சிக்கொண்டே என்னோடே நிற்கிறான்.
Said of one's importunity.

---

1291. இச்சித்த காரியம் இரகசியம் அல்லவே.
A great desire soon reveals itself

---

1292. இச்சைசொல் யாசகத்தால் இடர்பட்டவனில்லை.
Flattery in begging harmless.

---

1293. இச்சையுமில்லை கிருபையுமில்லை.
Destitute of desire and grace.

---

1294. இச்சையாகிய பாக்கியமிருக்க பிச்சைக்குப் போவானேன்?
Desire should prevent begging.

---

1295. இசைவு வந்தது வடமலையப்பா.
A congratulation

---

1296. இசையில்லாப் பாட்டு இழுக்கு.
Harmony essential

---

1297. இஞ்சியென்றால் தெரியாதா? எலுமிச்சம் பழம்போல் தித்திப்பாயிருக்குமே.
An answer—as prompt as it is inaccurate.

---

1298. இஞ்சி தின்ற குரங்கைப்போல.
Quite disappointed.

---

1299. இஞ்சி தின்கிற குரங்குபோல பஞ்சரிக்கிறான்.
An expanded form of above.

---

1300. இஞ்சிலாபம் மஞ்சளில்.
What is gained in one goes in another.

---

1301. இடதுகைக்கு வலதுகை துணை, வலதுகைக்கு இடதுகை துணை.
Neighbours should help each other.

---

1302. இடதுகை புட்டத்துக்கெளிது.
Like seeks like.

---

1303. இடவசதியில்லாத பதிவிரதை.
Virtuous but homeless!—sarcastic.

---

1304. இடறின காலாலேயே இடறுகிறது.
Repetition of the same error.

---

1305. இடக்கனுக்கு வழி எங்கே? இடக்கிறவன் தலைமேலே.
A mischief-maker's tricks.

---

1306. இடங்கொடுத்தால் மடம் பிடுங்குவான்.
Result of giving too much advantage.

---

1307. இடம் வலம் தெரியாதவனோடு இணக்கம் பண்ணக்கூடாது.
Beware of indiscriminate friendship.

---

1308. இடி ஓசை கேட்ட பாம்புபோல.
So terrified.

---

1309. இடிக்குக் குடை பிடிக்கலாமா?
Employing unsuitable means.

---

1310. இடி கொம்புக்காரன் கோழிகுசுச் சத்தத்துக்கு அஞ்சுமா?
The great will not fear trifles.—vulgar.

---

1311. இடி விழுந்த மரம்போல் எங்கி.
Comp above 1308.

---

1312. இடி விழுவானுக்கு வாழ்க்கைப்பட்டு எந்நேரமும் இடிசாமம்
Fate of a woman wedded to a timid fellow.

---

1313. இடித்தவள் புடைத்தவள் இங்கேயிருக்க எட்டிப்பார்த்தவள் கொட்டிக்கொண்டு போனாளாம்.
Theft under one's nose.

---

1314. இடித்து ஒரு கூடை இடுவதிலும் பிடிச்சோறு அன்பாய்ப் போடுவது போதும்.
Kindness better than a gift.

1315. இடுகிற தெய்வம் எங்கும் இடும்.
Divine generosity not local

1316. இடுப்பு வைத்து [illegible]ல்லாம் அடுப்பு வைக்கான்.
Taking great care of oneself

1317. இடுப்பு ஒடிந்த கோழிக்கு உரற்குழியே கைலாசம்.
Said of an invalid

1318. இடும்பு செய்வார்க்கு இராப் பகல் இல்லை.
*Oppressors always wide awake.

1319. இடுவோர் பிச்சை பெறுவது மோக்ஷம்
A merciful man lendeth unto the Lord

1320. இடுவார் பிச்சையைக் கெடுக்கிறது.
Preventing a generous gift.

1321. இடுவார் பிச்சையைக் கெடுவார் கெடுப்பார்.
Those who prevent a gift will suffer.

1322. இடுவான் இடுவானென்று ஏக்கற்று இருந்தாளாம், நாலுகொடுத்து நாலாசையும் தீர்த்தாளாம்
Great hopes grossly frustrated.

1323 இடுவான் இடுவான் என்று ஏக்குற்றிருந்தானாம் நாழிகொடுத்து நாலாசையும் தீர்த்தானாம்.
Said of a shabby reward after long waiting.

1324. இடைக்கணக்கன் செத்தான், இனிப் பிழைப்பான் காட்டான்.
Signs of better times.

1325. இடை சாய்ந்த குடம் இடை.
A sloping water-pot.

1326. இடைச்சன் பிள்ளைக்காரிக்குத் தலைச்சன் பிள்ளைக்காரி மருத்துவம் பார்த்தாற்போல.
An inexperienced person trying to teach another.

1327. இடைச்சி மாப்பிள்ளை என்றைக்கு வருவான்!
The sight so rare

1328. இடைச்சி ஆத்தாள் கோளிச்சி.
A shepherdess's mother.

1329. இடைத்தெருவில் கோலம் வரும்போது குசத்தெரு எங்கே என்கிறாள் ?
Asking irrelevant questions.

1330. இடைப்பிறப்பும் கடைப்பிறப்பும் ஆகாது.
Two undesirable births.

1331. இடைப் புத்தி பிடரியிலே.
A shepherd's stupidity notorious.

1332 இடையன் வெட்டின கொம்புபோல.
So crooked.

1333. இடையன் பேரிலெ சாத்தான் வந்த கதைபோல.
Refers to a story.

1334. இடையன் கெடுத்தது பாதி மடையன் கெடுத்தது பாதி.
Refers to the shepherd's stupidity.

1335. இடையன் கலியாணம் விடியும்பொழுது.
The shepherd's wedding at dawn.

1336. இடையன் கரடிமேல் ஆசைப்பட்டதுபோல.
An unreasonable wish.

1337. இடையாண்டியும் இல்லை குசத்தாதனும் இல்ல.
Castes which have no mendicants.

1338. இடையூறு செய்தோன் மனையில் இருக்காது பேய்முதலாய்.
The evil-doer's house will be deserted.

1339. இட்ட எழுத்திற்கு ஏற ஆசைப் பட்டால் கிடைக்குமா ?
Cannot get more than what is destined.

1340. இட்ட இடியும் கெட்டு ஏற்ற குடியும் கெட்டது.
Bereft of all benefactors.

1341. இட்டதன்மேல் ஏறுசைப்பட்டால் கிடைக்குமா ?
Comp. above.

1342. இட்டகையை நத்துமா, இடாத கையை நத்துமா ?
Generosity begets friends.

1343. இட்டதில் ஒன்றும் குறையாது.
Mercy is twice blessed.

---

1344 இட்டதெல்லாம் கொள்ளும்படி மகன் கப்பரை.
An ungrateful beggar

---

1345 இட்ட வீட்டுக்கு பட்டிட்டுக்கொண்டு, இடிந்த வீட்டுக்கு மண்ணிட்டுக்கொண்டு திரிகிறான்.
A grateful person

---

1346. இட்டவர் இடாவிட்டால் வெட்டுப்பகை
People expect continuous favour.

---

1347 இட்டாருக்கு இட்ட பலன், எரியடித்தாருக்குக் கோடிபலன்.
Different rewards

---

1348. இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்.
Tamil opinion of the high and the low

---

1349. இட்டார்க்கு இடலும், செத்தார்க்கு அழலும்.
Comp above 1339

---

1350 இட்டார்க்கு இடு, செத்தார்க்கு அழு.
Different duties

---

1351. இட்டு வைத்தால் தின்னவும் எடுத்து வைத்தால் சுமக்கவும் தெரியும்.
Said of a dull person

---

1352. இணக்கமறிந்து இணங்கவேண்டும்.
Seek friendship after due inquiry

---

1353 இணக்கமில்லாதவனொடு எண்ணவாது
Dispute not with the unfriendly

---

1354. இணங்காரோடு இணங்குவது இகழ்ச்சி.
Comp above

---

1355. இது என்ன வெள்ளரிக்காய் விற்ற பட்டணமா?
Said of a radical change in the place.

---

1356. இத்தனை பெரியவன் கையைப் பிடித்தால் எப்படி மாட்டோம் என்கிறது?
"Royalty commanding love"

---

1357. இத்தனை அத்தனை ஆனால் அத்தனை எத்தனை ஆகும்?
Application of the same rule.

---

1358. இத்தனைப் பேர் பெண்டுகளில் என் பிள்ளைக் கொருதாயி ல்லையா?
Appeals to maternal feelings in woman.

---

1359. இந்த அடிக்கு எந்த நாயும் சாகும்.
A fatal blow.

---

1360. இந்த எலும்பைக் கடிப்பானேன் சொந்தப்பல்லும் போவா னேன்?
Self-injury.

---

1361. இந்தக் கூழுக்கோ இத்தனை திருநாமம்?
A religious cloak.

---

1362. இந்தக் கூழுக்கா இருபத்தெட்டு நாமம்?
Another form of above.

---

1363. இந்தக் கண்ணிற் புகுந்து அந்தக் கண்ணிற் புறப்படுகிறான்.
Said of one whose ways are mysterious.

---

1364. இந்தச் சிற்றுண்டி எனக்குத் தெவிட்டிப்போயிற்று.
Refreshments not equal to food.

---

1365. இந்த நாயை ஏன் இப்படிச் செய்கிறாய்?
Against oppression.

---

1366. இந்தவளவு சிக்கினால் எப்படித்தான் பிள்ளை பிழைக்கும்.
Refers to a fatal remedy.

---

1367. இந்தக்கருப்பிற் செத்தால், இன்னம் ஒரு கருப்பு மயிரைப் பிடுங்குமா?
Enough is a single famine.

---

1368. இந்தப் பூனையும் பால் குடிக்குமா?
Said of one who is different from what he appeared to be.

---

1369. இந்தப் பெருமையும் பந்தல் அழகும் பார்த்தையா பண்ணைக் காரா?
A sarcastic remark.

---

1370. இந்திராதி தேவர்க்கும் வந்திடும் தீவினை.
Even the gods are subject to evil.

1371. இந்திரனைச் சந்திரனை இலையாலே மறைப்பாள், எமதருமராஜனைக் கையாலே மறைப்பாள்.
Said of a clever trickish woman.

1372. இந்திரைக்கு மூத்தவள் மூதேவி.
The goddess of misfortune.

1373. இப்பெரிய கொள்ளையிலே அப்பா என்கப் பிள்ளை யில்லை.
Complaint of a childless man.

1374. இம்மிய நுண்பொருள்களீட்டி நிதியாக்கி கம்மியரு மூவர் களிறு.
The way of making wealth.

1375. இமைக் குற்றம் கண்ணுக்குத் தெரியாது.
Unseen defects never noticed.

1376. இயமன் ஒருவனைக் கொல்வான், எற்றம் மூவரைக் கொல்லும்.
The pecotah kills more than Yama.

1377. இயற்கை வாசனையோ செயற்கை வாசனையோ?
Doubt as to whether something is natural or acquired.

1378. இரக்கம் இல்லாதான் நெஞ்சம் இரும்பிலும் கொடிது.
A heart without pity.

1379. இரக்கப் போனாலும் சிறக்கப் போ?
Recommends tidiness even while begging.

1380. இரங்காதவர் உண்டா? பெண் என்றால் பேயும் இரங்கும்.
Pity universal.

1381. இரசவாதிக்கு எது பஞ்சம்?
The alchemist is all-powerful.

1382. இரண்டு ஆட்டிலே ஊட்டின குட்டியானான்.
Inadequate nourishment.

1383. இரண்டு பட்ட ஊரில் குரங்கும் குடி இராது.
A quarrelsome village is soon deserted.

1384. இரண்டு ஓடத்தில் கால் வைக்கிறதா?
One cannot side with two opposing parties.

1385. இரண்டு பெண்டாட்டிக்காரன் வீட்டில் நெருப்பேன்?
Cooking seldom in a bigamist's house.

1386. இரண்டு வீட்டிலும் கலியாணம், இடையிலே செத்ததாம் நாய்க்குட்டி.
Small people ignored on great occasions.

1387. இரண்டு நாய்க்கு ஒரு எலும்பு போட்டாற்போல.
Apparent good—but real evil.

1388. இரண்டு ஓடத்தில் கால்வைத்தவனைப்போலிருக்கிறான்.
Comp. above 1384.

1389. இரண்டு பெண்சாதிக்காரனுக்குக் கொண்டை என்னத்திற்கு?
He has already two *kondai*.

1390. இரந்தும் பருந்துக்கு இடு.
Kites sacred.

1391. இரந்தோர்க்கு ஈவது உடையார் கடன்.
Alms giving a duty.

1392. இரப்பவனுக்கு வெண்சோறு பஞ்சமா?
Famine does not affect the beggar's dole.

1393. இரப்பவனுக்கு எங்கும் பஞ்சம் இல்லை.
Same as above.

1394. இரப்பான் சோற்றுக்கு என்றும் பஞ்சமில்லை.
Comp. above.

1395. இரவல் உடைமை இசைவாய் இருக்கிறது, என் பிள்ளை ஆணை நான் கொடுக்கமாட்டேன்.
The borrower's behaviour.

1396. இரவல் சதமா, திருடன் உறவா?
Loans and thieves not to be relied on.

1397. இரவல் துணியாம், இரவல் துட்டாம், இழுத்துக்கொட்டு மேளத்தை, இறுகக்கட்டு தாலியை.
A miserable wedding

1398. இரவற் சோறு பஞ்சம் தாங்குமா?
Can a loan stand a famine?

---

1399. இரவற் சீலையை நம்பி இடுப்புக் கந்தையை எறிந்தானாம்.
Losing one's own for a mere loan.

---

1400. இரவிற் போனாலும் பறக்கப்போகவேண்டும்.
Walk fast at night.

---

1401. இரவி முன் பனிபோல்.
Vanishing in a moment.

---

1402. இரவியைக்கண்ட இருள்போல.
Comp. above proverb.

---

1403 இரவிலுண்ணாமல் பகலுண்ணாதவனுக்குப் பெருத்தலில்லை.
Supper more essential than dinner.

---

1404. இராக் கண்ட சனி மிடாப்போல வீங்கின கதை.
Something very improbable.

---

1405. இராகுத் திசையில் வாழ்ந்தவனும் இல்லை, ராஜ திசையிற் கெட்டவனும் இல்லை.
A popular belief.

---

1406. இராஜன் எவ்வழி குடி அவ்வழி.
Like sovereign like subjects.

---

1407. இராஜன் ஏறிய குதிரையைப்போல்,
So dignified.

---

1408. இராஜ சமுகத்துக்கு எலுமிச்சம்பழம் சிறப்பு.
Doing something to please a superior.

---

1409. இராஜ கீரியைக் காவுகிறதுபோல.
Like carrying a royal mongoose.

---

1410. இராஜன் ஆனாலும் தன் தாய்க்கு மகனே.
Son's position cannot effect his relationship to his mother.

---

1411. இராஜன் செங்கோல் தன் நாடுவரையில்.
Even great possessions have their limits.

---

1412. இராஜப்பயலோடேகூடி தாதப்பயலும் கெட்டானாம்.
Evil of indiscriminate friendship.

---

1413. இராஜாவிருக்கப் பட்டணம் அழியுமா?
The capital safe during the king's stay.

1414. இராஜாவின்பலமிருந்தால் அஷ்டமத்துசனி என்னசெய்யும்?
Importance of royal support.

1415. இராஜாகேட்கக்கேட்க இன்னொன்று புறப்படுதென்றானும்.
Refers to the story without end.

1416. இராஜா மகள் ஆனாலும் கொண்டவனுக்குப் பெண்டுதான்.
The wife's condition irrespective of birth.

1417. இராஜாளியைக் கண்ட கொக்குப்போல.
So terrified and certain of destruction.

1418. இராஜா கடன்படப் புழுக்கை காடித்தண்ணீர் குடித்தது போல.
Trying to connect things which are quite distinct.

1419. இராட்சதனுக்கு ஒரு புரோட்சதன்.
One matching another.

1420. இராட்டினம் வருகிறது வண்டியை விலக்கு.
The superior made to make way for the inferior.

1421. இராப்பட்டினி கிடந்தவன் உரித்த வாழைப்பழம் விற்கிறதா என்று விசாரித்தானும்.
Appetite so keen.

1422. இராப்பட்டினி கிடந்தவன் அகவிலை கேட்பானோ?
Similar to preceding.

1423. இராப்பட்டினி பாயோடே.
Starvation ceases with sleep.

1424. இராப்பகல் கண்ணிலே.
'Tis the eye which makes day and night.

1425. இராமபாணம்பட்டு உருவினாற்போல.
Wounded in every part of the body.

1426. இராமர் இருந்த இடம் அயோத்தி.
Each has his abode.

1427. இராமன் மங்கையோடு இணங்கியது அவம்.
Listening to the wife leads to evil.

1428. இராமனைப்போல ராஜா இருந்தால் அனுமானைப்போலச் சேவகனும் இருப்பான்.
A good master secures a good servant.

1429 இராமலட்சுமணரைப்போல இசைந்திருக்கிறது.
So intimate.

1430. இராமவாக்குக்கு இரண்டுண்டா?
Rama never lied.

1431. இராமாமிர்தமே சீவனமென்று பட்டினியாய் இருக்கலாமா?
Mere hope will not allay hunger.

1432. இராயர் எறினகுதிரைக்கு மேடேது பள்ளமேது.
A royal steed is brave.

1433. இராவுத்தனே சினந்திருக்கும்போது குதிரை கோதுமை ரொட்டிக்கழுகுதாம்.
The horse beats out his rider.

1434. இரா முழுதும் ராமாயணம் கேட்டுச் சீதைக்கு ராமன் என்ன என்ற கதை.
Too dull to remember anything.

1435. இராமேசுரத்துக்கும் காசிக்கும் போயும் என்னைப்பிடித்த சனீசுரன் தொலையவில்லை.
The inutility of pilgrimages.

1436. இராவணன் குடிக்கு மகோதரன் போலும், சுயோதனன் குடிக்குச் சகுனிபோலும்.
There is a traitor in every camp.

1437. இராவண சந்நியாசிபோல் இருக்கிறான்.
Ravana once assumed the guise of a *sanyasi*.

1438. இராவுத்தனைத் தள்ளினதும் அல்லாமல் குழியும் பறித்ததாம் குதிரை.
Comp. above 1433.

1439. இரிசிக்குப் புருஷாசை உண்டா ?
Demonesses never marry.

---

1440. இரிசி உடமை இராத்தங்காதது போல.
Offerings to demons do not last till the morning.

---

1441. இருக்கிற அன்றைக்கு எருமைமாடு தின்றாற்போல.
In plenty a glutton.

---

1442. இருக்கிறவன் நல்லவனானால் இடைப் பந்தியிலிருந்தாலென்ன, கடைப்பந்தியி லிருந்தாலென்ன?
Goodness appreciated anywhere.

---

1443. இருக்கிறவன் செவ்வையாய் இருந்தால் சிரைக்கிறவன் செவ்வையாய்ச் சிரைப்பான்.
Everything depends on oneself.

---

1444. இருக்கவேண்டும் என்றால் இரும்பைத் தின்.
A belief in the vitalizing properties of iron.

---

1445. இருக்க இருக்க எல்லாம் இசைவாகும்.
Time the great physician.

---

1446. இருக்கசாணிடம் இல்லாமற்போனாலும் பெருக்கப் பெருக்கப் பேசுவதில் மாத்திரம் குறைவில்லை.
Vain boasting.

---

1447. இருக்கிறவனுக்கு ஒருவீடு இல்லாதவனுக்கு அநேகம் வீடு.
Differenc between a tenant and a truant.

---

1448. இருக்கும் இடம் ஏவுமா ?
Dwelling-places do not incite.

---

1449. இருகுடம் கொண்டு அரைப்பாம்பாட்டுவதென்ன, எந்திழையே ?
Blaming a woman for her imperfect work.

---

1450. இருதயத்தில் நினைந்ததெல்லாம் எழுதிக்கட்டு.
Commends writing down what is remembered.

---

1451. இருதலை மணியன் பாம்பைப்போல.
Doubly poisonous.

---

1452. இருதலைக்கொள்ளி எறும்புபோல் ஆனேன்.
In the midst of two evils.

---

1453. இருந்தல்லோ படுக்கவேண்டும் ?
Everything is done gradually.

---

1454. இருந்த நாள் எல்லாம் இருந்துவிட்டு ஊர்ப்பறையனுக்குத் தாரைவார்த்த கதை.
Doing something mean after an honourable career.

---

1455. இருந்தவன் தலைமேலே இடி விழுந்ததுபோல.
An unexpected calamity.

---

1456. இருட்டுக் கெல்லாம் சரி.
Darkness makes everything alike.

---

1457. இருட்டு வீட்டிலே குருட்டுக் காக்காய் ஓட்டுகிறது.
A foolish enterprise.

---

1458. இருட்டு வேலையோ குருட்டு வேலையோ ?
Against doing anything in the dark.

---

1459. இருட்டு வீட்டுக்குள் போனாலும் திருட்டுக்கை போகாது.
A thievish habit betrays itself everywhere.

---

1460. இருட்டுக் குடிவாழ்க்கைத் திருட்டுக்கு அடையாளம்.
Darkness and deceit go together.

---

1461. இருஷிப் பிண்டம் இராத்தங்காது.
Conception for a Rishi followed by birth on the morrow.

---

1462. இருஷி மூலம் நதி மூலம் விசாரிக்கப்போகாது.
Origin of Rishis and rivers never known.

---

1463. இரு சுழி, இருந்து உண்டாலும் உண்ணும், இரந்து உண்டாலும் உண்ணும்.
Natural belief regarding a double mark on the body.

---

1464. இருநாய்க்கிட்ட எலும்புபோலே.
Comp. above 1387.

---

1465. இருந்தும் கெடுத்தான் செத்தும் கெடுத்தான்.
Equally destructive whether living or dead.

1466. இருந்த கால் மூதேவி நடந்த கால் சீதேவி.
Activity *versus* laziness.

1467. இருந்தவனுக்குப் போனவன் குணம்.
The absent one generally preferable.

1468. இருந்தவன் எழுந்திருக்கிறதற்குள்ளே நின்றவன் கெடுந் தூரம்.
Against a lazy way of doing things.

1469. இருந்தால் பூனை பாய்ந்தால் புலி.
Prone to extremes.

1470. இருந்தால் இருப்பீர் எழுந்தால் நிற்பீர்.
Each act has its respective result.

1471. இருந்துபணம் கொடுத்து நடந்துவாங்கவேண்டியதாய் இருக்கிறது.
Evil of lending money.

1472. இருபத்தொரு மழையும் எண்ணி ஊற்றியது.
A good rainfall.

1473. இருப்பிடம் தலைப்பிள்ளை தலைக்கடை தென்னம்பிள்ளை.
Child and plant treated alike.

1474. இருப்புக்கதவு இடித்துத் தவிட்டுக் கொழுக்கட்டை எடுக்கிறதா?
Doing great things with small results.

1475. இருப்பதுபொய் போவதுமெய்.
" Life is uncertain, death is sure."

1476. இருப்புச் சலாகையை விழுங்கிப்போட்டு இஞ்சிச்சாறு குடித்தால் தீருமா?
Weak remedies for great evils.

1477. இருப்புக் கோட்டையும் கற்கதவும்போல.
Well fortified.

1478. இருப்புக்கட்டியைக் காற்றடிக்கிறபோது இலவம்பஞ்சு எனக்கு என்ன புத்தி என்கிறதாம்.
Small people sure to suffer with great people.

1479. இரு மனது மங்கையோடு இணங்குவது அவலம்.
An unsteady woman not to be trusted.

---

1480. இரும்பு செம்பானால் துரும்பு தூணாம்.
Folly of cherishing unreasonable hopes.

---

1481. இரும்புத்தூணை செல் அரிக்குமா ?
Iron pillars proof against white ants.

---

1482. இரும்பு செம்பானால் திரும்பிப் பொன் ஆகும்.
Compare above 1480.

---

1483. இரும்பு அடிக்கிற இடத்தில் ஈக்கு என்ன அலுவல்?
Against inquisitiveness.

---

1484. இரும்பு அடிக்கிற இடத்தில் நாய்க்கு என்னவேலை ?
Same as above.

---

1485. இரும்புபிடித்த கையும் சிரங்குபிடித்த கையும் சும்மாஇராது.
Iron and itch cause meddlesomeness.

---

1486. இரும்பு அடிக்கிற இடத்தில் நாய்க்கு என்னகிடைக்கும் ?
Do not expect anything in unlikely places.

---

1487. இரும்புத்தூணை எறும்பு அரித்தாற்போல்.
So improbable.

---

1488. இரும்புத் துறட்டுக்கு அசையாத புளியங்காய் திருப்பாட்டுக்கு அசையுமா ?
Where a great effort fails a small one is useless.

---

1489. இரும்பு கோணினால் யானையை வெல்லலாம், கரும்புகோணினால் கட்டியும் பாகுமாம், அரும்புகோணினால் அதன்மணங்குன்றுமோ நரம்புகோணினால் நாமதற்கென்செய்வோம்?
The same rule cannot apply to everything.

---

1490. இரும்புப்பாறையை விழுங்கினவனுக்கு இஞ்சிச் சுரசம் குடித்தால் தீருமா ?
Compare above 1488.

---

1491. இரும்பை எறும்பு அரிக்குமா ?
Impossible things.

---

1492. இரும்பை எலி தின்னுமா?
Similar to preceding.

1493. இரும்பை எலி தின்றது என்கிறான் இடக்கன்.
Giving a stupid excuse.

1494. இரும்பைக் கரையான் அரித்தால் பிள்ளையைப் பருந்துகொண்டு போகாதா?
One improbable thing implies another.

1495. இருவராலே ஆகாத காரியம் ஒருவராலே ஆகுமா?
Two are stronger than one.

1496. இருவரும் ஒத்தால் ஒருவருக்கும் பயமில்லை.
If two agree, they need not fear any one.

1497. இருவரும் ஒத்தால் பிணக்கு வருவானேன்?
No sulkiness where agreement rules.

1498. இருவர் நட்புக்கு ஒருவர் பொறுமை.
Patience necessary to friendship.

1499. இருவிரல் தோலும் அதின்மேல் மயிரும் எனக்கில்லையே.
Refers to lack of something essential.

1500. இருளன் பிள்ளைக்கு எலிக்குஞ்சு பஞ்சமா?
*Irular* eat rats.

1501. இருளன் ராஜவிழி விழிப்பானா?
He is a miserable fellow.

1502. இருளும் ஒருகாலம் நிலவும் ஒருகாலம்.
Darkness and moonlight by turns.

1503. இரெட்டியாரே இரெட்டியாரே என்றால், கலப்பையைத் திட்டென்று போட்ட கதை.
Sudden stoppage of work.

1504. இரை விழுங்கின பாம்புபோலே.
So dull and inert.

*1505. இலக்கணம் கற்றவன் கலக்கம் அற மன்னர்சபைகாண்பான்.
The advantage of learning.

1506. இலக்கணப்பெண்சாதி மானியங்காக்கிறாள்.
A sarcasm on an educated wife.

1507. இலக்ஷணம் அவலக்ஷணம் முகத்திலே.
The face makes one handsome or ugly.

1508. இலங்கணம் பரம ஔஷதம்.
Abstinence the best remedy.

1509. இலங்கையில் பிறந்தவன் எல்லாம் இராவணன் ஆவதில்லை.
The birth place does not make the man.

1510. இலங்கையைச் சுட்ட குரங்கு.
Capable of great destructiveness.

1511. இலந்தைப்பழம் புழுப்போல் துடிக்கிறது.
The *Ilantham* fruit is full of worms.

1512. இலவு காத்த கிளி ஆனேன்.
Engaged in a useless task.

1513. இலுப்பைப்பூவை திருப்பினால் இருபுறமும் பொத்தல்.
The nature of the *Iluppai* flower.

1514. இலை தின்னி காய் அறியான்.
One cannot be an expert in everything.

1515. இலை மறைவு தலைமறைவு வேண்டாமா ?
Secrecy desired.

1516. இலையும் பழுப்பும் எங்கும் உண்டு.
Good and bad are mixed everywhere.

1517. இல்லது வாராது உள்ளது போகாது.
Nothing is new and nothing perishable.

1518. இல்லற மல்லது நல்லற மல்ல.
Praises domestic virtue.

1519. இல்லறம் பெரிது துறவறம் சிறிது.
Domestic preferred to ascetic virtue.

1520. இல்லறம் பெரிது துறவறம் பழிப்பு.
Similar to above.

1521. இல்லாதவன் பொல்லாதவன்.
Poverty identical with wickedness.

1522. இல்லாத பிள்ளைக்கு இலுப்பைப்பூ சர்க்கரை.
The poor must be satisfied with substitutes.

1523. இல்லாதவன் பெண்சாதி எல்லாருக்கும் தோழியா?
Taking advantage of a poor man's wife.

1524. இல்லாது சொல்லி அல்லற் படுதல்.
Suffering by speaking lies.

1525. இல்லாது பிறவாது அள்ளாது குறையாது.
Everything must have a cause.

1526. இல்லாதும் இல்லன் இருப்பதும் இல்லன்.
Utterly destitute.

1527. இல்லாளை விட்டு வல்லாண்மை பேசுகிறதா?
Forsaking one's wife is not manly.

1528. இல்லை என்ற வீட்டில் பல்லியும் சேராது.
An uncharitable household condemned.

1529. இல்லோர் இரப்பது இயல்பு.
Natural for the destitute to beg.

1530. இலௌகிகம் வைதிகம் இரண்டும் வேண்டும்.
Secular and religious elements are both necessary.

1531. இவருக்குச் சொல்லும் புத்தி கடலிற் பெருங்காயம் கரைத்தாற்போல் இருக்கிறது.
Useless advising.

1532. இவள் விலைமோரில் வெண்ணெய் எடுத்துத் தலைமகனுக்குக் கலியாணம் பண்ணுவாள்.
So niggardly.

1533. இவனுக்கும் அவனுக்கும் ஏழு பொருத்தம்.
Points of agreement or similarity.

1534. இவன் வாழ்ந்தவாழ்வு மருகிலேன் மல்லாக்கிலேன்.
A sarcasm on one's career.

1535. இவன் ஊராருக்குப் பிள்ளை.
Said of a wandering youth.

1536. இவன் மகா பெரிய கள்ளன், காலால் முடிந்ததைக் கையால் அவிழ்க்கிறது அரிது.
Consummate rogue.

1537. இவன் கல்லாது கற்றவன், உள்ளங்கையில் வைகுண்டம் காட்டுவான்.
Said sarcastically of a learned brag.

1538. இவன் புத்தி உலக்கைக் கொழுந்து.
So stupid.

1539. இவ்வூர்ப் பூனையும் புலால் தின்றது.
A sarcastic remark on a flesh-eating vegetarian.

1540. இழவு சொன்னவன் பேரிலேயா பழி?
The messenger does not make the news.

1541. இழவுக்கு வந்தவள் தாலி அறுப்பாளா?
Sympathizer not to be confounded with mourner.

1542. இழுக்குடைய பாட்டிற்கு இசை நன்று.
Harmony sets off a faulty stanza.

1543. இழுக்கான பொன்னைப் புடத்தில் வைத்தெடுப்பார்கள்.
Defects must be removed by chastisement.

1544. இழுப்பும் பறிப்பும் இழவுபட்ட பாடும்.
A very badly managed funeral.

1545. இழுவைக் கண்டால் அடி பார்ப்பானேன்?
One sign as good as another.

1546. இழை ஆயிரம் பொன் பெற்ற இந்திரவர்ணப்பட்டு.
A very valuable silk.

1547. இழையத் தீட்டிக் குழைய வடித்தல்.
Well-pounded and well-boiled.

1548. இளகின இரும்பைக் கண்டாற் கொல்லன் குண்டியைத் தூக்கி அடிப்பான்.
A good opportunity agreeable to a workman.

1549. இளங்கன்று பயம் அறியுமா ?
A child knows no fear.

1550. இளமையிற் கல்வி எப்போதும் நிற்கும்.
Lasting effects of early education.

1551. இளமையிற் சோம்பல் முதுமையின் மிடிமை.
Indolent youth and miserable old age.

1552 இளமையில் முயற்சி முதுமையிற் காக்கும்.
Just the reverse of preceding.

1553. இளமையிற் பழக்கம் எப்போதும் மறவாது.
Habits formed in early life never forsaken.

1554. இளமையும் முதுமையும் சரியான வயதல்ல.
Childhood and old age are extremes.

1555. இளவெந்நீர் குளிக்காதவளா உடன்கட்டை ஏறப்போகிறாள்.
Argument from the small to the great.

1556. இளவெயில் காயாத நீயா தீ பாயப்போகிறாய் ?
Similar to above.

1557. இளைஞன் ஆனாலும் ஆடுவான் மூப்பு.
A young fellow playing the old man.

1558. இளைத்தவன் எள்ளை விதை.
Taking advantage of a poor man.

1559. இளைத்தவள் தலையில் ஈரும் பேனும்.
Same as above.

1560. இளைத்தவன் சிநேகிதனைச் சேர்.
A good advice.

1561. இளைத்தவன் பெண்சாதி எல்லாருக்கும் மைத்துனி.
A poor man's wife is every man's sport.

1562. இளைத்தவர் கிளைப்பார்; கிளைத்தவர் இளைப்பார்.
Vicissitudes of fortune.

1563. இளையாளை வாடி மலையாளம் போவோம், மூத்தாளை வாடி முட்டிக்கொண்டு சாவோம்.
Preferring the younger to the elder of two women.

1564. இளையாள் இலைதின்னி மூத்தாள் காய் அறிவாள்.
Different persons take different foods.

---

1565. இறகுகொடு மயிலென்றால் கொடுக்குமா ? இருத்திவைத்துப் பிடுங்கினால் கொடுக்கும்.
Mere wish is of no avail.

---

1566. இறகு முற்றிப் பறவை ஆனால், எல்லாம் தன் வயிற்றைத் தான் பார்க்கும்.
Self-support at maturity.

---

1567. இறக்கும் காலம் வராமல் பிறக்குமா ஈசலுக்குச் சிறகு ?
Great activity a prediction of death.

---

1568. இறங்கச்சே நீத்தானால் கரையேறுகிற தெப்படி ?
A bad beginning—a worse end.

---

1569. இறங்கும் துறையிலே நீத்தானால், இந்த ஆற்றை எப்படிக் கடக்கிறது ?
Similar to above.

---

1570. இறங்கு பொழுதிலே மருந்து குடி.
Take medicine at sun-set.

---

1571. இறந்தவன் பிள்ளை இருந்தவன் அடைக்கலம்.
An orphan the survivor's ward.

---

1572. இறந்தவனுக்கு எள்ளும் தண்ணீரும்.
Said of a promise to the dead.

---

1573. இறந்தவன் இருப்பவனுக்கு வழிகாட்டி.
The deceased a guide to the living;

---

1574. இறந்திறந்து பிறந்தாலும் இருவக்கரையானாய்ப் பிறக்கவேண்டும்.
The *Karyân's* life is admired.

---

1575. இரந்துகொண்டிருந்தாளாம் மடத்தாய் ஏறி அடித்தாலும் தவசிப்பிள்ளை.
On mendicant life.

---

1576. இறுத்த குடிக்கு அனர்த்தம் இல்லை.
Free from debt, free from loss.

---

1577. இறப்பானுக்குப் பணமும் கிடையாது, உழைப்பானுக்குப் பெண்ணும் கிடையாது.
Even good people suffer.

1578. இறுகினால் களி இளகினால் கூழ்.
Different results owing to different methods.

1579. இறைக்க ஊறும் மணற்கேணி, ஈயப்பெருகும் பெரும் செல்வம்.
Benefactions like a well-drained spring.

1580. இறைச்சி தின்கிறவர் கடுப்புக்கு மருந்து அறிவார்.
Flesh eaters know their proper medicines.

1581. இறைச்சி தின்றாலும் எலும்பைக் கோத்துக் கழுத்திலணிகிறதா?
One disagreeable act is no excuse for another and a worse one.

1582 இறைத்த கிணறு ஊறுமா, இறையாத கிணறு ஊறுமா?
Compare above.

1583. இறைத்த கிணறு ஊறும், இறையாத கிணறு நாறும்.
The fate of miserliness.

1584. இறைத்த கிணறு சுரக்கும்.
Similar to preceding.

1585. இற்றேம், இளைத்தோமென் றிரக்கப்போனாலும் என் சனி என்னை விடவில்லை.
Irretrievable misery.

1586. இல்லிடமில்லார்க்கு நல்லிடமில்லை.
Dwelling house indispensable.

1587. இனத்தை இனம் தழுவும்.
Like seeks like.

1588. இனம் இனத்தோடே வெள்ளாடு தன்னோடே.
The nature of goats.

1589. இனம் பிரிந்த மான்போல.
Lonely and sad.

1590. இனிமேல் ஒரு தெய்வத்தைக் கைவெடுக்கிறதா?
A complaint against a tutelary god.

1591. இனிமேல் எமலோகபரியந்தம் சாதிக்கலாம்.
Waxing bold.

1592. இன்பம் வருவதும் துன்பம் வருவதும் எடுத்த உடலிற்கு வரம்.
Pleasure and pain according to fate.

1593. இன்பமும் துன்பமும் பொறுமையிலே.
Importance of patience.

1594. இன்பத்தில் ஆசை எவர்க்கும் உண்டு.
Desire for pleasure natural.

1595. இன்பமும் துன்பமும் எடுத்த உடலுக்கு.
Comp. above 1592.

1596. இன்றற்று இன்று போகிறதா?
Said of something expected to last long.

1597. இன்று இருப்பார் நாளைக்கு இல்லை.
Uncertainty of life.

1598. இன்றைக்கு இலை அறுத்தவன் நாளைக்குக் குலை அறுப்பான்.
The growth of pilfering habits.

1599. இன்றைக்கு ஆகிறது நாளைக்கு ஆகட்டும்.
A procrastinator's language.

1600. இன்றைக்குச் செத்தால் நாளைக்கு இரண்டு நாள்.
How time flies.

1601. இன்றை என்பதும் நாளை என்பதும் இல்லை என்பதற்கு அடையாளம்.
Delay means denial.

1602. இன்னும் கிடக்குது நீயோ நீயோ.
Said of something remaining.

1603. இன்னும் இருக்கிறது நேருக்குள் சிங்காரம்.
Beauty in rectitude.

## ஈ.

1604. ஈ கலையாமல் தேன் எடுப்பார்கள், எடுக்காமற் பிடிப்பார்கள்.
Recommends gentleness in action.

1605. ஈகை உடையோன் எக்களிப்பு அடைவான்.
The joy of benefaction.

1606. ஈக்கு விடம் தலையில், தேளுக்கு விடம் கொடுக்கில்.
Different parts of the body poisonous.

1607. ஈக்கும் பாலுக்கும் எச்சில் இல்லை.
No pollution as regards flies and milk.

1608. ஈசலுக்கு எல்லாம் பகை.
All against a weakling.

1609. ஈசல் பொறுக்கி பேசவுமறியான்.
Said of a mean and stupid person.

1610. ஈசல் இறகு எல்லாவற்றிலும் மிருது.
Said of the wings of the *Easal*.

1611. ஈசல் மடிந்தாற்போல் மடிந்ததே சேனை.
Completely destroyed.

1612. ஈசல் பெரும்போக்கில் தவளை தத்திவிழுந்ததுபோல்.
Frogs praying on *easals*.

1613. ஈசற்புற்றில் கரடி வாய் வைத்தாற்போல்.
Doing a useless thing.

1614. ஈசனுக்கொப்பு இங்கொன்றுமில்லை.
The Diety incomparable.

1615. ஈசனுக்கு ஒப்பு எங்கணுமில்லை.
Similar to above.

1616. ஈசனுடைய அடியார் மனம் எரிந்து புகைந்தாலும் வீண்போகுமா ?
The wrongs of the godly wi'l be avenged

1617. ஈச்சங்கள்ளு எதிலும் குளிர்ச்சி.
The cooling nature of the date palm-toddy.

---

1618. ஈச்சம் முள்ளாலே இருவாயும் தைத்தாலும் தேங்காய்க்கு மஞ்சளில்லை பூவுக்கு மணமில்லை என்கிறான்.
An irrepressible chatter box.

---

1619. ஈச்சம் காட்டில் எருமை குடியிருந்த கதை.
Something unlikely.

---

1620. ஈச்சமுள் கொண்டு இறுக இறுகத்தைத்தாலும் தேற்றிய வசனம் சொல்லாமல் விடான்.
Compare above 49.

---

1621. ஈடன் பாடஞ்சான் கூழையெருது நுளம்புக்கஞ்சாது.
Hardship indifferent to the strong.

---

1622. ஈடாகாதவனை எதிர்க்காதே.
Never oppose your inferior.

---

1623. ஈட்டிய பொருளினும் எழுத்தே உடமை.
Learning better than riches.

---

1624. ஈட்டி எட்டினமட்டும் குத்தும், பணம் பதின்காதமட்டும் குத்தும்.
The power of money.

---

1625. ஈட்டுக்கு ஈடும் சோட்டுக்குச் சோடுமாய் இருந்தால் வாசி.
Nothing like being a match for your foe.

---

1626. ஈட்டுக்கும் பாட்டுக்கும் இருந்தாள் இடு குமரி.
Quite equal to all demands.

---

1627. ஈஸ்வரன் கோவில் திருநாள் ஒருநாள் கந்தாயம்.
Said of a Shiva temple festival.

---

1628. ஈடுள்ள குடிக்குக் கேடில்லை.
A wealthy family free from danger.

---

1629. ஈடு ஜோடு எங்கும் கிடையாது.
Exact pairs nowhere.

---

1630. ஈதல் உடையோனை யாவரும் புகழ்வார்.
Beneficence commended.

---

1631. ஈந்துபார்த்தால் இம்மி வெளியாகும்.
Analysis helps discovery.

---

1632. ஈப்பிசினி இரப்பதுகூடக் கக்ஷிசம்.
Begging even a trifle is despicable.

---

1633. ஈயத்தைக் காய்ச்சலாம் இரும்பைக் காய்ச்சலாமா?
Against classing everything together.

---

1634. ஈயம் பிடித்தவன் எதுசொல்லினும் கேளான்.
One at work will be inattentive to everything else.

---

1635. ஈயாத புல்லனை எவ்விடத்தும் காணோம்.
The niggardly very rare.

---

1636. ஈயாதார் வாழ்ந்தென்ன, இண்டஞ்செடி தழைத்தென்ன?
Condemns niggardliness.

---

1637. ஈயார்தேட்டைத் தீயார்கொள்வர்.
The fate of the niggardly.

---

1638. ஈயார் பொருளுக்குத் தீயார்.
Compare above.

---

1639. ஈயாப்பத்தன் பேராசைகொண்டு பெருக்கத்தவிக்கிறான்.
The miser's cravings.

---

1640. ஈயும் எறும்பும் எங்கும் உண்டு.
The ubiquity of flies and ants.

---

1641. ஈயைப் பிடித்தால் கை வேறு கால் வேறு.
The delicate nature of a fly.

---

1642. ஈயைப்போலே சுத்தமும் எறும்பைப்போலே பலமும்.
An ironical remark.

1643. ஈரச்சீலைபோட்டுக் கழுத்து அறுத்தாள்.
Said of a treacherous woman.

1644. ஈர நாவிற்கு எலும்பு இல்லை.
A slanderous tongue.

1645. ஈரங்காய்ந்தால் பிட்டத்தில் மண் ஒட்டாது.
No moisture—no contact.

1646. ஈரமில்லா நெஞ்சத்தார்க்கு என் செய்து மென்ன?
An ungrateful nature.

1647. ஈரம் அற்ற இடத்திலே ஈ மொய்க்குமா, ஈரம் உள்ள இடத்திலே ஈ மொய்க்குமா?
The attracting power of love.

1648. ஈரவெங்காயத்திற்கு இருபத்துநாலு புரை எடுக்கிறது.
Persecuting the meek.

1649. ஈ வதையைக் கண்டால் யாவரும் அண்டார்.
Nobody likes fly-killing.

1650. ஈனை நினைப்பான் பேனை மறக்கான்.
Inpressive things well remembered,

1651. ஈனைப் பேனாக்கிப் பேனைப் பெருமாள் ஆக்கினாள்.
A women given to exaggerating things.

1652 ஈர்க்கிலியிலே குத்தி இறப்பிலே வைத்தாற்போல.
Torturing one to death.

1653. ஈர் உருவப் பேன் அகப்படுமா?
Meaning one and doing another.

1654. ஈ விஷ்டித்ததும் நாய் திருடித்தின்றதும்.
Something very unlikely.

1655. ஈ விழுந்த சாதம் எடுத்தாலொழியப் போமா?
Contamination must be got rid of.

1656. ஈவோனுக்கு ஒரு போசனம், இரப்போனுக்கு ஏராளம்.
Begger better off than giver.

1657. ஈழத்திற் செக்காட இங்கே பதம் பார்க்க.
Doing things carelessly.

---

1658. ஈனவும் தெரியாது நக்கவும்தெரியாது.
Said of a barren beast.

---

1659. ஈனனை அடுத்தால் மானம் அழியும்.
Condemns intimacy with the base.

---

1660. ஈன்றவள் தாய் பாட்டி, இவள் தாயின் தாய் பீட்டி.
Grandmother and great-grandmother.

---

1661. ஈன்றோர் நஞ்சிற் சான்றோர் இல்லை.
Indulgence in the parents not good for the child.

---

## உ.

1662. உகமுடிய மழைபெய்தாலும் ஓட்டாங்கிளிஞ்சில் பயிர்ஆகுமா?
Everything must agree.

---

1663. உகிர்ச்சுற்றின்மேல் அம்மி விழுந்ததுபோல்.
Calamity in calamity.

---

1664. உங்களப்பன் செத்தான் பழி உன்னை விடேன்.
The son responsible for his father's guilt.

---

1665. உங்களப்பன் பூச்சிக்குப் பயப்பட்டேடு உன் பூச்சிக்குப் பயப்பட.
Son not greater than father.

---

1666. உங்கள் வீட்டுப்பணங்கட்டை ஒற்றைப்பணத்தை முடிந்து கொண்டு கிடக்குமோ?
A low fellow boasting of his copper coin.

---

1667. உங்கள் உறவிலே வேகிறது ஒருகட்டு விறகிலே வேகும்.
One suffering in the midst of one's relatives.

---

1668. உங்கள் பெண்டுகள் கொண்டல் அடித்தால் கண்கள் கொள்ளாது.
A sarcastic remark.

---

1669. உங்களைக்கடலிலே கைகழுவினேன்.
Got rid of you entirely.

---

1670. உசு பிடியென்றால் நீ பிடி என்கிறதாம் நாய்.
Wilful disobedience.

---

1671. உச்சந்தலையிலே செருப்பாலடித்ததுபோல.
So disagreeable.

---

1672. உச்சந்தலையிற் செருப்பால் அடித்தாலும் உச்சி குளிருமா ?
Good effects never produced by bad acts.

---

1673. உடமைக்காரனுடன் உண்டா ஓர் நாட்டியம் ?
The owner attends to his property.

---

1674. உடமையுங்கொடுத்து அருமையும் குலைகிறது.
How lenders suffer.

---

1675. உடம்பு எல்லாம் புழுத்தவன் அம்மன் கோவிலைக் கெடுத்த கதை.
Polluting a temple.

---

1676. உடம்புளைந்த கழுதை உப்புக்களத்திற்குபோனதுபோல்.
To scratch itself with salt.

---

1677. உடம்பு எடுத்தவன் எல்லாம் ஓடு எடுத்தான்.
Every mortal has begged in his life.

---

1678. உடம்புதேற்றிக்கொண்டு அல்லவா யோகத்தில் போகவேண்டும்.
Proper season even for religious deeds.

---

1679. உடல் உள்ளவனுக்குக் கடல்கொள்ளாத கவலை.
Human cares and anxieties.

---

1680. உடம்போடே ஒரு நாட்டியம் உண்டா?
No sporting with the body.

1681 உடம்பு எங்கும் சுடுகிறதழலை மடியிலே கட்டுகிறாய்.
Against intimacy with the ungodly.

1682. உடம்பு முழுதும் நனைந்தவனுக்குக் கூதல் என்ன?
Those already in misfortune do not care for a trifling trouble.

1683. உடம்பு போனாலும் போகிறது கையைவிட்டாற்போதும்.
Liberty preferred to suffering.

1684. உடலுக்குள்ளே நாக்கை வளைக்கிறே.
A bad sign.

1685. உடலும் நிழலும்போல.
Inseparable companions.

1686. உடலுக்கோ பால்வார்த்து உண்பது, ஊருக்கோ பால்வார்த்துண்பது.
Self-nourishment urged.

1687. உடல் உள்ளளவைக்கும் கடல் கொள்ளாத கவலை.
Life's endless cares.

1688. உடல் ஒருவனுக்குப்பிறந்தது நா பலருக்குப்பிறந்தது.
Language learned from many sources.

1689. உடல் இரண்டு உயிர் ஒன்று.
Said of very great intimacy.

1690. உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா.
Property and poverty ever changing.

1691. உடைமையுங்கொடுத்து அருமையும் குலைகிறதா?
Lend your money and lose your esteem.

1692. உடன்பிறப்பு இல்லா உடம்பு பாழ்.
Brothers and sisters indispensable.

1693. உடாப்புடவை பூச்சிக்கு இரை.
Disuse is destructive.

1694. உடுக்கைக்கிடை இருந்தால் ஓசையுண்டு, உரலுக்கிடை இருந்து உதவி என்ன?
The same quality affects different things differently.

1695. உடுத்தசீலை பாம்பாய்க் கடித்தது
Danger under the guise of protection.

1696. உடுத்திக் கெட்டான் வெள்ளைக்காரன், உண்டு கெட்டான் சோனகன், புதைத்துக்கெட்டான் தமிழன்.
Tamil opinion of Europeans, Mahomedans and Natives.

1697. உடும்புக்கு இரண்டு நாக்கு மனிதனுக்கு ஒருநாக்கு.
Men are made to speak the truth.

1698. உடும்புக்கு இரண்டு நாக்கு உனக்கும் இரண்டு நாக்கா?
Compare preceding proverb.

1699. உடும்பும்பே ஒண்டிக்குப்போ.
A joke—with a Telugu word.

1700. உடைந்த சங்கு ஊத்துப்பறியுமா?
Something imperfect cannot fulfil its function.

1701. உடைமுள் நெருக்க எதிரே உதைக்கலாமா?
Cf. "Kick against the pricks."

1702. உடைமை என்பது கல்வியுடைமை.
Learning the true wealth.

1703. உடையவனிற் கைப்பற்றினவன் மிடுக்கன்.
Usurper boasts more than owner.

1704. உடையவன் இல்லாச்சேலை ஒருமுழம் கட்டை.
A thing without its owner is soon destroyed.

1705. உடையவன் சொற்படி உரலைச்சுற்றிக் களைபறி.
Owner's word is law.

1706. உடையவன் சொற்படி கமுகடி களைபறி.
Similar to above.

1707. உடையவன் பாராப் பயிர் உருப்படுமோ?
We must look to our own things.

1708. உடையார்வீட்டுமோருக்கு அகப்பைக் கணக்கு என்ன ?
Owners can afford to be liberal.

1709. உட்கார்ந்தல்லவோ படுக்கவேண்டும் ?
Nothing can be accomplished by leaps and bounds.

1710. உட்கார்ந்தவனைக் கட்ட மாட்டாதவன் ஓடுகிறவனைக்கட்டு [வானா ?
Stupid in small things—stupid in great.

1711. உட்சுவர் இருக்கப் புறச்சுவர் பூசலாமா ?
Internal purity more necessary than external.

1712 உட்சுவர் தீற்றிப் புறச்சுவர் தீற்று.
Similar to the above.

1713. உட்புறத்துக்கு வெளிப்புறம் கண்ணாடி.
The face is the mirror of the heart.

1714. உணர்வில்லாக் கருவியும் உப்பில்லாச்சோறும் சரி.
Compare—eating eggs without salt.

1715. உண் உண் என்று உபசரியாதான் வாசலில் உண்ணாமையிருப்பது கோடிபெறும்.
Avoid an inhospitable house.

1716. உண்கிற சோற்றிலே நஞ்சைக் கலக்கிறதா ?
Against mixing evil with good.

1717. உண்கிற சோறு வெல்லம்.
Present enjoyment is sweet.

1718. உண்கிற வயிற்றை ஒளிக்கிறதா ?
Great wants must be satisfied.

1719. உண்டகளை தொண்டருக்கும் உண்டு.
Eating, however slight, is fatiguing.

1720. உண்ட உடம்பிற்கு உறுதி, உழுத புலத்தில் நெல்லு.
Eating compared to ploughing.

1721. உண்ட உடம்பு உருகும் தின்றபாக்குச் சிவக்கும்.
Recommends gratitude.

1722. உண்ட சுற்றம் உருகும்.
Similar to above.

1723 உண்ட சோற்றுக்கு இரண்டகம் பண்ணுகிறதா?
Condemns ingratitude.

1724. உண்டதுதானே ஏப்பம் வரும்.
"Out of the abundance of the heart the mouth speaketh."

1725. உண்ட பிள்ளை உரஞ்செய்யும்.
Feeding necessary to the growth of children.

1726. உண்ட வயிற்றுக்கு உபசாரமா?
No reward for doing one's duty.

1727. உண்டவயிற்றுக்குச்சோறும் மொட்டந்தலைக்கு எண்ணெயும்.
Supply and want go together.

1728. உண்டவன் உரஞ்செய்வான்.
Compare above 1725.

1729. உண்டவீட்டுக்கு இரண்டகம் பண்ணலாமா?
Compare above 1723.

1730. உண்டார் மேனி கண்டால் தெரியும்.
Good feeding gives a good appearance.

1731. உண்டாலும் உறுதிப்பட உண்ணவேண்டும்.
Recommends nourishing food.

1732 உண்டால் கொல்லுமோ கண்டால் கொல்லுமோ?
Mere sight is harmless.

1733. உண்டால் தின்றால் உறவில்லை காரியமென்ன?
There is a limit to intercourse.

1734. உண்டால் தின்றால் உறவு, கொண்டால் கொடுத்தால் உறவு.
Defines true relationship.

1735. உண்டால் தீருமோ பசி, கண்டால் தீருமோ பசி?
Compare above 1732.

1736. உண்டாற் கொல்லும் விஷம்.
When poison is fatal.

1737. உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு.
Native idea of feminine grace.

1738. உண்டு உறியில் இரு என்றால் உருண்டு தரையில் விழுகிறாய்.
Do not turn luxury into license.

1739. உண்டு கொழுத்தால் நண்டு வளையில் இருக்குமா?
Effect of exessive eating.

1740. உண்டு தின்று உயரம் ஆனால் ஊரிலே காரியம் என்ன?
Compare above 1733.

1741. உண்டுதின்று உள்ளே இருவென்றால் உயர எழும்பி என் குதிக்கிறாய்?
Compare above 1738.

1742. உண்டு ருசிகண்டவனும் பெண்டு ருசிகண்டவனும் விடான்.
Sensual pleasures difficult to give up

1743. உண்டைபட்டு உறங்குகிற குருவிபோல.
As if shot dead.

1714. உண்ண வா என்றால் குத்த வருகிறாய்.
Doing evil for good.

1715. உண்ணக் கை சலித்து இருக்கிறான்.
Is not inclined to eat.

1746. உண்ணதும் தின்னதும் லாபம் பணியில் கிடந்தது லோபம்
Some things are profitable, others unprofitable

1747. உண்ணாக்கை அறுத்துச் சுண்ணாம்புக் குறியிடுவேன்.
Curbing one's conceit.

1748. உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும்.
What is not enjoyed will perish.

1749. உண்ணாமல் ஊர் எல்லாம் திரியலாம், உடுக்காமல் ஒருவீட்டுக்கும் போகலாகாது.
Raiment more becoming than food.

1750. உண்ணாமல் தின்னாமல் உறமுறையாருக்கு ஈயாமல்.
A miser's life.

1751. உண்ணாமல் தின்னாமல் ஊர் அம்பலமானேனே.
I have neither enjoyed nor preserved my property.

1752. உண்ணுமல் ஒன்பது வீடுபோகலாம், உடுக்காமல் ஒரு வீடும் போகல் ஆகாது.
Compare above 1749.

1753. உண்ணும் சோறையிலே நண்ணும் புல்லுருவி.
Even food not free from injurious elements.

1754. உண்பது இருக்க ஒரு கருமம் செய்யேல்.
Eat before you act.

1755. உண்பது நாழி உடுப்பது நான்குமுழம், எண்பது கோடி நினைந்தெண்ணும் மனம்.
Mind far more active than body.

1756. உண்பான் தின்பான் சிவப்பிராமணன், குத்துக்கு நிற்பான் வீரமுஷ்டி.
Making one suffer for another's guilt.

1757. உண்பான் தின்பான் சேப்பெருமான் குத்துக்கு நிற்பான் வைராகி.
Similar to preceding.

1758. உண்பான் தின்பான் நயினப்பசெட்டி உடன்கட்டை ஏறுவான் பெருமாள் செட்டி.
Similar to preceding.

1759. உண்பானைப் பார்த்தாலும் உழுவானைப் பார்க்கல் ஆகாது.
Field labourers not to be envied.

1760. உண்மை சொல்லிக் கெட்டாரும் பொய்சொல்லி வாழ்ந்தாரும் இல்லை.
Different efects of truth and falsehood.

1761. உண்மை சொன்னால் உண்மை பலிக்கும் நன்மை சொன்னால் நன்மை பலிக்கும்.
Praises truth and goodness.

1762. உண்மை நன்மொழி, திண்மை உறுத்தும்.
Truth will triumph.

1763. உதடுபழுத்தொரிய உள்ளே நெஞ்செரிய.
Exposes hypocrisy.

1764. உதடு மன்றாடப்போய் உள்ளிருந்த பல்லும் போனாற்போல.
He went to plead but lost his teeth.

---

1765. உதட்டிலே உறவும் உள்ளே பகையும்.
Compare above.

---

1766. உதட்டிலே புண் ஆனால் பால் கறக்காதா?
The folly of a lame excuse.

---

1767. உதட்டிலே வாழைப்பழம் உள்ளே தள்ளவேண்டுமோ?
Force not necessary for an agreeable deed.

---

[ஆகாது.
1768. உதட்டுக்கு மிஞ்சின பல்லும் திருட்டுக்கு மிஞ்சின கையும்
The offending tooth and hand.

---

1769. உதட்டுத் துரும்பு ஊதப்போகாது.
Trifling defects not easily got rid of.

---

1770. உதர நிமித்தம் வெகு கிர்தவேஷம்.
Putting on a cloak for the belly's sake.

---

1771. உதவாத செட்டிக்குச் சீட்டு எழுதினதுபோல.
A useless effort.

---

1772. உதவாப்பழங்கலமே, ஓசை இல்லாவெண்கலமே!
Said of a useless person.

---

1773. உதவி செய்வாருக்கு இடையூறு ஏது?
Where there is a will there is a way.

---

1774. உதறுகாலிவந்தாள் உள்ளதும் கெடுத்தாள்.
Said of an unfortunate woman.

---

1775. உதறுகாலிமுண்டை உதறிப்போட்டாள்.
Similar to preceding.

---

1776. உதாரிக்குப் பொன் துரும்பு.
Nothing precious to a spendthrift.

---

[போல்.
1777. உதிக்கின்ற கதிரோன் முன்னே, ஒளிக்கும் மின் மினியைப்
Vanishing in a moment.

---

1778. உதிரத்துக்கு அல்லவோ உருக்கம் இருக்கும்?
"Blood is thicker than water."

---

1779. உதைத்தகால் புழுக்கிறபோது அல்லவோ புழுக்கும்?
Revenge sure to follow in due time.

1780. உதைத்தகால் கால் புழுக்கிறதற்கு முன்னே அடிவயிறு சீழ் கட்டுகிறது.
Coming events cast their shadows before.

1781. உதைப்பானுக்கு வெருப்பான் சாதிவண்ணான்.
A strict master makes a good servant.

1782. உத்தமசேவகன் பெற்றதாய்க்கு அதிகம்.
Value of a faithful servant.

1783. உத்தமனுக்கும் தப்பிலிக்கும் உடன்படிக்கை வேண்டாம்.
The upright and the rogue need no documents.

1784. உத்தமனுக்கு எத்தாலும் கேடு இல்லை.
The upright will never suffer loss.

1785. உத்தராயணம் என்று உறியைக் கட்டிக்கொண்டு சாகிறதா?
Doing a foolish thing with a good intention.

1786. உத்தியோகத்துக்குத் தக்க சுகம்.
Position and comfort go together.

1787. உத்தியோகம் புருஷ லக்ஷணம்.
Work is the glory of manhood.

1788. உத்திராமத்திலே ஒரு பிள்ளையும் ஊர்வாரியில் ஓர் நிலமும்.
A mismanaged farm.

1789. உபகாரத்துக்கு அபகாரம் வருவது துரதிஷ்டம்.
To receive evil for good is a misfortune.

1790. உபசரியாதவீட்டிலே உண்ணாதிருப்பதே கோடி தனம்.
Avoid an inhospitable house.

1791. உபகாரம் செய்தவர்க்கு அபகாரம் பண்ணுகிறதா?
Against base ingratitude.

1792. உபசாரவார்த்தை காசாகுமா, உண்டாலொழியப் பசிதீருமா?
Action better than speech.

1793. உபநயனமில்லாமல் கலியாணம் பண்ணினானாம்.
Against omitting a preliminary process.

1794. உபாயத்தால் ஆகிறது பராக்கிரமத்தால் ஆகுமா?
Discretion is the better part of valour.

---

1795. உப்பளத்து மண்ணும் உழுமண்ணும் செம்மண்ணும் காவேரி மண்ணும் கலந்து வழங்குகிறது.
A heterogeneous mixture.

---

1796. உப்பு இட்டவரை உள்ளளவும் நினை.
Life-long gratitude.

---

1797. உப்பு இருந்த பாண்டமும் உபாயம் இருந்த நெஞ்சமும் தட்டி உடையாமல் தானே உடையும்.
A deceitful hearts will betray itself.

---

1798. உப்பு இருந்தபாண்டமும் உபாயம் இருந்த நெஞ்சும் தப்பாமல் தட்டுண்டு உடையும்.
Similar to above.

---

1799. உப்பு இருந்தால் பருப்பு இராது பருப்பு இருந்தால் உப்பிராது.
Said of some essential want.

---

1800. உப்பு இல்லாப்பண்டம் குப்பையிலே.
The preserving nature of salt.

---

1801. உப்பு எடுத்த கையாலே கர்ப்பூரமும் எடுக்கவேண்டும்.
The same thing may be used for different purposes.

---

1802. உப்புக்கண்டம் பறிகொடுத்த பார்ப்பாத்திபோலவிழிக்கிறாய்.
A shame to divulge one's loss.

---

1803. உப்பு கட்டினால் உலகம் கட்டும்
Salt an essential in the world.

---

1804. உப்புத் தண்ணீர்க்கு இலாமிச்சம்வேர் போடவேண்டுமோ?
It is already sour.

---

1805. உப்புத்தின்றவன் தண்ணீர் குடிப்பான்.
They that are sick need the physician.

---

1806. உப்புநீர் மேகம் சேர்ந்தால் உலகிற் பிரவாகம்.
More rain from sea clouds.

---

1807. உப்பு மிஞ்சினால் உப்புச்சாறு புளிமிஞ்சினால் புளிச்சாறு.
An argument cutting both ways.

---

1808. உப்பு மிஞ்சினால் தண்ணீர், தண்ணீர் மிஞ்சினால் உப்பு.
In any case excess is bad.

1809. உப்புமுதல் கற்பூரம் வரைக்கும் வேண்டும்.
From the least to the greatest.

1810. உப்பும் கற்பூரமும் ஒன்றாய் வழங்குமா ?
Said of things unmixable.

1811. உப்பும் சோறும் உணர்த்தியாய் உண்ணவில்லையோ ?
Refers to good feeling.

1812. உப்புவாணிகன் அறிவானா கர்ப்பூரவிலை ?
Each man knows only his own things.

1813. உப்பைச் சிந்தினையோ துப்பைச் சிந்தினையோ ?
Salt is food.

1814. உப்பைத் தொட்டு உப்பைத் தின்னாதே.
Never eat too much of a good thing.

1815. உப்பைத் தொட்டு உரல் விழுங்குகிறதுபோல.
Doing a foolish thing for the sake of a good thing.

1816. உப்போடே முப்பத்திரண்டும் வேண்டும்.
Salt by itself will not make food.

1817. உப்போடொன்பதும் பருப்போடு பத்தும் வேண்டும்.
Similar to above.

1818. உமக்குஎன்ன, வயதுக்கு நரைத்ததோ மயிருக்கு நரைத்ததோ?
Said of premature grey hairs.

1819. உமியும் கரியும் இருக்கிறது, உடைமைசெய்யப்பொன்னில்லை.
"The one thing needful."

1820. உமியைக் குத்திக் கை சலித்ததுபோல.
A useless and fatiguing work.

1821. உயர உயரப்பறந்தாலும் ஊர்க்குருவி பருந்து ஆகுமா ?
One cannot soar above one's ability.

1822. உயிரிருக்க ஊனை வாங்குகிறது.
Bodily suffering.

1823. உயிரும் உடலும் போல.
So intimate.

1824. உயிருள்ளமட்டும் தைரியம் விடலாமா?
"While there is life there is hope."

1825. உயிரை வைத்திருக்கிறதிலும் செத்தாற் குணம்.
Thus says a wretched man.

1826. உயிரோடு ஒருமுத்தம் தாராதவள் செத்தால் உடன்கட்டை ஏறுவாளா?
Said of a wife's want of affection.

1827. உயிரோடு திரும்பிப் பாராதவர் செத்தால் முத்தம் கொடுப்பாரா?
Similar to above.

1828. உயிர் இருந்தால் உப்புமாறி உண்கலாம்.
Life essential to livelihood.

1829. உயிர்போம்போதும் தைரியம் விடலாகாது.
Compare above.

1830. உரலிலே தலையை மாட்டிக்கொண்டு உலக்கைக்குப் பயப்பட்டால் தீருமா?
No escape after falling into a snare.

1831. உரலிலே துணி கட்டியிருந்தாலும் உரிந்து பார்க்கவேண்டுமென்கிறான்.
Said of a lewd fellow.

1832. உரலில் அகப்பட்டது உலக்கைக்குத் தப்புமா?
Similar to above.

1833. உரலுக்கு ஒரு பக்கம் இடி, மத்தளத்துக்கு இரண்டுபக்கமும் இடி.
Said by one who suffers more than another.

1834. உரலுக்குப் பஞ்சம் உண்டா?
Insensible things have no suffering.

1835. உரலுங்கொடுத்துக் குரலும்போகவேண்டும்.
The troublosomeness of borowers.

1836. உரல் பஞ்சம் அறியுமா ?
Similar to above.

---

1837. உரல்போய் மத்தளத்தோடே முறையிட்டதுபோல.
A sufferer complaining to a greater sufferer.

---

1838. உரியை இரட்டித்தால் ஒழுக்கு.
Something palpable.

---

1839. உரு ஏறத் திரு ஏறும்.
Beauty and fortune go together.

---

1840. உருக்கம் உள்ள சிற்றாத்தை ஒதுக்கில் வாடி கட்டி அழ.
A sarcasm on the step-mother.

---

1841. உருசிகண்ட பூனை உறியைத் தாவுமாம்.
Success encourages the thief.

---

1842. உருட்டப் புரட்ட உள்ளதும் உள்ளுக்கு வாங்கும்.
Mere frightening will not bring out a secret.

---

1843. உருட்டும் புரட்டும் ஒடுக்கும் சிறப்பை.
Frightening is not dignified.

---

1844. உருட்டும் புரட்டும் மிரட்டும் சொல்லும்.
The reverse of above.

---

1845. உருத்திராக்கப் பூனை உபதேசம் பண்ணினதுபோல.
A wicked fellow assuming sacred functions.

---

1846. உருத்திராக்கப் பூனை ஒன்றும் தெரியாததுபோல் இருக்கும்.
A hypocrite pretending ignorance.

---

1847. உருப்படத் திருப்படும்.
Compare above 1839.

---

1848. உருவத்தினால் அல்ல, இன்பப்பேச்சினால் இனி நன்குமதிக்கப்படும்.
Not form but speech.

---

1849. உருவத்தை அல்ல குணத்தைப்பார், பணத்தையல்ல சனத்தைப்பார்.
Character more than beauty, family more than wealth.

---

1850. உருவிய வாளை உறையில் இடாத வீரன்.
Said of a great hero.

1851. உலகத்துக்கு ஞானம் பேய், ஞானத்துக்கு உலகம்பேய்.
Wisdom *versus* the world.

1852. உலகம் பல விதம்.
The ways of the world manifold.

1853. உலகிலே கள்ளனுக்கு ஊரார் யாவரும் பகை.
The fate of a thief.

1854. உலகிலே பெண் என்றால் பேயும் இறங்கும்.
Everybody pities a woman.

1855. உலக்கைப் பூசைக்கு அசையாதவள் திருப்பாட்டுக்கு அசைவாளா?
An incorrigible female.

1856. உலக்கை பெருத்து உத்திரம் ஆயிற்று.
Men for one purpose serve for another.

1857. உலக்கையாலே காதுகுத்தி உரலாலே தக்கை போட்டது போல.
Wearing unwieldy jewels.

1858. உலுத்தன் விருந்திற்கு ஒப்பானது ஒன்றும் இல்லை.
A sarcastic saying.

1859. உலைவாயை மூடினாலும் ஊர்வாயை மூடலாமா?
Dame Rumour irrepressible.

1860. உலைவாய் மெழுகு உருகுவதுபோல.
Melting so easily.

1861. உலோபிக்கு இரு செலவு.
A miser has double expenditure.

1862. உல்லாசநடை மெலுக்குக்கேடு, மினுக்கு எண்ணெய் தலைக்குக்கேடு.
Condemns foppery.

1863. உழக்கிலே கிழக்கு மேற்கா?
Quarreling about trifles.

1864. உழக்கிலே வழக்கு.
Similar to preceding.

---

1865. உழக் குளிர் அடித்தால் நாற்றுப் பிடுங்கப்படாதா ?
One difficulty is no excuse to overcome another.

---

1866. உழக்கு உள்ளூர்க்கு பதக்கு பரதேசிக்கு.
Similar to following.

---

1867. உழக்கு உள்ளூர்க்கும் பதக்குப் பரதேசிக்குமானால் உழுதவனுக்கென்ன ?
Losing everything by foolish distribution.

---

1868. உழக்குநெல்லுக் குழைக்கப்போய் பதக்கு நெல்லில் பன்றி தின்றது.
Seeking a little and losing much.

---

1869. உழக்குமிளகு கொடுப்பான் ஏன், ஒளித்திருந்து மிளகு நீர் குடிப்பான் ஏன் ?
Why betray one-self and suffer afterwards ?

---

1870. உழவிற்கு ஏற்ற கொழு.
Matching each other.

---

1871. உழவுக்கு ஒருசுற்றும்வாராது ஊணுக்குப் பம்பரம்.
More ready to eat than to work.

---

1872. உழவுந்தரிசும் ஒருவிடத்திலே, ஊமையும் செவிடனும் ஒரு மடத்திலே.
Each set in its place.

---

1873. உழவின் மிகுத்த ஊதியம் இல்லை.
Agriculture the greatest wealth.

---

1874. உழவு ஒழிந்த மாடு பட்டிப்புறத்திலே.
Workman neglected when there is no work.

---

1875. உழவு மாடு ஆனால் ஊரிலே விலைப்படாதா ?
A good workman is valued in his village.

---

1876. உழவுக்கு ஒரு சுற்றும் வராது, ஊணுக்கு முன்னே வரும்.
Compare above 1871.

---

1877. உழவுக்குப் பிணைத்துவிடுகிற மாடும், கூட்டுக்குப் பிடித்துவிடுகிற ஆளும் உதவாது.
Forced service not profitable.

1878. உழுகிறவன் கணக்குப்பார்த்தால் உழக்கோலும் மிஞ்சாது.
Agriculture very expensive.

1879. உழுகிறதைவிட்டு நழுவுகிறவன் தெய்வம் ஆடினாற்போல.
Skulking one's work.

1880. உழுகிற நாளில் ஊருக்குப்போய், அறுக்கிற நாளில் அரிவாள் கொண்டுவந்தாற்போல.
A lazy fellow.

1881. உழுகிற நாளில் ஊருக்குப்போனால் அறுக்கிற நாளில் ஆள் தேவையில்லை.
No ploughing—no reaping.

1882. உழுகிறமாடு பரதேசம் போனால், அங்கு ஒருவன் கட்டி உழுவான் இங்கு ஒருவன் கட்டி உழுவான்.
A willing servant in a foreign place.

1883. உழுகிற மாட்டை நுகத்தால் அடித்தாற்போல.
Ill-treating an industrious subordinate.

1884. உழுகிற மாட்டை எருது நக்கினதுபோல.
Distracting one from one's work.

1885. உழுகிறவன் இளப்பமானால் எருது மச்சினமுறை கொண்டாடும்.
Servants take advantage of lenient masters.

1886. உழுத எருதானாலும் ஒருமுடி நாற்றைத் தின்னவொட்டார்.
Muzzling the ox that treadeth the corn.

1887. உழுவானுக்கு ஏற்றகொழு ஊரார்க்கேற்ற தொழு.
Everything in proportion.

1888. உழுதவனுக்கு ஊர்க்கணக்குப்பண்ணைத் தெரியாது.
Each man knows only his own work.

1889. உழுதவன் கணக்குப்பார்த்தால் உழக்கேனும் மிஞ்சாது.
Another form of 1878.

1890. உளவு இல்லாமல் களவு இல்லை.
No spy—no theft.

1891. உளவன் இல்லாமல் ஊர் அழியுமா?
No spy—no ruin.

1892. உளி எத்தனை மலை எத்தனை?
Like David and Goliath.

1893. உளுக்காந்திருக்கச்சே அடித்தால் பொன்னாகும், ஓடச்சே அடித்தால் செம்பானாலுமாகும் இரும்பானாலுமாகும்.
Against bustling about anything.

1894. உலைவழியும், அடைமழையும், பொதி எருதும், ஒருவனுமாய் அலைகிறான்.
A man in a wretched plight.

1895. உள்வீட்டுக்கடனும், உள்ளங்கைச் சிரங்கும் கெட்டது.
Because of their constant worry.

1896. உள்ளதைச்சொன்னால் உடம்பெரிச்சல்.
Truthfulness not always agreeable.

1897. உள்ளபிள்ளை உரலை நக்கிக்கொண்டிருக்க, மற்றொருபிள்ளைக்குத் திருப்பதிக்கு நடக்கிறாள்.
Neglecting what one has and seeking something else.

1898. உள்ளங்கைப் பாற்சோற்றை விட்டுப் புறங்கை நக்கியது போல.
Similar to preceding.

1899. உள்ளதைக்கொண்டு இல்லதைப் பாராட்டலாம்.
Even boasting needs a basis.

1900. உள்ளதைச் சொன்னால் உடம்பெல்லாம் புண்ணாம்.
Compare above 1896.

1901. உள்ளதை விற்று நல்லதைக் கொள்ளு.
Let what you gain be better than what you give.

1902. உள்ளதையும் கெடுத்தான் நொள்ளிக்கண்ணன்.
Said of a one-eyed fellow.

1903. உள்ளக்கருத்து வள்ளலுக்கு தெரியும்.
Divine omniscience.

1904. உள்ளங்கையில் வைகுண்டம் காட்டுகிறேன்.
A great boaster.

1905. உள்ளங்கைப் புண்ணுக்குக் கண்ணாடி ஏன்?
Said of something self-evident.

1906. உள்ளங்கையில் தேனைவைத்துப் புறங்கையை நக்கிறாற்போ[ல.
Compare above 3.

1907. உள்ளானும் கள்ளானுமாய் இருக்கிறான்.
An unreliable character.

1908. உள்ளங்கையில் அஞ்சு கொண்டை முடிக்கிறேன்.
A challenge.

1909. உள்ளங்கையில் நெல்லிக்கனிபோல.
Something unmistakably clear.

1910. உள்ளங்கையில் உரோமமுளைத்ததாயின், அறிவிலான் அட[ங்குவான்,
So improbable.

1911. உள்ளானும் கள்ளானும் கூடினால் விடிகிறமட்டும் திருடலாம்.
The danger of inmates and thieves combining.

1912. உள்ளதைச் சொன்னால் நொள்ளைக்கண்ணிக்கு நோப்பாளம்.
People do not like their defects to be exposed.

1913. உள்ளத்தில் ஒன்றும் குறையாது கள்ளமில்லா மனத்தார்க்கு.
The guileless.

1914. உள்ளவன் பிள்ளை உப்போடு உண்ணும், இல்லாதவன் பிள்ளை சர்க்கரையோடு உண்ணும்.
Different fates of different persons.

1915. உள்ளதுபோகாது இல்லது வாராது.
Tamil idea of creation and annihilation.

1916. உள்ளதைச் சொன்னால் ஊருக்குப் பகை.
Compare above.

1917. உள்ளதும் கெட்டது நொள்ளைக் கண்ணே.
Misfortune upon misfortune.

1918. உள்ளத்தைச்சொல்லி மெலிந்தேன் நொள்ளைக்கண்ணாச்சி, பிச்சைபோடு.
Truth-tellers begging alms.

1919. உள்ளத்தை விற்று உல்லத்தைக்கொள்ளு.
Lose what you have to get something better.

---

1920. உள்ளதையும் கெடுத்தான் கொள்ளிக் கண்ணன்.
The destructive nature of the evil-eyed.

---

1921. உள்ளதைச் சொன்னவன் ஊருக்குப் பொல்லாதவன்.
Compare above 1916.

---

1922. உள்ள மாற்றைக்காட்டும் உரைகல்லும் மெழுகுண்டையும்.
The faithfulness of a touchstone.

---

1923. உள்ளவனிடம் கள்ளன் போனாற்போல.
A most fitting opportunity.

---

1924. உள்ளம் தீயெரிய உதடு பழம் சொரிய.
Downright hypocrisy.

---

1925. உள்ளதெய்வங்களை எல்லாம் ஒருமிக்க வருந்தினாலும் பிள்ளை கொடுக்கிற தெய்வம் புருடன்.
Accidentals *versus* essential.

---

1926. உள்ளாளும் கள்ளாளும் கூட்டமா ?
Similar to above 1923.

---

1927. உள்ளிருந்தார்க்குத் தெரியும் உள்வருத்தம்.
Strangers cannot sympathise with a sufferer.

---

1928. உள்ளிப்பூண்டுக்கு எத்தனை வாசனை கட்டினாலும் துர்க்கந்தத்தையே வீசும்.
Radical qualities unchangeable.

---

1929. உள்ளூறக்கொட்டின தேளே ஒருமந்திரம் சொல்லுகிறேன் கேளே.
Applying a remedy when too late.

---

1930. உள்ளூர் மருமகனும் உழுகிற கடாவும் சரி.
A son-in-law like a plough-ox.

---

1931. உள்ளே பகையும் உதட்டிலே உறவுமா ?
Against lip-friendship, cf. 1924.

---

1932. உள்ளே வயிறெரிய உதடு பழஞ் சொரிய.
Another form of above 1924.

---

1933. உறவிலே நஞ்சு கலக்கிறதா?
Against sowing dissensions among friends.

---

1934. உறவுபோல இருந்து குளவிபோலக் கொட்டுகிறதா?
Feigning friendship and stinging as a wasp.

---

1935. உறவு உறவுதான் பறியிலே கை வைக்காதே.
Frendship *versus* business.

---

1936. உறவுக்கும் பகைக்கும் பொருளே துணை.
Money is the root of *all* evil.

---

1937. உள்ளியர் எளியராயினும் ஊழ்வினைப்பயன் நுழைந்திடும்.
Fate inexorable.

---

1938. உள்ளியிட உள்ளியிட உள்ளேபோச்சுது.
Persistent effort succeeds.

---

1939. உள்ளூரிலே விலைப்படாத மாடா அசலூரிலே விலைப்படும்.
No sale at home—no sale abroad.

---

1940. உள்ளேபகையும் உதட்டிலே உறவும் கள்ளமில்லாமனதுக்கு என்?
Hypocrisy condemned.

---

1941. உள்ளேயார்த்தால் ஒக்காளம் வெளியே பார்த்தால் மேற்பூச்சு.
External *versus* internal.

---

1942. உறவு உண்ணாமல் கெட்டது, உடம்பு உடுக்காமல் கெட்டது.
Importance of feasting and clothing.

---

1943. உறவுதான், பயிரிலே கையை வையாதே.
Compare above 935.

---

1944. உறவுக்கு ஒன்பதுபடி ஊருக்குப்பத்துபடி.
Relations *versus* the village.

---

1945. உறி அற மூளிநாய்க்கு வேட்டை.
Trifles are great things to little people.

---

1946. உறியிலே தயிரிருக்க ஊரெங்கும் வெண்ணெய்க்கலைவானே[ன்?
Being engaged in needless work.

---

1947. உறியிலே வெண்ணெய் இருக்க நெய்க்கு அலைவானேன்?
Exactly similar to preceding.

---

1948. உறிப்பணம்போய்த் தெருச்சண்டையை இழுக்கிறது.
Volunteering to quarrel.

1949. உறுதியானகாரியம் ஒருபோதும் கெடாது?
Well considered work never fails.

1950. உறுதிக்கு உதவாதவன் உற்றவனோ?
The true friend.

1951. உருட்டிக்கு திரட்டி புளிப்புக் கவளப்பன்.
Counterparts of one another.

1952. உருட்டும் புரட்டும் சரட்டையும் கையும்.
A fraudulent character.

1953. உறைமோருக்கிடமில்லாதவீட்டில் விலைமோருக்குப் போனது போல்.
Preferring a request where refusal is certain.

1954. உற்சாகம்செய்தால் மச்சைத்தாண்டுவான்.
Takes advanage of kindness.

1955. உற்றகணவனும் ஒருநெல்லுமுண்டானால் சித்திரம்போல் குடிவாழ்க்கை செய்யலாம்?
Conditions of a happy domestic life.

1956. உற்றசிநேகிதன் உயிர்க்கு அமிர்தம்.
Value of a true friend.

1957. உற்றதுசொன்னால் அற்றதுபொருந்தும்.
Compare above 1921.

1958. உற்றதுசொல்ல ஊரும் அல்ல, நல்லது சொல்ல நாமெல்ல.
One becomes an enemy by truth-speaking.

1959. உற்றுப்பார்க்கையில் சுற்றம் இல்லை.
Relationship tested.

1960. உண்மைப்படு உறுதிப்படு.
Sieze the truth and be strong.

1961. உதறுகால் முண்டை உதறிப் போட்டாள்.
Said of a disagreeable woman.

1962. உற்றுப்பார்த்த பார்வையாலே ஒன்பதுபேர்பட்டுப்போவார்.
So ferocious a look.

1963. உற்றார்தின்றால் புற்றாய்விளையும் ஊரார்தின்றால் பேராய்விளையும்.
A name more coveted than kindness.

1964. உற்றார்க்கு ஒருபிள்ளை கொடான் நமனுக்கு நாலுபிள்ளை கொடுப்பான்.
The niggardly losing his money.

1965. உற்றார் உதவுவரோ அன்னியர் உதவுவரோ?
Relatives *versus* strangers.

1966. உனக்காச்சு எனக்காச்சு ஒருகைபார்க்கவேண்டும்.
A challenge.

1967. உனக்கும் பேபே உன் அப்பனுக்கும் பேபே.
Similar to preceding.

1968. உனக்கு முதுகு வளைகிறதா?
Are you willing to work?

1969. உனக்கு யான் அபயம் எனக்கு நீ உபயம்.
Well counterbalanced.

1970. உன்தாலி அறுக்கச்சே ஒருகூடைத்தாலி ஒருமிக்க அறுக்க வைக்கிறேன்.
Swearing ample revenge.

1971. உன் சமர்த்திலே குண்டு பாயாது.
Despising a boaster.

1972. உன்சொல்லிலே உப்பும் இல்லை புளியும் இல்லை.
Insipid talk.

1973. உன் முறுக்குத்திருக்கு எல்லாம் என் உடுப்புக்குள்ளே.
Compare above.

1974. உன் உபகாரம் என்பிராணனுக்கு வந்தது.
Kindness leading to danger.

1975. உன்னை வஞ்சித்தவனை ஒருபோதும் நம்பாதே.
Never trust one who has deceived you.

1976. உன்னைக் கொடுப்பேனோ சென்னைக்கூனி நீ சுமை சுமந்தல்லோ கூனிப்போனாய்?
A lover's wail.

## ஊ.

1977. ஊக்கமது கைவிடேல்.
Urges perseverance.

1978. ஊக்கம் உடைமை ஆக்கத்திற் கழகு.
Perseverance leads to wealth.

1979. ஊசல் ஆடி, தன்னிலையில் நிற்கும்.
"Water finds its level."

1980. ஊசிக்கண்ணிலே ஆகாயம்பார்த்ததுபோல.
Using means unsuited to the purpose.

1981. ஊசி ஒருமுழத் துணியாவது கொடுக்கும் உற்றார் என்னகொடுப்பார்?
Relations compared with a needle.

1982. ஊசிகொள்ளப்போய்த் துலாக்கணக்குப் பார்த்ததுபோல்?
Making too much of trifles.

1983. ஊசி கோக்கிறதற்கு ஊரில் துழாவாரம் என்?
Why a dispute about trifles?

1984. ஊசிக்குக் கள்ளன் உடனே இருப்பான்.
Useful articles apt to be stolen.

1985. ஊசிக்கு ஊசி எதிரேறிப் பாயுமா?
Attempting things impossible.

1986. ஊசி பொன்னானால் என்ன பெறும்?
Trifles always worthless.

1987. ஊசிபோகிறது கணக்குப்பார்ப்பான் பூசணிக்காய் போகிறது தெரியாது.
Pennywise and pound foolish.

1988. ஊசிபோல மிடறும் தாழிபோலவயிறும்.
Small, and yet given to excessive eating.

1989. ஊசி முனையிலே நிற்கிறான்.
Same as—sitting on needles.

1990. ஊசிமலிவென்று சீமைக்குப்போகலாமா?
Cheapness no excuse for folly.

1991. ஊசிமுனையில் தவம்செய்தாலும் உள்ளதுதான் கிடைக்கும்.
Penance cannot overtake fate.

1992. ஊசியின் காதில் ஒட்டகம் நுழையுமா ?
Evidently a Christian importation.

1993. ஊசியை ஊசிக்காந்தம் இழுக்கும், உத்தமனைச் சிநேகம் இழுக்கும்.
Like draws like.

1994. ஊணன் கருமம் இழந்தான், உலுத்தன் பெயர் இழந்தான்.
The fate of the glutton and the vicious.

1995. ஊணினால் உறவு, பூணினால் அழகு.
Effects of entertainment and ornament.

1996. ஊணினால் புத்தி பூணினால் சாதி.
Other effects of above.

1997. ஊணும் உறக்கமும் ஒத்தாருக்கு ஒத்தபடி.
Food and sleep according to one's liking.

1998. ஊணுக்கு முந்தவேண்டும் கோளுக்குப் பிந்தவேண்டும்.
Be first at a feast but last at slanders.

1999. ஊணும் இல்லை உறக்கமும் இல்லை.
Without food and sleep.

2000. ஊண் அற்றபோதே உறவு அற்றது.
No feast—no friendship.

2001. ஊண் அற்றபோதே உடலற்றது.
No food—no body.

2002. ஊண்பாக்கு ஒழிய வீண்பாக்கு ஆகாது.
Betel-nut to be used only after a meal.

2003. ஊண் ஒடுங்க வீண் ஒடுங்கும்.
No food—no folly.

2004. ஊத அறிந்தவன் வாதி உப்பு அறிந்தவன் யோகி.
The alchemist and the yogi.

2005. ஊதாரிக்குப் பொன்னும் துரும்பு.
Nothing is precious to a spendthrift.

2006. ஊதினால் போம் உறிஞ்சினால் வரும்.
How to loose and gain.

2007 ஊதுகிற சங்கு ஊதினால் விடிகிற பொழுது விடிகிறது.
Recommends a little prompting.

2008. ஊத்தைவாயன் தேட கற்பூர வாயன் தின்ன.
One earns and another enjoys.

2009 ஊத்தைவாயன் தேட, நாற்றவாயன் தின்ன.
Another form of above.

2010. ஊத்தை திரண்டு அச்சாணி ஆகுமா?
Accumulatel dirt useless.

2011. ஊத்தை போகக் குளித்தவனும் இல்லை பசிபோகத் தின்றவனும் இல்லை.
We cannot get rid of dirt and hunger.

2012. ஊத்தை திரண்டு கழுக்காணி ஆச்சுது.
Evil of accumulated filth.

2013. ஊத்தை போனாலும் உள்வினை போகாது.
Dirt may go—but never filth of mind.

2014 ஊத்தைப்பெண் பெற்றபிள்ளை கழுவக்கழுவத் தேயும்.
Fate of a filthy woman's child.

2015. ஊத்தைப் பல்லுக்கு விளாங்காய் சேர்ந்ததுபோல.
Making bad worse.

2016. ஊமை ஊரைக் கெடுக்கும் ஆமை கிணற்றைக் கெடுக்கும்.
The dumb and the tortoise are ruinous.

2017. ஊமை ஊரைக் கெடுக்கும் பெருச்சாளி வீட்டைக் கெடுக்கும்.
Similar to preceding.

2018. ஊமை கண்ட கனாப்போல்.
Unable to express.

2019. ஊமைக்கு உளறுவாயன் உற்பாதபிண்டம்.
Stammerer superior to the dumb.

2020. ஊமைகண்ட கனாப்போல சீமை பட்டணம் ஆகுமா?
Compare above 2018.

2021. ஊமைக்குத் தெத்துவாயன் உயர்ந்த வாய்ச்சாலகன்.
Same as above.

2022. ஊமையன் களவு கண்டதுபோல சிரிக்கிறான்.
Unable to express one's thoughts.

2023. ஊமையன்பாட, சப்பாணி ஆட, செவிடன்கேட்க, குருடன் பார்க்க.
A set of impossibilities.

2024. ஊமையன் பேச்சு பழகின பேருக்குத் தெரியும்.
Habit reconciles one to difficulties.

2025. ஊமையாயிருந்தால் செவிடும் உண்டு.
Dumbness and deafness go together.

2026. ஊமையும் ஊமையும் மூக்கைச் சொறிந்தாற்போல.
Saying something unintelligible.

2027. ஊமையும் அல்ல செவிடும் அல்ல.
Somthing worse.

2028. ஊராரைப் பகைத்து உயிரோடு இருந்தவர் இல்லை.
Against making enemies of all.

2029. ஊரார் கணக்கு உடையவன் பிடரியிலே.
The headman responsible for the villago.

2030. ஊரார் உடைமைக்குப் பேயாய்ப் பறக்கிறான்.
A very covetous disposition.

2031. ஊரார் உடைமைக்கு உலை வைக்கிறான்.
Worse than preceding.

2032. ஊரார் எருமை பால் கறக்கிறது நீயும் ஊட்டுகிறாய் நானும் உண்ணுகிறேன்.
Living upon the village.

2033. ஊரார் பண்டம் உமிபோல, தன்பண்டம் தங்கம்போல.
Very selfish.

2034. ஊரார் உடமைக்கு ஓயாண்டிபோல் திரிவான்.
A very covetons person.

2035. ஊராளுகிறவனுக்குப் பேலப் பிழைக்கடையில்லை.
The headman in want.

---

2036. ஊராரே வாருங்கள் முதுகுநீர் குத்துங்கள்.
Inviting trouble to one-self.

---

2037. ஊரிலே கல்யாணம் மாரிலே சந்தனம்.
Said when there is no connection between two things.

---

2038. ஊரில் ஒருவனே தோழன் ஆரும் அற்றதே தாரம்.
Fate of the lonely.

---

2039. ஊரில் எளியாரை வண்ணான் அறிவான், சாதிப்பொன் பூண்டாரைத் தட்டான் அறிவான்.
The dhoby and the goldsmith know the state of the village.

---

2040. ஊரிலே தாயோழி என்றால் பேரிலே காலும் பாதியும்.
The abusive will be punished.

---

2041. ஊரின் இலக்காரம் வண்ணானுக்குத் தெரியும்.
Compare above 2039.

---

2042. ஊருக்கொருதேவடியாள் ஆருக்கென்று ஆடுவாள்.
One having too many obligations.

---

2043. ஊருகிற அட்டைக்குக் காலெத்தனை யென்றறிவான்.
Engaged in trifles.

---

2044. ஊருக்கெல்லாம் ஒருவழி உனக்கு ஒருவழியா ?
Said of an eccentric person.

---

2045. ஊருக்குப்பால்வார்த்து உண்கிறாயா உடம்புக்குபால்வார்த்து உண்கிறாயா ?
Attend to yourself.

---

2046. ஊருக்கெல்லாம் சாஸ்திரம் சொல்லுகிறபல்லி கூழ்ப்பானையில் விழுந்தாற்போல்.
Conduct contrary to teaching.

---

2047. ஊருக்காகாது வீட்டுக்கும் ஆகாது.
One law for town and house.

---

2048. ஊருக்காகாதவன் வீட்டுக்கும் ஆகான்.
Similar to preceding.

---

2049. ஊருக்கு ஆகாதபிள்ளை தாய்க்கும் ஆகான்.
A wicked son.

---

2050. ஊருக்கு ஓமல் வீட்டுக்கு வயிற்றெரிச்சல்.
Private life *versus* public life.

---

2051. ஊருக்குப்பெரும் உறவின்முறைக்குப் பொல்லாப்பும்.
Similar to preceding.

---

2052. ஊருக்குப்போனவர் சேதி ஸ்வாமிக்குத் தெரியும்.
Said of an absent person not heard of.

---

2053. ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார்கோயில் ஆண்டி.
Taking advatage of a willing servant.

---

2054. ஊருடன் கூடிவாழ்.
Live in peace with all.

---

2055. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.
The evil of a quarrelsome spirit.

---

2056. ஊரெங்கும் சம்பை என்பேரோ, வம்பை.
Complaint of a disappointed person.

---

2057. ஊரெல்லாம் சுத்தி எனக்கென்ன புத்தி என்பேர் முத்தி.
A sarcastic remark.

---

2058. ஊரெங்கும்பேர் வீடெபட்டினி.
Compare above 2050.

---

2059. ஊரெல்லாம் வாழ்கிறதென்று வீடெல்லாம் அழுதுபுரண்டால் வருமா ?
Mere envy is of no use.

---

2060. ஊரெல்லாம் உற்றார் அந்திபட்டால் பொதிச் சந்தியிலே.
Famous but forsaken.

---

2061. ஊரென்று இருந்தால் சேரியும் இருக்கும்.
Village and *cheri* inseparable.

---

2062. ஊரை உழக்கால் அளக்கிறாள் நாட்டை நாழியாலளக்கிறாள்.
Said of a termagant.

---

2063. ஊரைவாய்மூட உலைமூடி இல்லை.
Dame Rumour irrepressible.

---

2064. ஊரைப் பார்க்கச்சொன்னால் சேரியைப் பார்க்கிறான்.
Neglecting higher for lower objects.

---

2065. ஊரைப் பிடித்த சனி பிள்ளையாரையும் பிடித்தது.
Even gods cannot escape a general calamity.

---

2066. ஊரை வளைத்தாலும் உற்ற துணை இல்லை, நாட்டை வளைத்தாலும் நல்ல துணை இல்லை.
No reliable help.

---

2067. ஊரைச் சொன்னாலும் பேரைச் சொல்லாதே.
Recommends secrecy.

---

2068. ஊர் அறிந்த பார்ப்பான்.
A well known Brahmin.

---

2069. ஊர்மெச்ச நடவாமல் உடன் மெச்ச நடக்கிறவனைப்போல.
Seek the approval of your consciene.

---

2070. ஊர் ஓடச்சே ஒக்க ஓடவேண்டும்.
Similar to preceding 2054.

---

2071. ஊர் ஓட ஒக்க ஓடு, நாடோட நடுவே ஓடு.
Compare above.

---

2072. ஊர் ஆளுகிறவன் பெண்டு பிடித்தால் ஆருடன் சொல்லி முறையிடுகிறது?
Hard to accuse those in authority.

---

2073. ஊர் இருக்கிறது ஓடு இருக்கிறது.
A beggar's confidence.

---

2074. ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்.
He will get double performances.

---

2075. ஊர் இளக்காரம் வண்ணானுக்குத் தெரியும்.
Compare above 2041.

---

2076. ஊர் உண்டு பிச்சைக்கு, குளம் உண்டு தண்ணீருக்கு.
Similar to above 2073.

---

2077. ஊர் ஓரத்திற் கொல்லை உழுதவனுக்குப் பயிர் இல்லை.
Folly of cultivating close to the village.

---

2078. ஊர் கூடிச் செக்குத் தள்ளினாற்போல.
Wasting too much energy on a trifle.

---

2079. ஊர்க்குருவிமேல் ராமபாணம் தொடுக்கிறதா?
Similar to preceding.

---

2080. ஊர்க்கோழியும் நாட்டுக்கோழியும் கூடில் உரலிலுள்ள புழுங்கல் அரிசிக்குச் சேதம்.
Two robbers can steal a great deal.

---

2081. ஊர் நஷ்டம் ஊரிலே தேர் நஷ்டம் தெருவிலே.
Different person suffer differently.

---

2082. ஊர் நல்லதோ வாய் நல்லதோ?
Inhabitants give the character to a village.

---

2083. ஊர்ப்பிள்ளையை முத்தமிட்டால், உதட்டுக்குக் கேடு.
A strange child not like ones' own child.

---

2084. ஊர்வாயைப் படலிட்டு மூடலாமா?
Compare above 2063.

---

2085. ஊர் வாழ்ந்தால் ஓட்டுப்பிச்சைக்கும் வழி இருக்கும்.
Prosperity of the village essential.

---

2086. ஊர் ஆளுகிற துரைக்குப் பேலப் புறக்கடை இல்லையாம்.
Compare above 2035.

---

2087. ஊர்உண்டாகியல்லோ கிழக்கு மேற்கு உண்டாகவேணும்.
Everything step by step.

---

2088. ஊழிக்காய்ச்சல் அதிகம் ஆனால் சூனியக்காரன் கொள்ளை.
One's extremity another's opportunity.

---

2089. ஊழி பேரினும் ஊக்கமது கைவிடேல்.
Commends perseverance.

---

2090. ஊழி பெயரினும் கலங்கார் உரவோர்.
The strong-minded never lose courage.

---

2091. ஊழிற் பெருவலி ஒன்று உண்டோ ?
No force equal to fate.

---

2092. ஊழும் உற்சாகமும் ஒத்துக்கொள்ளவேண்டும்.
Fate and effort must combine.

---

2093. ஊறச்சே துடைக்கவேண்டும்.
A good advice.

---

2094. ஊருக்கிணறு, உறங்காப்புலி, தீராவழக்கு, திருக்கண்ண மங்கை.
Certain disagreeable things.

---

2095. ஊறுகாயைக் கடித்துக்கொண்டு ஒரு பானைச்சோற்றை என்னதல்ல.
Usurping another's property.

---

2096. ஊனமில்லான் மானமில்லான்.
No food no honor.

---

2097. ஊன்றக் கொடுத்த தடி என் உச்சியை உடைக்கிறது.
Base ingratitude.

---

2098. ஊன் அற்றபோதே உளமற்றது
Food essential.

---

## எ.

2099. எக்குப் புடவை சேர்ந்தால் கைக்குண்டோ உபசாரம்.
Assistance must be prompt,

---

2100. எங்கள் வீட்டுக்கு வந்தால் என்ன கொண்டுவருகிறாய், உங்கள் வீட்டுக்கு வந்தால் என்னதருகிறாய்.
Not under obligation to another.

2101. எங்களால் ஒன்றும் இல்லை எல்லாம் உங்கள் கர்மம்.
The converse of the above.

2102. எங்கும்மடமாய் இருக்கிறது இருக்கத்தான் இடம் இல்லை.
Want in the midst cf plenty.

2103. எங்கே அடித்தாலும் நாய்காலைத்தூக்கும்.
Certain habits are never given up.

2104. எங்கே அடித்தாலும் நாய்க்குக் காலிலே முடம்.
Another form of preceding.

2105. எங்கே புகை உண்டோ அங்கே நெருப்பும் உண்டு.
Cause and effect.

2106. எங்கும் சிதம்பரம் பொங்கி வழிகிறது.
A feast day.

2107. எச்சிலைத்தின்று எப்பம் இட்டாற்போல
Satisfied with shabby things.

2108. எச்சிலைத்தின்று பசிதீருமா ?
Means must be adequate.

2109. எச்சிற்கலைக்கு மண்ணாங்கட்டி ஆதரவு மண்ணாங்கட்டிற்கு எச்சிற்கலை ஆதரவு.
Mutual help.

2110. எச்சில் இறக்க அடிக்கும், பற்று பறக்க அடிக்கும்.
A superstitious saying.

2111. எச்சிலைக்குடித்தால் தாகந்தீருமா ?
Compare above 2108.

2112. எச்சிற்கலைக்கு இச்சகம்பேசுகிறது.
Cringing and flattering.

2113. எச்சிற்கலைக்கு இதம்பாடுகிறது.
Similar to preceding.

2114. எச்சிற்கையால் காக்கை ஓட்டாதவன் பிச்சைகொடுப்பானு?
A niggardly fellow.

2115. எச்சிற்கையால் காக்கை ஓட்டமாட்டான்.
Same as preceding.

2116. எச்சில் எடுக்கச்சொன்னுர்களா எத்தனைபேர் சாப்பிட்டதெ ன்று கணக்கு கேட்கச்சொன்னுர்களா?
Against inquisitiveness.

2117. எச்சில் எடுக்கச்சொன்னுர்களா எத்தனைபேர் சாப்பிட்டதெ ன்று எண்ணச்சொன்னுர்களா?
Another form of above.

2118. எச்சில்தின்ருலும் வயிறுநிறையத்தின்னவேண்டும் எச்சுக்கேட் டாலும் பொழுதுவிடிகிறமட்டும் கேட்கவேண்டும்.
Against doing half-work.

2119. எச்சிலைக்கு நாய் அடித்துக்கொண்டு நிற்கிறதுபோல.
So greedy.

2120. எச்சிலைக்கழுவி உன்சுத்தத்திலேவார்.
Sneering at pretended cleanliness.

2121. எடுக்குமுன்னம் கழுதை இடுப்பு ஒடிந்து விழுந்ததாம்.
A bad beginning.

2122. எடுக்கப்போன மொட்டி இடுப்பு ஒடிந்து வீழ்ந்தாளாம்.
Same as above.

2123. எடுக்கிறது எருதுமாட்டுச்சுமை படுக்கிறதுபஞ்சணைமெத்தை
Difference between work done and comfort sought.

2124. எடுக்கிறது வரட்டி நடக்கிறது தங்கக்குமிழ் பாதரட்சை.
Same as above.

2125. எடுத்தாலும் பங்காருப்பெட்டியை எடுக்கவேண்டும் இருந்தா லும் சிங்காரக்கழுவில் இருக்கவேண்டும்.
Whether pain or pleasure it must be great.

2126. எடுத்தசுமை சுமந்தல்லோ இறக்கவேண்டும்.
One's burden ought to be borne.

2127. எடுத்தாளாதபொருள் உதவாது.
Disuse destroys.

2128. எடுத்த அடி மடங்குமா ?
Never stop after starting.

2129. எடுத்துவிட்ட நாய் எத்தனை நாள் குலைக்கும் ?
Proxy work ceases soon.

2130. எடுத்து விட்ட எருது எத்தனைநாள் உழைக்கும் ?
Similar to preceding.

2131. எடுத்தாற்போல தப்பட்டைக்காரன் பட்டான்.
Unconsiously getting into trouble.

2132. எடுத்து விட்ட மாடு எத்தனை தூரம் ஓடும்.
Similar to above.

2133. எடுப்பது பிச்சை ஏறுவது பல்லக்கு.
Want and show in the same person.

2134. எடுப்பார் கைக் குழந்தை.
A heepless soul.

2135. எடுப்பாரும் பிடிப்பாரும் உண்டானால் கும்பி களைத்தாற்போல [இருப்பாள்.
Luxury is enervating.

2136. எடுப்பாரைக் கண்டால் குடம் கூத்தாடும்,
Rejoicing at the site of help.

2137. எடுப்பார் மழுவைத் தடுப்பார் புலியைக் கொடுப்பார் அருமை.
Will do every thing except giving.

2138. எடுப்புண்ட கலப்பை இருந்து உழுமா ?
Once rejected always rejected.

2139. எட்டு வருஷத்து எருமைக்கடா ஏரிக்குப் போக வழி தேடும்.
Said of a stupid person.

2140. எட்டு மிரண்டும் தெரியா நரத்தை.
An ignorant fellow.

2141. எட்டுக் கிழவரும் ஒரு மொட்டைக்கிழவியைக் கட்டிக்கொ[ண்டார்கள்.
An improper match.

2142. எட்டுக் குஞ்சு அடித்தாலும் சட்டிக்கறி ஆகாது.
Many little things do not make much.

2143. எட்டுச் சிந்தாந்திரை ஒரு தட்டுக்கு ஒக்கும்.
Similar to preceding.

2144. எட்டுச் செவ்வாய் எண்ணித்தலை முழுகில் தப்பாமல் தலை போம்.
Bathing on Tuesday condemned.

2145. எட்டாப் பூ தேவர்க்கு எட்டும் பூ தங்களுக்கு.
Religion made a matter of convenience.

2146. எட்டாம்பேறு பெண்பிறந்தால் எட்டிப்பார்த்தவீடு குட்டிச்சுவர்.
The eighth must not be a girl.

2147. எட்டாப் கனியைப் பார்த்துக் இச்சித் தென்னபலன்.
Longing for things inaccessible.

2148. எட்டிக் குட்டி ஓறக்கிக் காலைப் பிடித்துக்கொள்ளுகிறது.
Thoroughly overmastering a foe.

2149. எட்டி பழுத்து என்ன, ஈயாதார் வாழ்ந்து என்ன ?
Uselessness of a miserly life.

2150. எட்டிமரமானாலும் பச்சென்று இருக்கவேண்டும்.
Freshness agreeable in anybody.

2151. எட்டிப்பார்த்தாற்போல் கொட்டிக் கொண்டு போகிறான்.
Stealing on the sly.

2152. எட்டினமட்டும் வெட்டும் கத்தி எட்டாதமட்டும் வெட்டும் [பணம்.
Sword *versus* money.

2153. எட்டிக்குப் பால்வார்த்து வளர்த்தாலும் தித்திப்பு உண்டாகிறது.
" Can the leopard change its spots " ?

2154. எட்டியிலே கட்டுமாம்பழம் உண்ணலாமோ?
" Can the thistle bring forth figs " ?

2155. எட்டியுடனே சேர்ந்த இலவும் தீப்பட்டது.
Bad company injurious.

2156. எட்டினால் குடுமியைப்பிடி எட்டாவிட்டால் காலைப்பிடி.
Either fight or yield.

2157. எட்டி எட்டிப் பார்த்துக் குட்டிச்சுவரிலே முட்டிக்கொள்ளலாமா?
Dont be discouraged by constant disappointments.

2158. எட்டி எட்டிப் பார்ப்பாரும் எணிவைத்துப் பார்ப்பாரும் குட்டிச்சுவராலே குனிந்து நின்று பார்ப்பாரும் உண்டு.
Differents kinds of inquisitive persons.

2159. எட்டிமரமானாலும் வைத்தவர்க்குப் பக்ஷம்.
A parent is never tired of even a bad child.

2160. எட்டிப்பழத்தை இச்சிக்கிறதா?
Against desiring disagreeable things.

2161. எண்ணெழுத்திகழேல்.
Despise not learing.

2162. எண்சாண் உடம்பும் ஒரு சாணானேன்.
Said by one who is greatly reduced.

2163. எண்சாண் உடம்பிலே எள்ளத்தனை ரத்தம் இல்லை.
Pale ænemic condition of body.

2164. எண்சாண் உடம்பிற்கும் சிரசே பிரதானம்.
The importance of the head.

2165. எண்ணம் எல்லாம் பொய் எமன் ஓலை மெய்.
Uncertainty of everything but death.

2166. எண்ணம் எல்லாம் பொய் எளிதம் மெய்.
The unexpected often happens.

2167. எண்ணறக் கற்று எழுத்தற வாசித்தாலும் பெண் புத்தி பின் புத்தியே.
The frailty of a woman's judgment.

2168. எண்ணைப்பட்ட குதிரை எல்லாம் மண்ணைப் போட்டுக்கொள்ள, தட்டுவாணிக்குதிரை வந்து கொள்ளுக்கு அழுகிறதாம்.
The rightoous suffering and the wicked prospering.

2169. எண்ணம் அற்ற இராசன் பன்றிவேட்டை ஆடினாற்போல்.
Idleness leads to useless pursuits.

2170. எண்ணம் எல்லாம் பொய் எழுதிய எழுத்து மெய்.
Man proposes, God disposes.

2171. எண் இல்லாதவர் கண் இல்லாதவர், எழுத்து இல்லாதவர் கழுத்து இல்லாதவர்.
The importance of learning.

2172. எண்ணிய குடிக்கு ஒரு மின்னிய முடி.
Rewards suited to merit.

2173. எண்ணி முடியாது எட்டில் அடங்காது.
Something incalculable.

2174. எண்ணிச் செய்கிறவன் செட்டி எண்ணாமற் செய்கிறவன் மட்டி.
Precaution recommended.

2175. எண்ணிச் செய்வது செட்டு எண்ணாமற் செய்வது வேளாண்மை.
Chetty *versus* farmer.

2176. எண்ணிய எண்ணம் என்னடி அண்ணா என்று அழைத்த முறை என்னடி?
Be straightforward and don't dissemble.

2177. எண்ணித் துணிவது கருமம், துணிந்தபின் எண்ணுவது இழுக்கு.
Precaution better than penitence.

2178. எண்ணினேன் கோடி இழப்பதறியாமல்.
Reckoned on much but lost all.

179. எண்ணெய்க் குடமும் வெறுங்குடமும் முட்டினால் எதற்குச் சேதம்?
The good suffer by coming into contact with the evil.

180. எண்ணெய் முந்துதோ திரி முந்துதோ?
Said of two things equally essential.

181. எண்ணெய் போக முழுகினாலும் எழுத்துப் போகத் தேய்ப்பார் உண்டா?
Destiny unconquerable.

2182. எண்ணெய்ச் செலவொழிய பிள்ளை பிழைத்தபாடு இல்லை.
An inefficacious remedy.

2183. எண்ணெய்க் குடத்தைச் சுற்றும் எறும்புபோல.
So numerous.

2184. எண்ணெய்க்குடத்திலே பிடுங்கி எடுத்தாற்போல.
So oily.

2185. எண்ணெய்க்குடம் உடைந்தாலும் ஐயோ, தண்ணீர்க்குடம் உடைந்தாலும் ஐயோ.
Loss is loss, whether great or small.

2186. எண்ணெய்ப் பிள்ளையோ வண்ணப் பிள்ளையோ ?
Oil makes the face smooth.

2187. எண்ணெயைத் தேய்க்கலாம் எழுத்தை மறைக்கலாம்.
Compare above 2181.

2188. எண்ணெய்ச்சேதமேயல்லாமல் பிள்ளை பிழைக்காது.
Inefficacious remedies.

2189. எண் மிகுத்தவனே திண் மிகுத்தவனே.
Strong in numbers strong in power.

2190. எதாகுதல் பேசினால் அகப்பைச் சூனியம் வைப்பேன்.
Foolish talk rebuked.

2191. எதார்த்தவாதி வெகு சன விரோதி.
An honest man always unpopular.

2192. எதிரி இளைப்பமானால் கோபம் சண்டப்பிரசண்டம்.
Bullying a weak foe.

2193. எதிரிக்கு இளக்காரமாய்ச் சொல்லுகிறதா ?
Don't yield to your opponent.

2194. எதிரிக்குச் சகுனந் தடை என்றுமூக்கை அறுத்துக்கொள்ளுகிறதா ?
Against yielding to a slight accident.

2195. எதிர்த்த வீடு ஏகாலி வீடு, அடுத்த வீடு அம்பட்டன் வீடு.
Running down one's neighbours.

2196. எதிர்வீடு ஏகாலி வீடு, பக்கத்து வீடு பணிசெய்பவன் வீடு, அடுத்த வீடு அம்பட்டன் வீடு.
Similar to preceding.

2197. எதிர்த்தவர் மார்புக் காணியாயிரு.
Be a firm opponent.

2198. எதிர்த்தவன் ஏழை என்றால் கோபம் சண்டாளம்.
Compare above 2192.

2199. எதிர்த்தும்மல் எடுத்துக் கொடுக்கும்.
There is luck in sneezing.

2200. எதுக்கும் உருகாதவன் இச்சைக் குருவான்.
Love all-powerful.

2201. எது எப்படிப் போனாலும் தன் காரியம் தனக்கு.
Great selfishness.

2202. யதோ ராஜா ததோ பிரஜா.
As ruler, so subject.

2203. எத்தனை வித்தை கற்றாலும் செத்தவனைப் பிழைப்பிக்க அறியான்.
Everything possible except raising to life.

2204. எத்தனைதரம் சொன்னாலும் பறங்கி வெற்றிலை தின்னான்.
Europeans never take to chewing betel.

2205. எத்தனைதான் துலக்கினாலும் பித்தளை நாற்றம் போகுமா?
Natural qualities cannot be got rid of.

2206. எத்தனை புடம் இட்டாலும் இரும்பு பசும்பொன் ஆகுமா?
Substance of things cannot be changed.

2207. எத்தனை ஏழை ஆனாலும் எலுமிச்சங்காய் அத்தனை பொன் இல்லாமற்போமா?
Everybody possesses something.

2208. எத்தாற் பிழைக்கலாம் ஒத்தாற் பிழைக்கலாம்.
A peaceable disposition recommended.

2209. எத்திலே பிள்ளை பெற்று இரவிலே தாலாட்டுகிறது.
Doing things cheaply.

2210. எத்தேச காலமும் வற்றாப் பெருஞ் சமுத்திரம்.
Said of something inexhaustible.

2211. எந்த ஆயுதமும் தீட்டத்தீட்டக் கூர்.
Practice makes perfect.

2212. எந்த இலை உதிர்ந்தாலும் ஈச்சம் இலை உதிராது.
Said of those who seldom suffer.

2213. எந்தப் புற்றிலே எந்தப் பாம்பு இருக்கிறதோ.
Anticipating danger everywhere.

2214. எந்த வாக்குப் பொய்த்தாலும் சந்தைவாக்குப் பொய்யாது.
Because it is so public.

2215. எந்தவித்து விதைத்திடினும் காஞ்சிரங்காய் தெங்காகா.
Compare above.

2216. எந்நேரமும் அவள்பேரில் கண்ணாய் இருக்கிறான்.
His eye is always on her.

2217. எமனுக்கு வழிகாட்டுவான்.
So wicked.

2218. எமன் பிள்ளையைப் பேய் பிடிக்குமா ?
Worse than the devil.

2219. எமன் ஏறுகிற கடாவாயிருந்தாலும் உழுது விழுவான்.
Everything for its use.

2220. எமனையும் நமனையும பல்காரம் பண்ணுவான்.
So clever and vicious.

2221. எய்தவன் இருக்க அம்மை நோவானேன் ?
Blame the agent, not the means.

2222. எய்கிறவன் எய்தால் அம்பு என்ன செய்யும் ?
Similar to preceding.

2223. எரிந்தபசியில் இழந்த மணியைத் தேடப் போனாற்போல.
An impossible task.

2224. எரிகிற கொள்ளியை ஏறத் தள்ளினதுபோல.
Adding fuel to flame.

2225. எரிகிற கொள்ளியில் எந்தக் கொள்ளி நல்லது?
It is all the same.

2226. எரிகிறதைப் பிடுங்கினால் கொதிக்கிறது அடங்கும்.
Effect in proportion to cause.

2227. எரிகிற நெருப்பை எண்ணெய் விட்டு அடக்கலாமா?
Using the wrong means.

2228. எரிகிற நெருப்பிலே நெய் விடலாமா?
Compare above 2224.

2229. எரிகிற வீட்டை அவிக்கக் கிணறு வெட்ட நாள் பார்த்தது போல.
Against procrastination.

2230. எரிகிற வீட்டிற் பிடுங்குகிறது லாபம்.
Taking advantage of one's misfortune.

2231. எருதின் புண்ணிற்குச் சாம்பல் மருந்து.
Remedy according to patient.

2232. எருதுக்கும் தன் புண் அழற்சி காக்கைக்கும் தன்பசி அழற்சி.
Each seeks relief from its own pain.

2233. எருது கொழுத்தால் தொழுவத்தில் இராது, பறையன் கொழுத்தால் பாயில் இரான்.
Good feeding breeds vice.

2234. எருது நோயை நினைக்கும், காக்கை பசியை நினைக்கும்.
Compare above.

2235. எருது நோய் காக்கைக்குத் தெரியுமா?
Oppressor oblivious of his victim's pain.

2236. எருது ஈன்றது என்றால் தோழத்திலே கட்டு என்கிறது.
Treatment according to patient.

2237. எருது கெட்டார்க்கும் எட்டே கடுக்காய், இளம்பிள்ளைத்தாய்ச்சிக்கும் எட்டே கடுக்காய்.
Some cases are alike in treatment.

2238. எருது வாங்குமுன்னே புண்செய்க்கு உழு என்கிறாய்.
In too great hurry,

2239. எருது கூடாவிட்டால் பசு பத்தினி கொண்டாடும்.
Makes a virtue of necessity.

---

2240. எருதுநோய் காக்கை அறியுமா ?
Compare above 2234.

---

2241. எருது ஏழையானால் பசுபத்தினிபுதவம் கொண்டாடும்.
Similar to above.

---

2242. எருதும் எருதும் போராட நடுப் புல்லும் தேய்ந்தாற்போல.
When two quarrel and a third party suffers.

---

2243. எருது நினைத்த இடத்திலே தொழும் கட்டுகிறதா?
Superior not to listen to inferior.

---

2244. எருது கோபங்கொண்டு பரதேசம் போனதுபோல.
A foolish boast.

---

2245. எருது மறைவிற் புல்லுத் தின்கிறாயா ?
When it is impossible to hide something.

---

2246. எருதுக்கு நோய் வந்தால் கொட்டாரையைச் சுடுகிறதா ?
Applying the wrong remedy.

---

2247. எருதும் வண்டியும் ஒத்தால் மேடு பள்ளம் ஏது ?
Harmony helps success.

---

2248. எருமைக்கடா என்றாலும் குழந்தைக்குப் பால் ஒரு பீர் இல்லையா என்கிறாய்.
Seeking where you cannot expect.

---

2249. எருமை வாங்குமுன் நெய் விலை கூறுகிறாய் ?
Counting the chickens before the eggs are batched.

---

2250. எருமைக் கொம்பு நனைக்கிறதற்குள்ளே எழுபது தரம் மழை வருகிறது.
Said of great delay.

---

2251. எருமைக் கோமயம் எக்கியத்திற்கு ஆகுமா ?
A buffalo *versus* a cow.

---

2252. எருமை மாட்டின்மேல் மழை பெய்ததுபோல.
It has no effect.

---

2253. எருமை மாட்டின்மேல் எத்தனை சூடு இருந்தாலும் தெரியாது, பசுமாட்டில் ஒரு சூடு இருந்தாலும் தெரியும்.
Cows more delicate than buffaloes.

---

2254. எருமைச்சாணி ஓமத்திற்காகுமா.
Compare above 2251.

---

2255. எருமை இருந்தல்லோ பால் கறக்கவேண்டும் ?
First catch your hare.

---

2256. எருமையிலும் வெள்ளாடு ஏறக்கறக்குமா ?
Buffalo *versus* a goat.

---

2257. எருவுக்குப் போனவன் இளையாளைக் கைப்பிடித்தாற்போல.
Taking improper advantage of something.

---

2258. எருவுக்குப் போனவன் எலுமிச்சம்பழம் எடுத்ததுபோல.
A lucky find.

---

2259. எலி அம்மணத்தோடே போகின்றது என்கிறான்.
As if it were a rare phenomenon.

---

2260. எலி அழுதால் பூனை விடுமா ?
An oppressor has no pity.

---

2261. எலி அழுது புலம்பினாலும் பூனை பிடித்தது விடாது.
Stronger than preceding.

---

2262. எலி அறுக்கும் தூக்கமாட்டாது.
Limit to one's power.

---

2263. எலி இருக்கிற இடத்தில் பாம்பு இருக்கும்.
Connection between rats and snakes.

---

2264. எலிக்குப் பயந்து வீட்டைச் சுட்டதுபோல.
Doing a greater evil to avoid a lesser.

---

2265. எலிக்குத் திண்டாட்டம் பூனைக்குக் கொண்டாட்டம்.
Pain to one is pleasure to another.

---

2266. எலிக்கு அனுகூலம் பாம்புபிடாரனுக்கு அஞ்சுதல், எளியார்க்கு அனுகூலம் வலியார் இராசனுக்கு அஞ்சுதல்.
Victims safe when oppressors are in trouble.

---

2267. எலிக்கு மணியம் சவரை அறுக்கிறதுதான்.
The business of a rat.

2268. எலி தலையிலே கோடாலி விழுந்ததுபோல்.
Complete destruction.

2269. எலி தலையிற் கோபுரம் இடிந்து விழுந்தாற்போல.
Similar to preceding.

2270. எலி பூனையை வெல்லுமா ?
Of two foes the greater has the advantage.

2271. எலி பூனைக்குச் சலாம் பண்ணுவதுபோல.
The smaller foe greeting the greater.

2272. எலிப்பிழுக்கை இறப்பில் இருந்து என்ன, வரப்பில் இருந்து என்ன ?
Little nuisances may be anywhere.

2273. எலியும் பூனையும்போல் இருக்கிறது.
Always at war.

2274. எலியும் பூனையும் இணைந்து விளையாடினதுபோல.
An improbable occurrence.

2275. எலியைக்கண்டு பூனை எக்கம் அடையுமா ?
A greater foe is not afraid at sight of a smaller.

2276. எலியைக்கண்டு பூனை எங்கி எங்கிக் கிடக்குமோ ?
Similar to preceding.

2277. எலிவளை ஆனாலும் தனிவளை வேண்டும்.
Separate dwelling desirable.

2278. எலி வருத்தம் பூனையறியுமா ?
Compare above 2265.

2279. எலி வீடுகட்டப் பாம்பு குடிகொள்ளும்.
Said of a usurper.

2280. எலி வேட்டையாடத் தவில் வேணுமா ?
An insignificant affair.

2281. எலுமிச்சங்காய்க்குப் புளிப்பு எற்றுகிறதுபோல.
It is already sour.

2282. எலுமிச்சஞ்செடிக்கு எருப்போட்டாற்போல.
A difficult business.

2283. எலும்பு கடிக்கிற நாய்க்குப் பருப்புச்சோறு ஏன்?
Against a change of diet.

2284. எலும்பு கடிக்கிற நாய் இரும்பைக் கடிக்குமா?
One cannot do all things.

2285. எலும்பு இல்லா நா எல்லாம் பேசும்.
The tongue has no bone.

2286. எலி கட்டப் பாம்பு குடிகொள்ள.
One sows and another reaps.

2287. எலியோ பூனையோ சரசரென்கிறது என்னடி சிறுக்கி பயமுறுத்துகிறாய்.
No cause for al rm.

2288. எல்லாம் அறிந்தவனும் இல்லை, ஒன்றும் அறியாதவனும் இல்லை.
Men are neither omniscient nor totally ignorant.

2289. எல்லாம் இருக்கிறது பெட்டியிலே இலைக்கறி கடையச் சட்டி யில்லை.
The most essential thing wanting.

2290. எல்லாத் தலையிலும் எட்டு எழுத்து, பாவி என் தலையிலே பத்து எழுத்து.
I am the greatest wretch of all.

2291. எல்லாருக்கும் சொல்லுமாம் பல்லி, தான்போய்க் காடிப்பானையில் விழுமாம் பல்லி.
Example *versus* precept.

2292. எல்லா மசகமும் சாயந்தரத்திற்றான் வருகிறது.
Evening is the usual time for complaints.

2293. எல்லாருக்கும் சனி துரும்பு போல, எனக்குச் சனி மலை போல.
Compare above 2290.

2294. எல்லாருக்கும் உண்டு இலையும் பழுப்பும்.
Pain and pleasure belong to all.

2295. எல்லாருக்கும் உண்டு ஒவ்வொன்றெளிது.
Everybody has a defect.

2296. எல்லாம் ஏறி இளைத்த குதிரையின்மேல் தம்பி பொற்பட்டம் கட்டிப் புறப்பட்டான்.
Something already worn out is quite useless.

2297. எல்லப்பசெட்டி லக்க ஏக லக்க.
Said of a person who keeps bad accounts.

2298. எல்லாம் சரியென்றெண்ணலாமா ?
Against classing everybody together.

2299. எல்லாரும் பல்லக் கேறினால் பல்லக்கார் தூக்குகிறது.
Different grades of society necessary.

2300. எல்லாரும் பாக்கு இவன் ஒரு தோப்பு.
Said of a self boaster.

2301. எல்லாரும் தடுக்கின்கீழ் நுழைந்தால் அவன் கோலத்தின்கீழ் நுழைவான்.
Said of a very cunning fellow.

2302. எல்லாத்தாட்டோட்டமும் என்குல்லாவுக்குள்ளே இருக்கிறது.
I am well aware of all your tricks.

2303. எல்லா ஓட்டமும் குல்லாவிலே.
All our progress depends on the outrigger.

2304. எல்லாம் மாயை என்கிறதைக் கண்டேன்.
Vanity of vanities.

2305. எல்லாரும் கூடி குல்லாயைத் தந்தார்கள்.
Said by one who has been duped by all.

2306. எல்லாரும் மனிதரா, கல் எல்லாம் மாணிக்கமா ?
All is not gold that glitters.

2307. எல்லா வேலையும் செய்வான், செத்தால் பிழைக்கமாட்டான்.
Limit to human power.

2308. எல்லாரும் கப்பல் ஏறியாயிற்று இனி அம்மானார் பொற்பட்டம் கட்டப்போகிறார்.
Indulging in foolish hopes.

2309. எல்லாரும் ஏறி இளைத்த குதிரையில் சாஸ்திரியார் ஏறிச் சறுக்கி விழுந்தார்.
Said of a learned man's ignorance.

---

2310. எல்லாம் அறிந்தும், கழுநீர்ப்பானையில் கைவிடுகிறதா ?
Compare above 2291.

---

2311. எல்லை பாழ்பட்டாலும் கொல்லைக்கடமை விடார்.
What is due is always due.

---

2312. எவற்றைக்காவாதே போனாலும் நாக்கைக் காக்கவேண்டும்.
Government of the tonguo essential,

---

2313. எவன் ஆகிலும் தான் சாக மருந்து உண்பானா ?
Suicides not natural.

---

2314. எழுத வழங்காத வாழ்க்கை கழுதை புரண்டகளம்.
Condemns an illiterate life.

---

2315. எழுத வாசிக்கத் தெரியாமற் போனாலும் எடுத்துக் கவிழ்க்கத் தெரியும்.
Stupid and yet hypercritical.

---

2316. எழுதாக் கடனுக்கு அழுதால் தீருமா ?
An unwritten debt cannot be claimed.

---

2317. எழுதாப்பொறிக்கு அழுதால் தீருமா ?
Similar to preceding.

---

2318. எழுதி வழங்கான் வாழ்க்கை கழுதை புரண்ட களம்.
Another form of above.

---

2319. எழுதிய விதி அழுதால் தீருமா ?
Destiny unalterable.

---

2320. எழுதியவன் ஏட்டைக்கெடுத்தான் படித்தவன் பாட்டைக் கெடுத்தான்.
All men are liable to err.

---

2321. எழுதுவது அருமை எழுதினதைப் பழுதற வாசிப்பது அதிலும் அருமை.
Accurate reading is more defficult than writing.

---

2322. எழுதுகிறது பெரிது அல்ல, இனம் அறிந்து சேர்க்கிறது [பெரிது.
Composing more important than copying.

---

2323. எழுத்தறச்சொன்னாலும் பெண்புத்தி பின்புத்தி.
Despises female judgment.

2324. எழுத்து அறிந்த வண்ணான் குறித்து எறிந்தான் ஓலை.
Learing beneficial even to a poor man.

2325. எழுத்து அறிந்த மன்னன் கிழித்து எறிந்தான் ஓலை.
A little learning is a dangerous thing.

2326. எழுத்துக்குப் பால்மாறின கணக்கனும் உடுக்கைக்குப் பால் மாறின தாசியும் வருத்தம் அடைவார்.
Learning and dress essential to accountants and prostitutes.

2327. எழுந்திருப்பான் கால் இல்லை.
Said of a person without means.

2328. எழுந்தருளும் கோவிலுக்கு விளக்குப் பிடிக்க.
Reminding one of one's duty.

2329. எழுபது சென்றாலும் பறை எவினுற்றான் செய்யும்.
Prompting necessary to ignorant people.

2330. எழுபது பேரைக் கொன்ற பழி கீலி.
Said of a very wicked woman.

2331. எளியவள் பிள்ளை ஆனாலும் செய்யும் சடங்கு செய்யவேண்டும்.
Religious ceremonies not to be omitted by anybody.

2332. எளியவனைக் கண்டு புளியங்காய் பறித்தாற்போல.
Oppressing a poor man.

2333. எளியவனுக்குப் பெண்டாய் இருக்கிறதிலும் வலியவனுக்கு அடிமை ஆகிறது நல்லது.
The wish of a poor man's wife.

2334. எளியவனைக் கண்டு வாயால் எய்கிறான்.
Cheating a poor man.

2335. எளியவன் பெண்டாட்டி எல்லாருக்கும் மைத்துனி.
Taking advantage of a poor man's wife.

2336. எளியாரை வலியார் அடித்தால் வலியாரைத் தெய்வம் அடிக்கும்.
God is the champion of the poor.

2337. எளியானை வலியானடித்தால் வலியானை வாசற்படி அடிக்கும்.
Another form of preceding.

2338. எளியானை எதிர் இட்டுக்கொண்டால் பிராணஹானி.
The danger of making the poor your enemies.

2339. என் அத்தனையை மலை அத்தனை ஆக்குகிறது.
An exaggerating habit.

2340. எள்ளுக்காய் முள்ளுத் தெறிப்பதுபோல.
Something unlikely.

2341. எள்ளுக்காய் பிளந்த விவகாரம்.
An impartial decision.

2342. எள்ளுக்காய் பிளந்தாற்போலப் பேசவேண்டும்.
Recommends impartiality.

2343. எள்ளுக்குத் தக்க எண்ணெய், எள்ளுக்குத் தக்க பிண்ணாக்கு.
Proportion in everything.

2344. எள்ளுக்குப் புள்ளு வரும் எச்சிற்கு எறும்பு வரும்.
Different creatures are attracted by different things.

2345. எள்ளுக்குள் எண்ணெய்போல.
So natural and inherent.

2346. எள்ளுப் போட்டால் எள்ளெடுக்கப்போகாது.
So densely crowded.

2347. எள்ளு விழுந்தால் எடுக்கமகாச்சேனை, இடறிவிழுந்தால் எடுக்க மனிதரில்லையே.
A usual complaint by one in trouble.

2348. எள்ளுக்குள் எண்ணெய்போல் எங்கும் நிறைந்திருக்கும்.
Permeating everything—Said of God.

2349. எள்ளுக்கு ஏழு உழவு கொள்ளுக்கு ஓர் உழவு.
Different degrees of ploughing.

2350. எள்ளுத்தான் எண்ணெய்க்கு உலருகிறது, எலிப்பிழுக்கை என்னத்துக்கு உலருகிறது.
Said of somebody suffering in vain.

2351. எள்ளும் பச்சை அரிசியும்போல இருக்கவேண்டும்.
So agreeable to each other.

---

2352. எள்ளும் கரும்பும் இறுக்கினால் பயன் தரும்.
Some persons give after pressure.

---

2353. எள்ளும் தண்ணீரும் கரத்திலேந்திச் சொல்லுகிறாய்.
Making an oath.

---

2354. எள்ளுக்கு ஏழு உழவு உழுகிறவேளை வேளாளா கொள்ளுக்கு ஓர் உழவு உழுது பயிர்செய்.
Seek easier pursuits.

---

2355. எள்ளென்கிற தற்குமுன்னே எண்ணெய்கொண்டு வருகிறான்.
Quick and smart at work.

---

2356. எள்ளை நீக்கிக்கொண்டுபோன பேய் எண்ணெய் கொண்டுவர இசைந்ததுபோல.
Making good what has been lost.

---

2357. எறிகிறது முயலுக்குப் படுகிறது பற்றைக்கு.
Aiming at one and hitting another.

---

2358. எறிவார் கையிலே கல்லுக் கொடுக்கிறதா?
Helping one's enemies with weapons.

---

2359. எறிவானேன் சொறிவானேன்?
Why throw why scratch?

---

2360. எறும்பு எண்ணாயிரம் கோடிக்கும் தெரியும்
Known to everybody.

---

2361. எறும்பு கடிக்கப் பொறுக்காதா?
Must bear up with trifling injuries.

---

2362. எறும்பின் கண் அதன் அளவுக்குப் பெரிது, ஆனையின் கண் அதன் அளவுக்குச் சிறிது.
The eyes of ants and elephants compared.

---

2363. எறும்புக்குக் கொட்டாங்கச்சித் தண்ணீர் சமுத்திரம்.
'These little things are great to little man.'

---

2364. எறும்புப் புற்றில் பாம்பு குடிகொள்வதுபோல.
Usurping another's abode.

---

2365. எறும்புக்கும் தன் கையால் எண்சாண் உடம்பு.
Proportion the same in everybody.

2366. எறும்பு ஊரக் கல் குழியும்.
Constant dropping wears away a stone.

2367. எறும்பின் கண்ணுக்கு எருமை மூத்திரம் ஏகப்பெருவெள்ளம்.
Compare above 2363.

2368. எறும்பு ஊர இடங்கொடுத்தால் எருதும் பொதியும் உள்ளே செலுத்துவான்.
Give an inch and he will take an ell.

2369. எறும்பு எடுத்துப் போவதற்குத் தடி எடுத்து நிற்கிறது, பெரிய பூசணிக்காய் போகிறது தெரியாதா?
Penny-wise and pound-foolish.

2370. எறும்பு முதல் எண்ணாயிரம் கோடிக்கும் தெரியும்.
A more correct form of 2360.

2371. எறும்பு முட்டை கொண்டு திட்டை ஏறின் மழை பெய்யும்.
A common sign of approaching rain.

2372. எனக்கு அட்டமத்துச் சனி.
I am under the evil star.

2373. எனக்கு ஊணும் இல்லை உறக்கமும் இல்லை.
Without food and sleep.

2374. எனது நாட்கள் எல்லாம் ஊமை கண்ட கனாப்போல் ஆயின.
Unable to relate my troubles.

2375. என் ஈரலைக் கருக்கு அரிவாள்கொண்டு அறுக்கிறது.
In great pain.

2376. என் காரியம் எல்லாம் நந்தன் படைவீடாய்ப் போயிற்று.
All in confusion.

2377. என் குடி கெட்டதும் உன் குடி கெட்டதும் பொழுது விடிந்தால் தெரியும்.
Morning reveals everything.

2378. என் குடுமை அவன் கையிலகப்பட்டுக்கொண்டது.
I am in his clutches.

2379. என்பைத் தின்று சதையைக் கொடுத்து வளர்த்தாள்.
So self-denying.

2380. என் மகளுக்கு குடல் பாக்கியந்தவிர எல்லா பாக்கியமும் இருக்கிறது.
Bewails childlessness.

2381. என் மகள் வாரத்தோடே வாரம் முழுகுவாள், என் மருமகள் தீபாவளிக்குத் தீபாவளி முழுகுவாள்.
Said of a filthy daughter-in-law.

2382. என் மருமகளுக்கு வேப்பெண்ணெயாம் தூக்கெண்ணெய், விளக்கெண்ணெயாந் தலைக்கெண்ணெய்.
Runs down the daughter-in-law's former condition.

2383. என் முகத்திற் கரிபூசினாயே.
You put me to shame.

2384. என் முதுகின் தோல் உனக்குச் செருப்பாய் இருக்கும்.
I shall be your willing slave.

2385. என் வீட்டுக்குவந்தால் என்ன கொண்டுவருகிறாய், உன்வீட்டுக்கு வந்தால் என்ன கொடுக்கிறாய்?
Complains of want of mutual friendliness.

2386. என்றும் பயப்படுதலிலும் எதிரே போனால் உத்தமம்.
Resistance better than timidity.

2387. என்று நின்றும் பொன்றுவர் ஓர் நாள்.
Death certain.

2388. என்னடி என்னடி தெற்கத்தியாள் எந்நேரம் பார்த்தாலும் தொள்ளைக்காது.
Ridicules a southern ear.

2389. என்ன சொன்னாலும் என் புத்தி போகாது.
Natural habit unchangeable.

2390. என்னடா தாதா புரட்டாசிமாதம் முப்பதும் ஒரு கர்த்தாயம்.
Mendicants well off in September.

2391. என்னடா குச்சுக் கட்டிப் பேசுகிறாய்.
Spoken to a boastful fellow.

2392. என்னமாய்ச்சொல்லி இதமாய் உரைத்தாலும் கழுதைக்கு உபதேசம் காதில் ஏருது.
Difficult to instruct fools.

2393. என்ன மாயம் இடைச்சி மாயம், மோரோடு தண்ணீர் கலந்த மாயம்.
A buttermilk woman's tricks.

2394. என்னடா கெட்டுப்போகிருய் என்ருல், இன்னமும் கெட்டுப்போகிறேன் பந்தயம் போடு என்கிருன்.
Going from bad to worse.

2395. என்ன தின்ருலும் அதற்குமேலே நாலு பேரீச்சம்பழம் தின்ன எல்லாம் அடிபடும்.
The digestive power of date fruit.

2396. என்னுலான புத்திரமஞ்சனம்.
Praising one's sons.

2397. என்னுடைய வீட்டிற்குப் பூவாய் வரப் பொன்னும் துரும்பாச்சு.
Said of a visit of an auspicious female.

2398. என்றும் இடிகுலைச்சல், எப்பொழுதும் நீங்குவதில்லை.
A quarrelsome house never prospers.

2399. என்னைக் கலந்தவர்களென்ருலும் கைநிறையப் பொன்னைக் கொடுத்தால் புணர்ந்துவிடுவேன்.
The cupidity of an unchaste woman.

2400. என்னைப்போலக் குரலும் என் அக்காளைப்போல ஒயிலும் இல்லை என்கிறதாம் கழுதை.
A donkey's boast.

2401. என்னைக்கெடுத்தது நரை என்மகனைக்கெடுத்தது முலை.
Different causes ruin different persons.

2402. என்னை விடைந்தால் உன்னைவிடைவேன் அம்மலாமா?
Claims mutual action.

2403. என்னைக்கண்டால் சணலுக்குள்ளே ஒளிக்கிருய், என்பெண்சாதியைக்கண்டால் சட்டிக்குள்ளே ஒளிக்கிருய்.
Said of a person absconding himself.

## ஏ

2404. ஏகமும் செத்தவனே ஏறடா பாடையிலே.
Cursing a useless fellow.

2405. ஏகாதசி மரணம் முத்தி யென்று நாக்கைப் பிடுங்கிக்கொள்ளுகிறதா ?
Against doing a rash deed with a good intention.

2406. ஏகாதசிக்கு மா இடித்தாற்போல.
Said of something irrelevant.

2407. ஏகாதசித்திருடியை ஏற்றடா ரதத்தின்மேலே.
Running down a religious hypocrite.

2408. ஏகாலிவாகனம் பொதிசுமந்தாற்போல.
Walking like a dhoby's donkey.

2409. ஏச்சிலும் பேச்சிலும் வல்லவனே.
An abusive fellow.

2410. ஏடாகோடத்திற்கு வழியெப்படி என்றால் போகிறவன் தலையில் பொத்தென்று அப்படித்தான்.
Giving a rude answer.

2411. ஏடாகூடக்காரனுக்கு வழி எங்கே என்றால் போகிறவன் தலைமேலாம்.
Similar to preceding.

2412. ஏடு அறியாதான் பீடு பெறாதான்.
Ignorance condemned.

2413. ஏட்டிலடங்காது எண்ணத் தொலையாது.
Countless.

2414. ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு ஆகுமா ?
Not words—but things are needed.

2415. ஏட்டுச் சுரைக்காயோ வீட்டுச் சுரைக்காயோ.
Nominal or real ?

2416. ஏணிக்கொம்புக்கு கோணக்கொம்பு போடலாமா ?
Employ proper means.

2417. ஏணியைத்தள்ளிப் பரண்மேல் ஏறலாமா ?
Trying to succeed without means.

---

2418. ஏணுக்குக் கோணும் எட்டிக்குப் போட்டியும்.
Said of contentious rivalry.

---

2419. ஏணைக்கழிக்குக் கோணற்கழி வெட்டுகிறதா ?
Similar to preceding.

---

2420 ஏண்டாதம்பி ரகுநாதா இதற்குள் வந்துபுகுந்துகொண்டாய்.
An intruder rebuked.

---

2421. ஏண்டா தென்னமரத்தில் ஏறினாய் என்றால், கன்றுக்குட்டிக்குப் புல் பிடுங்க என்றான்.
A thief's excuse.

---

2422. ஏண்டா கருடா சுகமா ? இருக்கிற இடத்தில் இருந்தால் சுகம்.
A suitable reply.

---

2423. ஏண்டா பட்டப்பகலில் திருடுகிறாய் ? என் அவசரம் உனக்குத் தெரியுமா ?
Necessity has no law.

---

2424. ஏண்டா புளியமரத்தில் ஏறினாய் என்றால் பூனைக்குட்டிக்குப் புல் பறிக்க என்றான்.
Similar to above.

---

2425. ஏண்டாமுடிச்சு அவிழ்க்கிறாய்? என்பசி உனக்குத்தெரியுமா
Compare 2423.

---

2426. ஏண்டிசிறுக்கி,புல்லு ஆச்சா? ஒருநொடிக்குமுன்கட்டாச்சே.
A smart reply.

---

2427. ஏண்டி பெண்ணே சோர்ந்திருக்கிறாய்? சோறு பத்தியம் ?
Similar to preceding.

---

2428. ஏண்டிப்பெண்ணே இளைத்தாய் குதிர்போல.
Pitying an emaciated girl.

---

2429. ஏண்டிப் பெண்ணே குந்தியிருக்கிறாய் ? சோறுபற்றாமல்.
Suitable question and answer.

---

2430. ஏது பிரியம் ? இல்லாதது பிரியம்.
Wish follows want.

---

2431. ஏதும் அற்றவனுக்கு இரண்டு பெண்டாட்டி.
Luxury more than means.

---

2432. ஏனென்று கேட்பாருமில்லை, எடுத்துப் பிடிப்பாரும் இல்லை.
Quite neglected.

---

2433. ஏரியோ தண்ணீர், சூரியதேவா ?
A doubtful query.

---

2434. ஏரி உடைகிறதற்கு முன்னே அணைபோடவேண்டும்.
Opportunity to be availed of at once.

---

2435. ஏரி நிறைந்தால் கரை கசியும்.
Said of a surplus.

---

2436. ஏரி பெருகில் எங்கும் பெருக்கு.
Importance of a tank.

---

2437. ஏரி மிதந்தால் இடையனை மதியாது.
Obstacles nothing to great forces.

---

2438. ஏரியின் நீரைக்கட்டுதல் அரிது உடைத்தல் எளிது.
Mending more difficult than marring.

---

2439. ஏரியோடு பகைகொண்டு சாவகம் செய்யாதிருக்கிறதா?
A foolish pretext.

---

2440. ஏருழுகிறவனே இளப்பமானால் எருது மைத்துனம் கொண்டாடும்.
Condemns laxity.

---

2441. ஏரை அடித்தேனோ, கூழை அடித்தேனோ ?
Value of ploughing.

---

2442. ஏர் உழுகிறபிள்ளை இளைத்துப்போகிறது, பரியம் போட்ட பெண்ணைப் பார்த்து வளர்.
Importance of marriage.

---

2443. ஏர் பிடித்தவன் என்னசெய்வான் பானைபிடித்தவள் பாக்கியம்.
Housewife more important than bread-winner.

---

2444. ஏர்பிடித்தவன் ஏழை பானைபிடித்தவள் பாக்கியம்.
Another form of above.

---

2445. ஏலவே தொலைந்தது எங்களைத் தொட்டகர்மம்.
Evil got rid of.

---

2446. ஏலேலம்! ஏலேலம்! எருமைச்சாணி காய்கிறது.
Ridiculing a worthless sale.

2447. ஏலேலசிங்கன் பொருள் ஏழு கடலிற்போனாலும் திரும்பும்.
A pious merchant's goods always safe.

2448. ஏவற்பேய் கூரையைப் பிடுங்கும்.
An instigated demon.

2449. ஏவாமக்கள் மூவாமருந்து.
Act without prompting.

2450. ஏவுகிறவனுக்கு வாய்ச்சொல் செய்கிறவனுக்குத்தலைச்சுமை.
Command *versus* obedience.

2451. ஏழைப்பேச்சு அம்பலம் ஏறாது.
The poor have no influence.

2452. ஏழைச்சொல் அம்பலம் ஏறாது.
Another form of preceding.

2453. ஏழை அழுத கண்ணீர் கூரியவாள் ஒக்கும்.
The cry of the poor.

2454. ஏழை பாக்குத் தின்ன எட்டு வீடு அறியவேண்டுமா ?
The poor have no secrecy.

2455. ஏழைப் பிள்ளைக்குத் தெய்வமே துணை.
Quite true.

2456. ஏழை என்றால் எவர்க்கும் எளிது.
The poor always taken advantage of.

2457. ஏழைக்கும் பேழைக்கும் காடுகாள் அம்மை.
The poor ill-treated by all.

2458. ஏழைப் பிள்ளைக்கு எவர்களும் துணை.
Similar to above.

2459. ஏழையைக் கண்டால் மோழையும் பாயும்.
The fate of the poor.

2460. ஏளிதம்பேசி இவ்வேடமானேன்.
A mocker's fate.

2461. ஏறச்சொன்னால் எருதுக்குக் கோபம் இறங்கச் சொன்னால் நொண்டிக்குக் கோபம்.
Serving two masters.

2462. ஏறப்படாத மரத்திலே எண்ணப்படாத மாங்காய்.
Useless abundance.

2463. ஏற விட்டு ஏணியை வாங்கினாற்போல.
Forsaking one suddenly.

2464. ஏற ஒன்று இறங்க ஒன்று எனக்கொன்று உனக்கொன்று இன்னொன்றிருக்குது தந்தால் தா தராவிட்டால் போ.
A partner's claim.

2465. ஏற ஆசைப்பட்டால் சாணாரப்பிறவி வேண்டும்.
Every occupation by birth.

2466. ஏறாத வார்த்தை வசையோடொக்கும்.
A useless word is an offensive word.

2467. ஏறிய கொக்கென்று இருந்தையோ கொங்கணவா?
You thought me a fool.

2468. ஏறின கொம்பால் இறங்க வேண்டும்.
Use the same means always.

2469. ஏறினால் எருதுக்கு கோபம் ஏறாவிட்டால் மொண்டிக்குக் கோபம்.
Another form of 2461.

2470. ஏறுகிறவன் சூத்தை எத்தனை தூரம் தாங்கலாம்?
Cannot aid one always.

2471. ஏறுகிற குதிரையிலும் உழவுமாடு அதிக உத்தமம்.
Labour *versus* luxury.

2472. ஏறுநெற்றி சூறுதலை எதிர்க்க வந்தால் ஆகாது.
A Tamil notion.

2473. ஏறுமாறாய்ப் பேசுகிறதா?
Disrespectful speaking.

2474. ஏறும் தேமல் இறங்கும் படர்தாமரை கூடும் புருவம் குடியைக்கெடுக்கும்.
Certain ruinous signs.

2475. ஏற்கவே மாமி பேய்க்கோலம், அதிலும் கொஞ்சம் மாக்கோலம்.
Running down the mother-in-law.

2476. ஏற்கைவாசனை சேர்க்கைவாசனை.
Natural or acquired.

2477. ஏற்பது இகழ்ச்சியாகும்.
Begging condemned.

2478. ஏற்கனவே வருகிற விக்கினங்களைத் தடுக்கவேண்டும்.
Precaution recommended.

2479. ஏற்றக்கோலுக்குப் பிடித்தால் அரிவாட்பிடிக்கு வரும்.
Let the ideal be high.

2480. ஏற்றப்பாட்டுக்கு எதிர்ப்பாட்டில்லை.
Some things have no counterpart.

2481. ஏன் என்பாரும் இல்லை எடுத்து விடுப்பாரும் இல்லை.
Unattended.

2482. ஏன் கொழுக்கட்டை சவுக்கிட்டாய் ? ஒருகாசு வெல்லம் இல்லாமல் சவுக்கிட்டேன் ?
A smart reply.

2483. ஏன் காணும் தாதரே ஆண்டி புகுந்தீர்? இதுவுமொரு மண்டலம் பார்த்துவிடுவோம்.
Tactics of mendicants.

# ஐ

2484. ஐங்கலக்கப்பியில் நழுவினகப்பி.
An insignificant person.

2485. ஐங்காதம் போனாலும் அகப்பை அரைக்காசு.
Some things sell cheap everywhere.

2486. ஐங்காதம் போனாலும் அறிமுகம் வேண்டும்.
Acquaintance desirable.

2487. ஐங்காதம் போனாலும் தன் பாவம் தன்னோடே.
Sin follows everywhere.

2488. ஐங்காயம் இட்டு அரைத்தாலும் தன் நாற்றம் போகாதாம் பேய்ச்சுரைக்காய்க்கு.
Natural qualities not easily got rid of.

---

2489. ஐது நெல் அடர்ந்தது சுற்றம்.
Distance and closeness.

---

2490. ஐந்து வயதில் ஆதியை ஓது.
An excellent advice.

---

2491. ஐந்திரம் நாடிகளையும் ஒருங்க எடுத்து வைத்தல்.
A religious allusion.

---

2492. ஐந்து சிட்டுக்கு இரண்டுகாசு விலை.
Small things sell cheap.

---

2493. ஐப்பசி மாதம் அழுகைத் தூற்றல், கார்த்திகை மாதம் கனத்த மழை.
October and November.

---

2494. ஐப்பசி மாதத்து வெயிலில் அன்று உரித்ததோல் அன்று காயும்.
Sunshine so powerful.

---

2495. ஐப்பசிக்கும் கார்த்திகைக்கும் மழை இல்லாவிட்டால் அண்ணனுக்கும் சரி தம்பிக்கும் சரி.
Effect of drought.

---

2496. ஐப்பசிமாதத்து எருமைக்கடாவும் மார்கழிமாதத்து நம்பியானும் சரி.
Both look happy.

---

2497. ஐம்பதிலே அறிவு, அறுபதிலே அடக்கம், அறுபதுக்குமேல் ஒன்றுமில்லை.
Tamil idea of different ages.

---

2498. ஐம்பது வயதானவனுக்கு ஐந்து வயதுப்பெண்ணா ?
Excellent rebuke.

---

2499. ஐயங்காரும் தொத்துக் கொடுப்பார்.
Contagion sticks to all.

---

2500. ஐயப்பட்டால் பைய நட.
If you doubt, be cautious.

---

2501. ஐயப்பன் குதிரையை வையாளி விட்டகதை.
Usurping habits.

2502. ஐயம் தீர்ந்தும் நெஞ்சாரவில்லை.
Doubts never completely removed.

2503. ஐயப்பா கையை விடு.
Let me alone.

2504. ஐயம் புகினும் செய்வன செய்.
Never give up your duties.

2505. ஐயமான காரியத்தைச் செய்யல் ஆகாது.
A good advice.

2506. ஐயம் எற்றும் அறிவே ஓது.
Always learn.

2507. ஐயர் இடங் கொடுத்தாலும் அடியார்கள் இடங்கொடார்கள்.
"Forbid them not."

2508. ஐயர் என்பவர் துய்யர் ஆவர்.
Brahmin defined.

2509. ஐயர் வருகிறவரையில் அமாவாசை நிற்குமா ?
Time and tide wait for no one.

2510. ஐயர் கதிர்போல அம்மா குதிர்போல.
Husbant stout and wife lean.

2511. ஐயனுர் படையிற் குயவனுர் பட்டதுபோல.
Refers to a story.

2512. ஐயனுர் கோவிலிலே ஆனைபிடிக்கவேணும்.
Certain temples.

2513. ஐயனுர் கோவில் செங்கல் அத்தனையும் தெய்வம்.
Filled with idols.

2514. ஐயனுர் கோவில் மண்ணை மிதித்தவர் அத்தனைபேரும் பத்திரகாளி.
Worshippers in certain temples.

2515. ஐயனுரே வாரும் கடாவைக் கைக்கொள்ளும்.
Animal sacrifice.

2516. ஐயன் அமைப்பை ஆராலும் தள்ளக்கூடாது.
Divine decrees.

2517. ஐயோ என்றால் ஆறுமாசத்துப் பாவம் சுற்றும்.
Said of a very bad fellow.

2518. ஐவர்க்குந்தேவி அழியாத பத்தினி.
Conduct belying profession.

## ஒ

2519. ஒக்கப்பிறந்த தங்கை ஒலமிட்டழச்சே ஒப்பாரித்தங்கைக்கு சிற்றாடையாம்.
Strangers prospering, while relations are suffering.

2520. ஒச்சியம் இல்லாத ஊரிலே பெண்வாங்கின கதை.
Taking a wife from a vicious village.

2521. ஒடிந்த கோல் ஆனாலும் ஊன்றுகோலாகும்.
Even a broken stick may be useful.

2522. ஒடுக்கம் சிதம்பரம்.
A reference to Chidambaram.

2523. ஒட்டிக்கொண்டு வந்தாலும் தட்டிக் கழிக்கிறான்.
He gets rid of me.

2524. ஒட்டினால் தொட்டிலும் கொள்ளும், ஒட்டாவிட்டால் கட்டிலும்கொள்ளாது
Diffrent effects of starving and feeding.

2525. ஒட்டினாலும் உழக்குப் பீர்ச்செல்கிறதா ?
A starving animal can yield nothing.

2526. ஒட்டி உணர்ந்து உருவின கோல்போல்.
An expert.

2527. ஒட்டைக்குப் பளுவு ஏற்றுகிறதுபோல.
Overloading.

2528. ஒட்டைக்குச் சளுவு பட்டாப்போல.
Diminishing a load.

2529. ஒட்டைக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்போடு.
Said of a great poet.

---

2530. ஒண்டவந்த பிடாரி ஊர்ப்பிடாரியை துரத்தினதாம்.
Conditions reversed.

---

2531. ஒண்டவந்த எலி உரம்பெற்றது அண்டியிருந்த பூனை அலையப்பறக்கிறது.
The refugee supplanting the permament dweller.

---

2532. ஒதி பெருத்துத் தூணுமா ?
Similar to preceeding.

---

2533. ஒதிபெருத்தால் உரலாமா ?
Atree useless for timber.

---

2534. ஒதி பெருத்து என்ன, உபகாரம் இல்லாதவன் வாழ்ந்து என்ன ?
Said of a useless fellow.

---

2535. ஒதியமரம் தூணுமோ ? ஒட்டாங்கிளிஞ்சல் காசாமோ ?
Similar to preceding.

---

2536. ஒதியமரமும் ஒரு சமயத்துக்குதவும்.
Even a useless person may one day be useful.

---

2537. ஒத்தவிடத்தில் நித்திரைகொள்.
Sleep in a suitable place.

---

2538. ஒத்திவெள்ளம் வருமுன்னே அணைகோலிக் கொள்ளவேண்டும்.
Prevention better than cure.

---

2539. ஒயிலாய்ப்பேசுகிறான் ஆனால் கனமறிந்த கப்பறையுமல்ல கண்டறிந்த நாயுமல்ல.
An ignorant and vulgar boaster.

---

2540. ஒய்யாரக் கொண்டையாம் தாழம்பூவாம் உள்ளே இருக்குமாம் ஈறும் பேனும்.
Fair without and foul within.

---

2541. ஒரு அச்சிலே உருக்கிவார்த்தாற்போல்.
Exactly alike.

---

2542. ஒரு இழவு என்றால் உள்ளபடி ஆகும்.
A reasonable wish.

---

2543. ஒரு உறையிலே இரண்டு கத்தியா ?
Two things cannot occupy one space.

---

2544. ஒரு ஊர் நடப்பு ஒரு ஊருக்குப் பழிப்பு.
Different customs in different places.

---

2545. ஒரு ஊருக்கு ஒருவழியா ?
Many methods of doing the same thing.

---

2546. ஒரு கண்மூடி ஒருகண் விழித்தல்.
Alternating.

---

2547. ஒருகட்டு வைக்கோலைத் தண்ணீரிற்போட்டு ஒன்பது ஆள் கூடி இழுத்தாற்போல.
Adding unnecessary work.

---

2548. ஒரு கம்பத்தில் இரண்டு ஆனை கட்டுகிறதா ?
Compare above 2521.

---

2549. ஒரு காசு அகப்படுகிறது குதிரைக்கொம்பு.
Something very rare.

---

2550. ஒருகாசுபேணின் ஒருகாசு தேறும்.
A pie saved, is a pie gained.

---

2551. ஒருகாற்செய்தவன் இருகாற்செய்வான்.
Once done, twice done.

---

2552. ஒருகாசு கொடாதவன் ஒருவராகன் கொடுப்பானா ?
Argument *a fortiori.*

---

2553. ஒரு காசு என்ற இடத்தில் அழுகிறாள்.
Great niggardliness.

---

2554. ஒருகுளப்படி நீரைக்கண்டு திரைகடல் ஏங்குமா ?
Great people not frightened by small people.

---

2555. ஒரு குடம்பாலுக்கு ஒரு துளிபொரை.
A little leaven, leaveneth the whole lump.

---

2556. ஒருகுண்டிலே கோட்டைபிடிக்கலாமா ?
Means must be adequate.

---

2557. ஒருகூடு முடைந்தவன் ஒன்பதுகூடு முடைவான்.
A good beginning makes progress easy.

---

2558. ஒரு கூடைகல்லும் தெய்வமானால், கும்பிடுகிறது எந்தக்கல்லை.
A joke upon idolatry.

---

2559. ஒருகூடை செங்கல்லும் பிடாரியாயிருக்கிறது.
Similar to preceding.

---

2560. ஒரு கைதட்டினால் ஓசை யெழும்புமா ?
Two things necessary to produce an effect.

---

2561. ஒருகைதட்டினால் ஓசை கேட்குமா, இருகை தட்டினால் ஓசையெழும்புமா ?
Another form of above.

---

2562. ஒரு கை முழம்போடுமா ?
Compare above.

---

2563. ஒரு கோபம்வந்து கிணற்றில் விழுந்தால் ஆயிரம் சந்தோஷம் வந்தாலும் எழும்பலாமா ?
Impossible to undo a fatal act.

---

2564. ஒரு கோமுட்டியைக் கழுவில்போட்டதற்கு ஒன்பது கல எள்ளாச்சுதே ஊர் கோமுட்டிகளையெல்லாம் கழுவில் போடென்றானாம்.
Arguing from the less to the greater.

---

2565. ஒரு சந்திப்பானை நாய் அறியாது.
Sacred things are unknown to the vulgar.

---

2566. ஒரு சட்டியிலே இரண்டு தைலம்.
An impossible mixture.

---

2567. ஒருசாண்காட்டிலே ஒருமுழத்தடி வெட்டலாமா ?
Expecting great things from small.

---

2568. ஒரு சுருட்டைப் பத்துநாள் பிடிப்பேன்.
A boasting economist.

---

2569. ஒருசெடியில் விளைந்தாற்போல.
Of the same nature.

---

8570. ஒருதலைவழக்கு நாலிலும் செவ்வை.
One-sided story.

---

2571. ஒருதரம் விழுந்தால் தெரியாதா ?
A burnt child dreads the fire.

---

2572. ஒரு தலைக்கு இரண்டு ஆக்கினையா ?
Condemns double punishment.

2573. ஒருதாய் அற்றவர்க்கு ஊரெல்லாம் தாய்.
Condition of a motherless child.

2574. ஒரு துரும்பும் பழுதையாகுமா ?
A single straw can't make a rope.

2575. ஒருத்தர் போனவழி ஒருத்தர் போகிறதில்லை.
Tastes differ.

2576. ஒரு நன்றி செய்தவரை உள்ள அளவும் நினை.
Gratitude for even a single benefit.

2577. ஒருநாட் கூத்துக்குத் தலையைச் சிரைத்ததுபோல்.
Incurring much loss for a little gain.

2578. ஒருநாளைக்கு இறக்கிறது கோடி, பிறக்கிறதுகோடி.
A day's births and deaths are numberless.

2579. ஒருநாளும் சிரிக்காதவன் திருநாளிலே சிரித்தான், திருநாளும் வெறுநாளாயிற்று.
Effect of an unusual act.

2580. ஒருநாளாகிலும் திருநாள். . .
A longing for feast days.

2581. ஒருபனை இரண்டு பாளை ஒன்று நுங்கு ஒன்று கள்ளு.
One thing put to many uses.

2582. ஒருபணம் கொடுத்து அழச்சொல்லி ஒன்பதுபணம் கொடுத்து ஓயச்சொன்னது போல.
Evil easy to incur but hard to remove.

2583. ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்.
One specimen is enough.

2584. ஒரு பிள்ளை பெற்றவளுக்கு உறியிலே சோறு, நாலு பிள்ளை பெற்றவளுக்கு நடுத்தெருவிலே சோறு.
The burden of a large family.

2585. ஒரு பிள்ளையென்று ஊட்டி வளர்த்தாளாம், அது சரியாமாந்த குணம் பிடித்துச் செத்ததாம்.
Better to have no child than one child.

2586. ஒருபிள்ளையும் பிள்ளையல்ல, ஒருமரமும் தோப்பல்ல.
Similar to preceding.

---

2587. ஒரு புத்திரன் ஆனாலும் குரு புத்திரன் சிலாக்கியம்.
The priest's family is always respected.

---

2588. ஒரு பொருள் ஆகிலும் எழுதி அறி.
Recommends writing down everything.

---

2589. ஒருமனப்படு, ஒதுவார்க்கு உதவு.
Good advice.

---

2590. ஒரு மரத்துப்பழமா ஒருமிக்க ?
Not all of the same species.

---

2591. ஒரு மரத்துப்பட்டை ஒருமரத்திலே ஒட்டுமோ ?
Different species cannot combine.

---

2592. ஒரு மரத்துக்கொம்பு ஒருமரத்தில் ஒட்டாது.
Similar to above.

---

2593. ஒரு மரம் இரண்டுபாளை ஒன்று நுங்கு ஒன்று கள்ளு ; அறிவுடன் பார்க்கும்போது அதுவும் கள்ளே இதுவும் கள்ளே.
A moral on apparent contrasts.

---

2594. ஒரு மிளகுக்கு ஆற்றைக் கட்டி இறைத்த செட்டி.
Wasting too much labour on a trifle.

---

2595. ஒருமிளகும் நாலு உப்பும் போதும்.
Few and yet enough.

---

2596. ஒருமுருங்கையும் ஒரு எருமையும் உண்டானால் வருகிறவிருந்துக்கு மனங்களிக்கச்செய்வேன்.
One or two essentials enough for a feast.

---

2597. ஒரு முழுக்கிலே மண் எடுக்கிறதா ?
One can never leap to success.

---

2598. ஒருமைப்பாடு இல்லாத குடி ஒருமிக்கக்கெடும்.
Family divided against itself, cannot stand.

---

2599. ஒருவனும் பிறப்பா ? ஒன்றிமரந்தோப்பா ?
Another form of 2586.

---

2600. ஒருவர் அறிந்தால் இரகசியம், இருவர் அறிந்தால் அம்பலம்.
A secret known to two is no secret.

2601. ஒருவன் அறிந்த ரகசியம் உலகத்தில் பரவும்.
There is nothing hid in the world.

2602. ஒருவனுக்கு இருவர் துணை, ஒருவனை அறிய இருவர்வேண்டும்.
Sometimes one needs two.

2603. ஒருவரும் அறியாத உச்சித நாமன்.
God defined.

2604. ஒருவனைக்கொன்றவன் உடனே சாவான், பலபேரைக் கொன்றவன் பட்டம் ஆளுவான்.
A sarcasm on war.

2605. ஒருவன் தலையில் மாணிக்கம் இருக்கிறதென்று வெட்டலா[மா ?
Doing a bad thing with a good intention.

2606. ஒருவனாய்ப் பிறந்தால் தனிமை, இருவராய்ப் பிறந்தாற் பகைமை.
Single *versus* double.

2607. ஒருவருக்கு நிறைவும் குறைவும் ஊழ்வினைப்பயன்.
The influence of fate.

2608. ஒருவனைப்பற்றி ஓரகத்திரு.
Recommends friendliness.

2609. ஒருவிரல் நொடி இடாது.
Two necessary to make a third.

2610. ஒவ்வாக் கூட்டிலும் தனிமை அழகு, ஒவ்வாப்பேச்சு வசையோடு ஒக்கும்.
Avoid evil companionship.

2611. ஒழுகாதவீடு உள்ளங்கை அத்தனை போதும்.
A leaky house condemned.

2612. ஒழுக்கம் உயர் குலத்தில் நன்று.
Good behaviour commended.

2613. ஒழுக்கு வீட்டிலே வெள்ளம் வந்ததுபோல.
From less to greater evil.

2614. ஒழுக்குக்கு வைத்த சட்டிபோல.
So noisy.

---

2615. ஒழுங்கு ஒருபணம் சளுக்கு முக்காற்பணம்.
Behaviour *versus* boasting.

---

2616. ஒளியிருந்த கட்டி இன்ன கட்டி என்று தெரியாது.
Good qualities not easily discovered.

---

2617. ஒளியில்லாவிட்டால் இருளையும், இருள் இல்லாவிட்டால் ஒளியையுங் காணலாம்.
Light *versus* darkness.

---

2618. ஒளிக்கும் சேவகனுக்கு முகத்தில் என் மீசை ?
A coward policeman.

---

2619. ஒளிக்கப்போயுந் தலையாரி வீட்டிலா ?
Seeking refuge in the wrong place.

---

2620. ஒளிக்கப்போயும் இடம் இடைஞ்சலா ?
Similar to preceding.

---

2621. ஒள்ளியர் தெள்ளியர் ஆயினும் ஊழ்வினை பைய நுழைந்து விடும்.
Fate irresistible.

---

2622. ஒற்றியும் சீதனமும் பற்றி ஆளவேண்டும்.
Some properties to be taken special care of.

---

2623. ஒற்றைக்காலும் ஓரியும்.
A lame person.

---

2624. ஒன்றற வந்த பிடாரி ஊர்ப்பிடாரியை ஓட்டினதுபோல்.
Compare following.

---

2625. ஒன்றற வந்த பிடாரி ஊர்ப்பிடாரி ஆனதுபோல்.
Beggar becoming well-to-do.

---

2626. ஒன்றான தெய்வம் உறங்கிக்கிடக்கும் போது பிச்சைக்கு வந்தவன் தத்தியோதனத்திற்கு அழுகிறானாம்.
Compare above 2624.

---

2627. ஒன்றால் ஒன்று குறை இல்லை, முன்றேலே கட்டத் துணி இல்லை.
Poverty in the midst of wealth.

---

2628. ஒன்று நினைக்க ஒன்றாயிற்று.
Man proposes, God disposes.

2629. ஒன்றும் அறியாளாம் கன்னி ஒடிப்பிடித்ததாம் ஆறுமாதச் [சன்னி.
A hypocrite exposed.

2630. ஒன்று தெரிந்தவனுக்கு எல்லாம் தெரியாது.
Expert in something knows nothing else.

2631. ஒன்று கொண்டு எட்டுவித்தால் லாபமே லாபம்.
A good profit.

2632. ஒருபொய்க்கு ஒன்பதுபொய்.
A lie needs twenty legs.

2633. ஒட்டுத்திண்ணை நித்திரைக்கேடு.
An uncomfortable berth.

2634. ஒன்றும் இல்லையென்று ஊதினான், அதுதானும் இல்லையென்று கொட்டினான்.
A fruitless effort.

2635. ஒன்றும் அற்றவனுக்கு ஒன்பது பெண்டாட்டி.
Vice *versus* poverty.

2636. ஒன்றும் அற்ற தங்காளுக்கு ஒன்பது நாள் சடங்கா ?
Making much of a worthless person.

2637. ஒன்றே குதிரை ஒன்றே ராவுத்தன்.
One horse, one rider.

2638. ஒன்றே ராஜா, ஒன்றே குதிரை.
Similar to preceding.

2639. ஒன்றைப் பெற்றால் நன்றே பெறவேண்டும்.
Always acquire a good thing.

2640 ஒன்றைப் பிடித்தாற் சாதிக்க வேண்டும்.
Stick to your opinion.

2641. ஒன்றைப் பெற்றாலும் கடுகப் பெறு.
Get something quick.

2642. ஒன்றைப் பெற்றாலும் கன்றைப் பெறு.
A calf worth getting.

2643. ஒன்றைத் தொடினும் நன்றைத் தொடு.
Refers to choice of a wife.

---

## ஓ

2644. ஓ குடுப்பானுக்கு வாழ்க்கைப்பட்டு ஓட்டமே ஒழிய, நடை இல்லை.
Suffering by a bad husband.

---

2645. ஓங்கி அறைந்தாலும் ஏங்கிஅழச் சீவனில்லை.
Said of a weakling.

---

2646. ஓங்கில் அறியும் உயர் கடலின் ஆழம், பாங்கி அறிவாள் தன் பர்த்தாவின் வலிமை.
A wife knows her husband.

---

2647. ஓசை காட்டிப் பூசை செய்.
Mingle worship with music.

---

2648. ஓசை பெறும் வெண்கலம், ஓசைபெறா மட்கலம்.
What things sound.

---

2649. ஓடம் விட்டு இறங்கினால் ஓடக்காரனுக்கு ஒரு சொட்டு.
Ingratitude to benefactor.

---

2650. ஓடம் விட்ட ஆறும் அடி சுடும்.
Things are apt to change.

---

2651. ஓட மருந்துண்டு உறங்கி விழுந்தாயோ ?
Missing one's purpose.

---

2652. ஓடம் கட்டின தூலம்.
A useful article.

---

2653. ஓடம் கடந்தால் ஓடக்காரனுக்கு ஒரு சொட்டு.
Similar to above.

---

2654. ஓடம் வண்டியிலும் வண்டி ஓடத்திலும் காணவும்படும்.
Things easily exchanged.

---

2655. ஓடம் வண்டி வண்டி ஓடம்.
Another form of preceding.

---

2656. ஓடம் விட்ட இடம் அடி சுடும், அடி சுட்ட இடம் ஓடம் விடப்படும்.
Sudden changes.

---

2657. ஓடவும் மாட்டான் பிடிக்கவும் மாட்டான், ஓயாமல் பேசுவான்.
A more chatter-box.

---

2658. ஓடவும் மாட்டேன் பிடிக்கவும் மாட்டேன்.
I am a useless person.

---

2659. ஓடி ஒரு கோடி தேடுவதிலும் இருந்து ஒரு காசு தேடுவது நலம்.
A wandering livelihood *versus* a settled employment.

---

2660. ஓடி ஓடிப் பறந்தாலும் ஓடக்காரன் தாமதம்.
Boatman proverbially slow.

---

2661. ஓடிப் போனவனுக்கு ஒன்பதாமிடத்திலே ராஜா, அகப்பட்டவனுக்கு அஷ்டமத்திலே சனி.
Runaways lucky.

---

2662. ஓடிருக்கிறது நாடிருக்கிறது.
"I can beg."

---

2663. ஓடி ஒன்பது பணம் சம்பாதிப்பதிலும் உட்கார்ந்திருந்து ஒரு பணம் சம்பாதிப்பது நன்று.
Same as above.

---

2664. ஓடி ஓடி உள்ளங்காலும் வெளுத்தது.
Tired of running.

---

2665. ஓடிப்போன புருஷன் வந்து கூடிக்கொண்டான், உடைமை மேல் உடைமை போட்டு மினுக்கிக்கொண்டாள்.
Said of a wife whose husband has re-joined her.

---

2666. ஓடிப்போன ஊரில் ஆதரித்தவன் கவுண்டன்.
Hill tribes usually kind.

---

2667. ஓடிப்போகிறவன் பாடிப் போகிறான்.
Joy of escape.

---

2668. ஓடிப்போன முயல் பெரிய முயல் அல்லவோ ?
What has escaped is big.

---

2669. ஒடியம் ஆகிலும் ஊடுருவக் கேள்.
Listen attentively.

2670. ஒடியும் இழவிக்குப் பிறகேயா ?
Said of an attempt which has failed.

2671. ஓடுகிற கழுதையை வாலைப்பிடித்தால் உடனே கொடுக்கும் பலன்.
Improper interference.

2672. ஓடுகிற பாம்பைக் கையினால் பிடித்து உண்கிறவாயில் மண்ணைப் போட்டு கொள்கிறதா ?
Seeking ruin voluntarily.

2673. ஓடுகிற பாம்பைப் பிடிக்கிற பருவம்.
A child knows no fear.

2674. ஓடுகிறவனைக் கண்டால் துரத்துகிறவனுக்கு இலேசு.
Taking advantage of a frightened person.

2675. ஓடுகிற வெள்ளம் அணையில் நிற்குமா ?
Nothing can stop a flood.

2676. ஓடுகிறவனை விரட்டுவது லகு.
Similar to above.

2677. ஓடுமீனோடி ஒருமீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு.
Patient waiting.

2678. ஓட்டத்துக்குப் பரக்குப்பிடிக்கிறான்.
Ready to flee.

2679. ஓட்டை மதிலே தண்ணீர் போனால் தோட்டிக்கு என்ன வாட்டம்.
Mind your own business.

2680. ஓட்டைக் கப்பலுக்குப் ஒன்பது மாலுமி.
Many masters for a disabled ship.

2681. ஓட்டைக் குடத்திலே தான் சர்க்கரை யிருக்கும்.
Good things in cracked pots.

2682. ஓட்டைச் சங்கு ஊது பரியாது.
A broken shell cannot sound.

2683. ஓட்டைச் சட்டி ஆனாலும் கொழுக்கட்டை வெந்தாற் சரி.
Enough if work is done, never mind the means.

2684. ஓட்டை நாழிக்குப் பூண் கட்டினது போல.
Doing a useless thing.

2685. ஓட்டைப் பானையிலே சர்க்கரை இருக்கும்.
Similar to above 2683.

2686. ஓட்டைப் பானைச் சர்க்கரை கசக்குமா ?
Character independent of personal appearance.

2687. ஓட்டை மணி ஆனாலும் ஓசை நீங்குமா ?
Natural merits last always.

2688. ஓட்டைவீட்டிலே மூத்திரம்பெய்தால் ஒழுக்கோடொழுக்கு.
A little evil added to greater evil would not affect it.

2689. ஓட்டைப் பானையில் விட்ட தண்ணீர்போல.
Always passing away.

2690. ஓணான் விழுங்கிய கதைபோல.
Refers to a story.

2691. ஓதாதார்க்கு இல்லை உணர்வொடு ஒழுக்கம்.
The uneducated destitute of manners.

2692. ஓதுவார் எல்லாம் உழுவான் தலைக்கடையில்.
A cultivator essential.

2693. ஓதுவானுக்கு ஊரும் உழுவானுக்கு நிலமும் இல்லையா ?
No excuse for neglecting one's duties.

2694. ஓதுவார்க்கு உதவு.
Encourage learning.

2695. ஓந்தி வேலிக்கு இழுக்கின்றது, தவளை தண்ணீருக்கு இழுக்கின்றது.
Each drags to its own abode.

2696. ஓமபிண்டத்தை நாய் இச்சித்தாற்போலே.
The vulgar coveting sacred things.

2697. ஓயா மழையும் ஓழியாக் காற்றும்.
Said of something continuous.

2698. ஒய்விலா நேசமே யோலமே சரணம்.
An appeal to love.

2699. ஒய்ப்படியாள் பிள்ளை பெற்றாளென்று ஒக்கப்பிள்ளை பெறலாமா.
Doing something foolish from envy.

2700. ஒரக்கண்ணனைப் பழிக்கிறான் ஒற்றைக்கண்ணன்.
'Tis a deformed fellow mocks another's deformity.

2701. ஓரார்வெறுத்து ஒருபக்கம் செல்லரிக்க.
Let him be ruined.

2702. ஓரம் சொன்னவன் ஆருக்கு ஆவான் ?
A tale-teller an enemy to all.

2703. ஓரம் சொன்னவன் குடித்தனம்போலே.
Tale-tellers never prosper.

2704. ஓர் ஆண்டி பசித்திருக்க உலகம் எல்லாம் கிறுகிறென்று சுற்றுகிறது !
Mendicants should not be starved.

2705. ஓர் ஆறு தாண்ட மாட்டாதவன் ஒன்பது ஆறு தாண்டுவானோ?
You cannot expect great things from one who cannot do small things.

2706. ஓர் ஊர்ப்பேச்சு ஓரூர்க்கு ஏச்சு.
Different manners in different places.

2707. ஓர் ஊருக்கு ஒரு பேரிட்டுக் கொள்ளலாமா ?
Against changing names.

2708. ஓழிமகன் கல்யாணத்திலே உண்டது லாபம்.
Rogues cannot be relied on.

## ஔ.

2709. ஔவியம்பேசுதல் எவ்விதமும் கெடும்.
The evil of back-biting.

2710. ஔவைச் சொல்லுக்கு அச்சம் இல்லை.
In praise of Auvvai.

2711. ஔவையார்மேலும் குற்றம் உண்டு அண்ணாவியார்மேலும் பழுது உண்டு.
There is none perfect.

---

## க

2712. கக்கத்திற் சிமண்டுகிற கை நமனல்லவோ.
Signs of enmity.

---

2713. கங்கையிலே முளைத்தாலும் பேய்ச்சுரை நல்லசுரை ஆமா?
Soil cannot alter the seed.

---

2714. கங்கையில் மூழ்கினாலும் காக்கை அன்னம் ஆகுமா?
Similar to preceding.

---

2715. கங்கையில் ஆடினாலும், கணமும் விடாமற் செய்த பாவம் தீராது?
Tamil opinion of sacred rivers.

---

2716. கங்கையில் ஆடினாலும் பாவம் தீருமா?
Compare above.

---

2717. கங்கையிலே படிந்தாலும் பேய்ச்சுரைக்காய் நல்லசுரைக்காய் ஆகாது.
Compare above 2713.

---

2718. கங்கையிலே பிறந்த நத்தை சாலக்கிராமம் ஆகாது.
Similar to above.

---

2719. கசக்கி மோரலாமா?
Against annoying a benefactor.

---

2720. கசடருக்கு இல்லைக் கற்றோர் உறவு.
The base *versus* the learned.

---

2721. கசடருக்கு யோகம்வந்தால் கண்ணுந்தெரியாது காதுங்கேளாது.
Effect of prosperity on the base.

---

2722. கசடறக் கல்லார்க்கு இசை உறல் இல்லை.
Commends perfect education.

---

2723. கசடான கல்வியினும் கல்வியீனம் நலம்.
Ignorance better than half knowledge.

2724. கசிந்து வந்தவன் கண்ணைத் துடை.
Console the sorrowing.

2725. கச்சற் கருவாடு மோட்சத்திற்குப் போனாலும், பிச்சைக்காரர் மோட்சத்திற்குப் போகமாட்டார்கள்.
Beggars are said to be so vicious.

2726. கஞ்சி வரதப்பா என்றால், எங்கே வரதப்பா என்கிறான்.
Begging in the wrong place.

2727. கஞ்சிக்குப் பயறு கலந்தாற் போல.
An agreeable company.

2728. கஞ்சித்தண்ணீர்க்குக் காற்றாய்ப் பறக்கிறது.
So desperately hungry.

2729. கஞ்சிவார்க்க ஆளில்லாமற் போனாலும் கச்சைகட்ட ஆளிருக்கிறது.
More ready to champion than to feed.

2730. கடலிற் கையைக் கழுவி விடுகிறதா ?
Abandoning one to one's fate.

2731. கடலிலே ஏற்றம் போட்ட கதை.
A useless enterprise.

2732. கடலில் பெருங்காயம் கரைத்தாற்போல.
Producing no effect.

2733. கடலில் இட்ட பெருங்காயம்போல.
Similar to above.

2734. கடலிலே துரும்பு கிடந்தாலும் மனதிலே ஒரு சொல் கிடவாது.
Difficult to keep a secret.

2735. கடலில் கரைத்த புளிபோல.
Compare above 2432.

2736. கடலிலேபிறக்கும் உப்புக்கும் மலையில்விளையும் நாரத்தங்காய்க்கும் தொந்தம்.
Connection between distant parties.

2737. கடலுக்குக் கரைபோடுவார் உண்டா ?
The great need no control.

2738. கடலையடைக்க கரைபோடலாமா ?
Attempting impossibilities.

2739. கடலைத் தூர்த்தும் காரியம் முடிக்க வேண்டும்.
Overcoming impossibilities at any cost.

2740. கடலைத் தூர்த்தாலும் காரியம் முடியாது.
Absolute impossibilities.

2741. கடலைத் தாண்டினவனுக்கு வாய்க்கால் தாண்டுகிறதரிதா ?
Small things easy to great men.

2742. கடல் உப்பையும் மலைநெல்லையும் கலந்தாற்போல.
Compare above 2736.

2743. கடல் கொதித்தால் விளாவ நீர் எங்கே ?
Who can soften a great man's anger ?

2744. கடல்நீர் நிறைந்து என்ன, காஞ்சிரை பழுத்து என்ன ?
Both are useless for food.

2745. கடல் தாண்ட மனம் உண்டு, கால்வாய் தாண்டக் கால் இல்லை.
Ambition greater than ability.

2746. கடல் மீனுக்கு நுளையன் இட்டது சட்டம்.
Entirely at one's disposal.

2747. கடல் திடலாகும் திடல் கடலாகும்.
Every thing subject to change.

2748. கடல் பெருகினால் கரையேது.
Compare above 2743.

2749. கடல் வற்றிக் கருவாடு தின்னலாமென்று உடல் வற்றிச் செத்ததாம் கொக்கு.
Evil of foolish delay.

2750. கடல் பெருகினால் கரையும் பெருகுமா ?
Disasters not usually followed by remedies.

2751. கடற் கரைத் தாழங்காய் கீழே தொங்கி என்ன மேலே தொங்கி என்ன ?
Said of something quite useless.

2752. கடன் காலச் சனியன்.
Naturo of debt.

2753. கடனோடு கடன் கதம்பப் பொடி சாற்பணம்.
Encouraging indebtedness.

2754. கடன் இல்லாத கஞ்சி கால் வயிறு.
Debt fills the stomach.

2755. கடன்காரனுக்குக் கடனும், உடன்பிறந்தானுக்குப் பங்கும் கொடுக்கவேண்டும்.
Give each his due.

2756. கடன் வாங்கிக் கடன் கொடுத்தவனும்கெட்டான்; மரம் ஏறிக் கை விட்டவனும் கெட்டான்.
Answering for others dangerous.

2757. கடன் வாங்கியும் பட்டினி, கல்யாணம் பண்ணியும் சந்நியா [சி.
Objects not gained.

2758. கடன் வாங்கியும் பட்டினியா !
Compare above 2754.

2759. கடன்வாங்கி உடன்வாங்கி அம்மைகும்பிட, நீயார் கூத்தி விழுந்து கும்பிட ?
Against usurping another's privilege.

2760. கடன்காரனுக்குக் கடனும் பழிகாரனுக்கும் பழியும் கொடுத்துத் தீரவேண்டும்.
Similar to above 2755.

2761. கடன்காரனை வைத்த கழு உண்டா ?
Debtors always escape punishment.

2762. கடன் பட்டார் நெஞ்சம்போற் கலங்குகிறது.
Debtors never happy.

2763. கடா கடா என்றாலும் மருந்துக்கு ஒரு பீர் என்கிறான்.
Imploring where you cannot obtain.

2764. கடா பின்வாங்குகிறது பாய்ச்சலுக்கு இடம்.
A calm before a storm.

2765. கடா மேய்க்கிறவன் அறிவானோ கொழு போனவிடம் ?
One man ignorant of another's business.

2766. கடாவின் சந்திற் புல்லைத் தின்கிறதுபோல்.
Running headlong into danger.

2767. கடாவும் கடாவும் சண்டை போடுகிறபோது உண்ணி நசுங்கி னாற்போல்.
A small person suffering between two foes.

2768. கடிகோலிலே கட்டின நாய்.
Well under control.

2769. கடிக்கிற நாய்க்குக் கழுத்தில் குறுங் கயிறு.
Punishment waits for the wicked.

2770. கடிக்கமாட்டாத பாக்கு உத்தமதானம்.
Giving useless things as gifts.

2771. கடிக்க வருகிறநாய்க்கு தேங்காய்க்கீத்து போட்டாற்போல.
Allaying anger.

2772. கடிக்க ஒரு எலும்பும் இல்லை, காதில் மினுக்க ஓலையும் இல்லை.
Destitute of food and jewels.

2773. கடிதான பிள்ளை பெற்றோருக்கு உதவுமா?
An obstinate child.

2774. கடிதான சொல் அடியிலும் வலிது.
Words stronger than blows.

2775. கடித்த நாகம் கலந்து உறவாடுமா?
Once bitten always shy.

2776. கடித்த பாக்கும் கொடாத சிற்றப்பன் கடைத்தெரு வரையில் வழிவிட்டானும்.
Unusual kindness in a hard-hearted fellow.

2777. கடித்த வாய் துடைத்தாற்போல்.
When beaten on one cheek returning the other.

2778. கடித்த பாம்புக்கு பால்வார்த்தால் விஷத்தைத் தான் தரும்.
Kindness cannot change natural qualities.

2779. கடித்த மூட்டையும் சரி, கடியாத மூட்டையும் சரி.
Vicious persons must always be got rid of.

2780. கடித்த நாய்க்குக் காடியைக் கொடு.
Prevent biting again.

2781. கடித்தாலும் கடிக்கட்டும் நீ சொல்லாதிரு.
Recommends mercy to evil doers.

2782. கடித்த நாயைப் பயித்தியம் கொண்டது என்று சொல்லுவார்கள்.
Accounting for evil.

2783. கடிந்த சொல்லிலும் கனிந்த சொல்லே நன்மை.
Kind words *versus* harsh words.

2784. கடியாத மூட்டையென்று விட்டு விடுவார்களா ?
Evil must anyhow be stamped out.

2785. கடியும் சுறுக்குத்தான், அடியும் சுறுக்குத்தான்.
Tit for tat.

2786. கடித்தமூட்டை கடியாதமூட்டை, எல்லாமூட்டையுஞ் சரி தான்.
Compare above 2779.

2787. கடுகத்தனை நெருப்பானாலும் போரைக் கொளுத்திவிடும்
Great effects from small causes.

2788. கடுக்காய்க்கு அகணி நஞ்சு, சுக்கிற்குப் புறணி நஞ்சு.
Different seats of vileness.

2789. கடுகிச்சு முடுகிச்சு வடுகச்சி காரியம்.
Telugu people always in a bustle.

2790. கடுகு போகிற இடத்தில் தடி எடுத்துக்கொண்டு திரிவான்.
Penny-wise and pound-foolish.

2791. கடுகு சிறுத்தாலும் காரம் போமா.
Quality does not depend on size.

2792. கடுகு போன இடம் ஆராய்வார், பூசணிக்காய் போன இடம் தெரியாது.
Similar to above 2790.

2793. கடுகு போன இடம் ஆராய்வார் மிளகு போன இடம் ஆராயார்.
Similar to preceding.

2794. கடுகுக் களவும் களவுதான் கர்ப்பூரக் களவும் களவுதான்.
Theft is theft whether big or small.

---

2795. கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டினதுபோல.
Said of the Kural—*Multum in Parvo.*

---

2796. கடுங்காற்று மழை கூட்டும், கடுஞ்சினேகம் பகை காட்டும்.
Extremes are dangerous.

---

2797. கடுஞ்சினேகம் கண்ணுக்குப் பகை.
Inordinate affection ends in hatred.

---

2798. கடுஞ்செட்டுக் காரியக்கேடாம்.
Miserliness makes a thing fail.

---

2799. கடுஞ்செட்டுக் கண்ணைக் கெடுக்கும்.
Similar to above.

---

2800. கடுஞ்சிநேகம் கண்ணால் கொடுக்கும்.
Compare above 2797.

---

2801. கடுஞ்சொற் கேட்டால் காதுக்குக் கொப்பளம்.
Effect of harsh words.

---

2802. கடுநட்பு பகைவிளைப்பு.
Similar to above 2797.

---

2803. கடும்பசி கல் மதில் உடைத்தும் களவுசெய்யச் சொல்லும்.
Desperate hunger inexorable.

---

2804. கடுமுடுக்கடா சேவகா கம்பரிசி அடா சம்பளம்.
A boaster rebuked.

---

2805. கடும்போரில் கைவிடலாமா ?
Forsaking in time of danger.

---

2806. கடுகிலும் கால்திட்டம் கரண்டி &c.
Terrible exaggeration.

---

2807. கடுவெளியை, கானல் சலமாய்க் கண்டதுபோல.
Being in a state of illusion.

---

2808. கடை கெட்ட மூளிக்குக் கோபம் கொண்டாட்டம்.
Deformed persons usually short-tempered.

---

2809. கடைகெட்ட மூளி குலானாலும் காற்பணத்துக்காசுசெல்லும்.
Confinement always expensive.

2810. கடைகெட்டவாழ்வு தலைகட்டநேரமில்லை.
An unfortunate wife's complaint.

2811. கடைக்குக் கடை ஆள் இருப்பார்கள்.
Everybody has an eye to his own affair.

2812. கடைசிச் சோற்றுக்கு மோரும், கால் மாட்டிற்குப் பாயும் வேண்டும்.
Something necessary to finish off everything.

2813. கடைத் தேங்காய் எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைத்தாற் போல்.
Robbing Peter to pay Paul.

2814. கடைந்த மோரிலே குடைந்து வெண்ணெய் எடுக்கிறது.
So niggardly.

2815. கடையிலே கொண்டு மனையிலே வைக்கிறான்.
Buying and storing up.

2816. கடையில் அரிசி கஞ்சிக்கு உதவுமா, அபிசாரி புருஷன் ஆபத்துக்கு உதவானா?
Something must be your own.

2817. கடையில்வந்ததும்அரிசியோ, நடையில் வெந்ததும்சாதமோ?
Quality not appearance is the test.

2818. கடையிலே கட்டித்தூக்கினாலும் அழுகற்பூசணிக்காய் அழுகலே.
Change of circumstances does not affect character.

2819. கட்டக்கரியமணியில்லாமற்போனாலும் பேர்பொன்னம்மாள்.
Name not suiting condition.

2820. கட்டறிந்த நாயுமல்ல, கனமறிந்த கப்பனையுமல்ல.
A stranger to dignity.

2821. கட்டாந்தரை அட்டைபோல.
Adhering so tenaciously.

2822. கட்டாந்தரை அட்டைபோல கட்டிக்கொண்டு புரளுகிறதா?
Similar to preceding.

2823. கட்டாந்தரையில் தேள்கொட்டக் குட்டிச்சுவரில் நெறிகட்டினதாம்.
Unaccountable sympathy.

2824. கட்டாந்தரையிலே முக்குளிக்கிறது.
Doing a foolish act.

2825. கட்டித்தங்கமானால் கலீரென்றொலிக்குமா ?
Belying its qualities.

2826. கட்டிலின்மேலேறியும் முறையா ?
Why talk of law *after* violating it?

2827. கட்டிக் கொண்டு வரச்சொன்னால் வெட்டிக் கொண்டுவருவான்.
A tendency to exceed one's orders.

2828. கட்டி அழுகிறபோது கையும் துழாவுகிறதே.
Said of stealthy habits.

2829. கட்டில் உள்ள இடத்தில் பிள்ளைபெற்றுச் சுக்குக்கண்ட இடத்தில் காயந்தின்பாள்.
Not caring for comforts.

2830. கட்டி வழி விட்டால் வெட்டி அரசு ஆளலாம்.
Desiring efficient means.

2831. கட்டி அழுகையிலே என் மகளே உனக்குப் பெட்டியிலே கை யென்ன ?
Compare above 2828.

2832. கட்டி அடித்தால் என்ன விட்டு அடித்தால் என்ன ?
Punishment all the same however inflicted.

2833. கட்டிப்பீ எல்லாம் கூழ்ப்பீயாய்க் கரைந்தது.
Punishment or fear so complete. (Vulgar).

2834. கட்டினவீட்டுக்கு பழுதுசொல்லுவார் பலர்.
It is easy to criticize.

2835. கட்டினவீட்டுக்கு எட்டுவக்கணை.
Similar to above.

2836. கட்டினவீட்டுக்கு கருத்துச்சொல்வார் அநேகர்.
Similar to 2834.

2837. கட்டிக்கொடுத்த சோறும் கற்றுக்கொடுத்த சொல்லும் கால் முள்ளளவுமிருக்குமா ?
Temporary measures not enduring.

2838. கட்டினவனுக்கு ஒருவீடானால் கட்டாதவனுக்குப் பலவீடு.
Landlord *versus* tenant.

2839. கட்டிலைத்திருப்பிப்போட்டால் தலைவலிபோகுமா ?
Superficial remedies avail nothing.

2840. கட்டிவைத்தபணத்தைத் தட்டிப்பறித்தாற்போல.
Losing something suddenly.

2841. கட்டிவிதை வெட்டிவிதை.
Agricultural maxim.

2842. கட்டிவைத்த பூனையை அவிழ்த்து விட்டு வாபூஸ் வாபூஸ் என்றால் வருமா ?
Self-inflicted evil not easily got rid of.

2843. கட்டுப்படாதபெண் சொட்டுப்போட்டுக் கொண்டுபோயிற்று.
An unruly young wife.

2844. கட்டுமரத்தைச் சென்னாக்குனி அரிக்கிறதுபோல.
Destruction imperceptible.

2845. கட்டுக்கடங்கா காளைபோல.
An unmanageable fellow.

2846. கட்டுக்குக்கட்டு மாறிக்கட்டவேண்டும்.
Recommends thoroughness.

2847. கட்டுப்பட்டாலும் கவரிமான் மயிரால் கட்டுப்படவேண்டும், குட்டுப் பட்டாலும் மோதிரக் கையால் குட்டுப்படவேண்டும்.
A noble master desirable.

2848. கட்டுச்சோற்று மூட்டையும் இளம்பிள்ளையும் எடுக்கலாகாது.
They are very troublesome.

2849. கட்டைக்குப்போம்போது காலாழி பீலியா ?
Why jewels for the dying ?

2850. கட்டை விளக்குமாற்றுக்குப் பட்டுக்குச்சு கட்டினாற்போல்.
Adorning an unworthy person.

2851. கட்டைப்பாரையை விழுங்கிச் சுக்குக்கஷாயம் குடித்தது போல.
Employing unsuitable remedies.

2852. கட்டோடே போனால் கனத்தோடே வரலாம்.
Go with gifts and come with honor.

2853. கணக்கதிகாரத்தைப் பிளக்கும் கோடாலி.
An expert in accounts.

2854. கணக்கன் கணக்கு அறிவான், தன் கணக்கைத் தான் அறியான்.
Physician, heal thyself.

2855. கணக்கன் கணக்கைத்தின்றுவிடில் கணக்கனைக் கணக்கு தின்றுவிடும்.
Account-keeping dangerous.

2856. கணக்குக் குஞ்சையும் காக்கைக் குஞ்சையும் கண்ட இடத்திலே கண்ணைக் குத்து.
Very disagreeable.

2857. கணக்கப்பிள்ளை பெண்சாதி கடுக்கன் போட்டுக்கொண்டாளென்று காரியக்காரன் பெண்சாதி காதை அறுத்துக்கொண்டாளாம்.
Effect of envy.

2858. கணக்கைப் பார்த்தால் பிணக்கு வரும்.
Examining accounts not pleasant.

2859. கணக்கனுக்குப் பட்டினி உடன் பிறப்பு.
Accountants always starving.

2860. கணக்கு அறிந்த பிள்ளை வீட்டில் இருந்தால் வழக்கு அறாது.
Always meddlesome.

2861. கணக்கன் வீட்டுக் கலியாணம் விளக்கெண்ணெய்க்குக் கேடு.
Sitting late at night, calculating the expence.

2862. கணக்கிலே கயறு கோத்து யிருக்கிறது.
Accounts interminable.

2863. கணக்கப்பிள்ளை எல்லாம் எழுத்துப்பிள்ளை அல்ல.
Accountants not good writers.

2864. கணபதி பூசை கைமேலே.
Immediate profit.

---

2865. கணவனைப் பிரிந்தும் அயல்வீட்டில் இருக்கிறதா ?
Enemies should live afar.

---

2866. கணவனை வைத்துக்கொண்டல்லவோ கள்ளமாப்பிள்ளையைக் கொள்ளவேண்டும்.
Even vice needs a cloak.

---

2867. கணுக்கால் பெருத்தால் கணவனைத் தின்பாள்.
Said of an impertinent wife.

---

2868. கண்கண்டது கைசெய்யும்.
To see is to learn.

---

2869. கண்கட்டி மந்திரமா காட்ட வந்தாய் ?
Said to one who is attempting to cheat.

---

2870. கண்கட்டின புருபோல.
Helpless and sightless.

---

2871. கண் குருட்டுக்கு மருந்து இட்டால் தெரியுமா ?
Certain defects irremediable.

---

2872. கண்குற்றம் கண்ணுக்குத் தெரியுமா ?
Ignorance of one's own defects.

---

2873. கண்குத்திப்பாம்புபோல கண்மூடிப் பார்த்திருந்தேன்.
Watching my opportunity.

---

2874. கண் குருடு ஆனாலும் நித்திரையில் குறையா ?
Defects do not affect enjoyment.

---

2875. கண் கெட்ட பிறகா சூரிய நமஸ்காரம் செய்கிறது?
Winnow when the wind blows.

---

2876. கண்கொண்டல்லவோ வழி நடக்க வேண்டும்.
Nothing can be effected without means.

---

2877. கண்டதெல்லாம் காட்சி கொண்டதெல்லாம் கொள்கை.
Great credulity.

---

2878. கண்பார்த்தால் கை செய்யும்.
Natural ability to imitate.

---

2879. கண்ட பாவனையாய்க் கொண்டை முடிக்கிறது.
Careless habliment.

2880. கண்ட கண்ட கோயில் எல்லாம் கை எடுத்துக் கும்பிட்டேன்.
Relates to worship.

2881. கண்டது பாம்பு கடித்தது மாங்கொட்டை.
Fear greater than fact.

2882. கண்டது காட்சி பெற்றது பேறு.
Take whatever comes.

2883. கண்டதைக் கேளாவிட்டால் உண்டுறங்க மாட்டான்.
Hankering after something.

2884. கண்டதைக் கேளாவிட்டால் கொண்டவன் அடிப்பான்.
A wife's fears.

2885. கண்டறியாதவன் பெண்டு படைத்தால் காடு மேடு எல்லாம் இழுத்துத் திரிவாளும்.
An ignorant husband.

2886. கண்டது காட்சி கொண்டது கோலம்.
Similar to above 2877.

2887. கண்டது சொன்னால் கொண்டிடும் பகை.
Truth telling creates enmity.

2888. கண்டதைக்கொண்டு கரையேறவேண்டும்.
A tangible way to heaven necessary.

2889. கண்டதைக்கொண்டு கவலைப்படுகிறதா ?
Busying oneself with trifles.

2890. கண்டமாப்பிள்ளையை நம்பிக் கொண்டமாப் பிள்ளையைக் கைவிட்டாற்போல.
Losing essentials for trifles.

2891. கண்டதை கற்கப் பண்டிதன் ஆவான்.
The way to become learned.

2892. கண்டது கேட்டது சொல்லாதே காட்டுமரத்திலே நில்லாதே.
There is risk in both.

2893. கண்டது பாம்பு கடித்தது கருக்குமட்டை.
Compare above 2881.

---

2894. கண்டதைக் கற்றுக்கொண்டு கனாயேறு.
First learn what is at hand.

---

2895. கண்டவன் எடானோ?
First come, first served.

---

2896. கண்டவிடம் கைலாயம்.
Any thing satisfactory.

---

2897. கண்டதைக்கொண்டு காலைவாரியடிக்கிறது.
Attacking unawares.

---

2898. கண்டறியவேண்டும் கரும்புசுகம், உண்டறியவேண்டும் உடல்.
Different ways of knowing different things.

---

2899. கண்டறிந்த நாயுமல்ல கனமறிந்த கப்பறையுமல்ல.
Compare above 2820.

---

2900. கண்டார் கண்டபடிபேசுகிறது.
Talking at random.

---

2901. கண்டாலல்லவோ பேசுவார் தொண்டமான்.
We must meet, in order to talk.

---

2902. கண்டால் தெரியாதா கம்பளி ஆட்டுமயிரை?
Seeing is believing.

---

2903. கண்டால் துலை காணாவிட்டால் மலை.
Imagination *versus* reality.

---

2904. கண்டால் முறை சொல்லுகிறது காணாவிட்டால் பெயர் சொல்லுகிறதா?
One thing *before* one, and another *behind* one.

---

2905. கண்டிடில் முறைசொல்லுகிறது, காணாவிடில் பெயர் சொல்லுகிறது.
Another form of preceding.

---

2906. கண்டிருந்தும் மலத்தைக் கவிழ்ந்திருந்து தின்னுவார்களா?
No one deliberately degrades himself.

---

2907. கண்டிடில் ஆயம் காணாவிடில் மாயம்.
Compare above 2905.

---

2908. கண்டிடில் ஒன்று காணாவிடில் ஒன்று.
Compare above.

---

2909. கண்டுசெத்த பிணம் ஆனால் சுடுகாடறியும்.
A known corpse has an honourable burial.

---

2910. கண்டு பேசக்காரியம் இருக்கிறது முகத்தில் விழிக்க வெட்கமாயிருக்கிறது.
Desire *versus* shame.

---

2911. கண்டு எடுத்தவன் கொடுப்பானா?
Why should he?

---

2912. கண்டும் காணவில்லை, கேட்டும் கேட்கவில்லையென்று இருக்கவேண்டும்.
Maintain ignorance.

---

2913. கண்ணாடி, பித்தன், கருங்குரங்கு, காட்டானை, மண்ணாளும் வேந்தனோடைந்து.
Five similar things.

---

2914. கண்ணாரக் கண்டதற்கு என் அகப்பைக்குறி?
Occular demonstration needs no witness.

---

2915. கண்ணாரக் காணாதது மூன்றில் ஒருபங்கு.
Rumour greater than reality.

---

2916. கண்ணாலே சிவன் கடகட என்றுபோனாலும் வண்ணான் கழுதை சுமந்தே தீரவேண்டும்.
One fated to labour has no relief.

---

2917. கண்ணான பேர்களை மண்ணாக்குகிறான்.
Ruins good people.

---

2918. கண்ணான மனதைப் புண்ணாக்குகிறான்.
Makes the mind sore.

---

2919. கண்ணாலே சிவன் கட கட வென்று போனாலும் வண்ணானுக்கு மழை நஞ்சு.
Rain always disagreeable to the *dhoby*.

---

2920. கண்ணாடி நிழலிற் கண்ட பணம் கடனுக்கு உதவுமா ?
What is not real is not useful.

---

2921. கண்ணால் கண்டதற்குச் சாட்சியா ?
Similar to above 2914.

---

2922. கண்ணான பேரை யெல்லாம் புண்ணாக்கிக்கொண்டு கரும்பான பேரை யெல்லாம் வேம்பாக்கிக்கொண்டான்.
Compare above 2917.

---

2923. கண்ணினாற் கண்டது பொய் காதினாற் கேட்டது மெய்.
Hear-say credited in preference to eye-testimony.

---

2924. கண்ணினாற்கண்டது பொய் கருதிவிசாரித்தது மெய்.
Cross-examination commended.

---

2925. கண்ணினாற் கண்டதைக் கையினாற்செய்கிறது.
Imitation recommended.

---

2926. கண்ணினாற் கண்டது பொய் அகப்பைக் கூரு பார்த்தது மெய்.
An eye witness discredited.

---

2927. கண்ணினாற் கண்டதை எள்ளுக்காய் பிளந்தாற்போற் சொல்லுகிறது.
Straightforward impartial testimony.

---

2928. கண்ணிமை கைந்நொடி அளவே மாத்திரை.
Quantity in articulation.

---

2929. கண்ணியில் அகப்பட்ட மான்போல் கலங்குகிறான்.
Perplexed and in trouble.

---

2930. கண்ணினால் எண்ணுவான்.
Counting at sight.

---

2931. கண்ணியில் அகப்பட்ட கரிக்குருவிபோல் கலங்குகிறான்.
Compare above.

---

2932. கண்ணிற் பட்டாற் கரிக்குமா, புருவத்திற்பட்டாற் கரிக்குமா?
Seek the right place.

---

2933. கண்ணின்முன்னே ஒன்று சொல்லிக் காணாத இடத்திலே இரண்டு சொல்லுகிறது.
Unreliable witness.

---

2934. கண்ணிலே எண்ணெய் கரிக்குமோ பிடரியில் எண்ணெய் கரிக்குமோ ?
Similar to above.

2935. கண்ணிற் புண் வந்தால் கண்ணாடி பார்க்கல் ஆகாது.
Certain evils—certain pains.

2936. கண்இமைபோல கரிசனமாய்க் காக்கிறது.
Devoted attention.

2937. கண்இமையா முன்னே பறந்து போனான்.
Disappeared in a moment.

2938. கண் உள்ளபோதே காட்சி.
Opportunity does not last long.

2939. கண் ஊனன் கைப்பொருள் இழப்பான்.
Evil of defective sight.

2940. கண்ணிலே குத்தின விரலைக் கண்டிப்பார் உண்டோ ?
Against casting off useful servants for a trifling fault.

2941. கண்ணிற் பட்ட கையைத் தறிப்பார் இல்லை.
Similar to preceding.

2942. கண்ணிலே பட்டால் விரலைத் தறிக்கிறதா ?
Compare above.

2943. கண்ணிலே படுகிறது புருவத்திலே.
Sympathy by contiguity.

2944. கண்ணில் கண்டது கோடி காணாதது அனந்தம் கோடி.
More unseen than seen.

2945. கண்ணில்உண்டா புண்ணில் கோலிட்டதுபோல.
All are not to be treated alike.

2946. கண்ணுக்குக் கண்ணருகே கர்ணலாம்.
Limitedness of human vision.

2947. கண்ணுக்குக்கண்ணாயிருந்து கடைப்பெண்ணுக்கு வழிபார்க்கிறது.
Unfaithful friend.

2948. கண்ணுக்கு இமை காதமா ?
Said of something near.

2949. கண்ணுக்குப் புண்ணும் அல்ல, காண்பார்க்குநோயும் அல்ல.
Said of something not disagreeable.

2950. கண்ணும் கருத்தும் உள்ளபோதே காணேம், அதன் பின்பு என்ன கிடைக்கும்?
If not in life, seldom after death.

2951. கண்ணுக்குப் புருவம் காதமா?
Compare above 2948.

2952. கண்ணுக்குட் சம்மணம் கொட்டுவாள் கம்பத்தில் ஐந்தானை கட்டுவாள்.
Said of a very wily woman.

2953. கண்ணுக்குக் கலந்தண்ணீர் விடுகிறது.
Ill-proportioned enpenditure.

2954. கண்ணுக்கும் மூக்குக்கும் காலம் இப்படி வந்ததே.
Regrets disease of eye and nose.

2955. கண்ணுக்கும் மூக்குக்கும் நேராகப்பார்.
Recommends careful looking.

2656. கண்ணும் புண்ணும் உண்ணத்தீரும்.
A play on the word "to eat."

2957. கண்ணை இமை காத்ததுபோல்.
A mere apparent protection.

2958. கண்ணைக் கெடுத்த தெய்வம் மதியைக் கொடுத்தது.
Nature compensating an evil.

2959. கண்ணைக் கொண்டு நடந்ததுபோல உன்னைக் கொண்டு நடந்தேன்.
Grateful acknowledgment.

2960. கண்ணைக் கட்டிக் காட்டிலே விட்டதுபோல.
Abandoning one to one's fate.

2961. கண்ணைக் காட்டி அழைத்தால் வாராதவள் கையைப் பிடித்து இழுத்தால் வருவாளா?
Argument *a fortiori*.

2962. கண்ணைக் கெடுத்த தெய்யவம் கோலைக் கொடுத்தது.
Compare above 2958.

2963. கண்ணைமூடிக் குட்டுகிறதா?
Injuring a helpless person.

2964. கண்ணொளி பெரிதோ கதிரொளி பெரிதோ?
The eye compared with the sun.

2965. கண்ணோடேபிறந்த காவேரியானாலும் நம்மெண்ணஞ் சரியா [குமோ.
Our intentions fallible.

2966. கண்ணோ, புண்ணோ?
Delicate nature of the eye.

2967. கண்ணோ புண்ணோ என்றுகலங்கி மறந்திருக்கிறது.
In doubtful absent-mindedness.

2968. கண்ணைப்பிடுங்கி முன்னேஎறிந்தும் கண்கட்டி வித்தை என்பார்போல.
The nature of the incredulous.

2969. கண்தெரிந்து நடப்பவர்கள் பள்ளத்தில் விழமாட்டார்கள்.
Walk with your eyes open.

2970. கண்தெரிந்து வழி நடக்கும்படி நினை.
Compare preceding.

2971. கண்பறி கொடுத்துக் கலங்கினாற்போல.
Losing a precious possession.

2972. கண் பார்த்தால் கைசெய்யும்.
To see is to do.

2973. கண்பார்த்துக் கையால் எழுதாதான் கசடனாகும்.
Inability to imitate condemned.

2974. கதவைச் சாத்தினால் நிலை புறம்பு.
Position of certain persons accidental.

2975. கதிரவன் சிலரைக் காயேன் என்குமோ?
"He maketh his sun to rise on the evil and the good."

2976. கதிரைக் களைந்தும் களையைப் பிடுங்கு.
Weed at any cost.

2977. கதிர் நூல் குறைந்தாலும் கள்ளச்சி கழுத்து நூல் குறையா [து.
Thieves prosper.

2978. கதிர்போலிளைத்துக் குதிர்போல் பெருப்பது.
Alternately thin and stout.

2979. கதைக்குக் கால் இல்லை கொழுக்கட்டைக்குத் தலை இல்லை.
A lie has no legs.

2980. கதைக்குக் காலும் இல்லை தலையும் இல்லை.
Stories unreliable.

2981. கதைக்குக்காலில்லை கண்ட புருஷனுக்கு முறையில்லை.
Stories compared to paramours.

2982. கதைக்குக் கால் இல்லை பேய்க்குப் பாதம் இல்லை.
Stories compared to ghosts.

2983. கதையோ பிராமணு கந்தையோ பொத்துகிருய், அல்லடீ பே
ய்முண்டாய் சீலைப்பேன் குத்துகிறேன்.
Misunderstood occupation.

2984. கத்தரிக்காய் சொத்தை என்றால் அரிவாள் மணைக் குற்றம் எ
ன்கிருள்.
Laying the blame on another.

2985. கத்தரிக்காயிலே காலும் கையும் முளைத்தாற்போல.
Short and ill-shaped.

2986. கத்தரிக்காய் விளை சுரைக்காய் காய்க்காது.
One seed cannot grow another plant.

2987. கத்தரிக்காய் வாங்கப் பூசணிக்காய் கொசுறு?
Unreasonable bargaining.

2988. கத்தியும் கடாவும் போலே.
At daggers drawn.

2989. கத்தியைப் பார்க்கிலும் கன கோபம் கொலை செய்யும்.
Anger kills more than a knife.

2990. கத்திகட்டி பெண்சாதி எப்போதும் கைம்பெண்சாதி.
Uncertain nature of military life.

2991. கத்தி இருக்கும் இடத்துக்கு மலை காவுகிறதா?
Mahommed going to the mountain.

2992. கத்திப்பிடிக்கு பிடித்தால் அரிவாள்பிடிக்கு ஆகட்டும்.
Always aim high.

2993. கத்தியும் வெண்ணெயும் காய்ச்சித் துவைத்துக் கடை.
Sword-making compared to butter-churning.

2994. கத்தி எட்டினமட்டும் வெட்டும் பணம் எட்டாதமட்டும் வெட்டும்.
Money more powerful than a sound.

2995. கத்திரிக்கொல்லையிலே கூத்து பார்த்தாற்போல.
Doing a useless action.

2996. கத்துமட்டும் கத்திப்போட்டுக் கதவைச் சாத்திவிட்டுப் போ.
You will not be attended to.

2997. கத்து கத்து என்றால் கழுதையும் கத்தாது, சொல்லு சொல்லு என்றால் புலவனும் சொல்லான்.
Force cannot achieve anything.

2998. கந்தப்பொடிக் கடைக்காரனுக்கு வாசனை தெரியுமா?
" He smells of leather."

2999. கந்தையை அவிழ்த்தால் சிந்தை கலங்கும்.
Poor and ill-clad.

3000. கந்தையை அவிழ்த்தால் குட்டிவெளிச்சம் தெரியும்.
Examination reveals everything.

3001. கந்தைக்குத் தக்க பொந்தை.
Repair according to quality.

3002. கந்தைத் துணியும் கரிவேஷமும் ஆனான்.
Has turned quite wretched.

3003. கந்தைக்குச் சரடு ஓட்டுகிறது எல்லாம் பலம்.
Mending a torn garment.

3004. கந்தை ஆனாலும் கசக்கி உடு, கூழ் ஆனாலும் குளித்துக் குடி.
Recommends great cleanliness.

3005. கந்தையைக்கட்டி வெளியேவந்தால் கண்ணாட்டி, வெள்ளையைக்கட்டி வெளியேவந்தால் வெள்ளாட்டி.
The world is always captious.

3006. கபடன் சொல்லினும் கடிய சொல்லே நலம்.
Harsh word better than fraud.

3007. கபடுசூது கடுகாகிலும் தெரியாது.
Quite guileless.

3008. கபாலக் குத்து கண்ணைச் சுழித்தது.
Effect of neuralgia.

3009. கப்பரையிலே கல்லு விழுகிறது.
Disappointment as to livelihood.

3010. கப்பல் அடிபாரத்துக்கு கடற்கரை மண்ணுக்குத் தாவுகேட்டதுபோல.
A foolish request.

3011. கப்பல் உடைந்தாலும் கன்னத்திலே கையைவிடுகிறதா.
Fortitude under affliction.

3012. கப்பலிலே பாதிபாக்குப் போட்டதுபோல.
Risking a fortune.

3013. கப்பல் எறிப் பட்ட கடன் கொட்டை நூற்று விடியும் ?
Great losses not easily remedied.

3014. சப்பல் ஓடிப் பட்ட கடன் கொட்டை நூற்றுத் தீருமோ ?
Similar to preceding.

3015. கப்பலேறிக் கடலில் கவிழ்த்தது போல.
Losing all in a dangerous enterprise.

3016. கப்பலேறி காகம் போலே கலங்குகிறது.
Voyages discouraged.

3017. கப்பல் போம் துறை கிடக்கும்.
Ship *versus* harbour.

3018. கப்பற்காரன் பெண்டாட்டி தொப்பைக்காரி, கப்பல் உடைந்தால் பிச்சைக்காரி.
Ship-owner's fortune fluctuating.

3019. கப்பற்காரன் வாழ்வு காற்று அடித்தால் போச்சு.
Compare preceding.

3020. கப்பிடாவு மில்லை வெட்டுகத்தியு மில்லை.
Destitute of tools.

3021. கப்பி என்றால் வாயைத்திறக்கும் கடிவாளம் என்றால் வாயை மூடிக்கொள்ளுகிறது.
A cunning person.

3022. கமரி லூற்றிய பால்.
Something wasted.

3023. கமரிற் கவிழ்ந்த பால், அமரர்க்கு இட்ட அன்னம்.
Food offered to celestials.

3024. கம்பப் பிச்சையோ கடைப் பிச்சையோ ?
A kind of beggary.

3025. கம்பளியிலே சோற்றைப் போட்டு மயிர் மயிர் என்கிறதா ?
Self-inflicted trouble.

3026. கம்பளி விற்ற பணத்துக்கு மயிர் முளைத்து இருக்கிறதா ?
Gain unaffected by means.

3027. கம்பளியில் ஒட்டின கூழைப்போல.
Quite spoiled.

3028. கம்பளிமேல் பிசின்.
Irremovable.

3029. கம்பன் வீட்டு அடுப்புக் கட்டியும் கவிபாடும்.
Atmosphere contagious.

3030. கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடும்.
Compare preceding.

3031. கம்பளி மூட்டைஎன்று கரடி மூட்டையை அவிழ்த்தானாம்.
A great disappointment.

3032. கம்புக்குக் களை வெட்டினாற்போலும் இருக்கவேண்டும், தம்பிக்குப் பெண்கொண்டாற்போலும் இருக்கவேண்டும்.
Knocking two birds at one stroke.

3033. கம்புமாவு கும்பினால் களிக்காமா?
A bad sign.

3034. கம்மாளன் இருந்தவிடமும் கழுதை யிருந்தவிடமும் சரி.
Black-smithery always dirty.

3035. கம்மாளன் பசுவைக் காதறுத்துக் கொள்.
He may claim it again.

3036. கம்மாளன் பல்லக்கேறினால் கண்டவர்க்கெல்லாம் இறங்க வேண்டும்.
Everybody's servant.

3037. கம்மாளன் வீட்டில் பிள்ளை பிறந்தால் தேவடியாள் தெருவில் சர்க்கரை வழங்கவேண்டும்.
Given to concubinage.

3038. கம்மாளன் நாய் சம்மட்டித் தொனிக்கு அஞ்சுமா?
It lives in noise.

3039. கயிறு இல்லாப் பம்பரம்போல.
Without an essential.

3040. கயிற்றைப் பாம்பென்று எண்ணிக் கலங்குகிறது.
Giving way to false fears.

3041. கரகத்து நீர் காதங் காக்கும்.
A little going a great way.

3042. கரடிகையில் உதைபட்டவனுக்கு கம்பளிக்காரனைக் கண்டால் பயம்.
A burnt child dreads the fire.

3043. கரடிக்குப் பிடித்த இடமெல்லாம் மயிர்.
Bears are very hairy.

3044. கரடி பிறை கண்டதுபோல்.
An unusual event.

3045. கரடி துரத்தினாலும் கைக்கோளத் தெருவில் போக வழியிரா [து.
This street is crowded.

3046. கரடியால் துரத்தப்பட்டவனுக்குக் கம்பளிக்காரனைக் கண்டாற் பயம்.
Compare above 3042.

3047. கரடி புற்றிலே வாய் வைத்தாற்போல்.
A sudden terror.

3048. கரணம் தப்பினால் மரணம்.
Gymnastics often fatal—said of great risks.

---

3049. கரதலாமலகம்போல் காண்கிறது.
Exposed to full view.

---

3050. கரம்மாறிக் கட்டினால் கனம் குறையாது.
The weight is the same.

---

[ளாம்.
3051. கரிசனப்பட்ட மாமியார் மருமகனைப் பார்த்து ஏக்கமுற்றா
An unchaste mother-in-law.

---

[அழ.
3052. கரிசனமுற்ற சிற்றாத்தே நீ கம்பங்கொல்லையில் வாடி கட்டி
A tempting invitation.

---

3053. கருப்பிலே பிள்ளை விற்றாற் போலே.
Selling children in a famine.

---

3054. கருப்புக்கு இருந்து பிழை, கலகத்துக்கு ஓடிப் பிழை.
A good advice to fear war more than famine.

---

3055. கரியாய் உமியாய்க் கட்டை விளக்குமாறாய்.
Becoming miserable by degrees.

---

3056. கரிவிற்றபணம் கறுப்பாயிருக்குமா ?
Compare above 3026.

---

3057. கரு இல்லாத வித்தையும் குரு இல்லா சீஷனும்போல்.
No effect without due cause.

---

3058. கரு இல்லாத முட்டையும் குரு இல்லாத வித்தையும்.
Another form of preceding.

---

3059. கருக்கி உருக்கி நெய்வார்த்தாலும் கண்ட நியாயந்தான் சொல்லுவான்.
An honest witness.

---

[ராண்.
3060. கருங்கண்ணி பட்டால் கரையான் கண்ணும் திரும்பிப் பா
Good fortune makes one proud.

---

3061. கருங்கல்லிலே நார் உரிப்பான்.
Said of a miser.

---

3062. கருங்காலி உலக்கைக்கு வெள்ளிப் பூண் கட்டினதுபோல.
Adorning the unworthy.

---

3063. கருங்காலிக் கட்டைக்கு வாய் கோணுக் கோடாலி காதலிதண்டுக்கு வாய் கோணிற்றும்.
Somthing quite improbable.

3064. கருடன் காலில் சதங்கை கட்டியதுபோல்.
Thwarting one's efforts.

3065. கருடன் பறக்க ஒரு கொசுகும் பறந்தாற்போல.
Foolish imitation.

3066. கருடனைக் கண்ட பாம்புபோல.
Quite terrified.

3067. கருப்பங்கட்டியிலும் கல்லு இருக்கும்.
Nothing without a defect.

3068. கருப்பங்கொல்லையிலே நெருப்புப்பொரி விழுந்தாற்போல.
Causing a great destruction.

3069. கருப்புக்கட்டி ஆதாயத்தை எறும்பு இழுத்துக்கொண்டு போச்சுதாம்.
A trifling loss.

3070. கருப்புட்டி என்றவன் வாயைச் சளுப்புட்டி என்று நக்குகிறதா?
Readily yielding to appetite.

3071. கருமத்தை முடிக்கிறவன் கடலை ஆராய்வான்.
A successful performer.

3072. கரும ஒழுங்கு பெருமைக்கு அளவு.
Action measure of dignity.

3073. கருமத்தை முடிக்கிறவன் அருமை ஒன்றும் பாரான்.
Persistence minds no losses.

3074. கருமான் இருந்த இடமும் கழுதை புரண்ட களமும் சரி.
Compare above 3031.

3075. கரும்பாலையிற்பட்ட எறும்புபோல.
In great torture.

3076. கரும்பிலும் தேன் இருக்கும் கள்ளியிலும் பால் இருக்கும்.
There's good in everybody.

2877. கரும்பு கோணலானால் கட்டியும் பாகுமாம், மனது கோணலானால் என்னசெய்யலாம்?
Nature *versus* the will.

3078. கரும்புக் கட்டாலே கழுதையை அடித்தால் கரும்புருசி கழுதைக்குத் தெரியுமோ?
The base cannot appreciate worth.

3079. கரும்புக்கட்டுக்கு எறும்புதானே வரும்.
Some attract naturally.

3080. கரும்பு முறித்துக் கழுதையை அடித்த கதை.
A costly punishment.

3081. கரும்பு தின்னக் கூலியா?
No pay for doing a pleasant thing.

3082. கரும்பு தின்னாமல் வேம்பு தின்பதுபோல்.
Preferring evil to good.

3083. கரும்பும் எள்ளும் கசக்கினால்தான் பலன்.
Some yield only after pressure.

3084. கரும்பும் வேம்பு ஆயிற்றே.
Good turned into evil.

3085. கரும்புக்குக் கணுஇருந்தாலும் கசக்குமா?
Little defects do not affect one's nature.

3086. கரும்புக்கு உழுத புழுதி காய்ச்சின பாலுக்குச் சருக்கரை ஆமா?
Unsuitable suggestions.

3087. கரும்பு கசக்கிறது வாய்க்குற்றம்.
Our sinfulness makes good evil.

3088. கரும்பு ருசியென்று வேரோடு பிடுங்கலாமா?
Killing the goose which laid golden eggs.

3089. கரும்பு கட்டோடே இருந்தால் எறும்பு தானே வரும்.
Compare above 3079.

3090. கரும்பை விரும்ப, அது வேம்பு ஆயிற்று.
Excess ends in disgust.

3091. கரும்பைக் கழுதைமுன் போட்டால் கழுதைக்குத் தெரியுமோ கரும்பு ருசி ?
Compare above 3078.

3092. கரும்பை விரும்ப விரும்ப வேம்பு.
Compare above 3090.

3093. கருவிழி மணிபோல கரிசனமாய்க் காக்கிறது.
Protecting with great care.

3094. கருவேலமரத்திற்கு நிழல் இல்லை, கன்னானுக்கு முறை இல்லை.
A blacksmith's character.

3095. கருவை உரு அறியான், கண்டாரைப் பேரறியான்.
A stupid person,

3096. கரை காணாத தோணிபோல.
One who has lost his way.

3097. கரை தட்டின கப்பல்போல.
In the midst of ruin.

3098. கரைப்பக்கம் பாதை இருக்கக் கப்பல் ஏறினவனும், சொல்லாததை மனையாளுக்குச் சொன்னவனும் பட்ட பாடுபோல.
Result of deliberate folly.

3099. கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்.
The powerful over-master every thing.

3100. கர்த்தாவைக் குருடன் வேண்டுவது கண்பெறத்தானே.
A natural prayer.

3101. கல உமி தின்றால் ஒரு அரிசி தட்டாதா ?
Thre is no one altogether useless.

3102. கலகத்திலே புகாதவன் நரகத்திலே போவானாம்.
Urges military service.

3103. கலகத்திலே போயும் கால்மாடு தலைமாடா ?
Folly of seeking comfort in the midst of danger.

3104. கலகம் கலந்தால் உலகம் கலங்கும்.
Effect of revolutions.

3105. *கலகம் பிறந்தால் நியாயம் பிறக்கும்.*
Justice resulting from revolt.

3106. *கலகமே மெய்யானாற் புளுகாதவன் பாவம்.*
A liar's misfortune.

3107. *கலக்கமில்லாநெஞ்சு இளக்கரிப்பென்ன ?*
No fear—no care.

3108. *கலக்கந்தை கட்டிக்கொண்டு காணப் போனாளாம் இருகலக் கந்தையை கட்டிக்கொண்டு எதிரே வந்தாளாம்.*
Host poorer than guest.

3109. *கலக் கம்பு தின்றாலும் காடை காட்டிலே.*
A useless parasite.

3110. *கலக்கினும் கடல் சேறாகாது.*
The great do not lose their temper.

3111. *கலசத்துக்குத் தெரியுமோ கர்ப்பூர வாசனை.*
The base cannot appreciate good things.

3112. *கலத்திலே சோற்றை இட்டுக் கையைப் பிடித்தாற்போல.*
Tantalizing behaviour.

3113. *கல நெல்லுக்குக் கல உமி இருக்குமா ?*
Wastage must be in proportion.

3114. *கலப் பணத்தைப் பார்க்கிலும் ஒரு கிழப் பிணம் நல்லது.*
An old person more useful than money.

3115. *கலப்பாலை ஒருமிக்கக் குடித்தபூனையை உழக்காகிலும் கறக்க
ச்சொன்னால் கறக்குமா ?*
A useless fellow.

3116. *கலப்பாலையும் சோற்றையும் காலால் உதைத்துப்போட்டு விலைமோருக்கும் கூழுக்கும் வெளியே தவிக்கிறதா?*
Rejecting better for worse.

3117. *கலப் பால் கறக்கலாம், துளிப் பால் முலைக்கு ஏற்றலாமா?*
Easier to enjoy than create.

3118. *கலப் பாலுக்குத் துளிப் பிரை.*
A little leaven leaveneth the whole lump.

3119. கலப்பானாலும் பூசபூசப் பொன்னிறம்.
Commends polishing.

3120. கலப் பாலில் ஒரு துளி விஷம் கலந்தாற்போலே.
Infusing an element of evil.

3121. கலப் பால் குடித்த பூனை ஆழாக்குப் பால் குடியாது ?
Luxury *versus* moderation.

3122. கல மா இடித்தவள் பாவி, கப்பி இடித்தவள் புண்ணியவதி யா ?
Preferring inferior to superior.

3123. கலம்போனது மல்லாமல் கண்ணுக்கும் மூக்குக்கும் வந்தது கேடு.
Double loss.

3124. கலம் கலந்தால் குலம் கலக்கும்.
Inter-dining leads to inter-marriage.

3125. கலம் குத்தினாலும் பதர் அரிசி ஆகாது.
No good can come out of some.

3126. கலவுமி தின்றால் ஒருஅவிழ் தட்டாதா.
Compare above.

3127. கல்லைக் கீரை பறிப்பதுபோல.
Little by little.

3128. கலியன் பால்சோறு கண்டதுபோல.
Something rare.

3129. கலியாணச் சந்தடியில் தாலி கட்ட மறந்தாளும்.
Omitting the most essential thing.

3130. கலியாணத்திலும் பஞ்சம் இல்லை, களத்திலும் பஞ்சம் இல்லை.
Unstinted liberality.

3131. கலியாண வீட்டிலே பந்தற்காலைக் கட்டி அழுகிறவள் செத்த வீட்டில் சும்மா இருப்பாளா ?
A peevish weeping woman.

3132. கலியாணம் கழிந்தால் மைச்சிமிழ் இட்டாது.
Misery following marriage.

3133. கலியாணத்துக்கு வந்த பெண்டுகளிடத்திற் போனாலும் போவேன் இல்லாவிட்டால் கல்லிலே வைத்து நறுக்குவேன்.
A vicious boast.

3134. கலியாணப் பந்தலிலே கட்டின ஆடுபோல.
Out of one's element.

3135. கலியாணம் எங்கே? காசுப் பையிலே.
Money essential to a wedding.

3136. கலியாண வீட்டிலே பிள்ளை வளர்த்தாற்போல.
Out of place.

3137. கலியாண வீட்டிற்போய் அறியான், மேளசத்தமும் கேட்டறியான்.
An obscure individual.

3138. கலியாணம் செய்கிறதும் கதவைச் சாத்துகிறதும் தான்.
Eager to enjoy his rights.

3139. கலியாணம் செய்தும் சந்நியாசியா?
Deprived of one's rights.

3140. கலையும் மப்பைக்கண்டு கட்டியிருந்த விதையை வட்டிக்கு விட்டான்.
Making use of a good opportunity.

3141. கல் ஆகிலும் கணவன், புல் ஆகிலும் புருஷன்.
Faithfulness to the husband.

3142. கல் எறிக்குத் தப்பினாலும் கண் எறிக்குத் தப்பக்கூடாது.
An evil eye.

3143. கல்மேல் எழுத்து கலையுமா?
Durability of sculpture.

3144. கல்லடிச்சித்தன் போகிற வழி, காடு மேடு எல்லாம் தவிடு பொடி.
A stone-hewer's traces.

3145. கல்லுளிச்சித்தன்போனவழி காடுமேடெல்லாந்தவிடுபொடி.
Another form of preceding.

3146. கல்லாடம் படித்தவனோடு மல் ஆடாதே.
He is too talkative.

3147. *கல்லாதவரே கண்ணில்லாதார்.*
The truly blind.

3148. *கல்லாதார் செல்வத்திலும் கற்றோர் வறுமை நலம்.*
Learning *versus* ignorance.

3149. *கல்லாத ஒருவன் குலநலம் பேசுதல் நெல்லுடன் பிறந்த பதராகும்மே.*
An illiterate fellow.

3150. *கல்லார் உறவினும் கற்றோர் பகை நலம்.*
Compare above.

3151. *கல்லார் உறவகல் காமக் கடல் கட.*
Two things to be shunned.

3152. *கல்லாலே கட்டி சாந்தாலே பூசி இருக்கிறதா?*
Is it so well built?

3153. *கல்லிலேவெட்டி நாட்டினாற்போல.*
Firmly fixed.

3154. *கல்லினும் வன்மை கனமூடர் நெஞ்சம்.*
Hardness of a fool's mind.

3155. *கல்லிலே நார் உரிக்கிறதுபோல.*
So miserly.

3156. *கல்லின்மேலிட்ட அம்புகளைப்போல.*
Effectless.

3157. *கல்லுக்குள் தேரையைக் காப்பாற்றவில்லையா?*
Providence.

3158. *கல்லுங் கலையுமே சற்றாணிற்றுப் போமே.*
Everything decays.

3159. *கல்லும் தேங்காயும் சந்தித்தது போலப் பேசுகிறான்.*
At daggers drawn.

3160. *கல்லும் காவேரியும் உள்ளமட்டும் வாழ்க.*
Wishing longevity.

3161. *கல்லு வருகிற விசையைக் கண்டால் பல்லைச் சிக்கென மூடவேண்டும்.*
Ward off evil in time.

3162. கல்லுப் பிள்ளையாரை வணங்கினால், பல்லும்போம்.
Evil of foolish worship.

3163. கல்லெல்லாம் மாணிக்க கல்லாமா ?
Every stone not a precious stone.

3164. கல்லை ஆகிலும் கரைக்கலாம் மனதைக் கரைக்கலாகாது.
Mind harder than stone.

3165. கல்லைக் கண்டால் நாயைக் காணோம், நாயைக் கண்டால் கல்லைக் காணோம்.
What is wanted always missing.

3166. கல்லைக் கட்டி முத்தம் கொடுத்தாற்போலாகும்.
An act of folly.

3167. கல்லைக் குத்துவானேன் கை நோகிறது என்று அழுவானேன் ?
Why seek injury wantonly ?

3168. கல்லைப்போலக் கணவன் இருக்கக் குஞ்சிக்கு அழுவானேன்?
An unchaste wife.

3169. கல்லைக் கிள்ளிக் கை இழந்தது போலாம்.
Compare above 3166.

3170. கல்வி கற்றும் கழுநீர்ப்பானையிற் கையிடுகிறது.
Learned and yet not wise.

3171. கல்வி அழகே அழகு.
Beauty of learning.

3172. கல்வி இல்லாச் செல்வம் கற்பில்லா அழகு.
Learning and chastity essential.

3173. கல்வி என்ற பயிருக்குக் கண்ணீர் என்ற மழைவேண்டும்.
Learing painful.

3174. கல்வியும் குலமும் வெல்வது வினவில்.
Learning and family.

3175. கல்வி கரையில கற்பவர் நாள்சில.
" Art is long, and life is short."

3176. கல்வி உள்ள வாலிபன் கன கிழவன்.
Learning makes one venerable.

3177. கல்வீட்டுக்காரி திருநாள் கழுக்கம் குச்சுவீட்டுக்காரி திருநாள் கூக்குரல்.
The more respectable the more modest.

3178. கவணைச்செட்டிமேலே கழுதை புரண்டேறினாற் போல.
Well served.

3179. கவணெறி நெறியில் நில்லாதே, கண்டவன் தலையை உடைக்கும்.
Do not expose yourself.

3180. கவலை உடையார்க்குக் கண்ணுறக்கம் வராது.
Care takes away sleep.

3181. கவி கொண்டார்க்குக் கீர்த்தி, அதைச் செவிகொள்ளார்க்குக் அவகீர்த்தி.
Poets famous.

3182. கவிக்கொண்டார்க்கும் கீர்த்தி கலைப்பார்க்கும் கீர்த்தியா?
All are not praised.

3183. கவிந்திராணம் கஜேந்திராண ராஜாவே நிற்பகிய வகி.
Poets compared to an elephant.

3184. கவைக்குத் தகாத காரியம் சபைக்குத் தகுமா?
Unsuitable action.

3185. கவையைப்பற்றிக் கழுதையின் காலைப் பிடி.
Effect your object by any means.

3186. கவ்வைச் சொல்லல் எவ்வர்க்கும் பகை.
Against divulging secrets.

3187. கழி இருந்தால் கழுதை மேய்த்துக் கொள்ளலாம்.
A tool of punishment.

3188. கழுக்கு மொழுக்கு என்று கட்டிருக்காளை போல.
So stout and nice.

3189. கழுதை கடித்தது மல்லாமல் காலையும் மிதித்ததாம்.
Double injury.

3190. கழுதை காணவேண்டினால் குட்டிச்சுவரிலே காணலாம்.
Where asses may be seen.

3191. கழுதை கெட்டால் குட்டிச்சுவர்.
The ass's shelter.

---

3192. கழுதைக்கு ஏன் கடிவாளம்?
Easily managed.

---

3193. கழுதைப் புண்ணுக்குத் தெருப்புழுதி மருந்து.
Cheap remedies for the poor.

---

3194. கழுதையும் குதிரையும் சரி ஆமா?
Classing superiors with inferiors.

---

3195. கழுதையும் குதிரையும் பிணைத்தாற்போல.
Similar to preceding.

---

3196. கழுதை அறியுமா கந்தப்பொடி வாசனை?
Compare below 3214.

---

3197. கழுதைக்குச் சேணம் கட்டினாலும் குதிரை ஆமா?
The apparel does not make the man.

---

3198. கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆயிற்று.
One reduced to utter destitution.

---

3199. கழுதைக்கு ஏன் கலினம், அல்லது கடிவாளம்?
Compare above 3197.

---

3200. கழுதைப் புட்டையானாலும் கைநிறைய வேண்டும்.
Quantity desired.

---

3201. கழுதை புரண்ட களம் போல.
In a filthy condition.

---

3202. கழுதை புரண்டால் காடுகொள்ளாது.
Wants too much space.

---

3203. கழுதைப் பொதியிலே உறை மோசமா?
Too insignificant to be robbed.

---

3204. கழுதையைக் கட்டி ஓமம் வளர்த்ததுபோல.
A mock sacrifice.

---

3205. கழுதைக்கு உபதேசம் காதிலே சொன்னாலும் அபயக் குரல் அன்றி அங்கு ஒன்றும் இல்லை யப்பா.
Useless teaching the base.

---

3206. கழுதைக்கு வாழ்க்கைப்பட்டு உதைக்கு அஞ்சினால் தீருமா ?
A low-bred husband.

3207. கழுதைமேல் ஏறி என்ன, இறங்கி என்ன ?
An unenviable position.

3208. கழுதைமேல் ஏறியும் சுகம் இல்லை, இறங்கியும் துக்கம் இல்லை.
With or without—all the same.

3209. கழுதைமேலேறியும் பெருமையில்லை, இறங்கியும் சிறுமையில்லை.
A similar idea.

3210. கழுதை உழுது வண்ணான் குடி ஆனானா ?
An ass unfit for ploughing.

3211. கழுதை உழுது குறவன் குடி ஆனானா?
Similar to preceding.

3212. கழுதையின் சூத்தில் கட்டெறும்பு விட்டாற் போல.
So painful.

3213. கழுதை மயிர் பிடுங்கினால் லாபம் என்ன நஷ்டம் என்ன ?
A profitless task.

3214. கழுதைக்குத் தெரியுமா கஸ்தூரி வாசனை ?
The vulgar cannot appreciate worth.

3215. கழுதை மூத்திரத்தை நம்பிக் கட்டுச் சோற்றை அவிழ்க்கிறதா?
Relying on precarious support.

3216. கழுதைமயிர் பிடுங்கி தேசங்கட்டி ஆள்கிறதா ?
Compare above 3213.

3217. கழுதைக்குப் பரதேசம் குட்டிச்சுவர்.
An ass in easily satisfied.

3218. கழுதை தப்பினால் குட்டிச்சுவரிடத்தில் இருக்கும்.
An ass's favourite resort.

3219. கழுதைப்பொதியில் ஐங்கல மாருட்டமா ?
Compare above 3203.

3220. கழுதை விட்டை ஆனாலும் கை நிரம்பவேண்டும் என்கிறாய்.
Compare above 3200.

3221. கழுத்திலே கரிமணி இல்லை பெயர் முத்துமாலை.
Name *versus* fact.

3222. கழுத்திலிருக்கிறது ருத்திராட்சம் கையிலிருப்பது கொடிய நகம்.
Profession *versus* conduct.

3223. கழுத்து வெளுத்தாலும் காகம் கருடனாமா?
Natural qualities unalterable.

3224. கழுத்தறுக்க கத்தி கையிற் கொடுத்தாற்போல.
Helping one's own destruction.

3225. கழுத்துக்குமேல் கத்தி வந்திருக்கச்சே செய்ய வேண்டிய தென்ன.
Imminent danger.

3226. கழுநீர்ப்பானையில் விழும் பல்லியைப்போல.
One guilty of inconsistent conduct.

3227. கழுவிக் கழுவிப் பின்னும் சேற்றை மிதிக்கிறதா?
The dog returning to his vomit.

3228. கழுவிலே நெய் உருக்கிற கள்ளிமுண்டை.
An abominable woman.

3229. கழுவுக்கு ஏற்ற கோமுட்டி.
One fit for punishment.

3230. கழுவுக்கு வேர்க்கிறாப்போல் வேர்க்கிறது.
Excessive sweating.

3231. கழுவேற, துணிந்தவளை கண்ணில் மை யிட்டதற்குக் கசக்கின் றென்றாளாம்.
Conduct below profession.

3232. களம் சாறுகிறவனை மிரட்டுவானாம் போர் பிடுங்குகிறவன்.
The guilty frightening the innocent.

3233. களவும் கற்றுமற.
Learn—but avoid—stealing.

3234. களவாண்டு பிழைப்பதிலும் கச்சட்டங்கழுவி பிழைக்கலாம்.
Work, however menial, better than theft.

3235. களிறுவாயில் அகப்பட்ட கரும்பு மீளுமா ?
Once caught—no escape.

3236. கழையக் கூடாததைக் கண்டால் அடி பெயர்ந்து அப்புறம் போ.
Avoid impossible things.

3237. கழையக் கூடாததைக் கண்டியாமல் சகித்துக்கொள்.
Submit to the inevitable.

3238. கலைப்பிடுங்காப்பயிர் கால்பயிர்.
Weeding essential.

3239. கள் விற்றுக் கலப்பணம் சம்பாதிதை விடக் கற்பூரம் விற்றுக் காற்பணம் சம்பாதிப்பது மேல்.
Toddy-selling condemned.

3240. கள்விற்றகாற்காசிலும் அமிர்தம்விற்ற அரைக்காற் காசு நேர்த்தி.
Similar to preceding.

3241. கள்ளன் புத்தி திருட்டுமேலே.
A thief's thoughts.

3242. கள்ளன் மறவன் கனத்தால் அகம்படியான் மெல்ல மெல்ல வந்து வெள்ளாள ளுவான்.
Rising in the scale of caste.

3243. கள்ள விசுவாசம் கழுத்தெல்லாம் செபமாலை.
Down-right hypocrisy.

3244. கள்ளனையும் வெள்ளனையும் கட்டிவிடு.
Need "looking after."

3245. கள்ளப் புருஷனை நம்பிக் கணவனைக் கைவிடலாமா ?
Forsaking the true for the false.

3246. கள்ளப் பிள்ளையிலும் செல்லப்பிள்ளை உண்டா ?
A thief's child never petted.

3247. கள்ளனை ஆரு நள்ளார் என்றும்.
A thief hated by all.

3248. கள்ளனுக்கு ஊரெல்லாம் பகை.
A similar idea.

3249. கள்ள மாடு சந்தை ஏறாது.
Feels shy.

3250. கள்ளனை நம்பினாலும் குள்ளனை நம்பலாகாது.
A dwarf more cunning than a thief.

3251. கள்ளன் பின்போனாலும் குள்ளன் பின்போகப்படாது.
Similar to preceding.

3252. கள்ளன் அச்சம் காடு கொள்ளாது.
A thief's fear has no limit.

3253. கள்ள மாடு துள்ளும்.
A treacherous mind uneasy.

3254. கள்ள மனம் துள்ளும்.
Illustrated by preceding.

3255. கள்ளனுக்குக் கூடவென்றவன் பேரிலேபழி.
Thieves not to be pitied.

3256. கள்ளனுக்குத் தோன்றும் திருட்டுப்புத்தி.
The caste of thieves.

3257. கள்ளனுமாகி விளக்கும் பிடிக்கிறான்.
A thief pretending to catch a thief.

3258. கள்ளனையும் புகையிலையும் கட்டித்திரு.
Compare above.

3259. கள்ளனை உள்ளேவைத்துக் கதவைச் சாத்தினாற்போல்.
Helping a thief.

3260. கள்ளன் செய்தசகாயம் காதை அறுக்காமல் கடுக்கனைக் கழற்றிக் கொண்டான்.
A thief's kindness.

3261. கள்ளன் உறவு உறவும் அல்ல, காசா விறகு விறகும் அல்ல.
A thief's friendship unreliable.

3262. கள்ளன் பெரிதோ காப்பான் பெரிதோ ?
Which is the greater, thief or watchman ?

3263. கள்ளன் புத்தி திருட்டுமேலே.
Compare above 3256.

3264. கள்ளன் பிள்ளைக்கும் கள்ளப் புத்தி.
"A chip of the old block."

3265. கள்ளன் மனைவி கைம்பெண் என்றும்.
A thievish life always risky.

3266. கள்ளன் பெண்சாதி கைம் பெண்சாதி.
Same as above.

3267. கள்ளன் மனையாளைக் களவுப் பொருளைக் காணும் குறிகேட்கலாமா?'
An accomplice will not help a detective.

3268. கள்ளனும் வெள்ளமும் ஒன்று.
Both are suddeu.

3269. கள்ளனுக்கும் பாதி கள்ளிக்கும் பாதி.
Sharing in a theft.

3270. கள்ளனுக்குப் பாதி வெள்ளனுக்குப் பாதி.
Compare preceding.

3271. கள்ளனும் தோட்டக்காரனும் ஒன்று.
Given up to stealing.

3272. கள்ளனும் தோட்டக்கரனும் ஒன்று கூடினால் விடியுமட்டும் திருடலாம்.
Excellent accomplices.

3273. கள்ளன் கொண்ட மாடு எத்துறை போயென்ன?
He will steal another.

3274. கள்ளனுக்குக் காண்பித்தவன் பகை.
Because he must share with him.

3275. கள்ளனைக் இள்ளன் பிடித்தான்.
One thief catching another.

3276. கள்ளனைத்தேடிய கள்ளப்பசுபோல.
Like seeking like.

3277. கள்ளவாசலை காப்பானைப்போல.
Euguged in a fruitless enterprise.

3278. கள்ளிக்குக் கண்ணீர் முந்தும் (கள்ளமாப்பிள்ளைக்) கொள்ளிக்கு வாய்முந்தும்,
Treacherous tears.

3279. கள்ளி பெருத்து என்ன ? காய் உண்டோ நிழல் உண்டோ ?
Said of a useless child.

3280. கள்ளிக்கு நாடு எல்லாம் காடு.
It spreads like wild fire.

3281. கள்ளிக் கொம்புக்கு வெள்ளிப்பூண் கட்டினதுபோல.
Adorning the unworthy.

3282. கள்ளி ஏன்னடி கல் இழைப்பது ? காதில் இருப்பது பித்தளை,
Why make pretensions in vain ?

3283. கள்ளிக்கும் வெட்டிக் கற்றாழைக்கும் வெட்டுகிறது.
Removing useless shrubs.

3284. கள்ளிக்குத் தண்ணீர் கண்ணிலே, நீலிக்குத் தண்ணீர் நிமையிலே.
Hypocrites very fond of weeping.

3285. கள்ளிக்கு கலநீர் கண்ணிலே.
Similar to preceding.

3286. கள்ளிக்கு முள்வேலி இடுவானேன் ?
Unnecessary.

3287. கள்ளிக்கு வேலி என், சுள்ளிக்குக் கோடாலி என்?
Compare preceding.

3288. கள்ளுகுடித்தவன் கொள்ளு பொருக்கான்.
He wants solid food.

3289. கள்குடித்தவனுக்குக் கள்ஏப்பம், பால்குடித்தவனுக்குப் பால் [ஏப்பம்.
"Out of the abundance of the heart the mouth speaketh."

3290. கள்ளும் சூதும் இருக்கிற இடத்தில் கூத்திக்கள்ளனும் இருப் [பான்.
Vice breeds vice.

3291. கள்ளைவிட்டுக் காட்டுத்தேனை குடித்ததுபோல.
Preferring inferior to superior good.

3292. கள்ளைக் கொடுத்து காரியத்தை அறி.
Drunkenness betrays secrets.

3293. கள்ளைக் குடித்தால் உள்ளதைச் சொல்வான்.
Compare preceding.

3294. கறக்கிறது உழக்கு உதைக்கிறது பல்லுப் போக.
Obtaining a trifle at a great cost.

3295. கறக்க ஊறும் ஆவின்பால், கற்க ஊறும் மெய்ஞ்ஞானம்.
Constant use improves a thing.

3296. கறந்த பாலைக் காய்ச்சாமற் குடித்தால் காச வியாதி தானே எடுபடும்.
Recommends boiling milk before drinking it.

3297. கறந்த பாலைக் காகமும் தொடாது.
What is not brand new is second hand.

3298. கறந்த பால் முலைக்கு ஏறுமா ?
" What is done is done."

3299. கறந்த மேனியாய்ப் பேசுகிறது.
Pretending purity.

3300. கறந்த பாலும் எச்சில், பிறந்த பிள்ளையும் எச்சில்.
Everything needs purifying.

3301. கறிக்குழக்கு நெய் வார்த்தாலும் கண்ணாரக் கண்டதைச் சொல்லு
Be honest at any cost.

3302. கறிக்குக் கலநெய் வார்த்தாலும் கணக்கோடே.
Keep an account of everything.

3303. கறுப்பு வெளுப்பு ஆகாது, கசப்பு இனிப்பு ஆகாது.
Natural qualities remain unchanged.

3304. கறுமுறுகாந்தப் படலம் வாசிக்கிறார் கவிராயர்.
A sarcastic saying.

3305 கறுப்பு நாய் வெள்ளை நாய் ஆகுமா ?
Compare preceding 3302.

3306. கறுத்தது எல்லாம் தண்ணீர் வெளுத்தது எல்லாம் பால் என்கிறான்.
Judging things at first sight.

3307. கறையான் புற்றில் அரவம் குடிகொண்டதுபோல்.
Usurping another's abode.

3308. கறையான் புற்றுப் பாம்புக்கு உதவுகிறது.
One serving another.

3309. கற்கக் கற்கக் கசடறக் கற்க.
"Drink deep or taste not the Peirian spring."

3310. கற்கண்டாற் செய்த எட்டிக்கனியும் கசக்குமா?
Substance not form essential.

3311. கற்பக விருட்சத் தண்டை போய்க் காஞ்சிரங்காய் வாங்கினாற்போல்.
Expecting good and receiving evil.

3312. கற்பித்தவனுக்கு காக்கக் கடன்.
Teacher must also be protector.

3313. கற்பித்தவன் கண்ணைக்கொடுத்தவன்.
Teacher—a sight-giver.

3314. கற்கையில் கல்வி கசப்பு கற்பின் அதுவே இனிப்பு.
Learning at first painful.

3315. கற்பித்தவன் காப்பாற்றுவான்.
Teacher will protect.

3316. கற்பில்லா அழகு வாசனை இல்லாப் பூ.
Lacking something essential.

3317. கற்பெனப்படுவது சொற்றவறாமை.
Chastity defined.

3318. கற்ற இடத்திலா வித்தையைக் காட்டுகிறது?
Parading one's learning before one's teacher.

3319. கற்றவரது கோபம் நீரின் பிளவுபோல் மாறும்.
The anger of the wise short-lived.

3320. கற்றது கையளவு கல்லாதது உலகளவு.
Ignorance greater than knowledge.

3321. கற்றது சொல்வான் மற்று என்ன செய்வான்?
A stupid fellow.

3322. கற்றவனுக்கு வித்தை கால் நாழி.
The educated learn soon.

3323. கற்ற வித்தையைக் காய்ச்சிக் குடிக்கிறவன்போலே.
Selling one's learning.

3324. கற்றறி மோழையாய் இராதே.
Be not a wise fool.

3325. கற்றவனும் உண்பான், பெற்றவளும் உண்பாள்.
The educated and the mother are alike.

3326. கற்றாழை நாற்றமும் பித்தளை வீச்சமும் போகாது.
Some things cannot be got with all.

3327. கற்றாழை இறுத்தாலும் ஆனை அடி வைக்காது.
Some persons always unapproachable.

3328. கற்றுங் கற்றுங் பேசாதே.
Against pedantry.

3329. கற்றுக் கொடுத்த பேச்சும் கட்டிக் கொடுத்த சாதமும் எத்தனை நாள் நிற்கும் ?
Temporay measures unreliable.

3330. கற்றும் கற்றறிமோழை, அதுபோல கண்ணிருந்தும் குருடு.
Learned and yet a fool.

3331. கற்றும் கற்றறிமோழையா ?
Similar to preceding.

3332. கற்றோர் அருமை கற்றோர் அறிவர்.
Like draws like.

3333. கன ஆசை கன நஷ்டம்.
Avarice leads to ruin.

3334. கன எலி வளை எடாது.
The great never hide themselves.

3335. கனக மாரி பொழிந்ததுபோலே.
A golden shower.

3336. கனஞ் செய்தால் இஷ்டம், கனவீனத்தால் நஷ்டம்.
Honor and dishonor.

3337. கனத்தாராலும் மனதுஇறங்க.
Mercy in the great.

3338. கனத்த உடைமைக்கு அனர்த்தம் இல்லை.
There is not waste in valuables.

3339. கனத்தால் இனமாகும் பணத்தால் சனமாகும்.
Respectability and wealth.

3340. கனத்திற்கு நற்குணம் சுமைதாங்கி.
Respectability rests on virtue.

3341. கனத்தைக் கனம் காக்கும் கருவாட்டுப் பானையை நாய்காக்கும்.
Like guards like.

3342. கனநேசம் கண்ணல் கொடுக்கும்.
Excessive intimacy leads to evil.

3343. கனமழை பெய்தாலும் கருங்கல் கரையுமா ?
No rain can melt the rock.

3344. கன மூடன் கைப்பொருள் இழப்பான்.
A fool wastes his property.

3345. கனவிலும் காக்கைக்கு மலம் தின்பதே நினைவு.
The base always filled with filthy thoughts.

3346. கனவில் கண்ட பணம் செலவிற்கு உதவுமா ?
Imaginary *versus* real.

3347. கனவில் கண்ட பொருள் கானலில் கண்ட புனல்.
Compare preceding.

3348. கனவில் உண்ட சோறு பசி தீர்க்குமா ?
Compare above.

3349. கனவிலே கண்டவனுக்குப் பெண் கொடுத்த கதை.
Trusting in a shadow.

3350. கனிந்த பழம் தானே விழும்.
Where there is a will, there is a way.

3351. கனிந்த பழம் நீர் தின்றீர் காயை உலுக்கிவிட்டீர்.
The just suffering with the unjust.

3352. கனியை விட்டுக் காயைத் தின்கிறதா ?
Compare above 3290.

3353. கன்மத்தினாற் சாதியன்றிச் சென்மத்தினால் இல்லை.
Action not birth creates caste.

3354. கன்மழை பெய்தாலும் கருங்கல் கரையுமா ?
Another form of above.

3355. கன்மத்தினால் வந்தது தன்மத்தினால் போகவேண்டும்.
The efficacy of virtue.

3356. கன்றுகெட்டால் காணலாம் தாயருகே.
Some things are easily recovered.

1357. கன்றுகொண்டு கடா அடி அடித்தால் வைக்கோலுமாகாது செத்தையுமாகாது.
Evil of ill-treating the young.

3358. கன்று இருக்கக் காசத்தனை பால் கறவாப் பசு கன்று செத்த பிறகு கலப்பால் கறக்குமா ?
The argument *a fortiori*.

3359. கன்றுக்குட்டியை அவிழ்க்கச் சொன்னார்களா கட்டுத்தறியைப் பிடுங்கச் சொன்னார்களா ?
Missing a command.

3360. கன்றும் பசுவும் காடேறி மேய்ந்தால் கன்று கன்று வழியே பசு பசு வழியே.
Without restraint people go astray.

3361. கன்றுகளாய்க் கூடிக் களை பறிக்கப் போனால் வைக்கோல் ஆகுமா செத்தை ஆகுமா ?
Young people very destructive.

3362. கன்றைக் கண்டு ஓடிவரும் பசுவைப்போலே.
So eager.

3363. கன்றைவிட்டு மாட்டை முட்டவிடுகிறது.
Instigating to evil.

3364. கன்னத்தில் அடித்தாலும் கதறிஅழச் சீவனில்லை.
Too weak to complain.

3365. கன்னான் கடமாடக் குயவன் குடிபோவான்.
Blacksmith *versus* potter.

3366. கன்றுக்கு முன்னே கழுதை பரதேசம் போனதுபோலே.
Setting a bad example.

3367. கன்னக்கோலை மறைத்துக்கொண்டு கை செபமணியைச் செபிக்கிறது.
Consummate treachery.

3368. கன்னி இருக்கக் காளை மணம் போகலாமா?
Marry your daughter first and then your son.

3369. கட்டுச் சாதத்திற்குக் குட்டிச் சுவரிலே பேண்டான்.
Base ingratitude.

## கா.

3370. காகத்திலே வெள்ளை உண்டா?
A white crow.

3371. காகம் கழுத்து கறுத்தென்ன வெளுத்தென்ன?
Natural qualities unalterable.

3372. காக்கையின் கண்ணுக்குப் பீர்க்கம்பூ பொன் நிறம்.
Little things are great to little man.

3373. காகம் கொக்கு ககனகிளி யனுமான் குடியர்குணம்.
What a drunkard is like.

3374. காகம் கா என்றால் கணவனை அப்பா என்று கட்டிக்கொள்ளு வாளாம்.
A timid wife.

3375. காகம் ஏறிப் பனங்காய் உதிருமா?
An unlikely cause.

3376. காகம் இல்லாத ஊர் பாவி இல்லாத ஊர்.
Crows are like the wicked.

3377. காகம் இருக்கப் பழம் விழுந்ததுபோல.
Compare above.

3378. காகம் இல்லாத ஊர் சோனகன் இல்லாத ஊர்.
Crows compared to Mussulmans.

---

3379. காகம் காலமே கா கா என்று கத்தும்.
Habits of crows.

---

3380. காக்கை குருவி மூக்காலே கொறிக்கிறதுபோல.
Pecking like birds.

---

3381. காக்கனுக்கும் பூக்கனுக்கும் பூத்தாயோ புன்னை, கண்ணாளர் வருந்தலையும் பொறுக்கலையோ புன்னை ?
A wife's complaint.

---

3382. காக்காய்க்கும் காக்காயினும் கனசிறப்பு.
A joke on a dark complexion.

---

3383. காக்காய்க்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு.
Every mother praises her own child.

---

3384. காக்கையிற் கரிது களாப்பழம்.
The *kala* fruit is very black.

---

3385. காக்கையும் குயிற் குஞ்சைத் தன் குஞ்சுபோல் வளர்க்கும்.
Some persons are kind through mistake.

---

3386. காக்கைக்கு அஞ்சு குணம்.
The crow's five characteristics.

---

3387. காக்கை கதறப்பயந்து கணவனை கட்டிக்கொண்டாளாம்.
Compare above 3374.

---

3388. காக்காய்க் கூட்டம்போல காட்டுக்கொம்பு.
So numerous.

---

3389. காக்கை ஏறினதும் பனம்பழம் விழுந்ததும்.
Compare above 3375.

---

3390. காக்கையும் கத்திப் போகிறது, கருவாடும் உலர்ந்து போகிறது.
Flight of time.

---

3291. காக்கையும் காற்றும் போக்கு உண்டானால் வரும்.
They wait for an opportunity.

---

3392. காக்கையைக் கண்டு அஞ்சுவாள் காடியைப் பிடித்துக் கட்டுவாள்.
Inconsistent conduct.

---

3393. காக்கை இருந்த கொம்பு அசையாது?
Compare above 3389.

---

3394. காசிமுதல் ராமேஸ்வரம் பரியந்தம்.
From Dan to Beersheba.

---

3395. காசி இரண்டு எழுத்துத்தான் காண எத்தனை நாட்செல்லும்?
Easier said than done.

---

3396. காசிக்குப் போயும் கருமம் தொலையவில்லை.
An excellent confession.

---

3397. காசிக்குப் போனாலும் அகப்பை அரைக்காசு.
Sacredness *versus* prices.

---

3398. காசிக்குப் போனாலும் கதி பெற வழி இல்லை.
Similar to above.

---

3399. காசிக்குப்போயும் முடத்தவசி காலில் விழுகிறதா?
Failure after great pains.

---

3400. காசியில் இருக்கிறவன் கண்ணைக் குத்தக் காஞ்சிபுரத்திலிருந்து கையை நீட்டிக்கொண்டு போகிறதா?
In too great haste.

---

3401. காசுக்கு லோபி கழுதையி னிட்டத்திற் போனாற்போல.
Seeking satisfaction in the wrong quarter.

---

3402. காசப்பையோடே களவு போனால் கடையிலே செட்டிக்குக் காரியமென்ன?
Not his own loss.

---

3403. காசு இல்லாதவனுக்கு வராகன் பேச்சு என்ன?
Foolish hopes.

---

3404. காசு கொடுத்தால் வேசி வருவாள், கல நெல்லைக் கொடுத்தால் அவள் அக்காளும் ஆத்தாளும் கூட வருவார்கள்.
Prostitutes defined.

---

3405. காசுக்கு ஒரு குஞ்சு விற்றாலும் கணக்கன் குஞ்சு ஆகாது.
Condemns the village accountant.

---

3406. காசுக்கு இரண்டும் பீசுக் கொன்றும்.
Different rates.

---

3407. காசுக்கு ஒரு குஞ்சு விற்றாலும் கம்மாளன் குஞ்சு ஆகாது.
Condemns the village blacksmith.

---

3408. காசுக்கு ஒரு குதிரையும் வேணும் காற்றைப்போல் பறக்கவு
ம் வேணும்.
Cheapness *versus* excellence.

---

3409. காசுக்கு ஒரு புடைவை விற்றாலும் நாயின் குத்து அம்மணம்.
Character independent of cheapness.

---

3410. காசுக்கூடு கரிக்கூடாய்ப் போயிற்று.
Reduced to poverty.

---

3411. காசுக்குப் போன மானம் கோடி கொடுத்தாலும் வராது.
Lost reputation seldom recovered.

---

3412. காசைக் கொடுத்துக் குத்து மாடு தேடுகிறதா ?
Getting a bad return.

---

3413. காஞ்சிபுரத்திற்குப் போனால் கால் ஆட்டி இருந்து உண்ண
லாம்.
Beggars well off there.

---

3414. காடிக்குப்போய் தயிர் கொண்டுவந்ததுபோல.
Going for one thing and returning with another.

---

3415. காடு காத்தவனும் கச்சேரி காத்தவனும் பலன் அடைவான்.
Two fortunate menials.

---

3416. காடு வா என்கிறது, வீடு போ என்கிறது.
Certainty of death.

---

3417. காட்டுப்பூனைக்குச் சிவராத்திரியா ?
Aborigines irreligious.

---

3418. காட்டக் கொடுத்த பணத்தைக் கொண்டு குமரகண்ட வலி
ப்பு வலிக்கிறது.
Against usurping.

---

3419. காட்டானை உண்ட கனிபோலிருக்கும் தேட்டாளன் திரவி
யம்.
Vanishing away.

---

3420. காட்டில் எறித்த நிலவும் கசடருக்குச்செய்த நன்றியும் வீண்.
Wasted benevolence.

---

3421. காட்டில் எறித்தநிலாவும் கானலிற் பெய்தமழையும் வீண்.
Similar to preceding.

3422. காடு விளைந்தாலும் ஒரு மேடு விளைந்தாலும் கடன் கழிந்து போம்.
Value of a harvest.

3423. காடு விளையாவிட்டாலும் கடமை போகுமா?
Taxes must be paid.

3424. காடு வெந்தாற் சந்தன மரமும் வேகாதோ?
Whole and part.

3425. காடும்செடியுமில்லாத ஊருக்குக் கழுதைமுள்ளி கற்பகவிருக்ஷம்.
Everything has its local value.

3426. காடை இடம் ஆனால் நாட்டை ஆளலாம்.
A good footing essential.

3427. காட்டிக் கொடுத்துக் கடக்கப் போய் நிற்கலாமா?
Playing the traitors.

3428. காட்டில் ஆனையைக் காட்டி வீட்டில் பெண்ணைக் கொடுக்கிறதா?
Cheating as to dowry.

3429. காட்டிலே செத்தாலும் வீட்டிலேதான் தீட்டு.
The house is to bear the burden.

3430. காட்டுப் பூனைக்குச் சிவராத்திரி விரதமா?
Compare above.

3431. காட்டுக்கு எறித்த நிலாவும் கானலுக்குப் பெய்த மழையும்.
Another form of 3421.

3432. காட்டு வாழை வந்தால் வீட்டுவாழ்வு போகும்.
A bad omen.

3433. காட்டுப் பேய்ச்சுரைக்காய் கறிக்கு ஆகுமா?
Refinement commended.

3434. காட்டுப்பாகலுக்கு ஏற்ற கல்லுப்பு.
Treatment according to deserts.

3435. காட்டுப் புறாவுக்காக சதைஅரிந்தமன்னன் கதைப்போல.
Refers to self-sacrificing.

3436. காட்டில்புதைத்த கனதனமும் பாட்டிற்புதைத்த பழம்பொருளும் வீட்டின் மனையாள் மனமும் நாட்டில் அறிவதரிது.
Three depths.

3437. காட்டுக்குப் புலிஆதரவு, புலிக்கு காடுஆதரவு.
Mutual protection.

3438. காட்டுக்குப் போகிறவழியில் கண்டெடுத்த மாணிக்கம்.
A lucky find.

3439. காட்டை வெட்டிச் சாய்த்தவனுக்குக் கம்பு பிடுங்கபயமா !
He has a natural claim.

3440. காட்டை வைத்துக் கொண்டல்லோ வேட்டை ஆடவேண்டும்.
No means, no success.

3441. காட்டுக் கோழிக்கு உரற் குழியே கைலாசம்.
A suitable shelter.

3442. காட்டுப் பூச்சிகள் எதிர்த்த கதை ஆச்சு.
In an awkward predicament.

3443. காண ஒருதரம் கும்பிட ஒருதரமா ?
Why multiply work ?

3444. காணக் கிடைத்தது கார்த்திகைப் பிறைபோல.
An exceedingly rare visit.

3445. காணப்பட்டன எல்லாம் அழியப்பட்டன.
What is seen is temporal.

3446. காணக் கிடைக்குமோ காணவென்றாற் கிட்டுமோ ?
What is difficult to be seen.

3447. காணாது கண்டாற் போல்.
Doing something imperceptibly.

3448. காணாமல் கண்டேனோ கம்பங்கதிரை சிந்தாமல் குத்தடி சில்லி மூக்கி ?
Urging to work carefully.

3449. காணியில் இல்லாதது கோடியில் வரப்போகுது ?
As in small things so in great.

3450. காணி ஆளன் வீடு வேகச்சே காலைப் பிடித்து இழுத்த கதை.
Untimely sporting.

3451. காணி ஏறக் கோடி அழியும்.
Great loss for little gain.

3452. காணி கவிழ்ந்துபோகிறதா ?
A trifling loss.

3453. காணி காணியாய்ச் சம்பாதித்துக் கோடி கோடியாய்ச் செல வழிக்கிறது.
Earn little and spend much.

3454. காணிக்கு ஒத்தது கோடிக்கு.
Compare above 3449.

3455. காணிக்குச் சோம்பல் கோடிக்கு வருத்தம்.
A *little* negligence leading to great loss.

3456. காணி தேடி கோடி அழிக்கிறது.
Similar to above 3451.

3457. காணி மந்தம் கோடி துக்கம்.
Compare above.

3458. காண்பாரைக் கண்டு கழுதையும் பரதேசம் போயிற்றாம்.
A beneficial sight.

3459. காதம் விட்டு இருகாதம் சுற்றுகிறதுபோல.
Doubling one's labour.

3460. காதம் கொடுத்து இருகாதம் வாங்குகிறதுபோல.
An evil recompense.

3461. காதவழி போய் அறியாதான் மாதம் எல்லாம் நடந்தாலும்.
An inexperienced traveller.

3462. காதவழி போய் அறியான் கழுதைப் பிறப்பு.
Recommends a ten mile walk.

3463. காதவழி பெயர் இல்லான் கழுதையோடு ஒக்கும்.
Same as preceding.

3464. காதிலே காரசம் காய்ச்சி விட்டது போல.
Completely deaf.

3465. காதில் சிலந்தி ஓதடி ஆனந்தி.
A silly prayer.

3466. காது அறுத்த கூலி கைமேலே.
Immediate reward.

3467. காது அறுத்தாலும் அறுக்கும் பேன் எடுத்தாலும் எடுக்கும் குரங்கு.
A monkey not to be relied on.

3468. காது காது என்றால் காதி நாதி என்றான்.
Tamil *versus* Telugu.

3469. காது காது என்றால் செவிடு செவிடு என்றான்.
Similar to preceding.

3470. காது குத்தப்பொறுக்காதா?
A slight pain.

3471. காதுக்கு இட்டால் முகத்துக்கு அழகு.
Effect of jewels.

3472. காதுக்குக் கடுக்கன் இட்டு ஆட்டிக்கொண்டு திரிகிறான்.
Sporting with ear-rings.

3473. காதும் காதும் வைத்தாற்போல் இருக்கவேண்டும்.
A proper match.

3474. காதை அறுத்தவன் கண்ணையும் குத்துவானா?
One does not add mischief to mischief.

3475. காத்திருந்தவன் பெண்டாட்டியை நேற்று வந்தவன் கொண்டுபோனான்.
Watching to no purpose.

3476. காந்தத்தின் முன் ஊசி கம்பித்தாற் போல.
Under another's influence.

3477. காந்தமும் ஊசியும்போல.
Similar to preceding.

3478. காப்பு சொல்லும் கைமெலிவை.
Tell-tales of one's condition.

3479. காப்பானுக்குக் கள்ளன் இல்லை.
Well guarded, well protected.

3480. காமனுக்குக் கண்ட விடத்தில் கண்.
He is blind.

3481. காயாகக் காய்த்துப் பூவாகப் பூத்ததாம்.
Bearing fruit in abundance.

3482. காயும் கனியும் உண்டானால் கார்த்திகை மாதம் கலியாணம்.
Everything depends on the supply.

3483. காயும் புழுவிற்குச் சாயும் நிழல்போல.
A most opportune refuge.

3484. காய் பாரத்தைக் கொடி தாங்காதா?
Will not a mother support her offspring?

3485. காய்த்த கொம்பு பணியும்.
The great always humble.

3486. காய்ச்சிக் குடிக்கிறதையும் கெடுத்தான் கன்னாரப்பட்டு விழுவான்.
One who has ruined one's living.

3487. காய்ச்சி வார்த்த பெண்ணுக்குப் பேச்சு மூச்சு அற்றது.
A sudden unconsciousness.

3488. காய்ச்சின கஞ்சிவார்க்க ஆளில்லாமற் போனாலும் கச்சை கட்ட ஆளிருக்கிறது.
More eager to champion than serve.

3489. காய்த்த மரத்தில் கல் எறிபடும் காயாத மரத்தில் எறிபடுமா?
'Tis the good who are attacked.

3490. காய்த்த மரத்திலே கல் எறியும் சில் எறியும்.
Same as preceding.

3491. காய்த்த மரம் வளைந்துநிற்கும், நற்குணம் உடையவர் தணிந்து நிற்பார்.
Compare above 3485.

3492. காய்த்த மரம் கல்லடிபடும்.
Another form of 3489.

3493. காய்ந்த மரம் தளிர்க்குமா?
Once dead—never revived.

3494. காரிய மாகுமட்டும் காலைப்பிடி காரிய மானபிறகு குடுமை யைப்பிடி.
Cringing at first and then overbearing.

3495. காய்ந்த மாடு கம்பங்கதிரில் விழுந்தாற்போல.
Eating voraciously.

3496. காய்ந்த புலி ஆட்டு மந்தையிலே விழுகிறதுபோல.
Same as preceding.

3497. காய்ந்த புலி ஆவிலே விழுகிறது.
Same as above.

3498. காய்ந்தாலும் வெந்நீர் அவம் போமோ?
Virtue of boiling water.

3499. காய்ந்த வானம் பெய்ந்தால் விடாது?
Excessive rain after drought.

3500. காய்ந்தும் கெடுத்தது பெய்ந்தும் கெடுத்தது.
Rain and drought—both destructive.

3501. காய்மகாரன் நெஞ்சிலே கொள்ளிக்கட்டையாலே சுட வேண்டும்.
Envy condemned.

3502. காராம்பசுவுக்குப் புல்லுமாம் நந்தவனத்துக்குக் களையுமாம்.
Serving two purposes.

3503. காரிகை கற்றுக் கவி பாடாதான் பேரிகை கொட்டிப்பிழைப்பது நன்று.
Better some humble work than idleness.

3504. காரியக்காரன் கொல்லையிலே கழுதை மேய்க்குது.
Reduced to poverty.

3505. காரியத்திலே கண் அல்லாமல் வீரியத்திலே இல்லை.
Desire *versus* exertion.

3506. காரியத்தைப்பற்றி கழுதையின் காலைப் பிடி.
Adopt any means to gain your object,

3507. *காரியம் பெரிதோ வீரியம் பெரிதோ ?*
Boasting *versus* work.

3508. *காளையை வெட்டி கரணை போட்டால் இடையும் பணமும் காணும்.*
Extra labour—extra gain.

3509. *கார் அறுக்கட்டும் கத்திரி பூக்கட்டும்.*
Expecting good crops.

3510. *கார்த்திகை கால்கோடை.*
Rain ceases in December.

3511. *கார்த்திகைக்குமிஞ்சின மழையும் இல்லை, கர்ணனுக்கு மிஞ்சின கொடையும் இல்லை.*
November rain exceeds all other rain.

3512. *கார்த்திகைப் பிறை கண்டவன்போல.*
Having seen something rare.

3513. *கார்த்திகைமாதத்திற் கடுமழைபெய்தால் கல்லின்கீழிருக்கிற புல்லும் கதிர்விடும்.*
Effect of good rain in November.

3514. *காலஞ் செய்கிறது கோலம் செய்யாதே.*
Time effects much.

3515. *காலஞ் செய்கிறது ஞாலம் செய்யாது.*
Time *versus* the world.

3516. *காலஞ்செய்த கோலத்திற்கு ஆரை வெறுக்கிறது.*
Time *versus* men.

3517. *காலக்ஷேபத்துக்குக் கூலிக்குக் குத்தினாலும் கழுக்கட்டுமயிர் வெளியே தெரியப்போகாதாம்.*
Poverty and pride.

3518. *காலடிவைக்கச்சே நீச்சானால் கரை ஏறுகிறதெப்படி ?*
A bad beginning a worse end.

3519. *காலத்தினால் செய்த நன்றி.*
A timely benefaction.

3520. *காலத்திற் பெய்த மழைபோல.*
A timely shower.

3521. காலத்துக்கு ஏற்ற கோலம்.
Show suited to the time.

3522. காலமில்லாத காலத்தில் கப்பலோட்டி.
Evil of untimely enterprise.

3523. காலமே எழுந்திருந்து காக்கை விழிக்கல் ஆகாது.
A Tamil superstition.

3524. காலம் அறிந்து ஞாலம் ஒழுகு.
Read the signs of the times.

3525. காலம் கலிகாலம் அல்லவா?
An age of evil.

3526. காலம் கண்ட கூளி.
An aged persoı

3527. காலம் கெட்டுக் கைப்பிச்சை எடுத்தாற்போல.
Reduced to beggary.

[ன்.
3528. காலம் அறிந்து பிழையாதவன் வால் அறுந்த குரங்கு ஆவா
Evil of not studying the signs of the times.

[கும்.
3529. காலம் போம் வார்த்தை நிற்கும், கப்பல் போம் துறை நிற்
Some go and others remain.

3530. காலம் போன காலத்தில் மூலம் வந்து குறுக்கிட்டதுபோல.
Good succeeded by evil.

3531. காலம் அல்லாத காலத்திலே கடலேறி கதிர்க்காமா கதிர்க்காமா என்றால் கை கொடுக்குமா?
A mariner in unfavourable weather.

[லை.
3532. காலாகாலத்தில் செபதம்பண்ணினால் மேலொரு பாவமுமில்
A radical religious error.

[வு தூரம்?
3533. காலாலே நடந்தால் காதவழி, தலையாலே நடந்தால் எவ்வள
Do things in the right way.

3534. காலால் காட்டினதைக் கையால் செய்கிறது.
Great submissiveness.

3535. காலால் நடக்காமல் காற்றாய்ப் பறக்கிறது.
In a great hurry.

3536. காலில் கட்டினால்விருது குப்பையில் கிடந்தால் துணி.
Position makes a great change.

3537. காலால் முடிந்ததைக் கையால் அவிழ்க்கக்கூடாது.
Said of a very able fellow.

3538. காலிலே பட்டபிறகா இரகசாரம் போதாது ?
Vain pretexts.

3539. காலில் விழுகிறது நல்லது மேலில் விழுகிறது கெட்டது.
Humility commended.

3540. காலில் பட்டது கண்ணில் பட்டதுபோல.
Exaggerating an injury.

3541. காலில்சுற்றிய பாம்பு கடித்தாலொழிய விடாது.
An evil driven to the bitter end.

3542. காலில்பட்டது கையிலும் படும் மூக்கிலும் படும்.
How evil spreads and grows.

3543. காலுக்குப் போட்டால் தலைக்குப் போடுகிறான்.
Unsuitable behaviour.

3544. காலுக்குக் கடுப்பே தவிர, கண்டபலன் ஒன்றும் இல்லை.
Labouring for nought.

3545. காலுக்குக் கை உதவி, கைக்குக் கால் உதவி.
Mutual help.

3546. காலுக்குத் தக்க செருப்பும் கூலிக்குத் தக்க உழைப்பும்.
Suitable wages.

3547. காலுக்கு ஆகிற செருப்பு தலைக்கு ஆகுமா ?
Putting a round man into a square hole.

3548. காலை இஞ்சி கடும்பகல் சுக்கு, மாலை கடுக்காய் மண்டலந் தின்னில் கோலை ஊன்றிக் குறுகிநடந்தவர் கோலைவிட்டுக் குலாவி நடப்பாரே.
Remedies for longevity.

3549. காலைச் சுற்றின பாம்பு கடியாமல் விடாது.
Another form of 3541.

3550. காலைச் செல் பூத்தால் அடுத்த மழை அடங்கும்.
A bad sign.

3551. காலை துயில்வானும் மாலை இருப்பானும் பதர்.
Coudemus late hours and morning slumber.

3552. காலைப் பிடித்த சனியன் ஊரைச் சுற்றி அடிக்கும்.
Doomed to a wandering life.

3553. காலைப் பனிக்கும் கண்விழிக்கும் ஒத்தது செல்வம்.
Uncertainty of riches.

3554. காலை மோட்சமும் வாலை ஞானமும் நிலைக்காது.
Unreliable things.

3555. கால் அளவே ஆகுமாம் கப்பலின் ஓட்டம் நூல் அளவே ஆகு[மாம் நூல் சீலை.
Manufacture like material.

3556. கால் ஆடக் கோல் ஆடும் கோல் ஆடக் குரங்கு ஆடும்.
Effect of discipline.

3557. கால் சிறிதாகில் கனல் ஊரும் கன்னியர்மேல் மால் சிறிதாகில் மனம் ஊரும்.
Nature of lust and wind.

3558. கால்படி அரிசிக்காரன் உள்ளமட்டுந்தான்.
Will starve soon.

3559. கால்போகா விடத்தில் தலையிட்டுக் கொள்ளாதே.
Do not plunge into great evils.

3560. கால்மாடு தலைமாடு தெரியாமல்.
Unable to distinguish.

3561. கால் மாறிக் கட்டினால் கனம் குறையுமா?
Weight not affected by position.

3562. கால் நடைக்கு இரண்டு காசு கை வீச்சுக்கு ஐந்து காசு.
Unjust wages.

3563. கால்வாயைத் தாண்டாதவன் கடலைத் தாண்டுவானா?
Weak in small things weak in great.

3564. காவடிப் பாரம் சுமக்கிறவனுக்குத் தெரியும்.
The bearer knows the burden.

3565. காவல் தானே பாவையர்க்கு அழகு.
Tamil safeguard of chastity.

3566. காவேரி ஆற்றை மறிப்பாய் கார்த்திகை மாதத்துக் கற்கடக சந்திரனையும் மறிப்பாயா?
Your power is limited.

---

3567. காவேரி கஞ்சியாய்ப் போனாலும் நாய் நக்கித்தான் குடிக்க வேண்டுமே.
Habits never got rid of.

---

3568. காவேரிக் கரைப் பசுபோல் அலைகிறான்.
In the midst of luxury.

---

3569. காவோலை விழுந்ததென்று குருத்தோலை சிரித்ததாம்.
Young *versus* old.

---

3570. காளித்தோட்டத்துக் கற்பக விருக்ஷம் ஆருக்கும் உதவாது.
A useless person.

---

3571. காளிப்பட்டம் போனாலும் மூளிப்பட்டம் போகாது.
Nicknames last.

---

3572. காளைமாடானாலும் கண்ணுக்கு உழக்குப்பால்தா.
An avaricious fellow.

---

3573. காற் காசுப் பூனை முக்காற் காசுத் தயிரைக் குடித்தது.
Small persons spending much.

---

3574. காற்றில் அகப்பட்ட கப்பல்போல் அலைகின்றது மனம்.
The wanderings of the human mind.

---

3575. காற்றுக்கா மழைக்கா போர்த்துக்கொள்ள துணிக்கா?
Useful for nothing.

---

3576. காற்றுக்கு எதிரிலே துப்பினால் முகத்திலே விழும்.
Evil of spitting against the wind.

---

3577. காற்றுக்குத் தோணி எதிர்த்து ஓடாது.
Impossible to escape opposition.

---

3578. காற்றும் சிலரை நீக்கி வீசுமோ?
Nature has no respect of persons.

---

3579. காற்று உள்ளபோது தூற்றிக்கொள், கரும்பு உள்ளபோது ஆட்டிக்கொள்.
Winnow when the wind blows.

---

3580. காற்றும் மழையும் கலந்தடித்தாற்போல.
Misfortunes coming together.

3581. காற்று காற்றோடேபோம்.
Spirit goes to spirit.

3582. காற்றோடே வந்து மழையோடே போச்சுது.
Wind resulting in rain.

3583. காற்றைப் பிடித்துக் கரகத்தில் அடைக்கலாமா ?
Impossible to restrain the wind.

3584. காற்றைப் பார்த்துக் கப்பல் நாட்டு.
Act circumspectly.

3585. கானலை நீரென்று எண்ணி மான் ஓடி இளைத்ததுபோல.
Being caught in a delusion.

3586. கானலை சலமாய்க் கண்டதுபோல.
Mistaking one for another.

## கி

3587. கிடக்கிறது கிடக்கட்டும் கிழவனை எடுத்து மணையிலே வை.
Attend to the chief business.

3588. கிடக்கிறது குப்பைக்குழி கனாக் காண்கிறது மச்சுவீடு.
Condition *versus* conduct.

3589. கிடைகிடந்த விடத்தில் மயிர்கூடக் கிடையாது.
Nothing remains.

3590. கிட்டவா நாயே என்றால் மூஞ்சியை நக்குகிறது.
Taking advantage of kindness.

3591. கிட்டநெருங்க முட்டப் பகை.
Evil of too much intimacy.

3592. கிட்டாத ஒன்றை வெட்டென மற.
An excellent advice.

3593. கிட்டினால் ராமா கோவிந்தா, கிட்டாவிட்டால் ஒன்றுமில்லை.
False religion.

... கிடையாச் சரக்கு ... பெண்டாட்டி குணம்
Coming across a rare article.

3595. கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டதுபோல்.
An unexpected calamity.

3596. கிணறும் வெட்டித் தவளையும் பிடித்து விடுகிறதா?
Result not satisfactory.

3597. கிணறு கிடக்க மலை கல்லாதே.
Against needless labour.

3598. கிணறு வெட்டித் தாகம் தீர்க்கலாமா?
Similar to preceding.

3599. கிணறு மெத்தினாற் கீழ்வளை பொசியும்.
The upper and lower springs.

3600. கிணறு இறைக்க இறைக்கச் சுரக்கும்.
"Charity never faileth."

3601. கிணறு தப்பித் துரவில் விழலாமா?
Avoiding Scylla and falling against Charybdis.

3602. கிணற்றிலே கல் போட்டாற்போல் கிடக்கிறது.
Saying nothing when spoken to.

3603. கிணற்றிலே தண்ணீர் உதித்தது.
A lucky find.

3604. கிணற்றில் விழுந்தவன் மறுபடியும் விழுவானா?
A burnt child dreads the fire.

3605. கிணற்றில்இருக்கும்ஆமைபோலிருப்பவனுக்குத்தெரியுமோ?
Compare above.

3606. கிணற்றில் கல் போட்டதுபோல.
Another form of 3602.

3607. கிணற்றுக்குள்ளே கங்கை குதித்தாற்போல.
A double fortune.

3608. கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பம் ஏன்?
Against inquisitiveness.

3610. கிணற்றுத் தண்ணீரை வெள்ளம் கொண்டுபோகுமா?
Permanent *versus* temporary.

3611. கிணற்று ஆழமும் கயிற்று நீளமும் பார்க்கவேண்டும்.
Adjust means to end.

3612. கிணற்றுத் தவளை தண்ணீர் குடித்ததைக் கண்டது ஆர், குடியாததைக் கண்டது ஆர்?
Never mind little details.

3613. கிணற்றைத் தூர்த்தால் வயிற்றைத் தூர்க்கும்.
The importance of a well.

3614. கிணற்றைக் கண்டு கடல் ஒதுங்கிப்போகுமா?
The great *versus* small.

3615. கிண்டக் கிண்ட அம்பட்டன் குப்பை மயிரே புறப்படும்.
The nature of the vulgar.

3616. கிண்டக் கிண்டக் கீரையும் மயிரும்.
An unwelcome revelation.

3617. கிண்டிவிட்டுக் கிளறிக் வைக்கிறது.
Sowing dissensions.

3618. கிண்ணி பட்டாலும் பட்டது கிடாரம் பட்டாலும் பட்டது.
One or another.

3619. கிண்ணிவைத்து கிண்ணி மாற்றுகிறது.
Tricks at meals.

3620. கிரக சாந்திக்குச் சவரம்பண்ணிக் கொள்ளுகிறதா?
A useless ceremony.

3621. கிராமத்தைப் பார்க்கச்சொன்னால் சேரியைப் பார்க்கிறான்.
Attends to the wrong affair.

3622. கிரிசைகெட்டு வரிசை மாறுகிறது.
An unexpected misfortune.

3623. கிரியை அற்றோன் மறை சாற்றுவது என்?
Example contrary to precept.

3624. கிருபா நிதியே சருவ [illegible] பெண்டாட்டி குணம்
Grace the true treasure.

3625. கிலி பிடித்ததோ புலி பிடித்ததோ?
Fear terrifies more than foe.

3626. கிழக்கடாவைப் புகழுகிறது இகழ்ச்சி அல்லவா?
A useless old sheep.

3627. கிழக்கிலும் மேற்கிலும் கனவிலும் கடன் கொடாதே.
Against giving loans.

3628. கிழக்குரங்குபோல விழிக்கிறதைப்பார்.
An ugly grin.

3629. கிழக் குடலுக்குச் சோறும் இடி சுவருக்கு மண்ணும் இடு.
The old always crave for food.

3630. கிழப் பேச்சு சபைக்கு ஏறுமா?
The old seldom speak sensibly.

3631. கிழவன் ஆனாலும் கெட்டை ஆனாலும் கட்டிக்கொண்டவள் பிழைப்பாள்.
Marriage is profitable anyhow to a woman.

3632. கிழவனுக்கு வாழ்க்கைப்படுகிறதிலும் கிணற்றில் விழலாம்.
Never marry an old man.

3633. கிழவிப் பேச்சைக் கின்னரக்காரன் கேட்பானோ?
Compare above 3630.

3634. கிழவியும் காதம் குதிரையும் காதம்.
An old woman compared to a horse.

3635. கிழவி இருந்த வீடும் கிளி இருந்த காடும் ஈடேற மாட்டாது.
Prejudice against an old woman.

3636. கிழவிபோனபோது சுவர் இடிந்து விழுந்ததாம்.
Similar to preceding.

3637. கிழவிப்பாட்டைக் கின்னரக்காரன் கேட்பானோ?
Another form of 3633.

3638. கிழவியைப் பாட்டியென்பதற்குக் கேட்க வேண்டுமோ?
A palpable case.

3580 ... ...மல பேலுவான்.
3610. கிளைர் ... ...iscipline.

3640. கிழிந்த சீலை காசுக்கு இரண்டு.
Second-hand things cheap.

3641. கிழிந்த பம்பரம் காசுக்கு இரண்டு.
Same as preceding.

3642. கிழிஞ்சாப்பிள்ளை மணியத்திலே நீட்டினவிரல் அற்றுப் போம்.
Mischief leads to loss.

3643. கிளர்த்தும் கல்வி தளர்ச்சிப்படாது.
Mental culture commended.

3644. கிளியை வளர்த்துப் பூனை கையில் கொடுக்கலாமா?
Labouring for something and then losing it.

3645. கிளி அழுதால் பூனைவிடுமோ?
Nothing moves the tyrant.

3646. கிளியைப்போலப் பேச்சும் மயிலைப்போல நடையும்.
Graceful in speech and gait.

3647. கிளி அருமையைப் பூனை அறியுமா?
Compare above 3645.

3648. கிள்ளாக்குச் செல்லும் கொடிமன்னர்போல.
Royal splendour.

3649. கிள்ளை படிக்குமாம் கிளி வந்து கொஞ்சுமாம்.
One suiting another.

3650. கிள்ளிக் கிளாப்போல் உள்ளத்தில் எண்ணுதே.
Keep nothing in the mind.

3651. கிள்ளுவார்க்கீழ் இருப்பதிலும் அள்ளுவார்க்கீழ் இருக்கலாம்.
Better to be robbed than pinched.

3652. கிள்ளி எடுக்கச்சதை இல்லாமற் போனபோதிலும் பேர் தொந்தியாப்பிள்ளை.
Mere skin and bones.

பெண்டாட்டி குணம்

கீ.

3653. கீத்திலே கினவிலே தெரியுமா?
Fancy *versus* fact.

3654. கீத்திலே வேண்டாம் சாத்திலே வாரு.
Asking for better treatment.

3655. கீரி கடித்த பாம்புபோல.
Well in one's power.

3656. கீரிக்கும் பாம்புக்கும் தீராப் பகை.
Mortal enemies.

3657. கீரியும் பாம்பும்போல.
Always at enmity.

3658. கீரிவாய்ப் பாம்புபோல்.
Compare above.

3659. கீரைக் கடைக்கும் எதிர்க்கடை வேண்டும்.
Urges free trade.

3660. கீரைக்குப் புல்லுருவி கீழே முளைத்தாற்போலே.
A destroyer at work.

3661. கீரைக்குக் கழுவின தண்ணீர் கிண்டி அவிக்கப் போகும்.
Recommends economy.

3662. கீரைக்கட்டை வெட்டச் சொன்னால் தோரணம் கட்டுகிறதா?
Doing the wrong thing.

3663. கீரைத் தண்டு பிடுங்க ஏலேலப்பாட்டு என்?
Easy deeds needs no stimulus.

3664. கீரையும் மாவும் கெட்டபுளிச்சாறும்.
Disagreeable food.

3665. கீரையும் இரண்டு கறி பண்ணுதே.
Something deficient.

3666. கீர்த்தி பெற்றும் கிலேசம் என்ன?
Famous and yet sad.

3580 ... 3610. ... appease hunger.

---

3668. கீழேழுலோகமும் மேலேழுலோகமும் கண்டகாட்சியா?
Something unheard of.

---

3669. கீழே பாம்பு என்றால் மேலே பார்க்கிறான்.
Does not pay proper attention.

---

3670. கீழோராயினும் தாழவுரை.
Recommends politeness.

---

3671. கீழெலிப்போல தோண்டி விளருகிறது.
Transacting everything.

---

3672. கீழ்க்குலத்தான் ஆனாலும் கற்றவன் மேற்குலத்தான்.
Learning raises one's caste.

---

3673. கீழ்க்காது மேற்காது மூளி, சண்டைக்கு ரண பத்திரகாளி.
Ugly persons very quarrelsome.

---

3674. கீழ்த்தெருக்கிழவி அவிசாரிபோனாளென்று, மேல்தெருக்கிழவன் கோசவணத்தில் கிட்டியைக் கட்டி அடித்தானாம்.
Engaged into wild-goose chase.

---

3675. கீழ்த்தெருவிலே பல்லக்குக் கொடுத்து மேல் தெருவில் பிடுங்கிக்கொள்ளுகிறது.
Inconsistent conduct.

---

3676. கீறி ஆற்றினால் புண் ஆறும்.
Condemns superficial remedies,

---

## கு.

3677. குங்கிலியத் தூபம் காட்டிச் சன்னதமும் குலைந்தால் கும்பிடு எங்கே?
Self-sought evil.

---

3678. குங்குமம் சுமந்த கழுதை பரிமளம் அறியுமா?
There must be ability to appreciate.

---

3679. குங்குமக் கோதைக்கு அஞ்சுபணம், குருட்டுக் கண்ணிக்கும் அஞ்சு பணமா?
All not of the same value.

---

3680. குசத்தாதனும் இடை ஆண்டியும் பெண்டாட்டி குணம்
Certain castes have no mendicants.

3681. குச்சத்திலும் குசவாகப்போக.
Wishing ruin.

3682. குச்சத்திலும் குடியைக் கெடுக்கும்.
Something destructive.

3683. குச்சுடன் மேய்ந்த கோழியைப்போல.
Well-fed and luxurious.

3684. குஞ்சிரிப்புக்கு மருந்து சாப்பிட உள்ள சிரிப்பும் போனாற் போல.
Incurring greater evil by remedying a smaller.

3685. குடத்தில் ஏற்றிய விளக்கு.
Sure to go out.

3686. குடத்தினில் விளக்கையிட்டுக் கோபுரத்தின்மேல் வைத்தாற் போல.
Doing something useless.

3687. குடத்திற் பொன் கூத்து ஆடுமோ ?
An unreasonable expectation.

3688. குடப்பால் கறந்தாலும் குதிரை ஓட்டம் ஓடமாட்டாது.
Natures differ.

3689. குடப்பால் கறந்தாலும் கூரை பிடுங்குகிற மாடு ஆகாது.
Kindness *versus* mischief.

3690. குடந் தண்ணீரிற் கொள்ளி வைத்தாற்போல.
Putting on the extinguisher.

3691. குடலும் கூந்தலும் கொண்டது கொள்கை.
Taking things as they come.

3692. குடலைப்பிடுங்கிக் காட்டினாலும் கசரணவித்தை என்கிறான்.
Turning everything to one's own advantage.

3693. குடல் கூழுக்கு அழுகிறதாம், கொண்டை பூவுக்கு அழுகிற தாம்.
Each seeking to supply its own need.

…ஓமும்?

3580 … erect.
3610. …

3695. குடல் அறுந்த கோழி எங்கே போகும்?
Similar to preceding.

3696. குடல் காய்ந்தால் குதிரையும் வைக்கல் தின்னும்.
Hunger reconciles one to any food.

3697. குடி உடையான் முடி உடையான்.
Value of owning a dwelling place.

3698. குடி இருந்து அறி, வழி நடந்து அறி.
A good counsel.

3699. குடி இருந்துபார் கூட்டுப்பயிர் இட்டுப் பார்.
Try dwelling and cultivating with another.

3700. குடி இருப்பது குச்சுவீடு, கனாக் கண்டது மச்சுமாளிகை.
Dreams *versus* reality.

3701. குடி இல்லா வீட்டிற் குண்டுப்பெருச்சாளி உலாவும்.
Every house must be occupied.

3702. குடி இல்லா ஊரிலே அடி இடல் ஆகாது.
Condemn a village without inhabitants.

3703. குடி இல்லா ஊருக்கு நரி ராசன்.
Foxes rule an uninhabited village.

3704. குடிக்கிறது எருமைமூத்திரம் கடித்துக்கொள்ளுகிறது இஞ்சிப்பச்சிடி.
Food *versus* luxury.

3705. குடிக்கிறமூலையும் சரி பிடிக்கிறமூலையும் சரி.
Serving a double purpose.

3706. குடிக்கிறது கூழ் கொப்பளிக்கிறது பன்னீர்.
Compare above 3704.

3707. குடிக்கிற பாலை வெடிப்பிலே வார்க்கிறதா?
Wilful waste.

3708. குடிக்கிறது காடி நீர், அதற்குத் தங்க வட்டிலா?
Vessel too good for beverage.

3709. குடிக்கிறது கூழாம் [illegible] பெண்டாட்டி குணம்
Compare above.

---

3710. குடிக்கிற வீடு விடியுமா ?
Condemns drunkenness.

---

3711. குடி சூது விபசாரம் குடியைக் கெடுக்கும்.
What ruins a family.

---

3712. குடித்த மருந்தைக் குடித்தாற்போல எடுத்தால் பால்காரிவா யிலே மண்ணுத்தான்.
Medicines must not be spat out.

---

3713. குடித்தனமோ துரைத்தனமோ ?
Dwelling is not ruling.

---

3714. குடித்தனம் மேலிட வேண்டிப் பிடாரியைப் பெண்டுவைத் துக்கொண்டான்.
Aiming at something and doing the contrary.

---

3715. குடித்தனமொன்று பண்ணினல் நன்மையும் வரும் தீமையும் வரும்.
Family life has its evil as well as good.

---

3716. குடிபோன வீட்டிலே வறட்டுநாய் காத்ததுபோல.
An uninhabited house.

---

3717. குடிமதம் அடிபடத் தீரும்.
How drunkenness is got rid of.

---

3718. குடிமிக்குத் தக்கின கொண்டை.
Effect in proportion to means.

---

3719. குடிமித்தலையின் வீருப்பைக் கொண்டைத்தலையா பாரடா.
A challenge.

---

3720. குடிமித்தலையும் மொட்டைத் தலையுமாய்க் கூட்டுகிறது.
Mixing things unlike.

---

3721. குடியனும் வெறியனும் சரி.
Different kinds of drunkards.

---

3722. குடியாத வீடு விடியாது.
A drunken household.

---

3580 ... அது பிறக்காது.
3610. ... 3716.

---

3724. குடியிற் பெண்ணின்வயிறு எரிய, கொடியிற் சேலை நின்று [எரியும்.
Against starving a woman.

---

3725. குடியில்லா ஊரிலே ஒற்றைப் பணக்காரன்.
Money useless in an uninhabited village.

---

3726. குடியிற் பிறந்து குரங்கு ஆட்டம் ஆடுதல்.
Manners inconsistent with birth.

---

3727. குடியிற் பிறந்து செடியில் விழுந்தான்.
Compare preceding.

---

3728. குடி வைத்துக் கொண்டாயோ கொள்ளி வைத்துக் கொண்டாயோ ?
Against entering the married state.

---

3729. குடி வைத்த வீட்டிற் கொள்ளி வைக்கலாமா ?
Condemns treachery against a family.

---

3730. குட்டிக் கிடையிலே ஓநாய் புகுந்ததுபோல்.
In imminent danger.

---

3731. குட்டிக் கலகம் பண்ணுகிறவன் குட்டுப்பட்டுச் சாவான்.
Condemns one who sows dissensions.

---

3732. குட்டியின் கையைப் பிடித்துக் குரங்கு கொள்ளிக்கட்டைச் சுடுபார்த்தாற்போல.
Experimenting on one's own people.

---

3733. குட்டிச்சுவரும் குரங்கிருந்த மாளிகையும்.
Monkeys ruin a house.

---

3734. குட்டிக் கரணம் போட்டாலும் லோபன் கொடான்.
A miser's character.

---

3735. குட்டிச் சுவரிலே தேள் கொட்ட, கட்டுத் தறியிலே நெறி கட்டுமா ?
One suffering and another complaining.

---

3736. குட்டிச் சுவரிலே தேள் கொட்டத் தண்ணீர் மிடாவிலே நெறிகட்டுமா ?
Similar to preceding.

---

3737. குட்டிச் சுவரில் முட்டிக்கொண்ட பெண்டாட்டி குணம்
Are you so dim of sight?

3738. குட்டிபோட்ட நாய்போல் குலைக்கிறது.
In too much anxiety.

3739. குட்டின குட்டும் குண்டிற் பாய்ந்த தண்ணீரும் வருமா?
Cannot recall certain effects.

3740. குட்டி ஆடு கொழுத்தாலும் வழுவழுப்பு போகாது.
Immature things.

3741. குட்டி குலைத்து நாய்பேரில் வைக்கிறதுபோல.
Laying the blame on an innocent person.

3742. குட்டி நாய்கொண்டு வேட்டை ஆடினதுபோல.
Employing inadequate means.

3743. குட்டிப்பாம்பை அடித்தாலும் குற்றுயிராக விடப்போகாது.
Snakes must be thoroughly killed.

3744. குட்டு மானம் தப்பிக் குசவனோடே பேசினால், சட்டையும் பண்ணான், சட்டியும் கொடான்.
Avoid a potter.

3745. குட்டுப்பட்டாலும் மோதிரக் கையாலே குட்டுப்பட வேண்டும்.
Serve the noble.

3746. குட்டைத்தாதன் மகன் மொட்டைத்தாதன் குளத்திலே விழுந்து செத்தான்.
Related effects.

3747. குட்டையைக் கலக்கிப் பருந்துக்கிரை இடுகிறது.
Useless effort.

3748. குணத்தை மாற்றக் குரு இல்லை.
No teacher can convert a man.

3749. குணக்கெடுக்க நாய் வாலைக் கூடுமா?
Nature cannot be altered.

3750. குணம் இல்லா வித்தை எல்லாம் அவித்தை.
Art without goodness useless.

...ஐத்திற்கு அழுகிறதா?

3580 ...

3610. இ... ...y—essential.

3752. குணம் உற்றவன் மணம் உற்றவன், குணம் அற்றவன் மணம் அற்றவன்.
Good nature extolled.

3753. குணம் பெரிதேயன்றிப் குலம் பெரிதல்ல.
Nature not caste, important.

3754. குண்டாங் கரணம் போட்டாலும் பிண்டாச் சோற்றுக்கு வழி இல்லை.
Starving in spite of cleverness.

3755. குண்டி காய்ந்தால் குதிரை வைக்கோல் தின்னும்.
Hunger seeks no delicacies.

3756. குண்டி எத்தனை கோணற் கோணினாலும் சுமை வீட்டிற் போய்ச் சேர்ந்தாலே சரி.
A cruel employer.

3757. குண்டி கூழுக்கழுகிறது கொண்டை பூவுக்கழுகிறது.
Compare above.

3758. குண்டி அறுந்த பருந்துபோல.
A disabled kite.

3759. குண்டி மறைக்கத் துணியில்லை கொண்டை பூவுக்கழுகிறதாம்.
Ill-clad and yet vain.

3760. குண்டுச் சட்டியிலே குதிரை ஓட்டுகிறான்.
Engaged in a foolish business.

3761. குண்டு பட்டுச் சாகாதவன் வண்டு கடித்துச் செத்தானும்.
Said of an unexpected death.

3762. குண்டு போன விடத்தில் குருவி சேர்ந்தது.
An agreeable surprise.

3763. குண்டுமில்லாமல் மருந்து மில்லாமல் குருவி சுடலாமா?
Attempting something without tools.

3764. குண்டுச் சட்டியிற் கரணம் போடலாமா?
Compare above.

3765. குண்டுப் பெருச்சாளியும்கொண்ட பெண்டாட்டி குணம்
Like bandy-coots and beetles.

3766. குண்டுணி சொல்லுகிறவனுக்கும் இருநாக்கு, கட்டுவ...
கும் இருநாக்கு.
A tale-teller has a double tongue.

3767. குண்டை பலத்தாற் குடி பலக்கும்.
Good feeding—good progress.

3768. குதித்துக் குதித்து மாவிடித்தாலும் குந்தாணிக்கொரு கொ
ழுக்கட்டையும் கிடையாது.
A servant who profits not by his labours.

3769. குதி குதி என்பார்கள் எல்லாரும், கூடக் குதிப்பார்களா ?
Many would advise but not one would aid.

3770. குதிரை குருடானாலும் கொள்ளுத் தின்கிறதிற் குறையா ?
Defects not allowed to deprive one of one's rights.

3771. குதிரை கொண்டால் கலினத்துக்கு வழக்கா ?
Petty disputes.

[டுக்கவில்லை ?
3772. குதிரையின் குணம் அறிந்தல்லவோ தம்பிரான் கொம்பு கொ
Nature wise in her bestowal of gifts.

[வாச்சுது.
3773. குதிரைசெத்ததல்லாமற் குழித்தோண்ட மூன்றுபணம் செல
Loss upon loss.

3774. குதிரை செத்ததல்லாமற் சேணம் சுமக்க வேலை ஆயிற்று.
Similar to preceding.

3775. குதிரைக்கும் நாய்க்கும் குடிபோகச் சந்தோஷம்.
Horses and dogs like removals.

3776. குதிரை இரவுத்தலைத் தள்ளினதுமல்லாமல் குழியும் தோ
ண்டுகின்றதாம்.
Compare above.

3777. குதிரை இல்லா ஊருக்குக் கழுதை தம்பிரான்.
When first-class men are absent, second-class men rule.

3778. குதிரையின் கொழுப்பறிந்து சாமி கொம்பு கொடாமற்போ
னார்.
Nature impartial in her gifts.

...ய்ப் பறப்பானும்இராவுத்தன்.

3580 ...

3610. இ... ...erent ...on.

---

...02. குதிரை ஏறாமல்கெட்டது, கடன் கேளாமல் கெட்டது.
Ask and it shall be given.

---

3781. குதிரை எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறடிபாயும்.
The child outstripping its parent.

---

3782. குதிரை ஏற யோகமிருந்தால் கொண்டேற வேண்டுமோ?
Belief in good luck.

---

3783. குதிரை ஏற அதிஷ்டம் இருந்தாற் குண்டியின்கீழ் வந்து நுழையாதா?
Similar to preceding.

---

3784. குதிரை நல்லதுதான் சுழிகெட்டது.
Finding fault with a horse's marks.

---

3785. குதிரை ஏறி என்ன, கோணக்கொம்பு ஊதி என்ன, வீணர்க்கும் கீர்த்திக்கும் வெகுதூரம்.
Reputation cannot be purchased.

---

3786. குதிரை பாகனைத் தள்ளுவதும் அல்லாமல் குழியும் தோண்டுகிறதாம்.
Doing excessive evil.

---

3787. குதிரைக் கொம்பாகிவிட்டது.
Something exceedingly rare.

---

3788. குதிரை செத்தது அல்லாமல் குழிதோண்ட மூன்றுபணமா?
Loss entailing loss.

---

3789. குதிரையுங் காதம் கிழவியும் காதம்.
A horse's pace *versus* that of an old woman.

---

3790. குதிரையும் ஏறிக் குதிரைக்குட்டியும் ஏறுகிறதா?
Every one cannot be put to the same use.

---

3791. குதிரை பிடிக்கச், சம்மட்டி அடிக்க, கூப்பிட்ட குரலுக்கு ஏனென்ன.
A jack of all trades.

---

3792. குதிரை விற்ற குச்சலியன்போல.
Like one cheated in a bargain.

---

3793. குதிரை இருப்பு அறியும், கொண்ட பெண்டாட்டி குணம் அறிவாள்.
A wife's knowledge of her husband.

3794. குத்திவடித்தாலும் சம்பா, குப்பையில் போட்டாலும் தங்கம்.
Precious things never lose their value.

3795. குத்திரம் குடியைக்கெடுக்கும்.
Knavery condemned.

3796. குத்தக் கூலியும் கொடுத்து எதிர்மூச்சும் போகிறது.
Losing in a double way.

3797. குத்துப்பட்டு பொறுத்தாலும் குறை வயிறு பொறுக்குமா ?
Hunger unappeasable.

3798. குந்திநாக்கைக் கூழையாய் அறுத்தாலும் இடம் இரண்டு காசென்பாள்.
Will not abate her rates.

3799. குந்தி இருந்து தின்றால் குன்றும் மாளும்.
Slow eating recommended.

3800. குபேரன் பட்டணத்திலும் விறகு சுமக்கிறவன் உண்டு.
The poor everywhere.

3801. குபேரன் பட்டணம் கொள்ளைபோனாலும் கொடுத்துவைக் காப்பாவிக்கொன்றுமில்லை.
The fate of the unfortunate.

3802. குபேரன்பட்டணம் கொள்ளைபோனாலும் அதிஷ்டவீனனுக்கு அகப்பைக்காம்பு அகப்படுமா.
Similar to preceding.

3803. குப்பைமேடுயர்ந்தது கோபுரம் தாழ்ந்தது.
Vicissitudes of life.

3804. குப்புறவிழுந்து தவம் செய்தாலும் குருக்களுக்கு மோட்சம் [இல்லை.
Tamil opinion of gurus.

3805. குப்புறவிழுந்தாலும் மீசையிலே மண்படவில்லை என்கிறான்.
An irrepressible combatant.

3806. குப்பைக்கீரைத்தண்டு கப்பலுக்குக் கர்லாமா ?
An unsuitable person.

3807. குப்பையில் முளைத்தகிளை கப்பலுக்குப் பாய்மரம் ஆகுமா ?
Compare preceding.

3808. குப்பையில் முளைத்தகொடி கூரையில் ஏறினதுபோல.
A low person coming to a high station.

3809. குப்பையின்றிப் பயிர் விளையாது.
Manure essential.

3810. குப்பையிற்கிடந்தாலும் குன்றிமணி நிறம் போகுமா ?
Station cannot affect one's character.

3811. குப்பையிற் புதைத்தாலும் குன்றிமணி நிறம்போகாது.
Similar to preceding.

3812. குப்பை உயர்ந்தது கோபுரம் தாழ்ந்தது.
Another form of 3802.

3813. குப்பை உயர்ந்ததென்ன, கோபுரம் தாழ்ந்ததென்ன?
The freaks of nature.

3814. குப்பையும் கோழியும்போலக் குருவும் சிஷனும்.
Well matched.

3815. குமரி ஒரு பிள்ளை, கோடி ஒரு வெள்ளை.
Youth cannot last.

3816. குமரி தனிவழியே போனாலும் கொட்டாவி தனிவழியே போகாது.
Some things contageous.

3817. குமரியாயிருக்கையிற் கொண்டாட்டம், கிழவியா யிருக்கையிற் திண்டாட்டம்.
Youth *versus* old age.

3818. கும்பிட்டுக் கடன்கொடாதே கும்பிட்டுக் கடன்வாங்காதே.
Against giving and taking debt,

3819. கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தாற்போல.
One's wish anticipated.

3820. கும்பிட்ட தெய்வம் குலதெய்வம்.
Worship familiarizes the god.

3821. கும்பிடும் கள்ளர் குழைந்திடும் கள்ளர்.
Rogues feigning submission.

3822. கும்பியிலே கல்லைவிட்டெறிந்தால் கூடத்தெறிக்கும் ?
Some causes followed by immediate effects.

---

3823. கும்பிட்டகோயில் தலைமேலிடிந்து விழுந்ததுபோல.
Ruined by a trusted superior.

---

3824. கும்பிடு கொடுத்து கும்பிடு வாங்குகிறது.
Respect begets respect.

---

3825. குயவனுக்குப் பலநாள்வேலை, தடிகாரனுக்கு அரைநாழிகை வேலை.
Destroying easier than making.

---

3826. குயவா கலசம் கொண்டுவா, இடையா பால்கொடு என்றாற் போல.
Bidding the right person.

---

3827. குயில்முட்டையிடக் காகம் கண்டுகளிக்க.
The crow hatches the cuckoo's eggs.

---

3828. குயில் கூவினாற்போல.
As sweet as the note of a cuckoo (Sarcastic).

---

3829. குயில் குரலும் மயில் அழகும் போல.
Compare preceding.

---

3830. குரங்குக்குப் புத்திசொல்லித் தூக்கணாங்குருவி கூண்டிழந்தது.
The adviser running into danger.

---

3831. குரங்குக்குட்டிக்குக் கள் வார்த்தாற்போல.
Doing something unseemly.

---

3832. குரங்குக்கும் தன்குட்டி பொன்குட்டி.
Every mother praises her own child.

---

3833. குரங்குப்புண் ஆறாது.
It never leaves it alone.

---

3834. குரங்குப் புண் பிரமாண்டம்.
Similar to preceding.

---

3835. குரங்குப்பிணமும் குறவன் சுடுகாடும் கண்டதில்லை.
Their deaths seldom noticed.

---

3836. குரங்குக்கையில் பூமாலை அகப்பட்டதுபோல.
Not knowing how to use a gift.

3837. குரங்கு தன் குட்டியின் கையைக்கொண்டு பதம் பார்க்கிறதுபோலப் பார்க்கிறான்.
Feeling the pulse in a wrong way.

3838. குரங்குப் பிடியே பிடி.
A monkey never lets go its hold.

3839. குரங்குப் பிடிபோல் பிடிக்கவேண்டும்.
Similar to preceding.

3840. குரங்கின்பீயை மருந்துக்குக்கேட்டால் கொப்பு கிளை எல்லாம் தத்திப்பாயும்.
A low person does not readily give something.

3841. குரங்குமுகம் எல்லாம் ஒருமுகம்.
All monkeys look alike.

3842. குரங்கு ஆனாலும் குலத்தில் கொள்ளவேண்டும்.
Look to caste and not appearance.

3843. குரங்கு ஏறாத கொம்புண்டா?
Monkeys can climb any trees.

3844. குரங்கு எல்லாம் கூட்டம் கூட்டமாகவிருக்கும்.
Monkeys are gregarious.

3845. குரங்கின் கையில் கொள்ளி அகப்பட்டதை?
Like a firebrand in the hand of a monkey.

3846. குரப்பமிட்டுத்தேய்த்தும் குதிரை ஆமா கழுதை?
An ass can never become a horse.

3847. குரு இல்லாத சிஷன் உண்டா?
No disciple without a teacher.

3848. குரு இல்லார்க்கு வித்தையும் இல்லை, முதல் இல்லார்க்கு லாபமும் இல்லை.
No teacher no learning.

3849. குரு எனவந்தான் திரு உரை தந்தான்.
A guru and his word.

3850. குருக்கள் நின்றுபெய்தால் சீஷன் ஓடிப்பெய்வான்.
A bad master, a worse disciple.

3851. குருக்கள் பிழைத்தது மறுபிறப்பு.
Gurus seldom recover.

3852. குருடன் ராஜவிழி விழித்தாற்போல
Something unusual.

3853. குருடன்கையில் விலாங்கு அகப்பட்டதுபோல.
So slippery.

3854. குருடனுக்கு வேண்டியது கோல்.
The blind needs a staff.

3855. குருடனுக்கு வேண்டியது கண்.
The chief want of a blind man.

3856. குருடனுக்குக் குருடன் கோல்பிடிக்கலாமா?
Can the blind lead the blind?

3857. குருடன் ஆடு மேய்க்க எட்டாளுக்கு வேலையா ?
Grazing a blind man's sheep.

3858. குருடன் கூத்துப்பார்க்கப்போனால் பயனென்ன ?
A blind man going to a theatre.

3859. குருடனுக்குப் பால்சோறு கண்டதுபோல.
A blind man forming an idea of milk and rice.

3860. குருடனுக்குப் பால் கொக்குப்போன்றது.
A blind man's notion of milk.

3861. குருடன்பெண்டாட்டி கூனனோடே உறவாடினாள்.
A blind man's wife flirting with a hunchback.

3862. குருடன் பெண்டினை அடித்தாற்போல.
A blind man striking his wife.

3863. குருடனைப்பார்த்து ராஜவிழி விழிக்கச்சொன்னால் விழிப்பானா ?
Asking a blind man to open his eyes wide.

3864. குருடனை நோட்டம் பார்க்கச்சொன்னாற்போல.
Asking a blind man to criticize an object.

3865. குருடன் கைக்கோலைப் பிடுங்கினதுபோல.
Depriving one of one's only support.

3866. குருடன் வேண்டுகிறது கண்பெறத்தானே.
A blind man's only wish.

3867. குருடன் தண்ணீர்க்குப்போக எட்டாள் மினக்கிடு.
A blind man attempting to draw water.

3868. குருடனும் செவிடனும் கூத்துப்பார்க்கப்போய் குருடன் கூத்தைப்பழித்தான், செவிடன் பாட்டைப் பழித்தான்.
The blind and the deaf turning critics.

3869. குருடானாலும் குதிரை சிமிட்டுகிறதில் தாழ்ச்சியில்லை.
Though blind yet winking his eyes.

3870. குருடும் செவிடும் கூத்துப்பார்த்தாற்போல.
Compare above.

3871. குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடிக் குழியில் விழுமா ?
Two blind people in a dance.

3872. குருட்டுக்குதிரைக்குச் சறுக்கினது சாக்கு.
A blind horse's excuse.

3873. குருட்டுப்பூனை விட்டத்திற் பாய்ந்ததுபோல.
Springing at random.

3874. குருட்டுமாட்டை தெய்வம் காக்கிறது.
God protects the weak.

3875. குருட்டுக்கொக்கிற்கு ஊர்க்குளமே சாட்சி.
A blind crane.

3876. குருட்டுக்கோழி தவிட்டுக்கு வீங்கினதுபோல.
A blind fowl longing for bran.

3877. குருட்டுக்கண்ணுக்குக் குறுணிமையிட்டு ஆவதென்ன ?
Nothing can adorn a blind eye.

3878. குரு நின்ற நிலையில் நின்றால் சீஷன் ஓடுகிற ஓட்டத்தில் இருக்கிறான்.
Compare above 3850.

3879. குரு மொழிகேளாதவனும் தாய் வார்த்தைக்கு அடங்காதவனும் சண்டி.
A disobedient pupil.

3880. குருமொழி மறந்தோன் திருவழிந்து அழிவான்.
The evil of disregarding a teacher's words.

3881. குருமொழிக்கு இரண்டு குறுக்கே பேசலாமா ?
Recommends instantaneous obedience to a teacher.

3882. குருவியின் தலையிலே பனங்காயை வைத்ததுபோல.
Placing an undue weight.

3883. குருவியின் கழுத்திலே பனங்காயைக் கட்டித்தூக்கலாமா,
Similar to preceding.

3884. குருவிக்குத்தக்க இராமேஸ்வரம்.
Distance according to capacity.

3885. குருவிக்குத்தக்க பாரம்.
Weight according to strength.

3886. குருவிக்கூட்டை கோலாற் கலைக்காதே.
Dont disturb a nest.

3887. குருவுக்கு மிஞ்சின சிஷ்யன்.
An impertinent pupil.

3888. குருவுக்கு நாமம் குழைத்துப்போடுவான்.
A vicious pupil.

3889. குருவுக்குத்துரோகம் செய்தாலும் குடலுக்குத் துரோகஞ்செய்யக்கூடாது.
One cannot cheat one's stomach.

3890. குருவேஷங்கொண்டவன் எல்லாம் குரு ஆவானா?
The cloak does not make the priest.

3891. குலஸ்திரீ தன்பர்த்தாவையும் பரஸ்திரீ தன் மேனியையும் பேணுவர்.
The chaste *versus* the unchaste woman.

3892. குலத்தளவே ஆகுங்குணம்.
Character according to caste.

3893. குலத்துக்கீனம் கோடாலிக்காம்பு.
Loss of caste loss of family.

3894. குலத்தைக்கெடுக்குமாம் குரங்கு.
A monkey's nature.

3895. குலமகட்கழகு தன் கொழுநனைப்பேணுதல்.
A virtuous wife.

3896. குலமகன் குலத்துக்கு அழுவான், மூக்கறையன்கமூக்குக்கு [அழுவான்.
Each bewails his own loss.

3897. குலம்எப்படியோ குணம் அப்படி.
Compare above.

3898. குலம் புகுந்தும் குறை தீரவில்லை.
A reasonable complaint.

3899. குலம் குலத்தோடே வெள்ளம் ஆற்றோடே.
Caste only among one's caste-fellows.

3900. குலம் குப்பையிலே பணம் பந்தியிலே.
Caste *versus* wealth.

3901. குலமும் ஒன்று குறியும் ஒன்று.
Caste *versus* appearance.

3902. குலவித்தை கற்றுப் பாதி கல்லாமற் பாதி.
Imperfect training.

3903. குலைக்கிற நாய் கடிக்கிறது அரிது.
Those who talk much but do little.

3904. குலைக்கிற நாய்க்கு எலும்பைப் போட்டாற்போல.
Appeasing anger.

3905. குலைக்கிற நாய் வேட்டை பிடிக்குமா?
Compare above.

3906. குலைக்கிற நாயின் வாயிலே கோலைக் கொடுத்தால் ஊர் எங்கும் கொண்டோடிக் குலைக்கும்.
Adding fuel to fire.

3907. குலையாத நாய் குதிக்காலைக் கடிக்கும்.
Dread one who is calm.

3908. குழந்தைப் பட்டினியும் கோயில் பட்டினியும் இல்லை.
Children and temples are never in need.

3909. குழந்தைக்கும் நாய்க்கும் குடிபோகச் சந்தோஷம்.
They like change.

3910. குழந்தையும் தெய்வமும் கொண்டாடின இடத்திலே.
Love begets love.

3911. குழந்தைக் காய்ச்சலும் குண்டன் காய்ச்சலும் பொல்லாது.
Children and slaves take long to recover.

3912. குழந்தை தூங்குகிறது எல்லாம் அம்மையாருக்கு லாபம்.
Mothers like to see their infants sleeping well.

3913. குழந்தையின் தேகம்போல்.
So pure and tender.

3914. குழந்தாய் குழியில் அமிழ்ந்தாதே.
Because it is dangerous.

3915. குழப்படி கண்டு திரைகடல் எங்குமா ?
The great do not mind trifling troubles.

3916. குழம்புப் பால் குடிக்க குமர கண்டவலிப்ப ?
Sour milk brings on sickness.

3917. குழவணப் பிள்ளைபோல் பெருத்திருக்கிறான்.
Growing stout.

3918. குழிப்பிள்ளையை எடுத்து இழவு காணுகிறது
Playing a funeral.

3919. குழிப்பிள்ளை மடிப்பிள்ளை.
Conception follows a child's death.

3920. குழியிற் பயிரைக் கூரைமேல் ஏற இடுகிறது ?
Allowing too much liberty.

3921. குழியிற் பிள்ளையை நரி சுற்றுகிறாப்போலே.
Eager to consume flesh.

3922. குளத்தைக் கலக்கிப் பருந்துக்கு இரை இட்டதுபோல ?
Undergoing trouble for another's enjoyment.

3923. குளத்துக்கு மழை குந்தாணியா ?
Benefactors never disagreeable.

3924. குளத்திற் போட்டுக் கிணற்றில் தேடலாமா ?
Seeking something to the wrong quarter.

3925. குளத்தோடு கோபித்துக் கால் கழுவாதவன்போல்.
Punishing oneself foolishly.

3926. குளப்படிதண்ணீர் சமுத்திரமானால் குடந்தண்ணீர் எவ்வளவாகவேண்டும் ?
Every thing in proportion.

3927. குளப்படிதண்ணீரைச் சமுத்திரத்தி விறைப்பானேன் ?
"Gilding refined gold."

3928. குளப் படி நீரை இறைத்தால் கடற் பள்ளம் நிரம்புமா ?
Similar to preceding.

3929. குளம் உடைந்து போகும்போது முறைவீதமா ?
Distinctions disappear in distress.

3930. குளம் எத்தனை குண்டியைக் கண்டதோ ! குண்டி எத்தனைக் குளத்தைக் கண்டதோ ?
Boast of rivals.

3931. குளம் காக்கிறவன் தண்ணீரைக் குடியானோ ?
"Muzzling the ox that treadeth the corn."

3932. குளம் வற்றியும் முறைவீதம் உண்டா ?
Compare above.

3933. குளம் வெட்டுமுன்னே முதலை குடி இருக்குமா ?
No cause—no effect.

3934. குளவிக் கூட்டைக் கோலால் குலைத்தாற்போல.
Incurring evil by a rash act.

3935. குளவிக் கூட்டிலே கல்லு விட்டு எறிகிறதா ?
Same as preceding.

3936. குளவிக்குப் பச்சைப் புழு பிள்ளை
Offspring unlike parent.

3937. குளவி புழுவைத் தன்நிறம் ஆக்குவது போல.
Changing a person's nature.

3938. குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொண்டதுபோல.
Meaning one thing and doing the reverse.

3939. குளிசங்கட்டக் குட்டி இரட்டிக்கிறது.
Evil effects of charms.

3940. குளிராதவீடும் கூத்தியாருமுண்டானால் மயிரான வேளாண்மை விளைந்தால் தான் என்ன, விளையாமற்போனால் தான் என்ன?
Comfort breeds sloth.

3941. குளிர்ந்த கொள்ளியாய் இருந்து குடியைக் கெடுக்கலாமா?
A silent worker of evil.

3942. குள்ளப் பார்ப்பான் பள்ளத்தில் விழுந்தான் தண்டு எடு தடி எடு.
Making fun of one's distress.

3943. குள்ளனைக் கொண்டு ஆழம் பார்க்கிறான்.
A unsuitable instrument.

3944. குள்ளன் குடி கெடுப்பான், குள்ளன் பெண்சாதி ஊரைக் கெடுப்பாள்.
Shortness of stature condemned.

3945. குறுங் கோலும் நெடுந்தச்சும்.
Tools not matching each other.

3946. குற்றத்தண்டனையில் சுற்றத்தண்டனை நல்லது.
Distinguishes between punishments.

3947. குறத்தி பிள்ளை பெற குறவன் காயம் தின்னா.
Confinements among the Kuravar.

3948. குறுமை பூத்தாலும் குணம்போமா நெருப்புக்கு?
Nature not got rid of.

3949. குற வழக்கும் இடை வழக்கும் கொஞ்சத்தில் தீராது.
Quarrels of low people not easily settled.

3950. குற வழக்குக்குச் சக்கிலி வழக்கு இலேசு.
Similar to preceding.

3951. குறவன் குச்சு கட்டினாற்போல.
So ugly.

3952. குறுக்கே வந்து குட்டை குழப்பாதே.
Against interference.

3953. குறுணிப் பால் கறந்தபோதிலும் கூரை பிடுங்கப் பார்த்திருக்கலாமா?
Against encouraging evil in a good person.

3954. குறுணி மை தான் இட்டாலும் குருடு குருடே.
Blindness incurable.

3955. குறுணிக்காரனுக்கு வாழ்க்கைப்பட்டுப் பதக்குப்பதக்கு என்று அடித்துக்கொண்டால் வருமா?
Our lot cannot be altered.

3956. குறும்பியுள்ள காது திணவு தின்னும்.
A guilty conscience.

3957. குறும்பைத் தவிர்க்கும் குடிதாங்கி.
An excellent person.

3958. குறை அறக் கற்றவன் கோடியில் ஒருவன்.
The learned very rare.

3959. குறை குடம் தளம்பும், நிறை குடம் தளம்பாது.
Empty vessels make much noise.

3960. குறைகுடம் கூத்தாடும்.
A better form of above.

3961. குறையச் சொல்லி நிறைய அள.
Promise a little and perform much.

3962. குறையுள்ளோர்க்கு உண்டு குறுகுதல் கறையுள்ளோர்க்கு உண்டு கரவு.
The needy and the guilty.

3963. குறை வேலையைக் குருக்களுக்கும் காட்டாதே.
Condemns an imperfect work.

3964. குறை வேலையை அம்பலத்தில் கொண்டுவரலாமா?
Same as preceding.

3965. குற்றத் தண்டனையிலும் சுத்த தண்டனை நல்லது.
Recommends patience under persecution.

3966. குற்றம் பார்க்கிற் சுற்றம் இல்லை.
Commends impartiality.

3967. குற்றம் மறைப்பதில் மற்றொரு குற்றம் (நேரும்)
Dont hide your fault.

3968. குற்றம் அடைந்த கீர்த்தி குணங்கொள்ளல் அரிது.
Ill-gotten reputation will not last.

3969. குற்றம்போலச்செய்து குணஞ்செய்கிறது.
Harsh at first and then soft.

3970. குற்றமிகச் செய்தானைக் கொல்லாமற்கொல்ல மனச்சித்தம் அரிவாளுண்டோ தினகரா ?
Wishing criminals to be punished.

3971. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறு என்னும், குறும்பியுள்ள காது தினவு கொள்ளும்.
The guilty restless.

3972. குற்ற மனச்சாட்சி கூடிவாழச் சத்துரு.
"Conscience makes cowards of us all."

3973. குனிந்தொரு துரும்புகிள்ள சீவனில்லாமற் போனாலும் பேர் பனைபிடுங்கி.
Pretensions greater than ability.

3974. குன்றிமணிக்கும் குண்டியிற் கறுப்பு.
Nothing perfect.

3975. குன்றிமணி குப்பையிற் கிடந்தாலும் குன்றுமா நிறம் ?
Place cannot affect one's character.

3976. குன்றிமணி இல்லாவிட்டால் குசக்கூடத் தட்டான் பிழைக்கான்.
Red seeds necessary for goldsmiths.

3977. குன்றுமேலிட்ட விளக்கைப்போல.
Conspicuous and well posted.

3978. குத்துக்குமுன்னே குடிமையைப்பிடி.
Do the chief thing first.

3979. குருவிச் சொல்லும் மருவிக் கேளு.
Listen attentively.

3980. குரங்கின் வயிற்றிலே குஞ்சரம் பிறந்தது.
An unnatural birth.

3981. குந்தினையா குரங்கே உன் சந்தடி அடங்கே.
Ceasing to be troublesome.

3982. குந்தித்தின்றால் குன்றும் கரையும்.
Recommends slow eating.

## கூ.

3983. கூகை விழித்தாற்போல விழிக்கிறான்.
Gazes like an owl,

3984. கூகைக்குப் பகலில் கண் தெரியாது.
Owls blind in the day.

3985. கூடக் குடி இருந்துகொண்டு கொள்ளி சொருகலாமா?
Treacherous comrades.

3986. கூட இருந்துபார் கூட்டுப்பயிரிட்டுப்பார்.
Way of testing persons.

3987. கூடத்தைக் கொடுத்தாலும் மாடத்தைக் கொடுக்கல் ஆகாது.
Place a limit on your gifts.

3988. கூடம் இடித்தால் மாடம்.
Slight distinctions make great changes.

3989. கூடம் ஒன்று போடுமுன்னே, சுத்தி இரண்டு போடும்.
Hammer and sledge-hammer.

3990. கூடி எல்லாரும் தூக்கிவிடுங்கள், பிணக்காடாய் வெட்டிக் கு
விக்கப்போகிறேன் என்றான்.
A foolish boast.

3991. கூடி இருந்து குலாவுவார் வீட்டில் ஓடி உண்ணும் கூழும்
இனிதே.
Good tenants desired.

3992. கூடைக்கூடையாகக் கொடுத்தாலும் குறை அடங்காது.
Man is never satisfied.

3993. கூடையைச்சுட்டுக் கரியாகுமோ மயிரைச்சுட்டுக் கரியாகுமோ?
Use the right means.

3994. கூட்டத்திற் கட்டுச்சோறு அவிழ்த்ததுபோல.
Exposing one's private affairs.

3995. கூட்டம்பெருத்தாற் குசு பெருக்கும்.
Overcrowding breeds filth.

3996. கூட்டோடே போச்சுது குளிரும் காய்ச்சலும்.
Death putting an end to disease.

3997. கூண்டிலே குறுணிநெல் இருந்தால் மூலையிலே முக்குறுணி த்தெய்வம் கூத்தாடும்.
Worship depends on wealth.

3998. கூத்தரிசி குத்துகிற வீட்டில் வாய்க்கு அரிசிக்கு வழிஇல்லை.
Poverty in the midst of prosperity.

3999. கூத்தாடிச் சிலம்பம் படைவெட்டுக்குத் தருமா?
An unsuitable tool.

4000. கூத்தாடிக்குக் கீழே கண் கூலிக்காரனுக்கு மேலே கண்.
Each looking to his own interests.

4001. கூத்திக்கு இட்டுக் குரங்கு ஆனான் வேசிக்கு இட்டு விறகு ஆனான்.
Result of an adulterous life.

4002. கூத்திப் பிள்ளைக்குத் தகப்பன் ஆர்?
Not known.

4003. கூத்தியார் ஆத்தாள் செத்தால் கொட்டும் முழக்கும், கூத்தியார் செத்தால் ஒன்றும் இல்லை.
The mother is a virtuous woman.

4004. கூத்தியார் செத்தால் பிணம், அவள் தாய் செத்தால் மணம்.
Same as preceding.

4005. கூத்திலே கோணங்கி வந்தாற் போல.
A disagreeable intruder.

4006. கூத்தியார் வீட்டுக்கு நாய்போல் அலைகிறான்.
One given to concubinage.

4007. கூத்திற்குப் பந்தம் பிடித்தாற்போல.
Helping on something.

4008. கூத்திற்கேற்ற கொட்டு கொட்டுகிறது.
Regulating music to dance—said of a flatterer.

4009. கூத்துப் பார்க்கப் போன இடத்தில் பேய் பிடித்ததுபோல.
Trouble where joy was expected.

4010. கூத்துக்கு மீசை சரிக்கவா?
Why lose a good thing in vain?

4011. கூப்பாட்டால் சாப்பாடாகுமா ?
Mere cry will not feed.

4012. கூப்பிடப்போன தாதி மாப்பிள்ளையைக் கைக்கொண்டாள்.
Taking advantage of one's confidence.

4013. கூரிய சொல்லான் ஆரிலும் வல்லான்.
Gift of speech.

4014. கூரியனிலும் வீரியம்பேசான்.
A modest person.

4015. கூருக்கு எதிர் உதைத்தால் குரெழ வருத்தும்.
Kicking against the pricks.

4016. கூனைக்காய் வைத்தியம் குணத்திற் கேற்குமா ?
Unsuitable treatment.

4017. கூரை ஏறிக் கோழி பிடிக்கமாட்டாத குருக்கள் வானம் ஏறி வைகுண்டம் காட்டுவாரா ?
A libel on priests.

4018. கூரைமேலே சோறு போட்டால் ஆயிரம் காகம்.
Secret of popularity.

4019. கூர்மையாளனே நேர்மையாளன்.
The keen-witted and upright.

4020. கூலி குறைத்தால் வேலை கெடும்.
Low wages—bad work.

4021. கூலி குறைத்தாயோ குறை மரக்கால் இட்டாயோ ?
Compare preceding.

4022. கூலிக்காரன் பெண்டாட்டி பிள்ளைபெறப்போகிறாளாம், குப்பையிலே ஆமணக்கு முளைக்கப் போகிறதாம்.
Distress of the poor not made much of.

4023. கூலிக்கு நாற்று நடவந்து எல்லைக்கு வழக்கோ ?
Hireling turning owner.

4024. கூலிக்குக் கழுவிருப்பார்களா ?
Who would pay for pain ?

4025. கூலிக்குக் குத்துகிறவனைக் கேளிக்கை ஆடச் சொன்னாற் [போல்.
Spoiling a good work.

4026. கூலிக்குப் பாவி குறுக்கே.
Leading one to loss.

4027. கூலிக்குக் கழு ஏறுவார்களா?
Who would willingly suffer pain ?

4028. கூலிப் படை வெட்டுமோ ?
A hireling not to be trusted.

4029. கூ என்றவன்பேரில் கொல்லச்சினம்.
Condemns the clamorous.

4030. கூழிலே விழுந்த ஈ குழம்புகிறதுபோல.
In extricable distress.

4031. கூழ் குடிக்கிறையா அப்பா, குறுணி குடிப்பேன் குப்பா.
Taking advantage of an offer.

4032. கூழுக்குக் குட்டிச்சுவரோடு போனவளே.
An unchaste woman.

4033. கூழுக்கு மாங்காய் தோற்குமா ?
Quite a match for each other.

4034. கூழுக்கு மாங்காய் கொண்டாட்டம், குரங்குக்குத் தேங்காய் கொண்டாட்டம்.
Each seeks its favourite.

4035. கூழுக்குக் கொறடா மிளகாய்.
It helps the eating.

4036. கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசையா?
Desiring two good things at once.

4037. கூழ் என்றாலும் குடித்தவன் பிழைப்பான்.
Importance of food.

4038. கூழ் ஆனாலும் குப்பை ஆனாலும் குடித்துக்கொண்டவன் [பிழைப்பான்.
Compare preceding.

4039. கூழ் ஆனாலும் குளித்துக் குடி, கந்தையானாலும் கசக்கி இடு
Recommends cleanliness.

[டும்.

4040. கூழ் என்றாலும் வாழ்வுக்குத் தக்கதாக குடிக்கத்தான் வேண்
Food according to condition.

4041. கூழ் குடிக்கிலும் கூட்டு ஆகாது.
Partnership discouraged.

4042. கூழ் புளித்ததென்றும் மாங்காய் புளித்ததென்றும் உணரா
மற் சொல்லலாமா?
Distinguish carefully.

4043. கூனனைக் கொண்டு குழப்படி மாமி காணிக்குப் பிள்ளை
பெற.
Getting an heir by foul means.

4044. கூனன் குறை தீர்ந்தான் கொடியோன் வினை பெயர்ந்தான்.
A victim saved from his oppressor.

4045. கூனி ஆனாலும் கூடை சுமந்துதான் கூலி பெறவேண்டும்.
Labour indispensable.

4046. கூனி வாயாற் கெட்டாற்போல.
Seeking one's own ruin.

## கெ.

4047. கெஞ்சு மணியம் பண்ணுகிறது.
Not a strict master.

4048. கெடு காலத்துக்குக் கெட்டோர் புத்தியைக் கேட்பார்.
Going on to ruin.

4049. கெடு குடி சொற் கேளாது.
Disobedience leads to ruin.

4050. கெடுக்க நினைக்கில் அடுக்கக் கெடும்.
The ruiner will be ruined.

4051. கெடுக்கினும் கல்வி கேடுபடாது.
Learning will last.

4052. கெடுத்தவருக்கும் நீ கேடு நினையாதே.
Never wish evil even to your foe.

4053. கெடுப்பாரைத் தெய்வம் கெடுக்கும்.
God is the great Avenger.

4054. கெடுவது செய்தால் படுவது கருமம்.
Evil follows evil.

4055. கெடுப்பதும் வாயால் படிப்பதும் வாயால்.
" Out of the same mouth proceedeth blessing and cursing.

4056. கெடுமதி கண்ணுக்குத் தோன்றாது.
Hastening on to destruction.

4057. கெடுமதிக்குப் படுகுழியை வெட்டு.
Destruction so certain.

4058. கெடுவாய், கேடு நினையாதே.
Compare above.

4059. கெடுவான் கேடு நினைப்பான்.
Similar to preceding.

4060. கெட்டகுடி கெட்டது, பூராவாய்க் குடியப்பா.
Encouraging drink.

4061. கெட்ட காலம் விநோத புத்தி.
Pleasure precedes pain.

4062. கெட்ட காலத்துக்கு நாரை கெளிற்றை எடுத்து விழுங்கினதுபோல.
Seeking your own ruin.

4063. கெட்ட நாய்க்குப் பட்டது பிரீதி.
Welcoming evil.

4064. கெட்ட ஊருக்கு எட்டு வார்த்தை.
Long description for a ruined place.

4065. கெட்ட கேட்டுக்கு வட்டம் காற்பணமா ?
Deserving no consideration.

4066. கெட்ட பால் நல்ல பால் ஆகுமா ?
Once ruined always ruined.

4067. கெட்டதும் பட்டதும் கீரைக்கு இறைத்ததும்.
Labor in vain.

4068. கெட்ட குடிக்கு ஒரு துஷ்டப் பிள்ளை.
A good family ruined by one bad child.

4069. கெட்ட கேட்டுக்கு கொண்டை போட்ட முண்டாசி குறைச்சல்.
Foppery in a ruined fellow.

4070. கெட்ட கேட்டுக்குக் கொட்டொன்று முழக்கு ஒன்று.
Similar to preceding.

4071. கெட்டவன் பட்டணம் சேர.
All scamps find their way to the city.

4072. கெட்டது கெட்டாய் மகளே கிட்டவந்து படுத்துக்கொள்.
Making bad worse.

4073. கெட்டதும் கிழிந்ததும் பெற்றான் கோனான் நாட்டிலே.
Got a bad return.

4074. கெட்ட குடிக்கு ஒரு கேட்டை பிறந்தது.
Compare above.

4075. கெட்ட கழுதைக்குத் துஷ்டபுத்தி.
Similar to above.

4076. கெட்டவன் குடி கெட்டது வட்டி நஷ்டம் இல்லாமல் வாங்கவே வாங்கு.
Exacting to the utmost.

4077. கெட்டவன் குடி கெடட்டும், நீ குடி மிளகு சாற்றை.
Giving evil advice.

4078. கெட்ட குடியே கெடும், பட்ட காலிலே படும்.
A predisposition to misfortune.

4079. கெட்ட மாடு தேடுமுன்னம் எட்டு மாடு தேடலாம்.
Reclaiming very difficult.

4080. கெட்ட மார்க்கத்திலே இருக்கிற ஒருவன் மற்றவர்களையும் அதில் இழுக்கப் பிரயாசப்படுவான்.
The seductions of the wicked.

4081. கெட்டபயலுக் கேற்ற துட்டச் சிறுக்கி.
A bad husband—a bad wife.

4082. கெட்டவன் கங்கை ஆடினாற் பாவந் தீருமா ?
An excellent truth.

4083. கெட்டவனுக்கு எத்தனை படிப்பித்தாலும் துஷ்டத்தனம் விடான்.
Difficult to change the vicious.

4084. கெட்டார்க்கு உற்றார் கிளையிலும் இல்லை.
Even relations will not help the destitute.

4085. கெட்டார் வாழ்ந்தால் கிளைகிளையாய்த் தளிர்ப்பார், வாழ்ந்தார் கெட்டால் உறையோட்டுக்கும் ஆகார்.
Prosperity *versus* adversity.

4086. கெட்டான் பயல் பொட்டலிலே, விழுந்தான் பயல் சறுக்கலிலே.
Said of the ruin of the wicked.

4087. கெட்டால் பெரிய வெட்டரிவாள்.
Condition after a fall.

4088. கெட்டாலும் செட்டி செட்டியே, கிழிந்தாலும் பட்டுப்பட்டே.
Ruin cannot affect the noble.

4089. கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளையில் தெரியும்.
A clever lie lasts but a week.

4090. கெட்டிக்காரனுக்குப் பயம் இல்லை, மட்டித்தனனுக்கு நயம் இல்லை.
The wise man *versus* the fool.

4091. கெட்டிக்காரன் பொட்டு எட்டு நாள் அளவும்.
Compare above.

4092. கெட்டும் பட்டணம் சேர்.
Compare a previous saying—4071.

4093. கெட்டுப்போகிற காலம் வந்தால் சொட்டுப் புத்தி தோன்[றுதா ?
Signs of impending ruin.

4094. கெட்டுப்போன பார்ப்பானுக்குச் செத்துப்போன பசுதானம்.
Gift according to recipient's condition.

4095. கெட்டுக் கெட்டுக் குடி ஆகிறதா ?
Why a family does not prosper.

4096. கெண்டையைப் போட்டு வாலை இழுக்கிறது.
Venture a small fish to catch a big one.

4097. கெண்டை பட்டாலும் பட்டது கிடாரம்பட்டாலும் பட்டது.
Take your chance.

4098. கெதம் போனது கிருஷ்ணப் பிரீதி.
Cessation of scarcity.

4099. கெருடனுக்கெதிரே கொசு கிளம்பிப் பறந்தாற்போல.
A trifling enemy.

4100. கெரடி கற்றவன் இரடி விழுந்தால் அதுவும் ஒரு வரிசை என்பான்.
Even slips are something in the great.

4101. கெலியன் பாற் சோறு கண்டதுபோல.
Like a dainty dish to the greedy.

## கே.

4102. கேடகத்தையும் பெருமாளையும் கிழாறு கொண்டுபோகச்சே கூடவந்த அநுமாருக்குத் தெப்பத்திருநாளாம்.
Inconsistent ceremony.

4103. கேடது இல்லான் பாடது இல்லான்.
No evil—no pain.

4104. கேடு காலத்தில் ஓடு கப்பறை.
Makeshifts in adversity.

4105. கேடு கெட்ட நாயே வீடு விட்டுப் போயே.
Expelling a ruined person.

4106. கேடு வரும் பின்னே மதி கெட்டு வரும் முன்னே, ஆனை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே.
Folly preceding destruction.

4107. கேடுவரும் முன்னே மதி கெட்டுவரும், வாழ்வு வரும் முன்னே மதியோ கூடிவரும்.
Similar to preceding.

4108. கேடுவரும் பின் மதிகெட்டுவரும் முன்.
Compare above.

4109. கேட்டவை எல்லாம் நம்பாதே நம்பினது எல்லாம் சொல்லாதே.
Against believing all and revealing all.

4110. கேட்டில் உறுதி கூட்டும் உடைமை.
Fortitude in adversity.

4111. கேட்டை மூட்டை செவ்வாய்க் கிழமை.
Against journeying on a Tuesday.

4112. கேண்மைத் தானவர் வாய்மைக் கானவர்.
Fiendship and truth extolled.

4113. கேட்பார் சொல்லைக் கேட்டுக் கெடாதே.
Do not follow every advice.

4114. கேளும் கிளையும் கெட்டோர்க்கு இல்லை.
The ruined have neither friend nor relative.

4115. கேள்விச் செவியன் ஊரைக் கெடுப்பான்.
The eaves-dropper condemned.

4116. கேள்வி உடைமை கீர்த்தியே கல்வி.
Inquiry and learning necessary.

4117. கேள்விப் பேச்சில் பாதிதான் நிசம்.
Rumours but half true.

4118. கேள்வி முயல்.
Learn by enquiry.

## கை.

4119. கை அழுத்தமானவன் கரையேற மாட்டான்
No heaven for a miser.

4120. கை இல்லாதவன் கரணம் போடலாமா, கால் இல்லாதவன் [ஓடலாமா ?
No means, no success.

4121. கை உண்டாவது கற்றவர்க்கு ஆமே.
It is only the educated who have a hand.

4122. கை ஊன்றிக் கரணம் போடவேண்டும்.
Every thing step by step.

4123. கைகண்ட வேசிக்குக் கண்ணீர் குறைச்சலா?
Shedding false tears.

4124. கை காய்த்தாற் கமுகு காய்க்கும்.
No outlay no profit.

4125. கைக்கு வாய் உபசாரமா?
Relatives need no recommendation.

4126. கைக்கு எட்டினது வாய்க்கு எட்டவில்லை.
Many a slip between the cup and the lip.

4127. கைக்கொள்ளாத சத்தியத்தைக் கற்காதிருந்தால் நலம்.
Practice better than precept.

4128. கைக்கோளனுக்குக் காற்புண்ணும் நாய்க்குத் தலைப்புண்ணும் ஆகாது.
It makes them inconvenient.

4129. கைதப்பிக்கண்ணிலேபட்டாற் கையைக்கண்டிப்பதுண்டா?
Accidents not crimes.

4130. கைத்தாலி கழுத்தின்மேல் ஏறட்டும்.
Urging marriage.

4131. கை நிறைந்த பொன்னைப் பார்க்கிலும் கண் நிறைந்த கணவன் இருக்கவேண்டும்.
A handsome husband preferred to wealth.

4132. கை பட்டால் கண்ணாடி.
Recommends actual work.

4133. கைப் புண்ணுக்குக் கண்ணாடியா?
Something self-evident.

4134. கைப்பெண்டாட்டி பெற்றது கழுசிறை.
A widow's child.

4135. கைப்பெண்டாட்டி பெற்ற பெண்ணானாலும் செய்யுஞ் சடங்கு சீராய்ச் செய்யவேண்டும்.
Birth does not affect one's duties.

4136. கையிற் செம்மணிகொண்டு மிரட்ட வருகிறாயோ?
Challenges threat.

4137. கை புண்ணுக்குக் கண்ணாடி.
Another form of 4133.

---

4138. கைப்பண்டம் கருணைக் கிழங்கு.
Easily accessible.

---

4139. கைப்பழத்தைக் கொடுத்துத் துறட்டிப் பழத்துக்கு அண்ணாந்து நிற்பானேன்?
A bird in the hand is worth two in the bush.

---

4140. கைப்பொருள் தன்னிலும் மெய்ப்பொருள் கல்வி.
Value of learning.

---

4141. கைப்பொருள் இல்லா வழிப்போக்கனுக்கு கள்வர் முன் படலாம்.
No money no fear.

---

4142. கைப்பொருள் போனாலும் கல்விப்பொருள் போகாது.
Learning *versus* wealth.

---

4143. கைப்பொருள் அற்றால் கட்டிக்கழுத்தியும் பாராள்.
Importance of wealth.

---

4144. கைம்மேல் கண்ட பலன்.
Actual property.

---

4145. கைம்பெண்டாட்டி பெற்ற கழிகடை.
Another form of 4134.

---

4146. கைம்பெண்சாதி தாலியைக் கூழைக்கையன் அறுத்தானாம்.
Dealing with the unfortunate.

---

4147. கைம்பெண்சாதி எருமையிலே கறவை பழகினாற்போல.
The unfortunate making a bad beginning.

---

4148. கையழுத்தமானவன் கரை ஏறமாட்டான்.
No heaven to the niggardly.

---

4149. கையாற் கிள்ளி எறியும் வேலைக்குக் கனத்த கோடாலி வேண்டுமோ?
Use appropriate means.

---

4150. கையாடாத ஆயுதம் துருப்பிடிப்பதுபோல.
Like the rusting of an unused weapon.

---

4151. கையால் ஆகாத சிறுக்கி வர்ணப்புடவைக்கு ஆசைப்பட்டாளாம்.
Aspiring above one's means.

---

4152. கையாற் சிழிக்கும் பனங்கிழங்கிற்கு ஆப்பும் வல்லீட்டுக்கு ற்றியும் என்?
Compare above.

4153. கையாலே தொட்டது கரி.
Effect of touch.

4154. கையிலும் இல்லை செட்டியார் பையிலும் இல்லை காசு.
Absolutely desolate.

4155. கையிலும் மடியிலும் இல்லாதவனைக் கள்வன் என்ன செய் செய்யலாம்?
Compare above.

4156. கையிலே காசுமில்லை முகத்திலே பவிஷுமில்லை.
Neither rich nor good looking.

4157. கையில் அகப்பட்டதுட்டு கணக்குப்பேசுகிறது.
Boast more than position.

4158. கையிலே மஞ்சள் ஆனால் காரியம் மஞ்சூர்தான்.
A common belief.

4159. கையில் இருக்க நெய்யிலே கையிடுவானேன்?
A *primâ facie* case.

4160. கையிலகப்பட்ட பொருளுக்கும் கணக்கு.
Compare above.

4161. கையில் இல்லாதவன் கள்ளன்.
The poor always suspected.

4162. கையிலிருக்கும் கனியை எறிந்து மரத்திலிருக்கும் கனியை தாவுவதுபோல.
Compare above.

4163. கையில் அரிசியும் கமண்டலத்தில் தண்ணீரும்.
Rice in the hand and water in the pot.

4164. கையில் உண்டானால் காத்திருப்பார் ஆயிரம்பேர்.
Wealth commands service.

4165. கையில் எடுக்குமுன்னம் கோழி மோசமென்று அறியாது.
Unsuspecting persons.

4166. கையில் காசிருக்கக் கறிக்கு அலைவானேன்?
Needless anxiety.

4167. கையில் வெண்ணெயிருக்க நெய்க்கு அலைவானேன்?
Similar to preceding.

4168. கையில் ஒரு காசுமில்லை கடன்கொடுப்பார் ஆருமில்லை.
Very badly off.

4169. கையிற் பறவையை விட்டுக் காட்டுப் பறவைக்குக் கண்ணி வைக்கலாமா?
Compare above.

4170. கையிற் பிள்ளையோடு கடலில் விழுந்தேன்.
In a double calamity.

4171. கையிற் குடையும் காலிற் சோடும் வேண்டும்.
Some necessary things in the tropics.

4172. கையிற் கிடைத்த அமுதைக் கமரில் ஊற்றலாமா?
Against wilful waste.

4173. கையிற் காசு வாயில் தோசை ஆமா?
Uselessness of money by itself.

4174. கையும் களவுமாய்க் கண்டு பிடிக்கிறது.
Caught in the very act.

4175. கையும் கணக்கும் சரி.
Both equally useful.

4176. கையைப் பிடித்திழுத்தும் வாராதவளா கண்ணைக் காட்டி அழைத்தால் வருவாளா?
An untractable woman.

4177. கையைச் செட்டிமார் குறைத்தால் காலைக் கைக்கோளன் குறைப்பான்.
The vices of certain castes.

4178. கையைப் பார் முகத்தைப் பார் என்று இருந்தாற் காரியம் ஆகுமா?
Against idle delay.

4179. கையைப் பிடித்துத் தூக்கிவிடு, பிணக்காடாய்க் குவிக்கிறேனென்றானாம்.
A coward's boast.

4180. கையைப் பிடித்துக் கள்ளைவார்த்து மயிரைப்பிடித்துக் காசு வாங்குகிறது.
Taking advantage of one's circumstances.

4181. கையை மூடிக்கொண்டிருந்தால் கழுக்கம், விரலைத் திறந்தால் வெட்டவெளி.
Secrecy may easily become publicity.

4182. கை வைத்தால் கை இற்றுப்போம்.
Something dangerous to the touch.

4183. கைவிரல் கண்ணிலே பட்டால் கையை என்னபண்ணலாம்?
Don't quarrel with accidents.

## கொ.

4184. கொக்கரிப்பார்க்குச் சுவர்க்கமோ நெருப்பிற் குதிப்பார்க்குச் சுவர்க்கமோ?
Heaven only to those who act.

4185. கொக்கரித்த பேரெல்லாம் கூடத் தீப் பாய்வார்களா?
Mere talkers not to be relied upon.

4186. கொக்கின் தலையில் வெண்ணெய் வைத்தால் அது உருகிக் கண்ணில் விழும்.
Putting the thing in a wrong place.

4187. கொக்குக்குத் தெரியுமா கோழிக்குஞ்சைக் கொண்டுபோக?
Certain habits for certain creatures.

4188. கொக்கு இளங்குஞ்சும் கோணாத தெங்கும் கண்டதுஇல்லை.
Certain rare things.

4189. கொக்குக் குண்டா வீர சைவம்?
The stork not a vegetarian.

4190. கொக்குக் கூட்டத்தில் ராஜாளி விழுந்தாற்போல.
Sudden appearance of a foe.

4191. கொக்குத் தின்னப் பெருச்சாளி பாய்ந்தாற்போல்.
Eager to eat flesh.

4192. கொக்குக் குருவிபோல் கொத்திக்கொத்திச் சேர்க்கிறது.
Gathering little by little.

4193. கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா?
Mistaking me for a stupid person.

4194. கொங்கிலே குறுணி விற்கிறது, இங்கு என்னத்திற்கு?
Comparative prices.

4195. கொசு வனத்தில் கொள்ளி வைத்துக் கொண்டதுபோல.
A destructible fire.

4196. கொக்குப் பிக்கலாட்டம்.
Certain tricks.

4197. கொசு மூத்திரம் குறுணி.
Said to be an infinitesimal quantity.

4198. கொசுகின் முதுகிலே பிளவை வந்ததுபோல.
A great calamity to a small person.

4199. கொசுகிலே குறுணி பால் கறக்கலாமா?
Expecting great profits from a small capital.

4200. கொசுகிலே பிளவை அதிலே நீரழிவு, அறுக்கிறது எங்கே அட்டை விடுகிறது எங்கே?
Compare above.

4201. கொசுகுக் கஞ்சிக் குடிபோகிறதா?
Condemns timidity.

4202. கொசுகு கருடனுடன் கூடப் பறந்தாற்போல.
Foolish ambition.

4203. கொசுகே கொசுகே தலை முழுகு நான் மாட்டேன் சனிக்கிழமை.
Forcing an unwilling person.

4204. கொசுகைப் பொருட்டாய் எண்ணிக் கருடன் எதிர்த்தாற்போல.
Condescending to mean things.

4205. கொசுகை வடிகட்டி ஒட்டகத்தை விழுங்குகிறதா?
Right in small things but wrong in big ones.

4206. கொசுகை வடிப்பார், அசுகைப்படுவார்.
Tampering with dirty things.

4207. கொச்சிக்குப் போனவன் செய்தியைப் பார், தன் குருவை விற்றவன் செய்தியைப் பார்.
Two evil doers.

4208. கொஞ்சத்தில் இருக்கிறதா குரங்கு மிளகுநீர் குடிக்கிறது?
Difficult to acquire new habits.

4209. கொஞ்ச நிசமிருந்து குருக்களை அடைந்தது, கோயிலில் வௌவாலடைந்தது.
Losing even the little possessed.

4210. கொஞ்சிக் கூத்தாடி நடந்தாலும் குதிரையாகுமா கழுதை?
Impossible to alter one's birth.

4211. கொஞ்சத்தில் உண்மை இல்லாதவன் கோடியிலும் இருக்க மாட்டான்.
Recommends honesty in everything.

4212. கொட்டிக்கிழங்கு வெட்டுகிறவனுக்குக் கோயிலில் வந்து ஆடத் தெரியுமா?
Training necessary for higher duties.

4213. கொட்டிக்கிழங்கு பறிக்கப் போனால் கோபித்துக்கொள்வார் பண்டாரம்; அவித்துரித்து முன்னே வைத்தால் அமுது கொள்வார் பண்டாரம்.
Dislikes labour but not its profit.

4214. கொட்டிக் கொட்டி அளந்தாலும் குறுணி பதக்கு ஆகாது.
Compare above.

4215. கொட்டினால் தேள் கொட்டா விட்டால் பிள்ளைப்பூச்சியா?
Active hurtful—inactive harmless.

4216. கொட்டை நூற்கிற அம்மாளுக்குப் பட்டணம்விசாரிப்பேன்?
Against inquisitiveness.

4217. கொடாத கண்டனும் விடாத கண்டனும் கூடினாற்போல.
Union of two mischievous persons.

4218. கொடிக்குக் கொம்மட்டிக் காய் கனத்திருக்குமா?
Child no burden to its parent.

4219. கொடிகள் அருகான மரத்திலே படரும்.
Seeking support from one's neighbour.

4220. கொடிக்குக் காய் கனத்திருக்குமா?
Another form of above.

4221. கொடி சுற்றிப் பிறந்த பிள்ளை குலத்திற்கு ஆகாது.
A very common superstition.

4222. கொடுக்கிறான் பழனியாண்டி, தின்கிறான் சுப்பனாண்டி.
Giver and recipient.

4223. கொடுக்க மாட்டாதவன் கூத்தைப் பழித்தான், இடமாட்டா வன் எச்சிலென்று சொன்னான்.
Incompetent critics.

4224. கொடுக்கிறவன் குடுமையைப்பிடித் திந்தக்கன்னத்திலடித்துக்கொடுப்பான்.
An ungrateful recipient.

4225. கொடுக்கிறதையும் கொடுத்துக் குஷ்டரோகி காலில் விழுவானேன்?
Buying disgrace with a price.

4226. கொடுக்காத இடையன் சினையாட்டைக் காட்டினதுபோல்.
A mere pretext for a refusal.

4227. கொடுங்கோல் மன்னன் ஆளும் நாட்டிற் கடும்புலி வாழும் காடு நன்று.
Tyranny condemned.

4228. கொடுங்கோல் அரசு நெடுங்கால மிராது.
Similar to preceding.

4229. கொடுங்கோல் அரசன்கீழ் குடியிருக்கல் ஆகாது.
Compare above.

4230. கொடுத்தது கேட்டால் அடுத்திடும் பகை.
Debtors dislike demand.

4231. கொடுத்தகடன் கேட்டால் குமரகண்ட வலிப்பு வலிக்கிறதாம்.
Compare preceding.

4232. கொடுத்த பணம் செல்லாவிட்டால் கூத்தரிசிக்காரி என்ன செய்வாள்?
Don't lay the blame on another.

4233. கொடுத்தாலொன்று கொடாவிட்டால் ஒன்று.
Giving and refusing affect friendship.

4234. கொடுத்தார், கொடுத்திருக்கையும் கூழையாய்ப் போச்சுது.
Complains of want of benevolence.

4235. கொடுத்துப் பொல்லாப் பாகிறதைவிடக் கொடாமலிருக்கிறது நலம்.
Better refuse than give (loans).

4236. கொடுத்தும் கொல்லை வழியாய்ப் போகிறது.
Combare above 4225.

4237. கொடுத்தவனைப் புகழ்வார் கொடாதவனை இகழ்வார்.
The benevolent *vs.* the niggardly.

4238. கொடுத்தவன் அப்பன் கொடாதவன் சப்பன்.
Similar to preceding.

4239. கொடுத்ததைக் கொடுக்கும் குறளிப் பிசாசு.
Reap what you sow.

4240. கொடுத்ததைக் கொடுக்கும் குட்டிசாத்தன்.
Another form of above.

4241. கொடுத்தவருக்கு எல்லாம் உண்டு கொடாதவருக்கு ஒன்றும் [இல்லை.
Another form of preceding.

4242. கொடுத்து உறவுகொள், கோளன் என்று இரேல்.
Advises liberality.

4243. கொடுப்பாரைத் தடுக்காதே.
Against preventing a gift.

4244. கொடுப்பார் பிச்சையைக் கெடுப்பார் கெடுக்கிறது.
Evil of preventing a gift.

4245. கொடுமை அற்றவன் கடுமை அற்றவன்.
The nature of the kind-hearted.

4246. கொடும் பாவி ஆனாலும் கொண்ட மாமியார் வேண்டும்.
A mother-in-law essential.

4247. கொடுமை கூடப்பட்ட செல்வம் பசுங்கலத்தில் கவிழ்ந்தது.
The uselessness of wealth to the miser.

4248. கொடுமையான அரசன்கீழ் இருப்பதைப் பார்க்கிலும் கடுமையான புலியின்கீழ் இருப்பது நன்று.
Compare above 4227.

4249. கொடும் பாவி சாகானா கோடை மழை பெய்யாதா ?
Wishing to get rid of an evil.

4250. கொடையிலும் ஒருத்தன் படையிலும் ஒருத்தன்.
In opposing situations.

4251. கொண்ட பெண்சாதியே கூர் அரிவாளாயிருந்தாள்.
Being persecuted by one's own.

4252. கொண்டவ னிருக்கக் கண்டவனோடு போவானேன்?
Against adultery.

4253. கொண்ட கடையிலேயா விற்கிறது ?
A good mercantile advice.

4254. கொண்டவன் சீறினால் கண்டவனுக்கு எல்லாம் இளக்காரம்.
A husband should not rage against his wife.

4255. கொண்டவனுக் கில்லாத வெட்கம் கண்டவனுக் குண்டா?
'Tis the husband who should feel disgraced.

4256. கொண்டவன் பலமிருந்தால் குப்பைமேடு ஏறிச் சண்டை செய்யலாம்.
Effect of a husband's support.

4257. கொண்டவனே கொண்டையைப் பிடித்தால் பெண்டென்னசெய்வாள்?
A husband's ill-treatment.

4258. கொண்டார் முனியிற் கண்டார் முனிவர்.
Compare above.

4259. கொண்டா குட்டிசாத்தா என்கிறதுபோல.
Calling out the devil.

4260. கொண்டு குலம் பேசுகிறதா ?
After marriage caste should not be spoken about.

4261. கொண்டைக்குத் தக்கன பூ.
Ornaments must be well proportioned.

4262. கொண்டைக்குப் பூ சூடிச் சண்டைக்கு நிற்கிறது.
Adorning oneself and then going to fight.

4263. கொண்டைக்குப் பூ சூடுகிறதா தாடிக்குப் பூ சூடுகிறதா ?
Place the ornament in the proper place.

4264. கொண்டோர் எல்லாம் பெண்டிர் அல்லர்.
All married women are not wives.

---

4265. கொத்தடிமை குடி யடிமையா?
Complaining against slavery.

---

4266. கொத்து வாழ்வுக்கு ஒரு பலகை பிடிக்கிறது.
A bricklayer's saying.

---

4267. கொலைக்கஞ்சாதவன் பழிக்கஞ்சுவானா ?
An intrepid villain.

---

4268. கொல்லன் தெருவில் ஊசி விலைபோமா ?
Carrying coals to Newcastle.

---

4269. கொல்ல வரும் யானை முன்னே கல்லைவிட் டெறியாதே.
Adding fuel to fire.

---

4270. கொல்லத் தெருவில் ஊசிவிற்றாற்போல கொண்டகடையி லேயா விற்கிறது ?
Compare above.

---

4271. கொல்லன் எளிமை கண்டு குரங்கு காலுக்குப் பூண் கட்டச் சொன்னதாம்.
Taking advantage of a willing workman.

---

4272. கொல்லன் உலையில் கொசுகுக் கென்ன அலுவல் ?
A busybody rebuked.

---

4273. கொல்லன் பிணம் விறைத்தாற்போல்.
Like the stiffening of a blacksmith's corpse.

---

4274. கொல்லனைக் கண்டால் குரங்கு மல்லுக்கட்டச்சொல்லும்.
A blacksmith and the monkey.

---

4275. கொல்லுகிறதும் சோறு பிழைப்பிக்கிறதும் சோறு.
The same thing is both poison and food.

---

4276. கொல்லன் கை குறடு போல.
Ever meddling.

---

7277. கொல்லு கொலைக்கஞ்சாத கொடும்பாவி.
A murderous villain.

---

4278. கொல்லைக் காட்டு நரி பல்லைக் காட்டினதுபோல.
Greedy and ludicrous.

4279. கொல்லைக் காட்டு நரி சலசலப்புக் கஞ்சுமா?
Experienced persons not frightened by trifles.

4280. கொல்லைக்காட்டில் நரியைக் குடிவைத்துக்கொண்டது [போல.
An unwelcome companion.

4281. கொல்லைக்குப் பல்லி, குடிக்குச் சகுனி.
An intriguer in a family.

4282. கொல்லையில் குற்றியை அடைந்த புல்லு உழவர் உழுபடைக்குக் கெடுமோ?
A well protected individual.

4283. கொல்லை பாழானாலும் குருவிக்கு இரை பஞ்சமா?
Little people's food easily procured.

4284. கொழுக்கட்டைக்குத் தலையும் இல்லை, குறவனுக்கு முறையும் இல்லை.
No marriage law among aborigines.

4285. கொழுமீதிற் குடிகொண்ட குடிச்செல்வம் செல்வம்.
Nature of true wealth.

4286. கொழுக் கொம்பில்லாத கொடிபோல.
An unprotected weak person.

4287. கொழுக் கட்டைக்குத் தலைபார்த்துக் கடிக்கிறார்களா?
No ceremony in certain cases.

4288. கொழுக்கட்டை தின்ன நாய்க்குக் குறுணிமோர் தட்சணை.
Offerings according to circumstances.

4289. கொழுக்கட்டைக்குத் தலையும் இல்லை, கோயிலாண்டிக்கு முறையும் இல்லை.
Compare above.

4290. கொழுக்கட்டை சுட்டு உறவாடுகிறதா?
Seeking friendship on easy terms.

4291. கொழுக்கட்டைக்குத் தலையும் இல்லை, குடியனுக்கு முறையும் இல்லை.
Evil of drunkenness.

4292. கொழுத்தவன் கைக்கு இளைத்தவன் துரும்பு.
The strong bullying the weak.

---

4293. கொழுத்த மீன் தின்கிறவன் குருவிக் கறிக்கு அசங்கியப் படுவான்.
Not palatable to his taste.

---

4294. கொழுத்த ஆடு குட்டி போட்டாலும் வழுக்கட்டை வழுக்கட்டை தான்.
Character of child independent of parent.

---

4295. கொள் என்றால் வாயைத் திறக்கிறதா, கடிவாளம் என்றால் வாயை மூடுகிறதா?
Eager to eat, but not to work.

---

4296. கொள்வாரும் இல்லை கொடுப்பாரும் இல்லை.
Intermarriage prohibited.

---

4297. கொள்ளி கொண்டு தலை சொறிகிறதா?
Using a dangerous remedy.

---

4198. கொள்ளிக்கு எதிர் போனாலும், வெள்ளிக்கு எதிர் போகலா[காது.
Condemns travelling against Venus.

---

4299. கொள்ளிக் கட்டையால் சுட்டால் கொப்பளிக்குமென்று வாழைப்பழம் கொண்டு வடுவடுவாய்ச் சுடுகிறாய்.
For fear of one method adopting a worse.

---

4300. கொள்ளுக்கு வாயைத்திறந்து கடிவாளத்திற்கு வாயை மூடுதல்.
Compare above.

---

4301. கொள்ளுக் குத்தின உலக்கைபோல.
A rough used person.

---

4302. கொள்ளும் வரையில் கொண்டாட்டம், கொண்டபிறகு திண்டாட்டம்.
Life before and after marriage.

---

4303. கொள்ளைக்கு முந்து கோபத்திற்குப் பிந்து.
Be quick to plunder and slow to anger.

---

4304. கொள்ளை அடித்துத் தின்கிறவனுக்குக் கொண்டு தின்னத் தாங்குமா?
A robber dislikes work.

---

4305. கொள்ளை இடப்போகிறவனுக்குக் குருடன் துணை ஆகுமா?
An unsuitable assistaut.

4306. கொள்ளைக்குப் போனாலும் கூட்டு ஆகாது.
Plunder above.

4307. கொள்ளைக்கும் ஊழிக்கும் தப்பு.
Escape from plunder and pestilence.

4308. கொற்றவன் அறிதல் உற்றிடத்துதவி.
Learning very useful.

4309. கொற்றவன் தன்னிலும் கற்றவன் மிக்கோன்.
The learned superior to kings.

4310. கொன்றாற் பாவம் தின்றால் தீரும்.
Killing for food no sin.

## கோ.

4311. கோடான கோடி வினைவரினும் மனம் கோணமலிருப்பதே கோடிபெறும்.
Fortitude in affliction commended.

4312. கோடாலிக்காம்பு குலத்துக்கு ஈனம்.
The cause of a family's ruin.

4313. கோடி சீமானும் கோவணாண்டியும் சரியா?
Confounding things different.

4314. கோடி கப்பல் ஓடிய வீடு கொட்டை நூற்றா விடியும்?
Loss of great wealth not easily repaired.

4315. கோடி புடவையைக் கட்டிக்கொண்ட தைரியம் குச்சைக் கொளுத்திக் கொண்டாளாம்.
Conceit leads to ruin.

4316. கோடி சீமான் துணியவேண்டும், அல்லது கோவணா ஆண்டி துணியவேண்டும்.
One or another must venture.

4317. கோடி தனம் இருந்தாலும் குணம் இல்லா மங்கையருடன் கூடாதே.
Not wealth but virtue essential to women.

4318. கோடி தனம் இருந்தாலும் குணம் இல்லா மங்கையை மணம் முடிக்கல் ஆகாது.
Similar to preceding.

4319. கோடீசுவரன் ஆகவேண்டுமோ, அல்லது லக்ஷாதிபதி ஆக வேண்டுமோ?
Different degrees of avarice.

4320. கோடை இடி குமறினாற்போல.
So sudden and violent.

4321. கோடையிலே தண்ணீர் ஓடை கண்டமான்போல்.
An unexpected discovery.

4322. கோடையால் காய்கிற பயிர் வாடையால் தளிர்க்கும்.
The good effects of the North-east monsoon.

4323. கோட் சொல்பவனைக் கொடும் தேள் என நினை.
Tail-bearing condemned.

4324. கோட் சொல்லும் வாய் காற்றுடன் நெருப்பு.
Compare preceding.

4325. கோட்டானை மடியிற் கட்டிக்கொண்டதுபோல.
Courting ill-omens.

4326. கோட்டுச் சம்பா ஆக்கிவைத்தால் போட்டுச் சாப்பிட வருவார்கள்.
Samba rice agreeable to the taste.

4327. கோட்டையில் பெண்பிறந்தாலும் போட்ட புள்ளிபோகுமா?
Destiny independent of birth.

4328. கோட்டைக்குள்ளே படை வெட்டிக் கொள்ளுகிறதா.
Evil of mutiny within the camp.

4329. கோட்டைக்குள்ளே குத்தும் வெட்டுமோ?
Similar to preceding.

4330. கோணக் கொம்பு ஏறி என்ன? குதிரை ஏறி என்ன? வீணர்க்கும் கீர்த்திக்கும் வெகு தூரம்.
True fame not easy to obtain.

4331. கோணி கொண்டது எருது சுமந்தது.
Weight that can be carried.

4332. கோணிக் கோடி கொடுப்பதிலும் கோணாமற் காணிகொடுப்பது நல்லது.
"The Lord loveth a *cheerful giver*."

4333. கோத்திரத்திலே குரங்கானாலும் கொள்ளு.
Against intermarriage between different castes.

4334. கோத்திரம் அறிந்து பெண்ணைக் கொடு, பாத்திரம் அறிந்து பிச்சை இடு.
Same as above.

4335. கோத்திரவீனன் சாத்திரம் பார்ப்பான்.
The baser the more superstitious.

4336. கோபம் வந்து கிணற்றில் விழுந்தால் சந்தோஷம் வந்தால் எழுந்திருக்கலாமா?
Evil effects of anger seldom undone.

4337. கோபம் இல்லாத துரையும் சம்பளம் இல்லாத சேவகனும்.
No wage, no discipline.

4338. கோபம் பாபம், நித்திரை சத்துரு.
Anger and sleep condemned.

4339. கோபம் சண்டாளம்.
Compare preceding.

4340. கோபம் அற்றாற் குரோதம் அறும்.
Anger and malice go together.

4341. கோபம் உள்ள இடத்தில் தான் சந்தோஷமிருக்கும்.
Reasonable anger extolled.

4342. கோபம் உள்ள இடத்தில் குணம் உண்டு.
Similar to preceding.

4343. கோப குதிரைமேல் கடிவாளம் இல்லான்.
Making bad worse.

4344. கோபுரத்திலே விளக்கை வைத்துக் கொட்டிக்கூடையில் [மூடுவானேன்?
Defeating one's own purpose.

4345. கோபுரத்தின் மேலேறிக் குடத்தைக் கழற்றுகிறவன் அரைக்கீரைக் கொல்லையைப் பார்த்துக் கொள்ளை கொள்ளை என்றானாம்.
A bold robber.

4346. கோபுரம் தாங்கிபோல் நடக்கிறான்.
A proud walk.

4347. கோபுரம் தாங்கிய பூதம்போல் சுமக்கிறான்.
Compare preceding.

4348. கோபுரம் தாங்கிய பொம்மை போல.
Same as above.

4349. கோமணத்தை அவிழ்த்து மேற்கட்டு கட்டுகிறது.
An indecent exchange.

4350. கோமுட்டிப் புத்திக்கு மோசம் இல்லை.
A good certificate for a Komati.

4351. கோமுட்டிப் புத்திக்கு மோசம்லேது, மோசம் வந்தால் செப்ப லேது.
Similar to preceding.

4352. கோமுட்டியைச் சாட்சிக்குக் கூப்பிட்டாற்போல.
A stupid witness.

4353. கோயிலையும் குளத்தையும் அடுத்து இருக்கவேண்டும்.
A good neighbourhood.

4354. கோயில் இல்லா ஊரிலே குடியிருக்கலாமா?
A temple essential to every village.

4355. கோயில் மணியம் என்று கூப்பிட்டால் போதும்.
Satisfied with a mere title.

4356. கோயிற் பூனை தேவருக்கு அஞ்சுமா?
Familiarity breeds contempt.

4357. கோயிற் பூனைக்குப் பயம் என்?
Compare preceding.

4358. கோரக்கர் வைத்தியம் குணத்திற்கு ஏற்குமா?
Ineffective remedies.

4359. கோனா குடியைக் கெடுக்கும்.
Said of women with long uncurled hair.

4360. கோனைக் கிழங்கும் ஒருவேளைக்கு உதவும்.
Even the insignificant may be useful.

4361. கோல் ஆடக் குரங்கு ஆடும், அதுபோல மனம் ஆடும்.
Effect of caning.

4362. கோல் இழந்த குருடனைப்போல.
Deprived of one's only help.

4363. கோல் எடுத்த பிள்ளை குருட்டுப்பிள்ளை.
Seeking help a sign of weakness.

4364. கோவிந்தா என்றால் கோடி ஸ்நானம் என்று குளிக்காமல் முழுகாமல் இருக்கலாமா?
Piety no excuse for filthy habits.

4365. கோவிலிடிக்கத் துணிந்தவனா குளம் வெட்டப்போகிறான்?
One not likely to be charitable.

4366. கோவிலுண்டைச் சோறு குமட்டின தேவடியாள் குத்துமித் தவிட்டுக்குக் கூத்தாடுகிறாள்.
One brought low.

4367. கோவிலைப் பார்த்துக் கும்பிடுகிறதா கொள்ளைப்பார்த்துக் கும்பிடுகிறதா?
The right object of worship.

4368. கோவிலை அடைத்துக் கொள்ளையிடுகிறவனா குருக்களுக்குத் தட்சணை கொடுப்பான்?
Compare above.

4369. கோவில் மணியம் என்று கூப்பிட்டாற் போதாதா?
Compare above 4355.

4370. கோவில் மணியம் போனால் நம்பியான் கழலும் போச்சுதா?
One loss is not complete loss.

4371. கோவுக்கு அழகு செங்கோன் முறைமை.
Recommends a righteous sceptre.

4372. கோழி அடிக்கிறதற்குக் குறுந்தடி வேண்டுமா?
Simple things do not need great effort.

4373. கோழி களவுபோக ஆடு வெட்டிப் பொங்கல் இடுகிறதா?
Great expense for a trifling loss.

4374. கோழி கூப்பிட்டு விடிகிறதா நாய் குலைத்து விடிகிறதா?
Against contradicting a natural order.

4375. கோழிக் குஞ்சுக்குப் பால் கொடுத்ததுபோல.
Giving unsuitable food.

---

4376. கோழிக் காய்ச்சலும் குண்டன் காய்ச்சலும் விடாது.
Certain fevers are obstinate.

---

4377. கோழிக்கறி என்றதும் கொண்டாடிக் கொண்டதும் இளைத் தண்டாணம் அடா சப்பா இளைத்தண்டாணம் அடா.
Great boast ending in nothing.

---

4378. கோழி கொடுத்துக் குரலும் அழிகிறதா ?
Loss upon loss.

---

4379. கோழி சிறகால் குஞ்சுகளைக் காப்பதுபோல.
Parental protection.

---

4380. கோழிக்கறி கொடுத்து குயிற்கறி வாங்கினாற்போல.
Giving something and taking a worse instead.

---

4381. கோழிதிருடியும் கூடிக்குலாவுகிறாள்.
The robber sympathizing with the person robbed.

---

4382. கோழி தின்ற கள்ளனும் கூட நின்று உலாவுகிறான்.
Compare preceding.

---

4383. கோழி போனதும் அல்லாமல் குரலும் போச்சுது.
Similar to above.

---

4384. கோழி கறுப்பானால் அதன் முட்டையும் கறுப்பா?
Accidentals *versus* essentials.

---

4385. கோழி மிதித்துக் குஞ்சு முடம் ஆகுமா ?
A mother's hurt to her child never serious:

---

4386. கோழி முடத்துக்குக் கடா வெட்டிப் பலி இட்டதுபோல்.
Compare above.

---

4387. கோழி முட்டைக்குத் தலையுமில்லை கோயிலாண்டிக்கு முறையுமில்லை.
Vide No. 4284.

---

4388. கோழி முட்டைக்கு மயிர் பிடுங்குகிறது ?
The habits of fowls.

---

4389. கோழியின் காலில் கச்சையைக் கட்டினால் குப்பையைச் சீக்கும்.
Attempting something unusual.

---

4390. கோழியைக் கேட்டோ ஆணம் காய்ச்சுகிறது?
How one under power should be treated.

---

4391. கோழையில் மொய்த்துக் குழம்பும் ஈய்போல.
Something very nasty.

---

4392. கோளுக்கு முந்தேன் கூழுக்குப் பிந்தேன்.
A good resolution.

---

4393. கோளும் சொல்லிக் கும்பிடுவானேன்?
Hypocritical slanderer.

---

4394. கோள் சொல்லிக் குடியைக் கெடுக்கிறதா?
Slandering condemned.

---

4395. கோனான் கோலெடுக்க நூறும் ஆறாச்சுது.
A great slaughter among sheep.

---

4396. கோடி வித்தையும் கூட்டிக்குத் தான்.
A great truth.

---

## கௌ.

4397. கௌசிகத்து ஒளியில் எவர்க்கும் ஒளிரும்.
Because there is light enough.

---

4398. கௌவை உடையார் காலைத் தொடு.
Recommends great humility.

---

4399. கௌவை கருதேன்.
Against needless anxiety.

---

4400. கௌவைச் சொல்லில் எவர்க்கும் பகை.
Envy leads to hatred.

---

4401. கௌவைப்பட்டால் காயத்தில் ஒரு முழம் நீளுமா?
Mere anxiety yields nothing.

---

4402. கௌவையதில்லான் திவ்விய சொல்லான்.
Praises freedom from care.

---

## ந.

4403. நப்பன் பிறந்தது வெள்ளிமலை, நாயி பிறந்தது பொன்மலை.
Boasting of one's ancestry.

4404. நப்போல் வளை.
Help your relatives.

## ச.

4405. சகத்தைக் கொடுத்தும் சுகத்தை வாங்கு
Inestimable value of wealth.

4406. சகதியில் கல்லை விட்டு எறிந்தால் தன் துணி என்றும் அசலார் துணி என்றும் பாராது.
Effects of evil not partial.

4407. சகலமும் கற்றவன் றன்னைச் சார்ந்திரு.
Seek a learned teacher.

4408. சகல தீர்த்தங்களுக்கும் சமுத்திரமே ஆதரவு.
The sea the source of all waters.

4409. சகல நட்சத்திரம் கூடினாலும் சந்திரனுக் கிணையாமா?
Many small persons cannot make one great man.

4410. சகலன் உறவிற் சாண்கொடி பஞ்சமா?
Nominal relationship.

4411. சகோதரன் உள்ளவன் படைக்கு அஞ்சான்.
Value of a brother.

4412. சக்கிலிப் பெண்ணும் சாமைக்கதிரும் பக்குவத்திலே பார்த்தால் அழகு.
Youth gives beauty.

4413. சக்கு சக்கு என்று பாக்குத் தின்பான் சபைமெச்ச, வீட்டிலே வந்து கடைவாயை நக்குவான் பெண்டுகள் மெய்ச்ச.
Life abroad and life at home.

4414. சங்கனும் புங்கனும் சந்நியாசிக்கு உதவியா?
Useless companions.

4415. சங்கிலே வார்த்தால் தீர்த்தம், சட்டியிலே வார்த்தால் தண்ணீர்.
The vessel makes all the difference.

4416. சங்கு ஆயிரம் கொண்டு வங்காளம் போனால் பொன்பாளம்
வந்தாலும் வந்தது, மண்பாளம் வந்தாலும் வந்தது.
Everything depends on luck.

4417. சங்கு ஆயிரம் கொண்டு காசிக்குப் போனாலும் தன் பாவம்
தன்னோடே.
Sin never got rid of.

4418. சங்கு உடைந்தது மண் கரைந்தது.
Different methods of destruction.

4419. சங்கு சூத்தும் ஆண்டி வாயும்.
Two things often in contact.

4420. சங்கை சுட்டாலும் தன் வெண்மை குன்றாது.
The noble never change.

4421. சங்கோசம் விட்டால் சங்கையும் இல்லை.
No modesty, no honour.

4422. சடை கொண்ட இலுப்பையைத் தடிகொண் டடித்தாற் [போல.
Ill-treating a good person.

4423. சடைத் தம்பிரான் சாற்றுக்கு அழுகிறானும், லிங்கம் பஞ்ச
அமிர்தத்திற்கு அழுகிறதாம்.
One worse off than another.

4424. சடைத் தம்பிரான் சாதம் என்கிறபோது மொட்டைத் தம்
பிரானுக்கு மோர் எங்கே கிடைக்கும்?
Similar to preceding.

4425. சடைத் தம்பிரான் தவிட்டுக்கு அழுகிறபோது லிங்கம் பர
மானந்தத்துக்கு அழுகிறதாம்.
Similar to two preceding.

4426. சடையைப் பிடித்து இழுத்தால் சந்நியாசி கிட்டவருவான்.
Way of getting one under another's power.

4427. சட்டிப் பாலுக்கு ஒரு சொட்டு மோர் பிரை.
A little leaven leaveneth the whole lump.

4428. சண்டிக் குதிரைக்கு மொண்டிச் சாரதி.
Like horse like driver.

4429. சண்டி பிரண்டால் காடு கொள்ளாது.
There is no limit to wickedness.

4429. சட்டி சுட்டதும் கை விட்டதும்.
Taking advantage of the merest excuse.

4430. சட்டுவம் கறிச்சுவை அறியுமோ ?
In contact and yet out of touch.

4431. சணப்பன் வீட்டுக் கோழி, தானே விலங்கு பூட்டிக்கொண்டதுபோல.
Voluntarily getting into trouble.

4432. சணம் பித்தம், சணம் வாதம்.
Unsteady state of health.

4433. சண்டியிலும் சண்டி சவ சண்டி.
Great stubbornness.

4434. சண்டமாருதத்திற்கு முன் சருகொட்டம்போல்.
The weak against the strong.

4435. சண்ட மாருதத்தின் முன் எதிர்ப்பட்ட சருகுபோல்.
Another form of preceding.

4436. சண்டிக்கு ஏற்ற மிண்டன்.
Two well matched fellows.

4437. சண்டை நடந்ததற்குச் சாட்சி மகளிருக்கிருள்.
An interested witness.

4438. சண்டை முகத்திலே உறவா ?
Relationship not recognised in a fight.

4439. சண்ணி அண்ணுமலை என்று பெயர் இடுவாள்.
A well merited name.

4440. சண்டை செய்யும் ரண்டு கடாக்கள் நடுவில் நரிநின்று நசுங்கினதுபோல.
Interfering in a quarrel between one's superiors.

4441. சதகோடி சங்கத்திலே மொட்டைத் தாதனைக் கண்டாயா என்கிறதுபோல.
Seeking an obscure person in a great multitude.

4442. சதுரக்கள்ளியில் அகில் உண்டாகும்.
An unlikely source.

4443. சதை கண்டு கத்தி நாடவேண்டும்.
Recommends wise dealing.

4444. சதை இல்லாமற் கத்தி நாடுமோ ?
No tool works without its material.

4445. சதை உள்ள இடத்திலே கத்தி நாடும்.
Compare above.

4446. சத்தம் பிறந்த விடத்தே சகலகலையும் பிறக்கும்.
Pronunciation precedes knowledge.

4447. சத்த மேகங்களும் கூடி நெருப்பு மழை பெய்தாற்போல.
A great conflagration.

4448. சத்திரத்துக் கூழுக்கு நாயக்கர் அப்பணையா?
Things needing no assurance.

4449. சத்திரத்துப் பாட்டுக்குத் திருப்பாட்டு மேலா ?
Certain favourite songs.

4450. சத்திரத்திலே போசனம், மடத்திலே நித்திரை.
A wandering life.

4451. சத்தியமே சத்தி தத்துவமே சித்தி.
Importance of truth and law.

4452. சத்தியத்திலே சாமி சாட்சி என்கிற சத்தியம் பெரிது.
The most solemn oath.

4453. சத்தியத்திற்கு இல்லாத பிள்ளை துக்கப்பட் டழப்போகிறதா ?
An untruthful child.

4454. சத்தியமே தருமம் நித்தியம்.
Genuine "charity never faileth."

4455. சத்தியம் நன்னிலை, சாவைத் தினம் நினை.
A good counsel.

4456. சத்தியமே வெல்லும், அசத்தியமே கொல்லும்.
Truth *versus* falsehood.

4457. சத்தியமே கொல்லும் சத்தியமே வெல்லும்.
Truth kills and conquers.

4458. சத்திய வாசகன் சமஸ்த சற்குணன்.
Truth the chief virtue.

4459. சத்துருவைச் சார்ந்து கொல்ல வேண்டும்.
An unwholesome advice.

---

4460. சத்துருக்களையும் சித்தமாய் நேசி.
"Love your enemies."

---

4461. சத்துரு பொறாமை தனக்கே தண்டனை.
The envious punish themselves.

---

4462. சந்தடிச் சாக்கிலே கந்தப்பொடி காற்பணம்.
A good time to make bargains.

---

4463. சந்தனக்கட்டை தேய்ந்து கந்தம் குறைபடுமா ?
The good never suffer by change of condition.

---

4464. சந்தனம் அரைக்கிறவன் புடுக்கு அலைக்கிறாப்போல.
Oscillating motion.—*vulgar*.

---

4465. சத்திரத்துச் சாப்பாட்டுக்குத் தலத்து ஐயங்கார் அப்பனை[யோ ?
Compare above.

---

4466. சத்துக்களோடு சத்துக்கள் சேர்வார், சந்தனத்தோடு கருப்பூரம் சேரும்.
Sympathetic associations.

---

4467. சந்தனம் மிகுந்தால் குத்திலே பூசிக்கொள்ளுகிறதா ?
Abundance no excuse for abuse.

---

4468. சந்தனம் வாள் போல.
A fragrant sword.

---

4469. சந்தன விருட்சமிருக்கிற காட்டிலே சர்ப்ப மிருக்கிறது[போல.
Wheat and tares growing together.

---

4470. சந்திரனைப்பார்த்து நாய் குலைத்தாவது என்ன ?
Useless attempts to injure the innocent.

---

4471. சந்திரன் சண்டாளன் வீட்டிலும் பிரகாசிக்கிறான்.
The moon has no partiality.

---

4472. சந்தியிலே அடித்தவனுக்குச் சாட்சி யார் ?
No witnesses for a night assault.

---

4473. சந்தையில் அடிபட்டவனுக்குச் சாட்சி ஆர் ?
Another form of preceding.

---

4474. சந்தைக் கூட்டம் பொம்மல் ஆட்டம்.
The nature of a great crowd.

4475. சந்தைக்கு வந்தவர்கள் துணையா ?
One cannot rely on fellow customers.

4476. சந்நியாசி வீடு திண்ணையிலே.
A pilgrim's house.

4477. சந்நியாசிப் பயணம் திண்ணை விட்டுக் குதிப்பதுதான்.
A pilgrim's journey.

4478. சந்நியாசிக்குப் பழைய குணம்போகாது.
Old natures seldom dissappear.

4479. சற்புத்திரன் இருக்கிற விடத்திலே தருதலையும் இருக்கிறது.
Compare preceding.

4480. சந்நியாசம் சகல நாசம்.
An ascetic renounces everything.

4431. சந்திர சூரியர் தெற்கு வடக்கானாலும் பிசகான்.
A most truthful man.

4482. சந்தை யிரைச்சலிலே குடியிருந்து கெட்டேன்.
A bad locality to live in.

4483. சந்நியாசியார் சந்தையிலே கண்டவளே என்றோட்டினர் தவசி சந்நியாசி கண்டவளே.
Complimenting a womau.

4484. சந்நியாசி கோவணம் கட்டினதுபோல.
So ludicrous.

4485. சந்நியாசிகோவணத்துக்கு இச்சித்துச் சமுசாரம்மேலிட்டது.
Desire the spring of all cares.

4486. சந்நியாசியைக் கடித்த நாய்க்குப் பின்னாலே நரகமாம் சந்நி யாசிக்கு முன்னாலே மரணமாம்.
A notion about ascetics.

4487. சந்நியாசியை நிந்தித்தவனுக்குப் பின்னாலே நரகமாம்.
He is so sacred.

4488. சந்நியாசிக்கும் சாதிமானம் போகாது.
The power of caste.

4489. சபைக்கோழை ஆகாது.
Compare above.

4490. சன்னியாசி பூனை வளர்த்ததுபோல.
Against nervousness.

4491. சபையிலே நக்கீரன் அரசிலே விற்சேரன்.
One clever in two arts.

4492. சப்பரத்துக்கு முன்னே வந்தையா பின்னே வந்தையா?
That settles your fate.

4493. சப்பாணிக்கு நொண்டி சண்டப்பிரசண்டன்.
Every thing is relative.

4494. சப்பாணி மாப்பிள்ளைக்கு சந்தொடிந்த பெண்சாதி.
A lame husband—a weak wife.

4495. சமண சந்நியாசிக்கும் வண்ணானுக்கும் சம்பந்தமென்ன?
He is always naked.

4496. சமயம் வாய்த்தால் நமனையும் பலகாரஞ் செய்வான்.
Said of a tricky villain.

4497. சமயம் வாய்த்தால் களவு செய்வான்.
Only waits for an opportunity.

4498. சமயல் வீட்டிலே முயல் தானே வந்ததுபோல.
An unexpected supply.

4499. சமர்த்துக்குச் சனியன்.
Frustrating the exercise of one's ability.

4500. சமர்த்தன் பெண்சாதியும் சோரம் போவாள்.
Even the intelligent are liable to be deceived.

4501. சமர்த்தனுக்கு ஏதும் பெரிதல்ல.
Nothing too difficult for an able man.

4502. சமர்த்திலே என்னபெற்றாள்? சட்டிச் சோற்றை தின்னப் பெற்றாள்.
All her boasting ends in gluttony.

4503. சமர்த்திலே குண்டு பாயுமா ?
Mere boasting cannot effect anything.

4504. சமர்த்துள்ள சேவகனுக்கு வாள் பழுதானாலும் கேடில்லை.
A stupid workman quarrels with his tools.

4505. சமர்த்துள்ள சேகவனுக்குப் புல்லும் ஆயுதமாம்.
Compare preceding.

4506. சமிக்கை அறியாதவன் சதுரன் அல்ல.
Importance of understanding a sign.

4507. சமிக்கை காட்டிச் சண்டைக்கு அழைக்கிறான்.
Alluring one into a quarrel.

4508. சமுசாரம் துக்க சாகரம்.
Bewails the sorrows of family life.

4509. சமுசாரக்குட்டு வியாதி ரெட்டு.
Family cares make sickness worse.

4510. சமுசாரக்குட்டு வெளியிட்டால் நஷ்டம்.
Do not reveal family troubles.

4511. சமுத்திரமும் சாக்கடையும் சரியா ?
Comparing things entirely different.

4512. சமுத்திரத்தில் எற்றம் போட்டதுபோல் இருக்கிறது.
Doing something impossible.

4513. சமுத்திரத்திலே எற்றம்போட்டுத் தண்ணீர் இறைத்தாற்போல.
Similar to preceding.

4514. சமுத்திரத்திற்கும் சாண் குண்டுக்கும் எம்மாத்திரம் ?
Compare above.

4515. சமுத்திர வன்கணன் சண்டாளன்.
A deep, treacherous fellow.

4516. சமைக்கப் படைக்கத் தெரியாமற்போனாலும் உடைக்கக் கவிழ்க்கத் தெரியும்.
Able to do evil rather than good.

4517. சமையல் வீட்டிலே நாய் நுழைந்தாற்போல.
An unwelcome visitor.

4518. சம்பளம் இல்லாத சேவகனும் கோபமில்லாத எஜமானும்.
No wages, no discipline.

4519. சம்பத்தும் விபத்தும் கூடவே யிருக்கிறது.
Prosperity and adversity go together.

4520. சம்பளம் அரைப்பணமானாலும் சலுகை இருக்க வேண்டும்.
Though poor one ought to be respectable.

4521. சம்பளம்அரைப்பணமானாலும் நம்பினவரைக்காக்கவேண்டும்
Though poor the word must be kept.

[வை.

4522. சம்பந்த கிரகஸ்தன் வந்தான், தவலையை எடுத்து உள்ளே
Warning against a thief.

4523. சயினன்கைச் சிலேப்பேன்போல.
Safe under a protecting hand.

4524. சரக்குக் கண்ட இடத்திலே பிள்ளை பெறுகிறது.
Happening in a convenient time.

4525. சரக்குக் கண்ட இடத்திலே பிள்ளைக்கு அவிழ்தம் கொடுக்க நினைக்கிறதுபோல.
Neglecting a duty for want of a remedy.

4526. சரீரபிரயாசை என்னத்திற்கு ? சாண்வயிற்றுக்குத்தான்.
The inexorable demands of the stomach.

4527. சருகரிக்க நேரம் அன்றி குளிர் காய நேரம் இல்லை.
Labour without leisure.

4528. சருக்கரை என்று எழுதி நக்கினால் ருசிக்குமா ?
Mere fancy is not reality.

4529. சருக்கரை என்றால் தித்திக்குமா ?
Similar to preceding.

4530. சருக்கரைப் பந்தலிலே தேன்மாரி பொழிந்தது போல.
Making sweet sweeter.

4531. சருக்கரையும் மணலும் சரியா ?
Things which look alike are not the same.

4532. சருக்கரைப்பாவு தோண்டியிலே தாழமொண்டாலும் தித்திப்பு, மேலே மொண்டாலும் தித்திப்பு.
Parts of a whole are of the same nature.

4533. சருக்கரை தின்று பித்தம்போனால், கைப்பு மருந்து ஏன் தின்னவேண்டும் ?
Why wilfully seek a bitter remedy ?

4534. சருகைக்கண்டு தணல் அஞ்சுமா ?
Mere show cannot escape punishment.

4535. சர்க்கரையும் மாவும் சரியா ?
Compare above.

4536. சர்வ வில்லங்கச் சித்தி.
An expert in archery.

4537. சர்ப்பத்தின் வாய்த் தவளைபோல.
Well in the power of one's foe.

4538. சலம் நுழையாத இடத்தில் எண்ணெயும், எண்ணெய் நுழையாத இடத்தில் புகையும் நுழையும்.
One thing more volatile than another.

4539. சல்லடைக்கண்போல் சில்லுச்சில்லாய்த் துளைகிறது.
Perforated throughout.

4540. சலிப்போடு சம்பந்தி இழுத்தால் இலைப்பறிக்கை.
An unwilling invitation results in indifferent treatment.

4541. சல்லிய சாரத்தியம் செய்யாதே.
Have no recourse to magic.

4542. சல்லிவேறறக் கெல்லிப் பறிக்கிறது.
Making a thorough research.

4543. சவண்டிக்குச் சாப்பிட்டான் இருக்க செத்தது பொய்யா ?
Doubting one's death.

4544. சவ்வாதிலே மயிர் வாங்கினதுபோல.
Hurting a benefactor.

4545. சளிபிடித்ததோ சனியன் பிடித்ததோ ?
Catching cold very disagreeable.

4546. சளுக்கன் தனக்குச் சத்துரு, சவளிக்காரனுக்கு மித்துரு.
The evil of foppery.

4547. சற்சனர் உறவு சருக்கரைப் பாகுபோல.
The friendship of the good extolled.

4548. சனத்தோடு சனம் சேரும், சந்தனத்தோடு கற்பூரம் சேரும்.
Like seeks like.

4549. சனப்பலம் இருந்தால் மனப்பலம் வரும்.
Sympathy gives strength.

4550. சனி நீராடு.
A national custom.

4551. சனிப்பிணம் தனிப்போகாது.
A Hindu superstition.

4552. சனிப்பிணம் துணைக்கூட்டும்.
Similar to preceding.

4553. சனி பிடித்ததோ சனியன் பிடித்ததோ?
Saturday an unlucky day.

4554. சனியனை விலைக்கு வாங்கினதுபோல.
Wilfully incurring evil.

4555. சனியன் பிடித்தவளுக்குச் சந்தையிலும் கந்தை அகப்படாது.
An unlucky woman.

4556. சனியன் பிடித்தவளுக்குச் சந்தையிற் போனாலும் புருஷன் அகப்படமாட்டான்.
Compare preceding.

4557. சன்னதம் குலைந்தால் வீறுப்பு எங்கே?
No inspiration, no exultation.

4558. சன்னதம் குலைந்தால் கும்பிடு எங்கே கிடைக்கும்?
Compare preceding.

4559. சன்னதங் குலைந்தால் கும்பிடு எங்கே வரும்?
Another form of preceding.

4560. சன்னம் சன்னம் பர்வதம்.
Mountains are made up of grains of sand.

## சா.

4561. சாகத்திரிகிறான் சண்டாளன், சாப்பிட்டுத்திரிகிறான் பெண்டாளன்.
Two typical villains.

4562. சாகத் துணிந்தவனுக்குச் சமுத்திரம் நீச்சு.
He fears no danger who fears no death.

---

4563. சாகப் பொழுதன்றி வேகப் பொழுது இல்லை.
The end of a life is not its completion.

---

4564. சாகமாட்டாமல் சங்கடப்படுகிறது.
A lingering fatal illness.

---

4565. சாகாமற் கற்பதே கல்வி பிறர் ஒருவர் வேகாமல் உண்பதே ஊண்.
True learning and food defined.

---

4566. சாகிறகாலத்திலே சங்கரா சங்கரா என்றாற் போல.
Becoming pious when too late.

---

4567. சாகிறபேருக்குச் சமுத்திரம் கால்வாய்.
Compare above.

---

4568. சாகிறவரையில் வைத்தியன் விடான், செத்தாலும் விடான் பஞ்சாங்கக்காரன்.
One fellow worse than the other.

---

4569. சாகிறவரையில் மருந்து கொடுக்கவேண்டும்.
Struggle till the very end.

---

4570. சாகிறதுபோல் இருந்து வியாதி தீருகிறதும் உண்டு.
Even hopeless characters may reform.

---

4571. சாகிறவனைப்போலிருப்பான் பிழைப்பான், பிழைப்பானைப் போலிருப்பான் சாவான்.
Deceptive nature of appearances.

---

4572. சாகிறவனுக்குச் சமுத்திரம் முழங்கால் மட்டும்.
Compare above.

---

4573. சாகிறவன் சனியனுக்குப் பயப்படுவானா?
A dying man has no fear.

---

4574. சாகிறவரைக்கும் சஞ்சலமானால் போகிறது எந்தக் காலமோ?
Endless misery.

---

4575. சாகிறவரைக்கும் சங்கடமானால் வாழுகிறது எக்காலம்?
Similar to preceding.

---

4576. சாகிற நாய் வீரத்தைக் காட்டினாற்போல.
Heroism displayed at the eleventh hour.

4577. சாகிற நாய் வீட்டின்மேல் ஏறினாற்போல.
Untimely bravery.

4578. சாகோ கோகோ அம்மையார் வாக்கோ ?
The goddess decides everything.

4579. சாகையிலே வந்தால் பாடையிலே பார்க்கலாம்.
Predicting death.

4580. சாக்கடைச்சேறு என்றாலும் சக்களத்தி என்றாலும் சரி.
A rival wife intolerable.

4581. சாக்கடைப் புழு என்றாலும் சக்களத்தியை வெல்லப்போகா[து.
Similar to preceding.

4582. சாக்கடைப் புழுவிற்குப் போக்கிடம் எங்கே ?
Said of a helpless person.

4583. சாக்கும் போக்கும் ஏற்காது ஐயன் முன்.
An excellent maxim.

4584. சாடிக்கு மூடி வாய்த்ததுபோல.
A good counterpart.

4585. சாடி சட்டிச் சூளைமேலே கோடையிடி விழுந்தாற்போல.
Complete destruction.

4586. சாடையறியாதவள் சங்காந்தியோ ?
One must read signs.

4587. சாட்சிக்காரன் காலில் விழுவதிலும் சண்டைக்காரன் காலில் விழலாம்.
General character of witnesses.

4588. சாட்டு இல்லாமற் சாவு இல்லை.
No death without a cause.

4589. சாட்டை இல்லாப் பம்பரம் ஆட்டிவைக்க வல்லவன்.
A person of extraordinary influence.

4590. சாட்டை இல்லாப் பம்பரம் ஆடுமா ?
Nothing can be performed without help.

4591. சாணான் எச்சில் கருப்புக்கட்டி, சர்க்கரை வெல்லம் உழவன் எச்சில்.
Shanar *versus* agriculturist.

4592. சாணிக் குழியும் சமுத்திரமும் சரியாய் நினைக்கலாமா?
Folly of comparing things utterly dissimilar.

4593. சாணிச் சட்டியும் சருவச்சட்டியும் சரியாமா?
Compare above.

4594. சாணி ஒருகூடை சவ்வாது ஒரு பண இடை.
Valuer of things differ greatly.

4595. சாணியும் சவ்வாதும் சரியாகுமா?
Similar to above.

4596. சாணியைக்கொடுத்து மெழுகென்றானாம்.
Would not do it himself.

4597. சாணுக்குச் சாண் வித்தியாசம்.
Measurements differ.

4598. சாணோ வயிறு சரீரம் எல்லாம் வயிறோ?
Said of a glutton.

4599. சாண்காட்டிலே முழத்தடி வெட்டலாமா?
Expecting much from small people.

4600. சாண் ஏற முழம் சறுக்குகிறது.
Losing more than gaining.

4601. சாண் கற் கழுவினால் முழச்சேறு.
Certain occupations are filthy.

4602. சாண் குருவிக்கு முழ வாலாம்.
Parts out of proportion to the whole.

4603. சாண் சடைக்கு முழக் கயிறா?
Demanding too much for a small work.

4604. சாண் செடியிலே முழத் தடி வெட்டலாமா?
Compare above.

4605. சாண் பறைக்கு முழத் தடி.
Some small things need big auxiliaries.

4606. சாண் தண்ணீரிலே முழுப்பேய்.
Similar to above.

4607. சாண் பாம்பானாலும் முழத் தடி வேண்டும்.
Some small things need great effort.

4608. சாண் பிள்ளையோ ஆண்பிள்ளையோ?
The male sex emphasized.

4609. சாதி அந்த புத்தி, குலம் அந்த ஆசாரம்.
Manners according to birth.

4610. சாதிக்கடுத்த புத்தி தீனிக்கடுத்த லத்தி.
Similar to preceding.

4611. சாதிமானமும் சமயமானமும் சந்நியாசிக்கும் உண்டு.
Even ascetics are not free from caste prejudices.

4612. சாது மிரண்டால் காடு கொள்ளாது.
The effect of lack of discipline.

4613. சாதுரியப் பூனை மீனைவிட்டு புளியங்காயைத் தின்றதாம்.
A boaster demeaning himself.

4614. சாதுரியப் பூனை தயிர் இருக்கச் சட்டியை நக்கிற்று.
Compare preceding.

4615. சாத்தானி குடுமிக்கும் சந்நியாசி பூணூலுக்கும் முடி போடு.
They are so long and ill attended to.

4616. சாந்துப்பெட்டி பாம்புப்பெட்டி ஆயிற்று.
A radical change.

4617. சாபமிட்டாருண்டோ? தலையில் திருவெழுத்தோ? வேகவிட்டாருண்டோ? எழுத்தின்படிதானே?
A complaint about fate.

4618. சாப்பிணி மருந்தேற்காது.
No medicine for a fatal illness.

4629. சாப்பிள்ளை பெற்றுத் தாலாட்டவா?
A useless boon.

4620. சாப்பிள்ளை பெறுவதிலும் தான் சாவது நலம்.
A still-born child a great misfortune.

4621. சாப்பிள்ளை பெற்றவளுக்குச் சந்தோஷம் வருமா?
Compare preceding.

4622. சாப்பிள்ளை பெற்றாலும் மருத்துவிச்சிக்கூலி தப்பாது.
Certain useless things are costly.

4623. சாம்பலைக் கிண்டிக் கோழி தானே விலங்கு இட்டுக்கொண்டதுபோல.
Bringing about one's own misfortune.

4624. சாம்பலைத் தின்று வெண்ணெயைப் பூசினதுபோல.
Putting on appearances.

4625. சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி இடம் கொடுக்கமாட்டான்.
The cupidity of *poojaris.*

4626. சாமைப்பயிரும் சக்கிலியப்பெண்ணும் சமைந்தால் தெரியும்.
Certain things known only at maturity.

4627. சாயந்தரத்தில் கலியாணம், பிடி தாம்பூலம்.
Indecent haste.

4628. சாய்ந்த மரத்தில் ஓடி ஏறலாம்.
Taking advantage of one's weakness.

4629. சாராயத்தை வார்த்துப் பூராயத்தைக் கேள்.
Intoxication makes a person garrulous.

4630. சாராயத்தைத்தான் தினம் குடித்தால் காராளனும் கடைமகனாவான்.
Drink leads to wretchedness.

4631. சாரைதின்னும் ஊருக்குப்போனால் நடுக்கண்டம் எனக்கு.
A selfish hope.

4632. சார்வில்லாதவனுக்கு நிலையில்லை.
One needs help to stand firm.

4633. சாலாய் வைத்தாலும் சரி, சட்டியாய் வைத்தாலும் சரி.
Referred for any emergency.

4634. சாலாய் விளைந்தால் என்ன, சட்டியாய் விளைந்தால் என்ன?
Similar to preceding.

4635. சாலோடு அகப்பை தட்டாமற் போகுதா?
In certain cases it is impossible to avoid contact.

4636. சாலோடே தண்ணீர் சாய்த்துக் குடித்தாலும் தாய் வார்க்கும் தண்ணீர் தாகம் தெளியும்.
A mother's tenderness extolled.

4637. சாவாமற் கற்பதே கல்வி, பிறர் இடத்தில் ஏகாமல் உண்பதே உணவு.
True learning and food defined.

4638. சாவுக்குப் பிடித்தால் லங்கனத்துக்கு வரும்.
Aiming at one thing and hitting another.

4639. சாறு மிஞ்சினால் பாறை, சாந்து மிஞ்சினால் குப்பை.
Effects of excess.

4640. சான்றோர் இல்லாச் சபை குறவர் சேரி.
The wise essential to society.

4641. சாஸ்திரம் பொய் என்றால் கிரகணத்தைப் பார்.
Sastram *versus* astrology.

4642. சாஸ்திரம் பார்த்துப் பெண்ணைக் கொள், கோத்திரம் பார்த்துப் பெண்ணைக் கொடு.
A rule for inter-marriages.

4643. சாஸ்திரம் பாராத வீடு சமுத்திரம், பார்த்த வீடு தரித்திரம்.
Discourages following traditions.

4644. சாஸ்திரம் கற்றவன் தானே காசு.
Traditional lore is itself capital.

## சி.

4645. சிங்கத்தின் காட்டைச் சிறுநரி வளைத்தாற்போல.
The weak attempting to circumvent the strong.

4646. சிங்கத்தின் செவியில் ஓட்டின ஈ.
A disagreeable intruder.

4647. சிங்கத்துக்குப் பங்கம் இல்லை.
The great seldom suffer.

4648. சிங்கத்துக்கு நாயா சிங்கார முடி சூட்டுகிறது?
Disagreeable associations.

4649. சிங்கமிருக்கக் குட்டி வசமாமா ?
Train a child apart from its parents.

4650 சிங்கம் பசித்தால் தேரையைப் பிடிக்குமா ?
The great will not degrade themselves.

4651. சிங்கம் பசிக்கு ஆனையையே தேடிக்கொல்லும்.
Similar to preceding.

4652. சிங்காரவல்லி அங்கயற்கண்ணிக்குத் தீட்டுமாறினபின் தெரு
ட்டுச்சடங்கு.
Said of a dainty damsel.

4653. சிட்டுக்குருவியின் தலைமேல் பனங்காய் வைத்ததுபோல.
Laying too heavy a burden.

4654. சிட்டுக்குருவியின்மேல் ராமபாணம் தொடுக்கிறதா ?
Spending too much on a trifle.

4655. சிட்டுக்குருவி மத்தியஸ்தம் போனாற்போல.
An obscure person attempting great things.

4656. சிட்டுக்குருவிமேல் பிரமாஸ்திரம் தொடுக்கலாமா ?
Same as preceding.

4657. சிட்டுக்குருவியா திருவணை அடைக்கப்போகிறது ?
An improbable effort.

4658. சிணுக்கு எல்லாம் பிணக்குக்கு இடம்.
Peevishness condemned.

4659. சிதம்பர சக்கரத்தைப் பேய் பார்ப்பதுபோல.
An unusual spectator.

4660. சிதம்பரத்திலே பிறந்த பிள்ளைக்குத் திருவெண்பாவை கற்
றுக்கொடுக்க வேண்டுமா ?
Poetry very common there.

4661. சித்திரைப் பதுமைபோல் பிரமிக்க.
Standing still as a statue.

4662. சித்திரச் செழுந்தாமரையை ஒத்திட முகமலர்ந்தது.
A beaming countenance.

4663. சித்திரத்திலும் சோழியன் ஆகாது.
A *Chola* disliked by a *Tamil*.

4664. சித்திரத்திலும் வைத்தெழுத ஒட்டான்.
Very strict in his refusal.

4665. சித்திரத்தில் எழுதிய செந்தாமரைப் பூப்போல.
Without fragrance.

4666. சித்தன்போக்கு சிவன்போக்கு, ஆண்டிப்போக்கு அதேபோக்கு.
Certain beggars and their conduct.

4667. சித்திரை மாதத்திற் செல்வன் பிறந்தால் சீரும் சிறப்பும் கெடும்.
Births in April unfortunate.

4668. சித்திரை மாதத்திற் பிறந்த சீர் கேடனும் இல்லை, ஐப்பசி மாதத்திற் பிறந்த அதிஷ்டவானும் இல்லை.
April *versus* November.

4669. சித்திரை என்று சிறுக்கிறது மில்லை, பங்குனி என்று பருக்கிறது மில்லை.
Growing neither thin nor stout.

4670. சித்தி பெறாத மருந்தும் மருந்தோ பெற்றுப் படையாத பிள்ளையும் பிள்ளையோ?
Medicines and children should fulfil their objects.

4671. சித்திரக்கர்த்தனுக்குத் தெரியாமல் சீட்டெக்கிழியுமா ?
"There is nothing hid."

4672. சித்திராங்கி பொம்மா சின்ன வெங்கிட்டம்மா ?
A satirical address to a woman.

4673. சித்திரத்துக் கொக்கே ரத்தினத்தைக் கக்கு.
A great demand.

4674. சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்.
Art needs practice.

4675. சித்தூரிலே செல்லக்கூத்து.
A dance in a small village.

4676. சிநேகம் செய்யுமுன் ஆராய்தல் செய், செய்தபின் ஐயப் படாதே.
Caution in making friends.

4677. சிநேகம் செய்தபின், சோதி தெளிந்தபின், நம்பு.
Similar to preceding.

4678. சிந்த அறுந்துபோகிற மூக்கு எந்தமட்டும் இருக்கும்?
Effect of a serious injury.

---

4679. சிந்துக்குக் குந்திபேசுகிறது.
Wasting time.

---

4680. சிந்தினவீட்டிலே சேராது, மங்கின வீட்டிலே வாராது.
A thriftless household.

---

4681. சிப்பியிலே விழுந்த மழைத்துளி முத்தாகும்.
How pearls are formed.

---

4682. சிம்பிலே வளையாதது பம்பிலே வளையப்போகிறதா?
Bend the twig and bend the tree.

---

4683. சிம்மாட்டுக்கும் சும்மாவிருப்பவனுக்கும் என்ன தெரியும்?
Who bears the burden knows the weight.

---

4684. சிரசுக்குமேலே செய்கிற ஆக்கினையு முண்டா?
Nothing greater than capital punishment.

---

4685. சிரஞ்சீவி பெற்றவருக்கு சிவபயம் ஏது?
Sure of life—free from fear.

---

4686. சிரட்டைத் தண்ணீர் எறும்புக்குச் சமுத்திரம்.
Everything depends on size and need.

---

4687. சிரித்துக் கழுத்தறுக்கிறது.
Consummate villainy.

---

4688. சிரிப்பார் சிரித்துத் தெருவிலே நிற்கிறது.
A ludicrous exposure.

---

4689. சிரித்துச் சிரித்துத் தின்றதோசைக்கு காசில்லையா?
Business is business.

---

4690. சிரைத்தால் மொட்டை வைத்தாற் குடுமி.
Opposite extremes.

---

4691. சிரைத்தாற் கூலி சேவித்தாற் சம்பளம்.
Work and wages go together.

---

4692. சிலவாளக்கள்ளி செலவு அறிவாளா?
An extravagant woman.

---

4693. சிலுவுண்டானால் சேவகமுண்டு.
Sloth demands a servant.

4694. சிலுக்கச் சிலுக்கக் குத்துகிறதெல்லாம் சித்திரத்துக்கழகு.
Refers to tattooing.

4695. சில்லரைக்கடன் சீரழிக்கும்.
Petty debts a great nuisance.

4696. சிவசொத்து குலநாசம்.
Temple offerings ruinous.

4697. சிவபூசையிலே கரடி புகுந்ததுபோல.
An unwelcome disturber.

4698 சிவலிங்கத்தின்மேல் எலி.
Compare preceding.

4699. சிவனே என்று இருந்தாலும் தீவினை விடவில்லை.
Fate overtakes even the innocent.

4700. சிவியாருக்கு அடிமைப்பட்டால் காவவும் வேண்டும் சுமக்க வும் வேண்டும்.
Servant must suit his master.

4701 சிவியான் ராஜவட்டம் போனதுபோல்.
Making a royal procession.

4702. சிறகிலும் மெல்லிசாய்ப் பொன் அடிப்பான்.
A skilful goldsmith.

4703. சிறகு இல்லாப் பறவை போல.
Deprived of one's chief support.

4704. சிறகு பறி கொடுத்த பறவைபோல்.
Similar to preceding.

4705. சிறகு முளைத்தார் பறத்தலும் கற்றார்.
Capability and action go together.

4706. சிறப்பொடு பூனை இறப்பிலிருந்தால் புறப்படமாட்டாதெலி
Safe in the absence of one's foe.

4707. சிறுக்கிச்சேதியறியாமல் செடியைச் செடியைச் சுற்றுகிறது
A wild-goose chase.

4708. சிறியார் கைச் செம்பொன்போல.
A valuable in the wrong place.

4709. சிறியாரோடு இணங்காதே, செம்புக்கு புளிவிட்டுக் கடையாதே.
Against associating with the mean.

4710. சிறியார்க்கினியதைக் காட்டாதே, செம்புக்கு புளிவிட்டாக்காதே.
Similar to preceding.

4711. சிறியோர் செய்த சிறுபிழை பெரியோர் பொறுப்பதுகடனே.
The great must be forgiving.

4712. சிறியோர் எல்லாம் சிறியர் அல்ல.
Though small in size not small in character.

4713. சிறுகச் சிறுகத் தின்றால் மலையையும் தின்னலாம்.
Slow eating commended.

4714. சிறுகக்கட்டிப் பெருக வாழ்.
A good counsel.

4715. சிறுக விதைத்தவன் சிறுக அறுப்பான்.
Reap as you sow.

4716. சிறு குழிகள் கொஞ்சம் தண்ணீரால் நிரம்பும்.
Small people easily satified.

4717. சிறு குழந்தை இல்லாத வீடும் வீடு அல்ல, சீரகம் இட்டு ஆக்காத கறியும் கறி அல்ல.
A baby essential to domestic happiness.

4718. சிறுக்கி சின்னபணம், சிறுக்கிக் கொண்டை மூன்று பணம்.
Ornament above one's position.

4719. சிறு துரும்பும் பல்லுக் குத்த உதவும்.
Even the poor may be useful.

4720. சிறுத்திருக்கையில் வளையாதது பருத்திருக்கையில் வளையுமா?
Compare above.

4721. சிறு தீ பெரு நெருப்பு.
Small cause and great effect.

4722. சிறுபிள்ளைகட்டின சிற்றாடைபோல.
Not well clad.

---

4723. சிறுபிள்ளையானாலும் ஆடுவோர் மூப்பு.
The young acting like the old.

---

4724. சிறு பிள்ளை இட்ட வேளாண்மை வீடு வந்து சேராது.
Inexperienced agriculture.

---

4725. சிறு பெண் கட்டின சிற்றாடையா?
Another form of 4722.

---

4726. சிறுபோது படியாத கல்வி அழுக்குச் சேலையில் சாயம் ஏற்றினதுபோல.
Learning in childhood enforced.

---

4727. சிறு மீன் எல்லாம் பெரு மீனுக்கு இரை.
The great feed on the small.

---

4728. சிறுமுள்ளு குத்திப் பெருமலை நோகுமா?
The small cannot injure the great.

---

4729. சிறுமைப் படுகிறதைவிடச் செத்தால் உத்தமம்.
Death preferable to persecution.

---

4730. சிறுமையும் பெருமையும் தான்தர வரும்.
Every man the architect of his fortune.

---

4731. சிறுமையிற் கல்வி சிலையில் எழுத்து.
Early learning lasts life-long.

---

4732. சிறு ரூபத்தை உடைய பேரும் அரும்பொருளைச் செய்வார்.
Compare above 4712.

---

4733. சிறு விதை ஆகிய ஆலமரம் பெரு நிழலைக்கொடுக்கும்.
Similar to preceding.

---

4734. சிறைச்சாலைக்கு அழகில்லை, தேவடியாளுக்கு முறையில்லை.
Prison house and prostitute.

---

4735. சிறைக்குக் கீழ்ச்சிறை அதின் கீழம்பட்டன்.
A prison under prison.

---

4736. சிறைப்பட்டாயோ குறைபட்டாயோ?
To be imprisoned is to be degraded.

---

4737. சிற்றாள் எட்டு ஆளுக்குச் சரி.
You can get a lot of work out of him.

---

4738. சிற்றாத்தை பிள்ளையும் பிள்ளையோ செத்தையிற் பல்லியும் பல்லியோ ?
Cannot equal your own.

---

4739. சிற்றின்பம் எண்ணார் மற்றின்பம் கண்டார்.
True bliss *versus* sensual pleasure.

---

4740. சிற்றுணர்வோர் என்றுஞ் சிலுசிலுப்பர்.
The little-minded always peevish.

---

4741. சிற்றூரிலே பாரிக்கூத்தா ?
A great dance in a small village.

---

4742. சிற்றூண் இனிது.
Refreshments very agreeable.

---

4743. சிற்றெறும்பைச் சிற்றெறும்பும் கட்டெறும்பைக் கட்டெறும்பும் தேடும்.
Like seeks like.

---

4744. சினத்தால் அறுத்த மூக்குச் சிரித்தால் வருமா ?
Laughter cannot restore what anger has lost.

---

4745. சினத்தைப்பேணிற் தவத்திற்கழிவு.
Anger to be avoided by ascetics.

---

4746. சினத்திருந்தார் வாசல்வழி சேரவேண்டாம்.
Avoid the passionate.

---

4747. சின்னச் சின்னப் பேச்சும் சிரித்தாற்போல வார்த்தையும்.
Dissembling talk.

---

4748. சினந்தாலும் சீர் அழியப் பேசாதே.
" Be ye angry and sin not."

---

4749. சின்ன சின்னப் பேச்சு; சிங்காரப்பேச்சு வன்னவுன்னப் பேச்சு மெத்த வழக்கமான பேச்சு.
A national indulgence.

---

4750. சின்னவீடாம், சிறுகதவாம், அரக்கு முத்திரையாம் வையாபுரியான் கலகமிட வைத்தது வைத்தாற்போல.
Refers to a story.

---

4751. சின்ன பாம்பானாலும் பெரிய தடி கொண்டடி.
Some small things need great effort.

---

4752. சின்னாண்ணன் கோவிலிலே சிலைபண்ணி வைத்தாற்போல.
Not a very elegant figure.

---

## சீ.

4753. சீக்கிரம் புத்தி பல ஈனம்.
Precocity a sign of weakness.

---

4754. சீட்டாளுக்கு ஒரு மூட்டாள், செருப்புத் தூக்கிக்கு ஒரு அடை
ப்பக்காரனோ ?
The mean making themselves comfortable.

---

4755. சீதேவி தன்னுடனே செய்ய திருப்பாற்கடலில், மூதேவி
ஏன் பிறந்தாள் முன் ?
Why adversity and prosperity go together.

---

4756. சீதேவியுடன் கூட மூதேவியும் பிறந்தாற்போல.
Compare preceding.

---

4757. சீதை பிறக்க இலங்கை அழிய.
One event resulting from another.

---

4758. சீபுரத்துப் பள்ளி செத்தும் கெட்டான் இருந்தும் கெட்டான்.
Life and death alike miserable to some.

---

4759. சீப்பு எடுத்து ஒளித்தால் கலியாணம் முடங்குமா ?
A trifle need not upset a great affair.

---

4760. சீப்பு எடுத்து ஒளித்தால் கலியாணம் நிற்குமா ?
Another form of preceding.

---

4761. சீயபுரத்துப்பள்ளி செத்தும் கெடுத்தான் இருந்தும் கெடுத் [தான்.
Another form of.

---

4762. சீரங்கத்திலே பிறந்த பிள்ளைக்குத் திருவாய்மொழி கற்பிக்க
வேண்டுமோ ?
Everyone is a poet there.

---

4763. சீரங்கத்துக்குப் போகிறவன், வழியிலே பாரியைப் பறி
கொடுத்ததுபோல.
Losing the very thing you need most.

---

4764. சீரங்கத்துக் காகமானாலும் கோவிந்தம் பாடுமோ ?
Locality cannot alter nature.

4765. சீரங்கத்தில் உலக்கை கொடுத்ததுபோல.
A needless gift.

4766. சீரங்கத்துக்குப் போகிறவன் ஓரியை மாராப்புப் போட்டது போல.
A foolish and dangerous associate.

4767. சீரணி கெட்டால் கோரணி.
Bad attire—bad behaviour.

4768. சீராளன் கலியாணத்தில் மூன்றுபேர் பெண்டுகள் மாரோடே மார் தள்ளுது.
A case of polygamy.

4769. சீராளனைப் பெற்றபிறகு திருச்சலைத் துணிக்கு வருத்தமாச்சுது.
Vide below 4772.

4770. சீரியர் கெட்டாலும் சீரியரே.
The noble not affected by ruin.

4771. சீரியர்க்கு அன்பு செய்.
Love the noble.

4772. சீர்கெட்டவனுக்கு வாழ்க்கைப்பட்டுத் திரிச்சீலைத்துணிக்கு வாதப்படாமலிருந்தேன்.
Expectations turning out contrary.

4773. சீர் அற்றார் கையிற் செம்பொன் விலை பெறா.
Good things not valued by the worthless.

4774. சீர் ஒழுக சான்றோர் சினம்.
The anger of the noble is good.

4775. சீலைப்பாய் ஈழம் போய்ச் சீனி சருக்கரை கட்டுமோ ?
Ruined persons are useless.

4776. சீலை இல்லையென்று சின்னாயி வீட்டுக்குப் போனாளாம், அவள் ஈச்சம்பாயைக் கட்டிக்கொண்டு எதிரே வந்தாளாம்.
One worse off than the other.

4777. சீவன் போனால் கீர்த்தியும் போமா ?
Life may go, not fame.

4778. சீவனம் செய்ய நாவினை விற்கேல்.
Against lying for livelihood.

4779. சீவனும் விட்டது வியாதியும் பொட்டென்று நின்றது.
Death came and disease left.

4780. சிறிவரும் வடவாக்கினியைச் சிறுகுட்டைத்தண்ணீர் அவிக்குமா?
Small foes camot encounter great ones.

4781. சிறும்படையைக் கண்டு செடிக்குள் நுழைகிறது.
A great coward.

4782. சீனி என்று எழுதி நக்கினால் இனிக்குமா?
Mere picture is not reality.

4783. சீ என்ற வீட்டிலே பேயும் நுழையாது.
A repellent house avoided by all.

4784. சீ என்ற காட்டிலே செந்நாய் சேருமா?
Similar to preceding.

சு.

4785. சுகங்கெட்டால் விரதலாபம், விரதங்கெட்டால் சுகலாபம்; இரண்டுங் கெட்டால் என்ன லாபம்?
One thing depending on another.

4786. சுக சரீரம் கழுதைப் பிறப்பு.
A life of pleasure despised.

4787. சுக துக்கம் சுழல் சக்கரம்.
Pain and pleasure take turns.

4788. சுகத்துக்குப் பின் துக்கம் துக்கத்துக்குப் பின் சுகம்.
Compare preceding.

4789. சுகத்தையாவது பெறவேண்டும் தவத்தையாவது பெற வேண்டும்.
Either pleasure or penance.

4790. சுகத்தைப் பெற்றதும் அல்ல தவத்தைப் பெற்றதும் அல்ல.
Neither the one nor the other.

4791. சுகம் வந்தால் சந்தோஷப்பட்டுத் துன்பம் வந்தால் பின் வாங்குவானேன்?
Welcome pain as well as pleasure.

4792. சுகத்தைத் தள்ளினாலும் துக்கத்தைத் தள்ளப்போகாது.
You may shun pleasure—not pain.

4793. சுகம் தக்கிறதுமல்ல விரதம் தக்கிறதுமல்ல.
A case which is bad in every way.

4794. சுகவாசி உடம்பு கழுதைப் பிறப்பு.
Compare above.

4795. சுக்கிரீபாக்கினை எங்குமில்லை.
Cruel punishment very rare.

4796. சுக்கிரபகவான் புறப்பட்ட கண்ணில் இண்டமுள்ளு குத்தினதுபோல.
A great torture.

4797. சுக்கிர உதயத்தில் தாலி கட்டி, சூரிய உதயத்திற்குள் அறுத்தாள்.
Sudden widowhood.

4798. சுக்கிரீவ ஆக்கினையாய்
Compare above.

4799. சுக்கு அறியாத கஷாயம் உண்டா?
A person needed in every case.

4800. சுக்குத் தின்று முக்கிப் பெற்றால் தெரியும் பிள்ளை அருமை.
Another alone knows the value of her child.

4801. சுக்குக் கண்ட இடத்திலே முக்கிப் பிள்ளை பெறுவாளா?
Our action not in our power.

4802. சுக்குக் கண்ட இடத்தில் பிள்ளை பெற்றுச் சூரிய நாராயணன் என்று பெயர் இடுவாள்.
Said of a woman of a powerful will.

4803. சுக்கும் பாக்கும் வெட்டித் தாறேன் சுள்சுள் என்று வெயில் எறி.
One longing for sunshine.

4804. சுங்கம் மாறினால் சுண்ணாம்பும் கிடையாது.
Ill effect of taxes.

4805. சுங்கமும் கூழும் இறுக்கத் தடிக்கும்.
Tax and food increase by pressure.

4806. சுடர் விளக்காயினும் தூண்டு கோல் ஒன்று வேணும்.
Prompting necessary even for the brilliant.

4807. சுடலை ஞானம் திரும்பி வருமட்டும்.
Juvenile wisdom short-lived.

4808. சுடுகாடுபோனபிணம நடுவீடு வந்து சேருமா ?
Corpses cannot return.

4809. சுடுகாட்டுவழி போனாலும் இடுகாட்டுவழி போகலாகாது.
Cemetery preferred to forest.

4810. சுடுகாடு போன பிணம் திரும்பாது.
Compare above.

4811. சுடுகாட்டுப் புகையைப் பார்க்கும் கொம்பேறி மூக்கன்.
A species of snake.

4812. சுடு தெண்ணீருக்காக ஏரியை உடைக்கலாமா ?
Risking much for small gain.

4813. சுண்டைக்காய் கால் பணம் சுமைக்கூலி முக்கால் பணம்.
Carriage costing more than value.

4814. சுண்டைக்காயிலே,கடிக்கிறது பாதியா, வைக்கிறது பாதியா?
Niggardliness as to trifles.

4815. சுடு நெருப்பை மடியில் முடியலாமா ?
Welcoming danger.

4816. சுட்ட கனியை நாய் புரட்டுகிறாப்போல.
Abusing a meal.

4817. சுட்ட சட்டி அறியுமா அப்பத்தின் சுவையை ?
Unconscious bearers of goodness.

4818. சுட்ட சட்டியும் சட்டுவமும் கறிச் சுவை அறியுமா ?
Compare preceding.

4819. சுட்ட மண்ணும் பச்சை மண்ணும் ஒட்டுமா ?
Things unlike cannot unite.

4820. சுட்ட நண்டுக்கு வேலி கட்டின சுடுகாட்டுப்பள்ளி.
A great fool.

4821. சுட்ட சட்டி தொடாதவளா உடன்கட்டை ஏறப்போகிறாள்?
Unloving in small things—worse in great.

4822. சுட்டவனிருக்கக் குண்டை நோகிறதா ?
An unreliable statement.

4823. சுண்டினாலும் பாற்சுவை குறையுமா ?
Though worried, the noble will not be affected.

4824. சுண்ணாம்பில் இருக்கிறது சூக்ஷம்.
Small things playing an essential part.

4825. சுத்தம் சோறுபோடும், எச்சில் இரக்கவைக்கும்.
Cleanliness commended.

4826. சுத்தம் சோறிடும்.
Compare preceding.

4827. சுத்த வீரனுக்கு உயிர் துரும்பு.
Heroism despises life.

4828. சுத்த விலங்கோடு சுத்த விலங்குதான் சேரும்.
Like unites with like.

4829. சுப்பா சுப்பா குத்தைக்கடி, அப்பா அப்பா நான் மாட்டேன்.
A vulgar sport.

4830. சுப்பனுக்கு வீரப்பன் தடம்.
One better than another.

4831. சுமந்ததலையும் சும்மாடுமாய்த் திரிகிறது.
Always in drudgery.

4832. சுமந்தவன்தலையிலே சும்மாடு.
Burden on a willing head.

4833. சுமப்பவனல்லவோ அறிவான் காவடி பாரம்?
The bearer knows the burden.

4834. சுமை இழந்தார்க்குச் சுங்கம் இல்லை.
No load, no tax.

4835. சுமைதாங்கி சுங்கம் இறுப்பது இல்லை.
No tax imposed by a burden-bearer.

4836. சுமைபோட்டால் பந்தலிலே காரியம் என்ன ?
Against inquisitiveness in workmen.

4837. சும்மாக்கிடைத்தால் எனக்கொருத்தி எங்கப்பனுக்கொருத்தி.
Cheap prostitution.

4838. சும்மா அறுக்கிறாய் என்ன சொத்தைக் களாக்காயை ?
Engaged in useless work.

4839. சும்மா கிடக்கிற தாரையை ஊதிக் கெடுத்தான் அம்மான்.
Making a thing useless by misuse.

4840. சும்மா கலம் சுமக்கமாட்டான், நனைந்து முக்கலம் சுமப்பான்
One who foolishly gets into much work.

4841. சும்மா போகிறவனைப் பிடிப்பானேன், இராத்திரி எல்லா
கிடந்து பிதற்றுவான் ஏன் ?
Why wilfully endure trouble ?

4842. சும்மா இருந்தால் சோறு ஆமா, வாடா சித்தா கால் ஆட்ட.
Giving work to the slothful.

4843. சும்மா கிடைக்குமா சோணாசலன் பாதம் ?
Nothing can be had gratis.

4844. சும்மாயிருக்கிறவன் சூத்திலே சுப்பல் எடுத்துக்குத்துகிறது
Teasing a quiet fellow.

4845. சும்மா இருந்த அம்மையாருக்கு அரைப் பணத்துத் தாலிபோ
தாதா ?
Marriage more important than the *tali*.

4846. சும்மா வந்த மாட்டைப் பல்லைப் பிடித்துப் பார்க்கிறது.
Looking a gift horse in the mouth.

4847. சும்மா இருந்த உடம்பிலே சுண்ணாம்பைத் தடவிப் புண்ணா
குவானேன் ?
Why incur pain wantonly ?

4848. சுயகாரியப் புலி.
Zealous in his own affairs.

4849. சுயபுத்திபோனால் சொற்புத்தி வேண்டாமா ?
The senseless must listen to advice.

4850. சுய காரிய துரந்தரன், சுவாமி காரியம் வழுவழு.
Similar to above.

4851. சுய காரிய துரந்தரன் பரகாரிய பராமுகன்.
Compare preceding.

4852. சுரிகுழல் மனது சரி நடப்பது ஆர்?
The heart is deceitful above all things.

4853. சுருட்டை சோறு இடும், பம்பை பால் வார்க்கும்.
Notions of different sorts of hair.

4854. சுருட்டைப்பாய், முரட்டுப் பெண்.
Similar to preceding.

4855. சுருதி சுகானுபோகம் இரண்டும் ஒத்தால் முத்தி.
Vedas and pleasure must agree to obtain heaven.

4856. சுருதி குரு சுகானுபவம் மூன்றும் ஒத்தது மெய்ப்பொருளாம்.
Compare preceding.

4857. சுரைக்காய் மிதக்கிறது, கல் அமிழ்ந்து போகிறது.
A law of nature.

4858. சுரைப் பூவுக்கும் பறைப் பாட்டுக்கும் மணம் இல்லை.
No sweetness in certain things.

4859. சுவரின் மறைவிலாராடா, சுரக்காரன் பத்தியம் சாப்பிடுகிறேன்.
A thief's explanation of his conduct.

4860. சுவருக்கும் காதுகள் உண்டு.
Even walls have ears.

4861. சுவரை வைத்துக்கொண்டல்லவோ சித்திரம் எழுதவேண்டும்?
Material always necessary.

4862. சுவர்க்கத்திலே தோட்டியும் சரி தொண்டமானும் சரி.
No caste or class in heaven.

4863. சுவர்க்கத்துக்குப் போனாலும் கக்கத்திலே ஒரு பிள்ளை ஏன்?
Why needless encumbrances?

4864. சுவர்க்கத்துக்குப் போகிறபோது கக்கத்திலே மூட்டை ஆமா?
Compare preceding.

4865. சுவர்க்கத்திலே போகிறபொழுது கக்கத்திலே நாட்டினமா?
Compare preceding two.

4866. சுவர்க்கிளையை வழித்துப்போடி சுனைகெட்ட வெள்ளாட்டி.
An abuse to a female slave.

4867. சுவர்க்கத்திற்குப் போகிறபோது கக்கத்திலே கூத்தியாரா?
Compare above.

4868. சுவாமி வரம் கொடுத்தாலும் முன்னடியான் வரம் கொடான்.
The character of priests exposed.

4869. சுள்ளாப்பு எல்லாம் பொல்லாப்பு.
Sulkiness leads to evil.

4870. சுள்ளைச் சுட்டுக்கொண்டு கள்ளைக் குடிக்கிறது.
A method of drinking toddy.

4871. சுற்றத் துணியும் இல்லை நக்கத் தவிடும் இல்லை.
Quite destitute.

4872. சுற்றம் பாக்கிற் குற்றமில்லை.
Don't find fault with relations.

4873. சுற்றத்திற்கு அழகு சூழ இருத்தல்.
Indian way of relatives living together.

4874. சுற்றத்தமரைப் பற்றி இரு.
Live with your relations.

## சூ.

4875. சூடியும் உணர்த்து வராது சுரணை கெட்ட மாட்டுக்கு.
Past all mean of discipline.

4876. சூடு சுரணை அற்றவனுக்கு நாடுநகர் பெரிதா?
A senseless fellow is a careless fellow.

4877. சூடு கண்ட பூனை அடுப்பங்கரையிற் சேராது.
A burnt child dreads the fire.

4878. சூடு மிதிக்கிற மாட்டின் வாயைக் கட்டலாமா?
Against muzzling the ox that treads the corn.

4879. சூட்சத்திலே இருக்கிறது மோட்சம்.
Easy notions about heaven.

4880. சூட்சாதி சூட்சத் துல்லியன்.
Said of a person of great pruity.

4881. சூதபலத்தைச் சுகமுகத்தினால் அறி.
The face bespeaks the state of health.

4882. சூதாடித் தோற்றவனுக்கு சுகங்கிட்டாது.
A gambler condemned.

4883. சூதனுக்கு நீதி இல்லை.
Gambling and vice go together.

4884. சூதன் கொல்லையிலே மாடு மேயும்.
Gambling leads to ruin.

4885. சூதானத்துக்கு அழிவு இல்லை.
Circumspection commended.

4886. சூதினால் வெல்வது எளிது.
Conquest by stratagem easy.

4887. சூதுகாரன் கையும் கோள்காரன் வாயும் சும்மாவிராது.
The gambler and the tale-teller.

4888. சூதுகாரன் கையை வெட்டிப்போட்டாலும் துடுப்பைக் கட்டிக்கொண்டாடுவான்.
Gambling never got rid of.

4889. சூதுகாரன் பணம் சுற்றியிருக்கிற பேரைச் சேரும்.
Compare above.

4890. சூதும் வாதும் வேதனை செய்யும்.
Gambling and disputing condemned.

4891. சூது விரும்பேல்.
Auvvei's proverb.

4892. சூத்தைப்பார்த்தால் தெரியாதா சோழமண்டலத் தகவிலை ?
Personal appearance betrays the prices of food.

4893. சூத்தடிச்சிரங்கும் எதிர்வீட்டுக் கடனுமாகாது.
They are a continual worry.

4894. சூத்திரவேதன் சாஸ்திரம் பார்ப்பான்.
Who consults the shastras.

4895. சூத்திலடித்தான் பல்லு போச்சுது.
An indirect effect.

4896. சூத்திரப்பாவைபோல் நடிக்கிறான்.
A skilled dancer.

4897. சூத்திலே கட்டத் துணியில்லை கூத்தியார் இரண்டு.
Poverty *versus* vice.

4898. சூத்துக்குத் தடுக்குப்போட்டுச் சுற்றிக்கொண்டு திரிகிறது.
In extreme poverty.

4899. சூத்துத்துணியை நம்புகிறதில்லை.
Being the only one.

4900. சூத்துப் புடவையை விட்டால் மாற்றுப்புடவை இல்லை.
In great povorty.

4901. சூத்து எப்படி அலைந்தாலும் சரி, காவடிமாத்திரம் ராமேஸ்வரம்போய்ச் சேர்ந்தால் சரி.
Never mind fetigue—let the work be done.

4902. சூத்தையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டுகிறது.
Said of a mischievous moddler.

4903. சூத்தை வழித்து முக்காடு போட்டாற்போல.
Doing a good thing in a bad way.

4904. சூத்து ஒட்டினாலும் குசு நாற்றம் போகிற தில்லை.
Impossible to restrain evil influence.

4905. சூரியன் முன்னே சூழ்ந்த இருள் போல.
Vanishing gradually.

4906. சூரனுக்குத் துரும்பு துரைமக்கள்.
A hero minds no ouc.

4907. சூரியன்கீழே தோன்றினது எல்லாம் மாயை.
All is vanity under the sun.

4908. சூரியனைக் கையால் மறைத்ததுபோல.
An absurd though apparently successful attempt.

4909. சூரியனைக் கண்ட இருள்போல்.
Compare above.

4910. சூரியனைக் கண்ட பனிபோலே நீங்கும்.
Similar to preceding.

4911. சூரியனுக்கு முன் மின்னும்பூச்சிபோல.
Suffering by comparison.

4912. சூரியனைக் கண்ட தாமரைபோல.
Rejoicing at the sight of a friend.

4913. சூரியன் தந்த அக்கினியைக்கொண்டு சூரியனைப் பணிவது போல.
Offering one's own as an offering.

4914. சூரியன் வெளிச்சத்தில் சுடர்விளக் கென்னத்திற்கு?
Why a lamp in sunshine?

4915. சூரியனைக் கண்டு உலகம் விளங்கும்.
The importance of the sun.

4916. சூரியனைக் கிரகணம் பிடித்ததுபோல் உன்னைச் சனி பிடித்தது.
Overtaken by an evil star.

4917. சூரியன் எழுமுன் காரியம் ஆடு.
Plan before sunrise.

4918. சூரியனுடைய பிரகாசத்துக்கு முன்னே மின்மினி விளங்க மாட்டாது.
Compare above.

4919. சூரியனைப் பார்த்து நாய் குலைத்தாற்போல.
Same as barking at the moon.

4920. சூரியனைக் கல்லால் அடித்ததுபோல.
Trying to hurt the great.

4921. சூலாகு மீன்கள் ஒன்றை ஒன்று மோந்துக்கொள்ளும்.
Habits of certain fish.

4922. சூலி சூலி என்று சோற்றைத் தின்று மலடிவாயில் மண்ணைப் போடுகிறதா?
Cheating a barren woman.

4923. சூலிக்கு சுக்குமே லாசையா?
It is deemed a good remedy.

4924. சூழ ஓடியும் வாயிலாலே.
You must at last enter by the door.

## செ.

4925. செக்கடி முத்தி எனக்கென்ன புத்தி.
Asking an expert for advice.

4926. செக்கிலரைபட்ட தேங்காய்ப் புண்ணாக்குப்போல.
Reduced to great extremity.

4927. செக்கிலரைபட்ட எள் திரும்ப முழுதாமா?
Once gone forever gone.

4928. செச்சு உலக்கையை விழுங்கினவனுக்குச் சுக்குக் கஷாயம் மருந்தாமா?
Small remedies will not do for just evils.

4929. செக்கு நக்குகிற தம்பிரானே உன் திருவடிக்குத் தண்டம், அந்தண்டை நக்கடா பிள்ளாய் ஐஸ்வரியம் பெருகியிருப்பாய்.
One can only offer what one has.

4930. செக்கை நக்குகிற தம்பிரானே தெண்டம், நீ தென்புறம் நக்கு நான் வடபுறம் நக்குகிறேன்.
Compare above.

4931. செக்கென்றும் சிவலிங்கம் என்றும் தெரியாமல்.
Unable to discern.

4932. செக்கை வளையவரும் எருதுகளைப் போல.
Reasoning in a cricle.

4933. செங்கதிர் முன்னே வெங்கதிர் அடங்கினதுபோல.
One overmastering another.

4934. செங்கோலுக்கு முன்னே சங்கதமா?
One sceptre is supreme.

4935. செங்கோல் ஒங்குவன் திரித்துவ தேவன்.
It is God who sways the sceptre.

4936. செங்கோல் கோணினல் எங்கும் கோணும்.
The effect of an unrighteous sceptre

4937. செடியில்லாத கொடிபோல.
Without a prop.

4938. செடியிலே வணங்காதது மரத்திலே வணங்கும் ?
The child is father to the man.

4939. செடி வைத்துக்கொண்டு விலை கூறலாம்.
Why bargain without an article?

4940. செட்டிக்கும் மட்டிக்கும் சென்மப் பகை.
The Chetty hates a stupid fellow.

4941. செட்டிக்கும் பயிருக்கும் சென்மப்பகை.
Similar to preceding.

4942. செட்டிக்கு வேளாண்மை சென்மப் பகை.
The Chetty dislikes agriculture.

4943. செட்டி கூடிக் கெட்டான் சேணியன் பிரிந்து கெட்டான்.
Partnership good for some, bad for others.

4944. செட்டி போன இடம் எல்லாம் வட்டம் காற் பணம்.
The merchant makes everything dear.

4945. செட்டி பணத்தைக் குறைத்தான், சேணியன் காலைக் குறைத்தான்.
The evils of the Chetty and the Weaver.

4946. செட்டி படை வெல்லுமா, சேற்றுத் தவளை கடிக்குமா ?
It is not to be expected from their habits.

4947. செட்டி சிங்காரிக்கிறதுக்குள்ளே பட்டணம் பறிபோகிறது.
The Chetty a slow-coach.

4948. செட்டிப் பிள்ளையோ கெட்டிப் பிள்ளையோ ?
A Chetty boy is very smart.

4949. செட்டி முடுக்கோ, சரக்கு முடுக்கோ?
What is the real attraction?

4950. செட்டியாருக் கொருகாலம், சேவகனுக்கு ஒருகாலம்.
Each has his season.

4951. செட்டியார் பணம் சித்தென்று போச்சுது.
Said of a Chetty's savings.

4952. செட்டியார் வீட்டுப்பிள்ளை செல்வப்பிள்ளையானால் படைக்குப்போகிற நாயகனைப் பயமுறுத்தலாமா ?
One must not take advantage of one's position.

4953. செட்டியாரே செட்டியாரே என்றால், சிரகம் பணவெடை முக்காற் பணம் என்கிறார்.
Intent on one's own gain.

4954. செட்டி வீட்டிற் பணம் இருக்கிறது, ஆலமரத்தில் பேய் இருக்கிறது.
Where certain things may be expected.

4955. செட்டிகள் மாடு மலை ஏறி மேயுமா?
Why should they, being well off?

4956. செட்டியாரே வாரும் சந்தையை ஒப்புக்கொள்ளும்.
Inviting a merchant.

4957. செட்டியை ஈலி தொடர்ந்ததுபோல.
A useless pursuit.

4958. செட்டிக்கு இறுத்துப் பைக்கும் இறுத்தேன்.
A double loss.

4959. செட்டிக்கு ஒரு தட்டு, சேவகனுக்கு ஒரு வெட்டு.
Meeting two demands.

4960. செணச்சித்தம் செணப்பித்தம்.
Unsteady health or temper.

4961. செத்த நாய் திரும்பக் கடியாது.
Once dead always dead.

4962. செத்த அன்றைக்குச் சொன்னால் பத்தாம் நாளைக்கு வருவான்.
Said of an unpunctual fellow.

4963. செத்த பாம்பை ஆட்டுவோளாம் வித்தைக்காரப் பெண்பிள்ளை.
A cunning woman's tricks.

4964. செத்தவன் வீட்டிற் கெட்டவன் ஆர்?
No one is ruined by a deceased person.

4965. செத்தவன் வாயிலே மண், இருந்தவன் வாயிலே சோறு.
The survivor better off than the deceased.

4966. செத்த மாடு புல்லுத் தின்னுமா?
Compare above.

4967. செத்த பிறகா செய்தவனுக்குச் செய்கிறது ?
No ceremonies after death.

4968. செத்தவன் கண் செந்தாமரைக் கண், இருந்தவன் கண் கொள்ளைக் கண்.
The dead preferred to the living.

4969. செத்த பிறகா செல்வம் அனுபவிக்கிறது?
Then it is useless.

4970. செத்தவன் சூத்து தெற்கே யிருந்தாலென்ன வடக்கேயிருந் தாலென்ன ?
What matters position to the dead?

4971. செத்தவன் பிள்ளை இருக்கிறவனுக் கடைக்கலம்.
Survivor becomes guardian of orphans.

4972. செத்த விடம் புல்லு முளைத்துப்போம்.
The grave cannot be traced.

4973. செத்தபின் எப்படிப் போனாலும் என்ன ?
Compare above.

4974. செத்தவன் தலை கிழக்கே இருந்தால் என்ன மேற்கே இருந் தால் என்ன ?
Compare above.

4975. செத்த பிணத்தில் கடை உற்றார்க்கு உதவாதவன்.
An awful miser.

4976. செத்த ஆடு காற்பணம் சுமைக்கூலி முக்காற் பணம்.
Cooly more than cost.

4977. செத்த பிணத்துக்குக் கண் ஏன், சிவசிவா, ஆண்டிக்குப் பெண் ஏன் ?
Not necessary.

4978. செத்த பிணத்தைச் சுற்றித் திரிந்தாற்போல.
Engaged in a useless act.

4979. செத்தவன் பெண்சாதியை இருந்தவன் கைக்கொண்டாற் போல.
Usurping unclaimed property.

4980. செத்தவன் வீட்டில் பாடுபட்டவர் ஆரோ ?
Compare above.

4981. செத்த பாம்பை ஆட்டுகிறான்.
Playing a mean trick.

4982. செத்தவன் கையிலே வெற்றிலை பாக்குக் கொடுத்த சம்பந்தம்.
Making a present which cannot be enjoyed.

4983. செத்த மாட்டை அறுக்காத கத்தி சொத்தைக் கத்திரிக்காயை அறுக்கும்.
Though useless in one case useful in another.

4984. செத்த பாம்பு சுற்ற வருகிறதே அத்தை நான் மாட்டேன் என்றாற்போல.
Expressing great but ungrounded fear.

4985. செத்த பிணத்துக்கு அருகே இனிச் சாகும் பிணம் அழு[கிறது.
Everybody will become a corpse.

4986. செத்தால் பிழைக்கறியான்.
Unable to tide over difficulties.

4987. செத்தால் தெரியும் செட்டியார் வாழ்வு.
His savings will then be known.

4988. செத்தும் சாகாதவன் தியாகம் கொடுப்போன்.
The power of a sacrifice.

4989. செத்துத் தெய்வமாய் நிற்கிறான்.
Sainted after decease.

4990. செத்துப் போன தாதன் முட்டுப்போல முளைத்தான்.
A sudden re-appearance of an absent fellow.

4991. செத்துப்போன பாட்டன் இருந்தால் தாடியைப் பிடித்துக் கொண்டு தெரிவிக்கலாம்.
Longing for a deceased grandfather.

4992. செத்தைக் கூலி காற்பணம் சுமைக் கூலி முக்காற்பணம்.
Cooly greater than cost.

4993. செந்தணலை முந்தானையில் முடியலாமா?
A dangerous game.

4994. செப்படி வித்தை எப்படிச் செய்கிறான்?
Said of a very cunning trickster.

4995. செப்பிலுமில்லை பந்திலுமில்லை.
A great mystery.

4996. செப்பில்லாக் குடிக்கு அப்பாப் பட்டமா?
Copper vessel a proof of prosperity.

4997. செப்பும் பந்தும் போல.
Preserving a secret.

4998. செம்பரம்பாக்கத்தான் பெயர் பெற்றான் மாங்காட்டான் நீர் பெற்றான்.
Relative merits of villages.

4999. செம்பால் அடித்த காசும் கொடான்.
So niggardly.

5000. செம்பாலைக்குக் கரும்பு ஆலை வலிது.
Said of a very rough sort of paddy.

5001. செம்பு நடமாடக் குயவன் குடிபோகிறான்.
Copper vessels banishing pottery.

5002. செம்மறி ஆடு வெளியே ஓடத் திருட்டு ஓநாய் உள்ளே.
Bad characters housed and good ones expelled.

5003. செயமுள்ள மட்டும் பயம் இல்லை.
No fear while victorious.

5004. செய்த தீவினை செய்தவர்க்கே.
Each must bear his own sin.

5005. செய்தும் செய்தவத்தம்.
Said of a fruitless effort.

5006. செய்யாத வித்தை எல்லாம் செய்தாலும் தேங்காய்க்குடுக்கையிலே மூத்திரம் பெய்வாளா?
Said of a very unlikely act.

5007. செய்யாப்பிள்ளை வரப்பிலே செய்வா செய்வா என்னேனே, நீ செய்யேன் செய்யேன் என்றாயே, நீ பார்த்துக்கோ, நீ கேட்டுக்கோ.
Throwing responsibility on another.

5008. செய்த வினை செய்தவர்க்கு எய்திடும்.
Compare above.

5009. செய்தார்க்குச் செய்வது செத்தபிறகோ?
Compare above 4967.

5010. செய்யும் தொழில் எல்லாம் சீர்தூக்கிப் பார்க்கில் நெய்யும் தொழிலுக்கு நிகர் இல்லை.
Weaving praised.

5011. செய்வினை திருந்தச் செய்.
Do a thing as well as you can.

5012. செருப்பால் அடித்தாலும் திருட்டுக்கை நிற்காது.
A thievish hand is seldom cured.

5013. செருப்பால் அடித்துக் குதிரைக் கொடை கொடுத்தாற்போல.
Atoning an assault by a gift.

5014. செருப்பால் அடித்துக் குதிரையோடு தீவட்டி கொடுத்தாற் [போல.
Similar to preceding.

5015. செருப்புக்கு அச்சாரம் தரும்படி.
Advance payment according to value.

5016. செருப்பின் அருமை வெயிலில் தெரியும், நெருப்பின் அருமை குளிரில் தெரியும்.
Each has its value in proper season.

5017. செருப்புக்காகக் காலைத் தறிக்கிறதா?
Scraping the skull to fit the cap.

5018. செருப்புக் கொள்ளுகிறது காலுக்கோ தலைக்கோ?
Each has its place.

5019. செலவிற் குறைந்த வரவானால் சேமப்படுகிறது எப்படி?
Condemns extravagance.

5020. செலவு அதிகம் வரவு போதாது.
Similar to preceding.

5021. செலவில்லாச் செலவு வந்தால் களவில்லாக் களவு வரும்.
Extravagance leads to thefts.

5022. செலவு இல்லாத சிங்காரம் போல.
Splender without expenditure.

5023. செலவு உண்டானால் சேவகமுண்டு.
Sense and expenditure go together.

5024. செல்வோடு செலவு கந்தப்பொடிக்குக் காற்பணம்,
Encouraging extra expenditure.

---

5025. செல்வம் சொல்லுக்கு அஞ்சுமா ?
Wealth fears no commands.

---

5026. செல்வச்சிறுக்கி ஆம்படையான் செவ்வாய்க்கிழமை செத்தானும் வீடு வெறுமையாப்போமென்று வெள்ளிக்கிழமை எடுத்தாளாம்.
Foolish delay.

---

5027. செல்லம் சீரழியும்.
Indulgence condemned.

---

5028. செல்வம் சீரழிக்கும்.
Wealth ruins character.

---

5029. செல்லம் பரமண்டலத்தில் செல்லாது எல்லா மண்டலமும் செல்லும்.
No indulgence in heaven.

---

5030. செல்லம் சறுக்குதா வாசற்படி வழுக்குதா ?
It is indulgence that makes one slip.

---

5031. செல்லப்பிள்ளை சீலை உடாதாம் பிள்ளை பெறுமட்டும்.
An indulged child goes naked.

---

5032. செல்லாத பணம் என்றெண்ணாதே செட்டியார் இருக்கிறார் காட்டிக்கொள்.
Betraying an innocent person.

---

5033. செல்லாத காசு என்றைக்கும் செல்லாது.
Once out of currency—always so.

---

5034. செல்லாப்பணம் எங்கும் செல்லாது.
A ruined character.

---

5035. செல்லும் காசுக்கு வட்டமுண்டா ?
No discount on a current coin.

---

5036. செல்லுக்குச் சிரங்கு, சிறுக்கிக்கு அரையாப்பு, பார்க்கவந்த பரிகாரிக்குப் பக்கப்பிளவு.
All in the same box.

---

5037. செல்லும் செல்லாததுக்குச் செட்டியார் இருக்கிறார்.
Compare above.

---

5038. செல்லும் பொழுது செலுத்துவாய்ச் சிந்தையை.
Take hold of a good opportunity.

5039. செல்வம் உண்டாகும் காலம், செய்கை உண்டு வல்லமை உண்டு.
There is a time for everything.

5040. செல்வம் செருக்கித் திரட்டுப்பால் குமட்டுகிறது.
Effect of wealth on character.

5041. செல்வம் செருக்குகின்றது காசுக்கு வழியில்லை.
Splendour without means.

5042. செல்லுகளால் தினந்தோறும் வளர்க்கப்படாத புற்றுப்போல
Making no progress.

5043. செல்வப்பெண் சிரங்கநாயகிக்குச் சீதனம் வந்ததாம் வட
வோடு.
A sarcastic saying.

5044. செல்வப்பொருள் கொடுத்தால் குறையும், கல்விப்பொருள் குறையுமோ ?
Wealth *versus* learning.

5045. செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்.
The rich must help their relatives.

5046. செல்வம் நிலையில, சேட்டன் கீழ் இரு.
Wealth unreliable.

5047. செல்வன் சொல்லுக்கு அஞ்சான், வீரன் போருக்கு அஞ்சான்.
Compare above 5025.

5048. செவிடன் காதில் சங்கு ஊதினது போல.
Instruction without effect.

5049. செவிடனும் குருடனும் கூத்துப்பார்த்தாற்போல.
Incompetent critics.

5050. செவிடன் பாட்டுக்கேட்ட சம்பந்தம்.
Similar to preceding.

5051. செவிட்டிலே அறைந்தாலும் தேம்பி அழத்தெரியாது.
A very weak person.

5052. செவிடு இருந்தால் ஊமை இல்லையா ?
Deaf also dumb.

5053. சென்றவிடம் சிறப்பும் கொண்டவிடம் காணியும்.
Fame and wealth attending one.

5054. சென்ற காசுக்கு வட்டம் உண்டா ?
Compare above—on coins.

5055. சென்மக் குருடனுக்குக் கண்கிடைத்தது போல.
An unexpected boon.

5056. சென்ற காரியத்தைப் பார்த்து வரும் காரியத்தை அறி.
Judge the future from the past.

5057. சென்ற இடம் எல்லாம் சிறப்பே கல்வி.
Learning commended.

5058. சென்மத்தில் பிறந்தது செருப்பாலடித்தாலும் போகாது.
A natural defect seldom got rid of.

5059. சென்றும் செலவழியினும் சீரழிந்த குடித்தனம்.
A ruined family.

## சே.

5060. சேடனுக்கு ஏன் குரங்கு ?
It injures his work.

5061. சேத நினைவிற்குப் பூதம் சிரிக்கும்.
Evil thoughts agreeable to the evil one.

5062. சேணியனைக் கெடுக்க சாண்குரங்கு பத்தாதா ?
A little evil makes a great injury.

5063. சேம்பு கொய்யச் சிற்றரிவாள் ஏன் ?
Too big a tool.

5064. சேயின் முகம் பார்க்கும் தாயின் முகம்போல.
So tender and loving.

5065. சேராதவிடத்திலே சேர்ந்தால் வாராத துன்பம் வரும்.
Against evil company.

5066. சேர இருந்தால் செடியும் பகை, தூர இருந்தால் தோட்டி[யும் உறவு.
Familiarity condemned.

5067. சேரிடம் அறிந்து சேர்.
Seek good association.

5068. சேரியும் ஊரும் செல்வமும் கல்வியும்.
Wealth aad learning contrasted.

5069. சேர்க்கைக்குத் தக்க பழக்கம்.
Habits according to association.

5070. சேர்க்கை வாசனையா இயற்கை வாசனையா ?
Is it natural or acquired ?

5071. சேர்ந்தவர் என்பது கூர்ந்து அறிந்தபின்.
Test one's friendship.

5072. சேர்த்துவைத்துப் பசு கறக்கலாமா ?
Milk must be drawn daily.

5073. சேலைமேற் சேலைகட்டித் தேவரம்பை ஆனாலும், ஓலைமேல் எழுத்தாணி ஊன்றும் பெண் ஆகாது.
Condemns female education.

5074. சேற்றிலே புதைந்த ஆனையைக் காகமும் குட்டும்.
Everybody takes advantage of a helpless person.

5075. சேற்றிலே செங்கழுநீர் பூத்தாற்போல.
An agreeable surprise.

5076. சேற்றிலே முளைத்த செந்தாமரை.
Compare preceding.

5077. சேற்றிலே மேயும் பிள்ளைப் பூச்சிபோல.
So insignificant.

5078. சேற்றிலே நாட்டிய கம்பம்போல.
Not firm.

5079. சேற்றிலே கிடக்கிற எருமையைத் தூக்குவான் என் ?
It is so comfortable there.

5080. சேற்றால் எடுத்த சுவர்.
Of an inferior make.

5081. சேனைக்குப் பட்டமோ சேனாபதிக்குப்பட்டமோ ?
The head—not the body—is chief.

## சை.

5082. சைனைத் திரியேல்.
A good advice.

5083. சைகை அறியாதவர் சற்றும் அறியார்.
Importance of reading signs.

5084. சைவப்பழம் வில்வக்கிளை.
A religious saying.

5085. சைவ முத்தையாமுதலியாருக்குச் சமைத்துப்போட வள்ளுவப் பண்டாரம்.
Great pretensions ending in nothing.

## சொ.

5086. சொக்கட்டான், சூது, சதுரங்கம் இம்மூன்றும் துக்கமற்றார் செய்யுந்தொழில்.
Gambling for the well-to-do only.

5087. சொக்கநாதர் கோயிலுக்குப் புல்லுக்கட்டு கட்டினாற்போல.
A local saying.

5088. சொக்கனுக்குச் சட்டி அளவு.
A great gormandiser.

5089. சொக்கட்டானும் செட்டியும் தோற்றினாற்போல.
An unwelcome meeting.

5090. சொக்கட்டான் விளையாட்டு பொல்லாத சூது.
A certain kind of gambling.

5091. சொட்டைவாளைக் குட்டிபோல் துள்ளிவிழுகிறது.
In very good spirits.

5092. சொரியாத் தவளையும் வேட்டை ஆடுகிறதாம்.
An unusual feat.

5093. சொருகிக்கிடந்த அகப்பையும் சோறு அள்ளப் புறப்பட்டது.
A sudden display of liberality.

5094. சொல் அம்போ வில் அம்போ ?
Words more effective than arrows.

5095. சொல்லச் சொல்லப் பட்டி பெண்ணைப்பெற்றான்.
Curses the birth of a daughter.

5096. சொல்லச் சொல்ல மட்டி மண்ணைத் தின்கிறான்.
Said of a very stupid fellow.

5097. சொல்லாமல் இருக்கிறவனே பண்டிதன்.
Silence is golden.

5098. சொல்லாது பிறவாது அள்ளாது குறையாது ?
Nothing takes place without a cause.

5099. சொல்லிப்போகவேணும் சுகத்துக்கு, சொல்லாமற்போகவேணும் துக்கத்துக்கு.
Seasons of joy and sorrow.

5100. சொல்லின் உறுதி நல்ல நெறியே.
Never break your promise.

5101. சொல்லிச் செய்வார் சிறியோர், சொல்லாமற் செய்வார் பெரியோர், சொல்லியும் செய்யார் கசடர்.
Three classes of doers.

5102. சொல்லிக் கொடுத்த சொல்லும் கட்டிக் கொடுத்த சோறும் எதுவரையில் நிற்கும்.
Condemns temporary measures.

5103. சொல்லுக்கு அரிச்சந்திரன்போல.
Will never break his word.

5104. சொல்லுவார் எல்லாம் துணிவாரா நீப்பாய ?
Doing different from saying.

5105. சொல்லுகிறது ஒன்று செய்கிறது ஒன்று.
Similar to preceding.

5106. சொல்லுகிறவனுக்கு வாய்ச்சொல், செய்கிறவனுக்கு தலைச் [சுமை.
Compare above.

5107. சொல்லுக்கும் பொருளுக்கும் எட்டாதான் சோதிக்கும் சாதிக்கும் நடுவானவன்.
Wealth and influence essential.

5108. சொல்லும் சொல் ஆக்கமும் கேடும் தரும்.
The effect of a word.

5109. சொல்லும் பொருளும் தோன்றும் கல்வி.
The benefits of learning.

---

5110. சொல் வல்லனை வெல்லல் அரிது.
A clever talker not easily overcome.

---

5111. சொல்வளம் இல்லா நற்கதை சொல்லில் அதுவே துர்க்கதை.
Style affects matter.

---

5112. சொல்லுவார் சொன்னால் கேட்பாருக்கு புத்தியில்லையா ?
We must discriminate proffered counsel.

---

5113. சொல்வது யார்க்கும் எளிது, அரிதாம் சொல்லிய வண்ணம் செயல்.
Compare above.

---

5114. சொல்வது லேசு செய்வது அல்லவா பிரயாசம் ?
Similar to preceding.

---

5115. சொறிந்து தேய்க்காத எண்ணெயும், பரிந்து இடாத சோறும் பாழ்.
Insists on the manner of doing a thing.

---

5116. சொறியாக் கொடுத்த பசுபோல.
Quiet under treatment.

---

5117. சொற்பேச்சையும் கேளான் சுயபுத்தியும் இல்லை.
Both stupid and obstinate.

---

5118. சொற்றிறம் கூறல் கற்றவர்க்கு அழகு.
Effects of learning.

---

5119. சொற்பனங்கண்ட அரிசி சோற்றுக்காகுமா ?
It is imaginary—not real.

---

5120. சொற்கேளாப் பிள்ளையினால் குலத்துக்கு ஈனம்.
A disobedient child.

---

5121. சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை.
Things done by imitation.

---

5122. சொன்னதைச்சொல்லடி சுணைகெட்ட மூளி.
Asking a stupid woman to tell the truth.

---

5123. சொன்னது இருக்கச் சுரை பிடுங்குகிறாய்.
Calling attention to a neglected matter.

---

5152. சோற்றுக்குக் கேடும் பூமிக்குப் பாரமுமாய் இருக்கிறான்.
Said of a useless person.

5153. சோற்றைக் கொடுத்துக் கழுத்தை அறுக்கிறதா?
Shewing kinduess and betraying one.

5154. சோற்றுப்பானை உடைந்தால் மாற்றுப்பானை இல்லை.
So badly off.

5155. சோற்றைப்போட்டு மென்னியைப் பிடித்தாற்போல்.
Compare above.

## சௌ.

5156. சௌரியம் பேசேல்.
Against assuming a defiant tone.

## ஞா.

5157. ஞாபகம் இல்லை என்று எவன் சொல்வான் ஞானம் இல்லை என்று எவன் சொல்வான்.
All have a little memory and wisdom.

5158. ஞாயப்பிரமாணம் இல்லாத குருக்கள் வீண்.
An unjust Guru condemned.

5159. ஞானமும் கல்வியும் நாழி அரிசியிலே.
The essential character of food.

5160. ஞானம்முற்றி எலும்பாய்க் கழியுது.
Said of an over-wise person.

5161. ஞானம் எல்லாம் ஒருமுட்டை, உலகம் எல்லாம் ஒருகோட்டை.
Everything illusory.

5162. ஞானம் இல்லாச்சேயர்கள் ஆவின்கன்றிலும் அதிகமல்ல.
Foolish children compared to calves.

5163. ஞானம் தனத்தையும் கனத்தையும கொடுக்கும்.
Tamil estimate of wisdom.

5164. ஞானிக்கில்லை இன்பமும் துன்பமும்.
Sages have neither pain nor pleasure.

5165. ஞானிக்கு நரர் துரும்பு.
A sage despises ordinary men.

---

5166. ஞானிக்கும் மூடனுக்கும் சங்காத்தம் இல்லை.
No intercourse between sages and fools.

---

## ட.

5167. டம்பாச்சாரியாய்த் திரியாதே.
Against leading an extravagant life.

---

5168. டம்மாரக்காரனைபோல் அலையாதே.
Compare preceding.

---

## டா.

5169. டாம்பிக்கனை நம்பாதே.
The extravagant not to be trusted.

---

5170. டால்டம்மாரம் போட்டுக்கொண்டு போகாதே.
Condemns noisy show.

---

## டி.

5171. டில்லிக்கு ராஜா வென்றாலும் தல்லிக்கு பிட்டா.
Position cannot alter relationship.

---

## த.

5172. தகப்பன்வெட்டின கிணறென்று தலைகீழாய்விழலாமா?
Mere right cannot justify rashness.

---

5173. தகப்பனுக்கு இட்டது தலைச்சனுக்கு.
The law of primogeniture.

---

5174. தகப்பனுக்குக் காய்ச்சுகிற பாலிலே தடியைத் துவைக்கிற பிள்ளை.
Filial misconduct.

---

5175. தகப்பனுக்குக் கட்டகோவணம் இல்லை, மகன் தஞ்சாவூர் மட்டும் நடைப்பாவாடை போடச்சொன்னானாம்.
Father poor and son vain.

---

5176. தகப்பனைக் கொன்றபாவம், மாமியார் வீட்டில் ஆறு மாசம் இருந்தால் போகும்.
Such enmity between one's father and mother-in-law.

5177. தகப்பன் பட்டம் பிள்ளைக்கு அல்லவா ?
Compare above.

5178. தகப்பன் தேடக்கர்த்தன், பிள்ளை அழிக்கக் கர்த்தன்.
A miser father and a spendthrift son.

5179. தகப்பன் பட்டத்தை பிள்ளைக்குக்கட்டினால் தகப்பன் சாஷ்டாங்கதண்டம் செய்யவேண்டும் அல்லவோ ?
One should act according to circumstances.

5180. தக்கோன் எனத்திரி.
A good advice.

5181. தங்கச் சூரிக்கத்தியென்று அறுத்துக்கொள்ளலாமா ?
Value of a tool no excuse for its misuse.

5182. தங்கத்தைக்குவிக்கிறேன் என்றாலும், தன்புத்தி விடுகிறது இல்லையென்கிறான்.
Compare above.

5183. தங்கத்தூள் அகப்பட்டாலும் செங்கற்றூள் அகப்படாது.
Some common things rare and *vice versâ*.

5184. தங்கத்தை உருக்கி விட்டதுபோல.
So resplendent.

5185. தங்கப் பெண்ணே, தாராவே, தட்டான் கண்டால் பொன் என்பான், திராச்சிலேவைத்து நிறுவென்பான், எங்கும் போகாமல் இங்கேயே இரு.
Going to the opposite extreme.

5186. தங்கம் தரையிலே தவிடு பானையிலே.
Altered conditions of high and low.

5187. தங்கமும் பொன்னும் தரையிலே ஒரு காசு நாரத்தங்காய் உ[றியிலே.
Similar to preceding.

5188. தங்கமுடி சூட்டினாலும் தங்கள் குணம் விடார் கயவர்.
The base seldom reform.

5189. தங்கமுடி சூட்டினாலும் தங்குணம் விடார்.
Compare above.

5190. தங்கும் வியாழம் தன்னோடு மூன்று பேர்.
An astrological saying.

5191. தங்கம் புடத்தில் வைக்கப்பட்டாலும் தன்னிறம் போகாது
Affliction cannot change the noble.

5192. தங்கம் எல்லாம் தவிட்டுக்கு மாறுகிறது.
Said when the market is low

5193. தங்கச்சிப்பிள்ளை தன் பிள்ளை ஆனால் தவத்துக்குப் போவானேன்?
He is son-less.

5194. தசைகண்டு கத்தி நாட்ட வேண்டும்.
Have something to rely on

5195. தச்ச வாசல் இருக்கத் தாணித்த வாசலாலே புறப்படுகிறது.
Entering in by a false door

5196. தச்சன் கோணல் நிமிர்த்தான் தப்பிதச்சொல்லாகப் பேசாதே.
Counsels straightforwardness.

5197. தச்சன்பெண்சாதி தரையிலே, கொல்லன் பெண்சாதி கொம்பிலே.
Natural position for certain classes.

5198. தச்சனடித்த வாசலெல்லாம் தாழக் குனிகிறது.
See below

5199. தச்சன் பெண்சாதி அறுத்தால் என்ன, கொல்லன் பெண்சாதி கூலிக்கு அறுத்தால் என்ன?
Afflictions visit all alike

5200. தச்சன் வீட்டிலே தயிரும், எச்சன் வீட்டிலே சோறும் எப்படிச்சேரும்?
Seeking things in unlikely places.

5201. தச்சன் வீட்டிலே பால்சோற்றை நத்தாதே, வெள்ளாளா?
Similar to preceding.

5202 தச்சன் அடித்த தலைவாசல் எல்லாம் உச்சியிடிக்க உலாவித் திரிந்தேன்.
Blames the carpenter's workmanship.

5203. தச்சன் அடிக்கக் கடா இழுத்தது
An unsuccessful work.

5204. தஞ்சாவூர் எத்தனும் திருவாரூர் எத்தனும் கூடினாற்போல.
Two notorious rogues combining.

5205. தஞ்சம் என்றுவந்தவனை வஞ்சித்தல் ஆகாது.
Against defrauding a shelter seeker.

5206. தடவிப்பிடிக்க மயிரில்லை அவன் பெயர் கூந்தலழகி.
Title not in keeping with character.

5207. தடவிப் பிடிக்கக் கையில்லை அவன் பெயர் சௌரியப்பெருமாள்.
Similar to preceding.

5208. தடியெடுத்தவன் எல்லாம் வேட்டைக்காரன்.
Popular notion of one's fitness.

5209. தடிக்கு மிஞ்சின மிடாவா ?
Said of a powerful man's victim.

5210. தடிக்கு அஞ்சிக் குரங்கு ஆடினது போல.
Obeying from mere fear.

5211. தடிக்கு மிகுந்த மிடாவானால் என்ன செய்யலாம் ?
Said of a powerful opponent.

5212. தடுக்கின் கீழ் நுழைந்தால் கோலத்தின் கீழே நுழைகிறது.
One as clever as the other.

5213. தட்டான் தாய்ப் பொன்னிலும் மாப்பொன் திருடுவான்.
The goldsmith's thievish character.

5214. தட்டானும் செட்டியும் ஒன்றானால் தங்கங்கொடுத்தவன் வாயிலே மண்.
One abets the other's crime.

5215. தட்டானும் செட்டியும் கண், சட்டியும் பானையும் மண்.
Selfish views of others' affairs.

5216. தட்டானும் செட்டியும் தலைப்பட்டாற்போல.
Two rogues combining to cheat.

5217. தட்டானைச் சேர்ந்த தருதலை.
Compare above.

5218. தட்டான் கொசு தடுமாறுது போல.
In great perplexity.

5219. தட்டான் தாழப்பறந்தால் தப்பாமல் மழைவரும்.
Prognostication of rain.

---

5220. தட்டானைத் தலையில் அடித்து, வண்ணானை வழிபறித்தது.
A double outrage.

---

5221. தட்டாரச்சித்து, தறிச்சித்து, வண்ணாரச்சித்துக்கு வராது.
The dhoby the greatest rogue.

---

5222. தட்டானிடத்தில் இருக்கிறது, அல்லது கும்பிடு சட்டியில் இருக்கிறது.
Said of a stolen article.

---

5223. தட்டாரசித்து தணாயிலே, வண்ணாரசித்துக்கு வகையில்லை.
Dhobies greater rogues than goldsmiths.

---

[ல்லை.
5224. தட்டிப்போட்ட விராட்டியை புரட்டிப்போடக் காரணவரி
Complains of want of helpers.

---

[டன்.
5225. தட்டிப்பேச ஆள் இல்லாவிட்டால் தம்பி சண்டப் பிரசண்
A great hero when there is none to oppose.

---

5226. தட்டுக் கெட்டு முறுக்குப்பாய்ஞ்சு கிடக்கிறது.
In a sad plight.

---

5227. தணிந்த வில்லுத்தான் தைக்கும்.
Recommends humility.

---

5228. தண்ட சோற்றுக்காரா, குண்டுபோட்டு வாடா.
A sarcastic invitation.

---

5229. தண்டாந் தமுக்கு தலைக்கு இரண்டு அமுக்கு.
A drummer's saying.

---

5230. தண்டிலே போனால் இரண்டிலே ஒன்று.
A soldier's life very uncertain.

---

5231. தண்டிற்போனால் இரட்டிப்புச் சம்பளம்.
Double pay for active military service.

---

5232. தண்டு ஒன்று இலை மூன்று ஆனை அடா மந்திரி.
A certain vegetable described.

---

5233. தண்ணீர்க்குடம் உடைந்தாலும் ஐயோ, தயிர்க்குடம் உடைந்தாலும் ஐயோ.
A loss is a loss, whatever is lost.

---

5234. தண்ணீரிலே அடி பிடிக்கிறது.
A foolish and unsuccessful act.

5235. தண்ணீரின் கீழே குசு விட்டால் தலைக்குமேலே.
A natural law applied in a vulgar way.

5236. தண்ணீரிலேயா தன்பலங் காட்டுகிறது?
Not when one is sure to lose.

5237. தண்ணீரில் இருக்கிற தவளை நீர் குடித்ததைக் கண்டதார், குடியாததைக் கண்டதார்?
Certain cases impossible to detect.

5238. தண்ணீர் வெந்நீரானாலும் நெருப்பை அவிக்கும்.
Water always quenches fire—nature never changes.

5239. தண்ணீரிலே விளைந்த உப்புத் தண்ணீரிலே கரையவேண்டும்.
The same thing producing and destroying.

5240. தண்ணீரில் அமுங்கின முட்டை உப்புப்போடக் கிளம்பும்.
A natural fact.

5241. தண்ணீரும் மூன்று பிழை பொறுக்கும்.
The extent of forgiveness.

5242. தண்ணீரும் பாசியும் கலந்தாற்போல.
In union and yet distinct.

5243. தண்ணீர் குடித்தவயிறும் தென்னோலையிட்ட காதும் சரி.
They expand.

5244. தண்ணீரையும் தாயையும் பழிக்கலாமா?
Against despising one's mother and water.

5245. தண்ணீரில் இறங்கினால் தவளை கடிக்கும் என்கிறான்.
Said of a very timid person.

5246. தண்ணீரில் இருக்கிற தவளையைத் தரையில் எடுத்து விட்டதுபோல்.
Putting one out of one's element.

5247. தண்ணீரில் இறந்தவரிலும் சாராயத்தில் இறந்தவர் அதிகம்.
Liquor kills more than water.

5248. தண்ணீரும் கோபமும் தாழ்ந்த இடத்திலே.
Water and anger in low places.

5249. தத்திக் குதித்துத் தலை கீழே விழுகிறது.
Said of an arrogant behaviour.

5250. தத்திவிழுந்தால் தரையும் பொறுக்காது.
Pride goeth before a fall.

5251. தத்துவம் அறிந்தவன் தவசி.
Religious knowledge leads to asceticism.

5252. தந்தவன் இல்லையென்றால் வந்தவன் வழியைப்பார்க்கிறான்.
A giver's refusal.

5253. தந்தனா என்கிறது பாட்டுக்கு அடையாளம்.
A musical commencement.

5254. தந்தாலொன்று தராவிட்டாலொன்று.
Behaviour according to circumstances.

5255. தந்தைசொல் மிக்க மந்திரமில்லை.
A father's counsel extolled.

5256. தந்தை எவ்வழி அவ்வழி புதல்வன்.
As father so son—Law of heredity.

5257. தப்பில் ஆனவனை உப்பிலே போடு.
Rectify one's faults.

5258. தப்பும் துப்பும் தாறுமாறும்.
Full of error and confusion.

5259. தப்பு அடித்தவன் தாதன், சங்கு ஊதினவன் ஆண்டி.
Each man at his work.

5260. தம் இனம் தம்மைக் காக்கும், வேலி பயிரைக் காக்கும்.
Relations are like a good fence.

5261. தமிழுக்குஇருவர் தத்துவத்துக்கு ஒருவர் ஆகும்.
Tamil *versus* Tatvam.

5262. தமூக்கு மூக்குப் போனாலும் எதிரிக்குச் சகுனப்பிழை வேண்டும்.
Resist your foe on any account.

5263. தம்பி பிள்ளையாண்டான் அலுவல் தலைசொறிய நேரமில்லை.
A lazy fellow despised.

5264. தம்பி உடையவன் படைக்கு அஞ்சான்.
A brother is a great support.

5265. தம்பி கால்நடை, பேச்சு பல்லக்கிலே.
Condition poor but talk grand.

5266. தம்பிப் பேச்சை தண்ணீரில் எழுதவேண்டும்.
Most unreliable.

5267. தம்பி பிடித்த முயலுக்கு மூன்றே கால்.
Said of an obstinate fellow.

5268. தம்பிமொண்டது சமுத்திரம் போல.
Said of one prone to self-boasting.

5269. தம்பி உழுவான் மேழி எட்டாது.
One who makes vain excuses.

5270. தம்பி பிறக்கத் தலைமட்டம் ஆயிற்று.
Said of one who has brought misery.

5271. தம்பி சமர்த்தன் உப்பில்லாக் கஞ்சி கலம் குடிப்பான்.
A great glutton.

5272. தம்பி சோற்றுக்கு சூறுவளி, வேலைக்கு வாராவழி.
Eager to eat but not to work.

5273. தயிருக்குச் சட்டி ஆதரவு, சட்டிக்குத் தயிர் ஆதரவு.
Mutual dependence.

5274. தயிர்ப் பானையை உடைத்துக் காகத்துக்கு அமுது இட்டாற் [போல்.
Casting pearls before swine.

5275. தாத்தா வாங்கிக் கொள்ளுகிறாயா, தலையை முழுகிப்போட்டு போகட்டுமோ ?
Addressed to a hopeless debtor.

5276. தரித்திரனுக்குத் தன்புதை கிடைத்தாற் போல்.
The poor coming upon a treasure.

5277. தரித்திரனுக்கு விஷம் கோஷ்டி.
The poor usually ill-natured.

5278. தரித்திரப் பட்டாலும் தயிரியம் விடாதே.
Advises fortitude under affliction.

5279. தரித்திரம் பிடித்தவன் தலைமுழுகப் போனானாம் அப்போது பிடித்ததாம் மழையும் தூறலும்.
Misfortunes never come single.

5280. தருதலைக்கு ராசா சவுக்கடி.
A rod for the fool's back.

5281. தருமத்தை பாபம் வெல்லாது.
Sin cannot overcome virtue.

5282. தருமத்துக் கழிவு சற்றும் வராது.
See below.

5283. தருமம் தலைகாக்கும் தலையை மயிர் காக்கும்.
Virtue will never lose its reward.

5284. தருமமே தலைகாக்கும்.
Compare preceding.

5285. தருமமே செயம்.
Virtue will conquer.

5286. தரும புத்திரர்களுக்குச் சகுனி தோன்றினாற்போல.
An opponent to a family.

5287. தருமத்துக்குத் தாழ்ச்சி வராது.
Compare above.

5288. தருமத்துக்குத் தானம் பண்ணுகிற மாட்டைப் பல்லைப் பிடித்துப் பதம் பார்க்கிறதா ?
Looking a gift horse in the mouth.

5289. தலை அளவும் வேண்டாம், அடி அளவும் வேண்டாம் குறுக்கே அள அடா படியை.
An angry person's command.

5290. தலை இருக்கிற இடத்தில் கழுத்து வரட்டும் பார்த்துக்கொள்வோம்.
Said of a conceited boy.

5291. தலை இருக்க வால் ஆடுமோ ?
Effect of a superior's presence.

5292. தலை இடியும் காய்ச்சலும் தனக்கு வந்தால் தெரியும்.
Complaining of another's lack of sympathy.

5293. தலை இடியும் சங்கடமும் தனக்கு வந்தபின் தெரியும்.
Similar to preceding.

5291. தலை எழுத்திற்கு தலையைச் சிரைத்தாற் போகுமா ?
Human efforts cannot overcome fate.

5295. தலை எழுத்தை அரியென்று சொல்லுவார் அதல்ல.
Vishnu has nothing to do with fate.

5296. தலை யோகத் தவஞ்செய்தாலும் கூடுகிற காலம்வந்துதான் கூடும்
Destiny *versus* penance

5297. தலைக்குத் தலை நாட்டாண்மையா யிருக்கிறது.
When each person plays the master.

5298. தலைக்குமேலே ரோக காட்டுகிறது.
Too aspiring.

5299. தலைக்குத் தலை பெரியதனம், உலைக்கு அரிசி இல்லை.
Authority great but supply scarce.

5300. தலைக்குத் தலை நாயகம.
Compare above.

5301. தலைக்கு முடியோ காலுக்கு முடியோ ?
Each in its proper place.

5302. தலைக்கு எறிறல் தனக்குத் தெரியும்.
Each knows his own pain best.

5303. தலை சுழன்றவனுக்கு உலகமெல்லாம் சுற்றும்.
It is the mind that makes the world.

5301. தலை சொறியக் கொள்ளி தானே வைத்துக்கொண்டாற் போல.
Securing one's own ruin.

5305. தலைச்சன் பிள்ளைக்காரி இடைச்சன் பிள்ளைக்காரிக்கு மருத் துவம் பார்த்தாற் போல.
A raw fellow pretending to advise another.

5306. தலைச்சன் பிள்ளை பெற்றவளுக்குத் தாலாட்டும் ஆம்படை யான் செத்தவளுக்கு அழுகையும் தானே வரும்.
Each reaps his own reward.

5307. தலைச்சுமை தந்தானென்று தாழ்வா யெண்ணாதே.
Recommends patience.

5308. தலைச்சன் பிள்ளைக்காரி இடைச்சன் பிள்ளைக்காரிக்குப் புத்திசொன்னாளாம்.
Compare above.

5309. தலைச்சன் பிள்ளைக்காரிக்கு இல்லாத தண்டையும் சதங்கையும் இடைச்சன் பிள்ளைக்காரிக்கு வந்ததா?
The junior should not be preferred to the senior.

5310. தலை தெரியாமல் தத்தித்தடவி விழுகிறது.
Thoughtless behaviour.

5311. தலைநோவும் காய்ச்சலும் தனக்குவந்தால் தெரியும்.
Compare above.

5312. தலைநோவுக்குத் தலையணையைத் திருப்பிப் போட்டால் தீருமா?
Discourages superficial remedies.

5313. தலைப்புறத்தைத் தந்தால், தருவேன் மருந்துப் பையை.
A doctor's demand.

5314. தலைப்பிள்ளை ஆண், தப்பினால் பெண்.
The hope of parents.

5315. தலை மயக்கம் சர்வ மயக்கம்.
Effect of giddiness.

5316. தலைமாட்டிற்குக் கொள்ளி தானே தேடிக்கொண்டாய்.
You have brought about your own ruin.

5317. தலைமுறை தலைமுறையாய் மொட்டை, அவன் பெயர் கூந்தலழகி.
Title *versus* qualification.

5318. தலை முறையில்லாத தாழ்வு.
An unprecedented humiliation.

5319. தலைமேலே அம்பு பறந்தாலும் நிலையிற் பிரியல் ஆகாது.
Counsels fortitude in danger.

5320. தலை மேலே தலை யிருக்கிறதா?
There can be only one to lead.

5321. தலை மேலே இடித்தாலும் தான் குனியான்.
A stubborn fellow.

5322. தலை மேலோடின வெள்ளம் சாண் ஓடி என்ன, முழம் ஓடி என்ன?
In a great calamity, a little evil is trifling.

5323. தலைமொட்டை, கூந்தலழகி என்று பெயர்.
Compare above.

5324. தலையாரியும் அதிகாரியும் ஒன்றானால் சம்மதித்தபடி திருடலாம்.
If two agree, theft is easy.

5325. தலையாலே மலை பிளப்பான்.
Said of a headstrong fellow.

5326. தலையில் எழுத்து இருக்கத் தந்திரத்தால் வெல்லலாமா?
Frauds *versus* fate.

5327. தலையிலே பிடித்த பிறகா தாழக்குனிகிறது?
Submitting when it is too late.

5328. தலையில் வரும் மயக்கம் சருவமயக்கம்.
Compare above.

5329. தலையில் இடித்தபின் தாழக் குனிவான்.
Said of one who yields at discretion.

5330. தலையும் தலையும் பொருந்தினால் மலையும் வந்து பொறுக்கும்.
The effect of mutual reconciliation.

5331. தலையைத் தடவி மூளையை உரியவேண்டும்.
Recommends stratagems.

5332. தலையைத்தடவி மூளை உரிஞ்சுகிறவன் போல.
Compare above.

5333. தலையை நனைத்து ஆச்சுது, கத்தியும் வைத்து ஆச்சுது.
Ready for execution.

5334. தலையைத் திருகி உரலிலே போட்டிடிக்கச்சே, சங்கு சங்கரா கடுக்கன் உடைந்துபோகப் போகிறதென்றானாம்.
So stupid.

5335. தலையோடே வந்தது தலைப்பாகையோடே போயிற்று.
Said of a rogue.

5336. தலைவன் நிற்கத் தண்டு நிற்கும், தலைவன் மயங்கச் சர்வமும் மயங்கும்.
The effect of a general on his army.

---

5337. தலைவலியும் பசியும் தனக்குவந்தால் தெரியும்.
Compare above.

---

5338. தலை வலிக்குத் தலை அணையைத் தானே மாற்றிப் போட்டாற்போல.
Applying useless remedies.

---

5339. தலைவன் சொற் கேள், நன்னெறி தவறேல்.
Good counsel.

---

5340. தலைவெட்டிச் சமுத்திரமேற் போடலாமா?
It will lead to detection.

---

5341. தவசிப்பிள்ளை நமசிவாயம் கையாசாரம்.
Said of a liberal cook.

---

5342. தவசிக்குத் தயிருஞ்சாதமும் விசுவாசிக்கு வெந்நீரும் பருக்கையும்.
Treatment not according to deserts.

---

5343. தவசுக்குத் தனிமையும் தமிழுக்குத் துணையும்.
The Tamil language *versus* penance.

---

5344. தவசே அணிகலன், தாழ்மையே மேன்மை.
Penance and humility extolled.

---

5345. தவத்துக்கொருவர் கல்விக் கிருவர்.
Compare above.

---

5346. தவத்தளவே யாகும் தான்பெற்ற செல்வம்.
Prosperity in proportion to penance.

---

5347. தவத்தி லிருந்தால் தலைவனைக்காணலாம்.
Way of approach to God.

---

5348. தவளை தாமரைக்குச் சமீபமாக இருந்தும் அதின் தேனை உண்ணாது.
Fools do not profit by available knowledge.

---

5349. தவளை தன் வாயாற் கெடும்.
By thy mouth thou shalt be condemned.

---

5350. தவிடு தின்பவனை அமுது தின்னச் சொன்னாற்போல.
Suddenly altereng one's habits.

5351. தவிடு தின்பவனை எக்காளம் ஊதச் சொன்னாற்போல.
To make one do an impossible thing.

5352. தவிட்டை நம்பிப்போகச் சம்பா அரிசியைக் காகம் கொண்டு போயிற்று.
Relying on the inferior and losing the superior.

5353. தவிட்டுக்கு வந்த கை தான் தனத்துக்கும் வரும்.
Great thefts begin from small ones.

5354. தழைத்த மரத்துக்கு நிழல் உண்டு, பிள்ளை பெற்றவளுக்குப் பால் உண்டு.
Fruitfulness according to condition.

5355. தள்ளத் தள்ளத் தாழ்ப்பாளை, மெள்ள மெள்ளத் திறப்பான் [ஏன் ?
Undoing what is done.

5356. தள்ளரிய தாறு வந்து தாய் வாழையைக் கெடுத்தாற்போல.
Child ruining its parent.

5357. தள்ளிப்பேசினாலும் தழுவிக் குழைகிறது.
Clinging even when cast off.

5358. தள்ளத் தள்ளத் தாழ்ப்பாளைப் பிடிப்பானேன் ?
Compare above.

5359. தனக்குக் கண்டு தானம் வழங்கு.
Charity begins at home.

5360. தனக்குப் பிறந்தபிள்ளை தவிட்டுக்கு அழுகிறதாம், ஊரார் பிள்ளைக்குக் கூட்டுக் கலியாணம் செய்கிறானாம்.
Neglecting one's own and nourishing strhngers.

5361. தனக்குச் சந்தேகம், அடைப்பக்காரனுக்கு இரட்டைப் படியாம்.
Though badly off, makes great promises.

5862. தனக்கு அழகு மொட்டை, பிறர்க்கு அழகு சொண்டை.
Ideas of the beautiful never the same.

5363. தனக்கு மிஞ்சினது தர்மம்.
Only a surplus may be spent in charity

5364. தனக்கு மிஞ்சினது அல்லவா தர்மம்?
Another form of preceding.

---

5365. தனக்கென்ன வென்றிருக்கல் ஆகாது நாய்க்குச் சோறு இல்லையாயின்.
Must attend to the needs of one's dependents.

---

5366. தனக்கென்று சொல்ல நாய் வெடுக்கென்று பாயும்.
The nature of dogs.

---

5367. தனக்கு மூக்குப்போனாலும் எதிரிக்குச் சகுனப்பிழை வேண்டும்.
Revenging one's self even at one's risk.

---

5368. தனக்கு என்றால் பிள்ளையும் களைவெட்டும்.
Self-interest supreme.

---

5369. தனக்குத் தகாத காரியத்திற் பிரவேசிக்கிறவன் குரங்கு பட்டபாடு படுவான்.
Evil of intermeddlesomeness.

---

5370. தனக்கு என்றால் புழுக்கை கலம் கழுவி உண்ணாள்.
A slave girl is clean only from necessity.

---

5371. தனக்கு உகந்த ஊணும், பிறர்க்கு உகந்த கோலமும்.
Each for his own wants.

---

5372. தனக்குத் தானே கனியாத பழத்தைத் தடிகொண்டடித்தாற் கனியுமா?
Forcing what ought to be spontaneous.

---

5373. தனக்குப் பின்னால் வாழ்தாலென்ன கெட்டாலென்ன?
Indifferent as to what happens after one's death.

---

5374. தனக்குப் பெரியானைத் தடிகொண்டடிக்கிறது.
Impertinence to one's superiors.

---

5375. தனக்கு என்று இருந்தால் சமயத்துக்குதவும்.
Nothing like having one's own.

---

5376. தனக்குத் தகாத காரியம் செய்தால் ஆருக்கும் பிராண சேதத்துக்கு வரும்.
Misbehaviour causes evil.

---

5377. தனக்கு ஆகாதபானை உடைந்தால் என்ன, இருந்தாலென்ன?
Said of the fate of one disliked.

---

5378. தனக்குப் பின்தானம்.
Compare above.

---

5379. தனக்குப் பின்னால் அகம் நிமிர்ந்து என்ன கவிழ்ந்து என்ன?
Compare above.

---

5380. தனக்கு என்று ஒருத்தி இருந்தால் தலைமாட்டில் இருந்தழுவாள்.
Recommends having a wife always.

---

5381. தனக்குத் தவிடு இடிக்கத் தள்ளாது ஊருக்கு இரும்பு அடிக்கத்தள்ளும்.
A weak fellow attempting great things.

---

5382. தனக்கு என்று அடுப்பு மூட்டித் தான் வாழும் காலத்தில் வயிறும் சிறக்கும் மதியும் பெருகும்.
Care develops contentment and good sense.

---

5383. தனி வழியே போனவளைத் தாரமென்று எண்ணாதே.
Don't trust a wife who has abandoned you.

---

5384. தன் இச்சையை அடக்காவிட்டால் அது தன்னையே ஆளும்.
Desire ungoverned will govern you.

---

5385. தன் இனம் தன்னைக்காக்கும் வேலி பயிரைக்காக்கும்.
Relations are a protecting fence.

---

5386. தன் உயிரைப்போல மன் உயிரையும் காக்க வேண்டும்.
Love thy neighbour as thyself.

---

5387. தன் உயிரைத் தான் தின்கிறான்.
Ruining oneself.

---

5388. தன் ஊருக்கு அன்னம் பிற ஊருக்குக் காகம்.
One thing at home and the opposite abroad.

---

5389. தன் ஊர்ச் சுடுகாட்டுக்கும் அயல் ஊர் ஆற்றுக்கும் அஞ்ச வேண்டும்
Certain things to be feared.

---

5390. தன் ஊருக்கு ஆனை அயல் ஊருக்குப் பூனை.
Hero at home and coward abroad.

---

5391. தன் ஊருக்குக் காளை அயல் ஊருக்குப் பூனை.
Similar to preceding.

---

5392. தன் காரியதுரந்தரன் பிறர் காரியம் வழவழவென்று விடுகிற வன்
Great interest in one's own affairs.

---

5393. தன் காரியம் என்றால் தன் சிலையும் பதைக்கும்.
Similar to preceding.

---

5394. தன் காரியம் பாராதவன் சதையால் ஒரு புழு புழுப்பான்.
Recommends attention to one's affairs.

---

5395. தன் காற் பெருவிரலைப்பார்த்து நடக்கவேண்டும்.
Be circumspect.

---

5396. தன் காரியம் புலி.
The very essence of selfishness.

---

5397. தன் கீர்த்தியை விரும்பாதவளைத் தள்ளிவிடு.
An unchaste wife.

---

5398. தன் குற்றம் பார்ப்பவர் இங்கு இல்லை.
Everyone overlooks his own faults.

---

5399. தன் குற்றம் தனக்குத் தெரியாது.
One is blind to one's own faults.

---

5400. தன் குற்றம் இருக்கப் பிறர் குற்றம் பார்க்கிறதா ?
Pulling out the mote in the brother's eye.

---

5401. தன் குஞ்சென்று வளர்க்குமாம் குயிற் குஞ்சைக் காகம்.
The habits of crows.

---

5402. தன் சோறு தின்று தன் புடவை கட்டி வீண்சொல் கேட்க விதியா ?
Why incur unmerited abuse ?

---

5403. தன் தார தார, யாத்ரா புத்திரன்.
A very distant relationship.

---

5404. தன் நிலத்தில் முயல் தந்தியிலும் வலிது.
Everyone strong in his own element.

---

5405. தன்னிழல் தன்னைக்காக்கும்.
One must have one's own protection.

---

5406. தன் நெஞ்சறியாத பொய் இல்லை.
Every lie is a conscious lie.

5407. தன் நோய்க்குத் தானே மருந்து.
Patient as remedy for his disease.

5408. தன் பலம் கொண்டு அம்பலம் ஏறவேண்டும்.
Recommends self-exertion.

5409. தன் பணம் செல்லா விட்டால் தாதனைக் கட்டி அடிக்கிறது.
Wreaking one's wrath on the poor.

5410. தன் பல்லைப் பிடுங்கிப் பிறர் வாயில் வைக்கலாமா?
Intention kind but act disagreeable.

5411. தன் பல்லைக் குத்திப் பிறர் மூக்கில் வாசம் காட்டுகிறது போல.
Exposing one's defects.

5412. தன்பானை சாயப் பிடிக்கிறதில்லை.
Never negligent of one's interests.

5413. தன்பாவம் தன்னோடே.
Each must bear his own guilt.

5414. தன் பிள்ளைக்குப் பதைக்காதவள் சக்களத்திப் பிள்ளைக்குப் பதைப்பாளா?
A woman without maternal feelings.

5415. தன் பிள்ளையைத் தான் அடிக்கத் தலையாரியைச் சீட்டுக் கேட்கிறதுபோல.
Why ask permission to do what is lawful.

5416. தன் பெண்டாட்டியைத் தான் அடிக்கத் தலையாரியைச் சீட்டுக் கேட்கிறதுபோல.
Compare above.

5417. தன் மனம் பொன் மனம்.
Self-justification.

5418. தன் முதுகு தனக்குத் தெரியவில்லை.
Does not see his own faults.

5419. தன் வயிற்றைத் தான் உலவிக்கலாமா?
One should not shame oneself.

5420. தன் வாயாலே தான் கெட்டான்.
Your words will judge you.

5421. தன் வாயால் தான் கெட்டதாம் ஆமை.
Similar to preceding.

5422. தன் வாய்க்கஞ்சியைக் கவிழ்த்துப் போட்டான்.
Lost his livelihood through his own conduct.

5423. தன் வாய்ச் ஸ்ரீதேவி முன்வாயிலே.
One's prosperity is in one's mouth.

5424. தன் வினை தன்னைச் சுடும், ஓட்டப்பம் வீட்டைச் சுடும்.
One reaps what one sows.

5425. தன் வீட்டுக் கதவைப் பிடுங்கி அயல் வீட்டுக்கு வைத்தாற் [போல.
Doing a self-destructive deed.

5426. தன் வீடு விளக்கென்று முத்தம் இடலாமா?
Possession no pretext for abuse.

5427. தன் வீடு விளக்கென்று முத்தம் இட்டாற் சுடாதா?
Compare preceding.

5428. தன் வீடு தவிர அசல் வீட்டுக்கு மேட்டுவரி என்கிறான்.
A selfish announcement.

5429. தன் வீட்டுக் கதவைப் பிடுங்கி அசல் வீட்டுக்கு வைத்து விட்டு விடுகிற மட்டும் நாய் ஓட்டினதுபோல.
Compare above.

5430. தன் வீட்டு ஆம்படையான் தலைமாட்டிலும் அசல்வீட்டு ஆம்படையான் கால்மாடு நலம்.
An unfaithful wife's preference.

5431. தன் வீட்டுக்கு வந்த விருந்தாளியை அசல் வீட்டுக்குப் போகச்சொன்னால் போவானா?
Hospitality commended.

5432. தன்னவன் தனக்கானவனானால் தலைப் பந்தியிலிருந்தாலென்ன கடைப் பந்தியிலிருந்தாலென்ன?
Advantage of having a friend in a leader.

5433. தன்னாலே தான் கெட்டால் அண்ணாவியார் என்னசெய்வார்?
Never blame others for your own faults.

5434. தன்னுயிர் கருப்பட்டி அருமை.
One's life dear to one.

5435. தன்னை அறியாச் சன்னதமுண்டா?
Self-forgetful arrogance.

---

5436. தன்னைப் பணிவாரைத் தான்பணியக் காலம் வந்தது.
Altered condition of one's circumstances.

---

5437. தன்னைப் புகழ்த்தகும் புலவோர்க்கே.
Only poets deserve praise.

---

5438. தன்னைப் புகழாத கம்மாளனும் இல்லை.
None free from self-praise.

---

5439. தன்னை அறிந்தவன் தானே தலைவன்.
Self-knowledge commended.

---

5440. தன்னை அறியாத சன்னதம் இல்லை.
Similar to above.

---

5441. தன்னை அறிந்தால் தலைவனை அறியலாம்.
"To know God, know thyself."

---

5442. தன்னைக் காக்கிற் கோபத்தைக் காக்கவேண்டும்.
Give no room to anger.

---

5443. தன்னைக் கொல்ல வந்த பசுவைக் கொல்லு.
Urges self-defence.

---

5444. தன்னைச் சிரிப்பானைத் தான் அறியான்.
Oblivious of one's own ridiculousness.

---

5445. தன்னைப் பெற்றவள் கொடும்பாவி, தன் பெண்ணைப்பெற்றவள் மகராசி.
Wife preferred to mother.

---

5446. தன்னைப் பெற்ற தாய் இண்ணிப் பிச்சை வாங்கச்சே தங் கதாலே சரப்பளி தொங்க ஆடுதாம்.
Enjoying luxury while one's mother has to beg her food.

---

5447. தன்னை அறிந்து பின்னைப் பேசு.
Self-knowledge before speech.

---

5448. தன்னைச் சிரிப்பது அறியாதாம் பல்லாவரத்துக் குரங்கு.
Compare above.

---

5449. தன்னைத் தானே தான் பழிக்குமாம் தென்னமரத்திலே குரங்கு இருந்து.
Some ridicule themselves.

5450. தன்னைப் புகழ்வானும், சாணேறி நிற்பானும், பொன்னைப் புதைத்துவைத்துப் போவானும் பேய்.
Certain human demons.

5451. தன்னை அழுத்தினது சமுத்திரம்.
Being drowned in the sea.

## தா.

5452. தாகமிருக்கிறது இறக்கமில்லை.
Desire without capability.

5453. தாங்கித் தாங்கிப் பார்த்தால் தலைமேலேறுகிறான்.
Taking advantage of my forbearance.

5454. தாங்குகிற ஆளுண்டு தளர்ச்சி உண்டு.
Where there is help, there is also need.

5455. தாசரி தப்பு தண்டவாளத்துக்குச் சரி.
Cannot be mended.

5456. தாசிக்குப் பணையங்கொடுத்தால் தகப்பனும் போகலாம் பிள்ளையும் போகலாம்.
All that the prostitute wants is money.

5457. தாடிக்குப் பூ சூடலாமா?
An unsuitable ornament.

5458. தாடி பற்றிக்கொண்டு எரியச்சே சுருட்டுக்கு நெருப்புக் கேட்டானும்.
Unmindful of another's affliction.

5459. தாட்சிணியம் தன நாசம்.
Liberality is expenditure of wealth.

5460. தாட்டோட்டக்காரனுக்குத் தயிரும் சோறும், விசுவாசக்காரனுக்கு வெந்நீரும் பருக்கையும்.
The hypocrite better off than the truly devout.

5461. தாட்டோட்டக்காரனைக் கூடுவதிலும் தனியே இருப்பது [நலம்.
Avoid blustering hypocrites.

5462. தாட்டோட்டக்காரனுக்குத் தயிரும் சோறும், கூட்டாட்டக் காரனுக்குக் கூழும் தண்ணீரும்.
Compare above.

5463. தாதராட்டம் திருப்பதியிலே.
Being sacred to Vishnu.

5464. தாதனும் பறையனும்போல.
So dissimilar.

5465. தாதன் கரத்தில் அகப்பட்ட குரங்கைப்போல் அலைகிறான்.
Knocked about hither and thither.

5466. தாது அறியாதான் பேதை வைத்தியன்.
Feeling the pulse—essential to native doctors.

5467. தாதும் இல்லை பிறாதும் இல்லை.
A case which is not reported.

5468. தாபரம் இல்லா இளங்கொடிபோல.
An unsupported weakling.

5469. தாமதம் தாழ்வுக்கு ஏது.
Delay condemned.

5470. தாமரை இலைத் தண்ணீர்போல் ததும்புகிறான்.
Unsettled and unsteady.

5471. தாமரை ஜலம்போலே தவிக்கிறான்.
Similar to preceding.

5472. தாம்பும் அறுதல் தோண்டியும் பொத்தல்.
Without reliable means.

5473. தாயில்லா தகப்பன் தாயாதி.
When a father becomes a cousin.

5474. தாயில்லாத பிள்ளை ஊருக்காகுமா ?
Said of a motherless child.

5475. தாயின் முகம் பார்க்கும் சேயின்முகம் போல.
So sympathetic towards each other.

5476. தாயும் தகப்பனும் தள்ளிவிட்ட காலத்தில் வா என்று அழைத்த லங்காரவாசி.
A most opportune helper.

5477. தாயும் பிள்ளையும் ஆனாலும் வாயும் வயிறும் வேறே.
Laws of nature independent of relationship.

5478. தாயும் தகப்பனும் தவிர சகலமும் வாங்கலாம்.
Everything can be procured except birth.

5479. தாயைக் கொன்றவனுக்கு ஊரிலே பாதிப்பேர்.
Half the village will rise against the matricide.

5480. தாயைச் சேர்ந்த உறவு ஆனாலும் அறுத்துத்தான் உறவு ஆட வேண்டும்.
Intimacy must not be confounded with business.

5481. தாயைத் தண்ணீர்த் துறையில் பார்த்தால், பிள்ளையை வீட்டில்பார்க்க வேண்டியதில்லை.
As is the mother, so is the child.

5482. தாயைப்பார்த்துப் பெண்ணைக் கொள்ளு பாலைப் பார்த்துப் பசுவைக் கொள்ளு.
A popular advice.

5483. தாயைப் பார்க்கிலும் சிறந்த கோயிலுமில்லை.
Mother extolled.

5484. தாயை மறக்கடிக்கும் தயிரும் பழஞ்சோறும்.
Tamil people are very fond of cold rice and curds.

5485. தாயைப்போற் பிள்ளை நூலைப்போற் சேலை.
Compare above.

5486. தாயைப் பழித்து மகள் அவுசாரி போனாளாம்.
The advisor becoming the transgressor.

5487. தாயைப் பார்த்து மகளைக் கொள்.
Compare above.

5488. தாய் அறியாச் சூல் உண்டோ ?
The mother knows the daughter's secrets.

5489. தாய் இல்லாப் பிள்ளையைத் தலையிலே தட்டலாமா ?
Orphans not to be hit on the head.

5490. தாய் உறவோ நாய் உறவோ ?
Intimacy—selfish or unselfish ?

5491. *தாய் எழடி பாய்ந்தால் மகள் எட்டு அடி பாய்வாள்.*
Daughter excelling her mother.

5492. *தாய் ஒரு பாக்கு, தான் கமுகந்தோப்பு என்கிறான்.*
Similar to preceding.

5493. *தாய் கேட்டுப்பட்டி தகப்பன் காவடிப்பட்டி தங்கை மோருப்பட்டி தமக்கை சாதப்பட்டி.*
A good household.

5494. *தாய்க்குத் தவிடிடியான் தம்பிரானுக்கு இரும்பிடிப்பான்.*
Religion demands more than religion.

5495. *தாய்க்கைப் பசும்பொன்னிலும் தன் கைத் தவிடே மேலாம்.*
Prefers one's own to one's mother's.

5496. *தாய்க்கு உள்ளது மகளுக்கு.*
Daughter inherits the mother's.

5497. *தாய்க்குப்பின் தாரம்.*
Prefer mother to wife.

5498. *தாய்க்கு ஒளித்த சூலும் உண்டோ?*
Compare above.

5499. *தாய்க்கு விளைந்தாலும் தனக்கும் விளையவேண்டும்.*
Selfishness supreme.

5500. *தாய்க்குச் சோறு இடுகிறது ஊருக்குப் புகழ்ச்சியா?*
Doing one's duty deserves no praise.

5501. *தாய்க்கு மூத்துத் தகப்பனுக்கு விளக்குப் பிடிக்கிறான்.*
Son being older than his step-mother.

5502. *தாய்க்கடங்காதவன் ஊருக்கு அடங்கான், ஊருக்கடங்காதவன் ஒருவருக்கும் அடங்கான்.*
One disobedient to one's mother.

5503. *தாய்ச் சீலைக்குச் சாண் துணியில்லை, தலைக்குமேலே சருகை மேற்கட்டி.*
Compare above.

5504. *தாய் செத்தால் மணம் மகள் செத்தால் பிணம்.*
Mother's death preferred to daughter's.

5505. தாய் செத்தாள், மகள் திக்கற்றாள்.
A motherless daughter.

5506. தாய்ச் சொல் துறந்தால் வாசகம் இல்லை.
Listen to your mother's instruction.

5507. தாய் தவிட்டுக்கு அழுகையில் பிள்ளை இஞ்சிப் பச்சிடி கேட்கின்றது.
Compare above.

5508. தாய் தனக்கு ஆகாத மகள் ஆர் தனக்கு நல்லவள் ஆவாள்?
Good to mother—good to all.

5509. தாய் தூற்றினால் ஊர் தூற்றும், கொண்டவன் தூற்றினால் கண்டவன் தூற்றுவான்.
Evil of relations scandalizing one another.

5510. தாய்ப் பொன்னிலும் மாப்பொன் திருடும் தட்டான்.
The thievish nature of goldsmiths.

5511. தாய் பொறுக்காததை ஊர் பொறுக்குமா?
Mother's forbearance.

5512. தாய்போல் பெண்ணும் தகப்பன்போல் பிள்ளையும்.
Daughter takes after mother and son takes after father.

5513. தாய்மனைக்கு வந்தது பிள்ளைக்கும்.
Compare above.

5514. தாய் மனம் பித்து தகப்பன்மனம் கல்லு.
Mother *versus* father.

5515. தாய் முலை குடித்துத் தாகந்தணிய வேணும்.
Said of a child fed on spoondiet.

5516. தாய் முகம் காணாத பிள்ளையும் மழை முகம் காணாத பயிரும் [போல.
Deprived of natural support.

5517. தாய் முலைப்பாலிலும் உப்புப்பார்ப்பான்.
Said of a most suspicious character.

5518. தாய் முலைப்பாலுக்குப் பால்மாறினதுபோல.
Forgetting some favourite thing.

5519. தாரமும் குருவும் தலைவிதி.
Wife and Guru are predestined.

5520. தாய் வசவு பிள்ளைக்குப் பலிக்குமா ?
Mother's abuse will not affect the child.

5521 தாய் வார்த்தை கேளாத பிள்ளை நாய் வாயிற் சீலை.
Evil of disobeying one's mother.

5522. தாரத்தை ரட்சியாதான் வீரம் என்னத்துக்குதவும் ?
To protect one's wife is true valour.

5523. தாராளந்தானம் செய், தண்ணீர்ப் பந்தலில், நீர்ச்சோற்றுத் தண்ணீருக்கு செய்பட்டபாடு.
Apparent liberality and real niggardliness.

5524. தாராப் பெட்டைபோல.
Resembling a duck as to gait, &c

5525. தாலி அறுத்தவளுக்கு மருத்துவிச்சி தயவு ஏன் ?
Anxiety about an unlikely trouble.

5526. தாலி அறுத்தவள் ஏன் இருக்கிறாள் ? தாரம் தப்பினவனுக் குப் பொங்கியிட.
A good work for a widow

5527. தாய்ப்பழி சீலைப்பழியா ?
It cannot be exchanged like a cloth

5528. தாவத் தஞ்சம் இல்லா இளங்கொடிபோல் தவிக்கிறான்.
Quite helpless.

5529. தாழிபோல் வயிறும் ஊசிபோல் மிடறும்.
Said of a glutton

5530. தாழ்வதும் வாழ்வதும் சகடக்கால் போல.
Adversity and prosperity unreliable.

5531. தாழ் குலத்திற் பிறந்தாலும் புத்தியினால் அலரிப்பூவைப் போல் பிரயோசனப்படுவார்.
Good sense can overcome the disabilities of a low birth.

5532 தாழ்ந்து நின்றால் வாழ்ந்து நிற்பாய்.
Humility commended.

5533. தாழ்ந்த இடத்திலே தண்ணீர் தங்கும்.
Water finds its own level.

5534. தாழ்ந்தது தங்கம் உயர்ந்தது பித்தளை.
Precious things lie deep.

5535. தாழ்ந்து பணிதலே தலைமை ஆகும்.
Compare above.

5536. தாழ்மை இல்லாத வாலிபன் வீண்.
Pride in a young man condemned.

5537. தாழ்விலே பெருமையும் வாழ்விலே தாழ்மையும் வேண்டும்.
When one should be humble or proud.

5538. தாள் இட்டவன் தாள் திறக்கவேண்டும்.
He who closed must open.

5539. தான் உண்டநீரைத் தலையாலே தரும் தென்னை.
Gratitude illustrated.

5540. தாறு புறப்பட்டுத் தாய் வாழையைக் கெடுத்தாற்போல.
A child injuring its parent.

5541. தாறு மாறு தக்கட வித்தையும்.
A trickish performance.

5542. தானதர்மமில்லா உடைமைக்குத் தம்பித் தாண்டவராயன் புறப்பட்டான்.
One eager to usurp.

5543. தானத்தனத்தான் சகல சம்பத்தன்.
Said of a wealthy person.

5544. தானமது விரும்பு.
Charity urged.

5545. தானறியாச் சிங்களம் தன் பிடரிக்குச் சேதம்.
Don't speak a language you do not know.

5546. தானறியாதது நஞ்சோடொக்கும்.
Ignorance is like poison.

5547. தானாகவந்த சீதேவியைக் காலால் உதைத்துத் தள்ளலாமா?
Throwing up a good fortune.

5548. தானாய்க்கெடுத்தது பாதி தம்பிரான் கெடுத்தது பாதி.
Two generally join in a ruinous career.

5549. தானும் உண்ணான் பிறருக்கும் கொடான்.
Acting the dog in the manger.

5550. தானும் தின்னான் தரையிலும் போடான்.
Similar to preceding.

[யுமா ?
5551. தானே கனியாத பழத்தைத் தடிகொண்டு அடித்தால் கனி
One must not be forced.

5552. தானேதான் குருக்கள் என்பார் தனங்கள் வாங்கச் சதாசிவன் பேர் பூசைசெய்வார்.
Religion made a cloak for avarice.

5553. தானேவளர்ந்து தவத்தால் கொடி யெடுத்தான்.
Self-reliance praised.

5554. தானே வாழவேண்டும் தலை மகளே அறுக்க வேண்டும் என்கிறாள்.
A most selfish prayer.

5555. தான் அடங்கத் தன் குலம் அடங்கும்.
Individual and tribe inseparable.

5556. தான் ஆடாதே போனாலும் தன்சதை ஆடும்.
Flesh is stronger than spirit.

5557. தான் உள்ளபோது உலகம்.
No life—no world.

5558. தான் ஒன்று நினைத்தால் தெய்வம் ஒன்று நினைக்கும்.
God's ways not our ways.

5559. தான் கள்வன் பிறரை நம்பான்.
None so suspicious as a thief.

5560. தான்கற்ற ஒன்றைத் தரிக்க உரை.
Be an impressive teacher.

5561. தான் சம்பாதித்தால் தனக்கு உதவும், ஊர் சம்பாதித்தால் உதவமாட்டாது.
Commends self-acquirement of wealth.

5562. தான் தின்னத் தவிடில்லை சம்பாநெல்லுக்குத் தொம்பை வைத்துக் கொட்டுகிறே னென்றானும்.
Though starving, yet conceited.

5563. தான் சாக மருந்து தின்பார்களா ?
Who would wilfully poison himself ?

5564. தான் செத்தபின் உலகம் கவிழ்ந்து என்ன? நிமிர்ந்துஎன்ன?
Compare above.

5565. தான் தளம்பல் பிறருக்கு ஊன்றுகோல்.
Condition and claim contrasted.

5566. தான் திருடி அயல் வீடு நம்பாள்.
Similar to preceding.

5567. தான் திருட்டுக் கொடுத்ததும் அல்லாமல் பயித்தியக்காரப் பட்டமும் கேட்டான்.
Enduring a double injury.

5568. தான் தின்ற நஞ்சு தன்னை எரிக்கும்.
Each reaps the reward of his own works.

5569. தான்தின்ற நஞ்சு தன்னைக் கொல்லும்.
Compare preceding.

5570. தான் போகாத காரியத்துக்கு ஆட்போனால் ஒரு சொட்டு.
Delegating one's business to another leads to evil.

5571. தான் தின்னத்தவிடு இல்லை வாரத்துக்குப் பன்றிக்குட்டியா?
Similar to preceding.

5572. தான் தின்னத் தவிடில்லை, தங்கத்தாலே தாலி தொங்கத் தொங்க போடச் சொன்னாளாம்.
Compare above.

5573. தான் தின்னித் தம்பிரானும் இருக்கிறான்.
A glutton undertaking sacred duties.

5574. தான் தின்னி பிள்ளை வளர்க்காள், தவிடு தின்னி கோழி வளர்க்காள்.
A gluttonous mother condemned.

5575. தான்தேடாப்பொன்னுக்கு மாற்று மில்லை உரையும் இல்லை.
Unearned property not valued.

5576. தான் தொழும் தெய்வமானாலும் பொய்ச்சத்தியம் செய்தால் சகிக்குமா ?
Perjury condemned absolutely.

5577. தான்தோணித் தம்பிரானா யிருக்கிறான்.
Hypocrisy exposed.

5578. தான் பத்தினி ஆனால் தேவடியாள் தெருவிலும் குடி இருக்கலாம்.
Innocence need fear nothing.

5579. தான் பிடித்த முசலுக்கு மூன்றே கால்.
Self-opinionativeness exposed.

5580. தான்போனால் தாகத்துக்குக் கிடையாது, எழுதடா ஓலை நூறுகுடம் தயிருக்கென்றான்.
Foolish pride ridiculed.

5581. தான்போகிற காரியத்துக்கு அடப்பைக்காரன் ஒரு சொட்டு.
Seeking needless company.

5582. தான்போய் மோர் இல்லாமல் வந்தவன் தயிருக்குச் சீட்டு எழுதினானாம்.
Compare above.

5583. தான்போக வழியைக்காணாத மூஞ்சூறு விளக்குமாற்றையுங் கவ்விக்கொண்டு போனதாம்.
Attributing too much evil to a person.

5584. தான்றிக்காயில் சனியன் குந்ததுபோல.
Making a bad thing worse.

## தி.

5585. திகம்பர சந்நியாசிக்கு வண்ணான் உறவு ஏன்?
He goes naked.

5586. திகைப்பூண்டு மிதித்து திக்குக் கெட்டாற் போல.
Said to be a poisonous herb.

5587. திகைப்பூடு மிதித்தவன்போல அலைகிறான்.
In a sad plight.

5588. திக்கற்ற ஊருக்குத் திருடன் பூள் கருட கம்பம்.
A helpless village at the mercy of the robber.

5589. திக்கற்றவனுக்கு தெய்வமே துணை.
God is the refuge of the helpless.

5590. திக்குக் கெட்டுத் திசை மாறிப் போகிறது.
In great perplexity.

5591. *திக்குவிஜயம் கொள்பவனுக்கு ஜெயம் அபஜெயகாலம் தெரியாது.
Serious thoughts not welcome in pleasure.

5592. திங்களும் சனியும் தெற்கே நோக்கவேண்டும்.
An astrological dogma.

5593. திசைப் பிரட்டனுக்குப் புளுகுக்குத் தாழ்ச்சியில்லை.
A great liar generally succeeds.

5594. திடமனப்படு தீம்பர்க்கருகில்.
Be firm in the midst of the ungodly.

5595. திடுக்கென்று வாழ்க்கைப்பட்டு வெடுக்கென்றறுத்தாளாம்.
Sudden marriage and sudden widowhood.

5596. திடுக்கென்றுபோம் உடலை ஸ்திரமாய் நம்பலாமா?
The body not to be relied on.

5597. திட்டப்பொத்து கொட்டப்பொத்து, வட்டக்காயைப் பிதுக்கிப்போட்டால்.
A village saying.

5598. திட்டிச் செத்தாரு மில்லை, வாழ்த்தி வாழ்ந்தாருமில்லை.
Human blessing and cursing have no effect.

5599. திண்ணையிற் பெண்ணைத் திருப்பிவைக்கிறது மணையிற் பெண்ணை மாற்றிவைக்கிறது.
Changing according to circumstances.

5600. திண்ணைக்குத் தேள் கொட்டிற்று, தண்ணீர் மிடாவுக்கு நெறிகட்டிற்று.
Connecting things which have no connection.

5601. திண்ணைக்கு விடிந்தால் வீட்டுக்கு விடியும்.
First external, then internal.

5602. திண்ணை வீணன் திருவாசல் வீணன்.
An idler described.

5603. திரட்சிக்கு நிகட்சி, புளிப்புக்கு அவளப்பன்.
Everything has its match.

5604. திரட்டிப்பால் குமட்டுகிறதா ?
Being too rich.

5605. திரவியத்தில் அழுத்தமானவன் செத்தாலும் கொடான்.
The niggardly will never give.

5606. திரள் எலி வளை எடாது.
Individual effort commended.

5607. திரித்தவனாயிற் கயிறு, திரியாதவனாயிற் பழுதை.
Manufacture changes an article.

5608. திரிசங்குவின் மோட்சம்.
The Southern Cross.

5609. திரு உண்டானால் திறமை உண்டாகும்.
Fortune and ability come together.

5610. திருகாணிக்கு வலிவும் பழஞ்சாணிக்குப் புழுவும் உண்டு.
Natures of certain things.

5611. திருக்கண்ட கண்ணுக்குத் தீங்கும் காணலாயிற்றே.
The same eye beholds both evil and good.

5612. திருக்கண்ட கண்ணுக்குத் தீங்கு இல்லை.
No injury to the pure-eyed.

5613. திருக்காவணப் பந்தலுக்கு நிழல் உதவி வேண்டுமோ ?
It is already well shaded.

5614. திருடத்தெரிந்தால் தெற்றுமாற்றுந் தெரியவேண்டும்.
Thievishness and trickishness go together.

5615. திருடனுக்குத் தோன்றும் கள்ளப்புத்தி.
Compare preceding.

5616. திருடனைத் தேள் கொட்டினது போல.
A welcome calamity.

5617. திருடன் பெண்சாதி என்றைக்கும் கைம்பெண்சாதி.
She is ever feigning widowhood.

5618. திருடனுக்குத் தெய்வமே சாட்சி.
He cannot get human witnesses.

5619. திருடன் புகுந்தாறுமாதம் நாய் குலைத்ததுபோல்.
Sleeping upon danger.

5620. திருடிக்குத் தெய்வமில்லை அவுசாரிக்கு ஆணையில்லை.
The rogue and the prostitute.

5621. திருடியும் குங்கிலியம் தேவருக்கே.
Robbing does not affect the use of certain things.

5622. திருடிக்கொடுத்தது மல்லாமல் பயித்தியக்காரப் பட்டமும் கிடைத்தது.
A thief making a fool of himself.

5623. திருட்டுக் கை நிற்காது.
A thievish habit is seldom cured.

5624. திருட்டுப்பயலுக்குத் திரட்டுப்பாலும் சோறும், விசுவாசக்காரனுக்கு வெந்நீரும் பருக்கையும்.
The rogue *versus* the faithful.

5625. திருட்டுநாய்க்குச் சலங்கை கட்டினாற்போல.
It betrays the owner.

5626. திருட்டு நெல்லுக்கு மத்தள மரக்கால்.
Stolen property is sold cheap.

5627. திருட்டுப்பயலுக்கு பிரட்டுக் குருக்கள்.
A priest suited to a rogue.

5628. திருட்டுப்பையன் வருகிறான் தவலைசெம்பை வெளியில் வையும்.
Means just the opposite.

5629. திருட்டுப்புத்தி தலைக் கட்டுமா ?
Thievishness will ruin one.

5630. திருட்டுப் பூனைக்குச் சலங்கை கட்டினாற்போல.
Compare above.

5631. திருட்டுப் பயல் கலியாணத்தில் முடிச்சு அவிழ்க்கிற பயல் பெரியதனம்.
A society of rogues.

5632. திருட்டுப் பூனைக்குப் போடு திரட்டுப் பாலுஞ் சோறும்.
Rogues generally well off.

5633. திருட்டு வாய்த்தால் திருடப் படாதா ¿
A lame excuse for theft as a profession.

---

5634. திருத்தி இல்லாத எஜமான் வீண்.
A master who cannot be satisfied.

---

5635. திருநீற்றுக்கழற் கொடிக்காய் போல.
Not affected by anything.

---

5636. திருநாளும் முடிந்தது எடுபிடியும் ஒழிந்தது.
Both wedding and bustle are over.

---

5637. திருநாளுக்குப் போகிறையோ தின்றிக்குப் போகிறையோ ?
Festival means feasting.

---

5638. திருநீற்றிலே ஒட்டாதது கழற்சிக்காய்.
Compare above.

---

5639. திருந்த ஓதத் திருவுண்டாமே.
Sound learning begets fortune.

---

5640. திருப்பங்கூர் வெல்லம் இரட்டிக் கொடுத்தாற்போல.
In good solid quantity.

---

5641. திருப்பதிக்குப் போனாலும் துடுப்பு ஒருகாசு.
Market values the same everywhere.

---

5642. திருப்பதியில் மொட்டை அடித்ததும் பற்றாதா, ஸ்ரீரங்கத் தில் சிரிப்பாய்ச் சிரித்ததும் பற்றாதா ?
Said to one who is bent on fresh pilgrimages.

---

5643. திருப்பதியில் அம்பட்டன் சவரம் செய்வதுபோல.
So very common.

---

5644. திருப்பதியில் மொட்டைத் தாதனைக் கண்டாயா ?
A common joke.

---

5645. திருப்பணிசெய்யக் கருத்திருந்தால், கருப்படியின் பேரிலே விருப்பமிருக்கும்.
Connecting ceremony with sugar.

---

5646. திருப்பதிச் சொட்டு படிப்படியாய் எரித்தது.
A gradual combustion.

---

5647. திரு மூர்த்திகளும் தேவரும் காணார்.
A mere saying.

---

5648. திருவன் கண்ட பச்சையாய்ப் போயிற்று.
Something ending in smoke.

5649. திருவம்பூரே குமரன் கழலே, செங்கீரை ஆடியருளே ?
A sacred invocation.

5650. திருவண்ணாமலைக் குடாவுக்கு நிழல் உண்டென்னுகிறதா ?
It is not needed.

5651. திருவாசல் ஆண்டியும் ஒரு வேளைக்கு உதவுவான்.
Even the obscure may be useful.

5652. திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்.
The excellence of Tiruvasakam.

5653. திருவாதரப்பட்ட குருக்களே தெண்டம், கரியாய்ப் போகிற சீஷனே கொண்டேன்.
An ironical address.

5654. திருவாக்குக்கு எதிர்வாக்கு உண்டோ ?
God's word is inviolable.

5655. திருவாய்க்கு எதிர்வாய் உண்டா ?
Compare preceding.

5656. திருவாய்த்தான் குதிரை வளர்த்தாற்போல.
Killing it by overfeeding.

5657. திருவாய்த்தான் திருவரங்கப்பொடி விற்றாற்போல.
Opposite extremes.

5658. திரு வாய்த்தான் இருந்தும் கெடுத்தான், செத்தும் கெடுத்தான்.
A wealthy man's life and death.

5659. திருவிளக்கு இல்லா வீட்டில் பேய் குடியிருக்கும்.
There must be a sacred lamp in every house.

5660. திருவிளக்கில்லா வீடுபோல.
A house without religious worship.

5661. திருவிளக்கு இட்டாரைத் தெய்வம் அறியும், நெய்வார்த்து உண்டாரை நெஞ்சு அறியும்.
God knows the godly.

5662. திரைகடல் ஓடியும் திரவியம் தேடு.
Urges acquisition of wealth.

5663. தில்லும் பில்லும் திருவாதிரமும்.
A combination of frauds and tricks.

5664. திறந்த கதவுக்கு திறவுகோல் தேடுவானேன்.
Seeking the sheep while it is on the shoulder.

5665. திறந்த வீட்டிலே நாய் நுழைந்தாற்போல்.
Exposing oneself to danger.

5666. தினத்தவ நிலையில் மனத்தை நிறுத்து.
Advises daily contemplation.

5667. தினவு எடுத்தவன் சொறிந்து கொள்ளவேண்டும்.
Each must seek his own gratification.

5668. தினவுக்குச் சொறிதல் இதம்.
Gratifying a desire very pleasant.

5669. தினைப்பயறும் பாலும் தின்றுதிருந்தும், வினைப்பயனை வெல்லுவது அரிது.
Sin difficult to overcome.

5670. தினை விதைத்தவன் தினை அறுப்பான் வினை விதைத்தவன் வினை அறுப்பான்.
Every man will reap what he has sown.

5671. தின்கிறதைத் தின்றும் தேவாங்குபோல் இருக்கிறான்.
Not improving by his food.

5672. தின்பது கொஞ்சம் சீவனும் நிலையில்லை.
In a very precarious condition.

5673. தின்ற மண்ணுக்குத் தக்க சோகை.
Malady according to cause.

5674. தின்ற நஞ்சு கொல்லும், தின்னாத நஞ்சு கொல்லுமா ?
Nothing without a cause.

5675. தின்று கொழுத்தால் சும்மாயிருக்க வொட்டாது.
Luxurious food produces evil.

5676. தின்று உமிழ்ந்த தம்பலத்தைத் தின்ன நினைப்பார்களா ?
The dog returning to his vomit.

5677. தின்று மிருந்த பாக்கைத் திரும்பவும் போவோர்களா ?
Similar to preceding.

5678. தின்னத் தின்ன கேட்குமாம் பிள்ளைபெற்ற வயிறு.
A nursing mother has a good appetite.

5679. தின்னத் தவிடில்லை தங்கச்சரப்பளி தொங்கத்தொங்க ஆடு
தாம்.
Compare above.

5680. தின்னத்தெரியாமல் தின்று,பேசத்தெரியாமல் பேசுகிறது.
Gluttony and its evils.

5681. தின்னத் தெரியாமல் தின்பானேன் ?
Condemns gluttony.

5682. தின்னு வீட்டில் தின்னி.
One who violates caste rules.

5683. தின்றால் கொல்லுமா, கண்டாற் கொல்லுமா விஷம் ?
Not sight but contact that takes effect.

5684. தின்றால் அல்லோ நஞ்சு கொல்லும் ?
Compare preceding.

## தீ.

5685. தீ இல்லாமல் புகை எழும்பாது.
No effect without a cause.

5686. தீட்டித் துடைக்கப் பண்ணும்.
Evil needs its removal.

5687. தீண்டாவிளக்கைத் தீண்டவரும் பூச்சி மாண்டாற்போல் மா
ளுகிறது.
Wilfully seeking one's ruin.

5688. தீக்காய்ந்தாற்போல் இருக்கவேண்டும்.
Neither too far nor too close.

5689. தீக்குக் காற்று உதவி யானதுபோல்.
One helping another.

5690. தீங்கரும்பனுக்கு மாங்குயிற் கிளவி.
Sweetness of disposition and speech.

5691. தீட்டின மரத்தில் கூர் பார்க்கிறதா ?
Testing one's ability on one's benefactor.

---

5692. தீட்டுங்கல்லில் கூர்மை பார்க்கிறது.
Trying one's benefactor.

---

5693 தீதுறும் பாவச் செய்கை அற்றவன் தேவன்.
God the only sinless one.

---

5694. தீபத்தில் ஏற்றிய தீவட்டி.
The greater deriving its origin from the smaller.

---

5695. தீப்பட்ட வீட்டிற்குப் பீக்குட்டைத் தண்ணீர்.
Emergency seeks no nicety.

---

5696. தீப்பட்ட வீட்டிலே கரிக்கட்டை பஞ்சமா ?
Where something may be surely found.

---

5697. தீப்புண் ஆறும், வாய்ப்புண் ஆறாது.
Burns heal faster than abuse.

---

5698. தீ மிஞ்ச வைத்தாலும் பகை மிஞ்ச வைக்கலாகாது.
Better increase fire than enmity.

---

5699. தீமையை மெச்சுகிறவன் தீமையாளிதான்.
Who praises evil is an evil doer himself.

---

5700. தீயிலிட்ட நெய் திரும்ப வருமா ?
Said of an irrecoverable loss.

---

5701. தீயும் பயிருக்குப் பேயும் மழைபோல.
A most opportune help.

---

5702. தீவினை முற்றிப் பாவினை ஆச்சுது.
The end of an evil career.

---

5703. தீவட்டிக் காரனுக்குக் கண்தெரியாது.
The effect of a dazzling light.

---

5704. தீயாரைச்சேர்ந்து ஒழுகல் தீது, தீயார் பண் செய்வனவும் தீது.
Condemns evil associations.

---

5705. தீயோரை விடுதலை ஆக்குகிறவன் நல்லோருக்கு நஷ்டம்செய்வான்.
The good to be protected from the evil.

---

5706. தீரக்கற்றவன் தேசிகன் ஆவான்.
Extensive learning.

5707. தீராக்கோபம் போராய் முடியும்.
Against unmitigated anger.

5708. தீராக்கோபம் பாடாய் முடியும்.
Similar to preceding.

5709. தீராச்செய்கை சீராகாது.
Imperfect work condemned.

5710. தீராத நெஞ்சுக்குத் தெய்வமே சாட்சி.
The refuge of a troubled soul.

5711. தீரா வழக்குக்குத் தெய்வமே சாட்சி.
The judge of an undecided suit.

5712. தீரா வழக்கு நேராகாது.
Said of an endless dispute.

5713. தீர்க்கதெரிசி பீங்கான் திருடி.
[Evidently a Christian coinage.]

5714. தீவினை செய்யில் பேய்வினை செய்யும்.
Evil and the Devil.

## து.

5715. துக்க மற்றவனுக்குச் சொக்கட்டான்.
Gambling makes one forget sorrow.

5716. துக்கமுள்ள மனதில் துன்பம் என் சேறே?
Why add grief to grief.

5717. துக்கத்தையெல்லாம் விட்டு விட்டு தோட்டிச்சியைக் குத்தகையாக வைத்துக் கொண்டானாம்.
Seeking comfort by foul means.

5718. துக்குணிச் சிறுக்கிக்கு முக்கலக் கந்தை.
Too much clothing for a little child.

5719. துக்குணிச் சொக்கன்.
A petty attendant.

5720. துஞ்சி நின்றால் மிஞ்சி உண்ணான்.
Sleep diminishes appetite.

---

5721. துடப்பக் கட்டைக்கு பட்டுக்குச்சு கட்டினாற்போல.
Adorning an unworthy person.

---

5722. துடியாப் பெண்டிர் மடியில் நெருப்பு.
Forward females are dangerous.

---

5723. துடுப்பு இருக்கக் கை வேவானேன்.
Wilfully injuring oneself.

---

5724. துட்டுக்கெட்டுச் சட்டி வாங்கி, சட்டி எட்டு துட்டுக்கு விற்றாலும் வட்டிக்கீடல்ல.
Profit *versus* interest.

---

5725. துட்டுக்கு ஒரு குட்டி விற்றாலும் துலுக்கக் குட்டி மாத்திரம் ஆகாது.
Mahomedan boys disliked by Hindus.

---

5726. துட்டுக்கொரு சேலை விற்றாலும் நாய்க்குத்தம்மணம்.
Nature independent of circumstances.

---

5727. துட்டுவந்து பெட்டியில் விழுந்தோ, திட்டு வந்து பெட்டியில் விழுந்தோ ?
Abuse more likely than gain.

---

5728. துஷ்டர் நேசம் பிராண நஷ்டம்.
Evil company ends in ruin.

---

5729. துணிந்தவளுக்கு வெட்கம் இல்லை, அழுகிறவளுக்குத் துக்கம் இல்லை.
The bold have no shame.

---

5730. துணிந்தாருக்குச் சமுத்திரம் முழங்கால் ஆழம்.
The adventurer thinks of no difficulty.

---

5731. துணிந்தாருக்குத் துக்கம் உண்டா, பணிந்தாருக்குப் பாடு உண்டா ?
Compare preceding.

---

5732. துணிந்தவனுக்குத் துக்கம் இல்லை, அழுதவனுக்கு அகங்காரம் இல்லை.
Similar to preceding sayings.

---

5733. துணைபோயிரு பொங்கினதைத் தேடு.
A good advice.

---

5734. துணைபோனாலும் பிணை போகாதே.
Help but do not incur responsiblity.

---

5735. துணையோடல்லது வழிபோகாதே.
Walk in company.

---

5736. துண்டு பாளையக்காரன், இடை நடுவில் அடிக்கிறாற்போல்.
A sudden attack.

---

5737. துப்பாக்கி வயிற்றில் பீரங்கி பிறந்ததுபோல்.
A small thing producing a big one.

---

5738. துப்புக்கெட்டவனுக்கு இரட்டைப் பங்கு.
An undeserved favor.

---

5739. தும்பலிலே போனாலும் தூற்றலிலே போகக் கூடாது.
Avoid drizzling.

---

5740. தும்பினவன் செத்தால் நிம்மளம் அற்றது.
A superstitious saying.

---

5741. தும்பை விட்டுவிட்டு வாலைப் பிடிக்கிறது.
Catching at the wrong end.

---

5742. துரியோதனன் குடிக்குச் சகுனிபோல்.
An evil counsellor.

---

5743. துருசு கல்வி, அரிது பழக்கம்.
Practice more difficult than theory.

---

5744. துரும்பை வைத்து மூத்திரம் பெய்கிறதா ?
An indecent behaviour.

---

5745. துரும்பும் கலத்தண்ணீர் தேக்கும்.
Even trifles are useful.

---

5746. துரும்பு நுழைய இடம் இருந்தால் ஆனையைக் கட்டுவான்.
Give an inch and he will take an ell.

---

5747. துரும்பு முற்றினகோபம் விசும்பு முட்டத் தீரும்.
Anger begins small and ends great.

---

5748. துரும்பு தூண் ஆனால் தூண் எப்படி ஆகாது?
Applying the principle of proportion.

5749. துரும்பு கிள்ளுவது துற்குறித்தனம்.
A bad habit.

5750. துரும்பைத் தூணாக்குகிறதா?
Against exaggerating.

5751. துரைகளோடே சொக்கட்டான் போடலாகுமா?
Don't gamble with your superior.

5752. துரைகளோடே சொக்கட்டான்போட்டால் தோற்றாலும் குட்டு, வென்றாலும் குட்டு.
The same idea as in proceding.

5753. துரைச்சித்தம் கனச்சித்தம்.
The master's pleasure at any cost.

5754. துரை நல்லவர் பிரம்பு பொல்லாது.
I like the master but not his discipline.

5755. துரை நாச்சியார் கும்பிடப்போய் புறப்பட்ட ஸ்தன்னியம் உள்ளே போச்சுது.
A rare act of worship ending awkwardly.

5756. துரை வீட்டு நாய் நாற்காலிமேல் ஏறினது போல
Taking advantage of one's position.

5757. துரோகத்தால் கொண்ட துரைத்தனம், குடிகளை வருத்தும் கொடுங்கோல்.
Condemns malicious usurpation.

5758. துரோபதையைத் துகில் உரித்தது போல.
So cruel aod shameless.

5759. துர்ச்சனனைக் கண்டால் தூரத் தூர நில்.
Avoid the wicked.

5760. துலக்காத ஆயுதம் துருப்பிடிக்கும்.
Uncleaned weapons grow rusty.

5761. துலாத்தில் வெள்ளி உலாத்தில் பெய்யும் மழை.
An astrological prediction.

5762. துலுக்கத் தெருவிலே தேவாரம் ஓதினதுபோல்.
It leads to mischief.

---

5763. துலுக்கத் தெருவிலே திருவெண்பா ஓதினதுபோல.
Similar to preceding.

---

5764. துவிநாக்கு இடறும்.
The evil of a double tongue.

5765. துழாவிக் காய்ச்சாதது கஞ்சியும் அல்ல, விளைவிக் கட்டாதது கலியாணமும் அல்ல.
Thorough in everything.

---

5766. துளசிக்கு வாசமும் முள்ளுக்குக் கூர்மையும் முளைக்கிறபோதே உண்டு.
Manifesting their nature from the beginning.

---

5767. துள்ளாதே துள்ளாதே குள்ளா, பக்கத்திலே பள்ளம் அடா.
Short people must be careful in walking.

---

5768. துள்ளாதே துள்ளாதே ஆட்டுக்குட்டி என்கையில்இருக்கிறது சூரிக்கத்தி.
Putting down rebellion.

---

5769. துள்ளித் துள்ளி குதித்தாலும் வெள்ளிப்பணமும் கிடையாக் காலத்தில் கிடையாது.
A time of scarcity.

---

5770. துள்ளித் துள்ளி தொப்பென்று விழுகிறாய்.
Condemns mere excitement.

---

5771. துள்ளு மான் துள்ளி துரவில் விழுந்தது.
Similar to preceding.

---

5772. துள்ளுகிற மாடு பொதி சுமக்குமா ?
Condemns blustering behaviour.

---

5773. துறக்கத் துறக்க ஆனந்தம் துறந்தபின்பு பேரின்பம்.
Renunciation leading to bliss.

---

5774. துறட்டுக்கெட்டாதது வாய்க்கெட்டுமோ?
What is beyond your means.

---

5775. துறவறம் இல்லறம் மனதிலே.
The mind—not body—is the seat of religiou.

5776. துறவிக்கு வேந்தன் துரும்பு.
An ascetic leads an independent life.

---

5777. துற்பலத்திலே கர்ப்பனை ஆனால் எப்படி முக்கிப்பெறுகிறது?
Weak in conception, weak in delivery.

---

5778. துர்ப்புத்தி மந்திரியால் அரசுக்கீனம், சொற்கேளாப் பிள்ளைகளால் குலத்துக்கீனம்.
Wicked ministers and children.

---

5779. துற்றி சமுத்திரம் பொங்கினால் கொள்ளுமாங் கிணறு அநேகம்.
Little people profit by the liberality of the great.

---

5780. துன்பம் தருகிற காக்கையினது சத்தத்தினால் அதை விரட்டுவார்கள், இன்பம் தருகின்ற குயிலை விரட்டார்கள்.
Different persons treated in different ways.

---

5781. துன்பத்திற்கு இடங் கொடேல்.
Give no room to grief.

---

5782. துன்பம் முந்தி இன்பம் பிந்தி.
First pain and then pleasure.

---

5783. துஷ்ட நிக்கிரகம் சிஷ்டப் பரிபாலனம்.
Destroying the evil and protecting the good.

---

5784. துஷ்ட பிள்ளைக்கு ஊரார் புத்தி சொல்லுவார்கள்.
A wayward child.

## தூ.

5785. தூக்கணங் குருவி குரங்கிற்குப் புத்தி சொன்னாற் போல.
The inferior advising his superior.

---

5786. தூக்கி எறவிட்டு ஏணியை வாங்கும் தூர்த்தர் சொல்லைக் கேளாதே.
One who betrays you in an emergency.

---

5787. தூக்கி நினைத்து நோக்கிப்பேசு.
Speak deliberately.

---

5788. தூக்கி நிறுத்தடா பிணக்காடாய் வெட்டுகிறேன்.
A mere boast.

5789. தூக்கினால் சென்னி துடிக்கத் தணித்துவிடு, மாக்கினால் சக்கரம் போலாவினை.
Advice to a prize fighter.

---

5790. தூக்கிவளர்த்த பிள்ளையும் தொடையில் வைத்துத் தைத்த இலையும் உருப்படாது.
How children are to be brought up.

---

5791. தூக்கி வினை செய்.
Compare above.

---

5792. தூக்கிப்போட்டது மல்லாமல், குதிரை தோண்டிக் குழி பறித்துதாம்.
Evil upon evil.

---

5793. தூக்கு உண்டானால் நோக்கு உண்டு.
Thought and judgment go together.

---

5794. தூங்காதவனே நீங்காதவன்.
Condemns sleep (in the day).

---

5795. தூங்காதவனுக்குச் சுகம் இல்லை.
Encourages proper sleep.

---

5796. தூங்கினவனது கடாக்குட்டி, விழித்திருந்தவனது ஊட்டுக் குட்டி.
Compare Solomon's judgment.

---

5797. தூங்கினவன் கண் கடாக்கண்.
After a sleep the eyes look red.

---

5798. தூங்கினவன் கன்று சேங்கன்று.
Similar to preceding.

---

5799. தூங்கினவன் சாகிறதில்லை, வீங்கினவன் பிழைக்கிறதில்லை.
Symptoms of recovery and death.

---

5800. தூங்குகிறவன் குத்திலே சுப்பலெடுத்துக் குத்தினாற்போல்.
Bent on mischief.

---

5801. தூங்குகிற வரிக்காரனை எழுப்பிவிட்டால் போன வருஷம் தீர்வையும் கொடுத்துவிட்டுப் போவென்பான்.
Needless prompting.

---

5802. தூங்குகிற புலியைத்தட்டி எழுப்புவானேன்?
Why stir up a dangerous foe?

---

5803. தூண்டா விளக்குப்போல.
Something perpetual.

5804. தூண்டில் நுனி மச்சத்துக்கு ஆசைப்பட்டு மீன் உயிரை இழப்பதுபோல.
Losing life for pleasure.

5805. தூண்டியில் அகப்பட்ட மீன் துள்ளி நத்தினால் விடுவார்களா?
Once caught caught for ever.

5806. தூண்டிலைப் போட்டு விராலை இழுக்கிறது.
Catching in the proper way.

5807. தூண்டின விரல் சொர்க்கம் பெறும்.
The adviser rewarded.

5808. தூண்டிற் காரனுக்கு மிதப்புமேலே கண்.
One must attend to one's chief.

5809. தூணிலும் இருப்பான் துரும்பிலும் இருப்பான்.
Said of Divine Omnipresence.

5810. தூமத்தீயைப்பார்க்கிலும் காமத்தீ கொடிது.
Lust burns more than fire.

5811. தூமை துடைக்கப்பண்ணும்.
Needing purification.

5812. தூர இருந்தால் சேர உறவு.
Condemns too much intimacy.

5813. தூரத்திற் றண்ணீர் ஆபத்துக்குதவாது.
Remedy must be within reach.

5814. தூரத்துப் பச்சை பார்வைக்கு இச்சை.
" Distance lends enchantment to the view."

5815. தூரத்துப் பச்சை கண்ணுக்குக் குளிர்ச்சி.
Similar to preceding.

5816. தூரத்துப் பார்வைக்கு மலை மழுமழுப்பு, கிட்டப்போனால் கல்லும் கரடும்.
Compare two preceding.

5817. தூரத்துத் தண்ணீர் ஆபத்துக்கு உதவாது.
Help must be within reach.

5818. தூரப்போய் கீரைப்பாத்தியிற் பேண்டாளாம்.
Taking needless pains.

5819. தூரப்போகவேண்டுமோ கீரைப்பாத்தியிற் கை வைக்க?
What we want is accessible to us.

5820. தூர்ந்த கிணற்றைத் தூர்வாராதே.
Do not attempt to reform a hopeless character.

5821. துருணகுடி நீறும்.
Ruinous end of a profligate family.

5822. தூற்றல் நின்றாலும் தூவானம் நில்லாது.
Small troubles last longer than great.

5823. தூற்றர் சொல்லைக் கேட்டால் வாய்த்திடும் கேடு.
Give no ear to scandal.

5824. தூற்றர் என்போர் சொல் எழுத்து உணரார்.
Scandalmongers defined.

5825. தூற்றித் திரியேல்.
Against slandering.

5826. தூற்றும் பெண்டிர் கூற்று எனத்தகும்.
Slandering women.

## தெ.

5827. தெட்டிப் பறிப்பானை எட்டிடத்தில் பறிக்கிறது.
Rendering evil for evil.

5828. தெண்டத்துக்குப்பணமும் திவசத்துக்குகறியும் அகப்படும்.
Easy means of livelihood.

5829. தெய்வமில்லாமையினாலேயா பொழுது விடிகிறது?
Sunrise attributed to God.

5830. தெய்வசித்தம் இருந்தால் செத்தவனும் எழும்புவான்.
God's will omnipotent.

5831. தெய்வப் புலவனுக்கு நா உணரும், சித்திர ஓடாவிக்குக் கை உணரும்.
The poet and the painter.

5832. தெய்வம் காட்டுமே தவிர ஊட்டாது.
God requires self-exertion from us.

5833. தெய்வம் துணைக்கொள் தேகம் அநித்தியம்.
Urges godliness.

5834. தெய்வம் பண்ணின திருக்கூத்து.
A providential occurrence.

5835. தெரியாத்துணையே பிரியாத்துணை நீ.
Invoking the help of the earth,

5836. தெருச்சண்டை கண்ணுக்கின்பம்.
You can look on uninjured.

5837. தெருளாமனதுக்கு இருளே இல்லை.
The ignorant not aware of spiritual darkness.

5838. தெவிட்டாக் கனி பிள்ளை, தெவிட்டாப்பானம் தண்ணீர்.
A child and water—one never gets tired of.

5839. தெளிந்த தண்ணீர் நீர் குடித்தீர் சேற்றைக்கலக்கிவிட்டீர்.
Enjoying good and returning evil.

5840. தெளிவுறும் பரதேவ தேசிகன்.
A mere saying.

5841. தெள்ளிய திருமணி திருட்டுக்கு நவமணி.
A capital rogue.

5842. தெறிக்க அடித்த தட்டானைப்போல.
Wasting valuables.

5843. தெற்கத்தைக் குருவியை வடக்கத்தைக் குருவி தேற்றி அ
ழைத்ததாம் செம்பழம் தின்னப்போக.
Seeking co-operation.

5844. தெற்கே அடித்த காற்றுத் திரும்பி அடியாதா ?
Wont another chance occur ?

5845. தென் காசி ஆசாரம் திருநெல்வேலி உபசாரம்.
One thing in one place and another in another.

5846. தென்றல் முற்றிப் பெரும் காற்று ஆகும்.
Method of development.

5847. தென்னங்குரும்பை இருக்குரும்பை பன்னாடை யெல்லாம் ஒருமரத்துக்காய்.
A saying about cocoa palms.

5848. தென்னமரத்திற் பாதி யென்னை வளர்த்தவள் பாவி.
A tall fellow's complaint.

5849. தென்னமரத்தில் ஏண்டா ஏறினாய் கன்றுக்குப் புல் பிடுங்க ஏறினேன்.
A thief's wife.

5850. தென்னமரத்துக்குத் தண்ணீர் வார்த்தால் தலையாலே தரும்.
Kindness never lost.

5851. தென்னலடிக்கிற காற்றே என் இறுக்கத்தை ஆற்றே ?
Suffering from intense heat.

5852. தென்னமரத்திலே தேள்கொட்டப் பனைமரத்திலே ஏறி கட்டினதுபோல.
One suffering for another's fault.

5853. தென்னாலிராமன் பூனை வளர்த்ததுபோல.
Starving a creature.

## தே.

5854. தேங்காய் தின்றவன் தின்னக் கோம்பை சூப்பினவன் தெண்டம் இறுக்கிறதா ?
The less guilty made the scape-goat.

5855. தேங்காய்க்கு மூன்று கண், எனக்கு ஒரு கண்.
Defending one's stupidity.

5856. தேசங்கள் தோறும் பாஷைகள் வேறு.
Multiplicity of languages.

5857. தேசத்து நன்மை தீமை அரசர்க்கு அல்லவா ?
The ruler's responsibility.

5858. தேடக்கிடையாது தேடவென்றால் கிட்டாது, திருப்பிக்கொடப்பா திருப்பிக்கொடு.
Something difficult to obtain.

5869. தேடாதழிக்கிற் பாடாய்முடியும்.
A wilful waste a woful want.

5860. தேடித் திருவிளக்கு வை.
A sacred duty.

---

5861. தேடித் தின்றவர் தெய்வத்தோடு ஒத்தவர்.
Labour extolled.

---

5862. தேடப்போன மருந்து காலில் அகப்பட்டதுபோல்.
A lucky find.

---

5863. தேடிப்புதைத்துத் தெருவில் இரக்கிறதா ?
A miser begging alms.

---

5864. தேடிய பொருள் காலிலே தட்டினது போல்.*
Compare above.

---

5865. தேடிய பூண்டு காலிலே சிக்கினாற்போல.
Similar to preceding.

---

5866. தேடுவார் அற்றபிணம் தெருவோடே.
An uncared for corpse.

---

5867. தேம்படு பனையின் திரள் பழத் தொருவிதை.
One of a lot of the same sort.

---

5868. தேய்ந்தாய், மாய்ந்தாய், கொம்புங் கறுத்தாய் தும்பிக்கையை-
யும் உள்ளே இழுத்துக்கொண்டாயா ?
Said to a ruined person.*

---

5869. தேய்ந்தாலும் சந்தனக்கட்டை மணம் போகாது.
Adversity cannot alter character.

---

5870. தேய்ந்து மூஞ்சுறாய்ப் போகிறது.
Reduced to great poverty.

---

5871. தேராச் செய்கை தீராச் சஞ்சலம்.
Condemns imperfect work.

---

5872. தேருக்குள்ள சிங்காரமெல்லாம் கிடக்கிறது.
A sarcastic saying.

---

5873. தேரைகள் பாம்பைத் திரண்டு வளைத்தாற்போல.
Ineffectual attack.

---

5874. தேரை மோந்த தேங்காய் போல்.
Hurt by evil contact.

---

5875. தேரை வாய்போல் சுத்த சூனியமாய்.
Quite empty.

---

5876. தேரோடே நின்று தெருவோடே அலைகிறான்.
An unsteady person.

---

5877. தேர்ந்தவன் என்பது கூர்ந்து அறிவதனால்.
The expert defined.

---

5878. தேவடியாள் தெரு கொள்ளை போகிறதா?
She is everybody's favourite.

---

5879. தேவடியாள் சிங்காரிக்கு முன்னே தேர் ஓடித் தெருவில் நின்றது.
Excessive delay.

---

5880. தேவடியாள் மகன் திவசம் செய்ததுபோல.
An absurd ceremony.

---

5881. தேவடியாள் செத்தால் பிணம், தேவடியாள் தாய் செத்தால் மணம்.
On account of the character of each.

---

5882. தேவரீர் சித்தம் என் பாக்கியம்.
Submission to superior order.

---

5883. தேவரைக் காட்டிப் பூதம் பணி கொள்ளும்.
Demanding service by fraud.

---

5884. தேவர் உடைமை தேவருக்கே.
The rights of gods.

---

5885. தேவர் சொம்மு தேவருக்கே.
Another wording of preceding.

---

5886. தேவர்கள் பணிவிடை செய்யு மேலவன் கர்த்தா.
The Supreme Being.

---

5887. தேளுக்குக் கொடுக்கில் விஷம், தேவடியாளுக்கு உடம்பெங்கும் விஷம்.
The prostitute exposed.

---

5888. தேள் கொட்டப் பாம்புக்கு மந்திரிக்கிறதா?
Remedy not suited to complaint.

---

5889. தேள் நெருப்பில் விழுந்தால் எடுத்துவிட்டவனைக் கொட்டும்.
The nature of the vicious.

---

5890. தேற்றிக் கழுத்தறுக்கிறது.
Slaying in cold blood.

5891. தேனில் விழுந்த ஈ போல அலைகிறான்.
Plunged into deep misery.

5892. தேனுக்கு ஈயைத் தேடி விடுவார் ஆர்?
People seek pleasure instinctively.

5893. தேனும் தினைமாவும் தேவருக்கு அர்ப்பிதம்.
A favourite offering to gods.

5894. தேனும் பாலும்போல் இருக்கவேண்டும்.
Live in harmony.

5895. தேனும் பாலும்போல் இருந்து கழுத்தை அறுத்தான்.
False friendship exposed.

5596. தேனேபோலும் செந்தமிழ்க் கல்வி.
Sweetness of Tamil.

5897. தேனை வழித்தவன் புறங்கையை நக்கானோ?
A labourer's right.

5898. தேனைத் தொட்டையோ நீரைத் தொட்டையோ?
Be sure of what you are dealing with.

5899. தேன் உண்டானால் ஈ தேடிவரும்.
Some things attract naturally.

5900. தேன் உள்ள இடத்தில் ஈ மொய்க்கும்.
A popular person.

5901. தேன் எடுத்தவனைத் தெண்டிக்குமாம் தேனீ.
Retribution follows evil-doing.

5902. தேன் எடுத்தவனுக்கு ஒரு சொட்டு, மாமன் மனையில் இருந்தவனுக்கு ஒரு சொட்டு.
Similar to preceding.

5903. தேன் ஒழுகப்பேசித் தெரு கடக்க வழிவிடான்.
Kind words but cold behaviour.

5904. தேன் ஒழுகப் பேசுவான்.
A sweet-mouthed person.

5905. தேன் கூட்டிலே கல்லைவிட்டு எறியலாமா ?
Injuring a valuable article.

5906. தேன் தொட்டார் கை நக்காரோ ?
Contact with the good profitable.

5907. தேன் வார்த்து வளர்த்தாலும் காஞ்சிரம் தெங்கு ஆகுமோ?
Natural quality unalterable.

## தை.

5908. தை ஈனாப் புல்லும் இல்லை, மாசி ஈனா மரமும் இல்லை.
A "season" proverb.

5909. தைத்த வாயிலும் இருக்கத் தாணித்த வாயிலும் இருக்க எங்காலே போனீர் உப்பனாரே ?
Stealthy egress.

5910. தை பிறந்தால் வழி பிறக்கும்.
January a season of harvests.

5911. தைப்புக்குத் தைப்பு மரம் பிடித்தாற் போல.
Demanding a great deal of material.

5912. தையலும் இல்லான் மையலும் இல்லான்.
Free from women—free from frenzy.

5913. தையற் சொற் கேளேல்.
Tamil opinion of female counsel.

5914. தையற் சொற் கேட்டால் எய்திடும் கேடு.
Similar to preceding.

5915. தையும் மாசியும் வையகத் துறங்கு.
When to sleep within doors.

## தொ.

5916. தொடைகாலி முண்டை துடைத்துப் போட்டாள்.
Said of a wicked woman.

5917. தொடையிற் புண்ணை கடையிற் காட்டுகிறது.
Exposing one's secrets.

5918. தொடையுங் கிள்ளி தொட்டிலை ஆட்டுகிறது.
Being cause of both an evil and its remedy.

5919. தொட்டவன் பேரில் பழி, அப்பனைப்போட்டு வலி.
Seeking immediate revenge.

5920. தொட்டால் தோழன் விட்டால் மாற்றான்.
Friendship hanging on a hair.

5921. தொட்டிலிற் பிள்ளைக்கு நடக்கிற பிள்ளை நமன்.
Lording it over a junior.

5922. தொட்டியப்பேய் சுடுகாடு மட்டும்.
A demon's pursuit.

5923. தொட்டிலும் ஆட்டிப் பிள்ளையும் கிள்ளுவாள்.
Compare above.

5924. தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்.
Habits acquired in childhood last till death.

5925. தொட்டுக் காட்டாத வித்தை சொட்டுப்போட்டாலும் வாராது.
Teacher essential to the acquisition of an art.

5926. தொட்டுக்கோ துடைத்துக்கோ என்றிருக்கிறது.
Avoiding close contact.

5927. தொட்டெடுத்த பணத்தைத் தட்டிப் பறித்தாற்போல.
Wasting what has been earned.

5928. தொண்டர்கள் அன்பன் துணைக்கு நிற்பவன்.
Devoted to his servants.

5929. தொண்டெனப் படேல்.
Condemns slavery.

5930. தொண்டையிலே கண்டமாலை புறப்பட.
Cursing an enemy.

5931. தொண்டையிலே தூறு முளைக்க.
Similar to preceding.

5932. தொண்ணூறு கடனோடே துவரம்பருப்பு காற் பணம்.
A small debt insignificant.

5933. தொண்ணூறு பொன்னோடே துவரம்பருப்பு காற் பணம்.
Compare preceding.

5934. தொத்துக்குத் தொத்து சாட்சி துவரம்பருப்புக்கு மத்தே சாட்சி.
Eligible witnesses.

5935. தொப்புள் அறுக்கப்போய் மாணியை அறுத்துக்கொண்டானாம்.
Attempting one thing and accomplishing another.

5936. தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது.
Agriculture preferred to service.

5937. தொழுவம் புகுந்த ஆடு புழுக்கை இடாமற் போமா?
The wicked always leave evil behind them.

5938. தொன்மை நாடி நன்மை விடாதே.
Do not shun the good for the old.

5939. தொன்மை மறவேல்.
Adhere to antiquity.

5940. தொன்னிலம் முழுதும் தோன்றிய கல்வி.
Conspicuous learning.

## தோ.

5941. தோகை அழகைத் தொட்டுப் பொட்டிட்டுக் கொள்ளலாம்.
Extolling the beauty of the peacock.

5942. தோசிப் பெண்ணுக்கேற்ற சொறியாங்கொள்ளி மாப்பிள்ளை.
A husband suited to the bride.

5943. தோட்டக்காரன் வாழ்வு காற்று அடித்தால் போச்சுது.
Storms are foes to gardens.

5944. தோட்டத்தில் அந்தம்.
Beauty in a garden.

5945. தோட்டத்து நரி கூட்டத்தில் வருமா?
The thief avoids good society.

5946. தோட்டத்தில் பழமிருக்க ஊரப்போவானேன்?
Avail yourself of means within your reach.

5947. தோட்டப்பாய் முடைகிறவனுக்கு தூங்கப்பாயில்லை.
Want in the midst of plenty.

5948. தோட்டம் முச்சாண் சுரைக்காய் அறுசாண்.
Space not large enough.

5949. தோட்டம் நிலைத்தல்லவோ தென்னம்பிள்ளை வைக்கவேண்
டும்.
Secure means before you undertake.

5950. தோட்டிபோல் உழைத்து துரைபோலச் சாப்பிடவேண்டும்.
Recommends hard labour.

5951. தோணி போகும், துறை கிடக்கும்.
What is permanent.

5952. தோண்டக் குறுணி தூர்க்க முக்குறுணி.
Undoing harder than doing.

5953. தோண்டிக்கள்ளைத் தொடர்ந்து குடித்தால் பாண்டியன் மக
னும் பறையனுவான்.
Drink debases even the noble.

5954. தோரணி கெட்டால் கோரணி.
Want of ornament.

5955. தோல் இருக்கச் சுளை விழுங்கி.
A clever thief.

5956. தோழுறுவது துலங்கிய கல்வி.
Learning an excellent companion.

5957. தோழனேனும் ஏழைமை பேசேல்.
Never reveal your poverty.

5958. தோளில் இருந்து செவியைக் கடிக்கிறதா ?
Ungrateful behaviour.

5959. தோற்பது கொண்டு சபை ஏறுகிறதா ?
Why venture when sure of defeat ?

5960. தோற்றின யாவும் தோற்றம் அற்று ஒழியும்.
Perishing nature of everything.

## தெள.

5961. தெளவித் திரியேல்.
Against wandering about.

5962. தெளவையின் மனதுக்கு ஒவ்வுதல் இல்லை.
Nothing satisfies the discontented.

## ந.

5963. நகத்தாற்கிள்ளாததைக் கோடரிகொண்டு வெட்ட நேரிடும்.
Every evil must be nipped in the bud.

5964. நகத்தாலே கிள்ளுகிறதைக் கோடரிகொண்டு வெட்டுகிறான்.
Using great force where none is necessary.

5965. நகமும் சதையும் போல.
In such great union.

5966. நகரத்துக்கு இரண்டாவனாக இருப்பதிலும் நாட்டுப்புறத்துக்குத் தலைவனாயிருப்பதே நன்று.
Better to reign in hell than serve in heaven.

5967. நகரைக்குப் பெத்தை வழிகாட்டுகிறதோ?
The junior leading the senior.

5968. நகைக்கு மகிழ்ச்சி நட்புக்கு நஞ்சு.
Merriment poisons friendship.

5969. நகைச்சொல் தருதல் பகைக்கு ஏதுவாகும்.
Compare preceding.

5970. நகைத்து இகழ்வோனை நாயென நினை.
The despiser despised.

5971. நக்கத்தவிடுமில்லை குடிக்கத் தண்ணியுமில்லை.
In absolute need.

5972. நக்கவார கச்சவடம் போல.
So huge and bulky.

5973. நக்குகிற நாய்க்குச் செக்கு என்றும் சிவலிங்கம் என்றும் தெரியுமா?
Unable to discern.

5974. நக்குகிறபொழுது நாவு எழும்புமா?
No abuse while flattering.

5975. நக்கு உண்டார் நாவு எழார்.
Similar to preceding.

5976. நச்சுவாயன் நாறுவாயன் குடியிருந்தாற்போல.
Occupied by vulgar tenants.

5977. நச்சு மரமானாலும் வைத்தவன் தண்ணீரூட்டுவான்.
Parental care of even bad children.

5978. நச்சு மரம் ஆனாலும் நட்டவர்கள் வெட்டுவார்களா?
Parents never abandon bad children.

5979. நஞ்சுக்குள் இருந்தாலும் நாகமணி மாணிக்கமே, குப்பைக்குள் இருந்தாலும் குன்றிமணி குன்றிமணியே.
Situation cannot affect the nature of certain things.

5980. நஞ்சு நாற்கலம் வேண்டுமோ?
A little evil is enough.

5981. நடக்க அறியாதவனுக்கு நடுவீதி காதவழி.
The difficulties of a novice.

5982. நடக்கிறது நடக்கட்டும் தெய்வம் இருக்கிறது.
Trusting in providence.

5983. நடக்கும்கால் தவறுவதிலும் நா தவறுதல் கெட்டது.
Faulty speech worse than faulty gait.

5984. நடக்கிறபிள்ளை தவறுகிறது தாயார் செய்த தருமம்.
Blaming the mother for the child's weakness.

5985. நடந்த காலிலே சீதேவி, இருந்த காலிலே மூதேவி.
Condemns sedentary habits.

5986. நடந்தபின்னை நகருகிறது.
Making a retrogade movement.

5987. நடந்தால் நாடு எல்லாம் உறவு, படுத்தால் பாயும் பகை.
Extols active habits.

5988. நடபடி உண்டானால் மிதியடி பொன்னாலே.
Compare preceding.

5989. நடவாத காரியத்தில் பிடிவாதம் பிடிக்கிறது.
Persevering in an impossible attempt.

5990. நடவுக்குத் தெளி காலத்தொன்று.
Yield far less than outlay.

5991. நடு உழவிலே நத்தை தெறித்தாற்போல.
An unpleasant surprise.

5992. நடு ஊரில் நச்சுமரம் பழுத்து என்ன ?
Absolutely useless.

5993. நடுக்கடற் போனாலும் மறுப்படாமல் வரக்கடவீர்.
A good wish for one going to sea.

5994. நடுச்செவியில் நாராசம் காய்ச்சிவிட்டாற்போல.
So dinning to the ear.

5995. நடுத்தெருப் பிச்சைக்கு நாணயம் பார்க்கலாமா ?
Should not be particular about alms.

5996. நடுத்தரமானவருடைய தாங்கல் பொன்னின் பிளவு போலப் பற்றவைத்தால் மாறும்.
Do not rely on untried support.

5997. நடுப்படையிலே போனாலும் வடுப்படாமல் வருகிறது.
Return unwounded from a battle.

5998. நடை சிறிதாகில் நாள் ஏறும், படை சிறிதாகிற் பயம் ஏறும்.
Small pace and small army.

5999. நட்டாற்றுக் கோரைபோல.
So tall and thin.

6000. நட்டாற்றிலே கைவிட்டாற்போல.
Forsaking in the midst of danger.

6001. நட்டுவன் பிள்ளைக்கு முட்டடிக்கத் தெரியாதா ?
He is accustomed to it.

6002. நட்டுவன் பிள்ளைக்குக் கொட்டிக் காட்டவேண்டுமா ?
Similar to preceding.*

6003. நட்டுவன் பிள்ளைக்கு நாட்டியம் கற்பிக்கவேண்டுமா ?
Compare above.

6004. நண்டுக்குடுவையை நடுத்தெருவில் உடைத்தாற்போல.
Spilling in the way.

6005. நண்டு கொழுத்தால் வளையில் இராது, பள்ளிகொழுத்தால் பாயிலிரான்.
Effect of good eating.

---

6006. நண்டு கால் விரித்தாற்போல.
Expanding on every side.

---

6007. நண்டுக்குச் சீவன் போகிறது நரிக்குக் கொண்டாட்டம்.
Enemies rejoice at one another's evils.

---

6008. நண்டுக்குப் புளியங்காய் இட்டு நறுக்கினாற்போல.
Adding taste to food.

---

6009. நண்டைச் சுட்டு நரியைக் காவல் வைத்ததுபோல.
An untrustworthy watchman.

---

6010. நண்டைக் கொடுக் கொடுத்தாற்போல.
Taking the wind out of one's sails.

---

6011. நண்டை நாழிகொண்டளக்கலாமா ?
Too big to be measured like grain.

---

6012. நண்பொருள் கொடுத்து நன்றாய் ஓது.
Urges learning at any cost.

---

6013. நத்த வாழையிலை நித்தம் தாம்பணம்.
There is a great demand for it.

---

6014. நபுஞ்சகன் கையில் அரம்பை அகப்பட்டதுபோல.
A good thing in a bad man's hands.

---

6015. நம்பினபேரை நாட்டில் விடலாமா ?
Never betray those who have trusted you.

---

6016. நஷ்டத்துக்குப் பலர் நயத்துக்கு ஒருவனோ?
A selfish person exposed.

---

6017. நஷ்டத்துக்கு ஒருவன் நயத்துக்கு ஒருவன்.
Each must bear his own gain or loss.

---

6018. நந்தவனத்து ஆண்டிக்கும் முயல் வேட்டைக்கும் எத்தனை தூரம் ?
Said of things quite distinct.

---

6019. நத்தை வயிற்றில் முத்து பிறந்தாற் போல
An agreeable surprise.

---

6020. நந்தன் படவெடுத்த காயமேந்த அம்பலமுமாய்.
Refers to the story of Nanda.

6021. நந்தன் தோல் காசு வழங்கினாற்போல.
An allusion to leather coins.

6022. நந்தோ ராஜா பவிஷ்யதி.
A Sanscrit saying.

6023. நபாப் அத்தனை ஏழை, புலி அத்தனை சாது.
An ironical remark.

6024. நமது தலைமயிர் அவன் கையில் அகப்பட்டுக்கொண்டது.
Caught in the enemy's meshes.

6025. நமனுக்கு நாலு பிள்ளை கொடுத்தாலும், உற்றாருக்கு ஒரு பிள்ளை கொடுக்கமாட்டான்.
Said of a miser.

6026. நமக்காகாதது நஞ்சோடொக்கும்.
What is disliked is called poison.

6027. நமன் எடுத்துக்கொண்டு போகும்பொழுது நழுவி விழுந்தவன்.
One who has escaped death.

6028. நமன் அறியாதஉயிரும் நாரை அறியாத குளமும் உண்டோ?
Persons who possess universal knowledge.

6029. நம்ப வைத்துக் கழுத்து அறுக்கலாமா ?
Betraying one who trusted you.

6030. நம்பின பேரை நடாற்றில் கைவிடலாமா ?
Similar to preceding.

6031. நம்பினபேரை உண்மையிற் காத்தான்.
A faithful benefactor.

6032. நம்பினோர் கெடார், நாடினோர் வாடார்.
Effect of trust and attachment.

6033. நம்மை நம்பவேண்டாம் அம்மானைத் தாலிவாங்கச் சொல்லு.
A sarcastic advice.

6034. நம்மைச் செருப்பாலடித்தாலும் நமதண்ணன் வீட்டுப்பயலை வாடா போடா என்னலாமா ?
A poor relation oppressed.

6035. நம் வீட்டு விளக்கென்று முத்தமிட்டுக் கொள்ளுகிறதா?
Said of a dangerous favourite.

---

6036. நய மொழியால் ஐயமுண்டு.
Sweet words are suspicious.

---

6037. நரா போகம், சரா போகம்.
Said of human intercourse.

---

6038. நரி குசுவிட்டதாம் கடல் கலங்கிற்றாம்.
The boast of an insignificant person.

---

6039. நரி சந்தைக்கு வருமா?
Compare preceding.

---

6040. நரியானது கிணற்றிலே விழுந்தால் தண்டெடு தடி எடு.
No one pities the wicked in trouble.

---

6041. நரியிடத்திலே போகிற தெப்படி, வலத்திலே போகிற தெப்படி, மேலே விழுந்து கடிக்காமல் போகிறது உத்தமம்.
Seeking a way of safety.

---

6042. நரி ஊரைவிட்டுப் புலி ஊருக்குப் போனேன், புலி ஊரும் நரி ஊராயிற்று.
Going from bad to worse.

---

6043. நரி ஒரு சாலுக்கு உழப்போனது.
Like a fox going to plough.

---

6044. நரி கூப்பிட்டுக் கடல் முட்டுமா?
Compare above.

---

6045. நரி கூப்பிடு கடல் ஒதுங்கிப்போகும்.
An ironical saying similar to above.

---

6046. நரி கொழுத்தால் வளையில் இராது.
Effect of good eating.

---

6047. நரி கொழுத்து என்ன, காஞ்சிரம் பழுத்து என்ன?
Certain useless things.

---

6048. நரிக் கிடங் கொடுத்தால் கிடைக்கு இரண்டாடு பிடிக்கும்.
Evil of giving room to the vicious.

---

6049. நரிக்குக் கொண்டாட்டம் நண்டுக்குத் திண்டாட்டம்.
What is pleasure to one is pain to another.

---

6050. நரிக்குட்டிக்கு ஊளை பழக்கவேண்டுமோ?
It knows it instinctively.

---

6051. நரிக்குப் பெரியதனம் கொடுத்தால் கிடைக்கு இரண்டு ஆடு கேட்கும்.
Compare above.

---

6052. நரி நாலு கால் திருடன், இடையன் இரண்டு கால் திருடன்.
Two sorts of thieves.

---

6053. நரிமுன்னே நண்டு கரணம் போட்டதுபோல.
Playing into the hands of your foe.

---

6054. நரியின் கையிலே குடல் கழுவக் கொடுத்தாற் போல.
Trusting your things with a dishonest person.

---

6055. நரிவாலைக் கொண்டு கடல் ஆழம் பார்க்கிறதுபோல.
Great ends and small means.

---

6056. நரி எதிர்த்தால் சிங்கம்.
Even the weak become strong when excited.

---

6057. நரியை வெள்ளரிக்காய் மிரட்டினாற் போல.
A foolish resistance.

---

6058. நரைத்த மயிர்கறுத்து நங்கை நாச்சியார் கொண்டை முடிப்பாளாம்.
Said of a very clever woman.

---

6059. நரை திரை இல்லை, நமனும் அங்கு இல்லை.
Not likely to die soon.

---

6060. நல் இணக்கமல்லது அல்லற் படுத்தும்.
Evil society leads to trouble.

---

6061. நல் இனத்தில் நட்பு வலிது.
Friendship stronger than relationship.

---

6062. நல்ல உயிர் நாற்பது நாள் இருக்கும்.
The chance of a good life.

---

6063. நல்ல எழுத்து நடுவே இருக்கக் கோணல் எழுத்துக் குறுக்கே போட்டது என்ன?
Destiny and life not in harmony.

---

6064. நல்லது தெரியுமா நாய்க்கு?
The base not sensible to goodness.

6065. நல்ல நாச்சியார் கடைந்தமோர் நாழி மூத்துக்கு நாழி மோர்.
Praising the value of one's own product.

6066. நல்ல அமைச்சு இல்லாத அரசு விழி இன்றி வழிச்செல்வோன் போலாம்.
A good minister essential.

6067. நல்லது கெட்டால் நாய்க்கும் வழங்காது.
When the good become bad the case is hopeless.

6068. நல்லதுக்கு ஒரு பொல்லாதது, பொல்லாததுக்கு ஒருநல்லது.
There is always something to oppose you.

6069. நல்ல குடிக்கு காலத்தொரு பங்காளி.
A claimant in every good family.

6070. நல்லது செய்து நடுவழியே போனால் பொல்லாது போகிற வழியே போகிறது.
The evil have their own way.

6071. நல்லது நாற்கலம், ஊத்தை ஒன்பது கலம்.
Evil more than good.

6072. நல்ல கதை நீளமில்லை.
Brevity is the soul of wit.

6073. நல்ல மனைவி நல்லதைக்கண்டால் நமது புருஷனுக்கு என் [பாள்.
Character of a good wife.

6074. நல்ல பாம்பை ஆட்டுகிற பிடாரன் நாகப்பாம்பைக் கண்டு பயப்படுவானா?
The greater includes the smaller.

6075. நல்ல நாளையில் நாழிப் பால் கறவாதது கன்று செத்துக் கலப்பால் கறக்குமோ?
The reverse of preceding.

6076. நல்ல வினைவை அனுசரித்தலே கெட்ட வினைவை நீக்கல்.
Goodness a remedy against evil.

6077. நல்லபாம்பு ஆடியது கண்டு நாக்ப்பூச்சி ஆடியதுபோல.
A mere imitation.

6078. நல்ல மரம் நச்சுக் கனியைத் தராது, நச்சு மரத்திலே நல்ல கனியும் வராது.
Nature cannot be opposed.

6079. நல்ல மரத்தில் புல்லுருவி பாய்ந்தாற் போல.
An evil element creeping into good society.

6080. நல்ல மாடு ஆனால் உள்ளூரில் விலை ஆகாதா?
Worthy people need not go abroad for their livelihood.

6081. நல்ல மாட்டிற்கு ஒரு சூடு, நல்ல பெண்ணுக்கு ஒரு சொல்.
Good people need very little discipline.

6082. நல்லவனுக் கடையாளம் சொல்லாமற் போகிறது.
Bad manners condemned.

6083. நல்ல வீடென்று பிச்சைக்கு வந்தேனை கரியைவழித்துக் கன்னத்தில் தடவினார்கள்.
Expectations frustrated.

6084. நல்லவர் கண்ணில் நாகம் அகப்பட்டாலும் கொல்லார்.
The good inflict no evil even on their foes.

6085. நல்லவன் என்று பெயர் எடுக்க நாட் செல்லும்.
It takes long to obtain a good name.

6086. நல்லவர்கள் ஒரு நாள் செய்த உபகாரத்தை மறவார்.
Gratitude a charateristic of the good.

6087. நல்லவன் ஒருநாள் நடுவே நின்றால் அறாத வழக்கும் அறும்.
The good put an end to disputes.

6088. நல்ல வார்த்தை சொல்லி நாடியைத் தாங்கினான்.
Effect of good words.

6089. நல்ல இளங்கன்றே துள்ளாதே.
Youthful activity.

6090. நல்லறம் உள்ளது இல்லறம்.
Domestic virtue extolled.

6091. நல்ல வேலைக்காரன் ஆற்றோடே போகிறான்.
Good servants very rare.

6092. நல் உடலுக்கு இளைப்பாற்றிக் கொடாவிடினும் நாவிற்குக் [கொடு.
Rest to the tongue more important than rest to the body.

6093. நல்லவர்கள் சங்காத்தம் நல்ல மணலில் விழுந்த நீர்போல உதவும்.
Society of the good beneficial.

6094. நல்லாயிருந்தது தாதரே பல்லை யிளித்துக் கொண்டாடினது.
Ridiculing one's folly.

6095. நல்லானைக் கண்டால் நாய்போல, பொல்லானைக் கண்டால் பூனைபோல.
Mr. Facing-both-ways.

6096. நல்லாரும் நல்ல பாம்பைப்போலத் தங்கள் வலிமையை அடக்கி மறைந்திருப்பார் சில வேளை.
The modesty of the good.

6097. நல்லார் பொல்லாரை நடக்கையால் அறியலாம்.
A tree is known by its fruit.

6098. நல்லாரை நாவு அழியப் பேசினால் பல்லாலே பதக்குப் புழுச் சொரியும்.
Evil of abusing the good.

6099. நல்லாரை நாவில் உரை, பொன்னைக் கல்லில் உரை.
The tongue is the test of character.

6100. நல்லோர் ஒருவருக்குப் பெய்யும் மழை எல்லாருக்கும் ஆம்.
It is the just that brings down the rain.

6101. நல்லோர் நடக்கை தீயோருக்குத் திகில்.
The good are a terror to the evil.

6102. நல்லோர்க்குப் பொறுமையே துணை.
Patience recommended.

6103. நல்லோன் என வளர், நாட்கள் பாரேல்.
Try to earn a good name.

6104. நறுவலிப்பழம் திருத்தினாற்போல.
Attempting what is impossible.

6105. நற்பெண்சாதிக்கு ஒரு வார்த்தை.
Compare above.

6106. நற்சிங்கத்துக்கு நாயா முடி சூட்டுகிறது ?
A person must be fit for the ceremony.

6107. நற்குணமே நல்ல ஆஸ்தி.
Goodness is a treasure.

[பார்.
6108. நற்பெண்டீர் நல்லதைக் கண்டால் நமது நாயகனுக்கு என்
Compare above.

6109. நற்பெண்டுக்கு ஒரு சொல் நல்ல மாட்டுக்கு ஒரு சூடு.
Compare above.

6110. நன்மைசெய்திடில் நாலிடையூறும் வரும்.
Goodness not free from trouble.

6111. நன்றி மறந்தாரை நமெங்கக்கேட்குமே தெய்வம்.
Ingratitude condemned.

6112. நனைத்துச் சுமக்கலாமா?
Adding needless weight.

6113. நனைந்த கிழவன் வந்தால் உலர்ந்த விறகுக்குச் சேதம்.
An expensive guest.

6114. நன்மை செய்தார் நன்மை பெறுவார், தீமை செய்தார் தீமை
பெறுவார்.
You must reap what you sow.

6115. நன்மை செய்ய கர்மம் விளையாது.
No evil comes from good.

6116. நன்மையானதைக் கொடுத்தால் நஷ்டத்திலும் நஷ்டம்.
Compare above.

6117. நன்மையும் தீமையும் இம்மையிலே.
Good and evil manifest themselves even in this life.

6118. நன்மையைப் பெருக்கித் தீமையைக்குறைத்தல் நற்சினேகம்.
Increase good and decrease evil.

6119. நன்மை கடைப்பிடி.
Persevero in goodness.

6120. நன்றாய் இருந்ததாம் கல்வி கட்ட பணிகாரம்.
Acts by a friend always good.

6121. நன்றாயிருந்தாலும் பார்க்க மாட்டார்கள், நலம் தப்பினாலும்
பார்க்கமாட்டார்கள்.
The changing ways of the world.

6122. நன்றாய் முடிவதெல்லாம் நன்றே.
All's well that ends well.

6123. நன்றி மறவேல்.
Be grateful.

6124. நன்றி செய்த கிரிப்பிள்ளையைக் கொன்ற கதைபோல.
Punishing a benefactor.

## நா.

6125. நா அசைய நாடு அசையும்.
The power of speech.

6126. நா என்னும் அட்சரம் நாதன் இருப்பிடம்.
Similar to preceding.

6127. நாகசுரம் என்ன தெரியாதா மத்தளம்போல கலகல என்னும்.
Betrayal of one's ignorance.

6128. நாகசுரம் பொய் நாசனம் பொய் நாயினமாகினேனே.
Lamenting one's reduced condition.

6129. நாகூர் உபசாரமாயிருக்கிறது.
Hollow hospitality.

6130. நாக்குப் புரட்டர் போக்குப் புகல்வர்.
Liars ever ready with excuses.

6131. நாக்குக்கு எலும்பு இல்லை எப்படிப் புரட்டினாலும் அப்படிப் [புரளும்.
A glib tongue.

6132. நாக்கை விற்று ஆக்கித் தின்கிறது.
Living by falsehood.

6133. நாங்களும் கங்கணம் கட்டினது உண்டு கழுத்துக்குக் கங்கணம் கட்டினது இல்லை.
Unprepared for a sudden death.

6134. நாச்சியாரும் ஒன்றைப்பற்றி வார்க்கிறான், நானும் ஒன்றைப் பற்றிக் குடிக்கிறேன்.
Each has his own ends to serve.

6135. நாச்சியாரைக் காணாத இடத்திலே முறுமுறுப்பதுபோல.
Murmuring at one's back.

6136. நாடறிந்த பார்ப்பானுக்குப் பூணூல் ஏன், பிற்குடுமி என்னத் துக்கு?
Too well known to need credentials.

---

6137. நாடிக் கொடுப்பாரைக் கூடிக்கெடுக்கிறது.
Base ingratitude.

---

6138. நாடிய வரம் எல்லாம் நல்கும் நாயகன்.
The Divine Benefactor.

---

6139. நாடு அறிந்த பார்ப்பானுக்குப் பூணூல் வேண்டுமோ?
Compare above.

---

6140. நாடு எங்கும் வாழ்ந்தால் கேடு ஒன்றும் இல்லை.
All prosperity and no evil.

---

6141. நாடு ஏற்பன செய்.
While in Rome, act as Rome does.

---

6142. நாடு கடந்தாலும் நாய்க்குணம் போகுமா?
Change of place means no change of nature.

---

6143. நாடு காடாயிற்று காடு கழனி ஆயிற்று.
A mutual change.

---

6144. நாடெல்லாம் பாதி நாட்டைவாய்க்கால் பாதிசலம்.
Supply unequal to demand.

---

6145. நாட் சென்ற கொடை நடைகூலி ஆகும்.
A delayed gift is no gift.

---

6146. நாட்டாண்மை யாரடா கொடுத்தார் நானும் என் பெண்சாதி யுமாய் வைத்துக் கொண்டோம்.
Self-usurped authority.

---

6147. நாட்டானுக் கொரு சிட்டாள் வெற்றிலை மடிக்க ஒரு வெற் [றாள்.
Everybody requiring a servant.

---

6148. நாட்டான் பெற்ற குட்டி நாகரீகம் பேச வல்ல குட்டி.
A chip of the old block.

---

6149. நாட்டானுக்கு ஒரு சிட்டாளோ?
Compare above.

---

6150. நாட்டுக்கு நல்ல துரை வந்தாலும் தோட்டிக்குப் புல் சுமை [போகாது.
Caste-duty unaffected by change of rulers.

---

6151. நாட்டுக்கு ஒரு மழை நமக்கு இரண்டு மழை.
A selfish desire.

---

6152. நாணமும் இல்லை மானமும் இல்லை.
Destitute of shame and dignity.

---

6153. நாணம் இல்லாத வாத்தி நாலு திக்கும் கூத்தி.
An immoral school-master.

---

6154. நாணம் இல்லாத சிறுக்கி நாலு திக்கும் வாசல்.
An immodest woman.

---

6155. நாணம் இல்லாத பெண் நகைப்புக்கு இடம் வைப்பாள்.
Similar to preceding.

---

6156. நாணிக்கொண்டு சாகச் சாண் கயிறு பஞ்சமா ?
Suicides are ea·ily committed.

---

6157. நாலும்கால் கோணும் நடக்கும் கால் இடறும்.
All are apt to err.

---

6158. நாதமும் கீதமும் ஒத்திருப்பது போல, வேதமும் போதமும் ஒத்திருக்க வேண்டும்.
Procept and practice should agree.

---

6159. நாதிக்காரன் பாதிக்காரன்போல.
Claiming what is not one's right.

---

6160. நாம் ஒருவருக்குக் கொடுத்தால் நமக்கு ஒருவர் கொடுப்பார்.
Give and it will be given.

---

6161. நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்க.
Man proposes and God disposes.

---

6162. நாயடித்த தடி குலைத்தா காண்பிக்கிறது ?
Compare above.

---

6163. நாயா சிங்கத்திற்கு நற்பட்டம் கட்டுகிறது ?
One must be praised by the worthy.

---

6164. நாயாலாகுமா கொக்கைப் பிடிக்க?
An ill-matched race.

---

6165. நாயின் பீயை மிதிப்பான் ஏன், நல்ல தண்ணீர் வார்த்துக் கழுவுவான் ஏன் ?
Why incur needless trouble?

---

6166. நாயும் களிச்சட்டியும்போல.
In unwelcome contact.

6167. நாயும் சரி நரியும் சரி உனக்கு.
One who trusts all alike.

6168. நாயும் தன் நிலத்துக்கு ராஜா.
Every one strong in his own place.

6169. நாயும் பூனையும்போல.
Always quarrelling.

6170. நாயும் வளர்த்து நரகலும் வாருவானேன் ?
Doing good and enduring evil.

6171. நாயுக்கு வெண்டயம் கட்டினால் நாயகனுக்கழகு.
Adorn the menial and adorn the master.

6172. நாயேன் சொல் அம்பலத்துக்கு ஏறுமோ ?
One without influence.

6173. நாயை அடிப்பான் ஏன் பல் இளிவு பார்ப்பான் ஏன் ?
Compare above.

6174. நாயை அடிப்பானேன் பீயைச் சுமப்பானேன் ?
Similar to preceding.

6175. நாயை அடிப்பானேன் காலைக் கடிப்பானேன் ?
Compare two preceding.

6176. நாயை உசுக்கச்செய்து நரி உள்ளே நுழைந்துகொண்டது.
First instigating and then retiring.

6177. நாயை ஏவ, நாய் வாலை ஏவுகிறது.
Repetition of orders.

6178. நாயைக் கண்டு காயங் கரைக்கிறதா ?
Discharge your duty regardless of circumstances.

6179. நாயைக் கண்டால் கல்லைக் காணோம், கல்லைக் கண்டால் நாயைக் காணோம்.
What is wanted is often missing.

6180. நாயைக் கொஞ்சினால் வாயை நக்கும்.
Give an inch to the base and he will take an ell.

6181. நாயைக் குளிப்பாட்டி நடுவீட்டில் வைத்தால் வாலைக் குழை த்துக்கொண்டு பீ தின்னப் போகும்.
Base natures betray themselves.

6182. நாயைக் கொழுக்கட்டையால் எறிந்ததுபோல.
An ineffective punishment.

6183. நாய் அடிக்கக் குறுந்தடி வேண்டுமோ?
Great punishments not needed for small persons.

6184. நாய் அறியுமோ ஒரு சந்திப் பானை?
The base cannot appreciate what is above them.

6185. நாய் இருக்கிற இடத்தில் சண்டை உண்டு.
The base are apt to quarrel.

6186. நாய் ஒரு சிறு எலும்புக்கும் சந்தோஷிக்கும்.
The base are easily pleased.

6187. நாய் கடித்ததற்கும் செருப்பால் அடித்ததற்கும் சரி.
Tit for tat.

6188. நாய்க்கருக் கவசரம், நாலும் மூன்றுமாய்ப் பாடு.
Necessity has no law.

6189. நாய் குலைத்து நத்தம் பாழ் ஆகுமா?
Don't mind mere threats.

6190. நாய் குலைத்து விடியுமா, கோழி கூப்பிட்டு விடியுமா?
Don't mistake one thing for another.

6191. நாய் கெட்டகேட்டுக்கு மாமரத்து நிழல், அது கெட்ட கேட் டுக்குப் புளியிட்ட கறி.
The base making too much of themselves.

6192. நாய் கெட்ட கேட்டுக்குத் தேங்காய்ப்பாலும் சோறுமா?
Similar to preceding.

6193. நாய் கொண்டுபோன பானையை ஆர் கொண்டுபோனால் என்ன?
Once polluted always polluted.

6194. நாய் கோவிலுக்கு போவான் ஏன், கோயில் காத்தவன் தென் டம் இறுப்பான் ஏன்?
Wilful losses condemned.

6195. நாய்க்கு நரிக்குணம்.
Dogs similar to foxes.

6196. நாய்க்குக் கடிவாளம் பூட்டினதுபோல.
An unusual way of controlling one.

6197. நாய்க்குத் தெரியுமா கொக்குப் பிடிக்க ?
We cannot act against nature.

6198. நாய்க்குத் தெரியுமோ தோல் தேங்காய் ?
The base cannot distinguish one from another.

6199. நாய்க்கு நறுநெய் இணங்காது.
A dog's dislikes.

6200. நாய்க்கு இரும்புக்கடையில் அலுவல் என்ன ?
It can get nothing there.

6201. நாய்க்கு முழுத் தேங்காய் தகுமா ?
It cannot break it.

6202. நாய்க்கு வேலையும் இல்லை, நிற்க நேரமும் இல்லை.
Neither work nor leisure.

6203. நாய்க்கு மூத்தால் தாய்க்கும் ஈயாள்.
Effect of old age.

6204. நாய்க்கு ஏன் தேங்காய், நடுவீட்டுக்குள் போட்டு உருட்டவோ ?
A good thing in unworthy hands.

6205. நாய்க்குப் பெயர் முத்துமாலை, அதற்கு ஆக்கிப் படைக்கிறது வரகந்தவிடு.
Title *versus* condition.

6206. நாய்க்கொரு சூல் அதற்கொரு மருத்துவச்சியா ?
The base seeking comforts.

6207. நாய் சந்தைக்குப் போனதுபோல.
The base in superior undertaking.

6208. நாய் சமுத்திரத்திலே போனாலும் நக்குத் தண்ணீர்.
One never gets rid of one's low habits.

6209. நாய் சிங்கத்துக்குப் பட்டம் கட்டுமோ ?
Compare above.

6210. நாய் நக்கிச் சமுத்திரம் குறையுமா ?
A little cannot affect much.

6211. நாய் பட்ட பாடு கொம்புக்குத் தெரியும் ?
Said of a good punishment.

6212. நாய் வாய்ப்பட்ட தேன் நல்லது ஆமா ?
Compare above.

6213. நாய் வாலிலே தேன் வைத்தால் ஆருக்குக் கூடும் ?
A good thing in an unsuitable place.

6214. நாய் வாசலைக் காத்து என்ன, கை இல்லாதவன் பணக்கார
னைக் காத்து என்ன ?
You can get nothing there.

6215. நாய் வாலைக் குணக்கு எடுக்கலாமா ?
Nature cannot be altered.

6216. நாய் வாலைப் பற்றி ஆற்றில் இறங்கலாமா ?
Dont rely on small means for great efforts.

6217. நாய் வாழ்ந்து என்ன, பூனை தாலி அறுத்து என்ன ?
The obscure do not affect society.

6218. நாய் வால் சிலைபோல.
In perpetual motion.

6219. நாய் விற்ற காசு குலைத்துக் காட்டுமோ ?
Money has its value always.

6220. நாய் வேஷம் போட்டால் குலைக்கவேண்டும்.
Whatever is undertaken must be carried out.

6221. நாரதர் கலகப் பிரியர் ?
A prefomenter of dissensions.

6222. நார் அற்றால் கூடும், நரம்பு அற்றால் கூடுமோ ?
What can and cannot be re-united.

6223. நாலடி அடித்துப் போர்மேல் போட்டாச்சுது.
Said of threshing corn.

[வான்
6224. நாலாம் தலைமுறையைப் பார்த்தால் நாவிதனும் சிற்றப்பனு
Caste not older than four generations.

6225. நாலாவது பெண் நாதாங்கி முளைக்கும் நீக்கு இல்லை.
A fourth-born girl unfortunate.

6226. நாலு செத்தை கூடினது ஒரு கத்தை.
Recommends union.

6227. நாலு ஆறு கூடினால் பாலாறு.
How rivers are formed.

6228. நாலு பிள்ளை பெற்றவளுக்கு நடுத் தெருவிலே சோறு.
She is deserted by her husband.

6229. நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி, ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி.
What gives strength to words.

6230. நாலு பேர் கூடினது சபை.
How an assembly is formed.

6231. நால்வர் கூடினால் தேவசபை.
Compare preceding.

6232. நால்வரோ தேவரோ?
Is it four men or gods.

6233. நால்வர் வாக்குத் தேவர் வாக்கு.
Similar to preceding.

6234. நாவில் பிறக்கும் நன்மையும் தீமையும்.
Out of the same mouth proceedeth cursing and blessing.

6235. நாவுக்கு இசைந்தால் பாவுக்கு இசையும்.
Well sung—well composed.

6236. நாவுக் கெலும்பில்லை, எப்படி புரண்டாலும் புரளும்.
Compare above.

6237. நாவுள்ளவன் கழு ஏற மாட்டான்.
Power of a glib tongue.

6238. நாவைச் சுற்றிப் பிடிக்கிற நாகத்துக்கு நாள் கேட்டாலும் இரை வெட்ட.
Foolish delay.

6239. நாழி அரிசி சோறு உண்டவன் நமனுக்கு உயிர் கொடான்.
While there is appetite there is no danger.

6240. நாழி உப்புந் நாழி அப்பும் நாழியான ஆறுபோல்.
Addition and yet no increase.

6241. நாழி நெல்லுக்கு ஒரு புடவை விற்றாலும் நாய்க்கு நிருவா
ணம் போகுமா.
Nature independent of circumstances.

6242. நாழிப்பணம் கொடுத்தாலும் ஞாளிப் பட்டம் போகாது.
Defects cannot be bought off.

6243. நாழி முகவாது நானாழி.
One measure cannot contain four.

6244. நாழிவரச் சீதேவி, மரக்கால்வரச் சீதேவி.
Good fortune for great as well as small favours.

6245. நாளுக்கு நாள் கருகிறது காரணமானே.
Becoming worse day by day.

6246. நாளைக்குத் தெரியும் நாச்சி யாத்தாள் மாரடி.
To-morrow reveals to-day's secrets.

6247. நாளைக்குத் தின்கிற பலாப்பழத்திலும் இன்றைக்குத் தின்கிற
களாப்பழம் நல்லது.
Better what is certain than what is not.

6248. நாளைக்குக் கலியாணம் பிடியடா பாக்குவெற்றிலை.
In a great hurry.

6249. நாளை வருகிற பலாக்காயிலும் இன்றைக்கு வருகிற களாக்
காய்மேல்.
Compare above.

6250. நாள் ஆற்றுகிறது நல்லார் ஆற்றார்.
Time the great Physician.

6251. நாள் ஒரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்
கிறான்.
Brought up in luxury.

6252. நாள் செய்கிறது நல்லார் செய்யார்.
Compare above.

6253. நாள் வருமட்டும் நாராய் தோலாய் இழுத்துக் கொண்டிருக்
[கும்.
Said of an old person not dying soon.

6254. நாறத் தூற்றல் நரிக்குக் கொண்டாட்டம்.
A jackal's tastes.

6255. நாற வாயன் தேடக் கர்ப்பூர வாயன் அழித்தான்.
One gathers and another scatters.

6256. நாற வாயன் தேட ஊத்தை வாயன் உண்ண.
One earns and another enjoys.

6257. நாறல் மீனைப் பூனை பார்ப்பதுபோல.
Casting greedy eyes.

6258. நாறல் சாணியை மிதிப்பான் ஏன், நல்ல தண்ணீர் வார்த்துக் கழுவுவான் ஏன்?
Wilfully seeking evil.

6259. நாறற் சோற்றுக்குப் பதம் பார்ப்பான் ஏன்?
Dont be troubled about what is useless.

6260. நாறற் சடலம் நலம் இல்லா மட்டாண்டம்.
A foul body condemned.

6261. நாற்கலக் கூழுக்கு நானே அதிகாரி.
Master of one's own affairs.

6262. நாற்பது சென்றால் நாய்க்குச் சரி.
Compare above.

6263. நாற்பது வயதுக்குமேல் நாய்க்குணம்.
Similar to preceding.

6264. நானிலம் தன்னில் நாயகம் கல்வி.
The value of learning.

6265. நானும் நரைத்து நரைமண்டை ஆனேன் காடு நடக்கக் கண்டது புதினம்.
Said of innovations.

6266. நானும் அறியேன் அவனும் பொய் சொல்லான்.
A mere *ipse dixit*.

6267. நானும் வந்தேன் மாமியார்வீட்டு நாற்றமும் போச்சுது.
Native opinion of one's mother-in-law.

6268. நான் இட்ட மருந்தன்மைப் போக ஒட்டுமோ கன்றூரிவேரு
னனைச் சாக ஒட்டுமோ?
Efficacy ot charms.

6269. நான் ஒன்றை எண்ண விதி ஒன்றை எண்ணிற்று?
Compare above.

6270. நான் கண்ணூரக்கண்டேன் நாராயணைக் குழம்பு வேண்டாம்.
A great aversion.

6271. நான் பட்ட பாடு நாய்த்தாலும் படாது.
Said of one's own sufferings.

6272. நான் போனால் சண்டை வரும், எங்கக்கான் போனால் மயி
ரைப் பிடித்திழுத்து வருவான்.
One is worse thın the other.

6273. நான் கண்டதே காட்சி நான் கொண்டதே கொள்கை.
A self-opinionated person.

6274. நான் நட்டேன் நாதன் பயிர் ஆக்கினான்.
It is God that giveth the increase.

6275. நான்பிடித்த முயலுக்கு மூன்றுகால்.
Extolling one's own.

## நி.

6276. நிசம் ஒன்று பல தீங்கு நீக்கும்.
The great value of truth.

6277. நிசங்களுக்கு கோட்டை முற்றுகை கண்டதுண்டா?
The truthful need no defence.

6278. நிதம் கண்ட கோழி நிறம்கெடும்.
Familiarity breeds contempt.

6279. நித்தம் சாவார்க்கு அழுவாருண்டா?
We get used to continned grief.

6280. நித்தம் போனால் முற்றம் சலிக்கும்.
Compare above.

6281. நித்தியகண்டம் பூரணாயுசு.
One secret of long life.

6282. நித்திய தரித்திரனுக்கு ஆசை அதிகம்.
Professional beggars very covetous.

6283. நித்தியம் கிடைக்குமா அமாவாசைச் சோறு ?
Good feasts very rare.

6284. நித்திரையிலும் தண்ணீர்ப்பால் குடிக்கிறதில்லை.
Said of a most cautious person.

6285. நித்திரை சத்துரு.
Compare below.

6286. நித்திரை சத்துரு, சேரிழை சத்துரு.
Tamil opinion of sleep and women.

6287. நித்திரை சுகம் அறியாது.
Sleep seeks no luxury.

6288. நிந்தனை சொல்லேல், நீதி கைப்பிடி.
Against slandering.

6289. நிமிஷநேரம் நிற்கும் இன்பம் சிற்றின்பம்,
Transient nature of pleasure.

6290. நிமிஷநேரம் நீடிய இன்பம்.
Similar to preceding.

6291. நிமித்தம் பார்க்கிறவன் இரண்டகக்காரி மகன், பொருத்தம்
பார்க்கிறவன் பொல்லாங்கன் புத்திரன்.
The superstitious are disliked.

6292. நிமிர்ந்துபோட்டது என்ன, குனிந்து எடுத்தது என்ன ?
Conceit and humility contrasted.

6293. நிமைப்பொழுதேனும் இல்லை நீச உடல்.
The fleeting nature of the body.

6294. நியாயத்தைக் கண்டால் நெடுந்தூரம் ஓடி நிற்கும்.
Justice not very agreeable.

6295. நிருபனுனபோதே கர்வமெத்தவுண்டு.
First appearance of conceit.

6296. நிருவாணதேசத்தில் நீர்ச்சீலை கட்டினவன் பைத்தியகாரன்.
Where ignorance is bliss 'tis folly to be wise.

6297. நிலத்தில் எழுந்த பூண்டு நிலத்தில் மடியவேண்டும்.
Birth and death on the earth.

6298. நிலத்தினால் நீரின் தன்மை குன்றினாற்போல.
One affecting another in contact therewith.

6299. நிலத்திற்குத் தகுந்த களியும், குலத்திற்குத் தகுந்த குணமும்.
Character according to family.

6300. நிசாமல்லுத் தண்டில் நிஜார்க்காரனை கண்டதுண்டா?
Something rare.

6301. நிலம் கடக்கப் பாயலாமா?
Not in a single leap.

6302. நிலவுக்கு ஒளித்துப் பரதேசம் போனதுபோல.
A foolish enterprise.

6303. நிலை விட்டால் நீச்சு.
If one support is lost, seek another.

6304. நிலையில்லான் வார்த்தை நீர்மேல் எழுத்து.
An unreliable person.

6305. நிலையிற்பிரியேல்.
Maintain your ground.

6306. நில்லாத காலடி நெடுந்தூரம் போகும்.
Value of continued effort.

6307. நில்லாது எதும், நிலையே கல்வி.
Learning contrasted with other acquisitions.

6308. நிழல் கடக்கப் பாயலாமா?
Compare above.

6309. நிழலுக்கும் கனவுக்கும் ஒத்தது ஆக்கை.
What the body is like.

6310. நிழல் அருமை வெயிலில் போனால் தெரியும்.
The good are appreciated after they are lost.

6311. நிழல் நல்லது முசிறு பொல்லாதது.
A mixture of good and evil in the same person.

6312. நிறைந்த ஆற்றிலே பெருங்காயம் கரைத்தாற்போல.
Said of one's influence which is not felt.

6313. நிறை பொதியிலே கழுதை வாய் வைத்தாற்போல.
A daring usurpation.

6314. நிறையக் குறுணி வேண்டாம், தலை தடவிக் குறுணி கொடு.
A modest request.

6315. நிறைகுடம் தளும்பாது.
The modesty of the great.

6316. நிற்க ஜீவனில்லாமற்போனாலும் பேர் நிரப்புக்கட்சி.
Namo *versus* character.

6317. நினைக்குமுன் வருவான் நினைப்பதும் தருவான்.
The Divine nature.

6318. நினைத்த நேரம் நெடுமழை பெய்யுமா?
Good things not at our disposal.

6319. நினைத்தது இருக்க நினையாதது எய்தும், நினைத்தது வந்தாலு
ம், வந்து நேரும்.
Limitedness of human knowledge.

6320. நின்ற மரத்தில் நெடு மரம் போனால் நின்ற மரமே நெடுமரம்.
In the absence of the first, the second is the first.

6321. நின்ற வெள்ளத்தையும் வந்த வெள்ளம் கொண்டுபோயிற்று.
One calamity ovortaking another.

6322. நின்றுபோட்டது மில்லை குனிந்து எடுத்தது மில்லை.
Another form of 6292.

6323. நின்றால் நெடு மரம் விழுந்தால் பனைமரம்.
Opinion changing according to position.

6324. நின்றாற்போல் விழுந்தால் தலை உடையும்.
Effect of a sudden fall.

6325. நின்றான் இருந்தான் கிடந்தான் தன்கேளறச்சென்றான்.
Said of the death of a selfish persou.

6326. நின்று தின்றால் குன்றும் குறையும்.
Slow eating commended.

6327. நிஷ்டூரன் தன்னைத் தெய்வம் கெடுக்கும், நீதிமான் தன்னை பரிதானம் கெடுக்கும்.
Bribery condemned.

---

## நீ.

6328. நீக்குப் போக்குத் தெரியாமல் சேர்த்தபடி.
Said of a thoughtless action.

---

6329. நீக்கும் பேபே நீ தூதாவுக்கும் பேபே.
Not afraid of an opponent.

---

6330. நீக்கொரு மாட்டா நேக்கொரு மூட்டா.
Compare preceding.

---

6331. நீசரானவர் நிலைபெறக் கல்லார்.
The base will not learn properly.

---

6332. நீ சொம்மு நாசொம்மே! நாசொம்மு நீசொம்மே.
No difference between mine and thine.

---

6333. நீச்ச நிலையில்லாத ஆற்றிலே நின்றெப்படி முழுகுகிறது?
Too deep to be trusted implicitly.

---

6334. நீட்டவும் மாட்டார், முடக்கவும் மாட்டார்.
Said of an inactive person.

---

6335. நீட்டு வித்தை ஏறாது.
Prolonged study will not avail.

---

6336. நீண்ட கை நெருப்பு அள்ளும்.
Value of a long arm.

---

6337. நீண்ட தச்சும், குறுகிய கொல்லும்.
What each workman prefers.

---

6338. நீண்ட புல் நிற்க நிழலாமா?
A single person no proper support.

---

6339. நீதி அற்ற பட்டணத்தில் நிறைமழை பெய்யுமா?
Rain depends on righteousness.

---

6340. நீதி கேளாமல் தலை வெட்டுவோர்களா?
No punishment without trial.

---

6341. நீதிமான் தீவினை செய்யிற் பிழைப்பானோ, நீதி இல்லாதவன் நீதி புரிந்தால் மரிப்பானோ?
Intrinsic worth of righteousness.

6342. நீந்தமாட்டாதவனை ஆறு கொண்டுபோகிறது.
The case of the incompetent.

6343. நீ படித்த பள்ளியிலே தான் நானும் படித்தேன்.
My knowledge equal to yours.

6344. நீ பிறர்க்கு உதவி செய்தால் தெய்வம் உனக்கு உதவி செய்யும்.
The merciful will obtain mercy.

6345. நீபோய் அலப்பிப்போட்டு வராதே, நான் போய் உளறிப்போட்டு வருகிறேன்.
One stupid person offering to help another.

6346. நீரில்லா நாடு நில வில்லா முற்றம்.
Value of water and the moon.

6347. நீரகம் பொருந்திய ஊரகத்திரு.
Compare preceding.

6348. நீரளவே ஆகுமாம் நீராம்பல்.
One cannot exceed one's natural ability.

6349. நீராலே விலகினாய் நான் நெருப்பாலே விலகினேன்.
Each saved by a different cause.

6350. நீரில் அமிழ்ந்தின சுரைக்காயைப் போல.
Sinking at the first attempt.

6351. நீரில் எழுத்தாகும் ஆக்கை.
The body will not last.

6352. நீரிற் குமிழி இளமை.
Youth is a bubble on water.

6353. நீரும் கொல்லும் நெருப்பும் கொல்லும்.
Even opposites produce the same result.

6354. நீரும் பாசியும் கலந்தாற்போல.
Mixture of two dissimillar characters.

6355. நீரை அடித்தால் நீர் விலகுமா?
The coagulous nature of water.

6356. நீரைக்கழுவி நிழலைப் புதைப்பது போல.
Attempting impossibilities.

6357. நீரைச் சிந்தினையோ சீரைச் சிந்தினையோ?
The solemnity of an oath.

6358. நீரைத் தொட்டாயோ பாலைத்தொட்டாயோ?
Always distinguish between things.

6359. நீரோட்டத்தில் தெப்பம் செல்லும் தன்மைபோல்.
To be easily caught in one's power.

6360. நீர் ஆழம் கண்டாலும் நெஞ்சு ஆழம் காணப்படாது.
The great depth of the mind.

6361. நீர் உயர நெல் உயரும்.
Value of water for agriculture.

6362. நீர் உள்ள மட்டும் மீன் குஞ்சு துள்ளும்.
One feels at home in one's element.

6363. நீர் என்று சொன்னால் நெருப்பு அவியுமா?
Mere talk is not action.

6364. நீரென்று சொன்னதினால் நெருப்பு அவிவதும், சர்க்கரை என்று சொன்னதினால் வாயினிப்பதுமுண்டா?
Compare above.

6365. நீர் என்று சொல்ல நெருப்பாய் முடிந்தது.
Begun with one and end with another.

6366. நீர்க்கடன் நிழற்கடன் கொடுத்து வைத்தமட்டும் இருக்கும்.
Certain debts depend on destiny.

6367. நீர்க்குட் பாசிபோல் வேர்க்கொள்ளாது.
Will not last long.

6368. நீர்ச் சோறு தின்று நிழலிலிருந்தால் மலடிக்கு மசக்கைவரும்.
Effect of good living on a barren woman.

6369. நீர் பூத்த நெருப்பு போல்.
Not very effective.

6370. நீர் போனால் மீன் துள்ளுமா?
Compare above 6362.

6371. நீர்ப் பாண்டு மெய்யானால் கௌபீனந் தாங்குமோ?
Refers to disease of the testes.

6372. நீர்ப்பாம்பு கடித்தாலும் இரஸபட்டி ஆகும்.
The bite of water-nakes.

6373. நீர்மேற் குமிழிபோல் நிலை இல்லாக் காயம்.
Compare above.

6374. நீர்மேல் எழுத்து நிற்குமா?
Writing on water.

6375. நீர்மோருக்குக் கதியற்ற வீட்டிலே ஓமத்திற்குப் பசு நெய் கேட்டாற்போல.
Seeking something in an unlikely place.

6376. நீலத்துக்குக் கறுப்பு ஊட்டவேண்டுமா?
Not necessary; it is already black.

6377. நீலம் கட்டுப்பட்டுப் பேசுகிறது.
A special pleading.

6378. நீலிக்குக் கண்ணீர் நிமையிலே.
A peevish woman.

6379. நீர் விளையாடேல்.
A good counsel—especially to the children.

6380. நீறில்லா நெற்றி பாழ் நெய்யில்லா உண்டி பாழ்.
Certain indispensables.

## நு.

6381. நுனிக்கிளையிலிருந்து அடிக்கிளையை வெட்டினாற்போல.
Cutting the ground under one's feet.

6382. நுட்ப புத்திமான் திட்ப சித்தவான்.
Shrewdness and success.

6383. நுண்ணிய ஞானம் உரைப்பார்கள் சொன்னதில் ஒன்றும் நடவார்கள்.
Precept *versus* example.

6384. நுண்ணிய கருமமும் எண்ணித் துணி.
Commends deliberation.

6385. நுண்பொருள் கொடுத்து நுண்ணியராவர்.
How to become acute.

---

6386. நுண்மை நுகரேல்.
Be not particular in food.

---

6387. நுரை ஒத்ததுவே தரையிற் பவுசு.
Wealth compared to froth.

---

6388. நுரையைத் தின்றால் பசிபோகாது.
You cannot live on froth.

---

6389. நுழை விட்டு செய், நூல் கற்று அடங்கு.
Two good bits of advice.

---

6390. நுளையன் அறிவானோ ரத்தினத்தின் பெருமையை?
The base ignorant of superior things.

---

6391. நுளையன் பேச்சு அம்பலத்தில் ஏறுமா?
A fisherman despised.

---

6392. நுளையிலே ஆசாரமா?
No etiquette in mean occupations.

---

6393. நுனிக்கொம்பில் ஏறி அடிக்கொம்பு வெட்டுவார்களா?
Compare above.

---

## நூ.

6394. நூல் அளவே ஆகுமாம் நுண்ணறிவு.
Knowledge and literature.

---

6395. நூல் இல்லாமல் மாலை கோத்ததுபோல.
Discarding instrumentality.

---

6396. நூல் கற்றவனே மேலவன் ஆவான்.
Learning extolled.

---

6397. நூறு ஆண்டு ஆகினும் கல்வியை நோக்கு.
Similar to preceding.

---

6398. நூறு குற்றம் ஆறு பிழை கொண்டு பொறுக்கவேண்டும்.
Urges a forgiving disposition.

---

6399. நூறுநாள் ஓதி ஆறுநாள் விடத் தீரும்.
What takes long to learn may be lost very soon.

6400. நூறோடே நூறு ஆகிறது செய்யிலே கட்ட பணிகாரம்.
Encourages borrowing.

6401. நூற்கவேண்டுமென்றால் வெண்ணெய்க்கட்டிபோல் நூற்க [லாம்.
Where there is a will, there is a way.

6402. நூற்றுக்கு இருந்தாலும் கூற்றுக்கு இரை.
Even longevity is not proof against death.

6403. நூற்றுக்கு இருப்பார் ஐம்பதில் சாகார்.
Great age certain after *fifty*.

6404. நூற்றுக்குமேல் ஊற்று, ஆயிரத்துக்குமேல் ஆற்றுப்பெருக்கு.
An agricultural saying.

6405. நூற்றுக்குமேல் ஊற்று.
Similar to preceding.

6406. நூற்றுக்கு ஒரு பேச்சு ஆயிரத்துக்கு ஒரு தலை அசைப்பு.
How pride develops.

6407. நூற்றைக் கெடுத்தது குறுணி.
A little enough to corrupt much.

6408. நூன்முறை தெரிந்து சீலத்தொழுகு.
Knowledge and virtue commended.

## நெ.

6409. நெசவாண்டிக்கேன் கொந்திப் பில்லா ?
Avoid a mischievous companion.

6410. நெஞ்சிலக்கணந் தெரியாதவனுக்குப் பஞ்சலக்கணந் தெரிந்துபலனென்ன ?
Beauty of soul more important than beauty of knowledge.

6411. நெஞ்சு அறியப் பொய்சொல்லலாமோ?
Wilful falsehood condemned.

6412. நெஞ்சை ஒளித்து ஒரு வஞ்சகம் இல்லை.
There is no unconscious deceit.

6413. நெடியார் குறியாரை ஆற்றிலே தெரியும்.
A good list of stature.

---

6414. நெடுங்காலம் நின்றாலும் நெல் முத்திப்பணம் ரெட்டி.
The poor not sure of their earnings.

---

6415. நெடும் கடல் ஓடியும் நிலையே கல்வி.
Learning is a lasting bliss.

---

6416. நெடும் பகலுக்கும் அஸ்தமனம் உண்டு.
Everything has an end.

---

6417. நெடுமரம் விழுந்தால் நிற்கிற மரம் நெடுமரம்.
When the first goes, the second becomes first.

---

6418. நெட்டி ஒரு பிள்ளைச் சர்க்கரை குட்டி ஒருபிள்ளையா ?
Two kinds of children contrasted.

---

6419. நெய்உருக்கி மோர்பெருக்கி நீர் அருக்கிச் சாப்பிடவேண்டும்.
A good method of eating.

---

6420. நெய்கிறவனுக்கு என் குரங்குக்குட்டி ?
Compare above 6409.

---

6421. நெய்க்குடத்தில் எறும்பு மொய்த்ததுபோல.
So many after the same pursuit.

---

6422. நெய்க்குடம் உடைந்தால் நாய்க்கு விருந்து.
Mean persons make a feast of any thing.

---

6423. நெய்க்குடம் உடைந்தது நாய்க்கு வேட்டை.
Similar to preceding.

---

6424. நெய் முந்தியோ திரி முந்தியோ ?
Give each its rightful place.

---

6425. நெய்யுந் திரியும் போனால் நிற்குமா விளக்கு ?
Essential supports necessary.

---

6426. நெய்வார்த்த கடன் நின்று வாங்கினாற்போல.
Insisting on one's claims.

---

6427. நெய்வார்த்துண்டது நெஞ்சறியாதா ?
Consciousness the best witness.

---

6428. நெருஞ்சிமுள் தைத்தாலும் குனிந்து பிடுங்கவேண்டும்.
Removal of evil not painless.

6429. நெருப்பிருக்கிற காட்டை நம்பினாலும் நீரிருக்கிற காட்டை நம்பக்கூடாது.
Water more dangerous than fire.

6430. நெருப்பில் ஈ மொய்க்குமா?
No one seeks repulsive people.

6431. நெருப்பினும் பொல்லாது கருப்பின் வாதை.
Famine worse than fire.

6432. நெருப்பினும் பொல்லாச் செருப்பு.
Tamil people don't like shoes.

6433. நெருப்பிலே நெய்யை விட்டது போல.
Sure of destruction.

6434. நெருப்பிலே புழு பற்றுமா?
Compare above.

6435. நெருப்பு ஆறும் மயிர்ப்பாலமும்.
In a terrible calamity.

6436. நெருப்பு இல்லாமல் நீள் புகை எழும்புமா?
No effect without a cause.

6437. நெருப்பு இல்லாமற் புகை புகையுமா?
Similar to preceding.

6438. நெருப்பு நின்றகாட்டிலே ஏதாவது நிற்கும் நீர் நின்றகாட்டில் ஒன்றும் நிற்காது.
Compare above.

6439. நெருப்பு என்றால் வாய்வெந்து போகுமா?
Nominal *versus* real.

6440. நெருப்பைக்கண்டு மிதித்தாலும் சுடும், காணாமல் மிதித்தாலும் சுடும்.
Evil is done publicly or privately.

6441. நெருப்பை மடியிலே கட்டிக்கொண்டிருக்கிறான்.
He is in imminent danger.

6442. நெருப்பிலே போட்டாலும் நெஞ்சு வேகாது.
The indestructible soul.

6443. நெருப்பிலே விழுந்த புழுப்போல் துடிக்கிறது.
In frightful agony.

6444. நெருப்புப் பந்தலிலே மெழுகுப்பதுமை ஆடுமோ?
No exhibition before a formidable foe.

6445. நெருப்பைச்சார்ந்த யாவும் அதன் நிறமாகும்.
A valuable truth.

6446. நெருப்புச் சிறிது என்று முன்றானையில் முடியலாமா?
Evil not to be measured by size.

6447. நெருப்பைத் தலைகீழாய்ப் பிடித்தாலும் அதின் சுவாலை கீழாகுமா?
Nature cannot be altered.

6448. நெல்கொண்டு போமளவும் நில்லாய் நெடுஞ் சுவரே.
An agriculturist's prayer.

6449. நெல் இருக்கப் பொன், எள் இருக்க மண்.
Paddy and sesamum contrasted.

6450. நெல் எடுக்கவும் புல் எடுக்கவும் ஆச்சோ?
Bewailing one's reduced condition.

6451. நெல்லுக் கடைமாடு கன்றுபோடட்டும்.
A good wish.

6452. நெல்லுக்குத் தானும் பொன்னுக்குத் தோழனும்.
A selfish wish.

6453. நெல்லு குத்துகிறவர்களுக்கு கல்லுப்பரிட்சை தெரியுமா?
Each knows his own work.

6454. நெல்லும் உப்பும் பிசைந்து உண்ணக்கூடுமோ?
Unmixable natures.

6455. நெல்லுக்குப் பாய்கிற தண்ணீர் புல்லுக்கும் பாயுமாம்.
Dogs eating crumbs from the master's table.

6456. நெல்லுவகை எண்ணினாலும் பள்ளவகை எண்ணக்கூடாது.
Easier to know paddy than ground level.

6457. நெல்விளைந்த பூமியும் அறியாய், நிலா எறித்த முற்றமும் அறியாய்.
Great ignorance.

6458. நெறி தப்புவார்க்கு அறிவிப்பது வீண்.
Knowledge useless to the vicious.

6469. நெற்பயிர் விளை.
Agriculture commended.

6460. நெற்றிக்கண்ணைக் காட்டினாலும், குற்றம் குற்றந்தான்.
Guilt not removed by bullying.

6461. நெற்றியிலே மூன்றுகண் படைத்தவன் வரவேண்டும்.
Siva's presence invoked.

## நே.

6462. நேத்திர மணியே சூத்திர அணியே.
The mechanism of the eye extolled.

6463. நேயமே நிற்கும்.
Love alone lasts.

6464. நோராநோன்பு சீர் ஆகாது.
Fasting without a vow is profitless.

6465. நேரும் சீருமாய்ப் போகவேண்டும்.
An upright life urged.

6466. நேருத்திரம் சென்மப்பழி.
A family saying.

6467. நேர்ந்து நேர்ந்து சொன்னாலும், நீசக்கசடர் வசம் ஆகார்.
The base will never improve.

6468. நேர்பட ஒழுகு.
A good advice.

6469. நேற்று வெட்டின கிணற்றிலே முந்தாநாள் வந்த முதலை.
An unlikely incident.

6470. நேற்றுவந்த மொட்டைச்சி நெய் வார்த்து உண்ணைக் கிறுக்கு [கிறாள்.
Demanding too much.

6471. நேற்று வந்தாளாம் குடி அவள் தலையில் விழுந்ததாம் இடி.
A sudden disaster.

---

## நை.

6472. நைஷதம் புலவர்க்கு அவிஷதம்.
A famous Tamil poem.

---

6473. நைபவர் எனினும் நொய்ய உரையேல்.
Be polite even to the poor.

---

6474. நையக் கற்றினும் நொய்ய நன்குரை.
Speak effectively.

---

6475. நைவினை நணுகேல்.
Approach not evil ways.

---

## நொ.

6476. நொடிப்போதும் வீணிடேல்.
Waste not even a moment.

---

6477. நொண்டி நொண்டி நடப்பானேன், கண்டதற்கு எல்லாம் படைப்பானேன்?
Why incur evil wilfully?

---

6478. நொண்டி ஆயக்காரன் கண்டு மிரண்டெகிறதுபோல.
A useless threat.

---

6479. நொண்டிக் குதிரைக்குச் சறுக்கினது சாக்கு.
A stupid servant has plenty of excuses.

---

6480. நொந்த கண் இருக்க நோகாக் கண்ணுக்கு மருந்து.
Remedying the wrong party.

---

6481. நொந்து அறியாதவர் செந்தமிழ் கற்றோர்.
Effect of knowing good Tamil.

---

6482. நொய் யரிசி கொதி பொறுக்குமா?
The small cannot bear persecution.

---

6483. நொய்யவரென்பவர் வெய்யவராவர்.
Who become cruel?

---

6484. நொறுவை தின்றால் நூறு வயது.
A doubtful advice.

6485. நொறுங்குண்டவனைப் புறங்கொண்டோயாய்.
Bruise not the broken reed.

## நோ.

6486. நோக்காது உணர்வோர் கல்வியை நோற்பார்.
Understanding necessary for learning.

6487. நோகாமல் அடித்தேன் ஓயாமல் அழுதாள்
Corresponding effect.

6488. நோக்கத் தொடங்கு.
Keep to your aim.

6489. நோக்க நோக்குவ நோக்காமுன் நோக்குவன்.
The Divine foresight.

6490. நோயற்ற வாழ்வே வாழ்வு,குறைவற்ற செல்வமே செல்வம்.
Life and wealth defined.

6491. நோயாளி தலைமாட்டில் பரிகாரி இருந்தழுதாற்போல.
The doctor turning chief mourner.

6492. நோயாளிக்கு ஆசை வார்த்தை சொன்னாற் போல.
Giving hope to the patient.

6493. நோயாளி விதியாளி ஆனால் பரிகாரி பேராளி ஆவான்.
Patient and physician contrasted.

6494. நோயாளிக்குத் தெரியும் நோயின் வருத்தம்.
He who suffers knows what suffering is.

6495. நோய் கொண்டார் பேய் கொண்டார்.
Nature of disease.

6496. நோய்ஞ்சற் பூனை மதனை நக்குமாபோல.
Starving and emaciated.

6497. நோய்த்த புலி ஆகிலும் மாட்டுக்கு வலிது.
Natural strength.

6498. நோவாமையினால் மேலானது போம்.
Vows urged.

6499. நோவு ஒரு பக்கம் இருக்கச் சூடு ஒரு பக்கம் போட்டாற் போல்.
Remedying the wrong spot.

6500. நோன்பு என்பது கொன்று தின்னாமை.
Against killing and eating.

## நௌ.

6501. நௌவித் தொழில் நலம்.
Youthful effort commended.

6502. நௌவியிற்றானே தெய்வநினைக்கல்.
Youthful piety urged.

6503. நௌவியும் முதுமையும் நடுவு மற்றவன்.
One who is neither young, mature nor old.

6504. நௌவியும் வாழ்க்கையும் அழகல்ல,நற்குணம் ஒன்றே அழகு.
Virtue *versus* youth.

## ப.

6505. பகலிற் பக்கம்பார்த்துப் பேசு,இரவில் அதுதானும் பேசாதே.
Recommends habitual secresy.

6506. பகலிற் பசுவுந்தெரியவில்லை இரவில் எருமை தெரியுமா?
Said of one with a dim sight.

6507. பகிடிக்குப் பத்துக்காசு திருப்பாட்டுக்கு ஒருகாசு.
Religion not very popular.

6508. பகிடிக்குப் பத்துபணங் கொடுப்பார் திருப்பாட்டுக் கொரு காசுங் கொடார்.
Compare preceding.

6509. பகிடியைப் பாம்பு கடித்ததுபோல்.
A mere joke.

6510. பருத்தறிவு இல்லாத துணிவு பாரம் இல்லாத கப்பல்.
Indiscretion condemned.

6511. பருத்து அறியாமல் துணியாதே படபடப்பாகச் செய்யாதே.
An excellent counsel.

6512. பகையாளி குடியை உறவாடிக் கெடுக்க வேண்டும்.
A bad advice.

6513. பகைவர் உறவு புகை எழு நெருப்பு.
Be not intimate with your foes.

6414. பக்கச்சொல் பதினாயிரம்.
Value of a word in one's behalf.

6515. பகையாளி குடிகெடுக்க வெங்காயக்குழி போடச் சொன்
னதுபோல.
How to ruin your foe.

6516. பங்காளி வீடுவேகிறது சங்கான் கொண்டு தண்ணீர் விடு.
Giving indifferent help.

6517. பங்காளியையும் பனங்காயையும் பதம்பார்த்து வெட்டவே
ண்டும்.
How to deal with your cousins.

6518. பங்கில்லாப் பங்கு விழுந்தள்ளலாமா ?
Against cupidity.

6519. பங்குனி யென்று பருப்பதும் இல்லை, சித்திரை என்று சிறுப்
பதும் இல்லை.
Increase and decrease do not depend on the season.

6520. பங்குனி மாதம் பகல்வழி நடந்தவன் பெரும்பாவி.
Day journey in March condemned.

6521. பசிக்குக் கறிவேண்டாம், தூக்கத்துக்குப் பாய்வேண்டாம்.
Great needs need no comfort.

6522. பசிக்குப் பனம்பழம் தின்றால் பித்தம்பட்டதைப் படட்டும்.
Satisfy hunger at any cost.

6523. பசித்தவன் பயறை விதை.
The nature of the hungry.

6524. பசித்தவனுக்கு பால் அமிர்தம் இட்டாற்போல.
A welcome help.

---

6525. பசித்தபறையனும் குளித்தசைவனும் சாப்பிடாதிரான்.
Hunger *versus* a bath.

---

6526. பசித்தவன் தின்னாததும் இல்லை, பகைத்தவன் சொல்லாதது
ம் இல்லை.
Hunger and hatred cannot be suppressed.

---

6527. பசித்தவன்மேல் நம்பிக்கை வைக்கலாமா ?
Don't depend on the hungry.

---

6528. பசித்தசெட்டி பாக்குத் தின்றானாம்.
A Chetty's way of appeasing hunger.

---

6529. பசித்தவன் பயற்றை விதைக்கட்டும்.
Let the hungry sow peas.

---

6530. பசித்தவன் பழம் கணக்கைப் பார்த்தாற்போல்.
Not the right way to get rid of hunger.

---

6531. பசித்தார் பொழுதும் போம், பாலுடன் அன்னம் புசித்தார்
பொழுதும் போம்.
To all time goes alike.

---

6532. பசி தீர்ந்ததானால் பாட்டு இன்பமாம்.
Song after meals.

---

6533. பசித்து வாடுவோர் கையிலே பரிந்தமிர்தம் ஈந்தாற்போல.
Compare above.

---

6534. பசியாமல் வரந்தருகிறேன் பழங்கஞ்சி யிருந்தால் வாரு.
A foolish boast.

---

6535. பசியாமல் மருந்து கொடுக்கிறேன் பழையது இருந்தால் போ
டு என்பதுபோல.
Similar to preceding.

---

6536. பசியா வரம்படைத்த தேவர்போல்.
Like gods who never hunger.

---

6537. பசியில்லாதவனுக்குக் கருப்பு, மயிர் மாத்திரம்.
The only want of one who never hungers.

---

6538. பசியுள்ளநேரத்தில் இல்லாத பால் பழம் பசியற்ற நேரத்தில் ஏன்?
Even good things are useless when not needed.

6539. பசியுள்ளவன் ருசி யறியான்.
Compare above.

6540. பசியேப்பக்காரனும் புளியேப்பக்காரனும் கூட்டுப்பயிர் இட்டதுபோல.
An undesirable partnership.

6541. பசி ருசி அறியுமா நித்திரை சுகம் அறியுமா ?
Compare above.

6542. பசி ருசி அறியாது, நித்திரை சுகம் அறியாது.
Another form of preceding.

6543. பசி வந்திடில் பத்தும் பறந்துபோம்.
Hunger inexorable.

6544. பசு உழுதாலும் பயிரைத்தின்ன ஒட்டார்.
Crops always protected.

6545. பசு எறு வாலும் எருது கூழை வாலும்.
Tails diffrently shaped.

6546. பசு கறுப்பென்று பாலும் கறுப்பா ?
Character not appearance essential.

6547. பசு கிழமானாலும் பாலின் சுவை போகுமா ?
Character not age essential.

6548. பசு குசுவினாற்போல.
Harmless in some persons.

6549. பசு சாதும் பார்ப்பான் சாதும் உண்டா ?
A gentle cow and a meek Brahmin rare.

6550. பசுத்தோல் போர்த்துப் புலிப்பாய்ச்சல் பாய்கிறது.
Meek in appearance and ferocious in deed.

6551. பசுப்போல் இருந்து புலிப்போலே பாய்கிறாய்.
Compare preceding.

6552. பசுமரத்தில் தைத்த ஆணிபோல.
Easy to victimize.

6553. பசுமாடு தொண்டியானால் பாலும் தொண்டியா?
Compare above.

6554. பசும்புல் நுனிப்பனிச் சலம் போல.
So small and delicate.

6555. பசும்புல் தேய நடவாத பாக்கியவான்.
A holy person.

6556. பசு விழுந்தது புலிக்குத் தாயம்.
One's fall is gain to one's foe.

6557. பசுவுக்கு இரை கொடுத்தால் மதுரமான பால் கொடுக்கும்:
A paying concern.

6558. பசுவுக்குப் பிரசவ வேதனை காளைக்குக் காமவேதனை.
Each has his own anxiety.

6559. பசுவும் புலியும் பரிந்து ஒருதுறை நீருண்கிறது.
An unusual friendship.

6560. பசுவும் பசுவும் பாய்ச்சலுக்கு நிற்க, நடுப்புல் தேய்ந்தாற் போல.
A small person suffering between two big foes.

6561. பசுவைக்கொன்றால் கன்று பிழைக்குமா?
A motherless child.

6562. பசுவைக்கொன்று செருப்புத் தானம் செய்ததுபோல.
Doing a great evil to do a little good.

6563. பசுவை அடித்துப் புலிக்குத் தானம் கொடுக்கிறதா?
Compare preceding.

6564. பசுவை விற்றாற் கன்றுக்கு வழக்கா?
It goes with the other.

6565. பச்சிலையும் கிள்ளப்படுமோ பராபரமே!
Some persons to be treated as sacred.

6566. பச்சை கண்டால் ஓட்டடிமகளே.
A prostitute's counsel to her daughter.

6567. பச்சைக்கூட்டோடே கயிலாயஞ் சேர்வாய்.
A cruel wish.

6568. பச்சைப் பாண்டத்தில் பாலைவைத்தால் பாலும் உதவாது பாண்டமும் உதவாது.
Condemns want of experience.

6569. பச்சைமட்டைக்குப் போனவன் பதினெட்டாந் துக்கத்துக்கு வந்தாற்போல.
Excessive delay.

6570. பச்சைகொடுத்தால் பாவம்தீரும் வெள்ளைகொடுத்தால் வினை தீரும்.
Different gifts estimated.

6571. பச்சை நெல்லுக்குப் பறையனிடத்திற் சேவிக்கலாம்.
Labour extolled.

6572. பச்சைமண்ணும் சுட்டமண்ணும் ஒட்டுமா ?
Different dispositions cannot agree.

6573. பச்சை மரம் படப்பார்ப்பான்.
So malignant.

[தனை ?
6574. பச்சைமரத்திற்கு இத்தனையென்றாற் பட்டமரத்திற்கு எத்
Green tree *versus* dry.

6575. பச்சைச்சிரிப்புப் பல்லுக்குக்கேடு, தூவு பரிக்கை வயிற்றுக்குக்கேடு.
Hypocrisy condemned.

6576. பச்சோலைக்கில்லை ஒலி.
Juvenility has no power.

6577. பஞ்சத்திலே பிள்ளை விற்றாற்போல.
Necessity has no law.

6578. பஞ்சம் இல்லாக்காலத்தில் பசி பறக்கும்.
There is plenty to eat.

6579. பஞ்சம்போம் பஞ்சத்திற்பட்ட வசை போகாது
Effect lasts longer than the evil.

[மா ?
6580. பஞ்சாங்கம் கெட்டுப் போனாலும் நவக்கிரகம் கெட்டுப்போ
Theories may vanish—but facts remain.

6581. பஞ்சாங்கம் பல்சாத்திரம், கஞ்சிகுடித்தால் கலமூத்திரம்.
How things expand naturally.

6582. பஞ்சானும் குஞ்சும் பறக்கத் தவிக்கிறது.
In utter starvation.

6583. பஞ்சாங்கம் போனாலும் நட்சத்திரம் போகாது.
Compare above.

6584. பஞ்சபடிந்த பழம் சித்திரம்போல.
Old and soiled.

6585. பஞ்சபறந்தால் படியும் ஒருதேசம், நெஞ்சபறப்பதற்கு நிலை [காணேனும்.
Swift is the glance of the mind.

6586. பஞ்சப் பொதியில் நெருப்புப் பட்டாற்போல.
Taking instantaneous effect.

6587. பஞ்சப்பொதியிற் பட்ட அம்புபோல.
Producing no effect whatever.

6588. பஞ்சும் நெருப்பும் ஒன்றாய்க் கிடக்குமோ?
A meeting of two implacable foes.

6589. பஞ்சும் நெருப்பும்போலே.
Compare preceding.

6590. பஞ்சை பணிகாரம் சுட்டதும், வீங்கன் விசாரப்பட்டதும்.
The miser and the greedy person.

6591. படி ஆள்வார் நீதி தப்பிற், குடி ஆர் இருப்பார் குவலயத்தில்?
Rule as must be just.

6592. படிக்குப் பாதி தேறுதா?
Reasonable expectation.

6593. படிக்கமுடைத்துத் திரு உருக்கொண்டால், பணிந்து பணிந்து தான் கும்பிடவேண்டும்.
Repect according to position.

6594. படிக்கு அரசன் இருந்தால் குடிக்குச் சேதம் இல்லை.
A king essential to a people's welfare.

6595. படிக்கிறது திருவாய்மொழி, இடிக்கிறது பெருமாள் கோவில்.
Profession *versus* practice.

6596. படிக்கிறது திருவாசகம் இடிக்கிறது ஈஸ்வரன் கோவில்.
Compare above.

---

6597. படிக்கிற பிள்ளை பாக்குப் போட்டால் நாக்குத் தடிப்பாய்ப் [போம்.
Against juvenile nut-eating.

---

6598. படித்து முட்டாளாய் இருக்கிறான்.
Stupid in spite of learning.

---

6599. படித்தவனுக்கும் படியாதவனுக்கும், கொக்குக்கும் அன்னத்துக்கும் வித்தியாசம்போல.
The learned and unlearned contrasted.

---

6600. படுகளப்பட்ட பன்னுடை.
Thoroughly mutilated.

---

6601. படுகளத்தில் ஒப்பாரியா?
No lamentations on the battlefield.

---

6602. படுகுழி வெட்டினவன் அதிலே விழுவான்.
Compare the Scriptural saying.

---

6603. படுக்கப் பாயும்கொடான், தூங்க இடமும் கொடான்.
So unkind and hard-hearted.

---

6604. படுக்கைச் சுகம் மெத்தை அறியாது.
'Tis the enjoyer who enjoys the comfort.

---

6605. படுவது பட்டும் பட்டத்துக்கு இருக்கவேண்டும்.
Endure till you gain your end.

---

6606. படுதீப்பட்டு வேகிற வீட்டிலே படுத்துக்கொள்ள இடங்கே [ட்டான்.
A most inopportune request.

---

6607. படுத்தால் பசி பாயோடே போய்விடும்.
Sleep banishes hunger.

---

6608. படைக்கும் ஒருவன் கொடைக்கும் ஒருவன்.
One commands and another confers.

---

6609. படை கெட்டு ஓடுகையில் நரை மயிர் பிடுங்குகிறதோ?
An unseasonable occupation.

---

6610. படைச்சாலுக்கு ஒரு பிணையிருந்தாலும் பயிரில்லாதவன் பா [வி.
Condemns a landless man.

---

6611. படை மிகுத்தால் அரண் இல்லை.
Increase of army, decrease of fortifications.

6612. படைமுகத்தில் ஒப்பாரியா?
Compare above.

6613. படை முகத்திலும் அறிமுகம் வேண்டும்.
Acquaintance necessary even on the battlefield.

6614. படையாது படைத்த மருமகளே உன்னைப் பறையன் அறுக்கக் கனாக்கண்டேன்.
A mother-in-law's dream.

6615. பட்சி சிறகு பறிகொடுத்தாற்போல.
Losing one's most useful support.

6616. பட்சித்தாலும் அவர் சித்தம் ரட்சித்தாலும் அவர் சித்தம்.
Total self-surrender.

6617. பட்சி பசித்தாலும் எட்டிக்கனியைத் தின்னாது.
Nothing can force one against one's nature.

6618. பட்டப்பகல்போல நிலவெறிக்கக் குட்டிச்சுவரிலே முட்டிக் கொள்ள வெள்ளெழுத்தா?
Committing blunder in broad daylight.

6619. பட்டப்பகல் விளக்குப் பாழ் அடைந்தாற்போல.
It is useless at noon.

6620. பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்.
Successive misfortunes.

6621. பட்டணத்தான் பெற்ற குட்டி பணம் பறிக்க வல்ல குட்டி.
A city lad is up to many tricks.

6622. பட்டணத்து வாசலைப் படலாலே மூடுகிறதோ?
Some things cannot be hidden.

6623. பட்டதும் கெட்டதும் பாய் முடைந்துவிற்றதும் ஓலை இடையாமல் உட்கார்ந்திருந்ததும்.
In great misery.

6624. பட்டப்பகலிலே நட்சத்திரம் கண்டாற்போல.
A rare sight.

6625. பட்டணத்து வாசலைப் பட்டாலே மூடி இருக்கிறதா?
Compare above.

6626. பட்டடை வாய்த்தால் பணி வாய்க்கும்.
Good tools—good work.

6627. பட்டவர்க்கு உண்டு பலன்.
No pains no gains.

6628. பட்டால் பலனுண்டு.
Similar to preceding.

6629. பட்டால் பாழ்போமா?
Compare two preceding.

6630. பட்டால் தெரியும் பறையனுக்கு.
The base learn by suffering.

6631. பட்டவளுக்குப் பதவி உண்டு.
There is heaven for the suffering woman.

6632. பட்டால் அறிவான் சண்டாளன், மழை பெய்தால் அறிவான் வெள்ளாளன்.
Compare above.

6633. பட்டினத்து நரியைப் பனங்காட்டு நரி வய்த்ததாம்.
Citizen *versus* rustic.

6634. பட்டிக் காட்டுக்குச் சிவப்புத் துப்பட்டிப் பீதாம்பரம்.
Small places easily adorned.

6635. பட்டி மாட்டுக்குக் கட்டை கட்டினாற்போல.
Unsuited to draught-work.

6636. பட்டி மாட்டுக்குச் சூடு போட்டாற்போல.
So horribly beaten.

6637. பட்டு அறி கெட்டு அறி பத்து எட்டு இறந்து அறி.
Learn by many losses.

6638. பட்டு குலைந்தால் பொட்டு.
Even good things are useless when abused.

6639. பட்டுக் கத்தரித்தாற்போல.
So sharp and quick.

6640. பட்டுக் கத்தரித்ததுபோல பேசவேண்டும்.
Compare preceding.

6641. பட்டுக் கோட்டைக்கு வழி கேட்டால், கொட்டைப்பாக்கு விலை சொல்லுகின்றாய்.
Irrelevant replies.

6642. பட்டுநூல் தலைகெட்டாற்போல.
Compare above.

6643. பட்டுப்புடவையில் ஊசிநட்டு உருவிப்பாய்ந்தாற்போல.
So thoroughly done.

6644. பட்டு மக்கிஞல் பெட்டியிலே.
Being valuable.

6645. பட்டு நூலுக்குள்ள சிக்கெல்லாம் இருக்கிறது.
So full of complications.

6646. பட்டுக்கு அழுவார் பணிக்கு அழுவார் வையகத்தில் பாக்குக் கழுத பாரதத்தைக் கண்டது இல்லை.
It is easily obtained.

6647. பட்டுப் புடவை இரவல் கொடுத்து மனை எடுத்துக்கொண்டு திரிவதுபோல.
Why lend and then suffer?

6648. பட்டுப் புடவை இரவல் கொடுத்ததுமல்லாமல் பாயுந் தூக்கிக் கொண்டலைய வேண்டியதாச்சுது.
Similar to preceding.

6649. பட்டும் பட்டாடையும் பெட்டியில் இருக்கும் காற் காசுக் கந்தை ஓடி உலாவும்.
Wanderers *versus* home-birds.

6650. பட்டும் பாழ், நட்டும் சாவி.
Loss in every way.

6651. பட்டைக்குத் தக்க பழம் கயிறு.
Dress suited to person.

6652. பணக்கள்ளி பாயில் படாள்.
A miser's habit.

6653. பணக்காரன் பின்னும் பத்துப்பேர், பயித்தியக்காரன் பின்னும் பத்துப் பேர்.
A following does not mean much.

6654. பணத்துக்குப் பெயர் ஆட்கொல்லி.
Money is the root of all evil.

---

6655. பணத்துக்கு ஒரு அம்பு கொண்டு பாழில் எய்கிறதுபோல.
Wasting one's energy in profitless pursuit.

---

6656. பணத்தைக் கொடுத்துப் பணிகாரத்தை வாங்கிப் பற்றைக் குள்ளே இருந்து தின்னவேண்டுமோ?
Why seek concealment when publicity is you right?

---

6657. பணத்தைப் பார்க்கிறதா பழமையைப் பார்க்கிறதா?
Friendship more valuable than money.

---

6658. பணமிருக்க வேணும் இல்லாவிட்டால் பத்துசன மிருக்க [வேணும்.
Wealth or kindred the same.

---

6659. பணமும் பத்தாயிருக்கவேணும் பெண்ணும் முத்தாயிருக்க [வேணும்.
Wanting two good things at the same time.

---

6660. பணம் இருந்தால் பாக்ஷா, பணம் இல்லாவிட்டால் பக்கிரி.
Want *versus* wealth.

---

6661. பணம் இல்லாதவன் பிணம்.
Want of wealth condemned.

---

6662. பணம் உண்டானால் படையையும் வெல்லுவான்.
Money can even defeat an army.

---

6663. பணமுண்டானால் மணமுண்டு.
Money makes its owner agreeable.

---

6664. பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும்.
Effect of wealth.

---

6665. பணம் என்ன செய்யும், பத்து விதம் செய்யும்.
Money can make anything.

---

6666. பணம் என்ன பாஷாணம், குணம் ஒன்றே போதும்.
Money *versus* character.

---

6667. பணம் என்றால் பேயாய்ப்பறக்கிறது.
Said of an avaricious person.

---

6668. பணம் பார்த்துப் பண்டம்கொள், குணம்பார்த்துப் பெண் [கொள்.
A good advice.

---

6669. பணம் பெரிதோ பழமை பெரிதோ?
Compare above.

6670. பணம் குலம் ஆகும், பசி கறி ஆகும்.
Value of wealth and hunger.

6671. பணம் பந்தியிலே குலம் குப்பையிலே.
Compare preceding.

6672. பணிகாரமோ சிலுசிலுப்போ ?
Expressing doubt.

6673. பணியும் என்றும் பெருமை.
Greatness is humility.

6674. பண்டமோரிடத்திலே பாவமோரிடத்திலே.
Each in its place.

6675. பண்டாரம் பிண்டத்துக்கு அழுகிறான், லிங்கம் பால் சோற்றுக்கு அழுகிறது.
Each has his own anxiety.

6676. பண்டாரமே, குருக்களே பறைச்சி மூத்திரம் குடித்தவரே.
Exposing a pretender's character.

6677. பண்டை பட்ட பாட்டைப் பழங்கிடங்கில் போட்டுவிட்டுச் சம்பா நெல்குத்திப் பொங்கல் இடுகிறான்.
Forgetful of former poverty.

6678. பண்ணப் பண்ணப் பல விதம் ஆகும்.
Practice makes perfect.

6679. பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்.
The crops shew the labour.

6680. பண்ணிப் பதித்தாற்போல.
Well wrought.

6681. பண்ணின பாவத்தைப் பட்டுத் தொலைக்கவேண்டும்.
One must reap the reward of one's sin.

6682. பண்ணைக்காரன் பெண்டாட்டி பணியக்கிடந்துசெத்தாளாம்.
A sad end to a great career.

6683. பணிச்சவன் வாயும் சங்குச் சூத்துமாய்ப் போகிறான்.
An ugly comparison.

6684. பதறாத காரியம் சிதறாது
Condemns hurry.

6685. பதறிச் செய்கிற காரியம் சிதறிக் கெட்டுப்போகும்.
Similar to preceding.

6686. பதனம் பத்துக்கெளிது.
Prevention better than cure.

6687. பதிவிரதா பத்தினி கதைகேட்டு வந்தேன் பட்டுக்கிடப்பாய் காலை முடக்கு.
An allusion to a story.

6688. பதிவிரதைக்குப் பர்த்தாவே திரவியம்.
A faithful wife's treasure.

6689. பதினாறு பல்லிலே ஒரு பல், பற்கறையட்டதுபோல்.
An insignificant affair.

6690. பதினாயிரம் கொடுத்தாலும் பதைப்பாகாது.
Compare above.

6691. பதினாறும் பெற்றும் பெருவாழ்வும் வாழ்கிறது.
The usual blessing to a young wife.

6692. பதுங்குகிற புலி பாய்ச்சலுக் கடையாளம்.
A calm before a storm.

6693. பத்தாம்பேறு பாடையில் வைக்கும்.
The tenth child-birth said to be fatal.

6694. பத்தி கொள்பவன் முத்தி உள்ளவன்.
Piety procures heaven.

6695. பத்தியத்துக்கு முருங்கைக்காய் கொண்டுவரச் சொன்னால் பால் தெளிக்க அகத்திக் கீரை கொண்டுவருவான்.
Said of a procrastinating habit.

6696. பத்தி இல்லாப் பூசை பரமண்டலத்துக்கு ஏறுமா ?
Recommends piety.

6697. பத்தி இல்லாத புத்தி அசேதனம்.
Condemns intelligence without piety.

6698. பத்தியுள்ள பூனை பரமண்டலத்துக்குப் போச்சுதாம், செத்த கிளிப்பிள்ளையை வாயிலே கவ்விக்கொண்டு.
Said of false piety.

---

6699. பத்தி உண்டானால் முத்தி உண்டாம்.
False piety ridiculed.

---

6700. பத்தியுள்ளவனுக்குப் புட்டுக்கூடை அண்டம் புறப்பட்டுப் போச்சுதா?
Compare above.

---

6701. பத்தி படபட, பானைசட்டி லொடலொட.
Compare above.

---

6702. பத்தியோடே பாகற்காய் சட்டியோடே தீயுது.
Negligence of present duties.

---

6703. பத்திலே விழுந்த பாம்பும் சாவாது.
Escape is rather easy.

---

6704. பத்திலே பசலை, இருபதிலே இடும்பு.
Character varies with age.

---

6705. பத்தினியைத் தொட்டதும் துரியோதனன் பட்டதும்.
Danger of touching a faithful wife.

---

6706. பத்து இறுத்தாலும் பாரச் சந்தேகம் தீர்ந்தது.
A comforting thought after a loss.

---

6707. பத்து மாட்டிலே கட்டுக்கடங்காதவன்.
An obstinate and disobedient fellow.

---

6708. பத்து வயதிலே பாலனைப் பெறு.
Recommends early marriage.

---

6709. பத்துக்கு மேலே ஒரு பறையனுக்கும் தள்ளவேண்டும்.
Connected with preceding.

---

6710. பத்துப் பணம் கொடுத்தாலும் இத்தனை பதைப்பு ஆகாது.
Against too great a hurry.

---

6711. பத்து அரிசியும் வேகவில்லை, பாவிப் பிராணனும் போகவில்லை.
Rather a cruel wish.

---

6712. பத்துப் பேரிலே பதினோராம் பேராய் இருக்கவேண்டும்.
Better to be apart from a company.

---

6713. பத்து வராகன் இறுத்தோம், என்றாலும் சந்தேகம் நிவிர்த்தி ஆயிற்றே.
Compare above.

---

6714. பத்து விதத்திலும் பறையனை நம்பலாம், பார்ப்பானை நம்பக் கூடாது.
A Paraya preferred to a Brahmin.

---

6715. பத்து ஏர் வைத்துப் படைமரமும் தோற்றேன், எத்தனை ஏர் வைத்துக் கோவணமும் தோற்றாய்?
A ruined fellow pitying another.

---

6716. பத்தோடே பதினொன்று அத்தோடே இதொன்று.
One more does not matter much.

---

6717. பத்மாசுரன் பரிட்சை பார்த்ததுபோல்.
An allusion to Indian mythology.

---

6718. பந்தமும் கூத்தும் விடிந்தால் தெரியும்.
The morning reveals the night.

---

6719. பந்தம் சொன்னார் படைக்காகார்.
War knows no relationships.

---

6720. பந்தடிபோல் துள்ளிப் பரிதபிக்கிறது.
In inconsolable grief.

---

6721. பந்திக்கில்லாத வாழைக்காய் பந்தலிலே கட்டித் தொங்கு[தாம்.
One fit for use acting as an ornament.

---

6722. பந்திக்கு முந்தவேண்டும், படைக்குப் பிந்தவேண்டும்.
Feast preferred to fight.

---

6723. பந்தியிலே வேண்டாம் என்றால் இலை பொத்தல் என்றாய்.
Sour grapes.

---

6724. பயணக்காரன் பயித்தியக்காரன்.
The hurry of a journey.

---

6725. பயறு பயறு என்ற பிள்ளை பசறு பசறு என்கிறது.
Said of a retrograde movement.

---

6726. பயித்தியம் பிடித்துப் பாயைப் பரண்டுகிறது.
Gone mad.

---

6727. பயித்தியம் தெளிந்திறது உலக்கை எடுத்தா காதுகுத்த?
Madness not completely cured.

6728. பயித்தியம் பரிகாசம் வேணும் ஒன்று அதிகாரம் வேணும்.
Nature of madness.

6729. பயித்தியமோ பண்டாரமே என்றால் இப்போதுதான் தொடருகிறது என்றான்.
Feigned madness.

6730. பரணியிலே பிறந்தால் தரணிஆளலாம்.
A lucky birth.

6731. பரணி அடுப்புப் பாழ்போகாது.
A good place for an oven.

6732. பரப்பான் பயிரிழந்தான், இறைப்பான் சுகமிழந்தான்.
An agricultural saying.

6733. பரம்பரை ஆண்டியோ, பஞ்சத்துக்கு ஆண்டியோ ?
Genuine or spurious ?

6734. பரிக்கிடும் கடிவாளத்தை நரிக்கிடுகிறது.
Not treating one according to one's deserts.

6735. பரிகாசப்பட்டவனைப் பாம்பு கடித்தாற்போல.
A well served clown.

6736. பரிகாரி தலைமாட்டில் அழுந் தன்மை போல.
The doctor becoming chief mourner.

6737. பரிகாரி உறவு தெருவாசல் மட்டும்.
A doctor's friendship.

6738. பரிசத்துக்கு லோபி இழிகண்ணியைக் கொண்டானும்.
A miser's choice of a wife.

6739. பரியத்துக்கு அஞ்சிக் குருட்டுக் கண்ணியைக் கொண்டது போல.
Compare preceding.

6740. பரிவு இல்லாப் போசனத்திற் பட்டினி நன்று, பிரியம் இல்லாப் பெண்டிற் பேய் நன்று
A loveless feast.

6741. பருத்திப் பொதிக்கு ஒரு நெருப்புப் பொறிபோல.
Quite enough to destroy the whole.

6742. பருத்திக் கடையிலே நாய்க்கு பணி என்ன?
Nothing to be had for him there.

6743. பருத்திக்காடு உழுகிறதற்கு முன்னேபொம்மனுக்கு எழு முழம் திம்மனுக்கு எழு முழம்.
Premature promises.

6744. பருத்தி புடைவையாய்க் காய்த்தாற்போல.
An unusual produce.

6745. பருத்திக்குழும் முன்னே தம்பிக் கெட்டு முழம்.
Compare above.

6746. பருத்திபட்ட பாடெல்லாம் படுகிறது.
To suffer like the cotton plant.

6747. பருப்பிலே நெய் விட்டதுபோல.
Adding flavour to food.

6748. பருமரத்தை அண்டிய பல்லியும் சாகாது.
Shelter is safety.

6749. பருவத்தே பயிர் செய்.
Seasonable cultivation.

6750. பரோபகாரமே பெரிது.
"The greatest thing in the world."

6751. பல உமி தின்றால் ஒரு அவிழ் தட்டும்.
Nothing is utterly useless.

6752. பல சரக்குக்காரனைப் பயித்தியம் பிடித்ததுபோல.
The evil of having too many cares.

6753. பல நீட்டுக்கு ஒரு முழுக்கு.
A single remedy for many evils.

6754. பல துளி பெருந் வெள்ளம்.
Many drops make an ocean.

6755. பல பாவம் தீர ஒரு புண்ணியம் ஆகிலும் பண்ண வேண்டும்.
Urges meritorious deeds.

6756. பல பிச்சை ஆறாய்ப் பெருகும்.
The effect of unbounded charity.

6757. பலத்தவன் கைக்கு இளைத்தவன் துரும்பு.
The powerful and the weak.

6758. பலத்தவனுக்கு மருந்து சொன்னால் பிடுங்கிக் கொடுத்துத் தீர வேண்டும்.
A superior's imperious nature.

6759. பல்நாளை வெயில் ஒறுத்தாலும் ஒருநாளை வெயில் ஒறுக்காது.
What is rare *versus* what is habitual.

6760. பலநாளைத் திருடன் ஒரு நாளைக்கு அகப்படுவான்.
A thief will be caught at last.

6761. பல மரம் கண்ட தச்சன் ஒருமரம் வெட்டமாட்டான்.
Difficult to choose.

6762. பல முயற்சி செய்யினும் பகவன் மேல் சிந்தை வை.
Trust in God.

6763. பலம் தேடப்போய் பழிவந்து சேர்ந்ததுபோல.
Seeking power and incurring guilt.

6764. பல வாய்க்கால் ஆறாய்ப் பெருகும்.
Effect of small contributions.

6765. பலன் இல்லாப் பல நாளிலும், அறம் செய் ஒரு நாள் பெரிது
The efficacy of virtue.

6766. பலா உத்தமம், மா மத்திமம், பாதிரி அதமம்.
A saying on fruits.

6767. பலாப் பழத்தில் மொய்த்த ஈ போல.
Adhering to a benefactor.

6768. பல் ஆடப் பசி ஆறும்.
Eating satisfies hunger.

6769. பல்லக்கு ஏற யோகம் உண்டு உன்னி ஏறப்பலன் இல்லை.
One has wealth but not strength.

6770. பல்லக்குக்கு மேல்மூடி இல்லாதவனுக்கும், காலுக்குச் செருப்பு இல்லாதவனுக்கும் விசாரம் ஒன்றே.
Both suffer from heat.

6771. பல்லு விழுந்த புடையனுக்குக் கிருதா ?
Ridicules a powerless person.

6772. பல்லு விழுந்த புடையன்.
Compare preceding.

6773. பல்லுபோனால் சொல்லு போச்சுது.
You can't speak without teeth.

6774. பல்லைக்காட்டிப் பரிதபிக்கிறது.
In great sorrow.

6775. பல்லைக்குத்தி முகந்துபார்த்தால் தெரியும் நாற்றம்.
Many defects are hidden.

6776. பவுசு கெட்ட பாக்கட்டிக்கு இரண்டு பக்கமும் தீவட்டியாம்.
A low fellow making a great show.

6777. பழக பழகப் பாலும் புளிக்கும்.
Familiarity breeds contempt.

6778. பழக்கம் வழக்கம்.
Practice forms habit.

6779. பழங்கால் தூர்க்கவேண்டாம் புதுக்கால் வெட்டவேண்டாம்.
A conservative advice.

6780. பழத்திலே பழம் மிளகாய்ப்பழம்.
The chilie extolled.

6781. பழத்தேங்காயிலே தான் எண்ணெய்.
Praises maturity.

6782. பழமை பாராட்ட வேணும்.
Friendship recommended.

6783. பழம் பழுத்தால் கொம்பில் தங்காது.
Death from old age.

6784. பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோல.
A lucky accident.

6785. பழம் புண்ணாளி பாதிவைத்தியன்.
He learns much by experience.

6786. பழி ஒரு இடத்திலே பாரம் ஒரு இடத்திலே.
• One is guilty and another suffers.

6787. பழிக்கஞ்சாதவன் கொலைக் கஞ்சுவானா?
Heedless of guilt, fearless of murde~

6788. பழிக்கஞ்சு, பாவத்துக் கெஞ்சு.
A salutary advice.

6789. பழிக்கு ஆனோர் சிலர் பழி படுவோர் சிலர்.
Similar to above.

6790. பழித்தார் தலையில் பாடு வரும்.
Mockery condemned.

6791. பழிப்பன பகரேல்.
Compare preceding.

6792. பழிப்பான கல்வி பாவத்தின் ஊற்று.
Condemns wicked knowledge.

6793. பழுது செய்ததை அறிக்கை இடல் பாதி நிவிர்த்தி.
Confession of guilt is half pardon.

6794. பழுத்த ஓலையைப் பார்த்துக் குருத்து ஓலை சிரிக்கிறதாம்.
The young joking the old.

6795. பழுத்த பழம் கொம்பில் இராது.
Compare above.

6796. பழுதை பாம்பாய்த் தோன்றினது.
Mere appearances.

6797. பழுதை என்று கடக்கப் படவுமில்லை பாம்பென்று நினைக்கப் படவும் இல்லை.
Neither one nor the other.

6798. பழைய பொன்னனே பொன்னன், பழைய கப்பறையே கப்பறை.
Old things preferred to new.

6799. பழைய கறுப்பன் கறுப்பனே பழைய மண்கிண்ணி மண்கிண்ணியே.
Similar to preceding.

6800. பழைய பகையை எண்ணி பழமுன்னுக் கிளையாதே.
Don't remember old enmity.

---

6801. பழைய குருடி கதவை திறடி.
A familiar saying.

---

6802. பழையது மீந்த இடம் காணியாட்சி.
Where food is obtained is one's inheritance.

---

6803. பழையனூர் நீலி பரிதபித்து அழுகிறாப்போல.
A well known peevish woman.

---

6804. பள்ளத்தில் இறங்கினால் பெண்டாட்டி, மேட்டில் ஏறினால் தாயார்.
A selfish husband.

---

6805. பள்ளம் உள்ள இடத்திலே தண்ணீர் நிற்கும்.
Worthy recipients.

---

6806. பள்ளம் இறைத்தவன் பங்கு கொண்டுபோகிறான்.
Intelligent toil will be rewarded.

---

6807. பள்ளிக் கணக்குப் புள்ளிக்கு உதவாது.
Pallis cannot become good accountants.

---

6808. பள்ள மேடில்லாமல் பருத்தி விதைக்கிறது.
Indiscreet labour.

---

6809. பள்ளியையும் பனங்காயையும் பதம்பார்த் தடிக்கவேண்டும்.
How to treat the base.

---

6810. பள்ளிக் கையில் பணமிருந்தால் பாதிராத்திரியில் பாடுவான்.
The base often betray themselves.

---

6811. பள்ளிக் குப்பத்துக்கு அம்பட்ட வாத்தியார்.
A low people—a low teacher.

---

6812. பள்ளி பாக்குத் தின்றால் பத்து விரலும் சுண்ணாம்பு.
Some people not cleanly in their habits.

---

6813. பள்ளிப் பிள்ளை என்றால் செல்வம் குறையுமா?
Everybody is fond of his own children.

---

6814. பள்ளிக்கு வைக்காமற் கொள்ளிக்குக் குறைத்து வைத்தார்.
Early education urged.

---

6815. பள்ளிக்குப் பல்லு, பார்ப்பானுக்கு முழுக்கு.
Pallis contrasted with Brahmins.

6816. பள்ளிக்கும் இரும்புக்கும் பதம் பார்த்தடி.
Compare above.

6817. பள்ளிப் பிள்ளைக்குப் பகுத்தறிவு ஏது?
Palli children very dull.

6818. பள்ளி மச்சான் கதைபோல.
Said when one does something stupid.

6819. பள்ளியை நினைத்துப் பாயில் படுத்தால் பரமசிவன்போல் பி
ள்ளை வரும்.
A foolish idea.

6820. பள்ளி ஒளித்திரான் பார்ப்பான் குளித்திரான்.
Pallis and Brahmins contrasted.

6821. பறக்கிற பறவைக்கு எது தூரம்?
Nothing too difficult for the gifted.

6822. பறக்கிற பட்சிக்கு இருக்கிற கொம்பு நிலைவரமா?
The gifted do not care much for temporary support.

6823. பறக்கும் காகம் இருக்கும் கொம்பு அறியாதா?
Compare preceding.

6824. பறக்கும் குருவிக்கு இருக்கும் கொம்பு தெரியாது, பரதேசி
க்குத் தங்கும் இடம் தெரியாது.
They can rest anywhere.

6825. பறங்கிக்காய் அழுகலைப் பசுவுக்குப் போடு, பசுவுந் தின்று
விடில் பார்ப்பானுக்குக் கொடு.
Tamil indictment of a Brahmin's greed.

6826. பறந்துபோகிற எச்சிற் கல்லைமேல் கல்லைத் தூக்கி வைத்தா
ற் போல.
Wilfully throwing impediments in one's own way.

6827. பறந்து பறந்து பாடுபட்டாலும் பகலைக்கு சோறில்லை.
Unrewarded toil.

6828. பறப்பான் பயிர் இழந்தான் அறக்காஞ்சி பெண்டு இழந்தான்.
Extremes condemned.

6829. பறி நிறைந்தால் கரை ஏறுவேன்.
A well-known saying.

---

6830. பறிகொடுத்த காட்டில் பயம் இல்லை.
There is nothing more to lose.

---

6831. பறக்கிற பட்சிக்குச் சிறகொடிந்தாற் போல.
Losing one's only support.

---

6832. பறைச்சிப் பிள்ளையைப் பள்ளிக்கு வைத்தாலும் பேச்சிலே அய்யே என்னுமாம்.
Hard to teach a Pariah child.

---

6833. பறைச்சேரி மேளம் கலியாணத்துக்கும் கொட்டும், கல்லெடுப்புக்கும் கொட்டும்.
Pariah music no music.

---

6834. பறையன் பாக்குத்தின்பதும், பறைச்சி மஞ்சள் குளிப்பதும் அறுப்பும் பறிப்பும் மட்டும்.
Pariahs well off only at harvest time.

---

6835. பறை தட்டினாற்போல.
So noisy and confused.

---

6836. பறைத் தெருவிலே வில்வம் முளைத்ததுபோல்.
A rare sight.

---

6837. பறைப்புத்தி அரைப்புத்தி.
Pariah judgment deprecated.

---

6838. பறைப்பாட்டுக்கும் பறைப்பேச்சுக்கும் சுரைப்பூவிற்கும் மணம் இல்லை.
Pariah music, &c., are without sweetness.

---

6839. பறையனும் பார்ப்பானும் போல.
As wide apart as the poles.

---

6840. பறையன் பொங்கல் இட்டால் பகவானுக்கு ஏறாதோ ?
A good sentiment.

---

6841. பறையைப் பள்ளிக்கு வைத்தாலும் துறைப்பேச்சுப் போமா?
Compare above.

---

6842. பறைவேலை அரைவேலை.
Pariah work always imperfect.

---

6843. பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சுமா?
Boast of one who is familiar with something.

6844. பனிக்கண் திறந்தால் மழைக்கண் திறக்கும்.
Rain depends on dew.

6845. பனி பெய்து கடல் நிறையுமா?
Small contributions do not amount to much.

6846. பனி பெய்து குளம் நிரம்புமா?
Similar to preceding.

6847. பனி பெய்தால் மழை இல்லை, பழம் இருந்தால் பூ இல்லை.
One cannot have two things at the same time.

6848. பனிப் பெருக்கிலே கப்பல் ஓடுமா?
Each requires its own element.

6849. பனிக்காலம் பின்னிட்டது இனி காலனுக்கும் பயமில்லை.
Dew stops rain.

6850. பனியை நம்பி ஏர்ப்பூட்டினதுபோல.
Relying on precarious means.

6851. பனை ஏறியும் பாளைதொடாது இறங்கினாற்போல.
Most unlikely on the face of it.

6852. பனை ஏறி விழுந்தவனைக் கடா ஏறி மிதித்ததுபோல.
Adding pain to pain.

6853. பனை மரத்தின் கீழே பாலைக் குடித்தாலும் கள் என்று நினைப்பார்.
Appearances go a great way.

6854. பனைமரத்திற்கு நிழல் இல்லை பறையனுக்கு முறை இல்லை.
Incestuous habits of Pariahs.

6855. பனைமரம் ஏறுகிறவனை எதுவரையில் தாங்கலாம்?
Hard to support a prolonged enterprise.

6856. பனை நிழலும் நிழலோ, பகைவர் உறவும் உறவோ?
Never trust the friendship of your foes.

6857. பனையில் இருந்து விழுந்தவனைப் பாம்பு கடித்ததுபோல.
Compare above.

6858. பனை வெட்டின இடத்திலே கழுதை வட்டம் போட்டது போல.
A foolish sport.

6859. பன்றிக்குட்டிக்கு ஒருசந்தி ஏது?
It is gluttonous by nature.

6860. பன்றிக்குட்டி ஆனை ஆமா?
One cannot alter nature.

6861. பன்றிக் குட்டிக்குச் சங்கராந்தி.
The base enjoying a feast.

6862. பன்றி புல்தின்றதனால் பலனுண்டா?
Each must have his natural food.

6863. பன்றி பல குட்டி போட்டு என்ன?
Great in quantity but poor in quality.

6864. பன்றியோடு கூடிய கன்றும் பீ தின்றதாம்.
Evil communications corrupt good manners.

6865. பன்றி பட்டால் அவனோடே, காட்டானை பட்டால் பங்கு.
Selfish claim for a share.

6866. பன்றி பல குட்டி, சிங்கம் ஒரு குட்டி.
Many inferiors equal to one superior.

6867. பன்னிப் பன்னிப் பழங் கதை படியாதே.
Rebuking a loquacious fellow.

## பா.

6868. பாகற் கொட்டை புதைக்கச் சுரைக்கொட்டை முளைக்குமா?
Expecting contrary to nature.

6869. பாக்குக் கொடுத்தால் பந்தலிலே என்ன அலுவல்?
Business cannot lead to friendship.

6870. பாக்கு வெட்டிக்குள் அகப்பட்ட பாக்குபோல.
Well in one's power.

6871. பாக்கை மடியிலே கட்டலாமா, தோப்பை மடியிலே கட்டலாமா?
Everything cannot be treated alike.

6872. பாசமற வற்றிப் பசையறத் தேய்க்கிறது.
Reducing, one to great extremes.

6873. பாசம் அற்றவன் பரதேசி.
An ascetic defined.

6874. பாடகக்காலி வாழ்ந்தால் பத்தெட்டுச் சனம் பிழைக்கும்.
Many depend on one's earnings.

6875. பாடம் ஏறினும் ஏடு கைவிடேல்.
Do not give up your precious things.

6876. பாடிப் பாடிக் குத்தினாலும் பதரில் அரிசி இல்லை.
Labour without profit.

6877. பாடில்லாமற் பயனில்லை.
No pains, no gains.

6878. பாடு என்றால் பாணனும் பாடான்.
Nobody can be forced.

6879. பாடு படாமற் போனால் பலன் இல்லாமற் போகும்.
Compare above.

6880. பாடும் புலவர் கையிற் பட்டோலை ஆனேனே.
Subject of panegyrics.

6881. பாடையிலே பார்க்கவேணுமென்றால் சாகையிலே வா.
Vantage ground of observation.

6882. பாட்டி கெட்டிக்காரி பதக்கைப்போட்டு முக்குறுணி என் [பாள்.
Capable of falsifying.

6883. பாட்டி நூற்கிற நூலுக்கும் பேரன் கட்டுகிற அண்ணாக்கயி றுக்குஞ் சரி.
Coarse workmanship.

6884. பாட்டுப் போன வெட்டவெளியிலே வீட்டைக் கட்டுவா [னேன்?
Solitude condemned.

6885. பாட்டு வாய்த்தால் கிழவியும் பாடுவாள்.
There is a time for everything.

6886. பாட்டுக் கழுவார் பணிக்கழுவார் வையகத்திலே, பாக்குக் கழுத பாரதத்தைக் கண்டதில்லை.
Compare a similar saying above.

6887. பாணம் தொடுத்தாற் போலப் பேசுகிறான்.
Sharp and piercing speech.

6888. பாதகர் பழக்கம் பாம்பொடு பழகல் போல.
Friendship of the wicked to be shunned.

6889. பாதிப்பாக்கைக் கப்பலிலே போட்டுப் பங்குக்கு நின்றானாம்?
An unreasonable claim.

6890. பாதிச் சுரைக்காய் கறிக்கும் பாதிச் சுரைக்காய் விதைக்குமா?
Some things can't bear division.

6891. பாத்திரம் அறிந்து பிச்சை இடு, கோத்திரம் அறிந்து பெண் [கொடு.
Seek worthy recipients.

6892. பாப்புக்கு மூப்பு இல்லை.
Snakes never get old.

6893. பாமணி ஆற்றிலே பல்லை விளக்கு, முல்லை ஆற்றிலே முகம் [கழுவு.
A provincial advice.

6894. பாம்பறியும் பாம்பின் கால்.
One thief knows another.

6895. பாம்பாட்டி பாம்பிலே, கள்ளன் களவிலே.
Each in his own element.

6896. பாம்பிலும் பாம்புக்குட்டி விஷம் அதிகம், வீரியமும் அதிகம்.
The child worse than the father.

6897. பாம்பின் வாய்த் தேரைபோல.
Compare above.

6898. பாம்பின் குட்டி பாம்பு அதன் குட்டி நட்டுவாக்காலி.
Degeneracy in species.

6899. பாம்புக் குட்டிக்குப் பால்வார்த்து வளர்த்தாலும் படு விஷத்தைக் கொடுக்கும்.
Food cannot remove innate qualities.

6900. பாம்புக்குப் பாம்பு விஷமுண்டா?
Two wicked persons cannot corrupt each other.

6901. பாம்புக்கு விஷம் பல்லிலே பரத்தைக்கு விஷம் உடம் பெங்[கும்.
Prostitutes worse than snakes.

6902. பாம்புக்கு மூப்பு இல்லை.
Another form of above.

---

6903. பாம்பு கடிக்கத் தேளுக்குப் பார்க்கிறதோ ?
Applying the wrong remedy.

---

6904. பாம்புக்கு இராசா மூங்கில் தடி.
The snake-king.

---

6905. பாம்புக்குச் சத்துரு பஞ்சமா ?
Said of a bad man's enemies.

---

6906. பாம்புக் குட்டியைக் கண்ட இடத்தில் தலையை நசுக்கு.
Destroy the race of the wicked.

---

6907. பாம்புக்குத் தலையைக் காட்டி மீனுக்கு வாலைக் காட்டுகிறது.
Acting a double part.

---

6908. பாம்புக்குப் பால் வார்த்து வளர்த்தாலும் விஷத்தைக் கொடுக்கும்.
Compare above.

---

6909. பாம்புக்குப் பால் வார்த்தாற்போல.
Attempting an impossibility.

---

6910. பாம்பும் கீரியும்போல.
Perpetual foes.

---

6911. பாம்பும் கீரியும்போலப் பல காலம் வாழ்ந்தேன்.
Similar to preceding.

---

6912. பாம்பு தன் பசியை நினைக்கும் தேரை தன் விதியை நினைக்கும்.
Different views of the same thing.

---

6913. பாம்பு வாயில் புகுந்து தப்பினதுபோல.
Escape from an imminent danger.

---

6914. பாம்பு பசிக்கில் தேரையைப் பிடிக்கும்.
The habits of snakes.

---

6915. பாம்பு தின்கிற ஊரிலே போனால் நடு முறி நமக்கு என்று இருக்கவேண்டும்.
Act according to circumstances.

---

6916. பாம்பு பகையும், தோல் உறவுமா ?
Partial friendship inconsistent.

---

6917. பாம்புக்குப் பகை கருடன்.
Natural foes.

6918. பாம்பும் நோவாமற், பாம்பு அடித்த கோலும் நோவாமல் இருக்கவேண்டும்.
An unreasonable process.

6919. பாம்பு என்றால் படையும் நடுங்கும்.
Snakes always inspire fear.

6920. பாம்பொடு பழகேல்.
Avoid snakes.

6921. பாயைச் சுருட்டிப் பிள்ளையை இடுக்கடி பரதேசம்போக.
Starting on a pilgrimage.

6922. பாய்கிற மாட்டுக்கு முன்னே வேதம் சொன்னாற்போல.
An unseasonable occupation.

6923. பாய்மரம் சேர்ந்த காகம்போல் ஆனேன்.
In a miserable plight.

6924. பாய்மரம் இல்லாக் கப்பலைப்போல.
Without an essential part.

6925. பாரபுத்தி உள்ள பறவை பதரால் பிடிக்கப்பட்டது.
A clever man's fall.

6926. பாராத காரியம் பாழ்.
Recommends supervision.

6927. பாராளும் பட்டம் கிடைக்குமா ?
Kingship unobtainable.

6928. பாராத உடைமை பாழ்.
Disuse is misuse.

6929. பாரைக்கு ஊடாடாப் பாறை பசுமரத்தின்வேருக்கு ஊடாடி[விடும்.
Great movements caused by unseen forces.

6930. பார் ஆளலாமென்று பால் குடிக்கிறாய்.
A vain hope.

6931. பார், கேள், மதனமாயிரு.
A good counsel.

6932. பார்க்கப் பதினாயிரம் கண் வேண்டும்.
A great truth.

6933. பார்க்கிற பார்வையும் தேய்க்கிற தேய்ப்பும் நான் அறிவேன் பார், பார் தேய், தேய்.
A challenge.

6934. பார்க்கக் கொடுத்த பணத்துக்கு வெள்ளிக்கிழமையா ?
Taking advantage of a sacred day.

6935. பார்க்கிற கண்ணுக்குக் கேட்கிற செவி பொல்லாது
Ear worse than eye.

6936. பார்த்த கண்ணும் பூத்துப் பகலும் இரவு ஆயிற்று.
Long and painful waiting.

6937. பார்த்தவர்க் கின்பம், படுபவருக்குத் துன்பம்
It is one thing to see and another to suffer

6938. பார்த்த கண்ணும் பூத்துப் போயிற்று.
Compare above.

6939. பார்த்த முகம் எல்லாம் வேற்று முகம்.
No two faces alike.

6940. பார்த்தால் தெரியுமா, பட்டால் தெரியுமா வருத்தம்?
Pain cannot be imagined.

6941. பார்த்தாற் பசுபோல, பாய்ந்தாற் புலிபோல.
Mild in looks and ferocious in action.

6942. பார்த்திருக்கத் தின்று விழித்திருக்கக் கை கழுவுவான்.
A hard hearted man.

6943. பார்த்திருந்தும் பாழ்ங்கிணற்றிலே விழுந்தாற்போல.
A careless fall.

6944. பார்த்திருந்தவள் பச்சை குத்தினாள், கேட்டிருந்தவள் வறுத்துக் குத்தினாள்.
Two women contrasted.

6945. பார்ப்பதற்கு அரிய பரப் பிரமம்.
The unseen God.

6946. பார்ப்பாத்தி அம்மா மாடு வந்தது
Getting rid of one's burden.

6947. பார்ப்பாத்தி உப்புக்கண்டம் போக்கடித்ததுபோல.
Ashamed to confess one's fault.

6948. பார்ப்பார் சேவகமும் வெள்ளைக் குதிரைச் சேவகமும் ஆகாது.
Certain undesirable employments.

6949. பார்ப்பானுக்கு வாய்போகாதே, ஆண்டிக்கு அதுதானும் சொல்லாதே.
Recommends secrecy.

6950. பார்ப்பான் கறுப்பும் பறையன் சிவப்பும் ஆகாது.
Dark Brahmins and fair Pariahs suspicious.

6951. பார்ப்பான் ஏழையும் பசு ஏழையும் உண்டோ?
Brahmins and cows always well off.

6952. பாலருக்குப் பலம் அழுகை, மச்சத்துக்குப் பலம் உதகம்.
Certain sources of strength.

6953. பாலனும் பால் குடியாது.
A strange incident.

6954. பாலர் மொழி கேளாதார் குழல் இனிது யாழ் இனிது என்பார்.
Barren women.

6955. பாலாறுடையான் விருந்துக் கஞ்சான்.
The Palar extolled.

6956. பாலான நெஞ்சு எல்லாம் பகை ஆக்கினான்.
Prejudicing a pure mind.

6957. பாலாறும் நெய்யாறும் போட்டவன் தலைக்குப் பாக்குப் பிடிக்கிறது.
An ungrateful act.

6958. பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்.
Doing a double duty.

6959. பாலுக்கு வந்த பூனை மோலைக் குடிக்குமா?
Taking nothing less than what is wanted.

6960. பாலுக்கு மிஞ்சின சுவையுமில்லை, பல்லக்குக்கு மிஞ்சின சொகுசுமில்லை.
Milk and Palanquins extolled.

6961. பாலுடன் கூடிய நீர்போல.
Getting respect by company.

6962. பாலுமாம் மருந்துமாம்.
Serving a double purpose.

6963. பாலுக்குச் சீனி இல்லை என்றோர்க்கும் கூழுக்குக் கறி இல்லை என்றோர்க்கும் விசாரம் ஒன்றே.
The same feeling of discontentment.

6964. பாலும் சோறுமாய்த் தின்கிற பாளையக்காரன் மேட்டு வளையை எண்ணுகிறது போல.
Inconsistent behaviour.

6965. பாலும் தேனும் சேர்ந்தாற்போல.
An excellent combination.

6966. பாலும் பதக்கு, மோரும் பதக்கோ?
Too greedy.

6967. பாலும் வெள்ளை மோரும் வெள்ளை.
Different things looking alike.

6968. பாலை ஊட்டுவார்கள், பாக்கியத்தை ஊட்டுவார்களா?
Happiness cannot be forced.

6969. பாலைப்பார்த்துப் பசுவைக் கொள்ளு.
How to choose your cow.

6970. பாலைப் பார்க்கிறதா பானையைப் பார்க்கிறதா?
Look to the more valuable.

6971. பாலையும் சோற்றையும் குழந்தைகள் பாச்சி சோச்சி என்பது போல.
Corrupting words.

6972. பாலை வார்த்துத் தலையை முழுகு.
A national advice.

6973. பாலொடு கலந்த நீரும் பாலாகும்.
Compare above.

6974 பாலோடாயினும் காலம் அறிந்து உண்.
Though good food take it in proper time.

6975. பால் ஆரியனுக்கு, பசு ராமநாத சுவாமிக்கு.
Different ownerships.

6976. பால் இருக்கிறது பாக்கியம் இருக்கிறது, பாவிலே போட்டுக் குடிக்கப் பத்துப் பருக்கைக்கு வழி இல்லை.
With certain things and without certain things.

---

6977. பால் சுண்டினாலும் சுவை சுண்டுமோ ?
Diminution in quantity is not decrease in value.

---

6978. பால் குடித்தவனுக்குப் பால் ஏப்பம், கள் குடித்தவனுக்குக் கள் ஏப்பம்.
"Out of the abundance of the heart the mouth speaketh."

---

6979. பால் குடிக்கப் பாக்கிய மில்லாவிட்டால் விலைப்பால் வாங்கினாலும் பூனை குடித்து விடும்.
Nothing can overcome fate.

---

6980. பால் சட்டிக்கு பூனையைக் காவல் வைத்தாற்போல்.
Tempting a thief.

---

6981. பால் சுடுகிறது என்று ஊதிக்குடிப்பார்கள், மோர்சுடுகிற தென்று ஊதிக்குடிக்கிறேன்.
Acting contrary to custom.

---

6982. பால் தொட்டுப் பால் கறக்கவேண்டும்.
Like begets like.

---

[உண்டா ?

6983. பால் நக்காத பூனையும் பரிதானம் வாங்காத பிராமணனும்
Brahmins compared to cats.

---

6984. பால் பசுவைக் கன்றிலே தெரியும், பாக்கியவான் பிள்ளையை முகத்திலே தெரியும்.
The face is the miror of the mind.

---

6985. பால் பொங்கினால் பால் சட்டியிலே.
Rebellion cannot spread.

---

6986. பால் வார்த்த சோற்றுக்குத்தான் பழத்தைப்போடுகிறது.
Treat one according to one's deserts.

---

6987. பால் வார்த்து முழுகுவான்.
Addicted to luxury.

---

6988. பாவட்டம் பூப்போல நரைத்தும் புத்தி இல்லை.
Old and yet stupid.

---

[ள்வான்.

6989. பாவத்திற்கு இடம் கொடாதவன் பாவத்தைச் செயங்கொ
Who resists sin ovrcomes it.

6990. பாவம் உள்ள இடத்திலே பழிபோம்.
Sin and guilt reside together.

6991. பாவம் ஒருபக்கம் பழி ஒருபக்கம்.
One commits sin and another is guilty.

6992. பாவம் செய்யாதிரு மனமே!
A good advice.

6993. பாவம் போகப் பால் வார்த்து முழுகு.
Get rid of your sins.

6994. பாவலர் அருமை நாவலர் அறிவார்.
Poets appreciated by songsters.

6995. பாவந் தோன்றிய நாள்முதல் தோன்றிய பழையோன்.
An aged sinner.

6996. பாவியார் போன இடம் எல்லாம் பள்ளமும் திட்டியும்.
A sinner's misfortunes.

6997. பாவியைப் பிடித்துப் பாம்பு ஆட்டுகிறது.
Ill-treating a guilty man.

6998. பாவில் இருக்கிறது பார்த்தும் இருக்கிறது.
Something well understood.

6999. பாவிக் கொடுமை பாலும் புளிக்கிறது.
Guilty affects even one's property.

7000. பாவி பாவம் பதராய் விளைந்தது.
Compare preceding.

7001. பாழடைந்த பழங்குட்டிச் சுவர்போல.
In utter ruin.

7002. பாழாய்ப் போகிறது பசுவின் வயிற்றிலே.
A cow's voracity.

7003. பாழ் ஊருக்கு நரி ராஜா.
Any one can own unclaimed property.

7004. பாற் கடலைக் குடிக்கப் பார்க்கும் பூனைபோல.
Too greedy.

7005. பானுவைக் கண்ட பனிபோல.
Vanishing before a formidable foe.

7006. பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்.
Classes known by their types.

7007. பானையில் உண்டானால் அகப்பையில் வரும்.
No stock—no distribution.

7008. பானையிலே பதக்கு நெல் இருந்தால் மூலையிலே முக்குறுணி தெய்வம் கூத்தாடும்.
Piety and prosperity go together.

7009. பானையிலிருந்தா லல்லவா அகப்பையில் வரும் ?
Compare above.

7010. பானையோடே தின்று பறையனோடே போகிறார்கள்.
Said of losing caste.

## பி.

7011. பிசுனி தன்னை வசனிப்பது வீண்.
Useless advising a miser.

7012. பிச்சன் வாழைத் தோட்டத்திலே புகுந்ததுபோல.
Sure to do damage.

7013. பிச்சைக் காரனைப் பேய் பிடித்ததாம் உச்சி உருமத்தில்.
A sudden disaster.

7014. பிச்சைக்காரனுக்குப் பயப்பட்டு அடுப்பு மூட்டாமல் விடுகி[றதா?
Incurring a greater loss by avoiding a smaller.

7015. பிச்சைக்காரனை அடித்தாலும், சோளியைப்போட்டு உடைத்தாலும்.
Dealing with beggars.

7016. பிச்சைக்காரனை அடித்தாலும் அடுப்பங்கரையிற் பேணாலும்.
Compare preceding.

7017. பிச்சைக்காரன் சோற்றிலே சனி புகுந்ததுபோல.
A great misfortune.

7018. பிச்சைச் சோற்றிலும் எச்சிற் சோறு ?
Remnants of food despised.

7019. பிச்சைக்காரன்மேலே பிரமாஸ்திரம் தொடுக்கிறதா?
Don't fight your inferiors.

7020. பிச்சைக்குடி பெரிய குடி.
Beggars live together.

7021. பிச்சைக்குப் பிச்சையுங் கெட்டது, பின்னையும் ஒரு காசு நாமமும் கெட்டது.
A double disaster.

7022. பிச்சைக்கு வந்த ஆண்டி இல்லை என்றால் போவானோ?
Importunity of beggars.

7023. பிச்சைக்கு மூத்தது கச்சைவடம்.
A peddler no better than a beggar.

7024. பிச்சைச் சோற்றிலும் குழந்தைச் சோறு?
Condemns insufficient food.

7025. பிச்சைச் சோற்றிற்கு எச்சில் இல்லை.
Compare above.

7026. பிச்சைச் சோற்றிற்குப் பஞ்சம் உண்டா?
There is always enough.

7027. பிச்சை இட்டதுபோதும் நாயைப் பிடித்துக் கட்டு.
Attend to the more important duty.

7028. பிச்சைபுகினும் கற்கை நன்றே.
Seek learning at any cost.

7029. பிச்சை இட்டுக் கெட்டவனும் உண்டா?
None has been ruined by alms-giving.

7030. பிச்சையிட்டுக் கெட்டவனும் இல்லை, பிள்ளை பெற்றுக்கெட்டவனும் இல்லை.
Similar to preceding.

7031. பிச்சை எடுத்தும் சத்துருவின் குடி கெடு.
A very injurious advice.

7032. பிஞ்சிலே பழுத்தாற்போல.
Premature conduct.

7033. பிடாரியைப் பிடித்துத்தள்ளத்தள்ள பெண்ணுடைய சிற்றப்பனென்று நுழைந்தானும்.
Not yielding to any expulsion.

7034. பிடாரம் பெரிதென்று புற்றிலே கை வைக்கலாமா ?
Condemns over-confidence.

7035. பிடாரனுக்கு அஞ்சிப் பாம்பு எலிக்கு உறவு ஆச்சுதாம்.
Avoiding Scylla and striking against Charybdis.

7036. பிடாரன் கை பாம்புபோல.
In the power of your enemy.

7037. பிடாரியாரே கடா வந்தது.
Exposing a victim to its foe.

7038. பிடாரிவரம்கொடுத்தாலும் ஒச்சன்வரம் கொடுக்கிறது அரிது.
One is worse tham tho other.

7039. பிடாரியைப் பெண்டு பிடித்தாற்போல.
Said of a wicked wife.

7040. பிடி அழகி புகுந்தால் பெண் அழகி ஆவாள்.
Effect of ornaments on a woman.

7041. பிடிக்குப பிடி நமசிவாயமா ?
Said of mutual courtesies.

7042. பிடிக்குப் பிடி நமஸ்காரம்.
Another form of above.

7043. பிடித்ததின் கீழே அறுத்துக்கொண்டு போகிறது.
A clever escape.

7044. பிடித்துத் தின்கிறதை கரைத்துக் குடிக்கலாம்.
More than one method for each food.

7045. பிடித்தொருபிடியும் கிழித்தொரு கிழியும்கொடுத்ததுண்டா?
Refers to wrestling matches.

7046. பிடித்தவர்க்கு எல்லாம் பெண்டு.
A woman of easy virtue.

7047. பிடித்தகொம்பும் ஒடிந்து, மிதித்த கொம்பும் முறிந்தாற் போல் ஆனேன்.
Deprived of every support.

7048. பிடித்தாற் கற்றை, விட்டாற் கூளம்.
A slight difference makes a great change.

7049. பிடித்தகாரியம் கடித்தவாய் துடைத்தாற் போல்வரும்.
Some thingo are quickly done.

7050. பிடி பிடியாய் நட்டால் பொதி பொதியாய் விளையுமா ?
Nature must have its course.

7051. பிணத்தை மூடி மணத்தைச்செய்.
First funeral and then wedding.

7052. பிணம் தின்கிற பூச்சிப்போல.
A greedy worm.

7053. பிணம்போகிற இடத்தே துக்கமும் போகிறது.
Sorrow departs with the corpse.

7054. பிணஞ்சுட்ட தடியும் கூடத்தான் போட்டுச் சுடுகிறது.
The accomplice also suffers with the criminal.

7055. பிணம் பிடுங்கித்தின்கிறவன் வீட்டிலே புத்தரிசி யாசகத்துக்குப் போனானாம்.
Seeking something in an unlikely spot.

7056. பிணைப்பட்டுக் கொள்ளாதே பெரும்பவத்தை உத்தரிப்பாய்.
Against standing security for another.

7057. பிண்டத்துக்குக் கிடையாது தண்டத்துக்கு அகப்படும்.
What can't be bought may be got gratis.

7058. பிணைப் பட்டாயோ துணைப்பட்டாயோ ?
Compare above.

7059. பிணைப்பட்டுத் துணைபோகாதே.
Similar to preceding.

7060. பிதாவைப் போலிருப்பான் புத்திரன்.
Like father like son.

7061. பித்தளை சோதித்தாலும் பொன்குணம் வருமா ?
Pretension will not avail.

7062. பித்தம் பத்து விதம்.
Many kinds of madness.

7063. பித்தளை நாற்றம் அறியாது.
Not aware of one's own disagreeableness.

7064. பித்தளை மணியற்றவளுக்குப் பொன் மணி என்றுபெயர்.
An unmistakable designation.

7065. பித்தனுக்கு புத்திசொன்னால் கேட்பானோ?
A fool is unteachable.

7066. பித்தனுக்குத் தன்குணம் நூலினும் செவ்வை.
Fools think themselves wise.

7067. பித்துப்பிடித்தாற்போல பிடித்ததைப் பிடிக்கிறது.
Acting like a madman.

7068. பிய்ந்த சீலையும் பேச்சுக் கற்றவாயும் சும்மாயிராது.
A blabbering tongue.

7069. பிய்ப்பானேன் தைப்பானேன்?
Why incur evil wilfully?

7070. பிரமதேவன் போட்ட புள்ளிக் கிரண்டாமா?
Destiny will not fail.

7071. பிரமசாரி ஓடம் கவிழ்த்தாற்போல.
A bachelor's faults.

7072. பிராமணா உன் வாக்கு பலித்தது.
An ironical saying,

7073. பிரிந்த கன்றைத்தேடித் திரும்பும் பசுவைப்போல.
So sad and disappointed.

7074 பிர்மா நினைத்தால் ஆயுசுக்குறையா?
Said of a great benefactor's will.

7075. பிழைக்கப்போன இடத்தில் பிழைமோசம் வந்ததுபோல.
Evil where good was expected.

7076. பிழைக்கடை மருந்து கவைக்குதவாது.
Condemns home remedies.

7077. பிழைக்கிற பிள்ளை இறைக் கழிச்சல் கழியுமா?
A bad symptom in a child.

7078. பிழைக்கிற பிள்ளையைக் காலைக்கிளப்பிப்பார்த்தால் தெரியாதா?
Symptoms of recovery.

7079. பிள்ளையில்லாச் சோறு புழு.
Mourns over childlessness.

7080. பிள்ளைக்காரன் பிள்ளைக்கு அழுகிறான், பணிசெய்வோன் காசுக்கு அழுகிறான்.
Each has his own anxiety.

7081. பிள்ளைக்கு விளையாட்டுச் சுண்டெலிக்குப் பிராண சங்கடம்.
What is pleasure to one is pain to another.

7082. பிள்ளை பதினாறு பெறுவாளென்று எழுதி இருந்தாலும், புருஷன் இல்லாமல் எப்படிப் பெறுவாள்?
Even destiny can work only through means.

7083. பிள்ளை பெற்றவளைப் பார்த்து மலடி பெருமூச்சு விட்டழுததுபோல.
A useless longing.

[இல்லை.

7084. பிள்ளை பெற்றவனுக்கும் மாடு படைத்தவனுக்கும் வெட்கம்
A father will do anything for his children.

7085. பிள்ளைக்கா புழுக்கைக்கா இடங்கொடுக்கப் போகாது.
Children and slaves to be treated alike.

7086. பிள்ளைக்கு விளையாட்டு சுண்டெலிக்குப் பிராண சங்கடம்.
Compare above.

7087. பிள்ளைச் சீர் கொள்ளக் கிடைக்குமா?
Children are born, not bought.

7088. பிள்ளை பெற்ற வயிறோ, நெல்லெடுத்த குழியோ?
A nursing mother's appetite.

7089. பிள்ளை பெற்றவளைப் பார்த்துப் பெருமூச்சு விட்டு ஆவது என்ன?
Compare above.

7090. பிள்ளை என்றால் பேயும் இரங்கும்?
Children always pitied.

7091. பிள்ளை அருமை மலடி அறிவாளா?
No experience—no appreciation.

7092. பிள்ளையாருக்குப் பெண் கொள்வதுபோல.
A mock ceremony.

---

7093. பிள்ளையாரைப் பிடித்த சனி அரசமரத்தையும் பிடித்தது [போல.
Contagion spreading.

---

7094. பிள்ளையார் கோவிலில் கள்ளன் இருக்கிறான், சொன்னாலும் கோள்போலிருக்கும்.
One ought to be very careful about sacred things.

---

7095. பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தது.
Intending one and doing another.

---

7096. பிள்ளை இல்லா வீட்டில் கிழவன் துள்ளி விளையாடுகிறான்.
A sorry substitute.

---

7097. பிள்ளையும் புழுக்கையும் சரி, பிள்ளைக்கும் புழுக்கைக்கும் இடம் கொடாதே.
Compare above.

---

7098. பிள்ளை பெற்றுப் பேரிட வேணும்.
Own something before you rule.

---

7099. பிள்ளைப்பேறு பார்த்ததும் போதும், என் ஆம்படையானைக் கட்டி அணைத்ததும் போதும்.
A barren woman's complaint.

---

7100. பிள்ளை மலபாதை செய்ததென்று தொடையை அறுக்கிறதா?
Visiting trifles with serious punishment.

---

7101. பிள்ளையும் கிள்ளித் தொட்டிலும் ஆட்டுகிறதா ?
Doing both evil and good.

---

7102. பிள்ளையைச் சாக்கிட்டு பூதம் விழுங்குகிறது.
Injuring oneself for a mere pretext.

---

7103. பிள்ளை வரத்துக்குப் புருஷனை பறிகொடுத்தாற்போல.
Loss more than gain.

---

7104. பிள்ளை அருமை பெற்றவளுக்குத் தெரியும்.
A mother's appreciation of children.

---

7105. பிள்ளையாண்டான் கெட்டிக்காரன் பொழுதுபோனால் கண் தெரியாது.
An ironical hit.

---

7106. பிள்ளையாரைக் கண்டால் தேங்காயைக் காணோம், தேங்காயைக்கண்டால் பிள்ளையாரைக்காணோம்.
What is wanted always missing.

7107. பிள்ளையில்லாத பாக்கியம் பெற்றிருந்தென்ன இலாக்கியம்?
Childlessness deplored.

7108. பிள்ளையின் மடியிலே பெற்றவன் உயிர்விட்டால் பெருங்கதியுண்டு.
A fond religious notion.

7109. பிள்ளை பிறந்த ஊருக்குப் புடவை வேணுமா?
Too well known in one's native place.

7110. பிள்ளைவருத்தம் பெற்றவளுக்குத் தெரியும், மற்றவளுக்குத் தெரியுமா?
Compare above.

7111. பிள்ளைவீட்டுக்காரர் சம்மதித்தால் பாதி விவாகம் முடிந்தது
Refers to the troublesomeness of the bridegroom's party.

[திருமா
7112. பிறக்கிறபொழுதே முடம் ஆனால் பேய்க்குப் படைத்தால்
Defects from birth seldom remedied.

7113. பிறந்தபிள்ளை பிடிசோற்றுக் கழுகிறது, பிறக்கப்போகிற பிள்ளைக்குத் தண்டைசதங்கை தேடுகிறார்களாம்?
Neglecting present for future duties.

7114. பிறந்தவன் இறப்பதே நிசம்.
Certainty of death.

7115. பிறந்ததெல்லாம் பிள்ளையா?
All is not gold that glitters.

7116. பிறந்தன இறக்கும், தோன்றின மறையும்.
" All is vanity."

7117. பிறந்த அன்றே இறக்கவேண்டும்.
A pessimist view of life.

7118. பிறந்த ஊருக்கு புடவை வேணுமா?
Compare above.

7119. பிறந்த ஊருக்குச் சேலைவேண்டாம், பெண்டு இருந்த ஊருக்குத் தாலிவேண்டாம்.
Where proof is unnecessary.

7120. பிறந்தவிடத்து வண்மையை உடன்பிறந்தாரிடத்திற் சொல்லுகிறதா ?
They know it already.

[டான்.
7121. பிறர்மனைத் துரும்புகொள்ளான் பிராமணன் தண்டுகொண்
A thievish hypocrite.

7122. பிறர் பொருளை இச்சிப்பான் தன்பொருளை இழப்பான்.
Covetousness brings loss.

7123. பிறவிக் குருடனுக்குத் தெய்வம் கண் கொடுத்தாற்போல.
An unexpected boon.

7124. பிறவிச் செவிடனுக்குப் பேசத் திறமுண்டா ?
A natural defect.

7125. பிறவிக் குருடனுக்கு பலத்த முடிச்சாயிருக்கும்.
He wants to be secure.

7126. பிறவிக் குருடனுக்குக் கண் கிடைத்ததுபோல.
Another form of above.

7127. பிறன் மனை புகாமை அறம் எனத் தகும்.
Adultery condemned.

7128. பின்குடுமி புறங்காலில் தட்ட ஓடுகிறது.
Running at a great speed.

7129. பின்புத்திக்காரன் பிராமணன்.
A Brahmin is prone to afterthought.

[நலம்.
7130. பின்னால் வரும் பலாக்காயினும் முன்னால் வரும் களாக்காய்
Present good *versus* future.

[டையாளம்.
7131. பின்னை என்பதும் பேசாதிருப்பதும், இல்லை என்பதற்கு அ
How a refusal is expressed.

## பீ.

7132. பீக்கு முந்தின குசுப்போல.
A sure precursor, (vulgar).

7133. பீ தின்ன வேண்டுமென்றால், வாயை நன்றாய்க் கழுவிப் போடவேண்டும்.
If evil is to be done let it be done in secret.

7134. பீ தின்ன வந்த நாய் சூத்தைக் கடிக்கப் போகிறதா ?
Don't fear a base fellow.

---

7135. பீயும் சோறுமாய் பிசைகிறது.
Said of a dirty act.

---

7136. பீயைப் பெரிதாயெண்ணி மொய்க்காமல் வேடுகட்டுவானேன [ன்?
Taking undue care of a worthless thing.

---

7137. பீரம் பேணி பாரம் தாங்கு.
Bear your burden.

---

7138. பீலா பூத்தகச் சோறு பெரிய பறங்கியாப் பேலும் பேளும்.
Certain indigestible foods.

---

7139. பீறின புடைவை பெருநாள் இராது.
Once torn alv ays torn.

---

7140. பீற்றற் பட்டைக்கு அறுதற்கொடி.
Two things well matched.

---

## பு.

7141. புகழ்ச்சியாளுக்கு ஈந்தது பூதக்கண்ணாடி.
That he may see himself magnified.

---

7142. புகழ்ந்தானைப் போற்றி வாழ்.
Gratitude commended.

---

7143. புகைந்த வீட்டைச் சுற்றுகிறது.
Waiting for a favour.

---

7144. புகை நுழையாத விடத்திலே புகுந்திடும் தரித்திரம்.
Poverty enters every family.

---

7145. புகைக்கினும் காரகில் பொல்லாங்கு கமழாது.
Even when persecuted the noble will do no harm.

---

7146. புங்கப்புகழே தங்கத்திகழே.
To despise wealth is praiseworthy.

---

7147. புட்டுத்தின்று விக்கினாற்போல.
Something suffocating.

---

7148. புட்டு எங்கே விக்கும்? தொண்டையிலே விக்கும்.
Parts liable to suffer.

7149. படம்போட்டால் பொன்வேறு களிம்புவேறு.
Adversity tries character.

7150. புண்ணாக்குத் தராவிட்டால் செக்கிலே பேறுவேன்.
Threatening revenge.

7151. புண்ணாக்குத் தின்பானை சுண்ணாம்பு கேட்டால் வருமா?
Seeking something in an unlikely place.

7152. புண்ணியத்துக்குக் கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது [போல.
A bad return for a good deed.

7153. புண்ணியத்துக்கு உழுத மாட்டைப் பல்லைப் பிடித்துப் பதம் பார்த்ததுபோல.
Compare preceding.

7154. புண்ணியம் பார்க்கப் போய்ப் பாவம் பின்னே வந்ததாம்.
Similar to two preceding.

7155. புண்ணியம் இல்லாத வழிகாட்டி வீண்.
A wicked guide condemned.

7156. புண்ணிலே கோல் இட்டதுபோல் தூண்டிக் காட்டுகிறான்.
Adding fuel to fire.

7157. புண்ணிலே புளி பட்டதுபோல.
Similar to preceding.

7158. புண்ணுக்கோ மருந்துக்கோ வீசம்?
Urges promptness of action.

7159. புதிதாய் வந்த மணியக்காரன் நெருப்பைக் கட்டி அடித்தா [னும்.
A new broom sweeps well.

7160. புதிதாய் புதிதாய்ப் குலம்புகுந்தேன், பீலாப் பூத்தகச்சோறு.
Boast of a new-comer.

7161. புத்தி எத்தனை; சத்தி எத்தனை?
Intelligence compared with power.

7162. புதிய காரியங்களிற் புதிய யோசனை வேண்டும்.
Pouring new wine into new bottles.

7163. புதிய வண்ணானும் பழைய அம்பட்டனும் தேடவேண்டும்.
Dhobies to be constantly changed not barbers.

7164. புதிய வண்ணான் பொந்துகட்டி வெளுப்பான்.
Compare above.

7165. புதிய வெள்ளம் பழைய வெள்ளத்தை அடித்துக்கொண்டு [போச்சுது.
New things more powerful than old.

7166. புதியாரை நம்பிப் பழையாரைக் கைவிடலாமா?
Don't forsake old friends for new.

7167. புதுக் குடத்திலே வார்த்த தண்ணீர்.
Always cool and pleasant.

7168. புதுப் பிடவையிலே பொறி பட்டாற்போல.
Catching fire easily.

7169. புதுப் பானைக்கு ஈ சேராது.
Certain persons repellent.

7170. புதுப் பெண்ணே புதுப் பெண்ணே நெருப்பு எடுத்துவா, உனக்குப் பின்னாலே இருக்கிறது செருப்பு அடி.
Humouring a new daughter-in-law.

7171. புது மணவறைப் பெண்போல் நாணுகிறது.
Bashful as a bride.

7172. புதுமாடு புல்லு பெறும்.
New guests treated with great kindness.

7173. புதுமைக்கு வண்ணான் பறை தட்டி வெளுத்தான்.
The boastfulness of a new worker.

7174. புதுமையான காரியம் தான் இந்தக் கலியுகத்தில்.
An age of innovations.

7175. புதையல் எடுத்தவனைப்போலே.
Keeping his own secret.

7176. புத்தி கட்டை பெயர் முத்துமாணிக்கம்.
Character not consistent with title.

7177. புத்தி கெட்ட ராஜாவுக்கு மதி கெட்ட மந்திரி.
Like master like servant.

7178. புத்தி அற்றோரும் தூங்கினர், புத்தி உற்றோரும் தூங்கினர்.
All apt to be negligent.

7179. புத்திமான் பலவான்.
Knowledge is power.

7180. புத்தியற்றான் பலனற்றான்.
The converse of preceding.

7181. புத்தி முற்றினவர்க்குச் சித்தியாதது ஒன்றும் இல்லை.
Nothing impossible to men of mature knowledge.

7182. புத்தி உறப் புகழ்.
Let praise be discreet.

7183. புத்தி அற்றவர்கள் பத்தியாய்ச் செய்வதும் விபரீதமாம்.
Want of judgment affects even piety.

7184. புத்தி ஈனர்கள் குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக்கொள் [வார்கள்.
The acts of the foolish are always absurd.

7185. புரட்டிப் புரட்டிப் உதைக்கிறபோதும், மீசையில் மண்பட வில்லை என்றான்.
Though defeated and yet without any sense of defeat.

7186. புரண்டும் பத்துநாள் மருண்டும் பத்துநாள் பின்னையும் பத்து [நாள்.
How time goes in sickness.

7187. புருவத்திற் பட்டால் கரிக்குமோ, கண்ணிற் பட்டால் கரிக் [குமோ?
The right spot essential.

7188. புருஷன் அடிக்கக் கொழுந்தன் கோபித்ததுபோல.
An unwelcome intruder.

7189. புருஷனுக்கு எற்ற மாராப்பு.
Manners according to husband's rank.

7190. புலி அடிக்கு முன்னே கிலி அடிக்கும்.
Terror slays more than a tiger.

7191. புலிகுத்தின குரியென்று கையிலெடுத்தாலும் போதும்.
Reputation goes a great way.

7192. புலிக் காட்டிலே புகுந்த மான்போல.
In the power of the enemy.

7193. புலிக்குப் பயப்பட்டபேரெல்லாம் பொட்டவந்து என்பேரி
ல் படுத்துக்கொள்ளுங்கள்.
A coward's offer of help.

---

7194. புலிக்குப் பிறந்து நகம் இல்லாமற் போகுமா ?
The law of heredity asserted.

---

7195. புலிக்குத் தன் காடு வேற்றுக்காடு உண்டா ?
The usurper has no scruples.

---

7196. புலிக்கு உரிய உணவைப் பூனை புசிக்குமோ?
Treatment according to deserts.

---

7197. புலிக்குப் பிறந்து பூனையாய்ப் போகுமா ?
Compare above.

---

7198. புலிக் கூட்டத்தில் மான் அகப்பட்டதுபோல.
Similar to above.

---

7199. புலி செவி திருகிய மத களிறு.
An elephant in rut.

---

[ஷம்.
7200. புலி நகம் படாவிட்டாலும், அதன் மீசை குத்தினாலும் வி
The merest contact with the wicked condemned.

---

7201. புலி பசித்தால் புல்லைத் தின்னுமா ?
The noble will never stoop to vulgarity.

---

7202. புலி பதுங்குவது பாய்ச்சலுக்கு அடையாளம்.
A calm before a storm.

---

7203. புலிப் பால் குடித்தவன்போல் இருக்கிறான்.
Having a tiger's nature.

---

7204. புலிமேலெடுத்த கத்தியை பூனைமேல் வீசுகிறதா ?
Not using the right means.

---

7205. புலியும் பசுவும் பொருந்தி வாழ்ந்தாற்போல.
Natural foes living in harmony.

---

7206. புலியூருக்குப் பயந்து நரியூருக்கு வந்தேன், நரியூரும் புலியூ
ராய்ப் போயிற்று.
Seeking better and getting worse.

---

7207. புலியைக் கண்ட மான்போலே.
In sight of a natural foe.

---

7208. புலியைப் பார்த்து நரி சூடு இட்டுக்கொண்டதுபோல.
The inferior mimicking the superior.

7209. புலையனுக்கு வாக்குச் சுத்தியும் ஆணையும் இல்லை.
The base keep no oaths.

7210. புலையனுக்குப் பூமுடி பொறுக்குமா?
The base deserve no ornament.

7211. புலையும் கொலையும் களவும் தவிர்.
Three forbidden vices.

7212. புல் உள்ள இடத்தில் மேய்ந்து தண்ணீருள்ள இடத்திலே குடிக்க வொட்டாது.
Unsteady workers.

7213. புல் உள்ள இடத்தில் மாட்டை ஆட்டை மேய ஒட்டாது.
Compare preceding.

7214. புல்லாளைச் செய்து கொல்லையில் வைத்தாற்போல.
Placing scare-crows in a field.

7215. புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருள் போலாய் விட்டது.
Giving counsel to the base.

7216. புல்லும் பூமியும் கல்லும் காவேரியும் உள்ளமட்டும், எங்கிலத்தை அநுபோகம் பண்ணு.
A benefactor's promise.

7217. புல்லும் பூமியும் உள்ளமட்டும்.
For ever and ever.

7218. புல்லும் பூமியும் கல்லும் காவேரியும் உள்ளமட்டும்.
Another form of above.

7219. புல்லு விற்கிற கடையிலே பூ விற்கிறது.
Against degeneracy.

7220. புல்லைத் தின்னும் மாடுபோலப் புலியைத் தின்னும் செந்நாய் உதவுமா?
The useful to be preferred to the strong.

7221. புழுக்கைச்சி மேல் சன்னதம் வந்தால் பூ இட்டுக் கும்பிட வேணும்.
The base when exalted take great airs.

7222. புழுக்கைக்குப் பொன்முடி பொறுக்குமா?
Compare above.

7223. புழுக்கைக் குணம் போகா தொருகாலும்.
Impossible to reform the base.

7224. புழுக்கை கலம் கழுவி உண்ணாது.
The filthy habits of the base.

7225. புழுக்கை ஒழுக்கம் அறியுமா, புண்ணுக்குச் சட்டி பதம் அறி [யுமா?
The base have no manners.

7226. புழுக்கை ஒழுக்கம் அறியாது பித்தளை நாற்றம் அறியாது.
Similar to preceding.

7227. புழுக்கைக்குப் புத்தி பிடரியிலே.
The base devoid of natural sense.

7228. புழுங்கிப் புழுங்கிப் மா இடித்தாலும் புழுக்கைச்சிக்கு ஒரு கொழுக்கட்டை.
The base labour much but earn little.

7229. புழுத்த சரக்கு கொழுத்த பணம்.
Some articles become valuable by rotting.

7230. புளி எத்தனை தூக்கு, ஒரே தூக்கு.
Some things weighed all at once.

7231. புளித்தகாய்க்குப் புளி புகுத்தினேயோ?
Like painting the lily.

7232. புளியங் கூடும் பழமும்போல.
In contact and yet separate.

7233. புளியம் பழமும் ஓடும் போல.
Similar to preceding.

7234. புளியமரத்தில் ஏறினவன் நாக்கெரிவு காணுமுன் இறங்கு [வானா?
An evil course not given up before its injury is felt.

7235. புளியமரத்தில் ஏறினவன் பல் கூசினால் இறங்குவான்.
Compare preceding.

7236. புளியம் பழத்துக்குப் புளிப்புப் புகுத்தவிட வேணுமா?
Like gilding gold.

7237. புளுகினாலும் பொருந்தப் புளுகவேண்டும்.
Falsehood must be consistent.

7238. புள்ளிக் கணக்கன் பள்ளிக்கு ஆவானா?
The literate *versus* the illiterate.

7239. புள்ளிப் பொறிபாய்ந்த மூங்கில் கொள்ளிச் சாம்பலானாற்போல.
Being reduced to ashes.

7240. புறக்குற்றம் அறி பிடரியிலே கண்.
Keen in detecting others' faults.

7241. புறக்கடை மருந்து கவைக்கு உதவாது.
Home remedies condemned.

7242. புறக்குடத்துத் தண்ணீர்போல.
Something not in your possession.

7243. புற்றிலே ஆந்தை விழிப்பதுபோல விழிக்கிறான்.
In great terror and confusion.

7244. புற்றிலே ஈசல் புறப்பட்டதுபோல புறப்படுகிறான்.
Appearing in quick succession.

7245. புற்றிலே கிடந்த புடையன் எழும்பினதுபோல்.
Coming out in great fury.

7246. புற்றிலே ஈசெல் புறப்பட்டாலும், மண்ணிலே கறையான் கூடினாலும் மழை வரவே வரும்.
Certain indications of coming rain.

## பூ.

7247. பூ அரசிருக்கப் பொன்னுக் கழுவானேன்?
Said to be a very auspicious tree.

7248. பூசப் பூசப் பொன் நிறம், இன்னத் இன்னத் தன்னிறம்.
The improving nature of varnish.

7249. பூசணிக்காய் அத்தனை மூத்துக் காதில் ஏற்றுகிறதா மூக்கில் ஏற்றுகிறதா?
Unwieldy ornaments condemned.

7250. பூசணிக்காய் எடுத்தவனைத் தோளிலே காணலாம்.
Big thieves easily caught.

7251. பூசணிக்காய் அழுகினதுபோல.
Like the rotting of a pumpkin.

[ங்கே ?
7252. பூசணிக்காய் அத்தனை முத்தைப்போட்டுக் கொண்டிருக்கிற தெ
Compare above.

* 7253. பூசாரி பூ முடிக்கப் போனாலும், பூ ஆலங்காடு பலாக் காடா
ய்ப் போச்சுதாம்.
A great disappointment.

7254. பூசை முகத்திலே காடியை விட்டு ஓட்டினதுபோல.
Disturbing a sacred ceremony.

7255. பூசைபண்ணச்சே காடியை விட்டோட்டினாற்போல.
Similar to preceding.

7256. பூச்சி பூச்சி என்றால் புழுக்கை தலைமேலேறும்.
Condemns giving advantage to the base.

7257. பூச்சி மரிக்கிறதில்லை, புழுவும் சாகிறதில்லை.
Certain insects die hard.

[பார்.
7258. பூட்டிப் புசிக்காமற் புதைப்பார் ஈயைப்போல் ஈட்டி இழப்
Misers condemned.

7259. பூட்டும் திறப்பும்போல.
Well fitted to each other.

7260. பூதலம் தன்னில் இவ்வூர் புண்ணியம் என் செய்ததோ ?
A sarcastic remark.

7261. பூதலம் யாவும் போற்று முச்சுடர்.
The sun, moon and stars.

7262. பூத்தானமான பிள்ளை ஆத்தாளைத் தாலி கட்டிற்றாம்.
A son indulged by his mother.

7263. பூத்துச் சொரியப் பொறுப்பார்கள் முட்டிக் கட்டக் கலங்கு
வார்கள்.
The story of the dog in a manger.

7264. பூ மலர்ந்து கெட்டது, வாய் விரிந்து கெட்டது.
By the words of your mouth you are condemned.

7265. பூமி அதிர நடவாத புண்ணியவான்.
Said of a great saint.

7266. பூமி திருத்தி உண்.
Agriculture commended.

7267. பூமியைப்போல பொறுமை வேணும்.
Meekness extolled.

7268. பூராடக்காரனோடு போராடி முடியாது.
Difficult to overcome astrologers.

7269. பூரியோர்க்கு இல்லை சீரிய ஒழுக்கம்.
The base naturally destitute of manners.

7270. பூலோகமுதலியார் பட்டம், புகுந்து பார்த்தால் பொட்டல்.
Title high but condition low.

7271. பூர்வ செட்டை போச்சுதோ இருக்கிறதோ என்று பார்த்தாலும்.
Feeling one's pulse.

7272. பூ விற்கும் கடையில் புல் விற்பதுபோல.
Altering the condition of things.

7273. பூ விற்ற கடையில் புல் விற்கலாமா?
Similar to preceding.

7274 பூ விற்ற காசு மணக்குமா புலால் விற்ற காசு நாறுமா?
Gain not affected by merchandise.

7275. பூ விற்றவனைப் பொன் விற்கப் பண்ணுவேன்.
A clever man's boast.

7276. பூவுடன் கூடிய நாரும் மணம் பெற்றாற்போல.
Improving by the company one keeps.

7277. பூவுள்ள மங்கையாம் பொற்கொடியாம் போன இடம் எல்லாம் செருப்படியாம்.
Character *versus* birth.

7278. பூர்வோத்தரம் மேரு சாத்திரம்போல் இருக்கிறது.
One's ancestry ridiculed.

7279. பூனை உள்ள இடத்திலே எலி பேரன் பேர்த்தி எடுக்கிறது.
Increased evil in spite of effort.

7280. பூனை கட்டும் தொழுவத்தில் ஆனைகட்டலாமா?
Not putting things to their proper use.

7281. பூனைக்குட்டிப் போட்டாற்போல தூக்கிக்கொண்டலைகிறது.
Paying too much attention to the baby.

7282. பூனை குண்டுசெட்டியில் தலையை இட்டுக்கொண்டு பூலோகம் எல்லாம் இருண்டு போச்சுதென்று நினைக்குமாம்.
The ostrich burying itself in the sand.

7283. பூனை குத்தின சுளுக்கி கையிலெடுத்தாற் பெருமையா ?
No praise from the possession of trifles.

7284. பூனைக்கு இல்லை தானமும் தவமும்.
The wicked perform no ceremonies.

7285. பூனைக்குச் சிங்கம் பின் வாங்குமா ?
Foes of unequal might.

7286. பூனைக்குத் தன் குட்டி பொன் குட்டி.
Everybody praises his own child.

7287. பூனைக்கு மீனிருக்கப் புளியங்காயைத் தின்றதாம்.
Stooping to unnatural food.

7288. பூனைக்குக் கொண்டாட்டம், எலிக்குத் திண்டாட்டம்.
What is pleasure to one is pain to another.

7289. பூனைக்குச் சிமாளம் வந்தால் பீற்றற்பாயைச் சுரண்டுமாம்.
How the base express their joy.

7290. பூனை சிரித்ததும் எலி பெண்டுக் கழைத்ததும்.
The inferior taking liberties with the superior.

7291. பூனை பால் குடிக்கிறதுபோல.
Doing something stealthily.

7292. பூனை பிராமண போசனம் பண்ணுகிறதென்று பூணூல் போட்டுக் கொண்டதாம்.
Suiting the style to the action.

7293. பூனைபோல் ஒங்கி யானைபோல் ஆக்கிரமிக்கிறது.
To crouch first, and then to rage with fury.

7294. பூனைபோல் ஒடுங்கிப் புலிபோல் பாய்ந்தான்.
Similar to preceding.

7295. பூனைமுன் கிளிபோல் புலம்பித் தவிக்கிறது.
In sight of one's formidable foe.

7296. பூனையைத்தான் வீட்டுப் புலியென்றும், எலி அரசனென்றும் சொல்வார்கள்.
Tamil opinion of cats.

7297. பூனையைக் கொன்றபாவம் உனக்கு, பிடிவெல்லம் தின்றபலன் எனக்கு.
Nominal *versus* real profit.

7298. பூனைவாய் எலிபோல் புலம்பித் தவிக்கிறது.
Compare above.

## பெ.

7299. பெட்டிப் பாம்புபோல் அடங்கினான்.
Was quite subdued.

7300. பெட்டி பீற்றல், வாய்க் கட்டுத் திறம்.
Lock better than the box.

7301. பெட்டிப் பாம்பு ஓட்டி அடங்கினாற்போல.
Compare above.

7302. பெட்டியி லடக்கின குட்டிப் பாம்புபோல.
Well within one's power.

7303. பெட்டியும் மூடியும் பிளந்தாற்போல.
A sudden revelation.

7304. பெட்டைக் குதிரைக்கு இரட்டைக்கொம்பு முளைத்தது.
Said of a very rare occurrence.

7305. பெட்டைக் கோழி கூவியோ விடிகிறது?
Inferior position assigned to women.

7306. பெட்டைக் கோழி தட்டிக் கூவுமா?
A woman cannot assume a man's rights.

7307. பெண் என்றால் பேயும் இரங்கும்.
The pitiable condition of women.

7308. பெண்டுகளுக்குப் பெற்றார் இடத்திலும் பிள்ளைகள் இடத்திலும் மூப்பில்லை.
Women never get tired of their parents and children.

7309. பெண் கொடுத்த மாமியோ கண் கொடுத்த சாமியோ?
A mother-in-law extolled.

7310. பெண்சாதி காற்கட்டு, பிள்ளை வாய்க்கட்டு.
Family life teaches self-denial.

7311. பெண்சாதி சொந்தம் போக்கு வரத்துப் புறம்பே.
A selfish husband.

7312. பெண்சாதியைக் குதிரைமேல் ஏற்றிப் பெற்ற தாயின் தலையிலே புல்லுக்கட்டை வைத்தடிக்கிற காலம்.
Preferring wife to mother.

7313. பெண்சாதி இல்லாதவன் பேயைக் கட்டித் தழுவினது [போல.
A wifeless husband's folly.

7314. பெண்சாதியைத் தாய் வீட்டில் விட்டவனுக்கு ஒரு சொட்டு.
The wife must be always under the husband's control.

7315. பெண்சாதி இருந்தால் புதுமாப்பிள்ளை.
With a wife one is always well off

7316. பெண்டாட்டி கொண்டதும் திண்டாட்டம் பட்டதும் போ[தும்.
Lamenting one's domestic disappointment.

7317. பெண்டிர்க்கு அழகெதிர் பேசாதிருத்தல்.
Wives must be submissive.

7318. பெண்கள் சோற்றுக்குத் தண்டம் இல்லை.
Women always deserve their food.

7319. பெண்கள் இருந்த இடம் சண்டைகள் பெருத்திடும்.
Women always quarrelsome.

7320. பெண்கள் இருந்திடின் பெரிய சண்டையாம்.
Another form of preceding.

7321. பெண்டு வாய்க்கும் புண்ணியவானுக்கு, பண்டம் வாய்க்கும் பாக்கியவானுக்கு.
A good man gets a good wife.

7322. பெண்ணரம்பைக் கூத்துப் போய்ப் பேய்க் கூத்து ஆச்சுதே.
Frustration of cherished hopes.

7323. பெண்ணாசை ஒரு பக்கம், மண்ணாசை ஒரு பக்கம்.
Desiring two things at the same time.

7324. *பெண்ணாசை கொண்டு பெருக்கத் தவிக்கிறது.*
Entirely overcome by Cupid.

---

7325. *பெண்ணானையைத் தொடரும் பேரானையைப்போல்.*
Similar to preceding.

---

7326. *பெண்ணின் குணம் அறிவேன் சம்பந்தி வாய் அறிவேன்.*
A mother-in-law condemned.

---

7327. *பெண்ணின் கோணல் பொன்னிலே நிமிரும்.*
The effect of ornament on women.

---

7328. *பெண்ணுக்கொரு கும்பிடு வில்லுக்கு ஒரு கும்பிடு என்றது போல.*
Undertaking to serve two masters.

---

7329. *பெண்ணுக்குப் பொன் இட்டுப்பார், சுவருக்கு மண் இட்டுப் பார்.*
The effect of ornaments.

---

7330. *பெண்ணுக்கும் பொன்னுக்கும் தோற்பு உண்டா?*
Gold and women praised.

---

7331. *பெண்ணுக்குப் பொன்னாசைகொள்ளும் பேரணங்கு.*
Lust of gold condemned.

---

7332. *பெண்ணுக்குப் போய் பொன்னுக்குப் பின்வாங்கலாமா?*
A bride must be obtained at any cost.

---

7333. *பெண்ணுக்குப் பெண்தான் சீதனம்.*
A wife is her own dowry.

---

7334. *பெண்ணுக்கு மாமியாரும், பிள்ளைக்கு வாத்தியாரும்.*
Mother-in-law and teacher essential.

---

7335. *பெண்ணுமல்லாமல் ஆணுமல்லாமல் பெருமரம்போல் வளருகிறது.*
A shapeless growth.

---

7336. *பெண்ணைக் கொண்டு பையன் பேயானான், பிள்ளைபெற்று சிறுக்கி நாயானாள்.*
Marriage and childbirth sometimes harmful.

---

7337. *பெண்ணைப்பற்றிப் பீயைத்தின்னு.*
Petticoat government condemned.

---

7338. *பெண்ணைக் கொடுத்தவளோ கண்ணைக் கொடுத்தவளோ?*
Value of a mother-in-law.

---

7339. பெண்ணைப் பிழை பொறுக்கப் பெற்றதாய் வேண்டாமோ?
A mother's forgiving nature.

---

7340. பெண்ணை வேண்டுமென்றால் இளியற் கண்ணை நக்கு.
A sarcastic suggestion.

---

7341. பெண்ணைக் கட்டிக்கொடுப்பார்கள், பிள்ளைபெறுவதற்குப் பிணைபடுவார்களா?
Impossible help expected.

---

7342. பெண்ணென்று பிறந்தபோதே புருஷன் பிறந்திருப்பான்.
Marriages are ordained in heaven.

---

7343. பெண்பிள்ளைச் சூத்துக்குப் புரிமனை.
Entirely under petticoat government.

---

7344. பெண் புத்தி கேட்கிறவன் பேய்.
Female advice to be avoided.

---

7345. பெண்புத்தி பின்புத்தி.
A woman's thoughts are after-thoughts.

---

7346. பெண்வளர்த்தி பீர்க்கங்கொடி.
Women grow very fast.

---

7347. பெய்தும் கெடுத்தது, காய்ந்துங் கெடுத்தது.
Excessive rain and excessive heat injurious.

---

7348. பெரியவீடென்று பிச்சைக்குப் போனேன் கரியைவழித்து கன்னத்தில் தடவினார்கள்.
Disappointment as great as expectation.

---

7349. பெரியாரைத் துணைக்கொள்.
Seek the aid of the great.

---

7350. பெரியார் பெருந்தலை பேய்த்தலைக்கு நாய்த்தலை.
A contemptuous saying.

---

7351. பெரியோரெல்லாம் பெரியருமல்லர்.
All that glitters is not gold.

---

7352. பெரியோர் தின்றால் பலகாரம், சிறியோர் தின்றால் கொருவு.
What is allowed among the great is forbidden among the small.

---

7353. பெரியோர் உள்ளம் பேதிக்கலாகாது.
The great should not change their mind.

7354. பெரியோரைக் கண்டெழுந்திராதவன் பிணம்.
Irreverence condemned.

7355. பெரியோர்கள் திருவுளம் பேதித்தால் எப்பொருளும் பேதிக்கும்.
The effect of a great man's change of mind.

7356. பெரியோர்முன் தாழ்ந்து பேசில், நாணலைப்போல் நிமிர்ந்து கொள்வார்கள்.
The good effect of humility.

7357. பெரியோர் முன் எதிர்த்துப்பேசில், வெள்ளத்திற்குமுன் மரங்களைப்போல் வீழ்வார்கள்.
The ill effects of pride.

7358. பெருங் கயிறு முடி அழுந்தாது.
Difficult to manage the obstinate.

7359. பெருங்காயம் இருந்த பாண்டம் வாசனை போகாது.
Ill repute hard to get rid of.

7360. பெருங்காயம் இருந்த குடுக்கை வாசனை போகாதே இருக்கிறார்.
Compare preceding.

7361. பெருங்காற்றில் பீளைப்பஞ்சு பறக்கிறதுபோல.
Tossed about from place to place.

7362. பெருங் குலத்தில் பிறந்தாலும் புத்தி அற்றவன் கரும்புப் பூப்போல.
Birth *versus* character.

7363. பெருங் கொடை பிச்சைக்காரருக்குத் துணிவு.
A beggar's hopes.

7364. பெருத்த மரங்களை வைத்தவன் உருக்கமாய்த் தண்ணீர் வார்ப்பான்.
Great efforts are to be properly maintained.

7365. பெரு நெருப்புக்கு ஈரம் உண்டா ?
Great wealth unaffected by trifling expenditure.

7366. பெருநெருப்பிலே புழுமேயுமா?
The weak avoid a strong foe.

7367. பெரு மரத்தைச் சுற்றின வள்ளிக்கொடிபோல.
Well supported.

7368. பெரு மழை விழுந்தாற் குளிராது.
Great troubles better than small ones.

7369. பெருமாளைச் சேர்ந்தோருக்குப் பிறப்பில்லை.
Vishnu worship extolled.

7370. பெருமாள் இருக்கிற வரையில் திருநாள் உண்டு.
Feasts at a Vishnu temple.

7371. பெருமாள் செல்லும் வழியிலே புல்லாய் முளைத்தாலும் போதும்.
Compare above.

7372. பெருமாள் என்கிற பெயரை மாற்றிப் பெரிய பெருமாள் ஆச்சுது.
An easy change of names.

7373. பெருமாளைச் சேர்ந்தோர்க்குப் பிறப்பு இல்லை, பிச்சைச்சோற்றிற்கு எச்சில் இல்லை.
Compare above.

7374. பெருமான் நினைத்தால் வாழ்வு குறைவா, பிரமா நினைத்தால் ஆயுசு குறைவா ?
Effect of divine favour.

7375. பெருமை ஒரு முறம், புடைத்து எடுத்தால் ஒன்றும் இல்லை.
The emptiness of pride.

7376. பெருமை உள்ளங்கையிலே வளர்ந்தாலும் பேய்ச்சுரை நல்ல சுரையாகாது.
Fuller than preceding

7377. பெருமை கண்டவர் சிறுமை கண்டாலல்லது தேறார்.
The beneficent effect of adversity.

7378. பெருமைதான் அருமையைக் குலைக்கும்.
Pride destroys one's worth.

7379. பெருமையான தரித்திரன் வீண்.
A poor man's pride ridiculous.

7380. பெருமையும் சிறுமையும் வாயால் வரும்.
One's speech makes one proud or humble.

7381. பெருமைக்கு ஆட்டை அடித்துப் பிள்ளை கையில் காதைச் சுட்டுக் கொடுத்தான்.
Pride and miserliness.

---

[டார்.
7382. பெரு ரூபத்தை உடையவரும் பிரயோசனமாய் இருக்கமாட்
Size and utility do not always go together.

---

7383. பெரு வயிறு கொண்டவனுக்குக் காறி உமிழ்ந்தது ஆதாயம்.
Said of a greedy person.

---

7384. பெரு வயிறு கொண்டது அறியாமல் சீமந்தத்திற்கு நாள் இட்டுக் கொண்டாளும்.
Mistaking one thing for another.

---

7385. பெருவாரிக் கழிச்சலிலே தப்பிப் பிழைத்தவன் நாட்டாண்மைக்காரன்.
The great escape epidemics.

---

7386. பெருவெள்ளம் பாயும் கடலிலே பீ வாய்க்காலும் பாயும்.
All people go to the great.

---

7387. பெற்ற தாயைப் பெண்டுக் கிழுக்கிறதா ?
Incestuous behaviour.

---

7388. பெற்ற தாய்க்கும் வளர்த்த தாய்க்கும் உதவாமல் பிரிந்த குயிலைப்போல.
Useless to mother and nurse.

---

7389. பெற்ற தாய் இடத்திலேயா கற்ற வித்தை காட்டுகிறது ?
One's acquirements to be exhibited in the proper place.

---

7390. பெற்ற தாய் ஆனாலும் குற்றம் எத்தனை பொறுப்பாள் ?
There is a limit to forgiveness.

---

7391. பெற்ற தாய் செத்தால் பெற்ற அப்பன் சிற்றப்பன்.
Ill effects of a mother's death.

---

[போல.
7392. பெற்ற தாய் பசித்திருக்கப் பிராமண போஜனம் செய்தது
A cruel and undutiful son.

---

7393. பெற்றது எல்லாம் பிள்ளையா, இட்டது எல்லாம் பயிரா ?
Compare above.

---

[லமோ ?
7394 பெற்றது எல்லாம் பிள்ளையோ, விளைந்தது எல்லாம் குசக்க
Similar to preceding.

---

7395. *பெற்ற பிள்ளை துடையிற்பேனால் என்ன செய்யலாம்?*
A child's mistakes are not crimes.

---

7396. *பெற்றவளுக்குத் தெரியும் பிள்ளை அருமை.*
Every man appreciates his own workmanship.

---

7397. *பெற்றவளுக்குத் தெரியாதா பெயரிட?*
Similar to above.

---

7398. *பெற்ற மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு.*
Parent *versus* child.

---

7399. *பெற்றாளை நினையாத தருதலை.*
An ungrateful child.

---

7400. *பெற்றாலும் பிள்ளை நாயகம், நட்டாலும் தில்லை நாயகம்.*
Bringing forth good children commended.

---

7401. *பெற்றோர்க்கு இல்லைச் சுற்றமும் சினமும்.*
The good nature of parents.

---

## பே.

7402. *பேசப் போகிறாயோ சாகப் போகிறாயோ?*
Tamil opinion of talking.

---

7403. *பேசப் பேச எந்தப் பாஷையும் வரும்.*
Speaking helps the acquisition of any language.

---

7404. *பேசாதிருந்தால் பிழை ஒன்றும் இல்லை.*
Silence is golden.

---

7405. *பேசினால் வாயாடி, பேசாதிருந்தால் ஊமைப்பயல்.*
Difficult to please everybody.

---

7406. *பேசில் அபலம் பேசாக்கால் ஊமை.*
Similar to preceding.

---

7407. *பேசுகிற தரிவாதம், நோண்டுகிறது இட்டிக்கிழங்கு.*
A mile of talk and an inch of action.

---

7408. *பேச்சுக் கொடுத்துப் பேச்சுவாங்குகிறதா?*
Drawing one out.

---

7409. பேச்சுக் கற்ற நாய் வேட்டை பிடிக்காது.
A barking dog seldom bites.

7410. பேச்சுக்கு இராவணன், பிண்டத்துக்குக் கும்பகர்ணன்.
Talking and eating excessively.

7411. பேச்சுக்குப் பேச்சுச் சிங்காரமா ?
Vain disputation condemned.

7412. பேச்சு பல்லக்கு, தம்பி கால்நடை.
Compare above.

7413. பேச்சை விற்றுக் காய்ச்சிக் குடிக்கிறான்.
Breaking one's word for gain.

7414. பேடி கையில் ஆயுதம் பிரகாசிக்குமா ?
An incompetent workman.

7415. பேடி கையில் வாள்போலே.
Similar to preceding.

7416. பேதம் அற்றவர் நீதம் உற்றவர்.
An unchanging nature extolled.

7417. பேதைகள் வெள்ளத்திலே நின்றும் தாகத்திற்குத் தண்ணீருக்கு அலைவார்கள்.
Fools never avail themselves of even the nearest help.

7418. பேதைமை என்பது மாதர்க்கு அணிகலம்.
Tamil opinion of ignorance in women.

7419. பேயானாலும் தாய்வார்த்தை தட்டலாமா ?
A mother's words to be obeyed however bad.

7420. பேயானாலும் தாய், நீரானாலும் மோர்.
Wickedness cannot alter relationship.

7421. பேயும் அறியும் பெண்சாதி பிள்ளையை.
A family is never forgotten by its father.

7422. பேயும் சிலது ஞாயம் பகரும்.
Even demons can argue.

7423. பேயை நம்பினாலும் பெண்ணை நம்பொண்ணாது.
A woman less trustworthy tan a demon

7424. பேய் ஆடிய கம்பம்போல.
Well shaken.

7425. பேய் கொண்டாலும் கொள்ளலாம் பெண் கொள்ளல் ஆகாது.
Compare above.

7426. பேய்க்குக் கள் வார்த்ததுபோல.
Making bad worse.

7427. பேய்க்கு வேப்பிலைபோல.
Something disagreeable.

7428. பேய்க்கு வேலை இட்டதுபோல.
Getting something ill-performed.

7429. பேய்க் கூத்தும் ஆமணக்கும் ஆள்போனால் ஆள் தெரியாது.
Identification difficult in a devil's dance.

7430. பேய் பிடிக்கவும் பிள்ளை பிழைக்கவுமா ?
Certain of fatal results.

7431. பேய் போய்ப் புளியமரத்தில் ஏறினதுபோல.
A favourite abode for demons.

7432. பேய் சிரித்தாலும் ஆகாது அழுதாலும் ஆகாது.
A demon's smiles and cries are both injurious.

7433. பேராசைக்காரனைப் பெரும்புளுகால் வெல்லவேண்டும்.
How the avaricious must be overcome.

7434. பேராசை பெரு நஷ்டம்.
Avarice leads to loss.

7435. பேராசை தீராத் தரித்திரம்.
Compare preceding.

7436. பேராசை தரித்திரம் தீராத உபத்திரம்.
Avarice causes endless misery.

7437. பேராசைகொண்டு பெருக்கத் தவிக்கிறது.
Similar to preceding.

7438. பேரின்பம் வேண்டின் சிற்றின்பம் ஒழிக்க.
If you want heaven, give up pleasure.

7439. பேரிளமை கடந்தபின் பிள்ளை பெற்றெடுத்தாற்போல.
Bearing children in old age.

7440. பேர் இல்லாச் சந்நிதி பாழ், பிள்ளை இல்லாச் செல்வம் பாழ்.
Wealth without children useless.

7441. பேர் சந்திரவதனன் முகத்திலழகு கிடையாது.
Name and appearance contradictory.

7442. பேர் செல்லப்பிள்ளை நாமமற்றுப் போச்சுது.
Compare preceding.

7443. பேர் பொன்னுத்தாள் கட்டக் கரியமணி இல்லை.
Compare above.

7444. பேர் முத்துமாலை கட்டக் கரியமணிக்கு வழியில்லை.
Compare above.

7445. பேர்த் தடிவைக்கச் சிவனில்லை பேர் தாண்டவராயன்.
Compare above.

7446. பேளச் சொன்னதார், வாரச் சொன்னதார்?
Incurring evil wilfully.

7447. பேளப் போனவிடத்தில் பேளா மறந்துவிட்டதாம்.
A short-lived memory.

7448. பேளப் போனவிடத்தில் விளங்காய் அகப்பட்டதுபோல.
A lucky find.

7449. பேளுகிற கிழவியும் எழுந்திராள்.
Rousing so little attention.

## பை.

7450. பைசாசைப் பணியேல்.
Against demon worship.

7451. பைந்தமிழ்ப் புலவோர் பாட்டுக்கு எற்றவன்.
Worthy of a poet's praise.

7452. பையச் சென்றால் வையம் தாங்கும்.
Recommends gentle walking.

7453. பைய மிதித்தது வேடன் அடி, பதறி மிதித்தது பன்றி அடி.
Light and firm footsteps.

7454. பைய மென்றால் பனையையும் மெல்லலாம்.
Slow mastication recommended.

7455. பையலோ டிணங்கேல்.
Avoid juvenile company.

7456. பையிற் கட்டிவைத்த பொருள் பறிகொடுக்கப்பட்டது.
Even care cannot prevent theft.

## பொ.

7457. பொக்கவாய் மெச்சினும் பொரிமாவை.
Insincere praise.

7458. பொங்கலும் போச்சு, போகியும் போச்சு பெண்ணை அனுப்புடா பேய்த்தாபொழி.
Demanding one's wife.

7459. பொங்கியும் பால் புறம் போகாதிருக்கிறது.
A good sign.

7460. பொங்குசனிபோய் மங்குனி வந்திருக்கிறது.
One evil has gone and another has come.

7461. பொங்கும் காலம் புளி மங்கும் காலம் மாங்காய்.
Certain seasons of the year.

7462. பொடி மீனெல்லாம் பெருமீனுக் கிரை.
The great feed on the small.

7463. பொட்டி முறித்த பயலுக்கு சட்டையும் தலைப்பாகையும் [பார்.
A well-clad thief.

7464. பொதிக்கு அளக்கிறதற்கு முன்னே சத்தத்திற்கு அளக்கிற [தா ?
In too great haste.

7465. பொதியை வைத்து விட்டுப் பிச்சைக்குப் போனான், அதையும் வைத்து விட்டுச் செத்துக் கிடந்தான்.
An unfortunate end.

7466. பொதி வைக்கிறதற்கு முன்னே சத்தத்திற்கு அளக்கிறதா?
Compare above.

7467. பொத்தைச் சுரைக்காய்போல.
Broken cisterns holding no water.

7468. பொய் இருந்து புலம்பும், மெய் இருந்து விழிக்கும்.
Falsehood *versus* truth.

[ம்மே.
7469. பொய் உடை ஒருவன் சொல் வன்மையினால் மெய்போலு
A lie may sometimes look like truth.

7470. பொய்கிடந்து புலம்புகிறது, மெய்கிடந்து விழிக்கிறது.
Similar to above.

7471. பொய் சொன்ன வாய்க்குப் போசனம் கிடையாது.
Effect of a lying habit.

7472. பொய் சொன்ன வாய்க்குப் பொரியும் கிடையாது.
Similar to preceding.

7473. பொய் சொல்லி வாழ்ந்தவனும் இல்லை, மெய் சொல்லிக் கெட்டவனும் இல்லை.
Falsehood ruins and truth saves.

7474. பொய் பூரண சந்திரன் மெய் மூன்றாம் பிறை.
Falsehood and truth are like the waning and waxing moon.

7475. பொய் மெய்யை வெல்லுமா?
Can falsehood overcome truth?

7476. பொய்யான பொருளாசை மெய்யான அருளாசையை விலக்குகிறது.
Covetousness destroys godliness.

7477. பொய்யும் ஒரு பக்கம் பொறாமையும் ஒரு பக்கம்.
Falsehood and envy combined.

7478. பொய்யும் மெய்யும் நீளத்தகும்.
Falsehood and truth are known in time.

7479. பொய்யைச் சொன்னாலும் பொருந்தச் சொல்லவேண்டும்.
Even falsehood must be consistent.

7480. பொரிமாவை மெச்சின பொக்கைவாயன்.
Insincere praise.

7481. பொருடளைப் போற்றிவாழ்.
Preserve your substance.

7482. பொருளாசையும் மனச்சாட்சியும் பொருந்துமா ?
Covetousness *versus* conscience.

7483. பொருளில்லார்க்கு அருளில்லை.
A curious doctrine.

7484. பொருளும் கொடுத்துப் பழியும் தேட.
Incurring both loss and guilt.

7485. பொருளும் போகமும் கூடவாராது புண்ணியமே கூடவரும்.
Wealth and pleasure *versus* virtue.

7486. பொருள் உள்ளோர்க்குப் பூலோகம், அருள் உள்ளோர்க்கு அந்தலோகம்.
Wealth procures this world—grace the other.

7487. பொருள் போன வழியே துக்கம் போம்.
Sorrow goes after riches.

7488. பொல்லாத மனம் கேளாது.
An evil heart.

7489. பொல்லாங்கு என்பவை எல்லாம் தவிர்.
Avoid all evil.

7490. பொல்லாத காலம் சொல்லாமல் வந்தது.
An unexpected calamity.

7491. பொல்லாதவர்கள் சினப்பட்டால் கல்லின் பிளவுபோல ராசியாகமாட்டார்கள்.
Quarrels among the wicked.

7492. பொல்லாத குணத்துக்கு மருந்து உண்டா ?
No remedy for wickedness.—True.

[போல
7493. பொல்லாதவர்கள் சங்காத்தம் உப்பு மணலில் வீழ்ந்த நீர்
Evil of associating with the wicked.

7494. பொல்லாப் பிள்ளைக்குச்சரி இல்லாப் பிள்ளை.
A bad child worse than none.

7495. பொழுது பட்ட இடம் விடுதி விட்ட இடம்.
Halting when the sun sets.

7496. பொழுதுவிடிந்தது பாவம் தொலைந்தது.
Night is the time for crimes.

7497. பொறி வென்றவனே அறிவின் குருவாம்.
He is master who has controlled his senses.

7498. பொறுதி என்பது கடலினும் பெரிது.
The greatness of patience.

7499. பொறுத்தல் கசப்பாய் இருந்தாலும் பொறுக்கப் பொறுக்கத் தித்திப்பு.
Habitual patience agreeable.

7500. பொறுத்தார் பூமி ஆள்வார்.
The meek shall inherit the earth.

7501. பொறுத்தார் அரசாள்வார், பொங்கினர் காடாள்வார்.
Similar to preceding.

7502. பொறுமை புண்ணியத்திற்கு வேர், பொருளாசை பாவத்திற்கு வேர்.
Money is the root of all evil.

7503. பொறுமை கடலிலும் பெரிது.
Another form of above.

7504. பொற் பூவின் வாசனையும் முருக்கம் பூவின் வாசனையும் சரி.
A golden flower is destitute of fragrance.

7505. பொற் பூ வாசிக்குமா ?
Compare preceding.

7506. பொற் கலம் ஒலிக்காது, வெண் கலம் ஒலிக்கும்.
Some inferior persons exert influence.

7507. பொற் காப்புக்கு ஆசைப்பட்டுப் புலியின் கையில் அகப்பட்டதுபோல.
Seeking gain and running into danger.

7508. பொன் ஆபரணத்தைப்பார்க்கிலும் புகழ் ஆபரணமே பெரிது.
Reputation *versus* ornament.

7509. பொன் இரவல் உண்டு, பூ இரவல் உண்டா ?
Some things cannot be lent.

7510. பொன் என்றால் பிணமும் வாய் திறக்கும்.
Lust of gold universal.

7511. பொன் ஒன்று பணிதி பல.
Material one—forms many.

7512. பொன்கத்தி என்று கழுத்து அறுத்துக்கொள்ளலாமா?
Value of a thing no excuse for its abuse.

7513. பொன் காத்த பூதம் போல.
Quite absorbed.

7514. பொன்செருப்பு ஆனாலும் காலுக்குத்தான் போடவேண்டும்.
Quality cannot alter use.

7515. பொன்மணி அற்றவளை அம்மணி என்பானேன் ?
No jewels, no respect.

7516. பொன்முடி அல்லது சடை முடி வேண்டும்.
Some head ornament essential.

7517. பொன்னம்பலம் உண்டானால்,என்ன அம்பலம் கிடையாது?
The greater includes the smaller.

7518. பொன்னான மருமகனானாலும் மண்ணானாலே ஒரு மாமியார் வேண்டும்.
A ruler always necessary.

7519. பொன்னம்பலத்துக்கும் புவனகிரிப் பட்டணத்துக்கும் என்றைக்கும் உண்டான இழவு.
Eve in trouble.

7520. பொன்னாலே கலம் உண்டானாலும் மண்ணாலே சுவர் வேண்டும்.
Both rare and common materials necessary.

7521. பொன்னான மனத்தைப் புண்ணாக்குகிறான்.
Why pain a pure soul?

7522. பொன்னாங்கண்ணிக்குப் புளி விட்டு ஆக்கினால் உண்ணா
பெண்ணும் ஒரு உழக்கு உண்ணும்.
Effect of acids in curries.

7523. பொன்னாங்கண்ணிக்குப் புளி விட்டு ஆக்கினால் உண்ணாக்
எல்லாம் தித்திக்கும்.
Compare preceding.

7524. பொன்னாலே மருமகளானாலும் மண்ணாலே ஒரு மாமி வே
Compare above.

7525. பொன்னின் குணம் போமா ? பூவின்மணம் போமா ?
Natural qualities never got rid of.

7526. பொன்னின் விளக்கானாலும் தூண்டுகோல் வேண்டும்.
Discipline necessary even to the noble.

7527. பொன்னின் கலப்பை வரகுக்கு உழப் போனதாம் வரகு செருக்கு வரகு பட்டதாம்.
A good beginning but bad end.

7528. பொன்னின் குடத்திற்குப் பொட்டு வேண்டுமா ?
Beauty needs no ornament.

7529. பொன்னின் குடம் உடைந்தாற் பொன் ஆகும், என் ஆகும் மண்ணின் குடம் உடைந்தக்கால் ?
The great retain their worth always.

7530. பொன்னுக்குப் பொடியாய்ப் போச்சுது.
Suffering loss for fancied gain.

7531. பொன்னையும் பிடவையையும் நீக்கிடில் பெண் மலக்கூடு.
Tamil opnion of female uncleanliness.

7532. பொன்னை எறிந்தாலும் பொடிக் கீரையை எறியலாமா ?
Small vegetables valuable.

7533. பொன்னை வைக்கிற கோயிலிலே பூவையாவது வைக்கவே[ண்டும்.
Flowers in a temple.

## போ.

7534. போகா ஊருக்கு வழி கேள்.
To avoid thieves.

7535. போகமும் உடனுண்டு பொன்னதை கொள்ளும் மாதர்.
Prostitutes defined.

7536. போகம் புவனம் பொருந்து மிடமெங்கும் தேகம் காணம் தி[ரியுமே.
Pleasure seeking body.

7537. போகாத இடத்திலே போனால் வாராத சொட்டு வரும்.
Certain places to be avoided.

7538. போக்கணம் கெட்டவன் ராஜாவிலும் பெரியவன்.
An impudent fellow succeeds.

7539. போக்கற்ற மத்தளம் கொட்டினதும் பூண்டித் தெய்வம் வந்[தாடினதும்.
Some sort of success.

7540. போக்கற்றாள் நீக்கற்றாள் பொழுதுவிடிந்து கந்தை அற்றாள்.
A destitute, abandoned woman.

7541. போக்கற்றால் புலி ஆள்மேலே.
Opportunity for mischief.

7542. போக்கிடம் கெட்ட முசல் பொந்திலே நுழைந்தாற்போல.
Seeking any place of refuge.

7543. போக்கிடம் கெட்டவன் ஊருக்குப் பெரியவன்.
Because he is at large.

7544. போக்கு நீக்கில்லாமல் புத்திக்குச் சரிப்போனபடி பேசுகி[றது.
Meaningless chatter.

7545. போக்கு அற்ற நாய்க்கு போனது எல்லாம் வழி.
An aimless walker.

7546. போசனம் சிறுத்தாலும் ஆசனம் பெருக்க வேண்டும்.
Dignity to be greater than food.

7547. போட்ட இடத்தில் தேடவேண்டும்.
Reap where you have sown.

7548. போதகர் சொல்லைத் தட்டாதே, பாதகர் இல்லைக் கிட்டாதே.
A religious advice.

7549. போதகருக்கே சோதனை மிஞ்சும்.
The more godly the more tempted.

7550. போதனை பெரிதோ சாதனை பெரிதோ?
Example *versus* precept.

7551. போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து.
Contentment is great gain.

7552. போயும் வந்தும் பொன்னம்பலம் திரும்பிவந்தும் திருவம்பல[ம்.
Always the same.

7553. போயொரு கோபத்தால் கிணற்றில் விழுந்தால் ஆயிரம் சந்தோஷம் வந்தாலும் அப்பால் எழுந்திருக்கலாமா?
What is done in passion cannot be recalled.

7554. போரோடு தின்கிற மாட்டுக்குப் பிடுங்கிப் போட்டுக்கட்டுமோ?
A well-fed child cannot be starved.

7555. போரில் ஊசி தேடின சம்பந்தம்.
An impossible interprise.

7556. போரைக் கட்டிவைத்துப் போட்டும் பிச்சைக்குப் போவானேன்?
Rich and yet pretending poverty.

7557. போர் சுட்டுப் பொரி பொறுக்கினாற்போல.
A work of needless waste.

7558. போர்த்தொழில் புரியேல்.
Avoid wars.

7559. போர் பிடுங்குகிறவள் பூரக்களம் சாருகிறவளை மருட்டுகிறு [ளாம்.
One thief frightening another.

7560. போலைக்கு ஒரு பொன்மணி கிடைத்ததாம், அதைத் தூக்கிக் கண்ணில் தொட்டுத் தொட்டுப் பார்த்ததாம்.
A jewel in the hands of the unworthy.

7561. போலை பொறுக்கப் போச்சாம், பூனை குறுக்கே போச்சாம்.
The destitute always unlucky.

7562. போனசனியன் போச்சென்றிருந்தேன், பொச்சுக்குள்ளிருந்து கிச்சுகிச்சென்கிறது.
Compare above.

7563. போனகம் என்பது தான் உழைத்து உண்டல்.
Food proper is what has been earned.

7564. போன சுரத்தைப் புளி இட்டு அழைத்தாற்போல.
Courting a relapse.

7565. போனதினம் போக புதனன்றைக்கு வந்தான்.
Want of punctuality.

7566. போனதை நினைக்கிறவன் புத்தி கெட்டவன்.
Crying for spilt milk.

7567. போன மச்சான் திரும்பிவந்தான் பூமணத்தோடே.
An unwelcome return.

7568. போன மாட்டைத் தேடுவாரும் இல்லை, மேய்த்த கூலி கொடுப்பாரும் இல்லை.
Quite indifferent to their own interests.

7469. போன முயல் பெரு முயல்.
What is gone is great.

---

## பௌ.

7570. பௌவத்து எழில்சேர்.
Improve your appearance.

---

7571. பௌவப் பெருமை தெய்வச் செயலே.
Greatness is due to God.

---

7572. பௌவம் உற்றது ஆக்கை, செவ்வை அற்றது வாழ்க்கை.
Variableness and uncertainty of life.

---

## ம.

7573. மகதேவர் ஆடுமிடத்துப் பேயும் ஆடுகிறது.
The wicked in company with the good.

---

7574. மகதீஸ்வரத்தை எண்ணி மணப்பால் குடிக்கிறது.
Building castles in the air.

---

7575. மக மேருவைச் சேர்ந்த காகமும் பொன்னிறமாம்.
The effect of constant intercourse.

---

7576. மகாராஜனுக்கு இடம்விடக்கூடாது, ஏழைக்கு ஆசை சொல்லக்கூடாது.
Don't give room to the rich.

---

7577. மகளுக்குப் புத்தி சொல்லித் தாய் அவசாரி போனாளாம்.
The teacher setting a bad example.

---

7578. மகளுக்குக் குட்டல் பாக்கியந்தவிர மற்ற பாக்கியமெல்லாம் இருக்கிறது.
The misfortune of childlessness.

---

7579. மகள் செத்தாள் தாய் திக்கு அற்றாள்.
A mother's dependence on a daughter.

---

7580. மகள் செத்தாற் பிணம், மகன் செத்தாற் சவம்.
Superiority of son to daughter.

---

7581. மகன் செத்தாலும் சாகட்டும் மருமகள் கொட்டம் அடங்கினாற் போதும்.
A mother-in-law's vengeance.

---

7582. மகாப்பெரியவர் மண்டையிலே புழுத்தவர்.
Old and yet stupid.

7583. மகாமகம் பன்னிரண்டு வருஷத்திற்கு ஒரு விசை.
Great events happen at long intervals.

7584. மகா புருஷர் மகிமை பிறவிக் குருடனுக்குத் தெரியுமோ?
The ignorant cannot appreciate worth.

7585. மகா ராஜாவின் கலியாணத்தில் கீராகாரம் செய் பட்ட பாடு.
Miserliness in spite of wealth.

7586. மகா லட்சுமி பரதேசம் போனாற்போல.
Fortune spreading her favours.

7587. மகிமை சுந்தரி கதவை ஒஞ்சரி.
A sarcastic remark.

[ஸாதே.
7588. மகிமைக்கு அஞ்சிய மருமகனே எருமைக் கன்றைக் கொல்
A polite warning.

[சரணம்.
7589. மகிமைப்பட்டவனுக்கு மரணம், மாட்டுக்காரப்பையனுக்குச்
The great made low, and the low made great.

7590. மகிமையிலே ஒரு பெண் குவளையிலே வாழுகிறாள், அதில் ஒரு பெண் அறுத்துவிட்டு அழுகிறாள்.
Compare preceding.

7591. மக்காவுக்குப் போய்க் கொக்குப் பிடித்ததுபோல.
A wild-goose chase.

7592. மக்கள் களவும் வரகு பதரும் சரி.
Children's thefts insignificant.

7593. மக்கள் சோறு தின்றால் மகிமை குறையும்.
It is a disgrace to be fed by one's children.

7594. மங்கமாரி வந்தார் தங்க மழை பெய்தது.
The advent of a good person—(Montgomery.)

7595. மங்கை நல்லாள், பெண் பெருமாள், வாழ்ந்ததெல்லாம் எத்தனை நாள், திங்கள் ஒரு பொழுது செவ்வாய் அறுதி.
A brief married life.

7596. மங்கை தீட்டானால் கங்கையிலே முழுகுவாள், கங்கை தீட்டானால் எங்கே முழுகுவாள்?
An extreme case.

7597. மங்கும் காலம் மாங்காய், பொங்கும் காலம் புளியங்காய்.
Certain seasons for certain things.

7598. மங்குலைக் கண்ட மயில்போல.
Overtaken by darkness.

7599. மச்சை அழித்தால் குச்சுக்கும் ஆகாது.
Certain things useless when once out of order.

7600. மச்சத்தின் குஞ்சுக்கு இப்படி என்றால், மாதாவுக்கு எப்படியோ?
*A fortiori* argument.

7601. மச்சில் ஏற்றி ஏணியை வாங்கி விட்டான்.
A sudden abandonment.

7602. மச்சானைப் பார்க்க உறவும் இல்லை, மயிரைப் பார்க்கக் கறுப்பும் இல்லை.
A brother-in-law's relationship.

7603. மச்சான் செத்தால் மயிர் போச்சு, கம்பளி எனக்கு ஆச்சு.
A selfish hope.

7604. மஞ்சளும் மலரும் கொண்டு துதிக்காவிட்டாலும் நெஞ்சில் நினைப்பதே போதும்.
Inward feeling more important than external ceremony.

7605. மடக்கிழவனிலும் புத்தி உள்ள வாலிபன் அதிகம்.
Sense more important than age.

7606. மடக் கேள்விக்கு மாறுத்தரம் இல்லை.
No answer to a foolish question.

7607. மடப் பெருமையே தவிர நீராகாரத்துக்கு வழி இல்லை.
Pride without means.

7608. மடம் பிடுங்கிக் கொண்டு போகும்போது, நந்தவனத்துக்கு வழி எங்கே என்கிறான்.
An irrelevant question.

7609. மடவாய்க் கொக்கு போல.
Pretending to be harmless.

7610. மடிப் பிச்சை மங்கிலியப் பிச்சை.
Begging for a marriage ceremony.

7611. மடி மாங்காய் போட்டுத் தலை வெட்டலாமா ?
Injury after hospitality.

7612. மடியிலே பூனைக்குட்டியைக் கட்டிக்கொண்டு சகுனம் பார்க்கிறது போல.
Defeating your own ends.

7613. மடியிலே கனம் இருந்தால் வழியிலே பயம்.
No guilt, no fear.

7614. மடியிற் பணம் போய் வழியிற் சண்டையை இழுத்ததாம்.
Money is the root of all evil.

7615. மடியைப் பிடித்துக் கள்ளை வார்த்து மயிரைப் பிடித்துக் காசு [வாங்குகிறதா ?
Compare above.

7616. மடையனுக்கு மறுமொழியில்லை.
Don't answer a fool.

7617. மட்டாயிருந்தது மதனி குடிவாழ்க்கை.
A joke about a sister-in-law.

7618. மட்டான போசனம் மனதிற்கு மகிழ்ச்சி.
Moderation commended.

7619. மட்டி எருக்கலை மடல் மடலாய்ப் பூத்தாலும், மருக்கொழுந்து வாசனை வருமா ?
Quality not quantity essential.

7520. மட்டிப் பயலுக்குத் திட்ட திருக்கன்.
Two fellows well matched.

7621. மட்டியிலும் மட்டி மகா மட்டி.
Said of a great blockhead.

7622. மட்டில்லாமற் கொடுத்தாலும் திட்டுக் கேட்கலாகாது.
Abuse unbearable even from a benefactor.

7623. மட்டை இடம் குட்டி வலம்.
Secret of strong progeny.

7624. மட்டைக் கரியையும் மடப்பள்ளியாரையும் நம்பப்படாது.
Certain unreliable characters.

7625. மணமும் பிணமும் போகிற வீதியிலே நின்றுபோகிறது.
Regulate your pace according to circumstances.

7626. மணலின்மேல் விழுந்த மழைத்துளி உடனே மறையும்
Gratitude of short duration.

7627. மணலை அளவிட்டாலும் மனதை அளவிடக்கூடாது.
The mind *versus* sand.

7628. மணலைக் கயிறாய்த் திரிக்கிறது, வானத்தை வில்லாய் வளைக் [கிறது
Attempting impossibilities.

7629. மணற் சோற்றில் கல் ஆய்ந்தாற்போல.
Wasteful labour.

7630. மணியக்காரன் வீடுபோல வயிறுபற்றிக்கொண்டு எரிகிறது
A great calamity.

7631. மணி நா அசையாமல் இராச்சியபாரம் பண்ணுகிறது.
Quiet administration.

7632. மணியாம் பருக்கை போட மகிழ்ந்த கடனைப்போல.
Incurring debt by giving feasts.

7633. மணி என்ன; அறுந்து விழுந்தால் இரண்டு.
Fragile character of certain things.

7634. மணையிற் பெண்ணை மாற்றிவைக்கிறது, திண்ணையிற் பெண்ணைத் திருப்பி வைக்கிறது.
Ceremonial treatment of a young girl.

7635. மண் காசுக்குச் சாம்பல் கொழுக்கட்டை.
Material according to cost.

7636. மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கினதுபோல.
Relying upon the unreliable.

7637. மண்டை உள்ள வரையில் சளி போகாது.
Life and its ills.

7638. மண்டைக்குத் தகுந்த கொண்டை போடவேண்டும்.
Everything must be suitable.

7639. மண்டையில் எழுதி மயிரால் மறைந்ததுபோல.
A well preserved document.

7640. மண் மண்ணோடே, விண் விண்ணோடே.
Terrestrial *versus* celestial.

7641. மண்ணாயினும் மனை ஆயினும் காப்பாற்றினவர்களுக்கு உண்டு.
A thrifty nature commended.

7642. மண்ணுங்கட்டி மாப்பிள்ளைக்கு எருமுட்டைப்பணிகாரம்.
Treatment according to worth.

7643. மண்ணாய்ப் போவான் காலம் கண்ணு மண்ணு தெரிய [வில்லை.
When ruin comes the judgment gets blinded.

7644. மண்ணால் ஆனாய் மண்ணாய் இருக்கிறாய்.
Dust thou art, and to dust shalt thou return.

7645. மண்ணின்மேல் நின்று பெண் ஓரம் சொல்லாதே.
Against injustice to women.

7646. மண்ணிலிருந்து வழக் கோரஞ் சொல்லாதே.
Condemns unjust decision.

7647. மண்ணிலே பிறந்து மண்ணிலே வளர்ந்து.
Of the earth, earthy.

7648. மண்ணுக் கிரையாய்ப் போகிறது.
Reduced to earth.

7649. மண்ணைத் தின்றாலும் மறையத் தின்.
Advises secrecy in eating.

7650. மண்ணோடே பிறக்கலாம் உன்னோடே பிறந்ததில்.
Disclaiming fraternity.

7651. மண் தனையாண்ட மன்னவர்கள் எத்தனையோ?
The kings of this world.

7652. மண் பறித்து உண்ணேல்.
Against usurpation of land.

7653. மண்பிள்ளை ஆனாலும் தன் பிள்ளையா யிருக்கவேணும்.
Preferring one's child to any other.

7654. மண் பூனை எலி பிடிக்குமா ?
Mere imitations are worthless.

7655. மண் பூனை ஆனாலும் எலிப் பிடித்தால் சரி.
Appearance not so important as conduct.

7656. மண் பூனையானாலும் எலிபிடிக்கிற தொன்று.
Ability, not form, essential.

7657. மண் வெட்டி கூதல் அறியுமா ?
Tools perceive no difference in weather.

7658. மண்வேலையோ புண்வேலையோ ?
Working in earth, breeds ulcers.

7659. மதனும் இரதியும் போல் வாழ்ந்திருக்கிறது.
In great happiness.

7660. மதலைக்கு இல்லைச் சீதமும் அறிவும்.
Tamil opinion of children.

7661. மதயானை ஏறியும் தட்டிவாசலில் நுழைந்தது போல.
Inviting one to destruction.

7662. மதன மலைக்கு ஒப்பிடலாம்.
So lascivious.

7663. மதாபிமானம் சுசாதிமானம் தேசாபிமானம்.
Love of one's religion, caste and country.

7664. மதியாத வாசலில் மிதியாதிருப்பதே உத்தமம்.
Do not go where you are disrespected.

7665. மதியாதான் வாசலிலே வல்லிருளே யானாலும், மிதியாமலிருப்பதே கோடி பெறும்.
Compare preceding.

7666. மதயானை போனது மார்க்கம்.
The lawlessness of passion.

7667. மதியும் உமது, விதியும் உமது.
Addressed to an all-powerful person.

7668. மதியை மீன் சூழ்ந்ததுபோல.
Trying to besiege the moon.

7669. மதில்மேல் ஏறின பூனைபோல்.
Safe in an inaccessible position.

7670. மதுபிந்து கலசம்போல் இருக்கிறது.
A rebellion in a tea-pot.

7671. மதுரைக்கு வழி வாயில் இருக்கிறது.
The way to a place is in the mouth.

7672. மதுரையில் பூசணிக்காய் மாட்டு விலை.
What is rare is always dear.

7673. மத்தகத்தால் யானை மண்ணை வாரிப்போட்டுக் கொண்டாற் [போல.
Wantonly injuring one's self.

7674. மத்திட்ட தயிர்போல் புத்தி குழம்புகிறது.
In extreme perplexity.

7675. மந்திர கிரியால் குழம்பும் கடல் வானோர்க்கு அமிர்தம் ஈந்தாற் [போல.
Returning good for evil.

7676. மந்திரிக்கு அழகு வரும் பொருள் உரைத்தல்.
A minister should possess prophetic insight.

7677. மந்திரிக்கும் உண்டு மதி கேடு.
Even ministers make blunders.

7678. மந்திரத்தால் மாங்காய் விழுமா?
Mere charms cannot overcome nature.

7679. மந்திரம் கால் மதி முக்கால்.
Common sense more essential than charms.

7680. மந்திரம் இல்லாப் பூசை அந்தி படுமளவும்.
Imperfect ceremonies.

7681. மந்திரிப் புத்திக்கு மதிமோசம் வந்தது.
Compare above.

7682. மந்திரி வீட்டிலே மூந்திரி பூத்தது, வாய்க்கெட்டினது கைக்கு எட்டவில்லை.
Enough and yet nothing to spare.

7683. மந்திரி இல்லாத யோசனையும், ஆயுதம் இல்லாத சேனையும் [கெடும்.
Certain essential needs.

7684. மந்தையிலும் பால், வீட்டிலும் தயிரா?
One cannot have both coat and cloth,

7685. மப்புக் காரன் தப்புக் கொட்டுவானா?
An unreasonable expectation.

7686. மப்புக்காரன் போல தப்புத்தியாய்ப் பேசுகிறது.
Talking in a faltering style.

7687. மயிர் சிக்கினால் உயிரை வைக்குமா கமறிமான்?
An enemy will not let go his hold.

7688. மயிர் உள்ள சீமாட்டி வாரி முடிக்கிறாள்.
Possession means responsibility.

7689. மயிர் ஊடாடாதார் நட்பும் பொருள் ஊடாடக் கெடும்.
Money makes foes of friends.

7690. மயிர் சுட்டுக் கரியாகிறதா?
Certain things for certain purposes.

7691. மயிர் விலகினால் மலை விலகும்.
Success however small will become complete.

7692. மயிர் பிளக்க வகைதேடினாற்போல.
Attempting to discover minute defects.

7693. மயிரிலே சவ்வாது வாங்கினாற் போல.
Attempting an impossibility.

7694. மயிலைக்கண்டு வான் கோழி ஆடினாற் போல.
Imitating a superior's gait.

7695. மயிலோந்திக்கு வலியக் கண்ணைக் கொடுக்கிறதுபோல.
Wilfully incurring evil.

7696. மரக் கோணல் வாச்சியிலே நிமரும்.
Art sometimes rectifies nature.

7697. மரஞ்சுட்டுக் கரியாகவேணுமேயல்லாமல் மயிர்சுட்டு கரியாய்ப் போகிறதா?
Compare above.

7698. மரணத்திலும் கெட்ட மார்க்கத்துக்குப் பயப்படு.
A good moral advice.

7699. மரணத்திற்கு வழி மட்டில்லை.
Death may be met in many ways.

7700. மரத்தில் இருந்து விழுந்தவனை மாடு மிதித்ததுபோல.
A double calamity.

---

7701. மரத்தாலி கட்டியடிக்கிறது.
A mock ceremony.

---

7702. மரத்துப் பழம் மரத்து அடியிலே விழும்.
You will reap your own fruit.

---

7703. மரத்தை இலை காக்கும், மானத்தைப் பணம் காக்கும்.
Money protects honour.

---

7704. மரத்தில் அறைந்தமுளையை மர்க்கடம் பிடுங்கினாற்போல.
Seeking danger of one's own accord.

---

7705. மரநாயிலே புழுகு வழிக்கலாமா ?
Compare above.

---

7706. மரம் தன்னை வெட்டுகிறவனுக்கு நிழல் கொடுக்கும்.
Returning good for evil.

---

7707. மரம் வெட்டுகிறவனுக்கு நிழலும், மண் தோண்டுகிறவனுக்கு இடமும் கொடுக்கும்.
Similar to preceding.

---

7708. மரம் நல்லதுதான் முசுடு கெட்டது.
Nature good but manners disagreeable.

---

7709. மயிலாப்பூர் ஏரி உடைந்துபோகிறது என்றால், வருகிற கயிட்டிக்கு ஆகட்டும் என்றாற்போல.
Unpardonable delay.

---

7710. மயிலே மயிலே என்றால் இறகு கொடுக்குமா ?
Some persons must be forced.

---

7711. மயிற் கண்ணிக்கு மசக்கை, மாப்பிள்ளைக்கு அவஸ்தை.
A pregnant woman.

---

7712. மரம் ஏறுகிறவன் சூத்தை எத்தனைதூரம் தாங்குகிறது?
There is a limit to help.

---

7713. மரம் வைத்தவனுக்கு தண்ணீர் வார்க்கக் கடன்.
Parental duty to children.

---

7714. மரமேறிக் கைவிட்டவனும், கடன் வாங்கிக் கடன் கொடுத்தவனும் கெட்டுப்போவான்.
Do not attempt what is risky.

7715. மரம்வைத்தவன் தண்ணீர் வார்ப்பான்.
Compare above.

7716. மரியாதைராமன் வழக்குத் தீர்த்தாற்போல.
Summary disposal of disputes.

7717. மரியாதைகெட்டால் மாலவாடு.
Politeness essential to good birth.

7718. மரியாதை தப்பினால் மாலவாடு.
Another form of preceding.

7719. மரியாதை இல்லாதான் மகிமை அற்றான்.
Similar to preceding.

7720. மரியாள் குடித்தனம் சரியாய்ப்போச்சு.
A jocular remark.

7721. மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்.
The effect of bewilderment.

7722. மருத்து மாவுக்குச் சயிக்கினை, மடங்காக் குதிரைக்குச் சவுக் [கடி.
Discipline for the obstinate.

7723. மருந்து கால் மதி முக்கால்.
Judgment more necessary than medicine.

7724. மருந்தும் விருந்தும் மூன்றுபொழுது.
Three times makes something perfect.

7725. மருந்தே ஆயினும் விருந்தோடு உண்.
Recommends hospitality.

7726 மருமகனுக்கென்று சமைத்ததை மகனுக்கு இட்டு வயிறு எரிந்தாளாம்.
Son-in-law preferred to son.

7727. மருவில் உண்ட சாப்பாட்டை லங்கணத்தில் நினைத்துக் கொண்டதுபோல.
Trying to live on fancy.

7728. மருவும் மஸ்ரும் போல.
An agreeable company.

7729. மர்க்கடாச் சீஷனும் மார்ச்சாலக் குருவும்.
A monkey teacher and a cat pupil.

7730. மலரும் மணமும் போல.
Inseparable companions.

7731. மலர்த்தேனை வண்டல்லாமல் மண்டேகம் குடிக்குமா ?
The privileges of the worthy,

7732. மலடி அறிவாளா பிள்ளை அருமை ?
No experience, no appreciation.

7733. மலடிக்குத் தெரியுமா மகப்பெறு வருத்தம் ?
No experience, no knowledge.

7734. மலடிக்குத்தெரியுமா பிள்ளையைப்பெற்ற அருமை ?
Compare above.

7735. மலடி மகப்பெற்றாள்.
An unusual incident.

7736. மலடியைப் பிள்ளை பெறச்சொன்னால் பெறுவாளா ?
Demanding an impossibility.

7737. மலரில் மணமும், எள்ளில் எண்ணெயும், உடலில் உயிரும் கலந்ததுபோல.
Compare above.

7738. மலரைக்கசக்கி மணங்கொள்வாருண்டா ?
Do not worry your benefactor.

7739. மலிந்தபண்டம் கொள்ளாத வணிகன் பதர்.
Character of a good merchant.

7740. மலிந்தபண்டம் கடையிலே வரும்.
Worth remains at home.

7741. மலை அத்தனை சுவாமிக்குத் தினை அத்தனை புஷ்பம் சாற்றுகிறார்.
Disproportionate offering.

7742. மலை உச்சியில் கல் ஏற்றுதலரிது?
An uphill work.

7743. மலை ஏறினாலும் மைத்துனனைக் கைவிடாதே.
Do not abondon your companion.

7744. மலைகலங்கினாலும் மனங்கலங்கப்போகாது.
Recommends equanimity of temper.

7745. மலைக்கும் மண்ணாங்கட்டிக்கும் சரியா ?
Invidious comparison.

7746. மலைக்கு மலை அண்டை கொடுத்தாற்போல.
The folly of propping up a rock with a rock.

7747. மலைத்தவருக்குப் பலன் லபிக்கிறதா ?
Perplexity yields no profit.

7748. மலைத்தேன் மூடவனுக்கு வருமா ?
Expecting an unlikely favour.

[ஆர்
7749. மலை நெல்லிக்காய்க்கும் கடல் உப்புக்கும் உறவு செய்தவ
Providential connections.

7750. மலைபோலப் பிராமணன் போகிறானும், பின்குடுமிக்கு அழு
கிறாளாம்.
Weeping over an insignificant loss.

7751. மலைபோல்வந்தது பனிபோல நீங்கிற்று.
Coming like a lion and going like a lamb.

7752. மலைப்புளுகு கலப்புளுகாயிருக்கிறது.
Terrible falsehoods.

7753. மலை விழுங்கிச் சுண்டெலி பெற்றதுபோல.
A mountain in labour bringing forth a mouse.

7754. மலைமுழுங்கி மாணிக்கத்தானுக்குக் கதவு சுண்டாங்கி.
Men of might think naught of ordinary labour.

7755. மலைமேல் இருப்பானைப் பன்றி பாய்வதுண்டா ?
Occupying a position of safety.

7756. மலையிலக்கானால் குருடனும் எய்வான்.
Easy things may be accomplished even by the ignorant.

7757. மலையிற்று மயிரில் தொங்குகிறது.
An impending danger.

7758. மலையின் உயரம் மலைக்குத்தெரியுமா ?
One is not aware of one's own condition.

7759. மலையில் விளைந்தாலும் உரலில் மசியவேண்டும்.
Time alters the condition of things.

7760. மலையுடன் மண்ணாங்கட்டி எதிர்ப்பதுபோல.
The weak resisting the strong.

7761. மலையும் மலையும் இடித்துக்கொள்ளும்போது மண்ணாங்கட்டி எந்தமூலை ?
A common person interfering in the quarrel of the great.

7762. மலையே விழுந்தால் மண்ணாங்கட்டியா தாங்கப்போகிறது ?
Great misfortunes cannot be borne by common people.

7763. மலையே மண்ணாங்கட்டி ஆகிறபோது, மண்ணாங்கட்டி எப்படி ஆகும் ?
Great and radical changes.

7764. மலையே விழுந்தாலும் தலையே தாங்கவேண்டும்.
It is the chief person that bears the burden.

7765. மலையைக் கல்லி எலி பிடிப்பதுபோல.
Great efforts for a trifling gain.

7766. மலையைச்சுற்றி அடித்தவனைச் செடியைச்சுற்றி அடியேனா ?
The greater includes the less.

7767. மலையைத் துளைக்கச் சிற்றுளி போதாதா ?
Power, not size, is essential.

7768. மலையைப் பார்த்து நாய்குலைத்தால் மலைக்குக் கேடோ நாய்க்குக்கேடோ ?
Calumny cannot affect one's character.

7769. மலையைத்துளைக்க வாச்சி உளி வந்தாற்போல.
Compare above.

7770. மலையை மலைதாங்கும், மண்ணாங்கட்டி தாங்குமா ?
The worthy must support the worthy.

7771. மலை விழுங்குவதற்கு மண்ணாங்கட்டி பச்சடியா ?
A good advice.

7772. மறந்த உடமை மக்களுக்கு ஆகாது.
Condemns forgetfulness.

7773. மறந்துசெத்தேன் பிராணன் வாவென்றால் வருமா ?
Once dead for ever dead.

7774. மறுமங்கையருக்கும் மறுமன்னவருக்கும் மார்பும் முதுகு
கொடாமலிரு.
The weak cannot help in great enterprises.

7775. மல்லாந்து படுத்துக் கொண்டா அல்லாவைத் தொழுகிறது
Urges reverence in worship.

[டாற்போல

7776. மல்லாக்காய்ப் படுத்துக்கொண்டு மார்பில் உமிழ்ந்து கொண்
Injuring oneself.

7777. மல்லாந்த தோஷம் வயிற்றிலடைத்தது.
Compare preceding.

7778. மல்லுக்கட்டிப் பிடுங்கியும் கொடாதவனு வலுவில் அழை
து கொடுக்கப் போகிறான்?
An unreasonable expectation.

7779. மல்லுக்கு மாப்பங்காகிலும் வைத்துக்கொள்ளவேணும்.
A claim helps a quarrel.

7780. மவுனம் கலகஞ்ஸந்தி.
Silence encourages a rebellion.

7781. மவுனம் மலையைச் சாதிக்கும்.
The power of silence.

7782. மவுனம் உடையார்க்கு வாராது சண்டை.
Silence avoids a quarrel.

7783. மவுனம் கலகநாசம்.
Similar to preceding.

7784. மல் இடப் பல் ஆயிற்று.
Intending one thing and doing another.

7785. மழலைச்சொற் கேளாத காதில் நெருப்பைக் கொட்டு.
The sweetness of a child's prattle.

7786. மழுங்கடனி மாங்கொட்டை.
A bald-headed hunch-back.

7787. மழைக்கால் இருட்டானாலும் மந்தி கொம்பு இழந்து பாயுமா?
Darkness cannot affect monkeys.

---

7788. மழைக்கால் இருட்டானாலும் வாய்க்குக் கை தெரியாதா ?
Compare preceding.

---

7789. மழைக்குத் தண்ணீர் மொண்டு வார்ப்பவர் யார் ?
Doing something superfluous.

---

7790. மழைக்குப் படல் கட்டி சாத்தலாமா ?
Making use of unsuitable methods.

---

7791. மழைக்கோ படல், இடிக்கோ படல் ?
Compare preceding.

---

7792. மழைக்கொதுங்கிவந்த பிடாரி மனைக்குச் சடுத்தம்போட்ட[தாம் ?
Taking advantage of one's kindness.

---

7793. மழைக்குக் கொடையா இடிக்குக் கொடையா?
Offerings to the right object.

---

7794. மழைபெய்தோடி நிறைந்தாற்போல.
In great abundance.

---

7795. மழைபெய்து நிறையாதது மொண்டு வார்த்தா நிறையும்?
Art cannot compete with Nature.

---

7796. மழை முகம் காணாதபயிரும், தாய்முகம் காணாதபிள்ளையும்.
The need of something essential.

---

7797. மழையிலே போட்டாலும் நனைகிறதில்லை, வெயிலிலேபோட்டாலும் காய்கிறதில்லை.
A person unaffected by the changes of climate.

---

7798. மழையும் பிள்ளைப்பேறும் மகாதேவருக்கும் தெரியாது.
Rain and childbirth quite uncertain.

---

7799. மழைவிட்டும் தூவானம் விடவில்லை.
Effect lasts longer than its causes.

---

7800. மழை விழுந்தால் தாங்கலாம், வானம்விழுந்தால் தாங்கலா[மோ?
Great evils compared with small.

---

7801. மறைக்காயருக்கும் உண்டு மாட்டுப்புத்தி.
Even the great may fall.

---

7802. மறைத்துக் கட்ட மாற்றுப்புடவைஇல்லை.
Destitute of clothing.

7803. மனக்கசடு அற மாயை நாடேல்.
A religious advice.

7804. மனக்கவலை பலக்குறைவு.
Cares bring many evils.

7805. மனச்சாட்சியைவிட மறுசாட்சிவேண்டாம்.
Conscience the supreme witness.

7806. மனதிலே ஒன்று வாக்கிலே ஒன்று.
Insincere.

7807. மனதிலே பகையும் உதட்டிலே உறவுமா ?
Similar to preceding.

7808. மனதில் இருக்கும் ரகசியம் மதிகேடனுக்கு வாயிலே.
A fool cannot keep a recret.

7809. மனதிற்கு மனதே சாட்சி, மற்றதற்கு தெய்வமே சாட்சி.
The mind its own witness.

7810. மனது அறியாப் பொய் உண்டா ?
There are no unconscious lies.

7811. மனதே காரணம்.
The mind is the cause of everything.

7812. மனதைப்போலிருக்கும் மங்கிலியம்.
The marriage according to the mind.

7813. மனத்துயர் அற்றோன் நினச்செபம் உற்றோன்.
Prayer removes cares.

7814. மனப்பால் குடித்து மாண்டவர் அனந்தம்.
Many ruin themselves by vain hopes.

7815. மனப்பொருத்தம் இருந்தால் மற்றப்பொருத்தம் பார்க்கத் தேவையில்லை.
Agreement of mind essential.

7816. மனம்கொண்டது மாளிகை.
What one likes is quite comfortable.

7817. மனம் தடுமாறேல்.
Never get perplexed.

7818. மனம் இருந்தும் சற்று வகை அற்றுப்போவான்.
Willing and yet liking means.

7819. மனம் உண்டானால் இடமுண்டு.
Where there is a will there's a way.

7820. மனம் தடுமாறினால் மாற்றானுக்கு வலிமை.
Enemies take advantage of our perplexity.

7821. மனம்போன போக்குக்கு வழியில்லை.
Human ways manifold.

7822. மனிதன் கையில் மனிதன் அகப்பட்டால் குரங்கு.
In slavery man debases himself.

7823. மனிதர் காணும்பொழுது மவுனம், இராதபொழுதில் உருத்திராட்சப்பூனை.
One thing in public and another in private.

7824. மனிதன் மறப்பான், குறைபடுவான், மாறுவான், போவான்.
The ways of human nature.

7825. மனுஷன் தலையை மான்தலை ஆக்குகிறான், மான்தலையை மனுஷன் தலை ஆக்குகிறான்.
Effecting rapid changes.

7826. மனைக்கொடியில்லாத மனை பாழ்.
A house without a wife is a desert.

7827. மனையாள் விடியுமுன் எழுந்து வீட்டுப் பண்செய்வாள்.
A good housewife.

7828. மனையாளுக்கு உற்றது ஒன்றும் சொல்லவேண்டாம், மாற்றானை ஒருநாளும் நம்பவேண்டாம்.
Against revealing secrets to a wife.

7829. மனைவி இறந்தால் மணம், மகனிறந்தால் பிணம்.
The widower marries again.

7830. மனைவியில்லாத புருஷன் அரைமனுஷன்.
A bachelor is but half a man.

7831. மனோவியாதிக்கு மருந்துண்டா ?
No remedies for mental maladies.

7832. மன்மதக் கறட்டோனன்.
One in the power of Cupid.

7833. மன்னவர்கள் செத்தார்கள், மந்திரிகள் செத்தார்கள் மு
இருந்தோரெல்லாம் முடிந்தார்கள்.
All men are mortal.

7834. மன்னனெப்படி, மன்னுயிரப்படி.
As is the king so are his people.

7835. மன்னவர்கள் ஆண்டது எல்லாம் மந்திரிகள் ஆண்மை.
Ministers essential to a kingdom.

7836. மன்னர்க்கு அழகு செங்கோன் முறைமை.
A sceptre of righteousness recommended.

7837. மன்னுயிரையும் தன்னுயிர்போல் எண்ணவேணும்.
Love thy neighbour as thyself.

மா.

7838. மா இருக்கிற மணத்தைப்போல் அல்லவோ கூழ் இருக்கி
குணம்.
As is the flour so is the gruel.

7839. மா உண்டானால் பணிகாரம் சுடலாம்.
No material no manufacture.

7840. மா ஏற மலை ஏறும்.
How progress is made.

7841. மாடம் இடித்தால் கூடம்.
A slight alteration makes a great change.

7842. மாடு கிழமானாலும் பாலின்சுவை போகுமா?
Age cannot affect quality.

7843. மாடு கெட்டால் தேடலாம், மனிதர் கெட்டால் தேடலாமா
Harder to reclaim man than brute.

7844. மாடுதின்கிற மாலவாடு ஆடுதின்கிற தரிதா ?
The greater evil includes the less.

7845. மாடு தின்னிக்கு வாக்குச் சுத்தம் உண்டா?
Condemns beef eating.

7846. மாடு திருப்பினவன் அர்ச்சுனன்.
A well-known allusion.

7847. மாடு பிடி சண்டைக்கு வலிய வராதே.
Discourages quarrelsomeness.

7848. மாடு மறுத்தாலும் கறக்கும் வாலிலே கயிற்றைக் கட்டினால்.
How to milk an uuwilling cow.

7849. மாடு முக்கிவர வீடு நக்கிவரும்.
Cows eat a great deal.

7850. மாடு மேய்க்கிற தம்பிக்கு மண்டலமிட்ட பெண்சாதி.
An unfaithful wife.

7851. மாடு மேய்க்காமற் கெட்டது, பயிர் பார்க்காமற் கெட்டது.
How things suffer.

7852. மாட்டின் வாழ்க்கை மூட்டையிலே.
Life suited to its burdens.

7853. மாட்டுக்குப் பெயர் பெரிய கடா என்று.
Often a change of name will suffice.

7854. மாட்டைப் புல் உள்ள தலத்திலும்,மனுஷனைச் சோறுஉள்ள தலத்திலும் இருக்க ஒட்டாது.
Said of the unsteadiness of certain persons.

7855. மாட்டை மேய்த்தானும், கோலைப் போட்டானும்.
Doing both good and evil.

7856. மாணிக்கக் காலுக்கு மாற்றுக்கால் இருக்கிறதா?
Rare things difficult to replace.

7857. மாதம் காதவழி மானாகத் துள்ளுவான்.
Said of a slow-coach.

7858. மாதா மனம் எரிய வாழாள் ஒரு நாளும்.
Daughters should not cause pain to their mothers.

7859. மாதா செய்தது மக்களுக்கு.
The law of heredity.

7860. மாதாவுக்குச் சுகமிருந்தால் கர்ப்பத்துக்கும் சுகம்.
Mother and child.

7861. மாத்திரை தப்ப மிதித்தால், கோத்திரம் கூறப்படும்.
Conduct betrays birth.

7862. மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம் போல
Human life uncertain.

7863. மா பழுத்தால் கிளிக்காம், வேம்பு பழுத்தால் காக்கைக்காம்.
Different food for different eaters.

7864. மாப்பிள்ளை சொந்தம், துப்பட்டி இறவல்.
A well-known story.

7865. மாப்பிள்ளை தோப்பிள்ளை மாங்காய்ச் சோற்றுக்கு கெதி கெட்ட பிள்ளை.
The bridegroom ridiculed.

7866. மாப்பிள்ளைத் தோழனுக்குப் பெண்டறுதி.
The bestman criticized.

7867. மாப் புளிக்கிறது எல்லாம் பணிகாரத்துக்கு நலம்.
The greater the patience the better the result.

7868. மாப் பொன் இருக்க மக்களைப் பட்டினிப் போடுவானேன்?
A nigardly mother.

7869. மா மறந்த கூழுக்கு உப்பு ஒரு கேடா?
Minor defects are nothing compared with great defects.

7870. மாமி ஒட்டினாலும் பானை ஒட்டாது.
A mother-in-law's stinginess.

7871. மாமியாரும் ஒரு வீட்டு நாட்டுப் பெண்தான்.
A daughter-in-law's opinion of her mother-in-law.

7872. மாமியார் தலையிலே கையும் வேலிப்புறத்திலே கண்ணும்.
A mother-in-law's watchfulness.

7873. மாமியார் உடை குலைந்தால் வாயாலும் சொல்லக்கூடாது, கையாலும் காட்டக்கூடாது.
A mother-in-law not to be criticized.

7874. மாமியார் உடைத்தால் மண்கலம், மருமகள் உடைத்தால் பொன்கலம்.
An inferior's faults more serious than a superior's.

---

7875. மாமியாரைக் கண்டு மருமகன் நாணுகிறதுபோல.
A son-in-law's bashfulness.

---

[வந்ததாம்.
7876. மாமியார் செத்த ஆறும் மாதம் மருமகள் கண்ணில் தண்ணீர்
A daughter-in-law's sympathy for her mother-in-law.

---

7877. மாமியார் செத்து மருமகள் அழுகிறதுபோல.
Insincere condolence.

---

7878. மாமியாரும் சாகாளோ, மனக்கவலையும் தீராதோ?
Praying for one's enemy's death.

---

7879. மாமியார் வீடு மகா சௌக்கியம்.
To the son-in-law.

---

[தகர்.
7880. மாயக்காரர் எல்லாம் பாதகர், மாறுபாட்டுக்காரர் எல்லாம் சா
Hypocrisy condemned.

---

7881. மாயக்காரன் பேயிற் கடையே.
Similar to preceding.

---

7882. மாயத்திலே மாரீசனைப்போல.
The height of hypocrisy.

---

7883. மாயப் பெண்ணே சுந்தரி மாவைப் போட்டுக் கிண்டடி.
Insisting upon real work being done.

---

7884. மாயன் கஜேந்திரனுக்காக வந்தது போல.
One cheat pleading for another.

---

7885. மாரடித்த கூலி மடியிலே.
Certain duties earn their wages at once.

---

7886. மாரி அல்லது காரியம் இல்லை.
The importance of rain.

---

[படி நீரும் சரி.
7887. மாரிகாலத்தில் பதின் கல மோரும், கோடை காலத்தில் ஒரு
Dearness depends on seasons.

---

7888. மார் அடித்த கூலி மடிமேலே.
Another form of above.

---

7889. மார்பு சரிந்தால் வயிறு தாங்க வேண்டும்.
Sympathy between relations.

7890. மார்பு மட்டும் சிநேகமானாலும் மார்பிலே கைபோடாதே.
Fiendship no excuse for undue liberties.

7891. மார்பைத் தட்டி மணதிலே வை.
Be courageous.

7892. மார்மேலும் தோள்மேலும் வளர்த்தான் அருமையாய்.
Careful bringing up.

7893. மாலை சுற்றிப் பெண் பிறந்தால் மாமனுக்கு ஆகாது.
An ominous birth.

7894. மாலை சுற்றிப் பிறந்த பிள்ளை மாமனுக்கு ஆகாது.
Similar to preceding.

7895. மாலை யிட்ட பெண்சாதி காலனைப்போல் வந்தாள்.
An unwelcome wife.

[ர்க்காது.
7896. மாலை குளித்து மனையில் புகும், தன் மனையில் ஆரையும் சே
A crow's habits.

7897. மாவாகத் தின்றால் பணியாரம் இல்லை.
You can't have both flour and cake.

[குணம்.
7898. மாவிருக்கிற மணத்தைப் போலிருக்கும் கூழ் இருக்கிற
Another form of above.

7899. மாவிலும் ஓட்டலாம், தேங்காயிலும் ஓட்டலாம்.
Seeking a share in everything.

7900. மாவுண்டானால் பணியாரம் சுடலாம்.
Compare above.

7901. மாவுக்குத் தக்க பணிகாரம்.
Manufacture according to material.

7902. மாவுக்கு மாசை கூழுக்கும் ஆசை.
Inconsistent conduct.

7903. மா வேகம் மனோ வேகமாய்.
The speed of the mind.

7904. மாவைத் தின்றால் அப்பம் இல்லை.
Compare above.

7905. மாற்றானை நம்பினாலும் மாதனை நம்பொண்ணாது.
Tamil opinion of women.

7906. மாற்றானுக்கு இடம் கொடேல்.
Do not yield to your foe.

7907. மாற்றானுக்கு மார்பில் ஆணியாய்.
Fatal to your foe.

7908. மாற்றிலே வளையாதது மரத்திலே வளையுமா?
What can be done in youth is impossible in age.

7909. மாற்றைக் குறைத்தான் செட்டி, மாயமாலங்கண்டான் தட் [டான்.
Each looks to his own profit.

7910. மாற்கண்டனைப்போல் தீர்க்காயுசாய் இரு.
Wishing one a long life.

7911. மானம் அழிந்து வாழ்வதிலும் மரணம் அடைவது உத்தமம்.
Rather die than lose your honour.

7912. மானம் அழிந்தாலும் மதிகெட்டுப் போமா?
Though honor is lost, the sense must be retained.

7913. மானம் அழியில் உயிர் காவலா?
Life not more valuable than honour.

7914. மானம் பெரிதோ, பிராணன் பெரிதோ?
Similar to preceding.

7915. மானத்தின்மேலே கண்ணும், மாப்பிள்ளைமேலே சிந்தையும்.
Insincere behaviour.

7916. மானத்தை வில்லாய் வளைப்பான், மணலைக் கயிறாய்த் திரிப் [பான்.
Said of a very able man.

7917. மானார் கலவியில் மயங்கி இருந்தாலும் தானே தருவான் சிவன் தன்பதம்.
An unjustifiable religious hope.

7918. மானிலம் சிலரைத் தாங்கேன் என்னுமோ?
Nature knows no partiality.

7919. மானுக்கு ஒரு புள்ளி ஏறி என்ன, குறைந்து என்ன?
Where defects are many one more or less does not matter.

7920. மானுஷியம் இல்லாதவன் மனுஷப் பதர்.
Condemns want of manliness.

7921. மான் கண்ணிலும் அழகு விரைவிலும் விரைவு.
Surpassing the beauty and speed of deer.

7922. மான் கூட்டத்தில் புலி புகுந்ததுபோல.
Weak persons in the hands of a strong foe.

## மி.

7923. மிகுதி ஆசை அதிக நஷ்டம்.
The evil of avarice.

7924. மிகுதி உள்ளவனுக்கும் வஞ்சனைக்காரனுக்கும் பகை, வேதக்காரனுக்கும் உலகத்திற்கும் பகை.
Natural foes.

7925. மிகுந்தும் குறைந்தும் நோய் செய்யும்.
Both excess and defect are injurious.

7926 மிகைபடச் சொல்லேல்.
Do not exaggerate.

7927. மிஞ்சினது கொண்டு மேற்கே போகல் ஆகாது.
A well founded superstition.

7928. மிஞ்சிய கருமம் அஞ்சச் செய்யும்,
Guilt and fear go together.

7929. மிடி இதயங்கொள் மீளாக் கதி தொடர்.
A good advice.

7930. மிடிமையிலும் படிமை நன்று.
Obedience better than sacrifice.

7931. மிலேச்சன் சரக்கு இருக்க விலைப்படும்.
A mercantile truth.

7932. மிதித்தாரைக் கடியாத பாம்பு உண்டா?
Revenge is certain.

7933. மிருகம் முறைபார்க்குதா வேசி முறைபார்க்க?
Prostitutes observe no relationship.

7934. மிருகங்களில் ஆனைபெரிது, அதிலும் சிங்கம் வலிது.
Size compared with strength.

7935. மிளகு சிறுத்தால் வீரியம் போகுமா?
Smallness of size no disqualification.

7936. மிளகு பொடியோடே திருவாதிகை.
A religious saying.

7937. மினுக்கு உள்ள அம்பு துன்பம் செய்யும்.
Good looks no guarantee against vice.

7938. மினைக்கெட்ட அம்பட்டன் பூனையைச் சிரைத்தானும்.
The idle man tempts the devil.

7939. மின்மினிப்பூச்சி வெளிச்சத்துக்கு இருள் போமோ?
Small means for great objects.

7940. மின்னலிலே வெட்டு முளைநோட்டம் பார்த்தாற்போல.
Imperfect examination.

7941. மின்னலைப்போல் பல்லை விளக்கானும், மினுக்கிக் கொள்வா[னும் பதர்.
Applauds cleanliness.

7942. மின்னாமல் இடி விழுமா?
No effect without a cause.

7943. மின்னால் மழை பெய்யுமா?
Not necessarily.

7944. மின்னாமல் முழங்காமல் இடி விழுந்ததுபோல.
Something unaccounted for.

7945. மின்னுவதெல்லாம் பொன் அல்ல.
All that glitters is not gold.

7946. மின்னுக்கு எல்லாம் பின்னே மழை.
The more lightning the more rain.

## மீ.

7947. மீகாமன் இல்லா மரக்கலம் ஓடாது.
Every enterprise needs a leader.

7948. மீதூண் விரும்பேல்.
Against gluttony.

---

7949. மீந்த சுண்ணாம்பையும் மெலிந்த ராஜாவையும் கைவிட ஆகாது.
A fallen person is not to be abandoned.

---

7950. மீனும் செத்தது, சினையும் செல் அரித்துப் போயிற்று.
Root and branch destruction.

---

7951. மீனை மீன் விழுங்கினாற்போல்.
One fish preying on another.

---

7952. மீன் குஞ்சுக்கு நீச்சுப் பழக்கவேணுமா?
Nature needs no art.

---

7953. மீன் குழம்போ, தேன் குழம்போ?
Tamil people very fond of fish curry.

---

7954. மீன் தண்ணீர் குடித்தாற்போல.
Something quite unusual.

---

## மு.

7955. முகக் கோணலுக்குக் கண்ணாடி பார்த்தால் தீருமா?
Natural defects cannot be remedied.

---

7956. முகம் ஆகாதிருந்தால் கண்ணாடி என்ன செய்யும்?
Blame not others for your own defects.

---

7957. முகம் சந்திர பிம்பம், அகம் பாம்பின் விஷம்.
Beauty without and wickedness within.

---

7958. முகதரிசனம் கொடுமைதனம்.
A face to face communication.

---

7959. முகத்திலே இல்லாத புகழ் சூத்திலே வந்ததா?
Without the least claim for praise.

---

7960. முகத்திலே பந்தம் கட்டிக்கொண்டு நிற்கிறான்.
Burning with rage.

---

7961. முகத்திலே மூத்தவள் வாசம்.
Always unfortunate.

---

7962. முகத்திலே விழித்ததோஷம் வயிற்றிலே வந்துவிட்டது.
One calamity leading to another.

7963. முகத்திலே விழித்தாலும் மூன்று நாளைக்குச் சோறு அகப்ப [டாது.
Said of a very ill-omened person.

7964. முகத்துக்கு முகம் கண்ணாடி.
Faces reveal each other.

7965. முகத்துக்கு அஞ்சி மூத்தாரோடு போனால் குலத்துக்கு எல்லாம் ஈனமாம்.
An adulterous connection.

7966. முகட்டுவேர்வை நிலத்திலே விழப் பிரயாசப்பட்டாற்போல.
Sweating toil.

7967. முக்காட்டுக்குள் சமுதாடா?
A dagger hidden under a veil.

7968. முக்காட்டுக்குள்ளே மூடு மந்திரமா?
Concealment suspicious.

7969. முக்காட்டுக்குள்ளே கைக்காட்டா?
Secret communication.

7970. முக்காதம் சுமந்தாலும் முசல் கைத்தூக்குத்தான்.
No luxury to the base.

7971. முக்காலம் காகம் முழுகிக் குளித்தாலும் கொக்கு ஆகுமா?
You cannot alter nature.

7972. முக்கூட்டுச் சிக்கு அறுது.
Union of three parties very difficult.

7973. முசலுக்குக் கொம்பு கண்டவர் இல்லை என்றாற்போல.
Saying something that is not unusual.

7974. முசலை எழுப்பி விட்டு, நாய் பதுங்கினதுபோல.
Stirring up something and then keeping still.

7975. முடக்கச் சரக்கு இருக்க விலைபோம்.
Compare above.

7976. முடப்பிள்ளை யானாலும் மூத்தப் பிள்ளை.
Defects cannot alter primogeniture.

7977. முடப்புல் முக்கல் நீரைத் தடுக்கும்.
Even deformed persons can be very obstructive.

7978. முடவனுக்குக் கோபம் விட்ட விடத்திலே.
The weak vent their fury when free.

7979. முடவனுக்கு நொண்டி சண்டப்பிரசண்டன்.
Of two weak persons, the stronger is the master.

7980. முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டாற் போல.
The poor indulging in vain hopes.

7981. முடவன் சண்டைக்குப் போனாற்போல.
A fruitless enterprise.

7982. முடிசார்ந்த மன்னரும் முடிவிலோர் பிடிச்சாம்பலாகிப் போகிறது தான்.
Every one is perishable.

7983. முடிக்காதவனே படிக்காதவன்.
Urges thorough learning.

[டம்.
7984. முடிச்சவிழ்க்கக் கொடுத்ததும் அல்லாமல் இளித்தவாய்ப்பட்
Incurring both loss and ridicule.

7985. முடியும் வகை யோசியாமல் முயற்சி கொள்ளாதே.
Count your cost before you build.

7986. முடி முடியாய் நட்டால் பிடி பிடியாய் விளையுமா ?
An agricultural proverb.

7987. முடியமுடிய நட்டால் கோட்டைகோட்டையாய் விளையுமா?
Compare preceding.

7988. முடிவைத்த தலைமேலே சுழிக்குற்றம் பார்க்கிறதா ?
Don't criticize when it is too late.

7989. முடி வைத்த தலைக்குச் சுழிக்குற்றம் பார்க்கிறது, கொண்டு குலம் பேசுகிறதுபோல் இருக்கிறது.
Ampler form of preceding.

7990. முட்ட நனைந்தார்க்குக் குளிரில்லை.
Small sorrows nothing to those who are in great sorrow.

[கால்.
7991. முட்டரோடாடிய நட்பு கருங்காலிக் கட்டை வெட்டாடிய
Friendship with the base discouraged.

7992. முட்ட நனைந்தவனுக்கு ஈரம் இல்லை, முழுதும் கெட்டவனுக்குத் துக்கம் இல்லை.
Compare preceding.

7993. முட்டற்ற நாரிக்கு இரட்டைப் பரியமா?
An undeserved gift.

7994. முட்டாளுக்கு என்ன சொன்னாலும் கட்டோடே கேளான்.
A fool will not listen to good counsel.

7995. முட்டாள் தனத்துக்கு முதல் பாக்குக்காரன்.
First in folly.

7996. முட்டாளுக்கு இரண்டு ஆள்.
A fool costs as much as two men.

7997. முட்டாளுக்குக் கோபம் மூக்கின்மேலே.
A fool is easily provoked.

7998. முட்டாள் பயலுக்கு இரட்டைப்பரியம்.
Compare above.

7999. முட்டிகைபோல் முனியாது வைகலும், கொட்டி உண்பாரும் குறடுபோற் கைவிடுவார்.
Even benefactors may forsake.

8000. முட்டி ஊட்டின கன்று முதார்க் கன்று.
A rude child.

8001. முட்டுக்கு முட்டல்ல மூடக் கதவும் அல்ல, சன்னிதிவாசலுக்குச் சாத்தக் கதவும் அல்ல.
A useless fellow.

8002. முட்டுமுன் குனியவேண்டும்.
"She stoops to conquer."

8003. முட்டுப்பட்டு ஜெயம் வருமானால் குட்டுப்பட்டாற் குறை என்ன?
Where victory is concerned troubles are nothing.

8004. முட்டை இடுகிற கோழிக்குக் குத்து எரிபந்தம் உண்டு.
The bread-winner has his own pains.

8005. முட்டையிலே கூவி முளையிலே கருகிறது.
Premature abilities.

8006. முட்டைக் குஞ்சைப் பிட்டு வளர்த்தது.
Bringing up from one's birth.

8007. முட்டையிடுகிற கோழிக்கு எரிவு தெரியுமல்லது மற்றவருக்குத் தெரியாது.
Only those who toil know the burden of labour.

8008. முண்டனுக்கு இரண்டாள்.
Compare above.

8009. முண்டைச்சிச் சம்பந்தக்காரன் முன்னுக்கு வருவானோ ?
Discourages connection with widows.

8010. முதலில் எடுத்துச் செலவிடாதே.
Never draw on your capital.

8011. முதலிலே கெட்டிக்காரன் முடிவிலே சோம்பேறி.
Or a new broom sweeps well.

8012. முதலுக்கு மோசமாக இருக்கிறபோது லாபத்துக்குச் சண்டை போடுகிறதா ?
Don't quarrel about trifles.

8013. முதலே துர்ப்பலை, அதிலும் கர்ப்பிணி.
A weak woman falling pregnant.

8014. முதலைக்கு இல்லை நீச்சும் நிலையும்.
Unstable nature of some persons.

8015. முதலை தன் இடத்து, மலை ஒத்த ஆனையையும் இழுத்துச் செல்லும்.
Everybody is strong in his own element.

8016. முதலை நரியின்காலை விட்டுப் புங்கமரத்தின் வேரைப்பிடித்தது போல.
Going on a wild-goose chase.

8017. முதலை வைத்துப் பெருக்காத வணிகரைப்போல.
Not improving one's capital.

8018. முதலைவாய்ப் பிள்ளை மீண்டுவருமா ?
Irrecoverable loss.

8019. முதல் இல்லார்க்கு ஊதியம் இல்லை, மதலையாம் சார்பில்லார்க்கு நிலை இல்லை.
Capital essential.

8020. முதல் இல்லார்க்கு ஊதியம் இல்லை.
Compare preceding.

---

8021. முதல் எடுக்கும்போதே தப்பட்டைக்காரன் செத்தான்.
A bad beginning.

---

8022. முதல் எழுத்திலே வெள்ளெழுத்தா ?
Premature blindness.

---

8023. முதற் கோணல் முற்றும் கோணல்.
A bad beginning, a bad end.

---

8024. முதுகிலே புண் இருந்தால் குனிய பயம்.
Guilt causes fear.

---

8025. முதுகிலே புண் உண்டானால் செடியிலே நுழையப் பயம்.
Similar to preceding.

---

8026. முதுகில் அடித்தால் ஆறும், வயிற்றில் அடித்தால் ஆறுமா ?
Invidious comparison.

---

8027. முதுகைச் சொறியச்சொன்னால் சிற்றிடையைச் சொறிகிறது.
Mistaking one command for another.

---

8028. முத்தளந்த கையினாலே மோர் விற்கிறதா ?
Reduced in circumstances.

---

8029. முத்தால் நத்தை பெருமைப்படும், மூடர் எத்தாலும் பெருமைப்படார்.
Good company ensures respect.

---

8030. முத்திலும் சொத்தை உண்டு, பவழத்திலும் பழுது உண்டு.
There are faults even in the virtuous.

---

8031. முத்தும் பவளமும் முறை முறையாய்க் கோத்ததுபோல.
In beautiful array.

---

8032. முத்தைத் தெளித்தாலும் கலியாணந்தான், மோரைத்தெளித்தாலும் கலியாணம் தான்.
Validity of ceremonies not dependent on show.

---

8033. முந்தினசோறும் முனையும் குலைந்தால் பிந்தினசோறு பீயும் சோறும்.
Disrespect worse than starvation.

---

8034. முந்தி வந்த செவியைப் பிந்தி வந்த கொம்பு மறைத்ததாம்.
The last shall be first.

8035. முந்தினோர் பிந்தினோர் ஆவர், பிந்தினோர் முந்தினோர் ஆவர்.
Similar to preceding.

[றும்.
8036. முந்தின சோற்றைத் தட்டினால் பிந்தின சோறு பீயும் சோ
Evil of rejecting a first offer

8037. முந்நாழி கறக்கிற பசுவானாலும், முன் இறப்பைப் பிடுங்கு
கிற பசு ஆகாது.
Character more important than gain.

8038. முப்பதிலே மூர்க்கம், நாற்பதிலே நாகரீகம்.
Vicissitudes of age

8039. முப்பது பணம் கொடுத்தாலும் மூளிப்பட்டம் போகாது.
Money cannot buy off natural defects.

8040. முப்பதிலே வாழ்ந்தவன் மூடன், முன்னும் பின்னும் தெரியா
தவன் குருடன்.
A Tamil opinion of prosperity.

8041. முப்பதுவருஷம் வாழ்ந்தவனும் இல்லை, முப்பது வருஷம்
தாழ்ந்தவனும் இல்லை.
A limit to prosperity as well as adversity.

8042. முப்பணியிட்ட பெண்ணுக்குக் கொப்பு ஒன்றுதான் குறை.
Only a single defect.

8043. முப்பேன் பிடிப்பது மூதேவி வாசத்துக்கடையாளம்.
Lice in the head condemned.

8044. முப்பொருள் ஆதி மூலமானவன்.
The Supreme Being.

8045. முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்.
Recommends perseverance.

8046. முரடனுக்கு மூங்கிற்றடி.
Punishment suited to the criminal.

8047. முரட்டுப் பெண்ணும் சுருட்டுப் பாயும்.
A stubborn girl seldom manageable.

8048. முரட்டுத் தனத்திற்கு முதற்பாதம்.
First in obstinacy.

---

8049. முருக்கம்பூ சிவந்ததானால் முடிப்பார்களா ?
Out of season—out of favour.

---

8050. முருக்குப் பருத்து என்ன, தூணாகப் போகிறதா ?
Said of a useless fellow.

---

8051. முருங்கைக்காய் என்றால் பத்தியம் முறியுமா ?
Mere saying is no remedy.

---

8052. முலைகொடுத்து வளர்த்தவள் மூதேவி, முன்றானை போட்டவள் சீதேவி.
Wife preferred to mother.

---

8053. முலைக் குத்துச் சவலைப் பிள்ளைக்குத் தெரியுமா ?
The child not aware of its mother's troubles.

---

8054. முழங்கைப்புண்போல முனைகுலைந்து நிற்கிறது.
In an awkward plight.

---

8055. முழங்கையிற் பட்ட சுகம்போலே.
It causes a sharp pain.

---

8056. முழிக்கிறதைப்பார் கிழக்குரங்கைப்போல.
Rediculing a foolish gaze.

---

8057. முழுகி முப்பதுநாளாச்சு, இறங்கி உப்பு அள்ளக்கூடவில்லை என்கிறாள்.
A woman's complaint.

---

[போல.
8058. முழுக்கட்டிபெயர்க்கிற பன்றிக்குக் கொழுக்கட்டி விட்டது
Adding fuel to fire.

---

8059. முழுச்சோம்பேறி முன்று உள்ளவேலி·
A great sluggard.

---

8060. முழுதும் நனைந்தவருக்கு ஈரமில்லை.
Compare above.

---

8061. முழுப்பங்குக்காரனுக்கு முக்கிரிபங்குக்காரன் மிண்டன்.
The small *versus* the great partner.

---

8062. முழுப்பூசினிக்காயைச் சோற்றோடு மறைக்கிறப்போல,
Attempting to hide what is well known.

---

8063. முழு மணிப்பூணுக்குப் பூண்வேண்டுமோ?
Like 'gilding refined gold.'

---

8064. முளைக்கையிலே உண்டானதுதான் முட்டவரும்.
What is in the sprout will be in the tree.

---

8065. முளைத்த மயிர் மூன்று, அதிலும் இரண்டு புழுவெட்டு.
Said of a bald-headed person.

---

8066. முளைப்பாரைப் புதைப்பாருண்டா?
Snubbing a rising man.

---

8067. முளையில் கிள்ளாததை முற்றினால் கோடரிகொண்டு வெட்டவேண்டும்.
Urges early training

---

8068. முள்ளாலே முள்ளை யெடுக்கவேண்டும்.
Set a thief to catch a thief.

---

8069. முள்ளுக்குக் கூர்மையும் துளசிக்கு வாசனையும் இயற்கை.
Certain natural traits.

---

8070. முள்ளுக்கு முனை சீவி விடுவார்களா?
You cannot improve upon nature.

---

8071. முள்ளுமேல் சீலை போட்டால் மெள்ள மெள்ள வாங்கவே[ண்டும்
Wicked persons should be got rid of very gently.

---

8072. முறத்தடி பட்டாலும் முகத்தடி படலாகாது.
Beating preferred to a frown.

---

8073. முறுகின புரி அறும.
Condemns extremes.

---

8074. முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்.
Punishment follows sin at once.

---

8075. முற்றின மரத்திலேதான் வைரம் இருக்கும்.
Character according to age.

---

8076. முற்றும் நனைந்தவர்களுக்கு ஈரம் ஏது?
Compare above.

---

8077. முனைமுகத்து நில்லேல்.
Don't go to war.

---

8078. முன் அளந்த நாழி பின் அளக்கும்.
You will be revenged upon.

8079. முன் ஒன்று ஓதிப் பின் ஒன்று ஆடேல்.
Against inconsistent conduct.

8080. முன் கை நீண்டால் முழங்கை நீளும்.
Tokens of generosity.

8081. முன் கோபம் பின் இரக்கம்.
Soon provoked soon forgiving.

8082. முன் பகைசெய்தால் பின்பகை விளையும்.
Compare above.

8083. முன் விட்டுப் பின் நின்று கழுத்து அறுக்கலாமா ?
Treacherous conduct.

8084. முன்வைத்த காலைப் பின் வைக்கமாட்டேன்.
Don't bask out.

8085. முன்னவனே முன் நின்றால் முடியாத பொருள் உண்டோ ?
"If God be for us who can be against us ?"

8086. முன்னாலே போனால் கடிக்கிறது, பின்னாலேபோனால் உதைக்கிறது.
Doubly mischievous.

8087. முன்னாலே இருந்த அதிகாரியை பின்னாலே வருகிற அதிகாரி நல்லவனாகச் செய்கிறது.
Successor reforming his predecessor.

8088. முன்னு நாள் செய்த தவத்தாலே மூன்றுமயிர் தந்தோமே, இந்நாள் செய்த தவத்தாலே இருந்தமயிரும் இழந்தோமே.
One vow worse than another.

8089. முன்னாலே பார்த்தால் சேவகன் குதிரை, பின்னாலே பார்த்தால் செட்டியார் குதிரை.
Different aspects of the same thing.

8090. முன்னே ஆட்டைப்பிடி, பின்னே மாட்டைப்பிடி.
Get the easier first and then the more difficult.

8091. முன்னே பார், பின்னே பார், உன்னைப் பார், என்னைப் பார்.
Be circumspective.

8092. முன்னே போனால் சௌஹத்தி பின்னே போனால் பிரமஹத்தி.
Danger both before and behind.

8093. முன்னேரம் சப்பற்காரன், பின்னேரம் பிச்சைக்காரன்.
The vicissitudes of life.

8094. முன்னே பிறந்த காதைப்பார்க்கிலும் பின்னே பிறந்த கொம்பு பலம்.
Junior stronger than senior.

8095. முன்னைக்குப்போ முசட்டைக் குழுகுழுப்பு.
Condemns forward behaviour.

## மூ.

8096. மூக்கறைக்கு முகுரம் காட்டினால் கோபம்வரும்.
People do not like their faults to be exposed.

8097. மூக்கறையன் கண்ணாடியைப் பகைத்ததுபோலே.
Similar to preceding.

8098. மூக்கறுபட்ட மூளி காதறுபட்ட மூளியைப் பழித்தாளாம்.
One deformed person ridiculing another.

8099. மூக்கறையனுக்கு வாழ்க்கைப்பட்டால் முன்னும் போகவி
டான் பின்னும் போகவிடான்.
Deformed husbands are very jealous.

8100. மூக்கிலிக்கு கண்ணாடி காட்டினதுபோல.
Compare above.

8101. மூக்கு இருக்கிறமட்டும் சளி உண்டு.
Property means trouble.

8102. மூக்கு அறுபட்ட கழுதை தூவானத்திற்கு அஞ்சாது.
It is used to rough ways.

8103. மூக்குத்தூள் போடாத முண்டத்துக்கு முப்பதுபணத்தில்
வெள்ளிடப்பி.
Luxury for the unworthy.

8104. மூக்குப் புண்ணறி அல்லவோ தாசரி ஆகவேண்டும்?
Changes to be made gradually.

8105. மூக்கு மயிர் பிடுங்கினதுபோல வருத்தம் வரும்.
Self-sought trouble.

8106. மூக்குக்குமேல் போனால் மூவாள் என்ன நாலாள் என்ன?
Depth is nothing where death is certain.

8107. மூக்கு மயிர் பிடுங்கினால் ஆட் பாரம் குறையுமா?
Trifles cannot affect great things.

8108. மூக்கைக்கிள்ளி மோரக் காட்டினதுபோல.
Injuring one and then remedying the evil.

8109. மூக்கைப் பிடித்தால் அண்ணாந்துபார்க்க விடமில்லை.
A good catch.

8110. மூக்கைப் பிடித்தால் சீவன் போகிறது.
One method of taking life.

8111. மூக்கைப் பிடித்தால் வாய் ஆ வென்னத் தெரியாது?
Said of a very stupid person.

8112. மூங்கிற் பாயும் முறட்டுப் பெண்டாட்டியும்.
Compare a similar proverb above.

8113. மூங்கில் இலைமேலே தூங்கும் பனிபோலே.
In a delicate position.

8114. மூடரோடு ஆடிய நட்பு கல்வழியிற் கட்டை ஊடாடிய [கால்.
Friendship of the foolish.

8115. மூடர் முன்பு மூர்க்கம் பேசாதே.
A good advice.

8116. மூடர்கள் சேர்க்கையில் தப்பாமல் கெடுதி வரும்.
Frendship of fools dangerous.

8117. மூடர் கூட்டு உறவு முழுதும் அபாயம்.
Compare preceding.

8118. மூடனாய் இருக்கிற பிள்ளையினாலே எப்போதும் நஷ்டமே வரும்.
A foolish child.

8119. மூடனுடைய பங்கு தரித்திரமும் இகழ்ச்சியும்.
A fool's inheritance.

8120. மூடன் சண்டை மூட்டிப் பிரிக்கும், மோர்க்கடன் வீட்டைத்தேடும்.
A fool's doings.

8121. மூடின உடைமை மூன்றுலோகம் பெறும், மூடாத உடைமை முக்காற் காசும் பெறாது.
Value of secrecy.

8122. மூடு முக்காட்டுக்குள்ளே போகிறவள்தான் ஓடி ஓடி மாப்பிள்ளை கொள்ளுகிறது.
Untrustworthy women make a lot of fuss.

8123. மூட்டைக்காரனுக்கு முழங்காலிலே புத்தி.
He is apt to stumble and fall.

8124. மூத்தது மோழை, இளையது காளை.
The junior abler than the senior.

8125. மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்.
Value of a senior's words.

8126. மூப்பிலும் தருமம் செய்தல் முயற்சி.
Even in age virtue is difficult.

8127. மூப்புக்குச் சோறும் முறத்துக்குச் சாணியும்.
Old age to be pitied.

8128. மூப்பு என் பிடிப்பது, மூதேவி வாசத்துக்கு அடையாளம்.
Premature decay.

8129. மூர்க்கனை மூர்க்கர் முகப்பர்.
Like seeks like.

8130. மூர்க்கரோடிணங்கினால் எற்கரெனும் அவகீர்த்தி.
Evil of associating with the base.

8131. மூர்க்கனும் முதலையும் சரி.
An angry fellow is like a crocodile.

8132. மூர்க்கன் முகத்தில் மூதேவி குடி இருப்பாள்.
Anger and misfortune go together.

8133. மூர்க்கனைச் சேர்ந்தவன் வாழான், மூடனைச் சேர்ந்தவன் படியான்.
Evil associations condemned.

8134. மூர்க்கம் உள்ள ராஜாவும் மூட மந்திரியும் அழிவார்கள்.
Compare above.

3135. மூர்க்கரோடு இணங்கேல்.
A good advice.

3136. மூர்க்கரும் முதலையும் கொண்டது விடார்.
Compare above.

3137. மூர்த்தி சிறிது, கீர்த்தி பெரிது.
Reputation greater than faith.

3138. மூலிகை அறுத்தால் மூன்று உலகமும் ஆளலாம்.
Value of medicinal herbs.

3139. மூன்றடியும் அடித்துப் போர்மேலேயும் போட்டாச்சுது.
Said of some complete act.

3140. மூன்றுகாசு குதிரை ஆறுகாசு வைக்கல் தின்கிறதாம்.
Upkeep more expensive than cost.

3141. மூன்றும் கட்டு அவிழ்த்தால் தெரியும்.
Real value will be known when the secret is out.

3142. மூன்று முழமும் ஒரு சுற்று, முப்பது முழமும் ஒரு சுற்று.
Invidious comparisons.

3143. மூன்று வீட்டுக்கு முக்காலி, நாலு வீட்டுக்கு நாற்காலி.
Furniture according to house.

3144. மூன்று பெயர் வழிக்குத் துணை, இரண்டு பெயர் பிணையல் மாடு, ஒருவன் போனால் பரதேசி.
Solitude *versus* company.

[ஆகும்.
3145. மூன்று பொருளையும் தேடு, முதிர்வயதில் ஊன்றுகோல்
Security against old age.

3146. மூன்றே முக்கால் நாழிகையில் முத்து மழை பெய்தது, வாரி எடுக்குமுன்னே மண்மாரியாய்ப் போயிற்று.
Great expectations resulting in great disappointment.

## ·மெ·

3147. மெச்சிக்கொள்ள எச்சிலை எடுக்கிறது.
Doing mean things to obtain favour.

3148. மெய்ஞ்ஞானம் உடையாருக்கு அஞ்ஞானம் இல்லை.
True wisdom removes ignorance.

8149. மெத்தப் படித்தவருக்குச் சோறு வெல்லம்.
Effect of great learning.

---

8150. மெத்தப் படித்தவன் பைத்தியக்காரன்.
" Much learning maketh thee mad."

---

8151. மெத்தப் பரிவாம், உள்ளே எரிவாம்.
Insincere love.

---

8152. மெத்தபரிச்சலாம், உள்ளேஎரிச்சலாம்.
Similar to preceding.

---

8153. மெத்தைப் படுத்தல் நித்திரைக்கு அழகு.
Soft beds favourable to sleep.

---

8154. மெத்தை நேர்த்தி, தலையணை பீத்தல்.
A bad counterpart.

---

8155. மெய் என்றிருந்தேன், விழித்தேன் கனவாச்சு.
Dreams *versus* reality.

---

8156. மெய்க்கும் பொய்க்கும் விரற்கடை தூரம்.
A narrow separation between truth and falsehood.

---

8157. மெய்கொண்டு விழிக்கிறது பொய்கொண்டு பொரிகிறது.
Truth not so boisterous as falsehood.

---

8158. மெய் சொல்லி வாழாதவன் பொய் சொல்லி வாழ்வானா ?
Truth the only means for success.

---

8159. மெய்த் தொழில் என்றும் மெய் பயக்கும்.
Honesty the best policy.

---

8160. மெய் நின்று விழிக்கிறது, பொய் நின்று பொரிகிறது.
Another form of above.

---

8161. மெய்ப்பொருள் கல்வியே கைப்பொருள்.
Learning the only wealth.

---

8162. மெய் மூன்றும் பிறை, பொய் பூரண சந்திரன்.
Compare above.

---

8163. மெய்மை சாற்ற வையம் ஏற்றும்.
Truth brings honor.

---

8164. மெய்யது நன்றி இடும்.
Truth is beneficial.

8165. மெய்யான சத்தியன் வேதவாசகன்.
The truthful man loves his Vedas.

[ஒம்மே.
8166. மெய்யுடை ஒருவன் சொல்மாட்டாமையால் பொய்போ
Truth suffers for want of clearness.

8167. மெலிந்தவளுக்கு மெத்தப் பெலன், மேனி மினுக்கிட்டவளுக்கு மெத்தக் கசம்.
Two bodies contrasted.

8168. மெனுக்கிலே அலக்கழிவு.
Gaudiness ruinous.

8169. மெல்லப் பாயும் தண்ணீர் கல்லையும் குழியப் பாயும்.
Power of gentle speech.

8170. மெல்லியாளோடோள் சேர்.
Seek a tender wife.

8171. மெல்லிசு கோணு எல்லிட்டுக்கூத்தியார்.
Refers to Elliot's immorality.

8172. மெழுகின வீட்டிலே நாய் புகுந்ததுபோல.
An unwelcome intruder.

8173. மெழுகாலேயாகிலும் வெள்ளைத்தலை வேணும்.
A fair complexion desirable.

[கிறது.
8174. மெழுகுப் பிள்ளையார்போல தொளுவு தொளுவு என்றிருக்
Fat and unwieldy.

8175. மெள்ள இருந்து தள்ளவேணும் பகையை.
Foes to be got rid of gently.

## மே.

8176. மேடுஞ் சரி பள்ளமும் சரியா ?
Condemns indiscriminate action.

8177. மேட்டிமைக்காரருக்கு எதிர்த்து நிற்கவேண்டும், மெத்தனைக்காரருக்குக் கிருபை அளிக்கவேண்டும்.
Pride *versus* humility.

8178. மேட்டுக்காகப் பயமாம், வீதி வழியில் இலாம்.
Slavish fear of everything.

8179. மேய்கிற கழுதையைக் கூவுகிற கழுதை கெடுத்ததாம்.
The idle tempting the active.

8180. மேய்கிற மாட்டை நக்குகிற மாடு கெடுத்தாற்போல.
Similar to preceding.

8181. மேய்க்கும் மேய்ப்பனை வியக்கும் வாயன்.
Flattering one's patron.

8182. மேய்த்தால் மைத்துனியை மேய்ப்பேன், இல்லாவிட்டால் பரதேசம் போவேன்.
Selfish ways condemned.

8183. மேய்த்தாற் கழுதை மேய்ப்பேன் இல்லாவிட்டால் பரதேசம் போவேன்.
Compare preceding.

8184. மேயப்போகிற மாடு கொம்பிலே புல்லைக் கட்டிக்கொண்டு போகிறதா?
Redundant action condemned.

8185. மேய்கிற கோழியை மூக்கை ஒடித்தாற்போல.
Taking the wind out of one's sails.

8186. மேய்த்தநாளைக்குப் பால் பீந்துக்குடித்ததுலாபம்.
A fair return to be expected.

8187. மேய்ப்பான் கண்ணிலும் உடையவன் பிடரி நலம்.
Possession better than occupation.

8188. மேய்ப்பு பாதி, தேய்ப்பு பாதி.
Horses need good grooming.

8189. மேருவைச்சார்ந்த காகமும் பொன்னிறம்.
People improve by good company.

8190. மேருவை அடைந்த காகமும் அமிர்தம் உண்ணும்.
Good company can even alter nature.

8191. மேலான மினுக்கியைக் கொண்டவன் கெட்டான், மேட்டிலே பயிரிட்டவன் கெட்டான்.
A showy wife condemned.

8192. மேலைக்கு வாழ்க்கைப் படுகிறேன், கழுத்தே சுகமே இரு.
Outward prosperity.

---

8193. மேலைக்கு உழுவார் கூழுக்கு அழுவார்.
Superficial action unprofitable.

---

8194. மேலோர் அறிவு கீழோர்க்கு வருமா ?
The noble *versus* the base.

---

8195. மேழிச் செல்வம் கோழை படாது.
Agriculture extolled.

---

8196. மேனி ஒறுப்பே ஞானி நினைப்பு.
Self-renunciation recommended

---

8197. மேனியெல்லாம் சுட்டாலும் விபசாரம் செய்கிறவன்விடான்.
A prostitute cannot become virtuous.

---

8198. மேன்மக்கள் சொற்கேள்.
Listen to the noble.

---

8199. மேன்மையின் மேன்மையன் மேலாம் பதவியன்.
The highest bliss defined.

---

8200. மேற்காணும் இனிமையால் காற்குநோய்காட்டிக்கலுழ்ந்தான்
Employing deceptive means.

---

## மை.

8201. மை கரையாமல் முதுகு ஆட்டு.
A dancing advice.

---

8202. மைவிழியாடனைக் கைவிட்டொழுகு.
Against prostitution.

---

8203. மைவிழியார் மனையகல்.
Similar to preceding.

---

## மொ.

8204. மொட்டைத் தலையிலே சன்னதம் வந்தால் உள்ள மயிரைக் கொண்டுதான் சிலுப்பவேண்டும்.
Acting according to circumstances.

---

8205. மொட்டந் தலையும் குமிழித்தலையுமாய்ப் பிணைக்கிறது.
Mixing things dissimilar.

8206. மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிஇட்டதுபோல.
Attempting impossibilities.

8207. மொட்டைத் தலையில் பட்டம் கட்டி ஆள வந்தாரோ?
Indulging in vain hopes.

8208. மொட்டைத் தலையிற் பேன் சேருமா?
An unlikely expectation.

8209. மொட்டைத் தலையிற் பேய் வருமா?
Compare preceding.

8210. மொட்டைத் தலையிற் பேன்போல.
Something clearly visible.

8211. மொட்டைத் தலையன் போருக்கு அஞ்சான்.
Cannot be seized.

8212. மொட்டைத் தலைக்கு ஒரு கொட்டுக் கூடை, மோழைத் தலைக்கு ஒரு தாற்றுக் கூடை.
Well matched.

8213. மொட்டைத் தலையன் முழு மோசக்காரன்.
Bald-headed persons distrusted.

8214. மொட்டைச்சிக்குத் தகுந்த மூக்கறையன்.
Husband and wife both defective.

8215. மொண்டு ஊறுகிற வீட்டிற்குக்கொண்டு ஆண்டா நிறையும்?
Poor methods will not suit the wealthy.

8216. மொத்தைச் சோற்றுக்கு மேளம் அடிக்கிறான்.
Looking to his own benefit.

8217. மொழி தப்பினவன் வழி தப்பினவன்.
Promise-breakers condemned.

8218. மொழி தவறுதான் வழி தவறுதான்.
Similar to preceding.

8219. மொழிவது மறக்கின், அழிவது கருமம்.
Compare both the preceding.

8220. மொழிவது அற மொழி.
Urges definite speaking.

## மோ.

8221. மோகத்தை முனி.
Condemns lust.

8222. மோகம் முப்பது நாள், ஆசை அறுபது நாள்.
Lust cannot last long.

8223. மோகனக் கல் ஆனாலும் பளு ஏறினால் உடையாதா?
Against giving too much work.

8224. மோசநாசம் கம்பளிவேஷம்.
Hypocritical conduct.

8225. மோசம் பாய் போட்டுத் தூங்குகிறது.
Danger in sleep.

8226. மோந்தாற்போல முகத்தைக் கடிக்கிறது.
Sudden change of treatment.

8227. மோந்துகொள்வதுபோல் கடிக்கிறது.
Similar to preceding.

8228. மோருக்கு போகிறவருக்கு முட்டி பிறகாலேயோ?
Needless secrecy.

8229. மோருக்குப் போய் மொந்தையை ஒளிப்பான் ஏன்?
Compare preceding.

8230. மோளைத்தெளித்தாலும் கலியாணந்தான், முத்தைத்தெளித்தாலும் கலியாணந்தான்.
Validity of a ceremony unaffected by its surroundings.

8231. மோரோ என்கிறவன் கழுத்தில் லிங்கம் கட்டினதுபோல.
An unsuitable accompaniment.

8232. மோர் கடுதென்று மண்டிக்குடிக்கிறதுபோல்.
Carrying out a foolish idea.

8233. மௌனம் என்பது ஞானவரம்பு.
Silence a sign of wisdom.

## மௌ.

8234. மௌனம் மலையைச் சாதிக்கும்.
Power of silence.

---

8235. மௌனம் கலக நாசம்.
Silence puts an end to strife.

---

8236. மௌனி குடியைக் கெடுப்பாள்.
A reserved woman undesirable.

---

## ய.

8237. யதார்த்தவாதி வெகுசன விரோதி.
Honesty makes many enemies.

---

## யா.

8238. யதா தேவதா ததா தாஸ்ய.
As is the god, so is the worshipper.

---

8239. யாதி முற்றினால் வியாதி,
Musing and melancholy go together.

---

8240. யானை கட்டக் கயிறு தானே எடுத்துக் கொடுக்கும்.
Seeking self-destruction.

---

8241. யானை கறுத்தால் ஆயிரம் பொன் பெறும், பூனை கறுத்தால் என்ன பெறும்?
Value of a black elephant.

---

8242. யானைக்கு அறுபது அடி, அருங் குள்ளனுக்கு எழுபதுஅடி.
Fear a dwarf more than an elephant.

---

8243. யானை தன் தலைமேலே தானே மண்ணை போட்டுக்கொள்வது [போல.
Compare above.

---

8244. யானை தின்ற விளாங்கனிபோல.
Losing something unconsciously.

---

8245. யானை தொட்டாலும் மரணம் வரும்.
A slight injury by the great is fatal.

---

8246. "யானை மிதிக்கப் பிழைப்பார்களா?
One cannot escape the attacks of the great.

---

8247. யானைமுன்னே முயல் முக்கினதுபோல.
A small person challenging a great man.

---

8248. யானையை ஆயிரம் பொன்னுக்கு வாங்கி இருப்பு அங்குசத்திற்கு ஏமாந்து நிற்பான் ஏன்?
Penny-wise and pound-foolish.

---

8249. யானையைத் தேடக் குடத்துக்குட் கை வைத்ததுபோல.
A foolish pursuit.

---

8250. யானை வாய்க் கரும்பும் பாம்பின் வாய்த் தேரையும் யமன் கைக்கொண்ட உயிரும் திரும்பி வாரா.
Certain irrevokable things.

---

## யு.

8251. யுகமுடிய மழை பெய்தாலும் ஓட்டாங்கிளிஞ்சில் கரையுமா?
Certain indestructible things.

---

## யோ.

8252. யோகக்காரன் பல்லக்கு ஏறுவான்.
A fortunate person.

---

## ர.

8253. ரண்டாட்டில் ஊட்டின குட்டியாய்த் தீர்ந்தது.
Suffering between two benefactors.

---

8254. ரட்சையுள்ளவிடத்தில் சிட்சையிருக்கும்.
Where there is protection, there will be discipline,

---

## ரா.

8255. ராட்சதனுக்கும் ஒரு புரோட்சக னுண்டு.
Even the great have their rivals.

---

## ரி.

8256. ரிஷிப்பிண்டம் ராத்தங்காது.
A superstitious saying.

---

## ரெ.

8257. ரெட்டிப்பாளயத்திலிருந்து இரண்டெடிக்கழுதைகள் வந்தது அறுகம்புல்லைவிட்டுக் கோரைப்புல்லைத் தின்றது.
The behaviour of rustics ridiculed.

---

## ல.

8258. லங்கணம் பரம ஔஷதம்.
A bstinence extolled.

---

## லோ.

8259. லோபிக்கு இரு செலவு.
A miser incurs double expenditure.

## வ.

8260. வகை மடிப்பிலே மாட்டிக்கொண்டது.
In great difficulty.

8261. வக்கணைக்காரன்புளுகு வாசற்படிமட்டும்.
Paramours unreliable.

8262. வங்கம் குத்தத் தங்கம் தேயுமா?
Lead *versus* gold.

8263. வங்கம் இறுகினால் மகாராஜனாகலாம்.
The value of lead.

8264. வங்கணை கொங்கணையாய் மாட்டிக்கொள்ளுகிறது.
In an awkward difficulty.

8265. வங்கம்தின்றால் தங்கம், வங்கம்கெட்டால் பங்கம்.
Compare preceding.

8266. வங்கிஷம் வார்த்தைக்கு அஞ்சும், புழுக்கை உதைக்கு அஞ் [சும்.
High birth *versus* low.

8267. வங்கை வைத்தால் தன்குடிக்கு அனர்த்தம்.
A cause of family ruin.

8268. வசனம் பண்ண உபாயம் காரணம்.
Shrewdness extolled.

8269. வச்சகாபியிலே புழுத்த புழு.
Said of a very wicked fellow.

8270. வச்சகாபியை உப்புப் பார்க்கலாமா!
Mere contact with the vicious to be shunned.

8271. வச்சத்துக்குமேலே வழி இல்லை, பிச்சைக்குப்போகச் சுரைக் குடுக்கை இல்லை.
A double difficulty.

8272. வச்சிரம் அளந்த கையால் வைக்கல்துரும்பு எடுக்கலாயிற்று.
A change from wealth to poverty.

8273. வஞ்சகம் வாழ்வைக் கெடுக்கும்.
Treachery ruins one.

8274. வஞ்சனை நெஞ்சை அடைக்கும்.
Compare preceding.

8275. வஞ்சகம் நெஞ்சைப் பிளக்கும்.
Compare two preceding.

8276. வஞ்சகர்க்கு என்ன நேசம் காட்டினாலும் நெஞ்சில் நேசம் கொள்ளார்.
You cannot gain the love of the treacherous.

8277. வஞ்சர் உறவை வழுவி விலகு.
Avoid the treacherous.

8278. வஞ்சர் பால் ஊட்டினாலும் நஞ்சாய்விடும்.
The evil influence of the treacherous.

8289. வடகாற்று அடிக்க வந்தது மழையே.
The north-east monsoon.

8280. வடகோடு உயர்ந்தென்ன, தென்கோடு சாய்ந்தென்ன வளர் பிறைக்கே ?
Progress is progress, in spite of small defects.

8281. வடக்கே போன வாலியும் வரக்காணோம்.
The north an unpopular direction.

8282. வடக்கே கறுத்தால் மழை வரும்.
Compare above.

8283. வடக்கத்தியானையும் வயிற்றுவலியையும் நம்பல் ஆகாது.
Certain unreliable things.

8284. வடக்குப் பார்த்த மச்சுவீட்டைப் பார்க்கிலும் தெற்குப் பார்த்த தெருத்திண்ணை நல்லது.
The south is the favourite direction.

8285. வடித்தகஞ்சி வார்க்காத சிற்றப்பன் வழித்துக்கொண்டாலும் பணயிட.
A hypocritical uncle.

8286. வடலியை வெட்டி ஆள், எருமையைக் கட்டி ஆள்.
How people are to be treated.

8287. வடலி வளர்ந்து கள்ளைக் குடிக்கிறதா ?
One labours and another enjoys.

8288. வடவாக்கினியைக்கூட கடைவாயிலடைக்கிற பிள்ளைக்கு.
An intrepid youth.

8289. வடிவில் எமன், மத்க்கரட்டோணன்.
Said of a vicious looking person.

8290. வடிவிலே மன்மதன்போல.
With Cupid's looks.

8291. வடுகச்சிக்காரியம் கடுகுச்சி, முடுகுச்சி.
A Tamil ridiculing a Telugu woman.

8292. வடுகச்சி அம்மா வால் அம்மா, வாலைப்பிடித்துக்கொண்டு தொங்கம்மா.
Compare preceding.

8293. வடுகத் துரட்டு மகா வில்லங்கம்.
Said of a difficulty caused by a Telugu.

8294. வடுகே வில்லங்கமாய் வந்து வாய்த்தது.
Similar to preceding.

8295. வடுகனும் தமிழனும் கூட்டுப்பயிர் இட்ட கதை.
An unwelcome co-operation.

8296. வடுகன் தமிழ் அறியான், வைக்கோலைக் கசு என்பான்.
A Telugu's ignorance of Tamil.

8297. வடுகு கொழுத்தால் வறை ஓட்டிற்கும் ஆகாது.
A Telugu's prosperity.

8298. வடுகு பொடுகோச்சு, வைக்கோற்போர் நெல் ஆச்சு.
Great changes.

8299. வடையைத்தின்னச்சொன்னார்களா துளையை எண்ணச்சொன்னார்களா ?
Condemns irrelevancy.

8300. வட்டஞ் சுற்றியும் வழிக்கு வரவேண்டும்.
Seek by all means the right way.

8301. வட்டி ஆசை முதலுக்குக் கேடு.
Excessive interest ruinous to capital.

8302. வட்டிக்கு வட்டி எதிர் வட்டியா ?
Claiming counter-interest.

8303. வட்டி ஓட்டம் விழ ஓட்டத்திலும் அதிகம்.
Rapid accumulation of interest.

8304. வட்டியும் முதலுங்கண்டால் செட்டியார் சிரிக்காரா?
The Chetty's avarice.

8305. வட்டுவத்திலே சொட்டுவிழுந்தால் பாக்குவெட்டிக்கு வேரு யா ? கண்டகத்துக்கு வேருயா ?
When the body suffers the member suffers.

8306. வட்டுவத்தின்மேல் சொட்டுப்போட்டால் வட்டுவத்திற்கு மாத்திரமா பழும் ?
Similar to preceding.

8307. வணங்கின வில் தீங்கை விளைக்கும்.
There is danger in pretended humility.

8308. வணங்கினமுள் தைக்காது.
Urges straightforwardness.

8309. வணங்கின வித்தைக்கும் வணங்காதவில் தைக்கமாட்டாது.
Humility extolled.

8310. வணங்கினபுல் பிழைக்கும்.
Humility extolled.

8311. வணிகர்க்கு அழகு வாணிபஞ் செய்தல்.
Let the cobbler stick to his last.

8312. வண்டப்பயலுக்கேற்ற சண்டிப்பெண்சாதி.
A bad husband, a bad wife.

8313. வண்டில்பாரம் பூமியிலே.
You need not bear the burden.

8314. வண்டியில் ஓடமேறும், ஓடம் வண்டியில் ஏறும்.
Exchange of office.

8315. வண்டு தூரத்திலே பூவின் வாசனை அறியும்.
Great foresight.

8316. வண்டு ஏருத மரம் இல்லை.
Small people go everywhere.

8317. வண்டு மெள்ள மலரில் தேன் வாங்குகிறதுபோல்.
Gentle persuasion.

8318. வண்டோடு கொண்ட வஸ்துவுக்கு மலை அவ்வளவு சத்தி.
Great effort for a trifle.

8319. வண்ணத்துக்குக் கிண்ணம் பாடுகிறான்.
Flattery for fool.

8320. வண்ணான் கெடுத்ததுபாதி, வாதம் கெடுத்தது பாதி.
Suffering between too fires.

8321. வண்ணார சித்து வழியிலே, தட்டார சித்து தணையிலே.
Dhobies and goldsmiths exposed.

8322. வண்ணானுக்கு நோய்வந்தால் கல்லோடே.
There is no help for a sick workman.

8323. வண்ணான் துறைக் கல்லிலே வந்த பேரெல்லாம் துவைக்க [லாம்.
A dhoby's stone.

8324. வண்ணான் பெண்ணுக்கு அம்பட்டன் துரும்பு கொடுத்தாற் [போல.
Cheating by taking false names.

8325. வண்ணான் துறையில் முயல்போல.
Out of one's element.

8326. வண்ணானுக்குப் போனான்? வண்ணாத்திக்கு வந்தான்.
A great cheat.

8327. வண்ணானுக்கும் நிர்வாணிக்கும் உறவென்ன ?
None of course.

8328. வண்ணானுக்கு வண்ணாத்திமேல் ஆசை, வண்ணாத்திக்கு க
ழுதைமேல் ஆசை.
The dhoby's and his wife's longings.

8329. வண்ணான் கையில் சேலைபோட்டுக் கொக்கின்பின்னே போ [கிறதா?
Dhobies very unpunctual.

8330. வண்ணான்பிள்ளைசெத்தால் அம்பட்டனுக்குமயிர்போயிற்று.
Compare above.

8331. வண்ணானுக்கு உழைத்த கழுதையும் வாணியனுக்கு உழைத்
த காளையும் சரி.
Not taken good care of.

8332. வதுவை செய்து வாழ்.
Recommends marriage.

8333. வந்த அளவிலே சிறுக்கி பந்தடித்தாள், வரவரச் சிறுக்கி சோர்ந்து போனாள்.
Becoming worse and worse.

8334. வந்ததெல்லாம் கொள்ளும் மகாராஜன் கப்பலிலே.
Said of a very covetous person.

8335. வந்தது கப்பல், மலர்ந்தது தொப்பை.
Possession and satisfaction.

8336. வந்த காலோடு பந்தற் காலைக் கட்டிக்கொண்டு இருக்கிறாய்.
Why don't you sit down?

8337. வந்ததை வரப்பற்ற வேண்டும்.
Take what comes.

8338. வந்த சண்டையை விடுவதும்இல்லை, வலியச் சண்டைக்குப் போவதும் இல்லை.
Prone to extremes.

8339. வந்தவர் எல்லாம் சந்தையில் குடியா?
All cannot live together.

8340. வந்த வினை எல்லாம் வரட்டும்.
Come what may.

8341. வந்த வினை போகாது, வரா வினை வராது.
Every evil by destiny.

8342. வந்தாரை வாழ வைக்கும், மண்ணில் பிறந்தாரைத் தூங்க வைக்கும்.
Partial treatment.

8343. வந்தாலுஞ் சரி, போனாலும் சரி.
Perfect indifference.

8344. வந்தாற் சும்மா வரும், வராமற்போனால் ஒன்றும் வராது.
Good and evil never come single.

8345. வம்பான வார்த்தை மனதுக்கு அருவருப்பு.
Mischievous words.

8346. வம்பி மகன் மழலைவார்த்தை கேட்டு ஆண்டவரைத் தம்பி என்று அழைக்கத் தலைப்பட்டான்.
Growing impertinent.

8347. வம்பும் தும்பும் விளைக்கிறது.
Causing evil.

8348. வம்புத் துரைத்தனத்தாரைக் கும்பிடத் தகுமோ?
Unjust rulers despised.

8349. வயதுக்கோ நரைத்தது மயிருக்கோ நரைத்தது?
Turning grey.

8350. வயது சென்றால் மதியும் தளர்ந்து போகுமா?
Reason does not decline with age.

8351. வயதுக்குத் தகுந்த புத்தி, வல்லமைக்குத் தகுந்த சலுகை.
Sense according to age.

8352. வயல் முயற்சியில் தானியம் உண்டாம்.
Agriculture commended.

8353. வயித்தியன் தலைமாட்டில் இருந்து அழுததுபோல.
Weeping instead of rendering help.

8354. வயித்தியன் கையைப் பார்த்து வாக்கிட்டதுபோல.
Ineffectual promises.

8355. வயித்தியன் கைவிட்டதுபோல.
Forsaken by the chief person.

8356. வயித்தியனுக்கு மோக்ஷம் இல்லை, உவாத்திக்கு மோக்ஷ வழி உண்டு.
Doctors kill many.

8357. வயிராக்கியத்துக்கு அம்பட்டக் கத்தியை விழுங்குகிறதா?
Heroism should not be joined to folly.

8358. வயிறாரப் போசனமும் அரையாரப் புடைவையும் இல்லை.
Devoid of proper food and raiment.

8359. வயிறு பசித்தால் வைத்த இடத்தைப் பார்.
Meet your own wants.

8360. வயிறு நிரம்பினாலும் கண் நிரம்பாது.
The eye is harder to fill than the stomach.

8361. வயிறு நிரம்பினால் பானை மூடாள்.
A woman's satisfaction.

8362. வயிற்றிலே பாலை வார்த்தாற் போல.
Doing a kind deed.

8363. வயிற்றுக்குத் தண்ணியும் இடுப்புக்குத் துணியும் இல்லை.
Compare above.

8364. வயிற்றுச் சோற்றுக்காக வயித்தீசுவரன் கோவில்மட்டும் நடப்பான்.
Selfish exertion.

8365. வயிற்றுக் குடலைக் காட்டினாலும் வாழை நார் என்கிறான்.
So stupid.

8366. வயிற்றுப் பிள்ளையை நம்பி மாடு மேய்க்கிற பிள்ளையைப் பறிகொடுத்தாற்போல.
Compare a previous proverb.

8367. வயிற்றுப் பாம்புக்குக் கடுகும், வளைப் பாம்புக்கு வெந்நீரும் [இடு.
Different methods of dealing with people.

8368. வயிற்றைப் பிடித்து நிழலிலிருந்தால் மலடிக்கு மசக்கை.
How a barren woman may conceive.

8369. வயிற்றைக் கீறிக் காண்பித்தாலும் கண் கட்டி வித்தை என் [பார்.
The world's incredulity.

8370. வரச்சே தூண்டிற் கயிற்றின் வழியாய் வந்தது, போகச்சே இருப்புச் சங்கிலியை அறுத்துக்கொண்டு போயிற்று.
Weak at first but strong afterwards.

8371. வரப்பு உயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும், நெல் உயரக் குடி உயரும், குடி உயர முடி உயரும்.
A series of causes and effects.

8372. வரப்பு உயர்ந்தால் நெல் உயரும், நெல் உயர்ந்தால் சொல் உயரும்.
Compare preceding.

8373. வரப்போ தலை அணை, வாய்க்காலோ பஞ்சு மெத்தை.
Rough comforts.

8374. வரவர மாமியார் கழுதைபோல் ஆனாள்.
Becoming worse day by day.

8375. வர வரக் கண்டறி மனமே.
Gain experience.

8376. வரவிலேயா செலவிலேயா ?
Income *versus* expenditure.

8377. வரவுக்குத் தகுந்த செலவு, மாப்பிள்ளைக்குத் தகுந்த மஞ்சள்.
Spend according to your income.

8378. வரவுக்குத் தக்கபடி செலவை வரை அறு.
Compare above.

8379. வரவுக்குத் தகுந்த செலவு.
Similar to preceding.

8380. வரவு கொஞ்சம், வலிப்பு மெத்த.
Expenditure greater than income.

8381. வரிசையும் இல்லை, அரிசியும் இல்லை.
A poor wedding.

8382. வரி போடேல், கேட்டைத் தேடேல்.
Taxes obnoxious.

8383. வரி விழுந்த புலியைப் பார்த்து நரியும் கொள்ளிக்கட்டை எடுத்துச் சுட்டுக் கொண்டதாம்.
Imitating a superior.

8384. வருகிறபோது எல்லாம் வலியவரும், வந்தபின் போகிறபோது எல்லாம் போம்.
Blessings and afflictions come in troops.

8385. வரும் காரியம் சொல்லும் கவுளி வலியக் கழுநீர்ப்பானையில் விழுந்தாற்போல.
A wise man falling into error.

8386. வருணன் சிலரை வகுத்துப் பெய்யுமோ ?
Rain is not partial.

8387. வருந்தி வருந்திப் பார்த்தாலும் வருகிறபொழுதுதான் வரும்.
Nothing comes but by destiny.

8388. வருந்தினால் வாராதது இல்லை.
Compare preceding.

8389. வருந்தி அழைத்தாலும் வாராது வாராது.
Similar to two preceding.

8390. வருமுன் காப்பவன் சொன்ன புத்தியை வந்தபின் காப்பவன் தள்ளினதுபோலே.
A fool neglecting a wise man's counsel.

8391. வரும் விதிவந்தால் படும்விதி படவேண்டும்.
Resignation commended.

8392. வருவது சொன்னேன், படுவது படு.
A warning voice.

8393. வருவது வந்தது என்றால் படுவது படவேண்டும்.
Compare above.

8394. வருவான் குருடன் விழுவான் கிணற்றிலே.
The troubles of the senseless.

8395. வலிமைக்கு வழக்கு இல்லை.
Might is right.

8396. வலியவன் எடுத்து வலி.
A sarcastic remark.

8397. வலியச் சண்டைக்குப் போகாதே வந்த சண்டையை விடாதே.
A good counsel.

8398. வலியவந்தால் கிரந்திக்காரி.
Despising one for a gratuitous offer.

8399. வலியப் பெண் கொடுக்கிறோம் என்றால் குலம் என்ன கோத்திரம் என்ன என்பார்கள்.
Compare preceding.

8400. வலிய வந்த சீதேவியைக் காலால் உதைத்துத் தள்ளலாமா?
Looking a gift horse in the mouth.

8401. வலியவன் எடுத்தது வழி.
Compare above.

8402. வலிய உறவாடி வாசலிலே வந்தாலும், பொய் உறவாடிப் போய் வா என்று சொல்லுகிறான்.
One despising another's friendship.

8403. வலியவன் வெட்டினதே வாய்க்கால்.
Compare above.

8404. வலியவனுக் கிடங்கொடுத்தால் வயிற்றுவலிக் கிடங்கொடுத் [ததுபோல.
Don't fall into a superior's hands.

8405. வலியவனுக் கிட்ட வழக்கு உண்டா?
Compare above.

8406. வலையிற் சிக்கிக்கொண்ட மான்போல.
Caught in a snare.

8407. வல்லவனுக்கு எல்லாம் உண்டு.
Might lacks nothing.

8408. வல்லவன் போனது வழி.
Might leads the weak.

8409. வல்லடி வழக்கைச் சொல்லடி மாமி.
Challenging a fight.

8410. வல்லவன் ஆட்டிய பம்பரம் மணலிலும் ஆடும்.
An able man's feats.

8411. வல்லமை பேசேல்.
Condemns boasting.

8412. வல்லவனுக்குப் புல் ஆயுதம்.
Anything is a tool for an able man.

8413. வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு.
Every man has his rival.

8414. வல்லார் இளைத்தால் வந்து இளைப்பாறும் என்று சொல்ல
இரார்கள் சுத்த வீரர்கள்.
True heroism is generous.

8415. வல்லார் கொள்ளை வாழைப்பழம் ஆகும்.
Plundered wealth soon perishes.

8416. வல்லிலைக் கூறையும் மெல்லிலைக் காளையும் ஆகாது.
Dear clothes condemned.

8417. வவ்வால் வீட்டுக்கு வவ்வால் வந்தால் நீயும்தொங்கு நானு [தொங்கு
While in Rome act like Rome.

8418. வவ்விடக் கவ்வாச்சுது.
Purpose *versus* performance.

8419. வவ்வுதல் செவ்வியைக் கெடுக்கும்.
Don't devour your food.

8420. வழக்குத் தீர்க்கிறதில் மரியாதை ராமன்தான்.
An able judge.

8421. வழவழத்த உறவைப்பார்க்கிலும் வைரம் பற்றிய பகைநன்று.
Enmity better than false friendship.

8422. வழி ஆச்சுது, காரியம் வெளியாச்சுது.
A secret revealed.

8423. வழிகட்டிப் பறிக்கிறவன் திருடன், வாதபாஜனு ஏறுகிறதே [கருடன்.
A highway robber.

8424. வழிநடை வார்த்தை வாகனம்போல.
Conversation aids a walk.

8425. வழியிலே கண்ட குதிரைக்கு வைக்கோற் புரி கடிவாளம்.
Act according to circumstances.

8426. வழியிலே கிடக்கிற கோடாலியை எடுத்துக் காலின்மேல் போட்டுக்கொள்வானேன்?
Why incur an evil wilfully?

8427. வழியுமில்லை வாய்க்காலுமில்லை.
No way whatever.

8428. வழியே ஏறுக, வழியே மீளுக.
Condemns deviations.

8429. வழியே போய் வழியே வந்தால் அதிகாரி செங்கோல் என்ன செய்யும்?
No penal code for the upright.

8430. வழியே போகிற சனியனை வாரத்துக்கு வாங்கினாற்போல.
Seeking evil of one's own accord.

8431. வழி வழியாய்ப் போகும்போது விதி விதியாய் வருகிறது.
The freaks of fate.

8432. வழுக்கி விழாத குதிரை வளமான குதிரை.
A horse that never stumbles

8433. வளரும் காய் பிஞ்சிலே தெரியும்.
Child father to the man.

8434. வளர்த்த கடா மார்பிலே பாய்ந்ததுபோல.
Ungrateful to one's benefactor.

8435. வளர்த்த நாய் முகத்தைப் பார்க்கிறதுபோல.
Gratitude to one's benefactor.

8436. வளர்த்தி வாழ்க்கைப் படுத்துகிறது.
Rapid growth suggests marriage.

8437. வளர்ந்த உயரத்தை வாசற்படியிலே காட்டுகிறதா ?
Gifts not to be prostituted.

8438. வளர்ப்பு வக்கணை அறியாது.
Growth knows no courtesy.

8439. வளவன் ஆயினும் அளவு அறிந்து அளித்து உண்.
Wealth no excuse for extravagance.

8440. வளைந்த மூங்கில் அரசன் முடிமேல், வளையாத மூங்கில் கழைக்கூத்தன் காலின்கீழ்.
Humility *versus* conceit.

8441. வறட்டுத் தவளைபோல் வாள் வாள் என்கிறது.
Noisy demeanour.

8442. வற வோட்டை நக்கினுல் வாயெல்லாம் கரி.
A self-betraying action.

8443. வறியோர்க்கு அழகு வறுமையிற் செம்மை.
Virtue in poverty.

8444. வறுத்த பயறு முளைத்தாற்போல.
An impossible idea.

8445. வறுத்த பயறு முளைக்குமா ?
Similar to preceding.

8446. வறுமை உள்ளார்க்குப் பொறுமை உண்டு.
Compare above.

8447. வறுமை கண்டவர் வையத்தில் அநேகர்.
Poverty universal.

8448. வறுமை வந்தால் பத்தும் பறந்துபோம்.
Poverty takes away everything.

8449. வறுமைக்கு மூதேவியும் செல்வத்திற்குச் சீதேவியும்.
Goddesses of fortune and misfortune.

8450. வற்றலாய்க் காய்ந்த வடகம்போல வற்றி.
Well dried.

8451. வற்றிய ஓலை கலகலக்கும்.
Worthless persons very noisy.

8452. வனத்துப் புலியை மான்குட்டி அடித்தாற்போல.
An unlikely incident.

8453. வானத்துக்கு வான்மீகி, போருக்கு வியாசர்.
Two famous personages.

8454. வனவேடர் மான்கும்பலைக் கலைத்து விட்டதுபோல்.
Dispersing a good assembly.

8455. வனாந்தரத்து நலைநரிகள் இடையர்களின் தீர்க்க விரோதி [கள்.
Traditional foes.

8456. வன்சொல் வணக்கத்திலும் இன்சொல் வணங்காமை நலம்.
Courteous language commended.

8457. வஸ்திராபரணம் விசேஷமோ, அன்னம் விசேஷமோ?
Food *versus* clothing.

## வா.

8458. வாகனம் உள்ளவன் நடைக்கு அஞ்சான், பால் உண்டான் பந்திக்கு அஞ்சான்.
The advantage of a vehicle.

8459. வாகை இளம்பிஞ்சு கண்டவர்கள் இல்லை, வாகான தென்னம்பிள்ளை கண்டவர்கள் இல்லை.
Two rare plants.

8460. வாக்கினால் கெட்ட கழுதைப் போக்கிலே விடுங்கள்.
Failing in one's word.

8461. வாக்கும் மனதும் ஒத்து வார்த்தை சொல்லவேண்டும்.
Openness and sincerity urged.

8462. வாக்குக் கெட்டினது மனசுக் கெட்டவில்லை.
Mouth *versus* mind.

8463. வாங்கின கடன் கொடாத வல்லாளகண்டன்.
One who never pays his debts.

8464. வாங்கின கடனைக் கொடுக்கறியான் கொடுத்த கடனை வாங்கறியான்.
A stupid fellow as regards debts.

8465. வாங்குகிறதைப் போலிருக்கவேண்டும் கொடுக்கிறதும்.
Pay as readily as you borrow.

8466. வாசனை உற்ற புஷ்பம் வனத்திலிருந்தென்ன பலன் ?
Wasting of one's gifts.

[தோ ?
8467. வாசற்படி இட்டு விடிகிறதோ மகாதேவர் இட்டு விடிகிற
Art *versus* nature.

8468. வாணாளுக்கு ஏற்ற வயிற்று எரிச்சல்.
Sufficient unto the day is the evil thereof.

8469. வாணாள் உடையான் வலுப்பட்டுச் சாகான்.
Said of one destined to live long.

8470. வாணிபம் செய்யிற் காணியும் குறி.
Keep good accounts in merchandize.

[கட்டை.
8471. வாணியக்கட்டை வயிரக்கட்டை தேயத்தேயத் துடைப்பக்
A saying about oilmongers.

8472. வாணியன் ஆசை கோணியும் கொள்ளாது.
An oilmonger's cupidity.

8473. வாணியர்கள் ஆடும் செக்கை வளைய வரும் எருதுகள்போல.
In perpetual activity.

8474. வாதம் கெட்டால் வைத்தியம்.
Compare a similar one above.

8475. வாதம் முற்றி வைத்தியன் ஆனாற்போல.
Chemical role leading to medical knowledge.

8476. வாதத்து இயல்பு எடேல்.
A scientific advice.

8477. வாதம் கெடுத்தது பாதி, வண்ணான் கெடுத்தது பாதி.
Ruined by several causes.

8478. வாதம் ஊதி அறி, வேதம் ஓதி அறி.
Different ways of learning different things.

8479. வாதி கண்ணுக்கு மட்டம் எட்டு மாற்று.
How an interested party looks at things.

8480. வாதுக்கு ஆடின தேவடியாள் வயது சென்றால் கழுதை மேய்ப்பாள்.
Age goes against dancing girls.

8481. வாதுமுற் கூறேல்.
Against quarrelsomeness.

8482. வாதுபாடி வண்ணம்பாடு.
Disputing for food.

8483. வாத்தியாரே பிள்ளைக் கென்னவரும்? மாதம் எனக்கு இரண்டு பணம் வரும்.
Each after his own interests.

8484. வாத்தியானைக் குறைக் கேழ்வரகு விதைக்க வரச்சொன்னது போல.
Suggesting unsuitable employments.

8485. வாத்தியார் பெண்சாதி, மூத்தவள் பத்தினி.
An ironical remark.

8486. வாப்பா வாப்பா தொப்பியைப்பிடி கிணற்றிலே விழ.
Inviting a partner for a foolish act.

8487. வாப்பாவும் மாமரமும் ஓடையும் வந்தால் மாலுமி சாஸ்திரம் சொல்லுகிறேன்.
Philosophy *versus* practice.

8488. வாயாடிதான் வல்லவன்.
Power of speech.

8489. வாயாடி வார்த்தை மட்டில்லா ரவை.
Compare preceding.

8490. வாயாலே சொன்னது தாயானை விற்றுக்கொடுக்க வேண்டி[யது.
Keep your word at any cost.

8491. வாயாலே தின்று வாயாலே கக்கும் வௌவாலைப்போல்.
A dirty fellow.

8492. வாயாலே கேட்டால் வாழைப்பிஞ்சும் கொடான், தாய்ப்புருஷன் வந்தால் தாரோடே கொடுப்பான்.
The method that takes effect.

8493. வாயாலே கேட்டால் வாழைப்பிஞ்சுங் கொடான் தண்டித்துக் கேட்டால் தாரோடே கொடுப்பான்.
Similar to preceding.

8494. வாயாலே ஊதி வண்டாய்ப் பறக்கிறது.
Light and apt to fly away.

8495. வாயாரே வாயாரே எங்கேபோனாய், கையாரிடத்திலே கடன் வாங்கப்போனேன்.
Going about begging.

8496. வாயால் பந்தல் இடுகிறது.
Building castles in the air.

8497. வாயில்லாதவன் கழுவிலே இருப்பான்.
Disadvantage of a silent tongue.

8498. வாயிலே போகிறதைக் கக்கிக் கொடுக்கிறது.
A self-denying gift.

8499. வாயிலே இருக்கிறது வார்த்தை.
About to make a promise.

8500. வாயிலே வந்ததை வருத்துக் கொரிக்கிறது.
An indifferent gift.

8501. வாயிலே உறவு மனதிலே பகை.
Friendship merely in words.

8502. வாயிலே உண்டு வழி.
The way is in the tongue.

8503. வாயினால் இல்லை என்கிறதைக் கையினால் இல்லை என்கிறது நலம்.
Better a sign than a verbal refusal.

8504. வாயுள்ளவன் பிழைப்பான்.
Power of speech a great help.

8505. வாயை மூடித் தலையை வெட்டுகிறது.
Giving a victim no chance of defence.

8506. வாயைப் பார்த்து ஆளை எய்த்தான்.
Taking advantage of a stupid person.

8507. வாய் இருந்தால் வங்காளம் போகலாம்.
Compare above.

8508. வாய் இல்லாவிட்டால் நாய் கொண்டு போய்விடும்.
The reverse of preceding.

8509. வாய் இல்லாவிட்டால் நாய்கூடச் சட்டை செய்யாது.
Compare two preceding.

8510. வாய் உண்டானால் பிள்ளை பிழைக்கும்.
A crying child gets its food.

8511. வாய் உபசாரத்திலே வழி விடுகிறது.
Effect of polite speech.

8512. வாய் உள்ளவனுக்குக் காலம்.
Compare above.

8513. வாய் உள்ள பெட்டிக்குத் தூர்இல்லை.
A box with a lid is safe.

8514. வாய் காய்ந்த புலி ஆள்மேல் விழுந்ததுபோல.
Hunger makes one furious.

8515. வாய் கைக்கு உபசார வார்த்தை சொல்லுவானேன்?
Not necessary.

8516. வாய்க் கடங்காப்பிடி பிடிக்காதே.
Let your grasp be well within your power.

8517. வாய்க்குக் கை உபசாரமா?
Two close friends.

8518. வாய்க்குப் பிள்ளையும் மற்றத்திற்கு மாற்றானும்.
A selfish desire.

8519. வாய்க்கொழுப்புச் சீழால் வடிந்தது.
Said of too much boasting.

8520. வாய்க்கொழுப்பு சீலையால் வடிகிறது.
Similar to preceding.

8521. வாய்க்கு உண்டா வாதம்?
There is no stopping a talkative fellow.

8522. வாய் சர்க்கரை, கை கொக்கரை.
Words sweet, deeds bitter.

8523. வாய் சொல்லும் கை வேலை.
Word and work.

8524. வாய்சொல்லும் பிடரி கும்பிடும்.
Compare preceding.

8525. வாய்தான் இருக்கின்றது வாய்க்கு அரிசிக்கு வழி இல்லை.
Words enough but no food.

8526. வாய் திறக்கப் பொய் திறக்கும்.
Said of a notorious liar.

8527. வாய்த் தவிடும் போய் அடுப்பு நெருப்பும் போனதுபோல.
A double loss.

8528. வாய் நல்லதானால் ஊர் நல்லது.
Popularity according to speech.

8529. வாய்ப் பந்தல் போட யாரால் கூடாது?
Any one can build castles in the air.

8530. வாய் பார்த்த வீடு நாய் காத்துப் போயிற்று.
A house going to the dogs.

8531. வாய் பார்த்தவள் வாழ்வு இழந்தாள், அம்பலம் பார்த்தவன் பெண்டு இழந்தான்?
Husband and wife ruining themselves.

8532. வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ?
The mouth watering.

8533. வாய் மதத்தால் வழக்கு இழந்தான்.
Losing one's suit by one's talkativeness.

8534. வாய் மதத்தால் வாழ்வை இழந்தாள்.
Similar to preceding.

8535. வாய் வாழைப்பழம், கை கருணைக்கிழங்கு.
Compare above.

8536. வாயைத் திறந்தால் நாடெங்கும் அசையும்.
A man of great influence.

8537. வார்த்தை இருந்துபோம், வழி தூர்ந்துபோம்.
Words last longer than a way.

8538. வார்த்தை காற்று.
Words like the wind.

8539. வார்த்தைக்குத் தரித்திரம் இல்லை.
Words are cheap.

8540. வாய்ப் பேச்சு பேசுகிறவள் வளம் இழந்து போவாள்.
A talkative woman.

8541. வால ஜோசியனும் விருத்த வைத்தியனும் நன்று.
Youthful astrologer and aged doctor.

8542. வாலிபத்திலே முதிர்ந்த புத்தி குறுகின வயதுக்கு அடையாளம்.
Premature ability premature death.

8543. வாலிலே கலத்தைக் கட்டினால் மாடு வேலைக்கு குறுணி கறக்கும்.
A bovine proverb.

8544. வாலில்லாத குரங்குபோல.
A person with a great defect.

8545. வாலிபத்தில் இல்லாத மங்கையை வயது சென்ற பின் என்ன செய்கிறது?
Out of season, out of demand.

8546. வாலிபத்தில் தேடாத தேவடியாள் வயதுசென்றபின் தேடப் போகிறாளா?
Compare preceding.

8547. வால் நீண்ட கரிக்குருவி வலம் இருந்து இடம் போனால், கால் நடையாய்ப் போனவர்கள் கனக தண்டிகை ஏறுவார்கள்.
A good omen.

8548. வால் பிராணன் தலைக்கு வந்தது.
Transference of vitality.

8549. வால் போனாலும் போகிறது எனக்குத் தோல் வேண்டும்.
Having the eyes on No. 1.

8550. வாழாத பெண்ணுக்கு மை ஏண்டி, பொட்டு ஏண்டி, மஞ்சள் குளி ஏண்டி ?
Ornaments not necessary for celibacy.

8551. வாழாத பெண்ணைத் தாழ்வாய் உரைக்காதே.
Do not despise an unmarried woman.

8552. வாழுகிற பெண்ணைத் தாயார் கெடுத்ததுபோல.
Mother causing her daughter's ruin.

8553. வாழுகிற வீட்டில் மரநாய் கட்டினதுபோல.
A source of misfortune.

8554. வாழும் பிள்ளை விளையாட்டிலே தெரியும்.
Indications of future prosperity.

8555. வாழை அடி வாழை.
The law of heredity.

8556. வாழைக்குத் தான் ஈந்த காய் கூற்றம்.
A child conspiring against its parent.

8557. வாழைப்பழத்தில் வழ வழ என்று ஊசி ஏறுவதுபோல.
Indicates great facility.

8558. வாழைப்பழம் தின்னாத குரங்கு இல்லை.
A monkey's tastes.

8559. வாழைப்பழம் கொண்டுபோனவள் வாசலில் இருந்தாள், வாய் கொண்டுபோனவள் நடு வீட்டில் இருந்தாள்.
Power of speech greater than that of gifts.

8560. வாழைப் பழத்துக்கு வீங்கித் தோலைப் போட்டான் புல்லாப் [பூச்சிலே.
A foolish act.

8561. வாழைப்பழம் தின்னுகிறது வருத்தமா யிருக்குமா?
An agreeable occupation.

8562. வாழை வடக்கு ஈனும் வான் கமுகு தெற்கு ஈனும்.
Plantains and areca palms.

8563. வாழ்கிறவளை வைக்கவேண்டாம், தாழ்ந்தவனைத் திட்டவே [ண்டாம்.
A good counsel.

8564. வாழ்கிறதும் கெடுகிறதும் வாயிலே தான்.
The tongue is a great power.

8565. வாழ்கிறதும் தாழ்கிறதும் வண்டி உருளைபோல.
Prosperity and adversity not permanent.

8566. வாழ்கிற வீட்டில் வனக்குரங்கு வைத்ததுபோல.
A source of evil.

8567. வாழ்கிற வீட்டுக்கு இது ஒரு வன்குரங்கு.
Similar to preceding.

8568. வாழ்கிற வீட்டுக்கு வாழை வைத்துப்பார்.
An experiment.

8569. வாழ்க்கைப் படுகிறதை நம்பி அவசாரி ஆகிறதும் கெட்டது.
Doing evil that good may come.

8570. வாழ்க்கைப் படுகிற பெண்ணுக்குச் சீப்பை எடுத்து ஒளித்து வைத்தால் நிற்குமா?
Trifling obstacles cannot frustrate a good deed.

8571. வாழ்க்கை கொடுத்தவன் கையில் வாழ்நாள் அடைக்கலம்.
A benefactor extolled.

8572. வாழ்ந்தவன் கெட்டால் வறை ஓட்டுக்கும் ஆகான்.
A rich man brought to ruin.

8573. வாழ்ந்தவன் வறியவனானால் வறை ஓட்டிற்கும் ஆகான்.
Compare preceding.

8574. வாழ்ந்த மகள் வந்தால் வர்ணத் தடுக்கு இடு, கெட்டமகள் வந்தால் கிழிந்த தடுக்கு இடு.
Treatment according to condition.

8575. வாழ்ந்தவனை வாழ்த்தவேண்டாம், தாழ்ந்தவனைத் திட்ட வேண்டாம்.
Compare above.

8576. வாழ்வாருக்குச் சீதேவி வாயிலே.
Fortune in the tongue.

8577. வாழ்வு வரும்போது மதியோடி வரும்.
Good sense and fortune go together.

8578. வாழ்வும் சிலது காலம் தாழ்வும் சிலது காலம்.
Similar to above.

8579. வாளுக்கு ஆயிரம் தோளுக்கு ஆயிரம் சம்பாதித்தாலும் மட்டாய்ச் செலவிடு.
Recommends economy.

8580. வாளுக்கு ஆயிரம் தோளுக்கு ஆயிரம்.
A good earning.

8581. வானத்தில் உள்ள அம்புலியை வா என்றால் வருமா?
Attempting impossibilities.

8582. வானத்தை வில்லாய் வளைப்பான், மணலைக் கயிறாய்த் திரிப்பான்.
A man of extraordinary abilities.

8583. வானத்தின்கீழ் இருந்து மழைக்கு அஞ்சினால் தீருமா?
Natural evils inevitable.

8584. வானமும் பூமியும் கொள்ளாதான் மரத்திலும் கல்லிலும் இருப்பானோ?
God's omnipresence.

8585. வானமே ஈன்றது பூமியே தாங்கிற்று.
Heaven *versus* earth.

8586. வானம் பொத்தலென்று சிற்றெறும்புத் தோலால் அடைத்தான்.
A foolish remedy.

8587. வானம் வழங்க, தானம் வழங்கும்.
Charities depend on rain.

8588. வானம் பார்க்கப் போயும் இடைமடஞ்சலா?
Unable to perceive what is palpable.

8589. வானம் சுரக்கத் தானம் சிறக்கும்.
Compare above.

8590. வானம் சுருங்கிற் றானம் சுருங்கும்.
Reverse of preceding.

8591. வான் செய்த உதவிக்கு வையகம் என்ன செய்யும்?
Earth's debt to heaven.

8592. வான் குருவிக் கூடும் வங்கணையான் புற்றும், தேன்சிலந்தி இருட்டுஞ் செய்யத் தெரிவதரிது.
Certain unknowable things.

## வி.

8593. விசும்பிற் றுளி வீழினல்லால் பசும்புற்றலை காண்பரிது.
Connexion between rain and grass.

8594. விசுவாசக் காரனுக்கு வெந்நீரும் பருக்கையும், தாட்டோட்டக் காரனுக்குத் தயிருஞ் சோறும்.
Hypocrite better off than the pious.

8595. விசுவாசக் கொக்கு நடமாடிச் செத்ததாம்.
Hypocrisy condemned.

8596. விசுவாசம் இருந்தால் வேசியும் பிழைப்பாள், நிசம் இருந்தால் நீசனும் தழைப்பான்.
Faithfulness extolled.

8597. விசுவாசப் பூனை கருவாட்டைத் தூக்கிக்கொண்டு போகிற [தாம்.
Compare preceding.

8598. விடாச்சுரத்துக்கு விஷ்ணுகரந்தை.
A well known febrifuge.

8599. விடாத மழை பெய்தால் படாத பாடு படவேண்டும்.
Ill effects of continuous rain.

8600. விடாத மழையால் இல்லி ஒழுக்கு அடைபடும்.
A great evil terminates a small one.

8601. விடிந்தால் தெரியும் மாப்பிள்ளைக் குருடும் பெண் குருடும்.
The day-break a great revealer.

8602. விடிந்தும் பெண்ணுக்கு முக்காடோ?
False modesty despised.

8603. விடியுமட்டும் இறைத்தவனும் விடிந்தபின்பு சாலை உடைத்தவனும் சரி.
Waste of labour.

8604. விடிய விடியக் கதைகேட்டு இராமனுக்குச் சீதை என்ன வேண்டுமென்று கேட்டதுபோல.
Dull of understanding.

8605. விடியுமட்டும் மழை பெய்தாலும் ஓட்டாங்கிளிஞ்சில் முளைக் காது.
Rain cannot alter the nature of things.

8606. விடியற்காலம் கலியாணம், பிடி அடா தாம்பூலம்.
In great haste.

8607. விடியா மூஞ்சிக்கு வேலை அகப்பட்டாலும் கூலி அகப் படாது.
Unfortunate persons.

8608. விடியுமட்டும் மழை பெய்தாலும் ஓட்டாங்கிளிஞ்சில் கரை [யுமா ?
Compare above.

8609. விடுவிடு சங்கிலி வேப்பஞ் சங்கிலி, விட்டால் குடிகெட்டுப் [போம்.
Cling to your vow.

8610. விட்டகுறை தொட்டகுறை விடுமா ?
Serious effects of certain crimes.

8611. விட்டிற்பூச்சியைப்போல் பறந்து திரிகிறான்.
A great vagabond.

8612. விட்டு அலைகிறதிலும் தொட்டு அலை.
Wander in company.

8613. விட்டுச் சொன்னால் கட்டுக்குலையும், விரித்துடுத்தினால் அழுக்குப்படும்.
Tell the whole truth.

8614. விட்டுவிட்டுப் பெய்கிற மழையிலும் விடாமற் பெய்கிற தூவானம் நல்லது.
Better continuous than interrupted work.

8615. விட்டுதடா ஆசை விளாம் பழத்து ஓட்டோடே.
Getting disgusted with one's paramour.

8616. விண் காட்டப் போனவன் கண் காட்ட வந்தானாம்.
Attempting great things and descending to small.

8617. விண்ணுணம் எங்கே, இன்னரம் எங்கே ?
Searching for something.

8618. விண்ணுமாலைக்குக் கலியாணம், விழுந்து கொட்டடா சாம் [பரை.
A sarcastic remark.

8619. விண்ணேறு தப்பினும் கண்ணேறு தப்பாது.
An evil eye.

8620. விண்டொடு கொடுமுடி மேருவும், வீறளி தென்றிசைக் கிரி[யும்.
Two famous mountains.

8621. விண் பொய்த்தால் மண் பொய்க்கும்.
Earth *versus* sky.

8622. விண் வலிதோ மண் வலிதோ ?
Which is the more powerful, earth or heaven ?

8623. விதவை கர்ப்பமானால் வெளியிலே சொல்லாள்.
It will bring her disgrace.

8624. விதி எப்படியோ மதி அப்படி ?
Sense according to destiny.

8625. விதித்த விதியைவிட வேறு நடக்குமா?
Destiny infallible.

8626. விதி போகிற வழியே மதி போகும்.
Compare above.

8627. விதி முடிந்தவனை விரியன் கடிக்கும்.
Destiny will anyhow succeed.

8628. விதியின் பயனே பயன்.
Fate all powerful.

8629. விதியை மதியால் தடுக்கலாமா ?
Judgment cannot overcome fate.

8630. விதியை வெல்லுவாருண்டா ?
Compare preceding.

8631. வித்துவானை அடித்தவனுமில்லை, பெற்றதாயுடன் போனவனுமில்லை.
A sage and a mother sacred.

8632. வித்தாரக்காரன் செத்தால் பிழைக்கான்.
Tricks cannot raise the dead to life.

8633. வித்திருக்குமிடத்தில் வேரிருக்க வேண்டும்.
Root and seed must be together.

8634. வித்துக்கு விட்ட சுரைக்காய்போல.
Set apart for a particular purpose.

8635. வித்துவான் அருமையை வித்துவான் அறியவேண்டுமேயல்லாமல், விறகு விற்கிறவனா அறியப்போகிறான்?
Like knows like.

8636. வித்து இல்லாச் சம்பிரதாயம் மேலும் இல்லை கீழும் இல்லை.
Nothing grows without a seed.

8637. வித்துவானுக்கு எது பரதேசம்?
To the learned there is no strange land.

8638. வித்துவான்களுக்கு எது பெரிது?
To the learned there is nothing difficult.

8639. வித்தைக் கள்ளி மாமியார் விறகு ஒடிக்கப்போனாளாம் கற்றாழை முள்ளு கொத்தோடே தைத்ததாம்.
One who makes a lot of *fuss.*

8640. வித்தை அற்றவன் அழகு வாசனை இல்லா முருக்கம் பூப்போல.
Lack of learning despised.

8641. வித்தை விரும்பு.
Learning commended.

8642. வித்தைக் கள்ளி, விளையாட்டுக் கள்ளி, பாகற்காய் விற்ற பழங்கள்ளி.
Compare above.

8643. வித்தைக்காரப் பெண்பிள்ளை செத்த பாம்பை ஆட்டுகிறாள்.
A stupid player.

8644. வித்தையடி மாமி விற்கிறதடி பணிகாரம்.
Taking off a *fussy* person.

8645 வித்தையில் எளிது சூனியம், பன்னத்திலே எளிது சிற்றுப்பெட்டி.
Certain things easy to acquire.

8646. வித்தை அடிக்கிற கோழிக்கு விலாவில் இருக்கிறதாம் பித்து.
Some-body extraordinarily clever.

8647. வித்தையுள்ளவன் பெரியவன்.
Compare above.

8648. விநாசகாலே விபரீத புத்தி.
Bad sense leading to ruin.

8649. விந்துவிட்டாயோ வெந்துவிட்டாயோ ?
Debauchery condemned.

8650. வியாச்சியம் சேற்றில் நட்ட கம்பம்.
Glorious uncertainty of law.

8651. வியாதிக்கு மருந்து உண்டு, விதிக்கு மருந் துண்டா?
No remedy for fate.

8652. வியாதியிலும் மருந்து கொடிது.
Medicine worse than malady.

8653. விரகன்கோசம் கட்டைத்தட்டிப்போம்.
Compare above.

8654. விரதத்திலும் பெரிதோ ஒருசந்தி?
Fasting not better than vows.

8655. விரதம் கெட்டாலும் சுகம் தக்கவேண்டும்.
One of two essentials must succeed.

8656. விரலுக்குத் தக்க வீக்கம்.
Maintain proper proportions.

8657. விரல் கண்ணிலே குத்தினதென்று வெட்டிப்போடுவார்களா?
Don't mind the mistakes of a friend.

8658. விரல் உதவி விருந்தினர் உதவார்.
Finger more useful than guest.

8659. விரல் நக்கி மோர்குடிப்பதுபோல.
A niggardly habit.

8660. விரல் உரல் ஆனால் உரல் என்ன ஆகும் ?
Compare above.

8661. விரல் போகாத இடத்தில் உரல் போமா ?
*A fortiori* argument.

8662. விரல் நுழைய இடமுண்டானால் தலையைப் புகவிடலாம்.
Driving the thin end of the wedge.

8663. விரித்து உடுத்தினால் அழுக்குப்படும்.
How to avoid getting dirty.

8664. விரிந்த உலகில் தெரிந்தவர் சிலர்.
The famous very few.

8665. விதை ஒன்று போடச் சுரை ஒன்று முளைக்குமா?
Whatever is sown will be reaped.

8666. விதைக் கோட்டையிலே எலியை வைத்துக் கட்டினாற் போல.
Doing just what ought not to be done.

8667. விதை முந்தியோ மரம் முந்தியோ?
Seed prior to plant.

8668. விருது கூறி வந்து செடியில் நுழையலாமா?
A cowardly act.

8669. விருதுக்கா வேட்டை ஆடுகிறது?
A wild-goose chase.

8670. விருத்தாசலம் போனால் திரட்பாவம் போகும்.
A sacred place.

8671. விருந்து இட்டுப் பகையை விளைக்கிறது.
Hospitality leading to enmity.

8672. விருந்திலோர்க்கு இல்லை பொருந்திய ஒழுக்கம்.
Hospitality urged.

8673. விருந்து இல்லாச் சோறு மருந்தோடொக்கும்.
Compare previous saying.

8674. விருந்தைப் பண்ணிப் பொருந்தப் பண்ணு.
Hospitality brings about reconciliation.

8675. விருந்தும் மருந்தும் மூன்று பொழுது.
A limit to feasts and medicines.

8676. விருப்பத்தினால் ஆகாதது வீம்பினால் ஆகுமா?
Compulsion not commendable.

8677. விலக்கக் கூடாத துன்பத்திற்கு விசனப்படாதே.
Don't grieve over the inevitable.

8678. விலங்கும் பறவையும் விதித்த கோடு கடவாது.
Instincts of animals and birds.

8679. விலங்கை விட்டுத் தொழுவில் மாட்டினதுபோல.
A successful subterfuge.

8680. விலை மோரிலே வெண்ணெய் எடுக்கிறது.
A miserly behaviour.

8681. விலைக்குக்கொண்டு விருந்துக்கு வேட்டை ஆடுகிறதா?
Spending money in sport.

8682. விலை மகட்கு அழகு தன் மேனி மினுக்குதல்.
A prostitute's business.

8683. வில் அடியால் சாகாதது கல் அடியால் சாகுமா?
Arguing from the greater to the less.

8684. வில் இல்லாதவன் அம்பு தேடுவான் ஏன்?
Folly of seeking one only of two essentials.

8685. வில்லம்போ சொல்லம்போ?
Words more powerful than darts.

8686. வில்லுக் குனியாது எய்தால், விலகாது எதிர்த்த பகை.
" She stoops to conquer."

8687. வில்லுக்கு விஜயன் பரிக்கு நகுலன்.
Two famous experts.

8688. வில்லும் விளாங்காயுமாய் இருக்கிறது.
A miscellaneous mixture.

8689. வில் வளைந்தால் மோசம் தரும்.
Compare above.

8690. வில்வப்பழம் தின்பார் பித்தம் போக, பனம்பழம் தின்பார் பசிபோக.
Two fruits and their uses.

8691. விவேகத்தின் மேன்மை அவிவேகத்தை ஒழித்தல்.
Wisdom removes uuwisdom.

8692. விழக்குழிப் பரிய்ச்சுகிறது.
Coutemplating one's ruin.

8693. விழலுக்கு இறைத்த நீர்போல.
Wasting labour.

8694. விழித்தவன் கன்று நாகுகன்று, தூங்கினவன் கன்று கடாக் கன்று
Sleep *versus* waking.

8695. விழியிலே குத்தின விரலை அறுப்பாருண்டா?
A friend not to be forsaken for a mistake.

8696. விழுங்கின ரயம் வயிற்றில் இராது.
Secrets are sure to come out.

8697. விழுகிற சுவரிலே கைவைத்தாற்போல?
Placing oneself in danger.

8698. விழுகிற பிள்ளைக்கு அரிவாள் மணை அண்டை கொடுத்தாற் [போல.
Adding evil to evil.

8699. விழுகிற வீட்டுக்கு விளக்குமாற்றை அண்டைகொடுத்தாற் [போல.
Offering an ineffective remedy.

8700. விழுந்தது பாம்பு, கடித்தது மாங்கொட்டை,
A great alarm for nothing.

8701. விழுந்தவன் எழுந்திருந்தால் வெட்கத்துக்கு அஞ்சிச் சிரிப் [பான்
Shame simulating joy.

8702. விழுந்த பிள்ளையை எடுக்க நேரம் இல்லை.
Too busy to attend to an accident.

8703. விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்கிறான்.
A defeated man's conceit.

8704. விளக்கைக்கண்ட விட்டில் பூச்சிகள்போல.
A disagreeable surrounding.

8705. விளக்குமாற்றுக்குப் பட்டுக் குஞ்சமா?
Adorning an unworthy person.

8706. விளக்கிருக்க நெருப்புக் கலைவானேன்?
Seeking help when it is near.

8707. விளக்கெண்ணெய்க்குக் கேடே தவிரப் பிள்ளை பிழைப்பது [இல்லை.
Ineffectual remedies.

8708. விளக்கெண்ணெயிற் போட்ட கழற்காய்போல.
Losing its value.

8709. விளக்கெண்ணெயைத் தடவிக்கொண்டு ஆற்று மணலில் புரண்டாலும் ஒட்டுகிறதுதான் ஒட்டும்.
Special efforts cannot create new things.

8710. விளக்கெண்ணெயாம் தலைக்கு எண்ணெய்.
Questioning the use of a thing.

8711. விளக்கைப் பிடித்துக்கொண்டு கிணற்றில் விழுகிறதா?
Neglecting to make use of a privilege

8712. விளக்கைக் கொளுத்திக் கீழே வைப்பார் உண்டோ?
Everything in its place.

8713. விளக்கை வைத்துக்கொண்டு நெருப்புக்கு அலைகிறதுபோல.
Compare above.

8714. விளக்கை வெளியிலே வைத்தாற்போல.
Putting a thing to an improper use.

8715. விளக்கு ஒளிக்கு ஆசைப்பட்ட விட்டில்போல.
Tempted by pleasure.

8716. விளக்குமாற்றால் அடித்துக் குதிரையோட தீவட்டி கொடுத்தாற்போல.
Illtreatment.

8717. விளக்குமாற்றுக் கட்டைக்குப் பட்டுக்குஞ்சம் கட்டினாற்போல.
Compare above.

8718. விளக்கிலே கொளுத்தின பந்தம்போல.
A delaying business.

8719. விளக்கிலே மொய்த்த விட்டில் பறவைபோல.
Seeking one's own ruin.

8720. விளக்கெண்ணெய் வார்த்துப் பட்டம் கழுவலா?
An impoper use.

8721. விளங்கா மடையன் விறகுக்குப் போனால் விறகு கிடைத்தாலும் கொடி கிடையாது.
How a fool suffers.

8722. விளங்காய்க்குத் திரட்சி உண்டுபண்ணுகிறதா ?
Rotundity is natural to it.

---

8723. விளையச்சே சோறாய் விளைந்தால் விறகு விராட்டி என்னத்துக்கு?
Premature produce.

---

8724. விளையாட்டுச் சண்டை வினைச்சண்டையாம்.
Sport *versus* seriousness.

---

8725. விளையாட்டுப் பிள்ளைக்கு மண்மேலாசை.
A childish desire.

---

8726. விளையாட்டுப் பிள்ளைக்கு விதரணை தெரியுமா ?
A little child cannot discriminate.

---

8727. விளையாட்டுப் பிள்ளை விருந்துக்கு அஞ்சாது.
Ways of little children.

---

8728. விளையாட்டாய் இருந்தது வினையாய் முடிந்தது.
Sport ending seriously.

---

8729. விளையாட்டுப் பண்டம் வீடு வந்து சேராது.
Toys are easily lost.

---

8730. விளையும் பயிர் முளையிலே தெரியும்.
The child is father to the man.

---

8731. விளைவது அரிசியானாலும் மேலுமிபோனால் விளையாது.
"The apparel oft makes the man."

---

8732. விளைவதாகிலும் அளவறிந்து அழி.
Urges economy.

---

8733. விறகு கட்டுக்காரனுக்கு நாரை வலம் ஆனால் ஒருபணம் விற்கிறது ஒன்றேகாற்பணம் விற்கும்.
Good omens.

---

8734. விறகு கோணலானாலும் நெருப்புப் பற்றாதா ?
Worth more than appearance.

---

8735. விறகு கட்டுக்காரனுக்கு பிளவு புறப்பட்டால் விறகு கட்டையால் ஓரடி.
Labourers' complaints easily cured.

---

8736. விற்ற குண்டைக்குப் புல் போடுவான் ஏன் ?
It is out of your hands.

8737. வினைக்காலம் வரும் காலம், மனை வழியும் தெரியாது.
The effect of destiny.

8738. வினை விதைத்தவன் வினை அறுப்பான், தினை விதைத்தவன் தினை அறுப்பான்.
What is sown will be reaped.

8739. விலைதீர்த்த கோவிலுக்குப் போயும் வினை தீரவில்லையா ?
Ridiculing Hindu superstitions.

8740. விஷத்தைக் குடிக்கப் பாலாமா ?
Poison cannot turn into milk.

8741. விஷத்தின் மேல் விஷம், விஷம் போக்கும்.
Poison an antidote to poison.

8742. விஷம் தின்றால் சொல்லும்.
A well known fact.

8743. விஷம் குடித்தவன் மிளகுநீர் குடிக்கவேண்டும்.
An antidote to poison.

8744. விஷம் குடித்தாலும் சாகார் விசுவாசிகள்.
The pious proof against poison.

8745. விஷம் பெரிதோ பாவம் பெரிதோ ?
Sin is the more deadly poison.

8746. விஷம் தீர வைத்தியன் வேண்டும், பாவம் தீரத் தெய்வம் வேண்டும்.
An excellent doctrine.

8747. விஷ்ணு பெரியவர் என்று ஸ்ரீரங்கத்தில் பார்க்கவேண்டும்.
A local saying.

8748. விஷ்ணுவைப் பெரிது என்பார் ஸ்ரீரங்கத்தில், சிவனைப் பெரிது என்பார் அருணாசலத்தில்.
Vishnu *versus* Siva.

8749. விஷ்ணுவே சமஸ்தம் என்பார் சிலர், சிவனே பெரிது என்பார் சிலர்.
Compare preceding.

## வீ.

8750. வீக்கமோ தூக்கமோ?
A reasonable doubt.

8751. வீக்கம் கண்டால் தூக்கமாம்.
Swelling induces sleep.

8752. வீங்கலுக்கு விஷம் அதிகம்.
Lean persons said to be ill-natured.

8753. வீசம் இறுத்த குடி நாசம்.
Condemns taxing.

8754. வீசி நடந்தால் வெள்ளி வீசம் குறையும்.
How easily silver wears away.

8755. வீச்சு என்றாலும் விடுவேனோ, வீர புத்திர அம்பலக்காரா?
A well captured foe.

8756. வீடு அசையாமல் தின்னும், யானை அசைந்து தின்னும்.
How money goes in a family.

8757. வீடு எல்லாம் குருடு, வாசல் எல்லாம் கிணறு.
A double evil.

8758. வீடு கட்டுகிறது அரிது, வீடு அழிக்கிறது எளிது.
To destroy easier than to build.

8759. வீடு கட்டுமுன்னம் கிணறு வெட்டவேண்டும்.
A usual precaution.

8760. வீடு தருவோன் மேலும் தருவோன்.
A great benefactor.

8761. வீடு நிறைந்த விளக்குமாறு.
A useful servant.

8762. வீடு பற்றி வேகும் போது கிணறு எடுப்பது?
Dangerous delay.

8763. வீடு பலக்கக் கட்டினால் புயலுக்கும் ஈடு கொடுக்கும்.
Build your house strong.

8764. வீடு பற்றிக்கொண்டெரியும்போது சுருட்டுக்கு நெருப்புக் கேட்டானாம்.
Trifling talk in great danger.

8765. வீடு போ என்கிறது, காடு வா என்கிறது.
Certainty of death.

8766. வீடு வெறும் வீடு மேல் வீடு அதிகாரம்.
Exercising authority.

8767. வீடு வெறும்வீடாய் இருந்தாலும் மணியம் எழு ஊர்.
Poverty *versus* ambition.

8768. வீடும் விளக்குமாயிருந்தால், நாடும் நடப்பும் வேண்டாமா ?
A family needs a society.

8769. வீட்டிலிருக்கிற பூனையை அடித்தால் மேட்டில் இருக்கிற எலியைப் பிடிக்கும்.
Against ill-treating a domestic.

8770. வீட்டிலே வினை இருக்கிறது வினைதீர்த்த கோவிலுக்குப் போனால் தீருமா ?
Compare above.

8771. வீட்டில் அழகு வேம்பு அடியாகும்.
The margosa a favourite tree.

8772. வீட்டில் அடங்காதவன் ஊரில் அடங்குவான்.
Public opinion stronger than home influence.

8773. வீட்டிளக்காரம் வண்ணானறிவான்.
A dhobie's knowledge.

8774. வீட்டுக் கேற்றின விளக்கு விருந்திற்குமாகும்.
Serving a double purpose.

8775. வீட்டுக்கருமம் நாட்டுக்கு உரையேல்.
Don't divulge your secrets.

8776. வீட்டுக்கு இருந்தால் வெண்கலப் பெண்டாட்டி, வீட்டுக்கு இல்லாமற் போனால் தங்கப் பெண்டாட்டி.
How a wife is estimated.

8777. வீட்டுக்கு அலங்காரம் பெரிய குடி.
A big family adorns a house.

8778. வீட்டுக்கு அலங்காரம் விளக்கு.
A light adorns a house.

8779. வீட்டுக்குச் சோறில்லை சிவனறிவான், நாட்டுக்குச் செல்லப் பிள்ளை நானல்லவா?
Poverty *versus* a great name.

8780. வீட்டுக்குள் கஞ்சித்தண்ணியைக் குடித்துவிட்டு மீசையில் வெண்ணெயைத் தடவிக்கொண்டு புறப்படுகிறது.
Compare preceding.

8781. வீட்டுக்குள்ளே வேட்டை நாயை உசுப்புவானேன்?
Good men need no prompting.

8782. வீட்டுக்கு வீடு மண் அடுப்புத்தான்.
The same in every house.

8783. வீட்டுக்கு அலங்காரம் மனையாள்.
A wife is the ornament of a dwelling.

8784. வீட்டுக்கு அலங்காரம் வேளாண்மை.
Agriculture becomes a household.

8785. வீட்டுச் செல்வம் மாடு, தோட்டச் செல்வம் முருங்கைக்காய்.
The cow and the drumstick tree praised.

8786. வீட்டுச் சோற்றைத் தின்று வீண் சண்டைக்குப் போவானேன்?
An idle life condemned.

8787. வீட்டுச் சோற்றைப் போட்டு வீண் பேச்சுக் கேட்பானேன்?
Don't encourage ungrateful idlers.

8788. வீட்டுப் பாம்பு காட்டுக்குப் போனால் அதுவும் காட்டுப் பாம்[பு ஆகும்.
How civilized men become savages.

8789. வீட்டு வேலை வெளி வேலை பார்த்துக் காட்டு வேலைக்குக் கட்டோடே போகலாம்.
Nearer duties to be first attended to.

8790. வீட்டுப் பிள்ளையும் வெளிப் பிள்ளையும் வித்தியாசம் அறி[யாது.
Children know no difference.

8791. வீட்டு மூதேவியும் காட்டு மூதேவியும் கூடி உலாவுகிறது.
A double misfortune.

8792. வீட்டுக்குப் புகழ்ச்சியோ நாட்டுக்குப் புகழ்ச்சியோ?
Praise in the family or village?

8793. வீட்டுக்காரியம் பாராதவன் நாட்டுக் காரியம் பார்ப்பானா?
Business begins at home.

8794. வீட்டுக்காரி என்று பெண்சாதிக்குப் பெயர்.
A suitable name.

8795. வீட்டுக்கு வீரன் காட்டுக்குக் கள்ளன்.
One thing at home and another abroad.

8796. வீட்டுக்கு வீடு எதிர் வீடு ஆகாது.
Opposite houses discouraged.

8797. வீட்டுக்கு வாய்த்தது எருமை, மேட்டுக்கு வாய்த்தது போர்.
A buffalo praised.

8798. வீட்டுக்கு ஒரு வாசற்படி, பூட்டுக்கு ஒரு திறவுகோல்.
Correlatives emphasized.

8799. வீட்டுப் பெண்சாதி வேம்பும் காட்டுப் பெண்சாதி கரும்பும்.
Stolen waters sweet.

8800. வீட்டைக் கொளுத்தி வேடிக்கைப் பார்க்கிறதா?
Making fun of one's calamity.

8801. வீட்டையும் கொள்ளை கொடுத்து பங்குக்கும் நிற்கிறது.
Causing loss and claiming a share.

8802. வீட்டைக் கட்டிக் குரங்கைக் குடி வைத்ததுபோல.
A bad tenant.

8803. வீட்டைக் காத்து அருள், பாட்டைப் பார்த்து அருள்.
How a house and a song are to be preserved.

8804. வீட்டைக் கட்டிப் பார், கலியாணம் செய்து பார்.
To know the cost.

8805. வீட்டைப் பிடுங்கி விறகாய் எரித்தாலும் வீணாதி வீணனுக்கு என்ன செய்வேன்.
Nothing can satisfy a prodigal.

8806. வீட்டை ஏன் இடித்தாய் மூட்டைப்பூச்சிக்குப் பயந்து
Doing a great evil for fear of a small one.

8807. வீட்டை எல்லாம் வெல்லத்திற்கு மாறினன்.
Wasting one's wealth on pleasure.

8808. வீட்டைக் கட்டு, அல்லது காட்டை அழி.
Urges house building.

8809. வீட்டைக் காத்த நாயும், காட்டைக்காத்த நரியும், வீண் போகாது.
Labour always profitable.

8810. வீட்டைக் கட்டி ஓட்டைப்போடு.
First walls and then roof.

8811. வீணான வீணுக்கு வாணாளை மாய்ப்பானேன்.
Why waste life on a prodigal ?

8812. வீணருக்குச் செய்தது எல்லாம் வீணாம்,
Good done to the unworthy is lost.

8813. வீணன் கருமம் இழந்தான்.
The fool reaps no good from his works.

8814. வீணாவாரம் கிழவி தெருண்டதும் பிட்டுக்கு வழியில்லாமல் பிணங்கியழுததும்.
An unworthy person is unfortunate.

8815. வீணாய் வீணாய் என்பதை ராமா ராமா என்றேன்.
Mistaking one cry for another.

8816. வீணாய் உடைந்த சட்டி வேண்டியது உண்டு, என் தலையிற் பூணாரம் பூண்ட புதுமைதனைக் கண்டது இல்லை.
Deploring one's condition.

8817. வீணுக்குத் தாலி வேணுமென்று அறுத்தேன்.
Voluntary widowhood.

8818. வீணுக்கு உழைக்கிறவன் வீணன்.
A fool labours for nought.

8819. வீண் இழவுக்கு மார் அடிக்கிறதா ?
Wasteful labour.

8820. வீண் இழவுக்கு வீட்டைக் கட்டிப் பார இழவிற்குப் பந்தல் [போடு.
A double waste.

8821. வீண் விபரீதத்தால் பேதையர் வீண் செலவு செய்ய உடன்படுவார்கள்.
Compare above.

8822. வீதிரும் பெண்ணும் விலைபோச்சுது கைதப்பினால்.
Out of season—out of demand.

8823. வீம்புக் குப்பையில் விளையும் வீண் செடி.
A beautiful metaphor.

8824. வீம்புக்கு வேடம் கொள்ளாதே.
Condemns conceit.

8825. வீம்பு பேசுகிறவன் அழிவான், வீரியம் பேசுகிறவன் விழுவான்.
Pride goeth before a fall, &c.

8826. வீரசூரனானாலும் மின்படை வேண்டும்.
Weapons are essential.

8827. வீரம் பேசிக்கொண்டு எழுந்த சேவகன் வெட்டும் களம் கண்டு முதுகிடலாமா ?
A cowardly soldier.

8828. வீரன் கேண்மை கூர் அம்பாகும்.
The friendship of a warrior.

8829. வீரியம் பெரிதோ காரியம் பெரிதோ ?
Valour better than words.

## வெ.

8830. வெகுஜன வாக்கியம் கர்த்தவ்வியம்.
The voice of the people is the voice of God.

8831. வெட்கம் சிக்கிவிட்டு வெளிப்பட்ட மூளிக்கு மூக்காடு ஒரு கேடா ?
A shameless fool.

8832. வெங்காயம் உரிக்க உரிக்கத் தோலாயிருப்பதுபோல்.
Containing nothing within.

8833. வெங்காயத்துக்கு எத்தனைவாசனை கட்டினாலும் துர்க்கந்தத்தையே வீசும்.
It is very difficult to destroy evil habits.

8834. வெங்கண்ணை வாங்கு உன் கண்ணைக் கொடுத்து.
A very dear fish.

8835. வெச்செனவுக்கு அன்றி வெண்ணெய் உருகுமா ?
How butter melts.

8836. வெட்கம் கெட்டாலும் கெடட்டும் தொப்பையில் இட்டால் போதும்.
Shame *versus* greed.

8837. வெட்கம் கெட்டவன் ஊருக்குப் பெரியவன்.
Shamelessness pushes one forward.

8838 வெட்கத்தை வெளியிலே சொல்லலாமா?
Don't publish your shame.

8839. வெட்கத்தால் ஒல்காதவள் குலஸ்திரீக்கு போகாது.
Modesty becoming in a woman.

8840. வெட்கம் அற்ற பெண்பிள்ளை வீண்.
Compare preceding.

8341. வெட்கப்படுகிற வேசியும் வெட்கங் கெட்ட சமுசாரியும் உதவார்கள்.
The vituous *versus* public woman.

[து ?
8842. வெட்கமே கெட்டு வெளிப்பட்ட முண்டைக்கு முக்காடு ஏ
Compare a similar saying alone.

8843. வெட்கத்துக்கு அஞ்சினவன் சச்சரவு செய்வானோ?
Shame avoids fighting.

8844. வெட்கத்துக்கு அஞ்சினவன் கடனுக்கு அஞ்சுவான்.
Shame avoids borrowing.

8845. வெட்கத்தை விற்றுக் கக்கத்திலே கொண்டுபோகிறான்.
A shameless fellow.

8846. வெட்கம் கெட்டவனுக்கு மேனி எல்லாம் அழுக்குத்தான்.
Shamelessness and dirty habits.

8847. வெட்டப் பலம் இல்லை வெட்டிக்குப் போக மனம் இல்லை.
A double disadvantage.

8848. வெட்ட வெளியிலே வையாளி விடுகிறதா?
A careless attempt.

8849. வெட்டெனப் பேசேல்.
Avoid sharp speaking.

8850. வெட்ட வருகிற மாட்டுக்கு வேதம் ஓதினால் ஒக்குமா?
Unseasonable occupation.

8851. வெட்டிப் போட்டுக் கட்டிக்கொண் டழுகிறது.
Doing evil and then repenting it.

8852. வெட்டிக்கு இறைத்து விழலுக்குத் தண்ணீர் கட்டினது போல.
Watering a waste.

8853. வெட்டிக் கொண்டுவா என்றால் குத்திக் கொண்டு வருகிறான்.
Overdoing an order.

8854. வெட்டியானும் பிணமும் பட்டடைப் படுகிறது.
The grave-digger and the corpse.

8855. வெட்டிவேரில் விசிறியும், விலாமிச்சை வேரில் தட்டியும் பண்ணு.
Protection against heat.

8856. வெட்டின இடத்தில் சலம் ஊறும், வீடு கட்டின இடத்தில் நடை ஏறும்.
Where there is labour there is reward.

8857. வெட்டி எல்லாம் தண்ணீர், மண் கட்டி எல்லாம் புல் நாற்று.
Signs of great fertility.

8858. வெட்டிவெட்டிப் பார்த்தாலும் முட்டக் கரிகாசுதான் அகப்படும்.
A mining proverb.

8859. வெட்டிக்குப் பெற்று வேலியில் எறிந்தார்களா ?
Said of a foundling.

8860. வெட்டியானும் பிணமும் கட்டிக்கொண்டு அழட்டும்.
Compare above.

8861. வெட்டின குளத்திலும் தண்ணீர் குடியாது, கட்டின வேலியும் தாண்டமாட்டாது.
Said of an obstinate person.

8862. வெட்டினவனுக்கு ஒருகேணி வீணாதி வீணனுக்கும் பலகேணி.
The industrious *versus* the idle.

8863. வெட்டு ஒன்று, கண்டம் இரண்டு.
Effect more than cause.

8864. வெட்டொன்று துண்டிரண்டு.
Another form of preceding.

8865. வெட்டென உலாவே துட்டர்கள் அன்றவர்.
Compare above.

8866. வெண்கலம் குகையில்வைத்து, வியாழம் முப்பதும் ஊதி
னால் மங்கையாள் பாத்தானை மற்றநாள் வெள்ளியாமே.
How to make silver.

8867. வெண்கலம் சஞ்சலம்.
It causes much care.

8868. வெண்கலம் நடமாடக் குசவன் குடிபோகிறான்.
Brazier *versus* potter.

8869. வெண்கலம் வெண்கலம் என்ன ஓட்டை ஓட்டை என்கிறது.
Pretension contray to fact.

8870. வெண்கலக் கடையில் யானை புகுந்ததுபோல.
Doing a destructive work.

8871. வெண்டலைக் கருடன் வந்திமொனால் எவர் கைப்பொருளும்
தன் பொருள் ஆகும்.
A merciless plunderer.

8872. வெண்ணெய்க் கட்டியும் முப்பாலும் போவோர் விக்கிக்கொ
ள்வதுக் கென்செய்வார்?
A self-sought evil.

8873. வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அழுவாமா?
Neglecting one's own resources.

8874. வெண்ணெய்க்குப் பல்லு முளைத்தாற்போல.
An unlikely supposition.

8875. வெண்ணெய் திரண்டுவரும் போது தாழி உடைந்தாற்போல.
Expectation ending in disappointment.

8876. வெண்ணெய் இருக்க நெய்க்கு அலைவானேன்?
Compare above.

8877. வெண்ணை உருகும் முன்னே பெண்ணை பெருகும்.
Suddenness of floods in the Pennar.

8878. வெதும்பும் பயிருக்கு மேகம் இரைந்தாற்போல.
A useless aid.

8879. வெந்த சோற்றைத் தின்று வந்தது எல்லாம் பிதற்றுகிறான்.
Conceit caused by luxury.

8880. வெந்த சோற்றைத் தின்று விதி வந்தால் சாகிறது.
Trusting to fate.

8881. வெந்ததுபோதும், முன்றானையிலே கொட்டு.
In a hurry to eat.

8882. வெந்ததைப் போடு முன்றானையிலே.
Similar to preceding.

8883. வெந்த புண் வினை செய்யாது.
Burn your ulcer.

8884. வெந்தயம் இட்ட கறிக்குச் சந்தேகம் இல்லை.
A well-seasoned dish.

8885. வெந்தயம் போடாத கறியும் கறி அல்ல, சந்தையில்லாத ஊரும் ஊர் அல்ல.
Compare preceding.

8886. வெந்தால் தெரியும் வெங்காயம் மணப்பு.
Make a good test.

8887. வெந்நீரிலே விழுந்த கோழிதானே எழுந்துபோமா?
One in trouble must be aided by another.

8888. வெந்நீரிலே வீடு வேகுமா?
A trifling trouble.

8889. வெய்யிலின் முன்னே மின்மினி பிரகாசிக்குமா?
A small person rivalling a great man.

8890. வெய்யிலிலே போட்டாலும் உலரான், தண்ணீரிலே போட்டாலும் நனையான்.
Proof against all ills.

8891. வெய்யிலிலே அகப்பட்ட புழுவைப்போல.
In great torture.

8892. வெய்யிலிலே விடுகிறதும் இல்லை, மழையிலே விடுகிறதும் இல்லை.
Affording no relief at any time.

8893. வெய்யிலின் அருமை நிழலில் இருக்கிறவனுக்குத் தெரியாது.
One in luxury cannot appreciate small comforts.

8894. வெய்யோன் வெயில் முன் எரி தீபம்போல்.
Compare above.

8895. வெல்லப் படை இல்லை, தின்னப் படை உண்டு.
More people to eat than fight.

8896. வெல்லப் பானையை எறும்பு மொய்த்ததுபோல்.
Clustering round a benefactor.

8897. வெல்லப் பேச்சு சொல்லுக் கசையாது.
Sweet words have no force.

8898. வெல்லமுள்ள வாயைச் சளுப்பென்று நக்குகிறான்.
A mean, cringing flatterer.

8899. வெல்லம் சாப்பிடுகிறவன் ஒருவன் விரலைச் சூப்புகிறவன் ஒருவன்.
One eats and another looks at the eater.

8900. வெல்லப் போறான் ஒரு செல்லப்பிள்ளை, மெல்லப் போறான் ஒரு அமுங்குத் தலையன்.
Two fools going to fight.

8901. வெல்லாது உங்கள் படை, செல்லாது பாண்டியன் முன்.
Predicting defeat.

8902. வெளிச்சம் இருள் ஆனால் இருள் என்னவாம்?
Arguing from the smaller to the greater.

8903. வெளிச்சீர் உட்சீரைக் காட்டும் கண்ணாடி.
The external indicates the internal.

8904. வெளிதானே பயிரை மேய்ந்தால் என்ன விளையும்?
An unprotected field.

8905. வெளிமழை விட்டாலும் செடிமழை விடாது.
Effect lasts longer than cause.

8906. வெளியிலே பார்த்தால் டம்பம், உள்ளே பார்த்தால் ஒக்காளம்.
Show *versus* reality.

8907. வெளியைப் பிடித்துக் கொண்டு வீரா வீரா என்கிறது.
Meaningless cry.

8908. வெளுத்தது எல்லாம் பால், கறுத்தது எல்லாம் தண்ணீர்.
Forming hasty generalizations.

8909. வெளுத்து விட்டாலும் சரி, சும்மா விட்டாலும் சரி.
Prepared for the worst.

8910. வெளுப்பானுக்கு வெளுப்பான் சாதி வண்ணான்.
A good dhoby.

8911. வெள்ளமே யானாலும் பள்ளமே பயிரிடவேண்டும்.
An agricultural truth.

8912. வெள்ளம் பள்ளத்தை நாடும், விதி புத்தியை நாடும்.
Water finds its own level.

8913. வெள்ளம் வருமுன்னே அணை கோலிக் கொள்ளவேண்டும்.
Prevention better than cure.

8914. வெள்ளரிக்காய் விற்ற பட்டணம்.
A greatly civilized town.

8915. வெள்ளாடு நனைகிறது என்று வேங்கைப்புலி விழுந்து விழுந்து அழுகிறதாம்.
Pretended sympathy.

8916. வெள்ளாடு குழை தின்றதுபோல.
Here a little and there a little.

8917. வெள்ளாட்டிக்குச் சன்னதம் வந்தால் விழுந்து விழுந்து கும்பிட வேண்டும்.
In altered circumstances.

8918. வெள்ளாட்டி பெற்ற பிள்ளை விடியற்காலம் செத்துப் போயிற்று.
A slave's child neglected.

8919. வெள்ளாட்டியும் பெண்டாட்டியும் சரியா ?
Things which cannot be compared.

8920. வெள்ளாளன் மரபே மரபு, கள்ளர் திருட்டே திருட்டு.
The agriculturist is very fond of his Genealogy.

8921. வெள்ளாளன் கெடுக்காவிட்டாலும் வெள்ளோலை கெடுக்கும்
A landlord's ruinous accounts.

8922. வெள்ளாளன் மினுக்குப்பண்ணிக் கெட்டான், வேசி சளுக்
குப் பண்ணிக் கெட்டாள்.
A landlord's luxurious habits.

---

8923. வெள்ளாளன் கிரந்தமும் பார்ப்பான் தமிழும் வழவழ.
A Tamil man's Sanskrit, and a Brahman's Tamil.

---

8924. வெள்ளாளர் செய்யாத வேளாண்மை வேளாண்மை அல்ல.
Vellalas are experts in cultivation.

---

8925. வெள்ளாளர் குடிக்கு ஒரு கள்ளாளர் குடி.
Agriculturists and robbers.

---

8826. வெள்ளிக்கு எதிரே போனாலும், வெள்ளாளனுக்கு எதிரே
போகலாகாது.
A Vellala is hated by all.

---

8927. வெள்ளிக்குப் போட்டதும் கொள்ளிக்குப் போட்டதும் சரி.
An astrological superstition.

---

8928. வெள்ளி போட்ட காலுக்கு வெறுங்கால் அடிமையா ?
Is poverty the slave of wealth?

---

8929. வெள்ளிவட்டிலும் வேண்டும் விளிம்பிலே பொன்னும் வேண்
டும்.
Too fond of the higher metals.

---

8930. வெள்ளெலும்பை நாய்கடித்ததுபோல.
Profitless labour.

---

8931. வெள்ளெருக்குக்கும் வெள்ளாட்டுப் பாலுக்கும் கள்ளக் கரு
மேகம் காணாமற் போம்.
Certain remedies for a certain disease.

---

8932. வெள்ளை கொடுக்க வினை தீரும்.
How evil is to be got rid of.

---

8933. வெள்ளைக்குக் கள்ளம் இல்லை.
The ignorant are guileless.

---

8934. வெள்ளைக்கு இல்லை கள்ளச் சிந்தை.
Similar to preceding.

---

8935. வெள்ளைப்பாவாடை விரித்தாற்போல.
Reminding one of a funeral.

---

8936. வெள்ளையும் சள்ளையுமாய் வந்தான், வீட்டுக்குச் சோற்றுக் கில்லை.
Show *versus* poverty.

8937. வெறிகாரன் குடியை விடான், வீண் புத்திக்காரன் பாவத்துக்கு அஞ்சான்.
A drunkard cannot be reformed.

8938. வெறிகொண்ட யானை மிதந்து திரிகிறாப்போலே.
In great rut.

8939. வெறிக்கிட்டு அழியேல்.
Don't waste on drunkenness.

8940. வெறு நாய் சந்தைக்குப் போனால் வெள்ளிக்கோலால் அடிபட்டு வரும்.
Going to market without money.

8941. வெறுங் காதுக்கு ஓலைக்காது மேல்.
A jewelled person superior to an unjewelled person.

8942. வெறுங்கைத் தட்டான் இரும்பு ஊதிச் செத்தான்.
Striving for lack of material.

8943. வெறுங்கஞ்சியைக் குடித்துவிட்டு மீசையிலே நெய்யைத் தடவிக்கொள்ளுகிறது.
Vain display of the poor.

8944 வெறுஞ்சளுக்கன் விருப்புக்காரன் வீட்டிலே சோற்றுக்கில்லை.
Compare preceding.

[தாளும்.
8945. வெறுஞ் சிறுக்கி அம்பலடையான் வீம்புக்குத் தாண்டி விழுந்
Similar to two preceding.

8946. வெறும்பூக்குத் தட்டான் இரும்பு ஊதிச் செத்தான்.
Another form of above.

8947. வெறுங் கை முழம் போடுமா ?
Nothing can be done without material.

8948. வெறும் சட்டி தாளிக்கிறாள்.
Cf.—He picks clean teeth.

8949. வெறும் புளி தின்றால் பற் கூசும்.
The effect of tamarind eating.

8950. *வெறும் பானையில் புகுந்த ஈ போல.*
Effort ending in disappointment.

---

8951. *வெறும் பயலுக்கு ஏற்ற வீறுப்பு.*
Vain show without any wealth.

---

8952. *வெறும்பிலுக்கு வண்ணான் மாற்று.*
Shining in borrowed feathers.

---

8953. *வெறும்வாய் மெல்லுகிற அம்மையாருக்கு நாழி அவல் அகப்பட்டதுபோல்.*
A gift to one who cannot use it.

---

8954. *வெறுவாய்க்கு இலைகெட்டவன் விறகுக்குப் போனால், விறகு கிடைத்தாற் கொடி கிடையாது, கொடி கிடைத்தால் விறகு சிடையாது.*
A fool's wild-goose chase.

---

8955. *வெறும் வாயைத் தின்றவனுக்கு வெள்ளை அவல் கிடைத்தது போல.*
Compare above.

---

8956. *வெற்றிலைக்குத் தண்ணீரும் வேசைக்கு மஞ்சளும்போல.*
Two sine qua nons.

---

8957. *வெற்றி பெற்றவன் சுத்த வீரன்.*
The victorious is the hero.

---

8958. *வெற்றிலைபோல் இருக்கும், மிகுந்த மரம் ஆகி விடும் புத்தியுள்ள பூமரத்துக்குப் பூவிரண்டு வக்கணையாம்.*
An enigmatic proverb.

---

## வே.

8959. *வேகத்தில் நாலுவிதம் உண்டு.*
Four kinds of speed.

---

8960. *வேகப் பொறுத்தது ஆறப் பொறுக்கக் கூடாதா?*
Let patience have her perfect work.

---

8961. *வேகாத வீட்டில் வேகும் கட்டை காமம்.*
A good definition of love.

---

8962. *வேகாத சோற்றுக்கு விருந்தாளிகள் இரண்டு பெயர்.*
Guests come when least prepared.

---

8963. வேகிற வீட்டில் பிடுங்குகிறது லாபம்.
Taking advantage of a person in distress.

8964. வேகிற வீட்டுக்கு வெட்டுகிற கெணறு.
Unpardonable delay.

8965. வேகிற வீட்டிற்குக் கணக்குப் பார்ப்பார் உண்டோ?
Necessity has no law.

8966. வேகிற வீட்டை அவிக்காமல் இருப்பார் உண்டோ?
It is most natural to relieve distress.

8967. வேங்கைப் புலியை வெள்ளாடுகள் சூழ்ந்தாற்போல.
Running headlong into destruction.

8968. வேசி அவல் ருசியை அறியாள், வெள்ளாட்டி என் ருசியை யறியாள்.
Prostitute *versus* slave.

8969. வேசி ஆடினால் காசு, வெள்ளாட்டி ஆடினாற் சவுக்கு.
What is suitable in one is unsuitable in another.

8970. வேசி உறவு காசிலும் பணத்திலுந்தான்.
A prostitute friendship is for money.

8971. வேசி உறவும் வெள்ளாட்டி அடிமையும் காசுப் பணத்தளவே காணலாம்.
Similar to preceding.

8972. வேசி காசு பறிப்பாள்.
Compare to preceding.

8973. வேசிக்குக் காசுமேலாசை விளையாட்டுப் பிள்ளைக்கு மண் [மேலாசை.
A postituto's chief end of life.

8974. வேசிக்கு ஆணை இல்லை, வெள்ளாட்டிக்குச் சந்தோஷமில்லை.
A prostitute never keeps her oath.

8975. வேசிமே லாசைப்படுகிறது வெள்ளெறும்பை நாய் கவ்வின தற்கொப்பாம்.
One can never win a prostitute's love.

8976. வேசியரும் நாயும் விதிநூல் வைத்தியரும் பாசம் அற்று நிற் பது காண்பார்.
Prostitutes are destitute of affection.

8977. வேசியைப் பெண்டுக்குலைத்துக்கொண்டால் வேறே வினை தேவை இல்லை.
To make a wife of a prostitute is a curse.

8978. வேடக்காரனுக்கும் ஆடக்காரனுக்கும் பகை, வேசிக்கும் தாசிக்கும் பகை.
Some are natural enemies.

8979. வேடக்காரா வேடம் விடடா, ஓடக்காரா ஓடம் விடடா.
Calling each man to perform his duties.

8980. வேடத்தில் நாலு விதம் உண்டு,
There are different sorts of disguises.

8981. வேடத்தினால் என்ன, வெண்ணீற்றினால் என்ன?
There is nothing in religious disguises.

8982. வேடமோ தவவேடம், மனதிலோ அவவேடம்.
A religious cloak for a wicked heart.

8983. வேடம் அழிந்துபோம்.
Religious hypocrisy cannot last.

8934. வேடம் கூடமும் கொள்ளாது.
There is no limit to religious disguises.

8935. வேடம் மூன்று வகை.
Compare above.

8986. வேடருக்கு அருமையான வேட்டை முசல் வேட்டை.
A favourite pastime for sportsmen.

8987. வேடருக்குத் தேன் பஞ்சமா, மூடருக்கு அடி பஞ்சமா?
Certain things easily procurable for certain persons.

8988. வேடர் இல்லா ஊரில் யாவும் குடி இருக்கும்.
Sportsmen necessary for a village.

8989. வேடர்களில் மலைவேடர் விசேஷம்.
Hill sportsmen extolled.

8990. வேடர் கையில் அகப்பட்ட தேன் கூண்டுபோல்.
Well within one's power.

8991. வேடிக்கைக்கு விலை உண்டா?
No payment for a fun.

8992. வேடிக்கைக்கு விலை இல்லை, கதைக்குக் காலில்லை.
Similar to preceding.

8993. வேட்டை நாயை ஏவி விட்டதுபோல.
Prompting an attack on the enemy.

8994. வேட்டை பெரிதென்று பேய் நாயைக் கட்டி இழுக்கிறதா?
Don't seek a demon's aid because the sport is exciting.

8995. வேட்டை ஆடிச் சிங்கம் தின்னும்.
How one can get one's food.

8996. வேட்டையில் பெரிய வேட்டை பன்றி வேட்டை.
The greatest sport is a pig hunting.

8997. வேட்டையில் பிரியமான வேட்டை சிக்காரி வேட்டை.
A favourite sport.

8998. வேண்டாப் பெண்டாட்டிக் கைபட்டாற் குற்றம் கால்பட்டாற் குற்றம்.
A hated person is accused without reason.

8999. வேண்டாத பேருக்கு ஈந்து என்ன, வேலையில் ஆற்றுத்தண்ணீர் விழுந்து என்ன?
Don't bestow gifts where they are not appreciated.

9000. வேண்டி வினை செயேல்.
Condemns wilful conduct.

9001. வேண்டி வேண்டிக் கொடுத்தாலும் வேண்டாம் என்றாற் போல.
Refusing a repeated offer.

9002. வேண்டுமென்றால் வீடு, வேண்டாம் என்றால் காடு.
Either a house or a forest.

9003. வேண்டும் என்று நூற்றால் வெண்ணெய்க் கட்டிபோல நூக்கலாம்.
Where there is a will, there is a way.

9004. வேதத்தில் நாலு விதம் உண்டு.
The four Vedas.

9005. வேதத்திற்கும் விக்கிரகபத்திக்கும் பகை.
The Vedas and household worship not in harmony.

9006. வேதத்தை அறியாத கிழவன் வீண்.
Condemns an old man ignorant of the Vedas.

9007. வேதத்திற்கு உலகம் பகை, உலகத்திற்கு ஞானம் பகை.
The world and the Vedas are opposed to each other.

9008. வேதம் ஆய்ந்து ஓதல் போதகர் முறைமை.
The duty of priests is to teach the Vedas.

9009. வேதம் பொய்த்தாலும் வியாழம் பொய்யாது.
The planets never fail though the Vedas may.

9010. வேதம் கேட்டவனை வேதம் கேட்டவர் என்பான் ஏன்?
Why call a thing by the same name?

9011. வேதம் ஏன், நியாயம் ஏன், விஸ்தாரம் கள்ளருக்கு?
Robbers have no religion.

9012. வேதம் ஒத்த மித்திரன்.
A reliable friend.

9013. வேதம் ஓதிய வேதியர்க்கு ஓர் மழை.
Vedic instruction brings down rain.

9014. வேதாரணியத்தில் பாம்பு கடிக்கிறதும் இல்லை, வேதாரணியத்தில் பாம்பு குறைகிறதும் இல்லை.
Both evil and good in sacred places.

9015. வேதியர்க்கு அழகு வேதமும் ஒழுக்கமும்.
The ornament of a priest.

9016. வேதியர்க்கு அழகு வேதம் ஓதுதல்.
Compare preceding.

9017. வேந்தனும் பாம்பும் சரி.
A king compared to a serpent.

9018. வேந்தன் சீறில் ஆந்துணை இல்லை.
There is no escape when the great enraged.

9019. வேப்பம் பழம் சிவந்தாலும் விரும்புமா கிளி?
Mere looks can't alter a person's character.

9020. வேப்பெண்ணெயும் ஆபத்துக்கு உதவும்.
Even a disliked person may be useful.

9021. வேப்பெண்ணெய் விற்ற காசு கசக்குமா ?
Merchandise cannot lessen the value of Money.

9022. வேப்பெண்ணெய் விருந்து எண்ணெய் அல்ல, மருந்து எண்
ணெய்.
You are not to mistake one thing for another.

9023. வேம்பில் தேனை விட்டால் கசப்பு நீங்குமா ?
Bitterness can't be removed by sweetness.

9024. வேம்பும் கரும்பாச்சே, வெற்றிலையும் நஞ்சாச்சே.
Radical changes.

9025. வேம்புக்குப் பல் அழகு, வேலுக்குப் பல் இறுகும்.
The characteristics of different trees.

9026. வேம்பும் சரி வேந்தனும் சரி.
The king compared to the margosa tree.

9027. வேம்பும் சரி பாம்பும் சரி.
The margosa compared to a snake.

9028. வேம்பை விரும்ப விரும்பக் கரும்பு.
Habit may turn dislike into a liking.

9029. வேரைக் கல்லி வெந்நீர் வார்த்த கதை.
Killing a tree at the roots.

9030. வேர் களைந்த மரம் பிழைப்பது எங்கே ?
Depriving one of his chief support.

9031. வேர் நின்றால் மரம் நிற்கும், வியாபாரம் நின்றால் செட்டி நிற் [பான்.
Root essential to a tree.

9032. வேர் மூலிகை, மரமூலிகை, காய் மூலிகை.
Different kinds of vegetable medicines.

9033. வேலமரத்து முள்ளும் ஆலமரத்துக் கனியும் ஆனேன்.
Deploring one's sad condition.

9034. வேலமரத்திற்கு நிழல் இல்லை, வெள்ளாளனுக்கு உறவு இல் [லை.
Yielding no shelter.

9035. வேலம் பட்டை மேகத்தை நீக்கும், ஆலம் பட்டை பித்தத்
தை அடிக்கும்.
Certain medicinal barks.

9036. வேலி ஒன்றுக்குப் பன்னிரண்டு கலம் விளைப்பாடு.
An agricultural truth.

9037. வேலி ஒன்றுக்குப் ஈரணை மாடும், இரண்டு ஆளும் வேண்டும்.
Similar to preceding.

9038. வேலிக்கு ஓணான் சாட்சி, வெந்ததுக்குச் சொக்கன் சாட்சி.
Witnesses according the case in hand.

9039. வேலிக்குப் போட்ட முள் காலுக்கு வினையாச்சுது.
What was intended for use causing injury.

9040. வேலிதானே பயிரை மேய்ந்தால் விளைவது எப்படி?
How is one to thrive when one's relations pray on one?

9041. வேலியும் நாலு பலன் உண்டு.
Even the apparently useless ones have their uses.

9042. வேலிப்புறத்திலே கண்ணும் மாமியார் தலையிலே கையும்.
Playing false to one's guardian.

9043. வேலிவைத்துக் காப்பாற்றாத கன்றும், ஆலைவைத்து ஆட்டாத வாணியனும் சரி அல்ல.
Certain unproductive efforts.

9044. வேலை அற்ற அம்பட்டன் மகளைப் பிடித்துச் சிரைத்தானாம்.
The idle man tempts the devil.

9045. வேலை அதிகம் சம்பளம் கொஞ்சம்.
Reward not suited to labour.

9046. வேலை இல்லா ஊருக்கு ராஜா ஏன், பாம்பு இல்லா ஊருக்குக் கீரிப்பிள்ளை ஏன்?
Labour and leader.

9047. வேலை இல்லாதவனுக்குச் சாப்பாடு என்னத்திற்கு, எச்சில் சோற்றுக்காரனுக்கு டம்பம் என்னத்திற்கு?
Work and food go together.

9048. வேலை இல்லாத அம்பட்டன் ஆட்டைச் சிரைத்தானாம்.
Compare above.

9049. வேலை ஏன், பிள்ளை ஏன், வேலை இல்லாருக்குச் சாப்பாடு ஏன்?
Similar to above.

9050. வேலைக்கள்ளிக்குப் பிள்ளைமேல் சாக்கு, வெட்கம் கெட்ட நாரிக்கு அகமுடையான் மேலே சாக்கு.
Servants fond of pretexts.

9051. வேலைக்கள்ளிக்கு வேளைக்குக் காற் படி, வீண் கட்டைக்கு வேளைக்கு அரைப் படி.
The idle better off than the industrious.

9052. வேலைக்கள்ளிக்குப் பிள்ளைமேலே சாக்கு.
Compare above.

9053. வேலைக்காரியாய் வந்தவள் வீட்டுக்காரியானால் அவள் அதிஷ்டம்.
Promotion comes by good luck.

9054. வேலைக்காரி என்று வேண்டிய பேர்கள் கேட்டார்கள், குடித்தனக்காரி என்று கொடுக்கமாட்டோம் என்றார்கள்.
Names affecting one's position.

9055. வேலைக்குத் தக்க கூலி, வேசிக்கடுத்த காசு.
Wages according to work.

9056. வேலைக்குத் தக்க கூலி விருப்பத்துக்குத் தக்க கூர்மை.
Compare preceding.

9057. வேலைக்கோ சம்பளம், ஆளுக்கோ சம்பளம்?
Wages for work, not the workman.

9058. வேலை செய்தாற் கூலி, வேஷம் போட்டாற் காசு.
Compare above.

9059. வேலை செய்யாத பிள்ளையைக் கையில் வை, வேலை செய்கிற பிள்ளையைக் காலில் வை.
Unfair treatment.

9060. வேலை பார்த்துப் பெண்ணைக்கொள்.
A good wife's qualification.

9061. வேலை மினக்கெட்ட அம்பட்டன் பெண்டாட்டித் தலையைச் சிரைத்தானும்.
Compare above.

9062. வேலை மினக்கெட்டு அம்பட்டன் பூனைக்குட்டியைச் சிரைத்தானும்.
Similar to preceding.

9063. வேலை முத்தோ பிள்ளை முத்தோ?
Work preferred to workman.

9064. வேலையைப் பார்த்துப் பெண்ணை எடு, சாலையைப் பார்த்து ஊருக்கு நட.
Samilar to above.

9065. வேலையைப் பார்த்துக் கூலி கொடு.
Compare above.

9066. வேல் வைத்துப் பயிர் ஆக்குவோர் இல்லை.
Nobcdy cultivates a useless tree.

9067. வேழத்திற்குச் சிறிதும் பெரிதாய்த் தோன்றும்.
How an elephant views things.

9068. வேழத்தை ஒத்த வினை வந்தால் தீர்வது எப்படி ?
A great calamity—a great remedy.

9069. வேழம் முழங்கினாற்போல.
Making a roaring noise.

9070. வேளை அறிந்து பேசு, நாளை அறிந்து பயணம் பண்ணு.
Speak a word in season.

9071. வேளையும் நாழிகையும் வந்தால் வேண்டாம் என்றாலும் காது.
Wait for God's appointed time.

9072. வேளையோ அவவேளை, வீட்டிலோ அன்னம் இல்லை.
A double calamity.

9073. வேளைக்கு அரைக் காசு ஆயிரம் பொன் ஆகும்.
A pie in need is wealth indeed.

8974. வேளைக்குத் தகுந்த வேஷம்.
The time-server's ways.

9075. வேளைக்கு உதவாத பிள்ளை தாழங்காய்க்குச் சரி.
Condemns an unsympathetic child.

9076. வேறே வினை தேவை இல்லை, வினைதீர்த்த கோவிலுக்குப் போகவேண்டியதில்லை.
An ironical saying.

9077. வேனலுக்குக் கன மழை வரும், வேந்தனுக்குக் கன சனம் சேரும்.
Great heat causing rain.

9078. வேனிற் காலத்திற்கு விசிறி, ஆன காலத்திற்கு ஆச்சாவும் தேக்கும்.
Seasonable aids.

---

## வை.

9079. வை என்ற எழுத்தே பெயரும் வினையும் ஆகும்.
Doing a double duty.

---

9080. வைகறைத் துயில் எழு.
Early rising urged.

---

9081. வைகாசி மாதம் ஆற்றில் தண்ணீர்.
Being a rainy season.

---

9082. வைகுண்டம் என்பது திரு மா நகரம்.
Heaven defined.

---

[வேணுமா?
9083. வைகுண்டதிற்குப் போகிறவனுக்கு வழிகாட்டிக் கொடுக்க
He knows his own way.

---

9084. வைகை ஆற்றுத் தண்ணீர் வேகம் அதிகம்.
A Tinnevelly proverb.

---

9085. வைகை ஆற்று வெள்ளத்தில் பாலம் நிலைக்கிறது இல்லை.
The Vaigai flood is a sweeping one.

---

9086. வைகை ஆறு தாமிரபருணிக்கு மத்திபம்.
The Vaigai *versus* the Tamiraparani.

---

[யும்.
9087. வைகைக் கரைக்கு வார்த்தையும் கங்கைக்கரைக்குக் கீர்த்தி
The Vaigai *versus* the Ganges.

---

9088. வைக்கல் எடுத்த வழியாயிருக்கிறது.
A self-evidencing way.

---

9089. வைக்கல் எடுத்த காசுக்கு வழக்காடி கிற்கையில் பிரவச்சேரி மணியம் வாங்கித் தரச்சொன்னானும்.
Inconsistent behaviour.

---

9090. வைக்கத் தெரியாமல் வைக்கோற் போரிலே வைத்தானும்.
Hiding a valuable in the wrong place.

---

[கலாமா?
9091. வைக்கத் தெரியாமல் வைத்துவிட்டு,வந்தவரை எல்லாம் கேட்
A foolish forgetfulness.

---

9092. வைக்கோற்கட்டுக்காரனை ஒப்புக்குக் கட்டி அழுதாற்போல.
Seeking sympathy from the wrong person.

9093. வைக்கோற் பட்டையில் கட்டின நாய்.
Not well secured.

9094. வைக்கோல் பஞ்சமா, வறட் பசு பஞ்சமா?
Which is the dearer—straw or cow?

[கும்.
9095. வைக்கோல் தின்னும் குதிரை வீட்டுக் கூரையையும் பிடுங்
An omnivorous child.

[அதிகம்.
9096. வைக்கோல் தின்கிற மாட்டுக்குப் பால் கொஞ்சம், மதுரம்
A cow that is fed on straw.

9097. வைக்கோல் தின்கிற குதிரைக்கு வேகம் அதிகமா?
A horse that is fed on straw.

9098. வைக்கோற் கூரையிலும் விழற் கூரை வெகு நாள் இருக்கும்.
*Viral versus* straw roofing.

9099. வைக்கோற் கூளமும் ஒரு வேளைக்கு உதவும்.
Even a poor fellow may be useful.

9100. வைசியரும் சூத்திரரும் இருந்து அல்லோ பிராமணரும் க்ஷத்திரியரும் வருவார்கள்.
A caste question.

9101. வைசியர்களில் பூவைசியர் சிரேஷ்டம்.
The agricultural class extolled.

9102. வைசூரி வந்தவர்கள் அம்மா என்று கூப்பிட வேண்டும்.
An experience of small-pox.

9103. வைதாரை வாழவைக்கும் வாழ்த்தாரைத் தாழவைக்கும்.
Contradictory behaviour.

9104. வைதிகம் லௌகிகம் இரண்டும் வேண்டும்.
Spiritual and temporal—both necessary.

9105. வைதிகம் என்றால் தெய்வ சமயம்.
The Spiritual defined.

9106. வைதிகம் ஆய்ந்து அறி.
A good advice.

9107. வைத்ததற்குமேலே வழிஇல்லை, பிச்சைக்குப் போகச் சுரைக் குடுக்கை இல்லை.
You can't get more than you have saved.

9108. வைத்தது உண்டானால் கெட்டதும் உண்டாகும்.
Saving and losing go together.

9109. வைத்தது கண்டது சொல்லாதே.
Don't divulge your secrets.

9110. வைத்தவன் எடுக்க வேண்டும், வழி அறியாதவன் போகவேண்டும்.
Who knows the secret must reveal it.

9111. வைத்தால் குடுமி, சிரைத்தால் மொட்டை.
Going to opposite extremes.

9112. வைத்தியன் பெரிதோ, வாத்தி பெரிதோ ?
Teacher *versus* physician.

9113. வைத்தியனுக்கும் வாத்திக்கும் பேதம் இல்லை.
Teacher and doctor alike.

9114. வைத்தியன் எல்லாருக்கும் பெரிது.
The doctor is superior to all.

9115. வைத்தியம் வேண்டாதார் உலகில் இல்லை.
Everybody needs doctoring.

9116. வைத்தியம் வாயாடிக்குப் பலிக்கும்.
Medicine and the talkative.

9117. வைத்தியம் எல்லாம் நம்பிக்கையாற் பலிக்கும்.
Faith necessary for the efficacy of medicine.

9118. வைத்தியனுக்கும் அஞ்சவேண்டும், வம்பனுக்கும் அஞ்சவே[ண்டும்.
Because they are capable of doing harm.

9119. வைத்தியமோ, பைத்தியமோ ?
Medicine is madness.

9120. வைத்தியன் சொன்னது எல்லாம் மருந்து.
Whatever a doctor prescribes is medicine.

9121. வைத்தியனுக்குத் தன் அவிழ்தம் பலிக்காதாம்.
A doctor cannot cure himself.

9122. வைத்தியன் தகப்பன் போல.
A doctor's father.

9123. வைத்தியனே பெரிது என்பார் சிலர், வாத்தியே பெரிது என்பார் சிலர்.
Compare above.

9124. வைத்தியன் பாராத நோய் தீருமா ?
No cure without a doctor.

9125. வைத்தியன் பிள்ளை நோயினால் அல்ல, மருந்தினால் சாகும்.
Because he administers too much medicine.

9126. வைத்தியனுக்கு ஊரார் யாவரும் சிநேகிதர்.
The whole village needs his services.

9127. வைத்தியத்தில் இரண வைத்தியமும், வயதில் யௌவனமும் நல்லது.
Surgery commended.

9128. வைத்தியம் செய்தவன் எல்லாம் வைத்தியன்.
Whoever treats a sickness is a doctor.

9129. வைத்தியன் தலைமாட்டில் இருந்து அழுகிறதுபோல.
A doctor mistaking his occupation.

9130. வைத்தியம் கொஞ்சமாகிலும் தெரியாத பேர்கள் இல்லை.
Everybody knows a little medicine.

9131. வைத்தியன் மருந்திலும் கைமருந்தே நலம்.
Home remedies better than doctor's.

9132. வைத்தியன் பெரிதோ, மருந்து பெரிதோ ?
Medicine *versus* Doctor.

9133. வைத்தியன் பேச்சு காலில் ஒரு பங்கு.
Believe only a fourth of a doctor's statement.

9134. வைத்தியனுக்கு வந்தது அவன் தலையோடே.
A doctor's sickness is generally fatal.

9135. வைத்திய சாஸ்திரம் சாஸ்திரங்களில் விசேஷம்.
Medical science extolled.

9136. வைத்தீசுரன் கோவிலுக்குப் போயும் வயிற்று வலி தீர இல்லை.
Complaining of an incurable disease.

9137. வைதிகர் என்றால் பார்ப்பாருக்கு பெயர்.
Brahmans are said to be spiritual people.

9138. வைப்பு வரப்பு வைத்துப்பார்க்க வேண்டும்.
Saving and cultivation recommended.

9139. வையகத்து உற்றவன் மெய்யகம் உற்றவன்.
A good name is a good body.

9140. வையகத்துக்குத் துணை வரதன் கழல் இணை.
A religious saying.

9141. வையகம் ஒழியும் வான் ஒழியும் வல்லவர் வசனம் ஒழியாது.
The word of the great all-powerful.

9142. வையகத்தில் எல்லோரும் ஒரு போக்கு அல்ல.
All people are not alike.

9143. வையகத்தில் பொய் சொல்லாதவன் இல்லை.
Lying a universal sin.

9144 வையத்துள் நீதி செய்யத்தக்கது.
Justice urged.

9145. வையத்தில் உயர்ந்தோர் சிலர் தாழ்ந்தோர் பலர்.
High and low unequal in the world.

9146. வையத்தில் உயர்ந்தோர்க்கு இரை தாழ்ந்தோர்.
The rich preying on the poor.

9147. வையத்தில் உப்புக்கு ஏமாறின பேர் உடம்புக்கும் ஏமாறுவா [ர்கள்.
People are very fond of salt.

9148. வையத்தில் உப்பில்லாத பேர்க்கு உடம்பு இல்லை.
Similar to preceding.

9149. வையத்தில் உடம்பு இல்லாதபேர்க்கு உப்பு வேண்டாம்.
Essential nature of salt.

9150. வையத்தில் உப்பும் வேண்டும் உடலும் வேண்டும்.
Compare preceding sayings.

9151. வையத்தில் உடம்பு இல்லாவிட்டாலும் உடைவேண்டும்,
பணம் இல்லாவிட்டாலும் கனம் வேண்டும்.
Appearance all-important.

9152. வையத்தில் மேலான பேர்க்குத் தாழ்மையான மனது இருக்க வேண்டும்.
Greatness and humility go together.

9153. வையத்தில் வாழ்வாங்கு வாழ்பவன் தெய்வத்துள் வைக்கப் [படும்.
A saying from the Kural.

9154. வையத்தில் நல்லோர் ஒருவரைக் கண்டது இல்லை.
"There is none righteous, no, not one."

9155. வையத்தில் நெல்லுக்கு இறைத்த நீர் புல்லுக்கும் பாயும்.
The evil profit by the good.

9156. வையத்தில் நெல் அரிசி வேண்டாதாரும் உண்டு, புல் அரிசி சிக்காதாரும் உண்டு.
People are of different sorts.

9157. வையத்தில் சைவனுக்குச் சைவன்மேல்.
One tries to excel another.

9158. வையத்தில் தந்தையினும் தாய் விசேஷம்.
Mother more beloved than father.

9159 வையத்தில் தெவிட்டாத பொருள் அன்னமும் தண்ணீரும்.
One never gets tired of rice and water.

9160. வையத்தில் நல் வினையால் ஆகாதது தீவினையால் ஆகுமா?
Evil compared with good.

9161. வையத்து மனிதன் நாலு வகை.
Men are not all alike.

9162. வையம் பகையில் ஐயம் உண்டு.
Unpopularity must have a cause.

9163. வையம் தோறும் தெய்வம் தொழு.
Urges Divine worship.

9164. வையம் ஏற்றின் ஐயம் இல்லை.
Reverse of above.

9165. வையம் ஒத்தால் ஐயம் இல்லை.
Live in harmony with your surroundings.

9166. வையம் புகழ்ந்தால் ஐயம் இல்லை.
Compare above.

9167. வையம் பெரிதானாலும் வனமு உள்ள இடம் கொஞ்சம்.
There is more arable than desert land.

9168. வையம் பெரிது, அதில் வருத்தமும் பெரிது.
There is always trouble in the world.

9169. வையம் கெட்டால் ஐயம் இல்லை.
Compare above.

9170. வைய வைய வைரக்கல், திட்டத் திட்டத் திண்டுக்கல்.
One proof against abuse.

9171. வையார் ஊசியைக் குறச்சேரியில் விற்றாற்போல.
Doing something superfluous.

9172. வைரத்தை வைரங்கொண்டே அறுக்க வேண்டும்.
Diamond cuts diamond.

9173. வைரம் மனதில் வையாதே.
Condemns ill-will.

9174. வைரம் கொண்டவன் வைரப்பொடி தின்று சாகிறான்.
Ill-will is suicidal.

9175. வைராக்கிய சதகம் சதகங்களில் விசேஷம்.
Heroic songs praised.

9176. வைராக்கியம் பகை முதலிய துர்க்குணங்களில் விசேஷம்.
Deep hatred condemned.

9177. வைராகி துறவிகளில் விசேஷம்.
A fakir extolled.

9178. வைவாருக்கு இன்பம் இல்லை, பொறுத்தாருக்குத் துன்பம் இல்லை.
No joy to the slanderer, no sorrow to the meek.

## வெள.

9179. வெளவாலுக்கு ஒரு கனிக்கு நூறு கனி நஷ்டம்.
Bats destroy fruit.

9180. வெளவாலுக்கு மரமே கதி, அதன் குஞ்சுக்கும் அதுவே கதி.
Bats live on trees.

9181. வெளவாலுக்கு எது தூரம்?
They can fly freely.

9182. வெளவாலுக்கு இரவில் கண் தெரியும்.
Bats can see well in the night.

9183. வெளவாலுக்கு நீளவும் தெரியும் குறுகவும் தெரியும்.
Ability to expand and contract.

9184. வெளவாலைத் தின்றாலும் அணிலைத் தின்னல் ஆகாது.
Bats *versus* squirrels.

9185. வெளவாலைக் கொன்றாலும் பிடியை விடாது.
Bats never let go their hold.

9186. வெளவாலைப் பட்சி என்னலாமா ?
It looks like an animal.

9187. வெளவாலோடு அணிற்பிள்ளை சேருமா ?
Compare above.

9188. வெளவாலோ சிறிது, அதன் அடியோ வலிது.
Small people doing great mischief.

9189. வெளவால் அடித்துத் தின்னும், அணில் கடித்துத் தின்னும்.
Different people act differently.

9190. வெளவால் அடிக்குப் பயப்படலாமா ?
Don't fear apparent resistance.

9191. வெளவால் கூட்டம் கூட்டமாக இருக்கும்.
They are gregarious animals.

9192. வெளவால் தலை நரித் தலைபோல்.
That is why they are called flying-foxes.

9193. வெளவால் தின்னாத பழம் இல்லை.
They are very fond of fruits.

9194. வெளவால் போலத் தொங்குகிறான்.
Hanging head downwards.

9195. வெளவால் அடித்த பழமும் அணில் கடித்த பழமும் தின்னும் படி ஆகுமா ?
They eat only ripe fruit.

9196. வெளவால் அடைகிற வீட்டில் குடியிருப்பது எப்படி ?
It is so dirty and miserable.

9197. வெளவி அணில் தொத்துகிறதுபோல.
Imitating a squirrel.

---

9198. வெளவிச் சேர்த்த பேர்க்குப் பொருள் உண்டு.
Plunder may bring in wealth.

---

9199. வெளவில் குடி இருக்கலாமா ?
Don't stay where you steal.

---

9200. வெளவி வெளவிச் சேர்த்தாலும் மற்றவர்க்கு வைத்து ஒழிவான்.
Ill-gotten treasure is soon lost.

---

9201. வெளவின பேர்க்கு முடிவது சுருக்கு.
Thieves were formerly hanged.

---

9202. வெளவிய கருமம் எண்ணித் துணி.
Perseverance recommended.

# APPENDIX.

9203. அகத்துக்கழகு ஆமுடையாள்.
The wife is the ornament of the house.

9204. அச்சில்லாத் தேர் ஓடவும், ஆம்புடையான் இல்லாதவள் பிள்ளை பெறவும் கூடுமோ?
Natural impossibilities.

9205. அடி ஆலங்காய், குத்து கொழுக்கட்டை.
Proof to any amount of beating.

9206. அடி ஓட்டையா யிருந்தாலும் கொழுக்கட்டை வேகவேண்டியதுதானே.
Unreasonable demand.

9207. அடித்தாலும் புருஷன் புடைத்தாலும் புருஷன்.
Devotion to one's husband.

9208. அடுத்த வீட்டுக்காரி பிள்ளை பெற்றாளென்று அம்மிக்குழவி எடுத்து குத்திக் கொண்டாள்.
A barren woman's envy.

[கவலை?
9209. அண்டை வீட்டு சப்பிக்கும் எதிர்த்த வீட்டு காமாட்சிக்குமா
Two great slanderers.

9210. அண்ணாளன்கை அப்ஸரஸ்திரீ.
A celestial woman—sarcastic.

9211. அப்பாஜி! உப்பில்லை.
Said of a smart reply.

9212. அந்தப் பருப்பு இங்கு வேகாது.
Expressing an impossibility,

9213. அப்பா அப்பா என்றால் ரங்கா ரங்கா என்பான்.
Mistaking one thing for another.

9214. அயலான் வாழ்ப் பகலே சரக்கெடுப்பது.
Unpardonable enemy.

9215. அயல்வீட்டு நெய்யே, என் பெண்டாட்டிக் கையே.
One joking one's wife.

9216. அரசன் நினைத்ததன்றோ அழிவு.
Tamil opinion of Royal displeasure.

9217. அருமை அறியாதவனிடத்தில் போனால் பெருமை குறைந்துபோகும்
Worth is lost by seeking the worthless.

9218. அருள் இல்லார்க்கு அவ்வுலகு இல்லை.
No heaven to the merciless.

9219. அலை அடங்கிய பின் ஸ்நானஞ் செய்வதுபோல்.
Losing a good opportunity.

9220. அலை மோதும் போதே தலை முழுகிறது.
Availing oneself of a good opportunity.

9221. அவலைச் சாக்கிட்டு உரலையிடிக்கிறது.
Compare above.

9222. அவள் மௌனப்பலகாரம் பண்ணுவாள்.
Said of a very wicked woman.

9223. அவன் அசையாமல் அணு அசையாது.
Divine omnipotence.

9224. அளவிட்டவனைக் களவிடலாமா?
Condemns ingratitude.

9225. அறக்கப் பறக்கப் பாடுபட்டாலும் படுக்கப் பாயில்லை.
Great labour but no gain.

9226. அறச் செட்டு முழுநஷ்டம்.
Great miserliness leads to great loss.

9227. அறுத்த விரலுக்குச் சுண்ணாம்பு தடவமாட்டான்.
Negligent of one's own needs.

9228. அற்ப சுகம் கோடி துக்கம்.
A little pleasure brings great pain.

9229. அற்ப சகவாசம் பிராண சங்கடம்.
Compare above.

[லோ

9230. ஆக்கப்பிள்ளை நம்மாத்தில், அடிக்கப்பிள்ளை அயல் வீட்டி
Partial treatment of children.

9231. ஆசையுள்ள இடத்தில் பூசை நடக்கும்.
Love begets love.

---

9232. ஆடு தன் ராஜனைப்போல்.
Being one's own master.

---

9233. ஆண்டி சொன்னால் தாதனுக்கு புத்தி எங்கே போயிற்று?
One must rely on one's own sense,

---

9234. ஆத்திரப் பட்டவனுக்கு அரிக்கன் பெட்டியிலும் கை நுழையாது.
Great haste condemned.

---

9235. ஆயத்துக்குப்பயந்து ஆற்றல் நீந்தினதுபோல.
Avoiding Scyila and falling into Charybdis,

---

9236. ஆந்தை பஞ்சையாயிருந்தாலும் சகுனத்திற் பஞ்சையில்லை.
Frugal in good and liberal in evil things.

---

9237. ஆயிரங்காலே அரைக்காற்பணம்.
A minute account.

---

9238. ஆயிரம் ரூபா முதலில்லாமல் பத்து ரூபா வட்டி நஷ்டம்.
Working without capital discouraged.

---

9239. ஆளுக்கொத்த ஆசாரமும் ஊருக்கொத்த உபசாரமும் வேண்டாமா?
Manners according to condition and place.

---

9240. ஆளுக்குத் தகுந்த கொட்டு கொட்டுகிறது.
Dancing to one's tastes.

---

9241. ஆளை அடித்தால் அரைப்பணம்.
No man is altogether worthless.

---

9242. ஆளைப் பார்த்துக் கூலி கேட்கிறது, அவனைப்பார்த்துப் பெண்டு கேட்கிறது.
Taking advantage of the person before you.

---

9243. ஆளைக் கண்ட சமுத்திரம்.
A great mystery.

---

9244. ஆறு கொண்டது பாதி, தூறுகொண்டது பாதி.
Loss by different causes.

9245. ஆறும் நாலும் பத்து, நாலும் ஆறும் பத்து.
Different ways of looking at the same thing.

9246. ஆனால் பிரும்ம ரிஷி, ஆகாவிடில்.
Either one or another.

9247. இடத்தைக் கொடுத்தால் மடத்தைப் பிடுங்கிறாய்.
Taking advantage of one's kindness.

9248. இட்டதெல்லாம் பயிராமா, பெற்றதெல்லாம் பிள்ளையாமா ?
All that glitters is not gold.

9249. இட்டுக் கெட்டார் உலகனில் இல்லை.
Benefaction ruins none.

9250. இணங்கினால் தித்திப்பு, பிணங்கினால் கசப்பு.
Agreement *versus* disagreement.

9251. இரண்டு வீட்டு விருந்தாளி கெண்டை எறிச் செத்தாள்.
A sad end to a well treated guest.

9252. ஈசன் எப்படி, அப்படி தாசன்.
As is the God so is the worshipper.

9253. ஈரத் துணியைப் போட்டுக் கழுத்தை வெட்டுவான்.
A most unreliable character.

9254. ஈனருக் கிடங்கொடுத்தால் இல்லிடம் எல்லாம்பாழ்.
Intercourse with the base is injurious.

9255. உடும்பு வேண்டாம் கையை விடு.
Seeking freedom from control.

9256. உடையவன் போகா வேலை ஒரு முழங்கட்டை.
Where the owner is negligent, loss is certain.

9257. உடையவன் பொறுத்தாலும், உடையவன் வீட்டுநாய் பொறுக்காது.
A benefactor is often spoilt by his menials.

9258. உழுகிறகாலத்தில் ஊர்திரிந்துபோய், அறுக்கிறகாலத்தில் அரிவாளை எடுத்துக்கொண்டு புறப்பட்டால்.
Reaping where you have not sown.

9259. ஊசிபோல தொண்டையும் உஷ்ட்டேரிபோல வயிறும்.
Delicate and yet gluttonous.

9260. ஊர்க்கடனும் உள்ளங்கைச் சிரங்கும் போல.
Debt compared to a canker.

9261. எட்டாப்பழத்தைப் பார்த்துக் கொட்டாவி கொள்வதுபோல.
Coveting what is beyond your reach.

9262. எட்டாத பழம் புளிக்கும்.
The fox's sour grapes.

9263. எருமைமாட்டைத் தண்ணீரில் போட்டுக்கொண்டு விலைபார்க்கிறது.
A wrong method of estimating.

9264. எலியும் பூனையும் போல்
At perpetual variance.

9265. எழுதா விதி அழுதால் தீருமா ?
Weeping cannot overcome fate.

9266. எள்ளுடன் ஏதோ காயு தென்பார்கள்.
Seeking good company.

9267. எள்ளு குறுணி, எலி மூக்கு குறுணி.
Many plunderers for a small thing.

9268. எட்டில் சர்க்கரை என்றெழுதி நக்கினால் தித்திக்குமா ?
Ideas are not facts.

9269. எரியின்மேல் கோபித்துக் கால் கழுவாமல் போனதுபோலும்.
Self-injuring anger.

9270. ஒரு பொய்யை மறைக்க ஒன்பது பொய் சொல்லவேண்டும்.
A lie needs twenty legs.

9271. ஒரு கண்மூடி, ஒருகண் விழிக்கிறவன்.
Pretending to be asleep and yet awake.

9272. ஒரு குருவி இரை எடுக்க ஒன்பது வாய் திறக்க.
One bread winner for many.

9273. ஒரு முழுக்கிலே மண் எடுக்க முடியுமா ?
Nothing can be achieved by leaps and bounds.

9274. ஒருவர்க் கிடுக்கண் வந்தால் அடுக்கடுக்காய் வரும்.
Misfortunes coming in a troop.

9275. ஒரு வீட்டங்களும் பிடாரி.
A haunted house.

9276. கங்கா ஸ்நானம், துங்கா பானம்.
The Ganges *versus* the Tungabudra.

9277. கடுகு மலை ஆச்சு, மலை கடுகாச்சு.
Radical changes.

9278. கடைக்குக் கடை ஆனதாளி யென.
A uniform defect.

9279. கண்கெட்ட பின் சூரிய நமஸ்காரம்.
Doing a duty when too late.

9280. கரும்புள்ள போதே ஆலை ஆடிக்கொள்.
Compare above.

9281. கரும்பு கோணி யிருந்தாலும் தித்திக்கும்.
Character not appearance essential.

9282. கழுவுக்கேற்ற கோமட்டி.
Well-matched.

9283. கழுகுக்கு மூக்கில் வெயர்ப்பது போல்.
A usual comparison.

9284. கள் உண்ட குரங்கு.
In great intoxication.

9285. கறுப்பு மாடு, கால் மாடு.
Black cows unpopular.

9286. கன்றை விட்டுக், கட்டுத் தறியைப் பிடிப்பதுபோல.
Seizing the wrong party.

9287. காக்கையின் கழுத்தில் பனங்காயைக் கட்டினதுபோல.
Imposing too heavy a burden.

9288. காசில்லாதவன் முழுதும் போட்டது போல.
Cheap charity.

9289. காசுக்குப் பத்து பெண்சாதி, கொசுறுக்கு ஒரு குத்து.
Cheapness of women.

9290. காசுக்கு இரண்டு, பீசுக்கு நான்கு.
Great cheapness.

9291. காட்டாளுக் கொருமூட்டாள், அடுப்பங்கட்டைக்கு ஒரு து
டைப்பக்கட்டை.
One menial employing another.

9292. காணப்போவது ஒருதரம், கும்பிடப்போவது ஒருதரமா ?
Why double labour ?

மூக்கி.
9293. காணாது கண்ட கம்பங்கூழைச் சிந்தாது குடியடி சில்லி
A good advice to a novice.

9294. காப் பொன்னிலும் மாப்பொன் திருடுவான்.
A goldsmith's proverbial dishonesty.

9295. காலங் கண்ட பெருச்சாளி.
An old rogue.

9296. காலைக் கேட்டுக் கொண்டா நடக்கிறது ?
Why ask the permission of an inferior ?

9297. காளை போனவழியே கயிறுபோகும்.
A child following its mother's example.

9298. காள்வாய்க்கு மழையும், கைம்பெண்சாதிக்குப் பிள்ளையும்.
Things not to be expected.

[கொள்.
9299. காற்றுள்ள போது தூற்றிக்கொள், கதவுள்ளபோது சாற்றிக்
Make use of a good opportunity.

9300. கிடாவும் காளையும் பிணைத்தற் போல்.
An unfruitful intercourse.

9301. கிழவன் கொடுத்த பணத்திற்கு நரை உண்டா ?
A gift is not affected by the giver.

9302. கிழவியைப் பாட்டியெனக் கேட்க வேண்டுமோ ?
Doubting where one should not doubt.

9303. குடல் கூழுக்கழ, கொண்டை பூவுக்கழுகிறதா ?
Vanity in the midst of poverty.

9304. குட்டக் குட்டக் குனிகின்றவன் மடையன், குனியக் குனி
யக் குட்டுகிறவன் மடையன்.
Two kinds of fools.

9305. குதிரை முட்டை.
Compare *Rara avis.*

9306. குத்தாத காதுக் கூனம் இல்லையே.
Some defects are self-acquired.

9307. குந்தினையா குரங்கே, உன் சந்தடி அடங்கே.
A boisterous fellow calming down.

9308. குப்பை உயரும், கோபுரம் தாழும்.
The great humbled, and the humble exalted.

9309. குரங்கின் கைப் பூமாலை.
A good thing in an unworthy hand.

9310. குரங்கின் தலையில் கரகம்வைத்துக் காளி கும்பிட்டதுபோல.
Honouring an unworthy person.

9311. குரங்கெல்லாம் ஒரு முகம்.
There is a family likeness among monkeys.

9312. குழந்தையின் முகமும் வாடக் கூடாது, குலுக்கையின் நெல்லும் குறையக்கூடாது.
Fond of her child and yet fond of her rice.

9313. குளத்துடன் கோபித்துக் கால் கழுவாததுபோல.
Compare above.

9314. கூடிருக்கக் குருவிபோன மாயம் என்ன?
A mystery needing explanation.

9315. கூட்டோடு கைலாயம்.
An unreasonable expectation.

9316. கெடுபவருக்குக் கெடுமதி பிடரியில்.
Want of sense a sure precursor of ruin.

9317. கைப்பண்டம் கருணைக்கிழங்கு.
Dislike of what is possessed.

9318. கொக்குத் தலையில் வெண்ணெய் வைத்துப்பிடிப்பதுபோல.
Defeating your own ends.

9319. கொடாத இடையன் சினை ஆட்டைக் காட்டினதுபோல.
Pretexts for refusals.

9320. கொச்சியிலே குறுணி மிளகென்றால் இங்கென்ன?
No connection between things which are apart.

9321. கொண்டானும் கொண்டானும் சம்பந்தி, கொட்டவந்தவன் அம்பலம்.
When relatives agree, strangers will be rejected.

9322. கொண்டாட்டம் போய் திண்டாட்டம் ஆச்சுது.
Merriment ending in misery.

9323. கொண்டவன் அடிக்க, கொழுந்தார் மேல் விழுந்தாளாம்.
Spending one's wealth on the wrong person.

9324. கொல்லைத் தலைமாட்டிருப்பதுபோல.
Absorbed with one's own interests.

9325. கொழுக்கட்டை தின்ற நாய்க்குக் குறுணிமோர் குருதட்சணை.
Even a wrong act must be completed.

9326. கொழுத்தவனுக்குக் கொள்ளும், இளைத்தவனுக்கு எள்ளும்.
Treat a man according to his condition.

9327. கொள்ளியை இழுத்துப் போட்டால் கொதிக்கிறது அடங்கி விடும்.
Stop the cause and stop the effect.

9328. கோவிலில் கொட்டு முழக்கு, கடையில் பாக்கு வெற்றிலை.
A mock ceremony.

9329. சமயம் வாய்த்தால் நமனையும் வெல்லலாமே.
A good opportunity essential.

9330. சமுசாரமோ, சாகரமோ?
The cares of domestic life.

9331. சவதியில் கல்லிட்டெறிந்தால் மேலே தெறிக்கும்.
Some causes followed by immediate effect on the agent.

9332. சிரித்தையோ, சீரைக்குலைத்தையோ?
Excessive laughter condemned.

9333. சின்ன வீட்டிலே செய்தது சேமந்ததிலே தெரிய வரும்.
Secrets will come out in time.

9334. சீவரத்துக் கிராமணி யிருந்தும் கெடுத்தான், செத்தும் கெடுத்தான்.
A man's life and death being injurious.

9335. சுகுண சுந்தரி இல்லாத வீடு சுடுகாடு.
A house without a wife deplorable.

---

9336. சுண்டக்காய் காற்பணம், சுமைக்கூலி முக்காற்பணம்.
Cooly greater than cost.

---

9337. சும்மா கிடைக்குமா சோணாசலன் பாதம் ?
Heaven cannot be easily won.

---

9338. செக்குலக்கை விழுங்கினவன் சுக்குக் கஷாயம் குடித்தது போல.
A trifling remedy for a great evil.

---

9339. செல்வமும் சீரும் சேரவே இருக்கும்.
Wealth and nobility go together.

---

9340. செல்வம் சீரழிக்கும்.
Luxury demoralizes.

---

9341. சேடனுக்குப் என் குரங்கு புத்தி, சேற்றில் கிடப்பவனுக்கு என் சோமக்கட்டு ?
Condemns improper behaviour.

---

9342. சேரப் போனால் செடியும் பகை.
Familiarity breeds contempt.

---

9343. சோற்றைப் போட்டுத் தொண்டையை நெறிப்பதுபோல.
Doing good first and then evil.

---

9344. சோற்றின் மறைவில் பத்தியம் பிடிக்கிறது.
Inconsistent conduct.

---

9345. தாமரையில் விழுந்த மழைத்துளி போல.
Leaving no impression behind.

---

9346. தாய் வீடோடிய பெண்ணும், பேயோடாடிய கூத்தும்.
Tamil advice to a daughter-in-law.

---

9347. துட்டுக்கு இரண்டு, துக்காணிக்கு மூன்று.
Selling at cheap rates.

---

9348. துலுக்கனுக்கேன் துறட்டுக் கடுக்கன் ?
Mahommedans don't need earrings.

---

9349. துலுக்கக்குடியில் எது பேயாட்டம் ?
They don't believe in exorcism.

9350. தூங்குகிற நரிக்கு இரை கிடையாது.
A sleepy fellow can earn nothing.

9351. தெய்வப்புலவனுக்கு நா உணரும், சித்திர ஓடாவிக்குக் கை உணரும்,
A poet sings of his own accord.

9352. தென்னைக்குத் தேள்கொட்டப் பனைக்கு நெறிகட்டினது போல.
Applying a remedy when it is not necessary.

9353. தேவடியாள் வீடு கொள்ளைபோவது போல.
Rather a rare phenomenon.

9354. தை மழை நெய் மழை.
Rain in January prized highly.

9355. நரிக்குக் கலியாணம், நண்டுக்குப் பிராமணார்த்தம்.
One's mirth is another's misery.

9356. நரியை எய்க்கப் பார்க்குதாம் இல்லை நண்டு.
A victim outwitting his oppressor.

9357. நல்ல் நாளிலே நாழிப்பால் கறக்காத மாடா ஆகாத நாளிலே அரைப்படி கறக்கும் ?
Arguing from bad to worse.

9358. நல்லதுக்கா நாய்மேல் சன்னதம் வந்தது ?
Exorcisms usually end in evil.

9359. நாழி மாவுக்கு நாலுழி வெல்லம்.
Upkeep costing more than value.

9360. நீ உளராதே, நான் குளறுகிறேன்.
One stupid fellow offering to help another.

9361. நீர் என்று சொன்னதினால் நெருப்பு அவிவதும், சர்க்கரை என்று சொன்னதினால் வாயினிப்பதும் உண்டா?
Mere ideas are not facts.

9362. நுனியில் மேய்கிறது.
Selfish enjoyment.

9363. நெருப்பை ஈ மொய்க்குமா?
A repellent attitude.

9364. பசியிலும் ஏழை இல்லை, பார்ப்பாரிலும் ஏழையில்லை.
Brahmins usually well off.

9365. பசு தின்னுவிடில் பார்ப்பானுக்கு.
The greediness of a Brahmin.

9366. பச்சைப் புண்ணிற் குச்சி எடுத்துக் குத்தினது போல.
Injuring one already in affliction.

9367. பயற்றங் கூழுக்குப் பங்கிழந்தவன் கதைபோல.
Like Esau of old.

9368. பருப்பும் பச்சரிசியும்.
An excellent mixture.

9369. பனை மட்டையில் மழை பெய்தது போல.
Producing no effect.

9370. பன்னி உரைத்திடிலோ பாரதமாகும்.
The diffuse style of the Mahabahrata.

9371. பாம்புக்கு மருந்து கேட்கத் தேளுக்கு மந்தரித்ததுபோல.
Compare above.

9372. பார்ப்பானுக்கு மூப்பான் பறையன், கேட்பாரில்லாமல் கீழ்ச் சாதியானான்.
The Brahmin *versus* the Pariah.

9373. பால ஜோஷியம், விருத்தக வைத்தியம்.
Speculation in youth.

9374. பிச்சைக்காரன் வாயிலெடுத்தாற்போல.
Undertaking what is beyond one's need.

9375. பிண்டம் பெருங்காயம், அன்னம் கஸ்தூரி.
Food treated like medicine.

9376. பின்னையானால் எறியும், முன்னையானால் முட்டும்.
Doing evil in every way.

---

9377. புருவத்திற்கு மையிட்டால் கண்ணுக்கழகு.
One rejoicing in another's beauty.

---

9378. புலிக்குப்பயந்தார் எல்லாரும் என்மேல் படுங்கள்.
A coward pretending to be courageous.

---

9379. பூசணிக்கும் புடலைக்கும் வித்தியாசம் தெரியாமல் பேசுகிறாய்.
Speaking without discriminating.

---

9380. பெண்டாட்டியுடன் கோபித்துப் பரதேசம் போவாருண்டா?
Petty quarrels should not lead to serious result.

---

9381. பெண்டாட்டி ஆசை இண்டாட்டத்தில் விட்டது.
Love ending in sorrow.

---

9382. பேர் கங்கா பவானி, தாகத்திற்குத் தண்ணீர் கிடையாது.
Reputation great but work poor.

---

9383. பேன்பார்த்தாலும் பார்க்கும், காதைப் பிய்த்தாலும் பிய்க்கும்.
Certain unreliable characters.

---

9384. மதில்மேல் பூனை.
In an advantageous position.

---

9385. மந்தி மயிரை மருந்துக்குக் கேட்டால் மரத்துக்கு மரம்தாவும்.
The folly of seeking aid from the unworthy.

---

9386. மனமிருந்தால் மலையும் சாயும்.
Where there is a will there is a way.

---

9387. மாதா ஊட்டாத அன்னம் மாங்காய் ஊட்டும்.
The effect of mangoe on the appetite.

---

9388. மாமி மெச்சிய மருமகள் இல்லை.
Mother-in-law *versus* daughter-in-law.

---

9389. மிளகத்தனை பிள்ளையாருக்குக் கடுகளவு நைவேத்தியம்.
A small person costing a great deal.

---

9390. மின்னுக் கெல்லாம் பின்னுக்கு மழை.
The more lightning the more rain.

9391. முக்காற் பணத்துக் குதிரை மூன்று பணத்துப்புல் தின்றாற் போல்.
Compare above.

9392. முட்டிக்காற் கழுதை பட்டவர்த்தன பரியாமா?
The unworthy aping the worthy.

9393. முருங்கைக்காய் என்றதும் முறிந்ததாம் பத்தியம்.
Put a sudden end to one's restraint.

9394. முன்னே யொரு குறுணி பின்னே யொரு முக்குறுணி.
Expense upon expense.

9395. மேட்டில் ஏறினால் முத்தாச்சி, பள்ளத்தில் இறங்கினால் அத்தாச்சி.
In danger one attitude, in safety another.

9396. மொட்டை மரமும் சரி, கொம்புமரமும் சரி.
Accidentals not essentials.

9397. யானை வந்தால் ஏறுவேன், சப்பாணிவந்தால் நகருவேன்.
Adapting oneself to one's circumstances.

9398. யானைமேல் போகிறவனைச் சுண்ணாம்பு கேட்பதுபோல.
Making a request on an improper occasion.

9399. யானைவிற்றால் யானைலாபம், பானைவிற்றால் பானைலாபம்.
Gain in proportion to outlay.

9400. யானைக்கு அர்ரம் என்றால் பானைக்குப் பர்ரம்.
Foolish imitation ridiculed.

9401. குட்டிபோட்ட பூனைபோல.
In great anxiety and fear.

9402. மாமியார் கை வெல்லத்தைப்பார்க்கிலும் மருமகள் கைத்த விடு தேவையில்லை.
Daughter-in-law preferred to mother-in-law.

9403. காமத்துக்குக் கண் இல்லை.
Cupid's blindness.

9404. ஒத்த கட்டபாட்டில் தாளூன்றி எய்து.
Live in harmony with your surroundings.

9405. தொட்டுப் பார்த்தால் தோட்டியும் உறவு.
Caste pretensions exposed.

9406. பங்குனிமாதத்தில் பறையன் வீட்டுப் பன்றிகூட பாக்குத் [தின்னும்.
Being a season of harvest.

9407. மாமியாரோடு போகாத மாபாதகன்.
Refers to immoral mothers-in-law.

9403. வணங்கின புல் பிழைக்கும்.
Humility commended.

9409. வந்த வெள்ளம் இருந்த வெள்ளத்தைத் தள்ளினது.
One evil removing another.

9410. வாய் கரும்பு, கை இரும்பு.
Soft words and cruel deeds.

9411. வாய்த்தால் கிழவியும் பாடுவாள்.
A good opportunity can produce wonders.

9412. வாழாப் பெண் தாயோடே.
A national custom.

9413. வீட்டுக்கு வீடு வாசற்படி.
Free ingress and egress.

9414. வேலிக்கு ஓணான் சாட்சி.
Compare above.

9415. வெற்றிலைப் பொதிக்காரனும் அழுகிறான், உப்புப் பொதிக்காரனும் அழுகிறான்.
Each mourning over his own loss.

9416. ஜோசியம் சொல்ல பாலியம் போதும்.
Any youthful person may become an astrologer.

9417. ஜோட்டா லடித்து வெகுமானம் கொடுப்பது.
Cruelty first and then kindness.

THE END.